# வெள்ளிவிழா மலர்

THE MADURA TAMIL SANGAM

வெளியிட்டோர் :

**திருவள்ளுவர் கழகம்**

**தென்காசி**

First Printed 1953

விலை ரூபாய்

ஐந்து

Printed at the Asian Printers, Madras-5.



இலஞ்சி. I. C. ஈஸ்வரன் பிள்ளை

# திருவள்ளுவர் கழகம் தென்காசி

## நன்றியுரை

ஆதிபகவன் அருளால் தென்காசித் திருவள்ளுவர் கழகம் வள்ளுவர் ஆண்டு 1958 மாசித் திங்கள் 8-ஆம் நாள் (19-2-1927) திருக்குறள் அட்டாவதானியார், காலஞ் சென்ற திரு. தி. ப. சுப்பிரமணியதாஸ் அவர்களின் அரிய முயற்சியால் நிறுவப்பெற்றது.

| | | |
|---|---|---|
| திரு. | A. C. சண்முகநயினர் பிள்ளை, B. A., B. L. | அவர்கள் |
| ,, | P. U. மாணிக்கவாசகம் பிள்ளை | ,, |
| ,, | V. S. சண்முகநாத முதலியார் | ,, |
| ,, | ச. மாணிக்கவாசகம் பிள்ளை | ,, |
| ,, | K. S. கோமதிநாயகம் பிள்ளை | ,, |
| ,, | கானுகோ மு. நமசிவாயம் பிள்ளை | ,, |
| ,, | T. S. குத்தாலம் பிள்ளை | ,, |
| ,, | T. R. மீனுக்ஷிசுந்தரம் பிள்ளை | ,, |
| ,, | ஆ. சங்கரன் பிள்ளை | ,, |
| ,, | மா. சு. சிதம்பரம் பிள்ளை | ,, |
| ,, | V. M. சோமசுந்தரம் பிள்ளை, B.A.,B.L. | ,, |
| ,, | ந. ஆறுமுகம் பிள்ளை | ,, |
| ,, | தெ. முத்துக்குமாரசாமி பிள்ளை | ,, |
| இசைமணி திரு. | மு. இராமசாமி பிள்ளை | ,, |

ஆகியோர்களை ஆதி அங்கத்தினராகக் கொண்ட இக் கழகம் தமிழ்ப் பேராசிரியர் திரு. R. P. சேதுப் பிள்ளை அவர்கள் தலைமையில் தொடங்கப்பெற்றது. இரசிகமணி திரு. T. K. சிதம்பரநாத முதலியார் அவர்கள், தமிழ்ப்பெரியார் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள் முதலான பேரறிஞர்களின் ஆதரவால் நல்ல முறையில் இருபத்தைந்து ஆண்டுகளாக வளர்ந்து இப்போது வெள்ளிவிழாக் கொண்டாடும் பேறு பெற்றது. ஐந்து பேரறிஞர் தலைமையில் வெள்ளிவிழா 7-6-1952 முதல் மூன்று நாட்கள் காலையும் மாலையும் மிகச் சிறப்பாக நடைபெற்றது. 10-6-1952-ல் திருமதி K. B. சுந்தராம்பா

ளின் பக்தி நிறைந்த இன்னிசை யரங்குடன் விழா நிறைவெய்தியது. இவ் விழா, சிறப்பாக நடைபெறவும், இம் மலர் வெளி வரவும், மனமுவந்து பொருள் உதவிய நன்கொடையாளர்கள் அனைவருக்கும் இக் கழகத்தின் நன்றி என்றும் உரியதாகும்.

வெள்ளி விழா நிகழ்ச்சிகளுக்கெல்லாம் உறு துணையாய் அமைந்து ஊக்கமளித்துச் செயலாற்றிய திரு. S. மகராஜன், B. Sc., B. L. (சப்ஜட்ஜ்) அவர்களுக்கு இக் கழகத்தார் தமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றார்கள்.

இக் கழகத்தின் வேண்டுகோளுக்கு இணங்கி கௌரவ ஆசிரியர்களாக அமைந்து, கட்டுரைகள் சேகரித்து வெள்ளி விழா மலரை உருவாக்கிய,

திரு. R. P. சேதுப்பிள்ளை, B. A., B. L. அவர்கள்
,, T. S. சங்கரநாராயணபிள்ளை, B.A., B.L., M.L.C. ,,
,, S. மகராஜன், B. SC., B. L. (சப்ஜட்ஜ்) ,,

ஆகிய மூவருக்கும் இக் கழகத்தார் தமது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றார்கள். உலகப் பொது மறை யருளிய திருவள்ளுவரிடத்துள்ள பேரன்பு ஒன்றே காரணமாக அரிய கருத்துக்கள் நிறைந்த உயரிய கட்டுரைகளை எழுதி உதவிய பேரறிஞர்கள் அனைவர்க்கும் இக் கழகத்தின் பணிவார்ந்த நன்றி என்றும் உரியதாகும். இம் மலர் அச்சாகும்பொழுது பேரருள் கூர்ந்து பொறுமையுடன் பிழை திருத்தியுதவிய சென்னைப் பல்கலைக் கழகத் தலைமைத் தமிழ் விரிவுரையாளர் திரு. M. A. துரையரங்கனார் M. A., M.O.L. அவர்களுக்கு இக் கழகம் மிகவும் கடமைப்பட்டுள்ளது.

இக் கழகத்துக்கு ஒவ்வோர் ஆண்டிலும் ரூ. 100 கொடுத்தருளியதுபோல், வெள்ளிவிழாவிற்கு ரூபா நூறும், இம் மலருக்கென்று தனி நன்கொடையாக ரூபா நூற்றைம்பதும் கொடுத்

தருளிய திருவாவடுதுறை ஆதீனகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அவர்களுக்கு இக் கழகத்தின் வணக்கம் உரியது. மேலும், இம் மலருக்காகத் தனித்தனி ரூ. 101 நன்கொடை உதவிய தென்காசி,

திரு. பி. யு. மாணிக்கவாசகம் பிள்ளை அவர்கள்
,, கானுகோ. M. சுப்பிரமணிய பிள்ளை ,,

ரூ. 100 கொடுத்து உதவிய,

இலஞ்சி திரு. I. S. அகிலாண்டம் பிள்ளை அவர்கள்
தென்காசி ,, பெ. சங்கரநாராயண பிள்ளை ,,

ஆகியோர்களுக்கும் இக் கழகத்தார் தங்களது போற்றுதலைத் தெரிவித்துக்கொள்ளுகின்றார்கள்.

இக் கழகத்தின் அன்பார்ந்த வேண்டுகோளுக்கு இணங்கி இம் மலர் வெளியிடுவதற்கு ரூ. 501 நன்கொடையாக உதவி ஊக்கமளித்த பெருந்தகை (காலஞ் சென்ற உயர் திரு. I. C. ஈஸ்வரன்பிள்ளை அவர்கள் மருமகனார்) திரு. I. A. சிதம்பரம் பிள்ளை, M. A. அவர்களுக்கு இக் கழகம் என்றும் கடமைப்பட்டுள்ளது. புகழுடம்பெய்திய I. C. ஈஸ்வரன்பிள்ளையவர்களின் திருவுருவப் படம் இம் மலரின் முகப்பில் அமைந்து அணி செய்கின்றது.

திருவள்ளுவர் திருவடி வாழ்க!

T. S. சங்கரநாராயண பிள்ளை,
B.A., B.L., M.L.C.
**தலைவர்**

*துணைத் தலைவர்கள்*
அ. மகராஜ பிள்ளை
வி. பி. சுப்பிரமணியபிள்ளை
எம். எஸ். ஏ. சுப்பிரமணிய முதலியார், B. A.
எஸ் சண்முகம்பிள்ளை
எம். சு. ஆதிநாராயணன்

*செயலாளர்கள்*
ரா. சி. ஆவுடையப்பன்
கி. பாலசுப்பிரமணியன்
அ. கிருஷ்ணசாமி
சொ. சுப்பிரமணியன்
எஸ். செண்பகம்

*துணைச் செயலாளர்கள்*
கே. எஸ். அழகுசுந்தரம்பிள்ளை
பி. எஸ். இரத்தினவேல்
ஆ. சிவராமகிருஷ்ணன்

# வாழ்த்து

*கவிமணி*

**சி. தேசிகவிநாயகம் பிள்ளை அவர்கள்**

**வாழ்த்து**

**நேரிசை வெண்பா**

வேதப் பொருளாய் விளங்குபெரு மான்விசுவ
நாதன் அருளாலெந் நாளுமே—ஓதுபுகழ்த்
தென்னவர்தம் காசித் 'திருவள் ளுவர்கழகம்'
மன்னுலகில் வாழ்க வளர்ந்து.

## யோகி சுத்தாநந்த பாரதியார்

# வா ழ் த் து

### இல்லற யோகி வள்ளுவர்

ஆழ்ந்த உண்மைகள் அகத்தினின்றே எழும். புறம் செல்லும் மனம் உள்ளடங்கிய ஒருமையில் அகம் அடங்கும். அந்த அமைதியின் மலர்களே அருள்மணம் கமழும் பொய்யா மொழிகள் ஆகும். வள்ளுவர் தவமுனிவர்; இல்லற யோகி. வாசுகியுடன் அவர் ஆகமங்க நூல்கள் கூறும் சக்தி சாதனம் புரிந்தார். வையத்தில் வாழ்வாங்கு வாழும் பெற்றியைக் காட்டினர் இருவரும்.

"ஒன்றனை ஒன்றலே யோகம்; அலைமனத்தை
வென்றிடின் ஒன்றும் விரைந்து."

"என்றும் இருப்பதனில் என்றும் இருப்பதுவே
என்றும் இருக்கும் இருப்பு."

"இயல்பான உன்னை இயல்பா யறிந்தே
இயல்பாகி இன்புற் றிரு."

-இவை யோக சாதன விளக்கமாகும்.

"உள்ளத்தி னுள்ளே உறப்பார்த்தங் கொண்சுடரை
மெல்லத்தான் அர்ச்சிக்கு மாறு"

என்றார் யோகச் செல்வியார் ஆன ஔவையார்.

திருவள்ளுவர் இந்த உள்ளொருமையைத் திட்ப நுட்பமாகச் சொல்லுகிறார் :

"ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து."

இதையே கீதையில், "ஆமைபோற் புலன் ஐந்தும் அடக்கி அமைதி கண்டவனே தவயோகி"

என்கிறார் கண்ணபிரான். உள்ளமே யோகசித்தியின் நிலைக்களன். வள்ளுவர்,

"ஓர்த்துஉள்ளம் உள்ள துணரின் ஒருதலையாப்
பேர்த்துஉள்ள வேண்டா பிறப்பு"

என்றார். உள்ளத்தில் உள்ள சுத்தான்மாவை ஒருமையுடன் உணர்ந்தால், அதுவே அறிவு உண்மை இன்பமயமாகும் வழி.

"ஓயாதே உள்குவார் உள்ளிருக்கும் உள்ளானை
... ... ... ... ... ... ... ...
தாயான தத்துவனைத் தானே உலகேழும்
ஆயானை ஆள்வானைப் பாடுதும்காண் அம்மானாய்"

என்கிறார் மாணிக்கவாசக சிவம்.

வள்ளுவர், நுட்பமாக இதயகமலத்தில் எழுந்தருளிய இறைவன் திருவடியை ஒருமையுடன் கூடி நின்றாலே, உலகில் நீண்ட நல்வாழ்க்கை எய்தலாம் என்கிறார்:

"மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்."

உயிர் உடலுடன் ஒத்தது: உயிருடன் ஒத்து நிற்பது இறை. இறை உயிருக்குயிராக ஒத்து நிற்பதனாலேதான், நாம் உயிர்வாழ முடிகிறது. சிவஞான போதம், "காந்தம் கண்ட இரும்பு" என்கிறது. ஆன்மா சதசத்தா யுள்ளது. அது, காட்டவே காணும்; தானாகக் காணாது. அயரா அன்பினால், ஆன்மா தனக்கு உயிரான இறைவனை யடையும். ஆன்மா, அந்தக்கரணங்களுடன் ஒத்து நின்று, தனுகரணபுவனபோகாதிகளை அனுபவிக்கிறது. அதுபோலவே, அன்பினால் அருளுணர்வு பெற்று, ஊனக்கண் பாசம் ஒருவி, ஞானக்கண்ணில் சிந்தை நாடியே, அமைந்து, இறைவனுடன் ஒத்து நிற்கும் சிவ-சிவநிலையை அறியும். அந்த அறிவில்லா

தவன் செத்தவனுக்கே ஒப்பாவான். அதைத்தான் வள்ளுவர்,

"ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் ; மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்"

என்றார்.

மற்றும், யோக சாதனத்திற்கு வேண்டிய அற வொழுக்கங்களை அறத்துப்பால் விரிவாகக்கூறுகிறது: அகம் புறம் என்று யோகம் இருவகைத்து. ஒழுக்கம். வணக்கம் இரண்டும் புறச் சாதனங்கள். ஒருமை, அடக்கம், அறிவு. அமைதி இவை அகச் சாதனங்கள். இரண்டு வகையையும் வள்ளுவர் தெளிவாக விளக்கு கிறார்.

"உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு."

"தூஉய்மை என்பது அவாவின்மை மற்றது
வாஅய்மை வேண்ட வரும்."

"மற்றும் தொடர்ப்பாடு எவன்கொல் ; பிறப்பறுக்கல்
உற்றார்க்கு உடம்பும் மிகை."

"யான்என தென்னும் செருக்கறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்."

"பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு."

இவ்வாறே தவயோக ஒழுக்கமும், துறவொழுக் கமும் இல்லறயோகியான வள்ளுவர் வாக்கில் மலர்ந்தன. முடிவில், உலகிலிருந்தே மாசற்ற வாழ் வால், யோகசித்தி யெல்லாம் பெறலாம் என்பது வள்ளுவர் உள்ளம்.

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது."

"யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்."

# இல்லற யோகம்

இல்லற யோகிளம் வள்ளுவன்—அவன்
ஈந்த திருக்குறள் போற்றுவோம்!
மல்லறம் ஓங்கும்உ லகிலே— ஒரு
மாசற்ற வாழ்வினை நாட்டினுன்

உள்ளத்தில் உள்ளப ரம்பொருள்—நம்
உயிர்க்குயி ராம்அதைப் பற்றியே
கள்ளமற் றில்லறம் பேணுவார்—இன்பங்
காணுவார் மெய்யருள் பூணுவார்.

வாய்மையுந் தூய்மையும் போற்றியே—நல்ல
மனதுடன் அன்பறம் ஆற்றியே
நோயற்று நூருண்டி ருக்கலாம்—நல்ல
நுண்ணறி வாற்றல்பெ ருக்கலாம்.

முயற்சியி னுற்பொருள் செய்குவோம்—வான
முகில்போல் அறவழி பெய்குவோம்
உயர்ச்சி தரும்புகழ் ஓங்குமே—அதை
உழைப்பும் ஒருமையும் தாங்குமே.

—சுத்தாநந்த பாரதியார்.

# ஜில்லா நீதிபதி எஸ். நடராஜ நாடார் அவர்கள் வாழ்த்துரை

## முயற்சி திருவினையாக்கும்

தென்காசித் திருவள்ளுவர் கழகம் தனது 25-ஆம் ஆண்டு விழாவை இன்று சிறப்பாகக் கொண்டாடு கிறது. கழகம், பொருள்வளத்தோடு ஆரம்பிக்கப் பட்டதன்று; புகழைக் கருதியும் ஆரம்பிக்கப் பட்டதன்று. வள்ளுவர் வகுத்த வாழ்க்கை நெறியை மக்களிடைப் பரப்பவேண்டும்; அதனால், தமிழ் நாட்டின் பெருமையைத் தரணிக்கு எடுத்துக் காட்ட வேண்டுமென்ற நோக்கத்துடனே ஆரம்பிக்கப் பட்டது.

இப்பொழுது அரசாங்கத்தாரே திருக்குறளுக்குச் சிறந்த ஆதரவு தந்துள்ளார். அதனால், ஆசிரியர்க ளிடத்தும் மாணவர்களிடத்தும் பொதுமக்க ளிடத்தும்கூடப் புத்துணர்ச்சியும், மிகுந்த ஊக்கமும் காண்கின்றன. 25 ஆண்டுகளுக்கு முன் அங்ஙனம் சொல்வதற்கில்லை. ஒருசில புலவர்களையும், அறிஞர் களையும் தவிரப் பொதுமக்கள் குறளின் பெருமை யைப் புரிந்து கொள்ளவுமில்லை; போற்றவுமில்லை; போற்றுபவர்க்கு ஆதரவு கொடுக்கவுமில்லை.

அந்தச் சூழ்நிலையில் ஆரம்பித்தது கழகம். அதனை வளர்ப்பதற்கு வேண்டிப் பொருளை யாரும் கொடுக்கவில்லை என்றாலும், முயற்சி என்ற செல்வ மானது மிகுதியாக இருந்தது. கழகத்தில் பெரும் பாலும் அப்பொழுது இளைஞர்கள் இருந்தார்கள். அவர்களுடைய விடாமுயற்சியும் தாளாண்மையும் இக் கழகத்திற்குச் சிறந்த அஸ்திவாரமாக அமைந்து விட்டது தமிழ் நாட்டிலே நாலாபக்கங்களிலு முள்ள பேரறிஞர்களும், பக்தர்களும், இக் கழகத்

தைச் சிறப்பித்துத் தங்களுடைய அறிவுரைகளாலும், கூட்டுறவினாலும் மேலும் இதனை ஓர் அழகிய மாளிகை யாக்கிவிட்டார்கள்.

குற்றாலத்திற்கு அண்மையில் அமைந்தமையால். சாரலுக்குக் குற்றாலம் வரும் பெரியோர்கள் எல்லாம் விரும்பிவந்து கலந்துகொள்ளும் வாய்ப்பு இதற்குக் கிடைத்துவிட்டது. ஆகவே, இன்று இக் கழக மானது தமிழ்நாட்டிலே தலை சிறந்த கழகமாக விளங்குகிறது.

இந்த முக்கியமான சந்தர்ப்பத்திலே, இக் கழகம் தோன்றி இவ்வளவு சீரும் சிறப்புமுடன் விளங்கப் பணியாற்றிய அன்பர்கள் யாவருக்கும் எனது பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஊருணி நீர் நிறைந்தது போன்றும், பழமரம் ஊர் நடுவிற் பழுத்தது போன்றும் அவர்களது முயற்சியின் பயன் யாவருக்கும் நன்மை பயக்கும் என்பதில் யாதும் ஐயமில்லை. வாழ்க தென்காசித் திருவள்ளுவர் கழகம்!

1—5—52,
சேலம்.

S. நடராஜ நாடார்.

# உ ள் ளு றை

## முதற் பாகம்


| எண் | கட்டுரைகள் | பக்கம் |
|---|---|---|
| 1. | **குறள்**<br>*ஆல்பர்ட் ஷ்வைட்ஸர்* | 1 |
| 2. | **உதவி வரைத்தன்று உதவி**<br>*ரஸிகமணி டி. கே. சி.* | 8 |
| 3. | **திருவள்ளுவரும் அரசியலும்**<br>*கனம் ச. இராஜகோபாலாச்சாரியார்*<br>*சென்னை அரசாங்க முதலமைச்சர்* | 13 |
| 4. | **திருவள்ளுவர் கழகம் - வெள்ளி விழா**<br>*டாக்டர் ரா. க. சண்முகம் செட்டியார்* | 14 |
| 5. | **திருக்குறள்—கடவுள் வாழ்த்து**<br>*சைவத் திரு. ந. சிவகுருநாத பிள்ளை*<br>*தூத்துக்குடி* | 16 |
| 6. | **திருக்குறளும் வைணவமும்**<br>*வித்துவான் திரு. B. R. புருஷோத்தம நாயடு*<br>*தமிழ் விரிவுரையாளர்*<br>*சென்னைப் பல்கலைக் கழகம்* | 34 |
| 7. | **திருக்குறள்—காமத்துப்பால்**<br>*வித்துவான் திரு. தெ. பொ. மீநாட்சிசுந்தரனார்,*<br>M. A., B. L., M. O. L., Dip. Econ., etc.<br>*தமிழ்ப் பேராசிரியர்,*<br>*சென்னை வேதாந்த சங்கத் தமிழ்க் கல்லூரி* | 54 |
| 8. | **வள்ளுவர் வழங்கும் வீடு**<br>*வித்துவான் திரு. மொ. அ. துரை அரங்கசாமி,*<br>M. A., M. O. L.<br>*தலைமைத் தமிழ் விரிவுரையாளர்*<br>*சென்னைப் பல்கலைக் கழகம்* | 95 |
| 9. | **திருவள்ளுவரும் அருணகிரிநாதரும்**<br>*குகஸ்ரீ. கிருபாநந்த வாரியார்* | 149 |

10. திருவள்ளுவர் மருந்து
டாக்டர் தி. இரா. அண்ணுமலைப் பிள்ளை
L. C. P. S. (Bom), L. M. S. S. A.,
M. R. A. S. (Lond) திருக்குற்றுலம் 153

11. உரைவளத்தில் ஒவ்வொரு அகப்பை
வித்துவான் திரு. ச. தண்டபாணி தேசிகர்
பேராசிரியர், தமிழ்க் கல்லூரி, தருமபுரம் 168

12. வள்ளுவரும் சாஅதியும்
திரு. ர. பா. மு. கனி, B. A., B. L.
வழக்கறிஞர், இராவணசமுத்திரம் 176

13. திருவள்ளுவர் மதம்
திரு. A. C. ஷண்முக நயினுர், B. A., B. L.
வழக்கறிஞர், தென்காசி 189

14. திருவள்ளுவரும் சமயமும்
திரு. T. S. கந்தசாமி முதலியார், M. A.
வழக்கறிஞர், சாத்தூர் 202

இரண்டாம் பாகம்

15. எல்லீசர் கண்ட குறள்
திரு. R. P. சேதுப் பிள்ளை, B. A., B. L.
தமிழ்ப் பேராசிரியர்
சென்னைப் பல்கலைக் கழகம் 227

16. திருக்குறளும் இல்லறமும்
திரு. G. சுப்பிரமணிய பிள்ளை, M. A., B. L.
தமிழ்ப் பேராசிரியர்
அண்ணுமலைப் பல்கலைக் கழகம் 236

17. திருவள்ளுவரும் துறவறமும்
அருட்டிரு. தெய்வசிகாமணி அருணுசல தேசிக
பரமாச்சாரிய சுவாமிகள்
திருவண்ணுமலை ஆதீனம் 253

18. வள்ளுவரும் சொல்லாட்சியும்
திரு. எஸ். மகராஜன், B. Sc., B. L.
சப்-ஜட்ஜ், தூத்துக்குடி 257

19. **தெள்ளியர் என்பார் யார்?**
*திருமதி ஈ. த. இராசேசுவரி அம்மையார்,* M. A., L. T.
*விஞ்ஞானப் பேராசிரியர்,*
*மேரி அரசியார் கல்லூரி, சென்னை* 265

20. **வள்ளுவரும் அரசியலும்**
*திரு.* V. R. *இராமச்சந்திர தீட்சிதர்,* M. A.,
*சரித்திரப் பேராசிரியர்*
*சென்னைப் பல்கலைக் கழகம்* 272

21. **திருக்குறளும் பொருளாதாரமும்**
*டாக்டர்* B. *நடராஜன்,* M. A., D. Litt.,
*சென்னை அரசாங்கப் பொருளாதார*
*அறிவுரையாளர்* 289

22. **வள்ளுவரும் குடிமையும்**
*வித்துவான் டாக்டர் மு. வரதராசனார்,*
M. A., M. O. L., Ph. D.
*தமிழ்ப் பேராசிரியர்*
*பச்சையப்பன் கல்லூரி, சென்னை* 304

23. **திருவள்ளுவர் காலம்**
*திரு.* C. M. *இராமச்சந்திரன் செட்டியார்,*
B. A., B. L. 315
*வழக்கறிஞர், கோயம்புத்தூர்*

24. **திருவள்ளுவரும் கம்பனும்**
*திரு. பி. ஸ்ரீ. ஆச்சாரியார்*
*துணை ஆசிரியர், 'ஆனந்தவிகடன்', சென்னை* 324

25. **திருவள்ளுவ மாலை**
*வித்துவான் திரு.* S. *ஆறுமுக முதலியார்*
M. A., B. O. L., L. T.
*தமிழ்ப் பேராசிரியர்*
*ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி*
*சைதாப்பேட்டை* 338



திருவள்ளுவர்

THE MADURA TAMIL SA

# குறள்

## ஆல்பர்ட் ஷ்வைட்ஸர்

*[ஆல்பர்ட் ஷ்வைட்ஸர் என்பவர் சிறந்த ஜெர்மன் தத்துவ ஞானி; சங்கீதம், தத்துவம், சமயம் - இம் மூன்றிலும் டாக்டர் பட்டம் பெற்றவர்; ஆனந்தமாக வாழ்க்கை நடத்தி வந்தவர். திடீரென்று 30-ஆம் வயதிலே அவர் மனம் கலங்க ஆரம்பித்தது. 'நான் மாத்திரம் ஆனந்தமாயிருப்பானேன்?' என்ற கேள்வி அவர் மனத்திலே உதயமாயிற்று. சோகமற்றவன், சோகத்திலிருப்பவர்களைத் தேற்றுவதில் முனைந்து நிற்கவேண்டும் என்று அவர் தீர்மானித்தார்; வெள்ளையர்கள் நீக்கிரோக்களுக்குச் செய்த கொடுமைக்கெல்லாம் தம்முடைய சேவை மூலம் பிராயச்சித்தம் செய்யவேண்டுமென்று நினைத்து மத்திய ஆப்பிரிக்காவுக்குச் சென்றார்; தம் கையாலேயே அங்குள்ள காடுகளை வெட்டி, சீர்திருத்தி ஓர் ஆஸ்பத்திரியைக் கட்டினார்; 1913-ஆம் வருஷம் முதல் அந்த ஆஸ்பத்திரியில் நீக்கிரோ குஷ்டரோகிகளுக்குச் சிகிச்சை செய்து தொண்டாற்றி வருகிறார். ஏசு கிருஸ்துவின் அவதாரம் என்று ஐரோப்பியர்கள் பலர் அவரை வாழ்த்துகிறார்கள். அவர் எழுதிய "இந்திய சிந்தனை" என்ற நூலில் திருக்குறளைப் பற்றிக் கீழ்க்கண்ட கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்.]*

உலகத்திலே நிலவும் சமயக் கொள்கைகளை இரண்டு விதமாகப் பிரிக்கலாம். பெரும்பாலும் மேற்கத்திய சமயங்கள், 'மனித வாழ்க்கை மாயையல்ல; உண்மையானது' என்று

---

இக்கட்டுரை ஜில்லா நீதிபதி, திரு. S. மகராஜ பிள்ளையவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது.

வற்புறுத்துகின்றன. இந்த நம்பிக்கைதான் மக்கள் சமுதாயம் வளர்வதற்கும், மேம்பாடு அடைவதற்கும் துணைபுரிகிறது. பெரும்பாலும், கிழக்கத்திய சமயங்களிலே, 'வாழ்க்கை பொய்; உலகமெல்லாம் மாயை' என்ற கொள்கைதான் வலியுறுத்தப் படுகிறது. இந்தக் கொள்கையில் நம்பிக்கையுடையவர்கள் சமூக வாழ்க்கையிலே அக்கறை காட்டுவதில்லை; ஏதோ மனுஷ வாழ்க்கை வெறும் தெருக் கூத்து என்று அவர்கள் எண்ணு கிறார்கள்; காலத்துக்கும் இடத்துக்கும் அப்பாலுள்ள விஸ்வ வெளிக்குச் செல்லும் பாதையிலே, கண்ணுக்குத் தென்படுகிற நிலையற்ற சத்திரந்தான் இந்தப் பூலோக வாழ்க்கை என்று நம்புகிறார்கள், ஆகவே, வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற் குரிய சேவையிலே, அவர்கள் ஈடுபடுவதில்லை. பகவத்கீதை யிலே கர்மத்தின் அவசியத்தைச் சொல்லித்தான் இருக்கிறது. ஆனால், அந்த உபதேசம், ஒழுக்கத்தை அடிப்படையாகக் கொண்டதல்ல. 'பற்றற்ற, விருப்பு வெறுப்பற்ற, கர்மத்தைச் செய்வதன்மூலம் பரதத்துவத்தை அடையலாம்' என்பதே பகவத்கீதையின் கொள்கை. 'இறைவனிடத்திலே மனிதன் அன்பு செலுத்தவேண்டும்' என்பது பகவத்கீதையின் இலட்சியம். 'மனிதன், மனிதனுக்குக் காட்டுகிற அன்பின் மூலம் இறைவனை அடையலாம்' என்ற நினைப்பே பகவத்கீதையில் இல்லை.

அன்பு, சமூக சேவையாகப் பரிணமிக்க வேண்டும் என்ற கருத்து திருக்குறளிலேதான் வற்புறுத்தப்படுகிறது. கி. பி. 2-ஆம் நூற்றாண்டிலே வள்ளுவர் 1330 குறள் எழுதினார். குறளிலுள்ள எல்லாக் கருத்துமே வள்ளுவருடையது என்று சொல்லுவதற்கில்லை. வெகுகாலமாகத் தமிழ்நாட்டிலே வேரூன்றி வளர்ந்த கருத்துக்களை அவர் குறள் வடிவத்தில் எடுத்துச் சொன்னார். திருக்குறள், தமிழ் மொழியில் எழுதப் பட்ட நூல். புராதனமாக இந்தியாவிலே நிலவி வருவது தமிழ் மொழி. வள்ளுவருடைய வாழ்க்கை வரலாற்றைப்பற்றி நமக்கு ஒன்றும் தெரியவில்லை. கர்ண பரம்பரையாகக் கிடைத்த கதைப் படி வள்ளுவர் இல்லறவாழ்க்கை நடத்தியவர் என்று தெரி கிறது. 'இல்லறம் உயர்ந்ததா? துறவறம் உயர்ந்ததா?' என்று வள்ளுவரிடம் ஒருவன் கேட்டான். அதற்கு வாய்மொழியாக வள்ளுவர் பதில் சொல்லவில்லை. கிணற்றிலே தண்ணீர்

இறைத்துக்கொண்டிருந்த தம் மனைவியைக் கூப்பிட்டார். நடுக் கிணற்றிலே வாளியை விட்டுவிட்டு ஓடிவந்து பணிவுடன் 'என்ன?' என்று கேட்டாள் மனைவி. ஆறிப்போன பழைய சோற்றை வாயில் போட்டு 'ஐயோ வாய் பொத்துவிட்டதே' என்று அவர் சொன்னார். உடனே அவள் பழைய சோற்றை விசிறியால் வீசிக் குளிர்வித்தாள். பட்டப்பகலிலே, கீழே ஒரு சாமானைப் போட்டுவிட்டு, 'விளக்கை ஏற்றிக்கொண்டு வா; தேடவேண்டும்' என்று சொன்னார் அவர். அவள், ஏனென்று கேட்காமல் உடனே கொண்டுவந்தாள், விளக்கை. இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த விருந்தாளி, 'கேள்விக்குப் பதில் கிடைத்துவிட்டது; இப்படியும் ஒரு மனைவி கிடைப்பாளானால் இல்லறமே துறவறத்தைக் காட்டிலும் மேல்: இல்லையேல் சந்நியாசம் கொள்வதே மேல்' என்று சொன்னான்.

குறளுக்கும் மநுதர்ம சாஸ்திரத்துக்கும் எவ்வளவு வித்தியாசம்! மநுவின் நூலிலே, வாழ்க்கை வெறும் பொய் என்ற சித்தாந்தம் முனைந்து நிற்கிறது. ஆனால், குறளிலே அது மிகவும் பம்மிப்போய் ஒரு மூலையிலே உட்கார்ந்திருக்கிறது. நூலில், கடைசி 250 குறளும் காதலைப் பாராட்டுகின்றன. பிற்காலத்தில் இதைக் கேவலமென்று நினைத்தவர்களிற் சிலர் 'காமத்துப்பால் முழுவதும் இறைவனிடத்திலே ஆன்மாவுக்கு இருக்கிற காதலைத்தான் சொல்லுகிறது' என்று மழுப்புகிறார்கள். சாலமனைப் பற்றிய காதல் பாட்டுக்களையும் இப்படியேதான் கிருஸ்தவர்களும் மழுப்புகிறார்கள்.

மநுநீதி சாஸ்திரத்திலிருப்பதுபோல், குறளிலும், 'ஒழுக்கத்தின் மூலமாக மனிதனுக்குப் பிரதிப் பிரயோஜனம் கிடைக்கிறது' என்ற கருத்தைக் காண்கிறோம். பிறவிக் கடலிலிருந்து தப்பவோ, அல்லது அடுத்த ஜென்மத்தில் உயர்ந்த நிலையை அடையவோ வேண்டுமென்ற கருத்தும் குறளிலே இருக்கத்தான் செய்கிறது. அதோடு பகவத் கீதைக்கு மேல் ஓர் அடி எட்டி வைக்கிறது குறள்; பிரதிப் பிரயோஜனம் கிடைத்தாலும் சரி, கிடைக்காவிட்டாலும் சரி, நல்ல செயலைச் செய்வதனால் மனத்திற்குத் திருப்தி ஏற்படுகிறது. ஆதலால்

நற்செயலைச் செய்யவேண்டும் என்ற உண்மையைக் குறள் போதிக்கிறது. 'மேலுலகம் இல்லெனினும் ஈதலே நன்று' என்று 222-ஆம் குறளிலே வள்ளுவர் சொல்லியிருக்கிறார்.

கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு
என்னாற்றும் கொல்லோ உலகு

என்பது இன்னொரு குறள்.

'மனிதன் கர்மத்திலே ஈடுபட்டுத் தொலைய வேண்டியிருக்கிறது. ஏனென்றால், அதுதான் இயற்கையின் நியதி' என்று உற்சாகமில்லாமல் சொல்லுகிறது பகவத்கீதை. வறண்டு வெறிச்சோடிப்போன கொள்கை இது. இதற்கு மாறாகக் குறள் என்ன சொல்லுகிறது? 'செயல் மூலமாகவும் சேவை மூலமாகவும் மற்றவர்களுக்கு நன்மை செய்ய முடிகிறதே! ஆகையினாலே, செயலில் ஈடுபடு' என்பதே வள்ளுவர் கூறும் நியாயம்.

**குறள் :** 81: பொருளைத் தேடித்தேடி இல்வாழ்க்கை நடத்துவதெல்லாம் விருந்தினரைப் பேணிப்பேணி உபசரிப்பதற்காகத்தான்.

212: உடல் வருந்தி உழைத்துச் சேர்த்த செல்வம் எல்லாம் பொருளற்றார்க்கு உதவி செய்தற் பொருட்டே.

பகவத்கீதையிலே 'அவனவனுடைய ஜாதிக்கு உரிய கடமைதான் கடமை' என்று சொல்லப்பட்டிருக்கிறது. குறளிலேயோ எது நன்மையோ அதைச் செய்வது கடமை என்று வற்புறுத்தப்பட்டிருக்கிறது.

செயலில் ஈடுபடுவதன் மூலம் மனிதனுக்கு ஆநந்தம் ஏற்படுகிறது என்ற கருத்து இந்திய இலக்கியத்திலேயே வேறெங்கும் காணமுடியாதது. இந்தக் கருத்தை வள்ளுவர் பல இடங்களிலே வற்புறுத்தியிருக்கிறார்.

619: விதியின் கொடுமையால் மனித முயற்சி வெற்றியடையாமல் போகலாம், போனால்தான் என்ன; முயற்சியினால் ஏற்பட்ட இன்பம் இல்லாமலா போகும்?

630: எவ்வளவு பெரிய பொறுப்பையும் இன்பமாகக் கொள்பவனுடைய பெருமையைக் கண்டு பகைவர்கள் கூடப் பொறுமைப்படுவார்கள்.

பௌத்தத்தைப் போலவும், பகவத்கீதையைப் போலவும், வள்ளுவரும் உலகப் பற்றிலிருந்தும் வெறுப்பிலிருந்தும் மனம் விடுதலையடைய வேண்டும் என்று சொல்லுகிறார்.

கொல்லாமையையும் வள்ளுவர் வற்புறுத்துகிறார். பௌத்த மதத்துக்கு விரோதமான இன்னொரு கருத்தையும் வள்ளுவர் சொல்லுகிறார்; அதாவது 'தான் கொல்லவில்லை என்றாலும், மற்றவன் கொன்ற ஊனைத் தின்பது தவறு' என்று கண்டிக்கிறார். பிரபஞ்சம் ஒரு மாயை என்ற சித்தாந்தத்திலே உள்ள நல்ல அம்சங்களையெல்லாம் வள்ளுவர் ஏற்றுக்கொண்டு, அதோடு அன்பை அடித்தளமாகக் கொண்ட சேவை அவசியம் என்பதையும் வற்புறுத்துகிறார்.

72: அன்பிலார் எல்லாம் தமக்கே தம்மை உரிமைப் படுத்திக்கொள்ளுகிறார்கள்; அன்புடையவர்கள் தங்கள் எலும்பையும் பிறர்க்கு உரிமைப்படுத்துகிறார்கள்.

78: மனத்திலே அன்பில்லாமல் வாழும் உயிர்வாழ்க்கை பாலைவனத்திலே பட்டுப்போன மரம் தளிர்த்த கணக்குத்தான்.

79: உடம்புக்கு உள் உறுப்பாக நின்று இயங்கும் அன்பில்லையென்றால், உடம்பின் புறத்தே இருக்கும் உறுப்புக்களால் என்ன பலன்?

103: பிரதிப் பிரயோஜனம் கருதாது செய்த உதவியை மதிப்பிட்டுப் பார்த்தால், அது கடலைவிட நன்மையிற் பெரிது.

226: ஒருவனுக்குச் செல்வத்தைச் சேமித்து வைக்கும் உண்டியல், எது என்றால், ஏழைகளின் கொடும் பசியைத் தீர்ப்பதுதான்.

241: செல்வத்துளெல்லாம் செல்வம் துன்பத்திலுள்ளவர்களுக்குக் கருணை காட்டும் செல்வம்தான்; பொருட் செல்வம் பாமரர்களிடத்திலுந்தானிருக்கிறது!

ஒழுக்கமே மனிதனுடைய உன்னதமான இலட்சியமா யிருக்கவேண்டுமென்பதை மிகுந்த துணிச்சலோடு வள்ளுவர் கூறியிருக்கிறார். ஒவ்வொருவனும் தனக்குத்தானே செய்ய வேண்டிய கடமை என்ன? மற்றவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமை என்ன? என்பதைப் பற்றி யெல்லாம் சிறந்த பண்பாட்டோடும் விவேகத்தோடும் வள்ளுவர் பேசு கிறார். உலக இலக்கியத்திலே இவ்வளவு மகோன்னதமான ஞானம் வேறு ஒரு நூலிலும் இல்லை என்று சொல்லலாம்.

216: பரோபகாரியிடம் செல்வம் சேர்வது கனி நிறைந்து குலுங்கும் மரம் ஊருக்கு நடுவிலே இருப்பதற்குச் சமமாகும்.

757: அன்பின் வயிற்றிலே பிறந்த குழந்தைதான் கருணை; அது செல்வம் என்கின்ற செவிலித் தாயின் மடியிலே வளர்வது.

1007: ஒன்றுமில்லாதவர்களுக்கு உதவாதவனுடைய செல்வம் காலத்தைக் கன்னியாகக் கழித்து, கிழடு தட்டிப் போன கட்டழகிக்குச் சமானமாகும்.

105: செயலை வைத்துக்கொண்டு உதவியின் மாற்றைக் கணித்துவிட முடியாது. உதவி பெற்றவனுடைய குணத் துக்குத் தக்கபடி எல்லாம் உதவியின் மாற்று ஏறிக் கொண்டே போகும்.

92: முகத்தைச் சுளித்துக்கொண்டு ஆயிரம் கொடுப் பதைக் காட்டிலும், ஒன்றும் கொடுக்காமல் இன்முகத்தோடு இரண்டு சொல் சொல்லுவது மேல்.

999: ஹாஸ்ய உணர்ச்சியோடு பழகத் தெரியாதவன் இதயத்திலே, பட்டப் பகலிலும் அமாவசை இருட்டுத்தான்.

162: பொறுமையில் புழுங்கித் தவிக்காமலிருப்பதே பாக்கியத்தில் எல்லாம் மேலான பாக்கியம்.

108: நல்லதை மறுப்பது கேடு; கெட்டதை நினைப்பதே கேடு.

159: துறவியைக் காட்டிலும் தூய்மை உள்ளவன்தான், விவஸ்தை கெட்டவனுடைய பழிச் சொல்லையும் தாங்க முடியும்.

*121*: அடக்கம் அமரத்துவத்தைக் கொடுக்கும்; அடங்காமையோ அஞ்ஞானத்திலே அழுத்திவிடும்.

*628*: துன்பத்தை இயல்பென்று அறிந்து, இன்பத்தில் நாட்டமில்லாதிருப்பவனைக் கவலை பாதிப்பதே இல்லை.

*298*: உடம்பிலிருக்கும் அழுக்கை நீராட்டிப் போக்கி விடலாம். ஆனால், மனத்தகத் தழுக்கை வாய்மையால்தான் போக்க முடியும்.

*578*: கடமையில் வழுவாமல், கருணை காட்டவும் வல்லவனை உலகமெல்லாம் பாராட்டும்.

*874*: உலகத்தை நிலைநிறுத்திக் காப்பாற்றுவது எது வென்றால், பகைவனையும் நண்பனாக மாற்றும் திறமைதான்.

*973*. எவ்வளவு ஒய்யாரத்தி லிருந்தாலும், பாமரன், பாமரனே. எவ்வளவு தாழ்ந்து கிடந்தாலும், மேன்மக்கள், மேன்மக்களே.

*594*: உறுதியான ஊக்கமுடையவனைத் தேடி, ஆக்கம் வழி கேட்டு வந்து சேரும்.

ஆகவே, கிருஸ்து சகாப்தத்தின் ஆரம்பத்திலேயே ‘உலகம் உண்மையானதுதான்; மாயை யல்ல’ என்ற சித்தாந்தமும் இந்தியாவில் பரவி இருந்தது. பௌத்தம், பகவத்கீதை முதலிய நூல்களில் இந்தக் கருத்துக்கள் இல்லை யென்றாலும், குறளாசிரியர் மூலமாக இந்தக் கொள்கைகள் மெல்ல மெல்லப் பரவிப் பின்னர் சமயத் தலைவர்கள் மூலம் நாடெங்குமே ஓங்கி வளர்ந்தன என்று தெரிகிறது.

# உதவி வரைத்தன்று உதவி

டி. கே. சி.

மக்களுடைய குணாதிசயங்களை ரொம்ப ரொம்ப அனுப வித்தவர் திருவள்ளுவர்.

நல்ல குணத்தைக் கண்டு அனுபவிப்பார். அப்படியே தீய குணத்தைக் கண்டாலும் ஒரு வேடிக்கையாய்த் தான் இருக்கும் அவருக்கு.

எப்படி அனுபவித்தார் என்று கொஞ்சம் பார்க்கலாம்.

ஒரு செல்வவான். தாராளமான மனசுடையவர். அறுப தாவது ஆண்டு விழாவை நடத்தினர். பெரிய விருந்தளித் தார். வைதீகர்களுக்கும் அளித்தார். அவர்களுக்கு தக்ஷிணை யாக ஆளுக்குப் பத்து பத்து ரூபாய் கொடுத்தார்.

வைதீகர்கள் விருந்து சாப்பிட்டுவிட்டு தக்ஷிணை ரூபாய் பத்தையும் கையில் வைத்துக்கொண்டு ஒருவர் பின் ஒருவ ராய்த் தெருவழியே நடந்து போகிறார்கள்.

அப்படிப் போகிற முதல் ஆசாமியை வழியில் நின்றவர் கொஞ்சம் நிறுத்தி, 'அறுபதாவது ஆண்டு விழாவாக்கும்! சாப்பாடு பிரமாதமாய் இருக்கும். தக்ஷிணையும் கொடுத்திருப் பார்கள். உங்களுக்கு என்ன கொடுத்தார்?' என்று கேட்டார்.

வைதீகர் சொன்னர்: 'என்னத்தைக் கொடுத்துவிட் டார்! அப்படியாக ஒன்றும் இல்லை. இந்தப் பிச்சைக்காரக்

காசு பத்து ரூபாய் கொடுத்தார். நூறு ரூபாய் கொடுக்கக் கூடாதோ? கொடுத்தால் நாளைக்கு ஆண்டியாகவா போய் விடுவார்?' என்று சொல்லிவிட்டு நடந்து போய்விட்டார்.

இரண்டாவது வைதீகர் வந்தார். அவரைக் கேட்டார் வழிப்போக்கர், 'என்ன தக்ஷிணை?' என்று. 'பத்து ரூபாய் கொடுத்தார்' என்று சொல்லி ரூபாயைக் காட்டினார்.

மூன்றாவது பேர்வழி அதன் பிறகு வந்தார். அவரிடத்திலும் கேள்வியைப் போட்டார் 'என்ன கொடுத்தார்?' என்று. அவர் சொன்னார்: 'நூறு ரூபாய் கொடுத்தார் ஐயா: இந்தப் பத்து ரூபாயைக் கொண்டு எவ்வளவோ காரியங்களை நான் சாதித்துக் கொள்ளுவேன். பத்து ரூபாயை நூறு ரூபாய் என்றே மதிக்கிறேன்' என்று சொல்லிவிட்டு மேலே நடந்தார்.

கடைசியாக நாலாவது வைதீகர் வந்தார். உத்ஸாகத்தோடு நடந்து வந்தார். வழியில் நின்றவர் அவரையும் கேட்டார். அவர் சொன்னார்:

'லக்ஷ ரூபாயைக் கொடுத்தார் ஐயா. பத்துப் பத்து ரூபாயாக எத்தனையோ பேருக்குக் கொடுத்தார். எனக்கும் கொடுத்தார். தாராள மனசு என்றால் இதுதான். இத்தனை ரூபாயையும் கொடாமல் பெட்டியிலே வைத்துப் பூட்டியிருந்தால் அவர் தலைமேல் அழுத்தவா செய்யும். உள்ளத்தில் இருந்து ஆனந்தமும் பரிவும் உண்டாயின. விநியோகம் பண்ணினார்' என்று சொல்லிவிட்டு உள்ளமும் உடலும் பூரித்தவாறாக மேலே நடந்தார்.

* * *

உதவி பெற்றவர் குணம் உயர உயர அந்தப் பத்து ரூபாயின் மதிப்பு ஏறுகிறது. பத்துக் காசில் இருந்து பத்து ரூபாய் ஆயிற்று. பத்து ரூபாயில் இருந்து நூறு ரூபாய் ஆயிற்று. நூறு ரூபாயில் இருந்து லக்ஷ ரூபாயும் ஆயிற்று. ஆகவே,

உதவி வரைத்தன்று<br>உதவி,—

*பத்து ரூபாய், பத்து ரூபாய்க் கணக்கு அல்லதானே!*

உதவி வரைத்தன்று
உதவி;—உதவி
செயப்பட்டார் சால்பின்
வரைத்து.

உயர்ந்த குணத்துக்குத் தக்கபடி மேலே மேலே உயர்ந்து போய்விடுகிறது மதிப்பு.

செய்ந் நன்றி அறியும் மனப்பாங்கைப் பற்றி இப்படி அழகாய்ப் பேசியிருக்கிறார் திருவள்ளுவர்.

இந்தக் குறளை நாம் அனுபவிக்கிறோம். எல்லாரும் நெடுகிலும் அனுபவித்தார்கள் என்று சொல்ல முடியாது. கொஞ்சம் கஷ்டந்தான். ஆனாலும், ஆயிரம் வருஷத்துக்கு முன்னிருந்த கம்பர் அபாரமாய் அனுபவித்திருக்கிறார். எப்படி அனுபவித்தார் பார்க்கலாம் :

மகாபலி சக்கரவர்த்தியின் கதையைச் சொல்லுகிற சந்தர்ப்பம். 'மகாபலி என்ற அரசன் அறிவிலும் வீரத்திலும் ஒழுக்கத்திலும் மிகச் சிறந்தவனாய் இருந்தான். இது காரணமாக அவனுக்குச் சக்தி அதிகமாய்ப் போய்விட்டது. பல நாடுகள் அவனுக்குள் அடங்கிவிட்டன. அவனுடைய புகழ் எங்கும் எட்டியது. தேவ லோகத்துக்கே எட்டிவிட்டது.

பயந்து போய்விட்டார்கள் தேவர்கள். விஷ்ணு மூர்த்தியிடம் போய் அவர்கள் முறையிட்டார்கள். 'மகாபலியின் ஆதிக்கம் அளவுக்கு மிஞ்சிப் போகிறது. வேள்விகளைச் செய்த வண்ணமாய் இருக்கிறான். போதாக் குறைக்கு ராஜ்ய நிர்வாகத்தை உயர்ந்த பண்புடைய ரிஷிகளிடம் ஒப்பிக்கப் பார்க்கிறான். இனிமேல்த் தொலைந்தது காரியம் நமக்கு. நாம் தேவர்கள் அல்ல. மகாபலிக்கு அடிமைகள் தான்." இந்த விதமாக' விஷ்ணுமூர்த்தியிடம் முறையிட்டார்கள் தேவர்கள்.

'வாஸ்தவந்தான்' என்று பட்டது அந்த விஷ்ணுமூர்த்திக்கும். அவ்வளவுதான். உடனே இறங்கிவிட்டார் இந்தப் பூமிக்கு, வைகுண்டத்தில் இருந்து.

காசிபர் என்ற முனிவருக்குப் பிள்ளையாய்ப் பிறந்தார். நல்ல அழகான பிள்ளையாய்ப் பிறக்கக் கூடாதா? ஜாதக

பலன் நெடுமாலைக் குள்ளனுகப் பிறக்கச் செய்துவிட்டது. குள்ளன் என்ருல் ரொம்பச் சிறு குள்ள வடிவம். விகார மாகத்தானே இருக்கும் அது!

குள்ள வடிவமாய் இருந்தாலும் சகல கலைகளும் ஞானமும் அவரிடத்தில்த் தங்கி யிருந்தது. அவருக்குப் பெயர் வாமனன்.

தேவர்களிடம் வாக்குக் கொடுத்தபடி காரியத்தைச் சாதிக்க வேண்டுமல்லவா ; அதற்காக மகாபலியிடம் போனுர் ; மூன்றடி மண் கேட்டார். மூன்றடி மண் என்ருல் மூவிரண்டு (3×2) ஆறு இஞ்சி நிலம்தான். சரி என்று சொல்லி விட்டான் மகாபலி. பக்கத்தில் இருந்த கெண்டியை எடுத்து நீரை வார்த்தான். அந்தத் தாரையில் கையை அப்படியே நீட்டினுன் வாமனன். அவ்வளவுதான்! உரிமை உண்டாய் விட்டது வாமனனுக்கு. மூன்றடி மண் அளக்க ஆரம்பிக் கிருன். குள்ள உருவம் உயர்ந்தது. இரண்டடி உயரம் மூன்றடி ஆயிற்று. மூன்றடி ஆறடி ஆயிற்று. பார்த்த வர்கள் எல்லாரும் வியந்தார்கள். பிறகு அறுபதடி ஆயிற்று. எல்லாரும் அச்சத்துக்கே உள்ளாய்விட்டார்கள்

> கயம்தரு நறும்புனல்
> கையில்த் திண்டவும்
> பயந்தவர் களும் இகழ்
> குறளன்

[கயம் தரு : தடாகத்திலிருந்து வந்த; பயந்தவர்களும்: பெற்ற வர்களுமே.]

கெண்டியினுடைய தண்ணீர் கையில்ப் பட்ட மாத் திரத்தில், பெற்றவர்களுக்கே வெறுப்பாய் உள்ள அந்தக் குள்ள வடிவம்,

> கயம்தரு நறும்புனல்
> கையில்த் தீண்டவும்
> பயந்தவர் களும் இகழ்
> குறளன், பார்த்(து) எதிர்
> வியந்தவர் வெருக்கொள
> விசும்பின் ஓங்கினுன்

எப்படி விசும்பில் ஓங்கினுன் என்பதைக் கம்பர் சொல்ல வருகிருர்.

உயர்ந்தவர்க்(கு) உதவிய
உதவி ஒப்பவே.

*உயர்ந்த பண்புடையவர்களுக்குச் செய்த உதவி (மேலே குறித்த பத்து ரூபாயைப் போல) மதிப்பில் எதிர்பாராத முறையில் உயர்வது போல.*

கயம்தரு நறும்புனல்
கையில்த் திண்டவும்
பயந்தவர் களும் இகழ்
குறளன், பார்த்(து) எதிர்
வியந்தவர் வெருக்கொள,
விசும்பின் ஓங்கினன்,—
உயர்ந்தவர்க்(கு) உதவிய
உதவி ஒப்பவே.

*குறளாசிரியருடைய நயத்தைக் கம்பர் அழகாய் அனுபவித்திருக்கிறார். அவர் மூலமாக நாமும் அனுபவிக்கிறோம்.*

# திருவள்ளுவரும் அரசியலும்

## ச. இராஜகோபாலாச்சாரியார்

டி. கே. சி, அவர்களின் கட்டுரை கிடைத்த பின் என் கட்டுரை வேறு என்னத் துக்கு? 'திருவள்ளுவரும் அரசியலும்' என்ற விஷயத்தைப்பற்றி எழுதச் சொல்லுகிறீர் கள். இல்லறத்தை நடத்தும் மக்கள் திரு வள்ளுவரின் குறள், முதல் பாகத்தின்படி நடந்தால், அரசியல் தானுக நடக்கும். இதுவே என் கட்டுரை.

# திருவள்ளுவர் கழகம் - வெள்ளிவிழா

ரா. க. சண்முகம் செட்டியார்

மனிதனுக்கு அறிவு தோன்றிய நாள் முதல் பரம்பொருளைப் பற்றிய ஆராய்ச்சி நடந்துவருகின்றது. இன்னும் ஆராய்ச்சி நடந்துகொண்டுதான் இருக்கின்றது. உலகில் தோன்றிய 'பல் பெரும் சமயங்கள்' இந்த ஆராய்ச்சியின் முடிவை இன்னும் காணவில்லை.

2000 ஆண்டுகளாகத் தமிழ்மக்கள் வள்ளுவரின் திருக்குறளைச் சிந்தித்து ஆராய்ந்து வருகின்றார்கள். சென்ற 25 ஆண்டுகளாகத் தென்காசி 'திருவள்ளுவர் கழகத்தார்' இந்தச் சிந்தனையில் ஆழ்ந்திருக்கின்றனர். இது தென்காசி மக்களின் சிறந்த பண்பாட்டைக் காட்டுகின்றது.

இந்திய மக்களின் வாழ்க்கையைப் பற்றியும் அவர்களின் தத்துவத்தைப் பற்றியும் ஒரு குறைபாட்டை மேல்நாட்டார் எடுத்துச் சொல்லுவது வழக்கம். அதாவது, நாம் இந்த உலகத்தை மறந்து, மேல் உலகத்தைப் பற்றியே சிந்தனை செய்பவர்கள் என்பது. நம்முடைய பிற்போக்கான வாழ்க்கைக்கு இதுதான் காரணம் என்கின்றனர்.

இந்தக் குற்றச்சாட்டு ஒருவிதத்தில் உண்மைதான். ஏன்? வள்ளுவர் குறளின் உண்மையை நாம் மறந்து விட்டோம். குறளின் தத்துவத்தை நாம் வாழ்க்கையில் கடைப்பிடித்தால் இந்தக் குற்றச்சாட்டிற்கு ஆளாகமாட்டோம்.

குறள் சமய நூல் அல்ல. தத்துவ நூலும் அல்ல. அது வாழ்க்கை நூல். மக்களின் அன்றாட வாழ்க்கைக்குத் துணையாய் இருக்கும் ஓர் ஊன்றுகோல். நாம் வாழும் இந்த மண்ணுலகத்தையே தெய்வலோகமாகச் செய்யலாம் என்பது திருவள்ளுவரின் அடிப்படைக் கொள்கை. வள்ளுவரின் ஆணையைக் கடைப்பிடித்து வாழ்பவன், தான் வாழும் இல்லத்தையே தெய்வலோகமாகச் செய்து, தன்னையும், தெய்வ மக்களில் ஒருவனாக மாற்றிக்கொள்ளக்கூடிய சக்தியை உடையவன். இந்த உன்னத நிலையை ஒவ்வொரு மனிதனும் எளிதில் அடையலாம் என்பது வள்ளுவர் கண்ட உண்மை.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்."

பொருளின்மேல் ஆசை வைக்கக் கூடாது என்பதும், பொருளாசை மனிதன் நல்ல கதியை அடைவதற்கு இடையூறானதென்பதும் பல சமயங்கள் கூறும் கொள்கைகள்.

வள்ளுவர் இந்தத் தத்துவத்தை ஒப்புக்கொள்வதில்லை. உலக வாழ்க்கைக்குப் பொருள் இன்றியமையாதது; பொருள் எல்லா விதத்திலும் அவசியம் என்று சொன்னவர், அப்பொருளை நியாய வழியிலும் பிறருக்குத் தீங்கு விளைவிக்காமலும் சேகரிக்க வேண்டுமென்று நினைவூட்டுகின்றார்.

"அறன் ஈனும் இன்பமும் ஈனும், திறன் அறிந்து
தீதின்றி வந்த பொருள்."

மனிதனையும் மண்ணுலகையும் பொருளையும் பெருமைப்படுத்துகின்றார் வள்ளுவர். இவை மூன்றிற்கும் அஸ்திவாரமாய் அறத்தை வைத்தார்.

"ஆற்றின் ஒழுக்கி, அறன் இழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து."

எக்காலத்திலும், எந்த நாட்டிலும் மாறாத இந்த உண்மைகளை வள்ளுவர் கையாண்டிருப்பதால்தான் திருக்குறளை 2000 ஆண்டுகளுக்குப் பின்னும் பாராட்டுகின்றோம். வள்ளுவர் கழகத்தின் வெள்ளி விழாவில் மட்டும் அல்ல; நூற்றாண்டு விழாவிலும் வள்ளுவரையும் அவர் தந்த நூலையும் போற்றுவார்கள் என்பதில் சந்தேகமில்லை. வள்ளுவர் வாழ்க! திருக்குறள் ஓங்குக! தமிழ் மொழி வளர்க!

# திருக்குறள்—கடவுள் வாழ்த்து

# உரை விளக்கம்

### தூத்துக்குடி ந. சிவகுரு நாதன்

தென்காசித் திருவள்ளுவர் கழகத்தார் திருக்குறள் 'கடவுள் வாழ்த்து' என்னும் அதிகாரம் பற்றிய கட்டுரை யொன்று எழுதியனுப்பும் வண்ணம் ஆணையளித்தமையின் இஃது எழுதப்பெற்றது. வழூஉக் களைந்து உலகம் ஏற்றுக் கொள்ளுவதாகுக.

அவன், அவள், அது என்னும் அவயவப் பகுப்புடைய உலகம், தோன்றல், நிற்றல், அழிதல் என்னும் முத்தொழிற் படுதலின், இங்ஙனம் முத்தொழிற் படுத்தும் ஒரு வினைமுதலை அவாய் நிற்கின்றது.

குடமாகிய காரிய நிகழ்ச்சிகள், மண்ணாகிய முதற்காரண மும், தண்டு சக்கரங்களாகிய துணைக் காரணங்களும், குயவனா கிய நிமித்த காரணனும் வேண்டப்படுதலும், அவற்றுள் ஒவ்வொன்றும் இன்றியமையாதது என்பதும், மூன்றும் தம்முள் வேருதலும் காட்சி அளவையான் அறியப்படுதலின், உலகமாகிய காரியத்துக்கும் அவை மூன்றும் வேண்டப்படு கின்றன. உலகுக்கு மாயை முதற் காரணமும், இறைவன் நிமித்த காரணனும், அவனது சத்தி முதலியன துணைக் காரணங்களு மாகும்.

நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்னும் பூதங்களி னுலாகிய உலகம் அதி விசித்திரமாகிய காரியப்பொருளாயிருத் தலின், அதனை இயற்கை யென எளிதிற் கூறிவிட முடியாது; அறிவுடைப் பொருள் ஒன்றால் ஆக்கப்பட்டதென்றே கொள் ளுதல் வேண்டும். உயிர்கள் அறிவுடைப் பொருளாயினும், அவை ஐம் பெரும் பூதங்களினுல் ஆக்கப்பெற்ற உடல் கருவிக ளுடன் கூடிய பின்னரே அறிவு விளங்கக் காணப்பெறுதலும், அல்லுழி அறிவு விளக்கம் பெருமையுங் காணப்படுதலின் உயிர்களால் இவ்வுலகம் படைக்கப்பட்டதன்று என்பது தெளிவு; எனவே முற்றறிவு, அளவிலாற்றல் முதலியன வுடைய ஒரு முழுமுதற் கடவுளால் படைக்கப்பட்ட தென்றே கொள்ளப்படுதல் வேண்டும்.

இவ்வுண்மைகளை யெல்லாம் நுணித்தறிந்த ஆசிரியர் திரு வள்ளுவனுர் கடவுட் கொள்கை யுடையவராகவே திகழ்ந்தனர்.

கடவுட் கொள்கையுடையார் தாம் எத்தொழிலைச் செய் யத் தொடங்கினும் கடவுளை முன்னிட்டே செய்வர். கடவுட் கொள்கையுடைய ஆசிரியர் திருவள்ளுவனுர் தாம் செய்யும் ஒப்புயர்வற்ற மறையாகிய திருக்குறள் நூல், இடையூறின்றி இனிது முடிதற் பொருட்டும், அஃது எக்காலமும் உலகில் நின்று நிலவுதற் பொருட்டும் முதற்கண் கடவுளை வழிபட்டே நூல் செய்வான் தொடங்கினுர்; இவ்வுண்மையை உலகமும் அறிந்து உய்வு பெறத் தமது நூலின், முதல் அதிகாரமுமாகச் சேர்த்திருக்கிருர்.

ஈசானனே சர்வ வித்தைகட்டும் முதல்வன் என்பது ஆரிய மறையின் முடிவாகலானும், எல்லா அறங்கட்கும் மூல மாகத் திகழ்பவன் ஈசானனுகிய சிவபிரானே, என்பது அற வடிவாகிய விடையை ஊர்தியாகக் கொண்டிருத்தலானும், அறநூலாகிய திருக்குறளுக்குச் சிவபிரானே ஏற்புடைக் கடவு ளராவர். “பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னுஞ் செம்பொருள் காண்ப தறிவு” என்னுந் திருக்குறளாற் குறிப் பாகக் கூறப்பட்ட செம்பொருள் “சிவனெனும் நாமம் தனக்கேயுடைய செம்மேனி யெம்மான்” என அப்பர் அடிக ளால் குறிப்பிடப்பட்ட சிவபிரானே யென்பது தெளிவு.

ஆகவே, ஆசிரியர் திருவள்ளுவ தேவரின் வழிபடு கடவுளும் சிவபிரானே யாவர்.

இனி, கடவுள் வாழ்த்து அதிகாரத்தில் - வாழ்த்து, வணக்கம், பொருளியல்பு கூறுதல் என்னும் மூன்றனுள் பொருளியல்பே பெரிதும் கூறப்படுகின்றது. கடவுளை வாழ்த்துதலால் அக்கடவுளுக்கு ஆகும் பயன் ஏதும் இல்லை. "வாழ்த்துவதும் வானவர்கள் தாம் வாழ்வான்" என்றபடி வாழ்த்துபவரே பயனடைவர்.

கடவுள் என்னும் சொல் மாயா தத்துவங்களாகிய முப்பத் தாறனையும் கடந்துள்ள ஒப்பற்ற இறைவனையே குறிக்கும். தத்துவங்களினுட்பட்ட தேவர்களைக் கடவுளர் எனக் கூறுதல் புனைந்துரையே.

## 1

இனி, ஆசிரியர் திருவள்ளுவ தேவர் கடவுள் வாழ்த்தின் முதற்குறள்

"அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு"

என்பது.

இம் முதற் குறளால் உலகுக்குத் தலைவனாக ஒரு கடவுள் உள்ளான் என்பதும், அக்கடவுள் சிவபிரானே என்பதும் உரைக்கப்படுகின்றன. அகர உவமையால் பொதுவாக ஓர் இறைவன் உண்டென்பதும், ஆதி என்னும் அடையால் அவ்விறைவன் சிவபிரானே என்பதும் உணர்த்தப் படுகின்றன. இதனை,

"சீர்கொளிறை யொன்றுண்டத் தெய்வநீ யென்றெருப்பாற்
சோர்விலடை யாற்றெளிந்தோஞ் சோமேசா-வோரில்
அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு"

என்னும் மாதவச் சிவஞான முனிவர் அருளிச் செய்த சோமேசர் முதுமொழி வெண்பாவால் அறியலாம்.

இறைவன் எப்பொருட்கும் உவமிக்கப்படுபவனு மல்லன். அவனுக்கு உவமையாகக் கூறப்படும் பொருளும் எதுவுமில்லை.

ஆயினும், உவமையானன்றி அறிந்து கொள்ளும் ஆற்றலில்லாத உலகத்தவர் பொருட்டு ஆசிரியர் ஓர் உவமை முகத்தால் இறைவனுண்மையை விளக்குகின்றார். ஆசிரியர் திருவள்ளுவ தேவர், தாம் கூறும் பொருள்களை நுட்ப திட்பமாக விளக்குதல் போலவே, அவரால் கூறப்படும் உவமைகளும் நுட்ப திட்பமுடையனவேயாம் என்பது யாவரும் அறிந்த உண்மை.

முதற்குறளிற் காட்டப்படும் உவமை அகரம். இவ் அகரம் சுத்த மாயையின் காரியமாய்ப் பரசரீரத்தில் நிகழும் சூக்குமை வாக்கெனப்படும் நாதமாத்திரையாய்த் திகழ்வது. எழுத்து ஓசை எல்லாம் சுத்த மாயையின் காரியமே யாகும். நிலம், நீர், முதலிய பூதங்களினின்று எழும் ஒலி ஆகாயத்தின் கண்ணதே யாகும்.

இனி, உவமையாகக் கூறப்படும் அகரத்தினியல்பை ஒருவாறு ஆராய்வோம்: அகரம் வைகரி முதலிய வாக்குக்களைப் போலாது விகாரமின்றி நாத மாத்திரையாய்ப் பிறப்பது; உயிர், மெய், சார்பு, ஆய்தம் என்னும் எல்லா எழுத்துக்களுடனும் விரவி அவ்வவ் எழுத்துக்களின் வண்ணமாகவே நிற்பது; எல்லா எழுத்துக்கட்கும் தான் நிமித்தமாய் நின்று அவற்றைத் தோற்றுவிப்பது.

இவ்வாறே இறைவனும் இயல்பாகவே பாசங்களின் நீங்கி, முற்றறிவு அளவிலாற்றல் முதலிய சிற்குணங்களால் தலைமை யுற்றுத் திகழ்வன். "பூசுவதும் பேசுவதும் பூண்பதுவும் கொண்டென்னை? ஈசனவ னெவ் வுயிர்க்கும் இயல்பானுன் சாழலோ" என்னும் வாதவூரடிகள் திருவாக்கால் இதனைத் தெளிக. ஈசன் என்னும் சொல் தலைவன் என்னும் பொருளை யுடையது.

இனி, இறைவன் அறிவுடைப் பொருள்களாகிய எல்லா உயிர்களிடத்தும், அண்ட பிண்ட முதலிய சகல அறிவில் பொருள்களிடத்தும் சர்வ வியாபகமாய்க் கலந்து நிற்பன். இக் கலப்பு, எள்ளில் எண்ணெய் போன்றதாகும். இனி, இதனினுஞ் சிறந்த ஔபச்சிலேடிக வியாபகம் என்றுங் கூறப்படும். ஔபச்சிலேடிக வியாபகமாவது ஒரு சொல்லின் கண் இருபொருள்கள் இருப்பது போல் உயிர், நிலம், நீர், தீ

முதலிய எல்லாப் பொருள்களிேேடும் இறைவன் வேற்றுமை யறக் கலந்திருப்பதாகும். இங்ஙனம் கலந்து அவ்வப் பொருள் களாய் நிற்கும் இயல்பு பற்றியே, திருமுறை

"இருநிலனய்த் தீயாகி நீரு மாகி
இயமான ஞயெறியுங் காற்று மாகி,
அருநிலைய திங்களாய் ஞாயி ருகி
ஆகாச மாயட்ட மூர்த்தி யாகிப்
பெருநலமுங் குற்றமும் பெண்ணும் ஆணும்
பிறருருவுந் தம்முருவுந் தாமே யாகி,
நெருநலையாய் இன்ருகி நாளை யாகி
நிமிர்புன் சடையடிகள் நின்ற வாறே"

எனக் கூறுவதாயிற்று.

இங்ஙனம் கூறும் திருமுறைகளின் உண்மை யறியாதார் ஏகான்ம வாதப் பொருள் கொண்டு இடர்ப்படுவர். ஓரியல் புடைய பொருள், மற்ருே ரியல்புடைய பொருளாதல் யாண் டும் இல்லை என்னும் உண்மை உணர்வாராயின், அறிவே வடி வுடையதாக உள்ள இறைவன் அறிவில்லாச் சடப் பொருள் களும் சிற்றறிவு சிறுதொழில்களையுடைய உயிர்களுமாவான் எனக்கொண்டு மயங்கமாட்டா ரென்க. இறைவன் எல்லாப் பொருட்கண்ணும் வியாபித்து எல்லாவற்றையும் தனக்குத் திரு மேனியாகக் கொண்டிருத்தலினுலே யன்ருே அருச்சுனன் அடித்த வில்லடியும் பாண்டியனடித்த பிரம்படியும் எல்லாச் சீவர்க ளுடம்பிலும் பட்டவென வில்லி பாரதமும் திருவிளை யாடற் புராணமும் கூறின வென்க.

இனி, அகரம் எல்லா எழுத்துக்களுடனும் கலந்து நிற்பது டேைமையாது எழுத்துக்களை ஒலிப்பதற்கும் நிமித்தமாக நிற் கக் காண்கின்ருேம். அகரம் அங்காப்புடனேயே வெளிப்படு தலின் வாயை அங்காத்தலின்றி எவ்வொலியும் ஒலிக்க இயலா தன்ருே? இதுபற்றியே "அக்கரங்களின்ரும் அகர உயிரின் றேல்" எனச் சிவஞானபோத வார்த்திகம் கூறுவதாயிற்று.

இங்ஙனமே, இறைவனும் எல்லாப் பொருள்களின்கண் ணும் கலந்து நின்று அறிவிக்க வேண்டியவற்றிற்கு அறி

*வித்தும், அசைவிக்க வேண்டியவற்றை அசைவித்தும் உப கரிக்கின்ருன்.*

" எல்லா வுயிர்க்கு முயிரரு ணேச னசைவின்றி
அல்லா தனுவு மசையாத தென்ப தறிந்தனம்,
வில்லாடன் மார விருக்கவும் யோகு விளேத்தவந்நாட்
புல்லா திருந்தன வெல்லா வுயிரும்தம் போகத்தையே "

*என்னுஞ் செய்யுள், அங்ஙனம் உபகரிக்காத வழி எப்பொரு ளும் இயங்குவதில்லை என்பதனை விளக்குதல் காண்க.*

*இனி, இறைவன் எல்லா உயிர்களையும் இயக்குதற்கு அகரத்தை உவமையாகக் கூறுதலை அடியில் வரும் சிவஞான சித்தி திருவிருத்தத்தால் இனிதுணரலாம் :*

" எவ்விடத்து மிறையடியை யின்றியமைந் தொன்றை
யறிந்தியற்றி யிடாவுயிர்க ளீசன் ருனுஞ்
செவ்விதினி லுளம்புகுந்து செய்தியெலா முணர்ந்து
சேட்டிப்பித் தெங்குமாய்ச் செறிந்து நிற்ப
னிவ்வுயிர்க டோற்றும்போ தவனேயின்றித் தோற்ரு
விவற்றினுக்கம் முதலெழுத்துக் கெல்லாமாய் நிற்கு
மவ்வுயிர்போ னின்றிடுவ னதலாற்
மரனடியை யகன்றுநிற்ப தெங்கே யாமே ".

*" பிரம்மமில்லையாயின் ஒரு பொருளுமில்லை " என்னும் சுருதி வாக்கியத்திற்கு, 'அக்கரங்களின்ரும் அகர வுயிரின்றேல்' என் பதற்குப்போலத் தாற்பரியப் பொருள்கொள்ள அறியாதார் ஏகான்ம வாதப் பொருள்கொண்டு மயங்குவர்.*

*இனி, ஆதிபகவன் என்னும் பெயர் பற்றி ஆராய்வோம். பகவன் என்னும் சொல் 'ஐசுவரியம், வீரியம், புகழ், திரு, ஞானம், வைராக்கியம்' என்னும் ஆறும் உடையார்க்கு வழங்கப் படுவது. பகவன் என்னும் பெயருடையாரை விளக்க எழுந்த நிகண்டு நூல் "பகவனே" ஈசன், மாயோன், பங்கயன், சினனே, புத்தன் என ஐந்து தேவர்களைக் கூறிற்று. ஆயினும், முதலிற் குறித்த பெயர் ஈசன் என்பது. ஆதலின், ஈசனுகிய சிவபிரானுக்கே அச்சொல் காரணக்குறியாய் நின்று, பின்னர் ஏனையோருக்குப் புனையப் பெற்றது என்பதே தேற்றம். பகவன் என்பதன் பெண்பாற் பெயராகிய பகவதி என்பது*

சிவசக்திக்கே யன்றி ஏனைய சக்திகட்கு வழங்கப்படாமையே இதனை வலியுறுத்தும்.

இனி, பொருள்களைச் சுருங்கச் சொல்லி விளங்கவைப்பதே ஆசிரியர் திருவள்ளுவர் மரபு.

" விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்
துண்ணின் றுடற்றும் பசி"

என்னும் திருக்குறளுள் 'விரிநீர் வியனுலகம்' என அடைசார்ந் திருப்பது நீர்ப்பெருக்கையுடைய கடல் சூழ்ந்திருப்பினும் அதனாற் பயனின்று என்பதனை விளக்குவதற்கேயாம். இவ் வாறே ஏனைய இடங்களிலும் கண்டுகொள்க. எனவே, 'ஆதி பகவன்' என்பது இரு பெயரொட்டு எனக் கூறுவதினும், ஆதி என்பதை அடையாகவுடைய பகவன் எனக் கூறுவதே சிறப் புடையதாகும். என்னை?

" அவனவ ளதுவெனு மவைமூ வினைமையிற்
றோற்றிய திதியே யொடுங்கிமலத் துளதா
மந்த மாதி யென்மனார் புலவர்"

என்னும் சிவஞான போத முதற் சூத்திரம், உலகிற்கு ஒரு வினைமுதல் வேண்டப்படும் எனப் பொதுப்படக் கூறிப் பின்னர் அவ் வினைமுதல் சங்கார காரணனே எனச் சிறப்பு வகையானுணர்த்தக் காண்கின்றோம். அதுபோலவே, ஆசிரியர் திருவள்ளுவரும் பகவன் என்பதைப் பொதுமையிற் கொள்ள ஏலாவண்ணம் ஆதியென்னும் அடையொடு புணர்த்துக் கூறுவாராயினர் என்க. ஆதியென்பது சிவசத்திக்கே உரிய பெயராகச் சிவாகமங்களிலும் சித்தாந்த ஞான நூல்களிலும் வழங்குதல் காண்க. "சிவமெனும் பொருளும் ஆதி சத்தி யொடு சேரின் எத் தொழிலும் வல்லதாம்" என ஸ்ரீ சங்கராச் சாரியார் கூறுமாற்றானும் தெளிக. ஆதிபகவன் என்பது அம்மையப்பர் என்னும் பொருளதாம். இறைவன் தனது சிற்சத்தியோடு கூடி நின்றே ஐந்தொழிலும் செய்யும் முதல்வனாவான்.

இங்ஙனம் வியாபகமாயும் நிமித்தமாயும் நிற்கும் முதற் கடவுள் உண்மையை அகர உவமையாலும், அவ்விறைவன்

அம்மையப்பரே என்பதை ஆதியென்னும் அடையாலும் விளக்கியருளிய ஆசிரியர், மேல் அவ்விறைவனால் உயிர்கள் எய்துதற்குரிய பயன்களை விளக்கி யருளுகின்றார்.

## 2

" கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ
னற்றா டொழாஅ ரெனின் "

என்பது இரண்டாம் திருக்குறள். இஃது இந் நூலைப் பயில்வதனால் அடையும் பயன் கடவுளைத் தொழுது அவன் திருவருளைப் பெறுவது என்பதைக் குறிப்பானுணர்த்துவதுபோல் இருக்கின்றது. ஈண்டுக் கற்றல் என்பது " இலங்கு நூல் " என ஆசிரியர் நானூற்றுப் பத்தாம் குறட்பாவால் கூறும் நூல்களை ஓதி யுணர்தலேயாகும். உலக நூல் "கல கல கூஉந்துணை யல்லாற் கொண்டு தடுமாற்றம் போந்துணை" செய்யமாட்டா. இறை, உயிர், தளை என்னும் முப்பொருள்களின் உண்மையையும் இலக்கணங்களையும் உள்ளவாறே இனிதுணர்த்தும் ஞான நூல்களே கற்றற்குரிய நூல்களென்பதே ஆசிரியர் கருத்தாகும். அத்தகைய நூல்கள் மெய்கண்ட நூல்களேயாம்.

" பலகலை ஆகமம் வேதம் யாவை யினுங்கருத்துப்
பதிபசு பாசந் தெரித்தல்."

ஏன்? அந் நூல்களே உயிர்கள் அநாதியே கேவல நிலையில் " காருற்ற ஆணவக் கருவறையில் அறிவற்ற கண்ணிலாக் குழவியைப் போல் கட்டுண்டு " இருந்தமையையும், இறைவன் பேரருளால் மாயை கன்மங்களைக்கூட்டி முறையே உயிர்கட்குச் சகல நிலையில் அறிவு விளங்கச் செய்தலையும், இறைவன் உயிர்களோடு அத்துவிதமாய்ப் பிரிப்பின்றி நின்று காட்டியும் கண்டும் உபகரித்து வருதலையும், உயிர்கள் நன்றியை மறவாது அயரா அன்பு செய்யின் அவ்வன்பினால் இறைவன் திருவடியில் இரண்டறக் கலந்து பேராவியற்கை யுடைய இன்பப் பெரு வாழ்வாம் சுத்த நிலை அடைதலையும் இனிது கூறுவன வாதலின் என்க.

கற்றற்குப் பயன் திருவடி தொழுதலே என்பதனை வலியுறுத்துதற்பொருட்டு " நற்றா டொழாஅ ரெனின் " என்

எதிர்மறையாற் கூறினர். "வாலறிவன்" என்பது இறைவன் இயல்பாகவே பாசங்களினீங்கிய தூய அறிவுடையனுதலை உணர்த்துவதாகும்.

உயிர்கள் தாமே பிறந்து பிறந்து மேற்போந்து மெய்யறிவைப் பெறும் என்று கூறுதல் பொருந்தாது. உயிர்கள் அறிவு விளங்கப் பெறுவது உடல், பொறி முதலியவற்றினுலேயே என்பதும், அவற்றை உயிர்கள் தாமே படைத்துக் கொள்ளுதல் யாண்டும் காணப்படாமையானும், என்க. "நற்றாள்" என்றது உயிர்கட்கு நலமே செய்தலை உணர்த்துதற்கு. "நன்றுடையானை தீயதில்லானை" என்பது திருமுறை.

## 3

"மலர்மிசை யேகினன் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்"

என்பது மூன்றும் குறட்பா. இறைவனது தாளை உயிர்களே தொழுது அடைய வேண்டுமேயன்றி, இறைவன் யாதும் செய்யுமாறில்லை; செய்யின், தன்னியல்பிற் றிரிந்து விகாரியாவான். வழிநடப்போர் தாமே சென்று மரத்தையடைய அது குளிர் நிழலைத் தருதல்போல், தனது திருவடியைத் தொழுதார்க்கே இறைவன் இன்பம் அளிப்பன் என்னும் ஈசுர அவிகார மதத்திற் செல்லாமைப் பொருட்டுத் தன்னைத் தொழுவார் உள்ளத்தில் விரைந்து விளங்கி யருள்புரிவன் என்பது இத் திருக்குறளால் விளக்கப்படுகின்றது. விகாரம் சிற்றறிவும், சிறுதொழிலும் உடையார்க்கே யன்றி, பேரறிவும் பேராற்றலுமுடைய இறைவற்கு எய்துவதில்லை என்க. "தாயினும் நல்ல சங்கரன்" ஆதலின், அவன் போந்து அருள் செய்தல் கூடுமென்க. இறைவனிலும் சிறந்த பொருள் யாதுமில்லை யாதலின், அவனடி "மாணடி" எனச் சிறப்பிக்கப் பட்டது. "சிறப்பென்னும் செம்பொருள்" என்னும் வள்ளுவர் கூற்றானும் உணர்க. நிலம் இங்கே வீட்டினைக் குறிக்கும். அதுவே எக்காலமும் நிலைபேறுடையதாதலின், மாணடி சேர்ந்தார் மல மாயா கன்மங்களினின்றும் நீங்கிப் பிறப்பு இறப்புக்களைக் 'கடந்திருத்தலின்' நீடுவாழ்வார் எனக் கூறப்பட்டது.

*கடல் நீரோடு சேர்ந்த யாற்று நீர் மீண்டும் யாற்றில் செல்லாமை போல, மீண்டும் பிறப்பில் தலைப்படார் அவர் என்க. இதனை "முந்நீர்சேர்ந் தந்நீராய்ப் பின்னீங்கா முறை போல" எனச் சைவ நூல் கூறும். மாணடி சேர்தலாவது உயிர் மலத்தினின்றும் நீங்கி, இருளினின்றும் நீங்கிய கண் தெளி விளக்கம் பெற்றாற் போல், இறைவனது வியாபகத்துடன் கலந்து அவனது எண்குண விளக்கங்களையும் பெற்று இன்புற்றிருத்தலாம் என்க. சைவ சித்தாந்தம் ஒன்றனையே அடிசேர் முத்தி சிறப்பாகக் கொள்ளப்படுவது. இதனை*

"இம்மையே யீரெட்டாண் டெய்தி யெழிலாரு
மேந்திழையார் முத்தியென்று மிருஞ்சுவர்க்க முத்தி
அம்மையே யென்றுமுத்தி யைந்து கந்த
மறக்கெடுகை யென்றுமட்ட குணமுத்தி யென்று
மெய்ம்மையே பாடாணம் போல்கைமுத்தி யென்றும்
விவேகமுத்தி யென்றுந்தன் மெய்வடிவாஞ் சிவத்தைச்
செம்மையே பெறுகைமுத்தி யென்றுஞ்செப் புவர்கள்
சிவனடியைச் சேருமுத்தி செப்புவதிங் கியாமே".

*என்னும் சிவஞானசித்தி திருவிருத்தத்தா லுணர்க.*

**4**

"வேண்டுதல்வேண் டாமை யிலானடி சேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பை யில"

*என்பது நான்காம் குறட்பா. இறைவன் மல மாயா கன்மங்களைக் கடந்த விமலனாதலின், அவற்றான் வரும் விருப்பு வெறுப்புக்களைக் கடந்தவனாவான். அவனடி சேர்ந்தாரும் அக் குற்றங்களினின்றும் நீங்கியவ ராதலின் எக் காலத்தும் துன்பத்திற் படுவாரல்லர் என்பது,*

"நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்தி லிடர்ப்படோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே எந்நாளுந் துன்ப மில்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மை யான
சங்கரநற் .சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்மலர்ச்சே வடியிணையே குறுகி னோமே"

*என்னும் அப்பர் திருவாக்கால் தெளியப்படும்.*

## 5

" இருள்சே ரிருவினையுஞ் சேரா விறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு "

என்பது ஐந்தாம் குறட்பா. " இருள்சே ரிருவினை " என்பது ஆணவ மலத்தோடு தொடர்புடைய நல்வினை தீவினைகள்: அவ் வினைகளே உயிர்கட்குப் பிறப்பிறப்பை அளிப்பன. " பொருள் சேர் புகழ் " உண்மையான புகழ். அநாதியே ஆணவ மலத்துடன் கட்டுண்டு அறிவிச்சை செயல்கள் விளங்குதலின்றிச் சடம் போற் கிடந்த உயிர்கட்குத் தனுகரண புவன போகங்களைக் கொடுத்து, முறை முறையாக அறிவு விளங்கச் செய்தும், பின்னர், இருவினையொப்பு மலபரிபாகம் சத்திநிபாதம் எய்திய ஞான்று, குரு வடிவாய் வந்து ஆட்கொண்டு தனது திருவடியிற் கூட்டிப் பேரானந்தப் பெரு வாழ்வை யளித்தருளும் வள்ளன்மையால் இறைவற்கு உண்டாகும் புகழே உண்மையான புகழாகும். பொறியின்றி ஒன்றும் உணராததாய், அறிவித்தால் அன்றி அறியாததாய், உடல் கரணம் காலம் செயப்படுபொருள் இன்னதற்காக இது பயனுக என்பவைகளாகிய நியதியும், செயலாகிய ஏழு காரகங்களையும் இறைவன் கூட்டினாலன்றி ஒன்றுஞ் செய்யும் ஆற்றலில்லாத உயிர்கட்குக் கூறும் புகழ் வெறும் புனைந் துரையேயாகும். " புரிதல் " என்பது இடைவிடாது தியானித் தல். அங்ஙனம் தியானித்துத் தஞ் செயலற்றுத் தாமற்றுச் சிவோகம் பாவனையால் சிவமாக நிற்கும் உயிரைத் தானுகக் கொண்டு " இவன் செய்தி யெல்லாம் என் செய்தி யென்றும் செய்ததெனக்கிவனுக்குச் செய்த தென்றும் பவமகல உடனுகி நின்று கொள்வன் " ஆதலின், இருவினைகள் அங்ஙனம் நிற்கும் உயிரைச் சாரா வென்க.

## 6

" பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க
நெறிநின்ருர் நீடுவாழ் வார் "

என்பது ஆரும் குறட்பா. இறைவன் இயற்கை யுணர்வின ஞதலின் பொறிகளின் வழியாக வரும் சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்னும் ஐம்புல நுகர்ச்சியும் அவனுக்கு

வேண்டற்பாலதன் றென்க. அன்றியும், தன்னுடன் கலந்த உயிர்கட்கும் தன் அருட் குணங்களை அருளுதலின் அவ் வுயிர்கட்கு வரும் ஐம்புல நுகர்ச்சியை அவித்து அருளு வன் என்பதாம். "பொய் தீரொழுக்க நெறி" என்பது நிலையுதலில்லாத மாயா போக போக்கியங்களிற் பற்றுற்றுச் செல்லும் நெறியாகிய பொய்ந் நெறி. இறைவன் அருளின்றி ஒன்றையும் செய்யமாட்டாத உயிர்கள் தம்மியல்புணர்ந்து, யான் என தென்னும் செருக் கற்று, இறைவனோடு ஒன்று பட்டுத் தம் பணி இயற்றும் "ஏகனாகி இறைபணி நிற்கப் பெறுதலே" பொறிவாயி லைந்தவித்தான் பொய் தீரொழுக்க நெறியாகும். அங்ஙனம் நிற்கப் பெறவே மல மாயா கன்மங் களினின்றும் உயிர்கள் நீங்கப் பெறும்; பெறவே, பிறப் பிறப்புகளின்றும் நீங்கப் பெற்று, இறைவன் திருவடியிற் கலந்து, எக்காலமும் நிலைபெற்றுப் பேரின்ப வாழ்வை யடையும் என்க.

## 7

"தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்ற லரிது"

என்பது ஏழாம் குறட்பா.

இறைவன், தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவ னாதலின், அவனுக்கு உவமையாகக் கூறப்படும் பொருள் ஏதுமில்லை என்பது மேலே உரைக்கப்பட்டது. இறைவன் படைப்பில் ஒன்றாகிய கதிரவன் ஒளிக்கு உவமையாகக் கூறப் படும் ஒளி யாதேனும் உண்டுகொல்லோ! உவமை உவமேயத் தினும் பன்மடங்கு சிறந்திருத்தல் வேண்டும் என்பது இலக்கண நூன் முடிபு.

இனி, ஒப்பாகவேனும் கூறப்படும் பொருளுண்டோ வெனின் அதுவு மின்று. "பெருமைக்கும் நுண்மைக்கும் பேரருட்கும் பேற்றின் அருமைக்கும் ஒப்பின்மையான்" இறைவன் எனத் திருவருட்பயன் கூறும். "அண்டங்க ளெல்லாம் அணுவாக அணுக்களெலாம் அண்டங்களாகப் பெரிதாய்ச் சிறிதாயினும்" எனத் திருவிளையாடற் புராணம்

கூறும். இந் நிலைமையை 'நேரியன் பரியன்' எனச் சிவஞான சித்தி கூறுகின்றது. "தாள் சேர்ந்தார்க் கல்லால் மனக்கவலை மாற்றலரிது" என்பது தாள் சேராத பெத்தர்கள் நல்வினை தீவினைகளாற் பிறந்தும் இறந்தும் உழல்பவரே யாவர் என்பதை உணர்த்தும். பொருட்பேறு, மக்கட்பேறு, நோயில்லா வாழ்க்கைப் பேறு முதலிய எல்லாப் பேறுகளையும் குறைவறப்பெற்று உலகில் வாழ்வோர் எவரையும் காணமுடியாது. அங்ஙனம் எல்லாம் ஒருங்கு பெற்றாரேனும், எதுவும் சிலகாலமே யாதலின், வினைச் சுழற்சியால் அவை விரைவில் மாறிவிடுதலையும் காண்கின்றோம். இதுபற்றியே "துயரிலங்கு முலகு", "துன்பே கவலை பிணி" எனத் திருமுறை கூறும். விண்ணுலகத் தேவர் வாழ்க்கையும் இவ்வாறேதான் என்பது

"தீய வசுரர் பகையுண்டு செற்ற முண்டு சினமுண்டு
நோயுண்டு அனங்க னுருண்டு நோய்கட் கெல்லாம் தாயான
காய முண்டு கைதொழவேண் டுநரு முண்டு கற்பத்தே
மாயும் பிறவி யுண்டானல் வானோர்க் கென்னை வளனுண்டே"

என்னுஞ் செய்யுளாலறியப்படும். உலக இன்பங்களில், பெற்றதைச் சிறிதாகவும், பெறுதலைப் பெரிதாகவும் கொள்ளுவதே மலமாசுடைய உயிரின் செயலாதலின், ஒரு காலத்தினும் அதன் அவாக் குறையாமல் கவலையுற்றே யிருக்கு மென்க. இறைவன் திருவடியில் கூடிய உயிர் அவா நீங்கிப் பேரின்பத்துள் திளைத்திருக்கு மாதலின் மனக் கவலை யற்றொழியும் என்க. "துன்பே கவலை பிணி என்றிவற்றை நணுகாமற் றுரந்து கரந்து மிடர்" என்று பாடிய அப்பர் அடிகள், திருவருளிற் கலந்த பின்னர் "இன்பமே யெந்நாளும் துன்பமில்லை" எனப் பாடியருளியதுங் காண்க.

அன்றியும், தனக்கோ உலகுக்கோ வரும் எவ்விதக் கேட்டுக்கும் இறைவன் திருவடியிற் கலந்த அன்பர்கள் அஞ்சுவதும் அதற்குக் கவலை கொள்ளுவதுமில்லை யென்பதை,

"வானந் துளங்கிலென் மண்கம்ப மாகிலென் மால்வரையும்
தானந் துளங்கித் தலைதடு மாறிலென் தண்கடலும்
மீனம் படிலென் விரிசுடர் வீழிலென் வேலைநஞ்சுண்
டுனமொன் றில்லா ஒருவனுக் காட்பட்ட உத்தமர்க்கே"

என்னும் திருவாக்கு உணர்த்துமாற்றால் தெளிக.

## 8

" அறவாழி யந்தணன் றாள்சேர்ந்தார்க் கல்லாற்
பிறவாழி நீந்த லரிது "

*என்பது எட்டாம் குறட்பா.*

" அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான் "

*என ஆசிரியர் திருவள்ளுவ தேவரே "அந்தணர்" என்பதற்குப் பொருள் ஓதுதலின் அதற்குப் பொருள் விரித்தோத வேண்டுவ தில்லை. தாவரம் முதல் தேவர் ஈறாக எழுவகைப்பட்ட உயிர் கட்கும் வேண்டப்படும் உடல் கருவி போகம் முதலியவற் றைக் கொடுத்து அவ்வுயிர்களை வாழ்வித்தலும், பின்னர்த் தன் திருவடியிற் கூட்டி இன்புறுத்தலும் இறைவன் செயலாத லின், அவனது அந்தணத் தன்மையை விரித்தோத வேண்டா வென்க. இறைவன் இவறலும் இகலும் இன்றி யார்க்குமோர் பெற்றித்தாகி, அவரவர் வினையை நாடி அதற்குறு தண்டம் செய்தலின் அவன் அறக்கடலே என்பது தெளியப்படும். அவனது திருவடிப்பேறே பிறவியை நீக்குமன்றி வேறு எந்தச் சாதனங்களும் நீக்காவாதலின் "நீந்தலரிது" என எதிர்மறை முகத்தாற் கூறப்பெற்றது. பிறவி, தொன்று தொட்டுத் தொடர்ந்து எண்ணிறந்தனவா யிருத்தலான் அது கடலாக உருவகம் செய்யப்பட்டது.*

## 9

" கோளில் பொறியில் குணமிலவே யெண்குணத்தான்
றாளை வணங்காத் தலை "

*என்பது ஒன்பதாம் குறட்பா.*

" மானுடப் பிறவி தானும் வகுத்தது மனவாக் காய
மானிடத் தைந்து மாடு மரன்பணிக் காக வன்றோ
வானிடத் தவரு மண்மேல் வந்தரன் றனையர்ச் சிப்ப
ரூனெடுத் துழலு மூம ரொன்றையு முணரா ரந்தோ "

*என்பது சிவஞான சித்தித் திருவாக்கு.*

விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்னும் ஐவகைப்பட்ட பிறப்புக்கட்கு அமைந்திருக்கும் உடல் பொறி கரணங்களையும், மானுடப் பிறவிக்கு அமைந்திருக்கும் உடல் பொறி கரணங்களையும் உற்று நோக்கின், மானுடப் பிறப்பின் அருமை தெளியப்படும். மானுடப் பிறப்பும் உடலோம்புத லொன்றையே கொண்டுள்ளதாயின், ஏனைய பிறப்புக்கட்கு ஒத்தவாறே யன்றோ உடல் பொறி கருவிகள் அமைந்திருத்தல் வேண்டும்? மனிதன் தன்னுடைய அறிவாற் றலினால், உலகை எத்துணை வளம்பெறச் செய்திருக்கின்றான்? கலைகளினால் தன்னறிவை எவ்வளவு மேம்படச் செய்திருக் கின்றான்? இங்ஙனம் சிறந்த நிலையுற்ற மனிதன் "ஆதிபகவன் முதற்றே யுலகு" என்பதனைச் சிந்தித்துப் பிறவிக் கடலில் வீழ்ந்து வருந்தும் தனக்கு அப்பிறவித் துன்பத்தை நீக்கிப் பேரின்பப் பெருவாழ்வை யளிப்பவன் அவ் ஆதிபகவனே எனத் தெளிய வேண்டு மன்றோ? அங்ஙனம் தெளியப் பெற்றானுக்குத் துன்பம் நீக்கிப் பேரின்ப வாழ்வை அளிக்கும் அவ்விறைவன் திருவடிகளைத் தொழவேண்டுவது கடப்பாடு என்பது இக் குறட்பாவால் உணர்த்தப்பெறுகின்றது. மனிதன் தனக்குச் சிறப்பாக அளிக்கப்பெற்ற பொறி கரணங்களை இறைவன் வழிபாட்டுக் குரியனவாக்காவிடின் "கேட்பினும் கேளாத் தகையவே" என்றபடி அவைகளால் போதரும் பயன் இல்லை என்க.

> "வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
> தாழ்த்தச் சென்னியுந் தந்த தலைவனைச்
> சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
> வீழ்தத வாவினை யேன்நெடுங் காலமே"

என்னுந் திருவாக்கால் இவ் வுண்மையை இனிது தெளிந்து கொள்க.

எண்குணங்களாவன: தன்வயத்தனாதல், தூயவுடம்பின னாதல், இயற்கை யுணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல் பாகவே பாசங்களினீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்ற லுடைமை, வரம்பிலின்பமுடைமை என்பவைகளாம். இவை யெட்டும் சிற்குணங்கள். சாத்துவிகம், இராசதம், தாமதம்

என்னும் முக்குணங்கள் பிரகிருதி மாயா குணங்களாதலின் அவை வேறு. நிர்க்குணன், குணமிலான் என்னும் வாக்கியங்கள் இம் மாயா குணங்களில்லாதவன் என்பதையே குறிப்பவாகும். குணமில்லாத பொருள் யாதுமில்லை. பசுபாசங்கள் ஆகிய எல்லாப் பொருள்களும் தன்கீழ் வியாப்பியமாய் அடங்கி நிற்க, இறைவன் எல்லாவற்றினும் மேற்பட்டு வியாபகமாய் நிற்பன் என்பதனை "தாளை வணங்காத்தலை" என்னும் சொற்றொடர் விளக்கும் அருமையினை உணர்க. "வணங்காத்தலை" எனக் கூறவே, உபலக்கணத்தால் ஏனைய எல்லா உறுப்புக்களும் திருவங்கமாலையிற் கூறியவாறே அவன் வழிப்படல் வேண்டும் என்பது கொள்ளப்படும். இது பசுகரணங்களைச் சிவகரணங்களாக ஆக்குமாறு கூறப்பட்டது.

## 10

"பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தார்
இறைவ னடிசேரா தார்"

என்பது பத்தாம் குறட்பா.

பிறப்பு இறப்பு உடையன யாவை, அவையெல்லாம் சீவன்கள். பிறப்பு, இறப்பு இல்லாதவன் எவன், அவன் இறைவன். இவையே சீவன்கட்கும் இறைவனுக்கும் உள்ள வேற்றுமை. பிறவிக் கடலைக் கடக்க வேண்டிய உயிர்கள் பிறப்பில்லா இறைவன் திருவடியையே புணையாகக் கொண்டாலன்றி வேறு எவ்வாற்றானும் நீந்திக் கடக்க முடியாதென்பது இக் கடைசி குறட்பாவால் உடன்பாடாகவும் எதிர்மறையாகவும் முடிந்த முடிவாகக் கூறப்பட்டது.

இங்ஙனம் **முதற்** குறட்பாவால், சொற் பிரபஞ்சத்துக்கு அகரம் வியாபகமாகவும், நிமித்தமாகவும் இயல்பாகவே நிற்றலைப் போலப் பொருட் பிரபஞ்சத்துக்கும் வியாபகமாகவும், நிமித்தமாகவும் நிற்கும் இறைவன் ஒருவன் வேண்டப்படுமென்றும், அவ் விறைவன் அம்மையப்பனாய் விளங்கும் ஆதிபகவனே என்பதும் தெரிவிக்கப்பட்டன.

**இரண்டாம்** குறட்பாவால் அங்ஙனம் உணரப்பெற்ற இறைவன் கேவலத்தில் ஆணவ மலத்துள் கட்டுண்டு அறிவு,

இச்சை, செயலற்றுக்கிடந்த உயிர்க்குக் கலை, வித்தை, அராகம் என்னும் உள் அந்தக்கரணங்களைக் கொடுத்துப் பொதுமையிலும், மனம் புத்தி அகங்காரம் என்னும் அந்தக்கரணங்களைக் கொடுத்துச் சிறப்பு வகையிலும் விளங்கச் செய்து, கலை ஞானங்களை அருளி, அதனால் மேலும் மேலும் அறிவைப் பெருகச் செய்து, விரிந்த அறிவு நிலையில் தன் திருவடியிற் கலப்பித்து இன்பருளுவன் என்னும் உண்மையைக் கற்றறிந்தவர் அவன் திருவடியைத் தொழும் கடப்பாடுடையர் என்பது விளக்கப்பட்டது.

**மூன்றும்** குறட்பாவால், இறைவன் பேரருளுடையனாதலின் தன்னை நோக்கிவரும் பச்சிளங் குழந்தையைத் தாய் ஓடிவந்து எடுத்து இன்புறுத்தல் போல, எத்துணையோ காலம் அறிவற்றுக் கிடந்த சிற்றுயிர் சிறிது அறிவுவிளக்கம் பெற்றுத் தன்னைத் தொழுதல் கண்டும் மகிழ்ந்தும் தானே விரைந்து வந்து உள்ளத்தில் தோன்றுவன் என்பது உரைக்கப்பெற்றது.

**நான்காம்** குறட்பாவால் உயிர்கள், வேண்டுதல் வேண்டாமை என்னும் பெற்றியுடைய இறைவனடியிற் கலந்து அவை யிரண்டும் நீங்கப் பெற்று அவற்றால் வரும் துன்பங்களினின்றும் விடுபடுவன என்பது கூறப்பட்டது.

**ஐந்தாம்** குறட்பாவால் உயிர், நான் என்னும் முனைப்புடையதாயிருக்குங்காறும் இருவினைகள் மேலும் மேலும் விளைந்துகொண்டேயிருக்குமாதலின், இறைவன் திருவடிகளையே இடைவிடாது நினைந்து நிற்கப் பெற்றால் அவை தாமே நீங்கப் பெறும் என்பது கூறப்பட்டது.

**ஆறும்** குறட்பாவால் ஐம்பொறிவழிச் செல்லுதல் ஒழிந்து இறைவனோடு ஒற்றுமைப்பட்டு அவன் பணியில் நிற்கப் பெற்றாலே பிறப்பிறப்பு நீங்கி உயிர்கள் வீடு பெற்று நிலையுறுதலுறும் என்பது கூறப்பட்டது.

**ஏழாம்** குறட்பாவால் உலக இன்பங்கள் எத்துணைப் பெரியன வாயினும் அவற்றால் உயிரினிச்சை நிறைவு படாமையானும் வாழ்க்கையிற் பலப்பல துன்பங்கள் நிகழ்வன ஆகலானும் மனக் கவலையிலே உயிர்கள் உழன்றுகொண்

டிருக்கும்; இறைவனடியிற் கலந்த வழியே அக்கவலை நீங்கப் பெறும் என்பது தெரிவிக்கப்பட்டது.

**எட்டாம்** குறட்பாவால் எல்லா உயிர்கள் மாட்டும் தண்ணளி புரியும் அறக் கடலாகிய இறைவன் திருவடியிற் சேர்ந்தாரே பிறவியாகிய கடலை நீந்துவர்கள் என்பது உணர்த்தப்பட்டது.

**ஒன்பதாம்** குறட்பாவால் மக்கட் பிறவிக்கெனச் சிறப்பாக இறைவனுல் கொடுக்கப்பெற்ற தலை முதலிய உறுப்புக்களை அவன் வழிபாட்டிற்கே உரியவாக்க வேண்டும் என்பது உரைக்கப்பட்டது.

**பத்தாம்** குறட்பாவால் இறைவனடி சேர்ந்தாரே பிறவிக் கடலை நீந்துவர்; ஏனையர் நீந்தமாட்டாராதலின் அவன் அடி சேரவேண்டுவது இன்றியமையாத தென்பது முடிந்த முடிபாகக் கூறப்பட்டது.

இறைவனுடைய திருவருட் சத்தியே திருவடி என உபசரித்துக் கூறப்படும். திருவடி சேர்தல் ஐந்து இடங்களில் கூறப்பட்டுள்ளது. அபரமுத்தி மூன்றனையும், மலநீக்கத்தில் உண்டாகும் திருவருள் விளக்கத்தையும், பரமுத்தி நிலையில் உண்டாகும் சிவானந்த விளக்கத்தையும், முறையே அவ்விடங்கள் குறிப்பானுணர்த்தும்.

எனது சிற்றறிவுக்கு எட்டிய அளவில் இங்ஙனம் கடவுள் வாழ்த்து அதிகாரத்துக்குப் பொருள் விளக்கம் செய்யப் பட்டது. பரிமேலழகர் முதலிய உரை யாசிரியர்களின் உரையும் கொண்டு ஏனைய பொருள்களையும் உணர்ந்து உலகம் இன்புறுவதாகுக!

திருக்குறள் பொதுநூ லென்று செப்புவோர் செப்பச் சைவப்
பெருக்குறு மறைநூ லென்றே பேணுவர் சைவ அன்பர்
விரிக்குநற் பொருள்கள் கற்று விளங்கிய வுணர்வு கொண்டு
மருக்கிள ரிறைவன் பாத மலரிணை வணங்கி வாழ்க.

# திருக்குறளும் வைணவமும்

## B. R. புருஷோத்தம நாயடு

தெய்வப் புலமைத் திருவள்ளுவனாரை ஒவ்வொரு மதத்தினரும் தத்தம் மதத்தைச் சார்ந்தவர் என்று கூறுப. இப்பெரியார், நிற்கின்றதெல்லாம் நெடுமால் என்னும் உண்மையை ஓர்ந்த பரம வைதிகர் என்றும், அங்ஙனமே ஒழுகி வந்த பரம வைணவர் என்றும் வைணவப் பெருமக்கள் கூறுவார்கள். அவர்கள் கூறுவனவற்றை ஈண்டுச் சுருக்கித் தருகிறேன்.

தெய்வப் புலமைத் திருவள்ளுவனார்தம் மதத்தை நாம் அறிந்து கோடற்கு அவர்தாம் அருளிய திருக்குறளும், அத்திருக்குறளுக்குச் சிறப்புப்பாயிரமாக எழுந்த திருவள்ளுவமாலையுமே சிறப்புடைக் கருவிகளாகும். பரிமேலழகர் உரையையும் ஒரு சாதனமாகக் கோடல் அமையும். இவற்றுள், சிறப்புப்பாயிரம் அளப்பரிய ஆகாயத்திற்கு விளக்கமாகிய திங்களும் ஞாயிறும் போலுதலானும், பருப்பொருட்டாகிய பாயிரம் கேட்டார்க்கு நுண்பொருட்டாகிய நூல் இனிது விளங்குமாதலானும் சிறப்புப் பாயிரமாகிய திருவள்ளுவமாலையையே முதலில் ஆராய்வோம்.

இது, ஐம்பத்து மூன்று வெண்பாக்களையுடையது; அசரீரி நாமகள் முதலியோராலும், கடைச் சங்கத்து வீற்றிருந்த

பொய் யடிமை யில்லாப் புலவர்கள் நாற்பத்தொன்பதின்மராலும் பாடப் பட்டது; உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர் முதலிய பண்டைய உரையாசிரியர்களால் மேற்கோளாக எடுத்தாளப்படும் மேன்மையுடையது. இதன் வெண்பாக்களுள், சில நூலின் அளவையினையும், சில நூலின் பெருமையினையும், சில ஆசிரியர் பெருமையினையும், உவமை முகத்தானும் பிறவாற்றானும் கற்றார் உளம் கொளத் தெள்ளிதின் உணர்த்தும் திறம்படைத்தவை. இவற்றுள், ஆசிரியர் பெருமையினையும், நூலின் பெருமையினையும் உவமை முகத்தால் விளக்கும் வெண்பாக்களே ஈண்டு எடுத்து ஆராயப்படுகின்றன; அவையே இக் கட்டுரைக்குப் பயன்படுவ ஆதலின்.

மலர்களுக்குள்ளே தாமரை மலரும், பொன்களுக்குள்ளே சாம்புனதப் பொன்னும், பசுக்களுக்குள்ளே காமதேனுவும், யானைகளுக்குள்ளே ஐராவதமும், தேவர்களுக்குள்ளே திருமாலும் போன்று நூல்களுக்குள்ளே திருவள்ளுவரது திருக்குறள் வெண்பா சிறந்தது என்னும் பொருள் அமைந்த

"பூவிற்குத் தாமரையே பொன்னுக்குச் சாம்புனதம்
ஆவிற்கு அருமுனியா யானைக் கமர்உம்பல்
தேவில் திருமால் எனச்சிறந்த தென்பவே
பாவிற்கு வள்ளுவர் வெண் பா."

என்ற செய்யுள் திருவள்ளுவ மாலையில் 36-வது செய்யுள். இச் செய்யுளிற் கூறப்பட்ட உவமைகள் எல்லாம் அவ்வவ் இனத்தில் உயர்ந்தவை என்பது சான்றோர்க் கெல்லாம் ஒப்ப முடிந்தது. [1]"உயர்ந்ததன் மேற்றே உள்ளுங்காலை" என்பது இலக்கணம். இச் செய்யுளால் தெய்வங்களுக்குள் உயர்ந்தவன் திருமால் என்பது அக்காலத்து ஆன்றோர்கள் கொண்ட முடிபு என்பது புலனாதல் காண்க. [2]"அறுபொருள் இவனென்றே அமரர் கணம் தொழுதேத்த" என்றார் இளங்கோவடிகள். [3]"மனிசர்க்குத் தேவர் போலத் தேவர்க்கும் தேவாவோ" என்பது தமிழ் மறை. இத் திருவள்ளுவ

1. தொல். பொருள். சூத். 278.
2. சிலப்பதிகாரம். ஆய்ச்சியர் குரவை.
. திருவாய்மொழி. 8. 1: 5.

மாலைச் செய்யுள் "அகரமுதல எழுத்தெல்லாம்" என்ற திருக் குறளை நோக்கி எழுந்தது.

உயிர்கள் நல்லதும் தீயதும் உணர்ந்து உய்வுபெற்றுக் கரை மரம் சேர்தற் பொருட்டு அம் முழுமுதற் கடவுளான திருமால் தானே தன்னுடைய தண்ணளியால் தானே அவதரித்தும் மஹ ரிஷிகள் முனிவர்கள் பெரியோர்கள் இவர்கள் மூலமாக நின்றும் வேத சாஸ்திரங்களையும் இதிகாச புராணங்களையும் வெளிப்படுத்தினன். ஆதலால், அவனே உலகிற்குப் பரமாசாரி யன்என்பது நம்முன்னோர்கள் கொள்கை. இதனுனே, ஞானோப தேசம் செய்யும் பெரியோர்கட்கு உவமை கூறுமிடத்து அவ் விறைவனையே கூறிச்செல்வர் நம்பெரியோர். "நிலம் தரு திரு வின் நெடியோன்போல" என்ற மதுரைக் காஞ்சி வரிக்கு "எல்லா நிலங்களையும் தன்னிடத்தே காட்டின பெருஞ் செல் வத்தையுடைய மாயோனைப்போலத் தொல்லாணையினையுடைய நல்லாசிரியர்; என்றது, கண்ணன் எப்பொருளும் தானுயிருக் கிறபடியைக் காட்டி ஸ்ரீகீதை அருளிச் செய்து எல்லாரையும் போதித்தாற்போல எல்லாரையும் போதிக்க வல்ல ஆசிரியர் என்றவாறு" என்று எழுதியுள்ள நச்சினுர்க்கினியர் உரையை ஈண்டு நினைவு கூர்க. இனி,

"உப்பக்கம் நோக்கி உபகேசி தோள் மணந்தான்
உத்தர மாமதுரைக் கச்சென்ப—இப்பக்கம்
மாதாநு பங்கி[1] மறுவில் புலச்செந்நாப்
போதார் புனற்கூடற் கச்சு."

என்ற 21-வது செய்யுளை நோக்குவோம். வடதிசை குறித் துச் சென்று நப்பின்னையினது தோளை மணந்த கண்ணபிரானை வட மதுரைக்கு ஆதாரம் என்று சொல்லுவர்; இப்பக்கத்தைக் குறித்து மாதாநுபங்கி எனப்படுகின்ற குற்றமற்ற புலமை யாகிற தேனைச் சொரிகின்ற செவ்விய நாவாகிய மலரையுடைய திருவள்ளுவர் நீர்வளத்தையுடைய தென்மதுரைக்கு ஆதாரம் ஆவர் என்பது இதன் பொருள். உபகேசி—நப்பின்னைப் பிராட்டி; கூந்தல் அழகையுடையவள் என்பது இச்சொல்லின் பொருள். நேமிநாத உரைகாரரும் "இணையே பாலே" என்ற செய்யுளின்கீழ் இச்செய்யுளை உதாரணமாகக் காட்டி, உபகேசி

1 மாதாநுபங்கி, செந்நாப்போதார் என்பன, திருவள்ளுவருடைய பெயர்கள்.

யாவாள்—நப்பின்னைப் பிராட்டியார் என்ற விளக்கமும் எழுதினர். ஆதலால், இச்செய்யுளுக்குப் பிறவாறு பொருள் கூறுதல் ஆன்றோர் கருத்தொடு முரணும் என்க. இச் செய்யுளின்கண், திருவள்ளுவனார்க்கும் அவர் அருளிய திருக்குறளுக்கும் கண்ண பிரானையும் அவர் அருளிய பகவத் கீதையையும் உவமை கூறியிருத்தல் காண்க. இச் செய்யுள், "பொறிவாயில் ஐந்தவித்தான்" என்ற திருக்குறளை நோக்கி எழுந்தது.

மேலும், அவ்விறைவன் [1] "முதன் முறை இடை முறை கடை முறை தொழிலின், பிறவாப் பிறப்பிலை பிறப்பித்தோரிலையே" என்கிறபடியே, உயிர் அளிப்பான் எங்கின்ற யோனியுமாய் அவதரித்த அவதாரங்களுள் நம் பெரியோர்கள் அனைவரும் ஈடுபட்டுப் போற்றும் அவதாரம் திருவிக்கிரமஅவதாரமேயாகும். காரணம் யாது? எனின், உயிர்கட்கும் இறைவனுக்கும் உள்ள சேஷி சேஷ சம்பந்தத்தை உணர்த்தி உலக இருளைப் போக்கியமையால் என்க. இதனைப் பற்றித் திருக்குறளைக் கூறுமிடத்து விரித்துக் கூறுவன்.

[2] "திரண்டமரர் தொழுதேத்தும் திருமால்நின் செங்கமல
இரண்டடியால் மூவுலகும் இருள்தீர நடந்தனையே!"

என்று இளங்கோவடிகள் உளமுருகி ஈடுபட்டுப் பாடுதல் காண்க. 'இருள்தீர நடந்தனையே' என்றதன் உண்மைப் பொருளை ஓர்க.

"மாலும் குறளாய் வளர்ந்திரண்டு மாணடியால்
ஞாலம் முற்றும் நயந்தளந்தான்—வாலறிவின்
வள்ளுவரும் தங்குறள்வெண் பாவடியால் வையத்தார்
உள்ளுவவெல் லாமளந்தார் ஓர்ந்து."

இது பரணர் பாடியது. திருவள்ளுவ மாலையில் 6-வது செய்யுளாக உள்ளது.

திருமாலும் குறளாக அவதரித்து வளர்ந்து மாட்சிப்பட்ட இரண்டு திருவடிகளால் உலகமனைத்தையும் விரும்பி அளந்தான்; மெய்யறிவினையுடைய திருவள்ளுவரும் தம்முடைய

1 பரிபாடல். 3. 71—72.
2 சிலப்பதி. ஆய்ச்சியர் குரவை.

குறள் வெண்பாக்களின் இரண்டு சிறிய அடிகளால் உலகத்துள்ளோரால் நினைக்கப்பட்டவற்றையெல்லாம் ஆராய்ந்து அளந்தார் என்பது இதன் பொருள்.

பரணர், இச்செய்யுளால் தேவர்களுள் உயர்ந்தான் ஒருவன் செய்த செயலையும் மக்களுள் உயர்ந்தார் ஒருவர் செய்த செயலையும் ஒப்பிட்டுக் கூறி ஈடுபடுதல் காண்க. இங்கு, மாலும் மாணடியால் நயந்து அளந்தான்; வள்ளுவரும், வாலறிவின் ஓர்ந்து அளந்தார் என்ற சொற்களின் நயங்களைச் சிந்தித்தல் தகும். "கானின்ற தொங்கலாய்" என்ற செய்யுளும் இப்பொருளையே கூறியதாம். இவ்விரு செய்யுட்களும் "மடியிலா மன்னவன்" என்ற திருக்குறளை நோக்கி எழுந்தன.

இனி, திருவள்ளுவரால் அருளிச் செய்யப்பட்ட திருக்குறளுக்கு மஹாபாரதம், ஸ்ரீ ராமாயணம், மனு தர்ம சாஸ்திரம், பண்டை மறை இவையே ஒப்பாவன என்றும், மற்றை நூல்கள் ஒப்பாகமாட்டா என்றும் கூறுகின்றார் பாரதம் பாடிய பெருந்தேவனார்;

"எப்பொருளும் யாரும் இயல்பின் அறிவுறச்
செப்பிய வள்ளுவர்தாம் செப்பவரு—முப்பாற்குப்
பாரதம்சீ ராம கதைமனுப் பண்டை மறை
நேர்வனமற் றில்லை நிகர்."

என்பது அச்செய்யுள். இதன்கண் 'நேர்வன' என உடன்பாட்டாற் கூறிப் பின்னும் 'மற்று இல்லை நிகர்' என எதிர்மறை முகத்தானும் கூறும் திட்ப நுட்பங்களை நோக்குக. இவற்றுள், பாரதமும், ஸ்ரீ ராமாயணமும் இதிகாச சிரேஷ்டங்களாய் ஸ்ரீமந் நாராயணனுடைய பொருள் சேர் புகழ்களையே கூறுவனவாதலின் அவற்றினைப் பற்றிக் கூறல் வேண்டா; வேதங்களும் "ஆதி அந்தம் அரியென ஓதினார்" என்கிற படியே, அப் பரமன் புகழையே கூறுவன என்பது தெளிவு. இனி, மனு தர்ம சாஸ்திரத்தோடு திருக்குறள் ஒப்பாயவாறு யாங்ஙனம்? இவ் விரண்டற்கும் பொதுத்தன்மை யாது? எனின், கூறுவன். ஒப்பு என்பது சிறிது ஒத்துச் சிறிது ஒவ்வாதொழிவது; என்னை? 'குவளைப் பூப்போலும் கண்' என்றால், நீலம் மாத்திரை ஒக்கும்; மற்று, ஒவ்வாப் புடை பெரிது;

'பவளம் போலும் வாய்' என்றால், செம்மை மாத்திரை ஒக்கும்; மற்று, ஒவ்வாப் புடை பெரிது; அங்ஙனமே இங்கும் கொள்க. அவ் வொருபுடை ஒப்புத்தான் யாதோ? எனின்,

மனு தர்ம சாஸ்திரமானது "தர்ம சாஸ்த்ரேஷு மாநவ:" என்கிறபடியே, தர்ம சாஸ்திரங்களிற் சிறந்தது; "யத்யத் மநுரவது தத்தத் பேஷஜம்" என்கிறபடியே, மநுவானவர் சொல்லுவ வனைத்தும் பிறவிப் பிணிக்கு மருந்து என்று புகழப்படும் சிறப்பு வாய்ந்தது. இந்நூலில் முதலில் உலகத் தோற்றத்தை உரைக்குமிடத்து (6-வது ஸ்லோகம் தொடக்கம்) "இவ்வாறு பிரளய காலம் முடிந்த பின்பு, உயிர்களைப்போல் கருமத்தினால் சரீரம் எடுக்காமல் தன் இச்சையாலே சரீரம் எடுக்கத் தக்க சுவயம்பூவான பகவான், கண் முதலான புற இந்திரியங்களால் இழுக்கப்படாதவராயும், ஒருவராலும் தடுக்கப்படாத படைப்பு முதலிய முத்தொழில்களையு முடையவராயும், ஆகாயம் முதலிய ஐம்பெரும் பூதங்களையும் விளங்கச் செய்பவராயும், உலகிற்கு இன்றியமையாதவராயும் விளங்கினார்" என்று, இவ்வாறு கூறிப் பின், தண்ணீரின் சிருஷ்டியைச் சொல்லி, அதில், பகவான் தன் சக்தி வடிவமான ஒரு விதையை விதைத்ததையும் அவ்விதை அண்டமானதையும் அதில் நான்முகனைப் படைத்ததையும் கூறிப் பின், தண்ணீர் நரன் என்னும் இறைவனால் படைக்கப்பட்டமையின் 'நாரம்' என்ற பெயரை அடைந்தது, அவ் விறைவன் அந் நாரத்தில் வசிப்பதனால் நாராயணன் என்ற பெயரை யடைந்தான் என்றும் கூறப்பட்டிருக்கின்றது. இந்த முதன் முதலில் "தத ஸ்வயம்பூர் பகவான்" என்று தொடங்கிப் பின், அந்தப் பகவானால் உலகம் முதலியன படைக்கப்பட்ட விதத்தைக் கூறிப் பின், அவ்வாறு படைத்த அந்தப் பகவானை நாராயணன் என்று நினைமின்" என்று அறுதியிட்டிருத்தலை நாம் முதலில் நினைவிற்கொள்ள வேண்டும். அவ்வாறு கொண்டு திருக்குறளை நோக்குவோம்; திருக்குறள் உலகத்துத் தோன்றிய தமிழ் நூல்களுள் ஒப்புயர்வற்றது என்பதும், அது பிறவிப் பிணிக்கு மருந்து என்பதும் கூறல் வேண்டாவன்றே? அத்தகைய திருக்குறளுள் முதன் முதலில் "அகரமுதல எழுத்தெல்லா மாதி, பகவன் முதற்றே உலகு" என்று கூறி, கடவுள் வாழ்த்தின் ஈற்றில் "பிறவிப் பெருங்

கடல் நீந்துவர் நீந்தார், இறைவ னடிசேரா தார்” என்ற திருக குறளால் முதற்கண் கூறிய அந்தப் பகவான் இறைவன் என்ற பெயரையுடையவன் ஆவான் என்று அறுதியிட்டிருத்தலை ஒப்பு நோக்குக. இறைவன் என்ற திருப்பெயரும் நாராயணன் என்ற திருப்பெயரும் ஒரு பொருளன என்பது பின்னர்த் தெளியப்படும். “பகவன் முதற்றே உலகு” என்ற மூன்று சொற்களைக் கொண்ட ஒரு சிறிய அடியானது மனு தர்ம சாத்திரத்திற் கூறிய அத்துணைப் பொருள்களையும் தனக் குள் அடக்கிக்கொண்டு மிளிர்தலை நாம் காண்கிறோம்.[1] இச் செய்யுளானது “இருள்சேர் இருவினையும் சேரா” என்ற திருக்குறளை நோக்கி எழுந்தது. திருவள்ளுவ மாலையில் வேறு தெய்வங்களையும் வேறு நூல்களையும் கூறப்படாமை நினைவில் இருத்தற்குரியன.

இனித் திருக்குறளை நோக்குவோம்:—கடவுள் வாழ்த் தில் முதற் செய்யுளாகிய “அகரமுதல” என்ற குறளால் ‘ஆதி பகவனே’ எல்லா வுலகங்கட்கும் முதற் காரணன் என்று கூறி, “இருள் சேர்” என்னும் ஐந்தாவது குறளால் ‘பகவன்’ என்ற சொல்லிற்குரிய பொருளினைக் கூறி, பின் “பிறவிப் பெருங்கடல்” என்னும் பத்தாவது குறளால் அதனை யுடையவன் நாராயணன் என்பதனையும், அவன் திருவடி களே பிறவிப் பெருங்கடலைக் கடத்தும் புணை என்பதனையும் கூறினர். இங்ஙனம், முதலிலும் இடையிலும் இறுதியிலும் அவனைக் கூறினராகவே மற்றை ஏழு செய்யுட்களாலும் அவனையே கூறினர் என்பது தாமே பெறப்படுவதாம். “மடியிலா மன்னவன்” என்ற குறளால் அவனே சர்வரக்ஷகன் என்று கூறி, “தாம் வீழ்வார் மென்றோள்” என்ற குறளால் அவனே மோக்ஷத்தைக் கொடுப்பவனுமாவான் என்பதனைத் தெளிவுபடுத்தினர். இறைவனைப் போன்றே அவனுடைய கல்யாண குணங்களும் நித்தியம் என்பது வைணவ மதக்

1. தினையளவு போதாச் சிறுபுல்நீர் நீண்ட
பனையளவு காட்டும் படித்தால்—மனையளகு
வள்ளைக் குறங்கும் வளநாட வள்ளுவனார்
வெள்ளைக் குறட்பா விரி. (திருவள்ளுவ மாலை 5)

என்று கபிலர் பாடிய செய்யுளின் பொருளையும் ஈண்டு ஓர்ந்துணர்க.

கொள்கை. இப் பெரியாரும் 5-வது குறளில் இறைவனுடைய புகழைப் 'பொருள்சேர் புகழ்' என்றதூஉம் அது பற்றி என்று தெளிதல் தகும். "தாவா விழுப் புகழ் மாயோன்" என்றார் ஆசிரியர் தொல்காப்பியனார். "முழு நலம் முதலில கேடில" என்றார் பிரபந்த ஜன கூடஸ்தரான நம்மாழ்வார். மோக்ஷம் என்பது ஓர் உலக விசேடமே என்பதூஉம், அது திருமாலுக்கே உரிய உலகம் என்பதூஉம் இப் பெரியாருடைய கொள்கைகளாகும்; "யான் எனது", "யாதானும் நாடாம்" என்ற குறள்களாலும் இவை வலியுறுவனவாம்.

இனி, ஒவ்வொன்றனையும் முறையே விளக்குவேன்.

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு."

இதன்கண் கூறியுள்ள ஆதி பகவன் என்ற இரு சொற்களும் இறைவனுடைய இரண்டு திருப் பெயர்கள்; ஆதியாகிய பகவன் என்பது பொருளாம். இவற்றுள், 'ஆதி' என்பது பாஞ்ச ராத்திரிகள் தம் தெய்வத்திற்கு வைத்து வழங்கி வரும் பெயர் என்பதனைச் சிவஞான சித்தியார் பரபக்கத்தில் பாஞ்ச ராத்திரி மத மறுதலையில் "ஆதியாய் அருவுமாகி" என்னும் முதற் பாட்டின் உரையில் 'பாஞ்ச ராத்திரீ! நீ உன் கர்த்தாவை ஆதி என்று கூறினாய்; அங்ஙனம் ஆதியாயின் ஆதிக்கு முடிவுண்டாய்க் கர்த்தாவு மல்லனுவன்;' என்று கூறப் பட்டுள்ளதால் தெளியலாகும். இங்ஙனம், பாஞ்ச ராத்திரிகள் தங்கள் தெய்வத்திற்குக் கூறும் 'ஆதி' என்ற பெயரால் தெய்வப் புலமைத் திருவள்ளுவனார் தம் தெய்வத்தைச் சுட்டுவராயின் இவர் எம் மதத்தினைச் சார்ந்தவராதல் வேண்டும்? பாஞ்ச ராத்ரம் என்பது வைணவ ஆகமம். "அந்தமில் ஆதியம் பகவன்" என்ற தமிழ் மறை எழுந்ததூஉம் அவர் தம் கூற்றினை நோக்கியே போலும். இனி, இரண்டாவது பெயர் 'பகவன்' என்பது; இச் சொற்குப் பொருள் ஆறு குணங்களையுடையவன் என்றும், அவ் ஆறு குணங்களும் இவை என்றும் விஷ்ணு புராணத்திற் கூறப்பட்டுள்ளன. இப் பெயர் திருமாலுக்கே உரியது என்பதனைப் பற்பல வாயிலாகப் பற்பல சான்றுகள் காட்டிப் பெரியோர்கள் நிறுவி

யுள்ளனர். ஈண்டுச் சிலவற்றைத் தருகிறேன் :— திருமால் அடியார்கள் '**பாகவதர்**' எனப்படுவர்; பகவானுக்கு அடிமைப் பட்டு வணங்கி வழிபடும் காரணத்தால் அவர்கள் **பாகவதர்கள்** எனப்படுகின்றனர். இப் பெயர் வேறு எம் மதத்தினர்கட்கும் வழங்காமை காண்க. ஏனையோர் சைவர், ஜைனர், பௌத்தர் என்று இன்னோரன்ன பெயர்களால் வழங்கப்படுவர். மேலும், அவன் அருளிச் செய்த கீதை **பகவத்கீதை** என வழங்கப்படும்; மற்றையோர் கூறிய கீதைகள் பிரம கீதை, சிவகீதை என்ற பெயர்களால் குறிக்கப்படுவன. மற்றும், அவனைப் பற்றிக் கூறும் புராணம் **பாகவதம்** என்று அழைக்கப்படும்; ஏனையோர்களைப் பற்றிய புராணங்கள் பிரம புராணம், இலிங்க புராணம் முதலிய பெயர்களால் வியவகரிக்கப்படும். மேலும், ஓர் அவதார விசேஷத்தில் அவனுடன் பிறந்த துர்க்கை **பகவதி** என்ற பெயரால் குறிக்கப்படுகின்றாள்; அவளைப் பற்றிய புராணம் **தேவி பாகவதம்** என்று பேசப்படு கிறது. இன்னோரன்ன காரணங்களைத் திருவுளத்துக் கொண்டுதான் "ஜ்ஞாநாதிகளால் அல்பம் உத்கர்ஷமுடை யவன் பக்கலிலே பகவத் சப்தம் வர்த்தியாநின்றதிறே 'அந்யத்ரஹ்யுபசாரத:' என்கிறபடியே, பகவத் சப்தம் முக்கியமாக வசிப்பது இவன்பக்கலிலே, அல்லாதார்பக்கல் ஔபசாரிகம்" என்று வரையறுத்தனர் பெரியோர்.

நூல் செய்யும் ஒருவர் அந்நூல் நின்று நிலவுதல் வேண்டி மங்கல மொழி முதல் வகுத்துக் கூறுதல் மரபாகலின், இப் பெரியாரும் தம் நூல் நின்று நிலவுதல் வேண்டி மங்கலமொழி யாகிய அகரத்தை முதலில் அமைத்து "அகரமுதல எழுத் தெல்லாம்" என்று தொடங்கியிருத்தல் கவனித்தற் குரியது. ஆயின், 'அகரம்' மங்கலச் சொல்லாயினவாறு யாங்ஙனம்? எனின், சர்வ மங்கள சொரூபியாகிய திருமாலினுடைய முதற் பெயர் அகரமாதலின் அது மங்களச் சொல்லாதல் தெளியப் படும்.[1] "அகரமாகிய இது பகவானாகிய நாராயணனுடைய

1. " அ இதி பகவதோ நாராயணஸ்ய பிரதம மபிதானம்
அநேந கிந் நாம மங்களம் நக்ருதம் "

என்பது வடமொழி வாக்கியம்.

முதல் திருப் பெயராம்: ஆதலால், இதன்கண் எந்த மங்களந் தான் சொல்லப்படவில்லை" என்பது பெரியாருடைய திரு வாக்கு. "இங்ஙனம் மெய்க்கண் அகரம் கலந்து நிற்குமாறு கூறினாற்போலப் பதினோருயிர்க் கண்ணும் அகரம் கலந்து நிற்கும் என்பது ஆசிரியர் கூறுராயினர்; அந் நிலைமை தமக்கே புலப்படுதலானும் பிறர்க்கு இவ்வாறு உணர்த்துதல் அரிதாக லானும் என்றுணர்க. இறைவன் இயங்கு திணைக் கண்ணும் நிலைத்திணைக் கண்ணும் கலந்து அவற்றின் தன்மையாயே நிற்கு மென்பது சான்றோர்க்கெல்லாம் ஒப்ப முடிந்தது. 'அகர முதல' என்னும் குறளான் அகரமாகிய முதலையுடைய எழுத் துக்களெல்லாம், அதுபோல இறைவனாகிய முதலையுடைத்து உலகம் என வள்ளுவனார் உவமை கூறிய வாற்றானும், 'கண் ணன் எழுத்துக்களில் அகரமாகின்றேன் யானே' எனக் கூறிய வாற்றானும் பிறநூல்களானும் உணர்க" என்று கூறும் நச் சினார்க்கினியர் உரையானும்[1] இதன் உண்மைத் தன்மை தெளி யப்படும். "அகாரோ விஷ்ணு வாசக:" என்பது வடமொழி மறை. தமிழ் மறையினின்றும் காட்டுதல் ஈண்டைக்கு ஆதா ரம் ஆகாமையின் அவற்றினின்றும் மேற்கோள் காட்டப்பட வில்லை. இனி,

> "பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
> இறைவ னடிசேரா தார்."

என்னும் பத்தாவது குறளை நோக்குவோம். ஈண்டு இறைவன் என்ற பெயரே ஈண்டு ஆராய்தற்குரியது. இறைவன் என்ற சொல்லுக்கு 'எப்பொருளினும் தங்குகின்றவன்' என்று பொருள் கூறுவர் சிலப்பதிகார உரையாசிரியர். 'இறை என்பது உயர்திணை இயற்பெயர் என்றும், அது ஒருமைக்கும் பன் மைக்கும் பொதுவாய் நின்று வருமொழி வந்த பின்பு இறைவன் வந்தான், இறைவர் வந்தார் என நிற்கும்' என்றும் கூறுவர் இலக்கணக் கொத்து நூலுடையார்.

இச் சொல், சிந்தாமணி சிலப்பதிகாரம் முதலிய பண்டை இலக்கியங்களிலும், அவற்றின் உரைகளிலும் கடவுளர்க்கும் அரசர்க்கும் பெயராக வழங்கப்பட்டு வருகிறது. "இறைவனை

1. தொல். எழுத். சூத். 46.

யாடல் கண்டருளிய அணங்கு" (சிலப். வழக். 37) என்றவிடத்துச் சிவபெருமானையும், "ஏரகமும் நீங்கா இறைவன்கை வேலன்றே" (குன்றக்.) என்றவிடத்து முருகவேளையும், "துறைபோயவர் முடிந்த பின்னர் இறையோனும்" (கனாத்.) என்றவிடத்து மகா சாத்தனாரையும், "தேவர் நன்னாட்டுக்கு இறைவனாகிய பெருவிறல் வேந்தே" (மணி. பாத்தி. 42) என்றவிடத்து இந்திரனையும், "இறைவன் குரவன் இயல்குணன் எங்கோன்" (சிலப். நாடு.) என்றவிடத்து அருகக் கடவுளையும், "மறையோன் கூறிய மாற்றமெல்லாம், இறையோன் கேட்டாங்கு இருந்த எல்லையுள்" (சிலப். நீர்ப்.) என்றவிடத்து அரசனையும் குறிக்கப்படுதல் காண்க. நச்சினார்க்கினியர் முதலிய உரையாசிரியர்களும் மேற்கூறிய பலரையும் இறைவன் என்ற சொல்லால் வழங்குதல் அவர் அவர்களுடைய உரைகளில் காணலாகும். பரிமேலழகரும் 'இந்திரன் முதலிய இறையவர் பதங்களும் அந்தமிலின்பத் தழிவில் வீடும்' எனத் திருக்குறள் உரைப்பாயிரத்தில் இந்திரன் முதலான தேவர்கள் அனைவரையும் இறையவர் என்ற சொல்லால் வழங்கினர். ஆயின், அச்சொல்லின் பொருளை நோக்குமிடத்து அச்சொல் பரம்பொருள் ஒருவனையே குறிக்கும் பெயர் என்பது தெளிவு. என்னை? எனின், எங்கும் நிறைந்திருத்தல் பரம்பொருள் ஒருவனுக்கன்றி ஏனையோர்க்குக் கூடாதாதலின்.

அவ் விறைவன் என்ற பெயர்க்குரிய பரம்பொருள் யார்? என்று நோக்குவோம். இவ் வினாவிற்கு ஏற்ற விடை

> "முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
> இறையென்று வைக்கப் படும்."

என்ற திருக்குறளேயாம். யாங்ஙனம்? எனின், கூறுவன். 'இறையென்று வைக்கப்படும்' என்றதனால் அரசன் இறையாகான் என்பது தெளிவு. ஈண்டுத் தெய்வப் புலமைத் திருவள்ளுவனார், முறை செய்து காப்பாற்றுபவன் யாவன்? அவன் இறையாவான் என்பார் அதனை அங்ஙனம் விதிமுகத்தாற் கூறாது உடம்படு புணர்த்தல் என்னும் உத்திவகையான் 'முறை செய்து காப்பாற்றுபவன் இறை என்றும், மன்னவன் இறையென்னும் பெயர்க்கு உரியனல்லனாயினும் முறை செய்து

காப்பாற்றும் தொழில் உரிமையான் அம்மன்னனும் இறை யாவான்' என்பார் 'முறை செய்து காப்பாற்றும் மன்னவன் இறை' என்றும், மன்னனை இறை என்று கூறியவதனால், பரம்பொருள் முழுவேழுலகுக்கும் நாதன் ஆதலைப் போன்று இம் மன்னனும் ஆவனோ? என்னும் ஐயம் நிகழுமன்றோ? அவ் வையத்தை நீக்குதற்கு 'மக்கட்கு இறை' என்றும், பாதுகாக் கும் தொழிலுரிமையான் இறையாவான் அன்றி இயற்கையில் இறையாகான் என்பார் 'இறை என்று வைக்கப்படும்' என் றும் கூறினர்.

ஆசிரியர் பரிமேலழகர் இத்திருக்குறளுக்கு இவ்வகையில் விரித்து இங்கு உரை கூறிற்றிலராயினும் அப்பெரியார் கருத்து யான் கூறியதேயாம் என்பதனைக் கீழ்வருவனவற்றால் தெளிதலாகும்.

இறைமாட்சி என்னும் அதிகாரத்துக்கு அவதாரிகை கூறப்புக்க ஆசிரியர் பரிமேலழகர் "இறைமாட்சியாவது, அவன்தன் நற்குண நற்செய்கைகள்" என்று கூறிப் பின்னர், அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் அனைத்துலகும் அனைத்துயிரும் அமைத்து அளிக்கும் பரமனுக்குரிய இறை என்னும் பெயரால் அரசனைக் குறித்தல் பொருந்துமோ? என்ற வினாவைத் தாமே தம்முள்ளத்தில் எழுப்பிக்கொண்டு அதற்கு விடையாக "உலக பாலர் உருவாய் நின்று உலகங் காத்தலின் இறை என்றார்" என்று கூறி, தாம் கூறிய விடைக்கு மேற்கோளாகத் "திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே யென்னும் என்று பெரியாரும் பணித் தார்" என்று தமிழ்மறைப் பாசுரத்தையும் காட்டினர். இங் குக் காட்டிய இவ்வுரை "முறை செய்து காப்பாற்றும் மன்ன வன்" என்ற திருக்குறளை ஆதாரமாகக் கொண்டு எழுந்தது என்பது உற்று நோக்குவார்க்குப் புலனாகும்.

ஆயின், இறைவன் என்பதற்கு எல்லாப் பொருளினும் தங்கியிருக்கின்றவன் என்ற பொருளை ஈண்டுத் திருவள்ளுவ னார் கூறிற்றிலரே? எனின், காப்பாற்றுதல் என்ற சொல்லால் அதனையும் பெற வைத்தார். காத்தல் என்பது 'ஒவ்வோர் உயிர்க்கும் விருப்பில்லனவற்றை நீக்கி விருப்புள்ளனவற்றைக்

கொடுத்தல்' என்பர் பெரியோர். அக்காரியத்தைத் தான் நிகழ்த்த வேண்டுமே யாயின் அவ்வுயிர்களிடத்தில் தான் தங்கி யிருந்தாலன்றி அவற்றின் விருப்பத்தை அறிந்து கொடுத்தல் இயலாவாம். ஆதலின், காத்தலாகிய காரியத்தைக் கூறியவள வில் தங்கியிருத்தலாகிய காரணமும் தானே பெறப்படுதலின் அதனைக் கூறுராயினர். இதனால் காப்பாற்றுகின்றவன் எல் லாப் பொருள்களிலும் தங்கியிருத்தல் வேண்டும் என்பதும் எல்லாப் பொருள்களிலும் தங்கியிருப்பவனே காப்பாற்ற முடியும் என்பதும் பெறப்படுதலின் இறைவன் என்னும் பெயர் திருமாலுக்கே உரிய பெயராதல் வெள்ளிடைமலை போல் விளங்குதல் காண்க. இதனால், பகவான் என்ற பெயர் ஏனையோர்க்கு உபசாரமாக வழங்கப்படுதல் போன்று இறை வன் என்ற பெயரும் ஏனையோர்க்கு வழங்குதல் உபசார வழக் காதல் தெளியப்படும். நாராயணன் என்ற பெயரின் பொரு ளும் இதுவேயாதலை வைணவப் பெரியார்கள் வாயிலாகக் கேட் டுணர்க. ஆக, இறைவன், நாராயணன், வாசுதேவன், விஷ்ணு என்ற திருப்பெயர்கள் ஒரு பொருளனவாதல் காண்க. காத்தற் கடவுள் திருமாலே என்பது சான்றோர்க் கெல்லாம் ஒப்பமுடிந்தமையின் அதற்கு மேற்கோள் காட்டாமல் விடப் படுகின்றது.

"பொறிவாயிலைந்தவித்தான்" என்ற குறளிலுள்ள 'பொறிவாயில் ஐந்தவித்தான்' என்ற பெயரைத் திருமாலின் திருப்பெயர்களுள் ஒன்றான 'இருடீகேசன்' என்ற பெயரின் மொழி பெயர்ப்பு என்பர். 'கிருதக்நன்' என்ற பெயரை 'செய்ந்நன்றி கொன்ற மகன்' என்றும், 'அமாத்யன்' என்ற பெயரை 'உழையிருந்தான்' என்றும், பிறுண்டும் வடமொழிப் பெயர்களை மொழி பெயர்த்திருத்தல் காண்க.

"மூவுலகு மீரடியால் முறைநிரம்பா வகைமுடியத்
தாவியசே வடிசேப்பத் தம்பியொடுங் கான்போந்து
சோவரணும் போர்மடியத் தொல்லிலங்கை கட்டழித்த
சேவகன்சீர் கேளாத செவியென்ன செவியே!
திருமால்சீர் கேளாத செவி யென்ன செவியே!!
பெரியவனை மாயவனைப் பேருலக மெல்லாம்
விரிகமல உந்தியுடை விண்ணவனைக் கண்ணும்
திருவடியும் கையும் திருவாயும் செய்ய

கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே!
கண்ணிமைத்துக் காண்பார்தம் கண்ணென்ன கண்ணே!!

மடந்தாழும் நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சம்
கடந்தானை நூற்றுவர்பால் நாற்றிசையும் போற்றப்
படர்ந்தா ரணமுழங்கப் பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை ஏத்தாத நாவென்ன நாவே!
நாராயணா வென்னா நாளென்ன நாவே!! ''

என்று இளங்கோவடிகள் மனமுருகிப் பாடும் இத்தாழிசைகள் மூன்றும்

'' கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை''

என்ற திருக்குறளை நோககியே எழுந்தது என்பதனை இல்லையென்று கூறுவார் யாவர்? எண்குணத்தான் என்பதற்கு எண்ணப்படுகின்ற கல்யாண குணங்களை யுடையவன் என்று பொருள்கொண்டு அக் கல்யாண குணங்களை மூன்று தாழிசைகளிலும் விரித்துப்பாடும் அழகுதான் என்னே! இங்ஙனமே குறட்பாக்களையும் அப்பாக்களின் பொருள்களையும் ஆங்காங்குத் தம் நூலில் அமைத்துப் பாடியிருத்தலை அறிஞர் அறிவர். இனி,

'' மடியிலா மன்னவன் எய்தும் அடியளந்தான்
தாஅய தெல்லாம் ஒருங்கு''

என்ற குறளை நோக்குவோம். மடியிலாத அரசன் எல்லாவுலகங்களையும் ஒருங்கே எய்தும் என்பதே ஈண்டுக் கூறவேண்டிய பொருள். இதனை 'அடியளந்தான் தாஅயதெல்லாம் ஒருங்கு' என இவ் வரலாற்றினைக் கொண்டு கூறும் கருத்துத் தான் என்னே? மேலும், 'அடியளந்தான் தாயது எல்லாம் ஒருங்கு' என இத்துணைச் சொற்களால் கூறற்குக் கருத்தும் ஒன்றிருத்தல் வேண்டுமேயன்றோ? மேலும், இறைவனுக்கு உரிய பெயர்கள் பலவற்றில் ஏதாவது ஒன்றனைக் குறித்து அவனால் 'தாஅயது எல்லாம் ஒருங்கு' என்று கூறாது 'அடியளந்தான்' என்று அடியின் மேலிட்டு அடியின் தொழிலால் பெயரை அமைத்தற்குக் கருத்தும் ஒன்று இருத்தல் வேண்டுமேயன்றோ? ''சுருங்கிய, சொல்லால் விரித்துப் பொருள் விளங்கச் சொல்

லுதல், வல்லாரார் வள்ளுவரல் லால்" (திருவள்ளுவமாலை) என்றார் அரிசில் கிழார்.

இங்கு எழுப்பிய வினாக்களுக்கு எல்லாம் விடையாகப் பெரியோர்கள் எழுதி வைத்துள்ள பொன்போன்ற வாக்கியங்களை ஈண்டுத் தருகின்றேன்; அவற்றை அறிதலே சாலும். "நாராயண சப்தார்த்தத்தை நாராயண அநுவாகமாகிற ஓலைப்புறத்தே கேட்டுப் போகாதே கண்ணாலே கண்டநுபவிக்க லாம்படி ஸ்ரீ வாமனனாய் அவதரித்துத் திருவுலகு அளந்த படியை அநுபவிக்கிறார். சேஷ சேஷித்வ சம்பந்தமிறே நாரா யண சப்தார்த்த மாகிறது. ஜகத் காரணத்வத்தாலும் ஈஸ்வர னோடு இவ்வாத்மாவுக்குண்டான சம்பந்தத்தையிறே சொல்லு கிறது. 'காண்மின்கள் உலகீர் என்று கண்முகப்பே நிமிர்ந்த' என்று சர்வலோகமும் கண்ணாலே காணலாம் படியிறே திரு வுலகு அளந்தருளினது. ஆகையாலே, நாராயண சப்தார்த்த மான திரை விக்ரம அபதானத்தை அநுபவிக்கிறார். யக்ஞ வாடத்தே சென்ற படியையும் அர்த்தித்த படியையும் சொல் லாதே எல்லார் தலைகளிலும் திருவடிகளை வைத்த இவ் வம் சத்தைச் சொல்லுகையாலே சேஷ சேஷித்வ சம்பந்தத்தை அநுபவிக்கிறார் என்று தோற்றுகிறதிறே", "விமுகனான மகா பலிக்கும் ருசியைப் பிறப்பிக்கும் சௌந்தர்யத்தையுடையவனை ஒழிய ஆஸ்ரயணீயர் உண்டோ? தன்னுடைமையை லபிக்கைக் குத்தான் அர்த்தியாய்ச் செல்லும் சீலவானை ஒழிய ஆஸ்ரயணீ யர் உண்டோ? அதீந்த்ரியமான விக்ரகத்தைத் துஷ்பிரகிருதி கள் கண்ணுக்கும் அகப்பட விஷயமாக்கும் சுலபனை ஒழிய ஆஸ்ரயணீயர் உண்டோ? சதுர்த்தச புவனத்தையும் அளந்த சர்வஸ்மாத்பரனை ஒழிய ஆஸ்ரயணீயர் உண்டோ? என்கிறார்." "நாய்ச்சிமார் தொடும்போதும் பூத்தொடுமாபோலே கூசித் தொடும் திருவடிகளைக்கொண்டுகிடீர் காடும் ஓடையும் அளந்துகொண்டது என்று ஆச்சரியப்படுகிறார். வசிஷ்ட சண்டாள விபாகமற எல்லார் தலையிலும் ஒக்கத் திருவடிகளை வைத்தான். இவர்கள் நன்மை தீமை பாராதே தன்னுடைய சுத்தியே இவர்களுக்கு மாம்படி பண்ணினான்" என்று ஈடு படுகிறார்.

ஆக, இத் திருக்குறளால், உயிர்கட்கும் இறைவனுக்கு முள்ள சம்பந்தத்தையும், இறைவனுடைய சர்வ ஜகத் ரக்ஷகத் துவத்தையும், இறைமைத் தன்மையினையும், சௌலப்யத் தையும் கூறி ஈடுபடுதல் வெளியாம். இப் பெரியார்க்கு இவ் வவதாரத்திலுள்ள ஈடுபாட்டினாலேயே அவ் வவதாரத் திற்குரிய '**திருக்குறள்**' என்ற பெயரைத் தம் நூலுக்கும் வைத்தனர்போலும். "ஆகுங்கொல்? ஐயம் ஒன்றின்றி அகலிடம் முற்றவும் ஈரடியே, ஆகும்பரிசு நிமிர்ந்த **திருக்குறள்** அப்பன்" என்பது தமிழ் மறை. இனி,

> "தாம்வீழ்வார் மென்தோள் துயிலின் இனிதுகொல்
> தாமரைக் கண்ணான் உலகு"

என்ற திருக்குறளை நோக்குவோம். இது, 'நிரதிசய இன்பத் திற்குரிய நீ இச் சிற்றின்பத்திற்கு இன்னையாதல் தகாது' என்ற பாங்கற்குச் சொல்லியது. 'ஐம்புலன்களையும் நுகர் வார்க்குத் தாம் விரும்பும் மகளிர் மெல்லிய தோளின்கண் துயிலும் துயில்போல வருந்தாமல் எய்தலாமோ? அவற்றைத் துறந்த தவயோகிகள் எய்தும் செங்கண்மால் உலகம்' என்பது இதன் பொருளாம்.

இங்குச் சிற்றின்பத்திற்கு மறுதலையான பேரின்பம் ஒன்று உண்டு என்பதும், அவ் வின்பத்தை அநுபவிக்கும் இடம் தாமரைக் கண்ணான் உலகமே என்பதும் போதருதல் காண்க. இதனால், தாமரைக் கண்ணான் உலகமே மோக்ஷம் என்பது பெறப்படும். "யாதானும் நாடாம்" என்ற குறளாலும் இதனையே பெற வைத்தார் நம் பெரியார். யாங்ஙனம்? எனின், "அறம் பொருள் இன்பம் வீடும் பயக்கும்" என்கிறபடியே, கல்விக்குப் பயன் நால்வகையான புருஷார்த்தங்களையும் பெறுதலேயாதலின், 'யாதானும் நாடாம்' என்றதனால் அறம் பொருள் இன்பங்களாகிய இம்மைப் பயன்கள் மூன்றனையும் கூறி, 'மால் ஊராம்' என்றதனால் மறுமைப் பயனாகிய மோக்ஷத்தைக் கூறி, ஆகையால், இங்ஙனம் நான்கு வகையான புருஷார்த்தங்களையும் கொடுக் கின்ற கல்வியை ஒருவன் சாந்துணையும் கல்லாதவாறு என்! என்று கழிபேர் இரக்கம் கொண்டு கூறுவது இச் செய்யுள்

என்க. "அறம் பொருள் இன்பம் வீடு அடைதல் நூற்பயன்" என்றார் நன்னூலார்.

"நாறிணர்த் துழாயோன் நல்கி னல்லதை
ஏறுதல் எளிதோ வீறுபெறு துறக்கம்"

என்ற பரிபாடற் பகுதியானும் திருமாலே மோக்ஷத்திற்கு உரியவன் என்பதனைத் தெளிதல் தகும்.

இனி, உரையாசிரியரான பரிமேலழகருரையை நோக்குவோம்: இவ்வுரை புலவர் பலரானும் போற்றும் பெற்றியது; கற்போர் உளம் காமுறச் செய்வது; சுருங்கச் சொல்லல் விளங்கவைத்தல் முதலிய வனப்பு வாய்ந்தது; மிக அரியனவாய வடநூல்களின் கருத்துக்களை எளியனவாகத் தமிழ் நாட்டார் அறிந்து கோடற்குக் கருவியாக உள்ளது; குறளாகிய பெருங்கடலிற் புகுவார்க்குப் பெரியதோர் மரக்கலமாய் உரைகள் பலவற்றிற்கும் முடிமணியாய்த் திகழ்வது; திருவள்ளுவரது தெய்வக் கருத்தைத் தெரிந்துகோடற்குத் திறவுகோலாந் திறம்படைத்தது; அதனால், நூல்களோடொப்ப நுவலப்படும் நோன்மையுடையது.

"வள்ளுவர்சீர் அன்பர்மொழி வாசகந்தொல் காப்பியமே
தெள்ளுபரி மேலழகன் செய்தவுரை—ஒள்ளியசீர்த்
தொண்டர் புராணம் தொகுசித்தி ஓராறும்
தண்டமிழின் மேலாம் தரம்"

என்றார் கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியார்.

இத்தகைய உரையை வகுத்த பெரியார், உரை வகுக்குமிடத்து அருஞ் சொற்களையும் அருந் தொடர்களையும் சங்க காலத்து இலக்கண இலக்கியங்களினின்றும் திருக்கோவையார் முதலிய சான்றோர் இலக்கியங்களினின்றும் மேற்கோள் காட்டி விளக்கிச் செல்லுதலைப் போலவே, தத்துவப் பொருள்களை விளக்குங்கால், இறைவனால் மயர்வற மதிநலம் அருள்பெற்ற ஆழ்வார்கள் அருளிச்செய்த தமிழ்மறையினின்றும் மேற்கோள்காட்டி விளக்கிச் செல்வர். இதனால், தத்துவப் பொருள்களைக் கூறுவதில் இவ்விரு தமிழ் மறைகளும் ஒத்த கருத்துடையன என்பது தெளிவாம்.

மேலும்,

" சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு"

என்ற குறளுக்கு, சுவையும் ஒளியும் ஊறும் ஓசையும் நாற்றமும் என்று சொல்லப்பட்ட தன்மாத்திரைகள் ஐந்தனது கூறுபாட்டையும் ஆராய்வான் அறிவின் கண்ணதே உலகம் என்ற உரையும், அவற்றின் கூறுபாடாவன :— பூதங்கட்கு முதலாகிய அவைதாம் ஐந்தும், அவற்றின்கண் தோன்றிய அப் பூதங்கள் ஐந்தும், அவற்றின் கூறாகிய ஞானேந்திரியங்கள் ஐந்தும், கன்மேந்திரியங்கள் ஐந்தும் ஆக இருபதுமாம். 'வகைதெரிவான் கட்டு' என உடம்பொடு புணர்த்ததனால், தெரிகின்ற புருடனும், அவன் தெரிதற்குக் கருவியாகிய மான் அகங்கார மனங்களும், அவற்றிற்கு முதலாகிய மூலப்பகுதியும் பெற்றாம்......... இவ் விருபத்தைந்துமல்லது உலகு எனப் பிறிதொன்றில்லையென உலகினது உண்மை அறிதலின், அவன் அறிவின் கண்ணதாயிற்று என்ற விசேட வுரையும் எழுதுகின்றார் பரிமேலழகர்.

" ஆமினி மூப்பும் அகன்றது இளமையும்
தாமினி நோயும் தலைவரும்— யாமினி
மெய்யைந்து மீதூர வைகாது மேல்வந்த
ஐயைந்தும் ஆய்வது அறிவு"

(வெண்பாமாலை : வாகைப்படலம் 33) என்ற செய்யுளால் தமிழ்நாட்டுச் சான்றோர்கள் தத்துவங்கள் இருபத்தைந்து என்றே கொண்டனர் என்பது தெளிவாம். வைணவப் பெருமக்கள், தத்துவங்கள் இருபத்தைந்தே என்றும், இருபத்தாறும் தத்துவமே பரம்பொருள் என்றும் கொண்டனர் என்பதனையும் இங்கு நினைவூட்டுகின்றேன். "எண்ணிலும் வரும்; 'கடம் படம், ஈஸ்வரன்' என்றால் 'நம்மை இல்லை என்னாதே இவற்றோடொக்கப் பரிகணித்தானிறே' என்று வரும். 'சதுர்விம்சதி தத்துவமாயிருக்கும் அசித்து, பஞ்சவிம்சகன் ஆத்மா, ஷட்விம்சகன் ஈஸ்வரன்' என்றால் 'நம்முடைய உண்மையையும் இவற்றோபாதி இசைந்தானிறே' என்று வந்து முகம் காட்டும். அன்றியே, 'இருபத்தொன்று,

*இருபத்திரண்டு, இருபத்து மூன்று, இருபத்து நான்கு, இருபத்தைந்து, இருபத்தாறு' என்று எண்ணினால் ' இருபத்தாறு நானே' என்று வரும் என்றுமாம்" என்பது நம்பிள்ளை ஈடு. (திருவாய். 1. 10: 2.)*

"மங்க ஒட்டுஉன் மாமாயை திருமாலிருஞ் சோலைமேய
நங்கள் கோனே! யானேநீ யாகி என்னை அளித்தானே!
பொங்கைம் புலனும் பொறியைந்தும் கருமேந் திரியம் ஐம்பூதம்
இங்கிவ் வுயிர்ஏய் பிரகிருதி மானாங் கார மனங்களே"

*என்ற தமிழ் மறையும்*[1] *மேற்கூறிய தமிழர் கொள்கையும் ஒன்றுபட்டிருத்தல் காண்க.*

*மேலும்,*

"பாழெனக் காலெனப் பாகென ஒன்றென
இரண்டென மூன்றென நான்கென ஐந்தென
ஆறென ஏழென எட்டெனத் தொண்டென
நால்வகை யூழிஎண் நவிற்றுஞ் சிறப்பினை"

*என்ற பரிபாடற் பகுதியும், 'என்றது, பூதங்களைந்தும் கன்மேந்திரியங்களைந்தும் ஞானேந்திரியங்களைந்தும் புலன்களைந்தும் மனம் முதலிய அந்தக் கரணங்கள் மூன்றும் மூலப் பகுதியும் புருடனும் எனப்பட்ட தத்துவம் இருபத்தைந்தனுலும் எக்காலத்தும் ஆராயப்படும் பெருமையையுடையை என்றவாறு' என்ற அதன் கருத்தும் ஈண்டு ஒப்பு நோக்கி உண்மையை உணர்க.*

*இதுகாறும் கூறியவற்றால் தெய்வப் புலமைத் திருவள்ளுவனார் பரம வைணவர் என்பது வெள்ளிடை மலைபோல் விளங்குவது காண்க.*

*இனி, நாயனார் என்ற பெயரைக் கொண்டு வேறு மதத்தினர் என்று கூறலாகாதோ? எனின், கூறுவன். திருவள்ளுவமாலையில் திருவள்ளுவர், முதற் பாவலர், மாதாநுபங்கி, செந்நாப் போதார், பெருநாவலர், தேவர் முதலிய பெயர்கள் கூறப்படுகின்றன. நாயனார் என்ற பெயர் யாண்டும் கூறப்பட்டிலது. மணிமேகலையில் "பொய்யில் புலவன் பொருளுரை*

1 திருவாய். 10. 7: 10

தேருய்" என்று 'பொய்யில் புலவன்' என்ற பெயர் கூறப்படுகின்றது. நச்சினார்க்கினியர், அடியார்க்கு நல்லார் முதலிய உரையாசிரியர்களும் 'வள்ளுவனார்' என்றே கூறிச்செல்வர். பரிமேலழகரும் 'தெய்வப் புலமைத் திருவள்ளுவனார்' என்றே கூறுகின்றார். நாயனார் என்ற பெயரைத் தனித்தாயினும், பெயருடன் சேர்த்தாயினும் யாண்டும் கூறிற்றிலர். ஆதலால்,

"மனத்தது மாசாக, மாண்டார்நீ ராடி
மறைந்தொழுகு மாந்தர் பலர்."

"மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின்"

என்ற பொய்யில் பாடல்களைப் பாடிய தெய்வப் புலமைத் திருவள்ளுவனார்க்குச் சிவவேடப் பொலிவோடு தாடியும் மீசையும் கொண்ட வடிவத்தை அமைத்து வழிபடுவது போன்று, நாயனார் என்ற பெயரும் இடையில் வந்த பெயர் என்றே கொள்க.

மேலும், நாயனார் என்ற அப் பெயரைக் கொண்டு ஒரு மதத்தைச் சார்ந்தவர் என்று கோடலும் பொருந்துவதன்று; என்னை? எனின், நாயனார் என்ற பெயர் ஜைந மதத்தில் அடியார் பலர்க்கும் வழங்குதலானும், வைணவ மதத்திலும் 'அழகிய மணவாளப் பெருமாள் நாயனார்' என்பது போன்று அடியார்கட்கும், 'வராக நாயனார்' என்பது போன்று இறைவனுக்கும் வழங்குதலானும் என்க.

இனி, சமய சாஸ்திரங்களில் அவ்வப் பெரியார்கள் குறட்பாக்களையும் அவற்றின் பொருளையும் பொன்னேபோல் போற்றிஎடுத்து ஆண்டுஇருப்பதனால் அவ்வம் மதத்தைச் சார்ந்தவர் என்று கோடல் பொருந்துமே? எனின், திருக்குறளை எடுத்தாளாத தமிழ் நூல்களும் உளவோ? அங்ஙனமாயின், தமிழ் மறையாகிய நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் திருக்குறளின் பாக்களும், அவற்றின் பொருளமைதிகளும், சொற்றொடர்களும், சொற்களும் ஆங்காங்கு மலிந்து பொலிந்து கிடத்தலை இவ் விரு தமிழ்மறைகளையும் கற்ற பெரியோர் நன்கு அறிவர். ஆதலால், அக் காரணத்தைக்கொண்டு துணிந்து கூறல் பொருந்துவதன்று.

தெய்வப் புலமைத் திருவள்ளுவனார் திருக்குறள் வாழ்க.

# திருக்குறள்-காமத்துப்பால்

## தெ. பொ. மீநாட்சிசுந்தரனூர்

## 1

*திருவள்ளுவரது திருக்குறள் அறம் பொருள் காமம் என்ற மூன்று பிரிவுகளாக இருப்பதால்* **முப்பால்** *எனப் பெயர் பெறுகிறது. "த்ரிவர்க்கம்" என வட மொழியில் இந்தப் பாகுபாடு வழங்குகிறது. இந்தப் பாகுபாடு இன்றுள்ள தமிழ் நூல்களில் மிகப் பழையதாகிய தொல்காப்பியத்திலும் காணப்படுகின்றது. "இன்பமும் பொருளும் அறனும்" என்று அடுக்குகின்றார் தொல்காப்பியர் (தொல். 1037). ஆதலின், இதனைப் பழந்தமிழ் மரபு என்று கூறலாம். இந்திய நாட்டுக்கு வெளியே இந்த மரபு காணப்பெறுமையால் வட மொழி வழக்கு என்பதினும் இந்திய நாட்டுக்குரிய பொதுமரபு இஃது என்பதே உண்மையாம்.*

*அறம் பொருள் எனத் தொல்காப்பியர் கூறியபடியே அறத்துப்பால், பொருட்பால் என முதல் இரண்டு பால்களுக்கும் பெயரிட்ட திருவள்ளுவர், தொல்காப்பியர் கூறிய இன்பம் என்பதற்கு ஏற்ப இன்பத்துப்பால் என மூன்றும் பிரிவிற்குப் பெயர் வையாது* **காமத்துப்பால்** *என்று பெயர் இடுவாரா?—இந்நாளில் இவ்வாறு ஒரு கேள்வி பிறக்கின்றது. "தர்மார்த்த காமம்" என்பது வடமொழித் தொடர். "காமம் என்பது வடசொல். வடசொல்லினை வள்ளுவர் இவ்வாறு தலைப்பாக வழங்கார்" என்று சிலர் முடிவுகட்டிக் காமத்துப் பால் என்ற பெயரினையே இன்பத்துப்பால் என மாற்றுகின்*

றனர்; அதுவே அவரிட்ட பெயர் என்று மன்ருடுகின்றனர். ஆனால், காமம் என்ற சொல், "இன்பமும் பொருளும் அறனும்" என்று கூறும் சூத்திரத்திலேயே "காமக் கூட்டம்" எனவரும் அழகிய தொடரின் உயிர்நிலையாக விளங்கக் காண்கிருேம். இது சங்கப் பாக்களில் மிகப் பயின்று வழங்கும் சொல்லாகும். "சிறந்தது காதற் காமம்" என்று அறைகூவி அறிஞரை அழைக்கின்றது பரிபாடல் (9).

திருவள்ளுவர் வடநூல் அறியாரா? அறிவது தவருு? மொழிக்கெனக் கொள்கை ஒன்று உண்டா? இன்று நாம் ஆங்கிலம் அறிவது தவருு? ஆங்கிலத்தில் நாம் அறிவன இந்நாளைய கொள்கையாவனவன்றி ஆங்கில மொழிக் கொள்கையாமோ? வடமொழி நூல்களைத் தமிழரும் எழுதியுள்ளமையால் வடநூல்களில் காணப்பெறுவன அந்நாளைய இந்திய நாட்டுப் பொதுக் கொள்கைகளாம். அவைகள் தமிழ்க் கொள்கைகளே ஆகாமல் முற்ற முடிய ஒழிந்து போகுமா? இங்குக் கொள்கையைப் பற்றித்தானும் ஆராய்ச்சி இல்லையே! காமத்துப்பால் என்ற பெயருண்மைக்குத் தடை, காமம் என்பது வடசொல் என்பதொன்றே அன்ருே? "காமம் என்ற சொல் கேட்டதுணையானே காமம் தீமையாமாறு இல்லை; நன்ருமாறும் உண்டு" என்று நக்கீரர், இறையனுரகப் பொருளுரையில் வற்புறுத்துவதனைத் தமிழர் மறக்கப் போமோ? வட சொல்லே வள்ளுவர் வழங்கவில்லையா? இந்த ஆராய்ச்சியின் அடிப்படை விளங்குவது அருமையாகிறது.

வள்ளுவரிடம் தஞ்சம் புகுதலே இங்குள்ள வழி. குறளில் காமம் என்ற சொல்லின் வழக்காறு என்னை? இன்பம், இன்பு, இன்பத்துள் என்ற முப்பெருவடிவ வேறுபாட்டோடும் இன்பம் என்ற சொல் திருக்குறளில் 26 இடங்களில் மட்டுமே வந்துள்ளது. ஆனால் காமம் என்பதோ காமத்தை, காமத்தால் காமத்தான், காமத்திற்கு, காமத்தின் என உருபேற்றும், காமத்து எனச் சாரியை பெற்றும், காமக்கலன் என்பதிற் போலத் தொகைச்சொல்லில் முன்மொழியாய் நின்றும், காமன் என ஆண்பால் விகுதி ஏற்றும், காமுறுதல், காமுறுவர் காமுற்ருர், காமுற்று என உறு என்ற துணைவினையோடு

*வெவ்வேறு வினைவடிவடைந்தும்* **காமம்** *என்றே நின்றும் குறளில் 46 முறை வழங்கிவரக் காண்கிறோம். இன்பம், பல் வகை இன்பத்திற்கும் பொதுவாகி வரக் காமம்* **காதலின்பத் திற்கே** *சிறப்பாக வருகிறது. காமத்துப் பாலின் வழக்காற் றையே நோக்குதல் அன்றோ கற்றறிந்தோர் செய்யத்தக்க ஆராய்ச்சி!*

"இன்பம் கடல்மற்றுக் காமம் அஃதடுங்கால்
துன்பம் அதனிற் பெரிது"

*என்ற குறளிலும்,*

"ஊடுதல் காமத்திற்கு இன்பம் அதற்குஇன்பம்
கூடி முயங்கப் பெறின்"

*என்ற குறளிலும் ஆக இரண்டே இடங்களில் இன்பம் என்ற சொல் திரிபின்றிவருகிறது; காமம் என்ற சொல்லோ திரி பின்றி 39 இடங்களில் வருகிறது. இந்த நிலையில்* **காமத்துப்பால்** *என்ற பெயர் திருவள்ளுவர் இட்ட பெயர் அன்று என எவ்வாறு முடிவு கூறுவது? "காமத்திற்கு இன்பம்" என்ற தொடரே, வள்ளுவர், காமத்தினையும் இன்பத்தினையும் வேறுபடுத்துகின்றார் என விளக்கம் தரவில்லையா?* **காமம் இன்பஅன்பு: அதன்பயன் இன்பம்.** *இன்பமே முடிந்த பயன். இந்த முடிவினை வற்புறுத்துகின்ற தொல்காப்பியர், முடிவிலிருந்து தொடங்கி, இன்பமும் பொருளும் அறனும் என்று முறைசெய்து, அறன் என்ற அடிப்படையை விளக்கு கின்றார்; அனைத்துவகையாலும் இன்பமே வேண்டும் என இன்பநாட்டத்தில் அலையும் உலகினை வழிப்படுத்துகின்றார். திருவள்ளுவரும் முடிவினை வற்புறுத்தும் இடத்தில் அறம் பொருள் இன்பம் (509) என்று கூறி இன்பம் என்ற சொல்லினையே கையாளுகின்றார். மேலே கூறிய காமத்துப் பாலிலிருந்தும் காட்டிய இரண்டு குறள்களிலும் அந்த முடிவு நிலையையே வற்புறுத்துவாராய வள்ளுவர், இன்பம் என்று பேசி, அந்த இன்பம் காமத்தின் பயனாகும் இன்பம் என விளக்கிவிடுகின்றார். முதலும் பயனுமாம் இந்த வேற்றுமையை அடிப்படையாகக் கொள்ளாக்கால், காமத்துப்பாலினை எவ் வாறு விளக்குதல்கூடும்? அனைத்து விளக்கமும் காரியகாரண*

விளக்கமே அன்றோ? அந்தக் காரணம் முதற்காரணகாரியமும் ஆகலாம்; பிறவகைக் காரணகாரியமுமாகலாம். அந்த ஆராய்ச்சியில் புகவேண்டா. இன்பத்துப்பால் என்றது காமத்துப்பால் என்ற நுட்பத்தினை உணர்ந்து துய்க்கவேண்டும் என்பதே இங்குக் கூறத்தக்கது. பரிமேலழகர், "இன்பம் கூறுவான் எடுத்துக் கொண்டார்" எனத் தமதுரையைத் தொடங்குவதால், காமத்துப்பால் என்பது அவரிட்ட பெயர் எனச் சிலர் கூறுவது மெய்யாமாறில்லை. ஆனால் அவரே, "ஈண்டு இன்பம் என்றது ஒரு காலத்து ஒருபொருளான் ஐம்புலனும் நுகர்தற் சிறப்புடைத்தாய காம இன்பத்தினை" என விளக்குகின்றார்.

"கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள"

என்று புதுவதாக வள்ளுவர் கூறியதனையே, பிற இன்பங்களினும் காம இன்பத்தினைப் பிரித்தறிவதற்குச் சிறப்பியல்பாகப் பரிமேலழகர் கொள்வது அறிந்து இன்புறுவதற் குரிய நுட்பமாம். வள்ளுவர் இட்ட இந்தக் காமக்கடைகாலின் மேலன்றோ இன்பக் கோயில்,

"மாசறு பொன்னே வலம்புரி முத்தே
காசறு விரையே கரும்பே தேனே"

(சிலம். 2-73.4)

என்றெல்லாம் சிலப்பதிகாரம் முதலிய இலக்கியங்களில் எழுந்தோங்குகிறது! இதனைக் காம இன்பம் எனப் பிரியாது இன்பம் என்றே ஒழிந்தால் இனிப்பது ஏது?

**காமம் வடமொழி என்று கொள்வானேன்? இச்சொல் இருக்குவேதத்தில் கண்டதே ஆனாலும், காலம் உலகம் என்பவைபோலத் தமிழ்ச் சொல்லும் ஆகாதோ?** 'ஒண்ணு' என்று தமிழில் மருவி வழங்குவதும் 'ஒன்' என ஆங்கிலத்தில் வழங்குவதும் ஒன்றேயாதல் வேண்டுமோ? காமுறுதல் முதலான சொற்களில் 'காம்' என்றே அச்சொல் நிற்கக் காண்கிறோம். "கமம் நிறைந்தியலும் என்பது தொல்காப்பியம். இரு, ஈர் ஆதல்போல, அடிச்சொல் முதல் நீளுதலும் உண்டு. விரைந்து வழங்குகையில் ஈறு கெடுமானால், அந்தக் குறைவினை நிரப்ப,

எடுத்தோதப்பெறும் முதல் நீளுவது தமிழ் மரபு. கமம் என்ற தமிழ்ச்சொல் முதலுயிர் நீண்டு, காமம் என்றும், ஈறு கெட்டுக் காம் என்றும் நின்று, ஆணும் பெண்ணுமாகத் தனித் தனி நிற்கும் குறைபாட்டினை, இருவரும் ஒன்று ஆகி, நிறை வாக்க முயலும் இன்ப அன்பினைக் குறிப்பதாகக் கொண்டு, காமம் என்ற வடசொல்லின் உறவால் காமம் என்ற வடிவம் நிலைத்துவிட்டது" என விளக்குவர், சென்னைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. எம். ஏ. துரையரங்கனார். "காமம் என்பது வடமொழியாயின் இழித்திடப்பட்ட பொருளையும், தமிழ் மொழியாயின் இவ்வாறு உயர்ந்ததொரு பொருளையும் குறிக்கும்" என்பர் அவர். தொல்காப்பியத்திற்கு முற்பட்ட காலத்தினைப் பற்றிய ஆராய்ச்சி யாதலின் இங்கு முடிவுகூறப் போதிய கருவிகள் இல்லை. எவ்வாறாயினும், பொருளின் நன்மை தீமையை ஆராயாது, சொல்லொலிகொண்டே வடமொழி என வெறுப்பது அறிவுக் கழகோ? வள்ளுவர் வகுத்த வழியோ? சம்பந்தர், மாணிக்கவாசகர், புத்தர், மஹாவீரர், ஏசு, மகமது என்ற சொற்கள் பிறமொழிச் சொற்கள் என்பதுகொண்டே இச்சொற்களின் பொருளாய் நிற்கும் உலகப் பெருவள்ளல் களை வெறுக்க முடியுமோ?

## 2

தங்கள் கடைவாயில் வழியாக அன்றி, வேறு எவ்வழி யில் வெளிச்சம் கண்டாலும் கண்கூசி நிற்பார் ஒருபுறம். இவ் வாறு சிலர் காமத்துப்பால் என்ற சொற்றொடரொளியினையே வேற்றொளியும் மாற்றொளியும் என வெகுண்டு கண்கூசி நிற்ப, வடமொழியிலன்றி விளக்கமில்லை என்று கடபட என உருட்டி வெருட்டிக் குழறும் பகற் குருடர்கள் மற்றொரு புறம் நிற்பர். குறளில் கண்டதனைத்தும் வடமொழி நூற் களின் மொழிபெயர்ப்பே என்று சிலர் மன்றாடுவர். இவர்களி னும் இத்துறையில் கடைபோகக் கண்மூடியவர்கள் "குறளும் பெருநூலோ?" "ஞானம் பாடும் உபநிஷதங்களிருக்கக் காமம் பாடும் குறளினை ஓதிக் கெடுவதோ?" என்று எழுதியும் வரு கின்றனர். இவர்கள், தமிழ் என்று கண்டு திருவாய்மொழிக் கும் தம் காதினைப் பொத்தி, அதனைப் பாடியவர் பார்ப்பன

ரல்லாதார் என்றதும் நம்மாழ்வார் வடிவினைக் காணாது தம் கண்ணினைப் பொத்தி வாழ்ந்த கூட்டத்தின் வழியினர். பார்ப்பனப் பெருமகனாய்ப் பிறந்து உலகப் பெருமகனாக வாழ்ந்த அழகிய மணவாள நாயனார் தமது ஆசாரிய ஹ்ருதயத்தில் இவர்களைப்பற்றி நன்றாகப் பாடியுள்ளார். இன்று எழுந்தவர்களுக்கு, விபுலாநந்த அடிகள் தாம் இராமகிருஷ்ண விஜயத்தின் ஆசிரியராக விளங்கியபோது நல்ல விடை தந்துள்ளார். தாம் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்று மன்றாடுவாரிடம் மன்றாடவல்லார் யார்? கண்ணைத் திறந்திருப்பாருக்கு எதையேனும் காட்டுதல் கூடும். "கண்ணைத் திறவோம்" என்று இறுக மூடிக் கிடப்பாருக்கு எதனைக் காட்ட முடியும்?

பரிமேலழகர் முதலியோர் காலத்திலும் இத்தகையவர்கள் இருந்தனர். அவர்களுக்காகவே இந்த உரையாசிரியர்கள் வடமொழி மரபுபற்றி உரை கூறி, "அங்குள்ள தெல்லாம் இங்குளது" எனக் காட்ட மிக முயல்கின்றார்கள். ஆனால், அந்த உரைகளை வேறொரு வழியாக இந்த நாளில் சிலர் பயன்படுத்துகின்றனர். வள்ளுவர், வடநூலைப் பார்த்தே திருக்குறள் முழுவதும் செய்தனர் என்ற கொள்கையைப் பின்பற்றுவார் மனப்போக்கினை அறிவது அருமை. "இதனை வடநூலார் காரு என்பர்" (1318); "இவற்றை வடநூலார் ஈதிகள் என்பர்" (732); "மௌலம் என்பர்" (762); "ஆததாயிகள் என்பர்" (550); "இவை ஐந்தினையும் மந்திரத்திற்கு அங்கம் என்ப" (631); "தானமும் காமமும் என்பர்" (525); எனப் பரிமேலழகர் கூறுவன தமிழ் நூலுக்கும் வடநூல்களுக்கும் உள்ள பொதுமையை விளக்கும் கூற்றுக்களே ஆம். "வடநூற் பொருண்மையை உட்கொண்டு ஓதியது" (501); "இவர் பொருட் பாகுபாட்டினை அறம் பொருள் இன்பம் என வடநூல் வழக்குப்பற்றி ஓதுதலான (காமத்துப்பால் முன்னுரை) வடநூல் மதம்பற்றிக் குற்றமே அற்றந்தரும் பகை என்று கூறினார்" (434); "ஈண்டுப் பிரிவினை வடநூல் மதம் பற்றிச் செலவு, ஆற்றாமை, விதுப்புப் புலவி என நால்வகைத்தாகக் கூறினார்" (1330) என்பவை போன்றவை வடநூல் மரபினை

வள்ளுவரும் பின்பற்றுகின்றார் என்று பரிமேலழகர் சுட்டுவன வாகும்.

வடநூலார் கொள்கையொடு தம் கொள்கையையும் கூறுகின்றார் வள்ளுவர் என்பதனையும் பரிமேலழகர் காட்டாமல் இல்லை.

" ஊறு (பழுதுபடுவன) ஓரால் (நச்சப்படாமை) உற்றபின் (பழுதுபட்டபின்) ஒல்காமை (மனந் தளராமை) இவ்விரண்டின் ஆறு என்பர் ஆய்ந்தவர் " என்ற குறள், வினைத் திட்பம் என்ற அதிகாரத்தில் வருவது. இங்கே பரிமேலழகர் எழுதியதாக ஒரு குறிப்பு வருகிறது: "தேவர்க்கும் அசுரர்க்கும் அமைச்சுப் பூண்ட வியாழ வெள்ளிகளது துணிபு தொகுத்துப் பின் நீதி நூலுடையார் கூறியவாறு கூறுகின்றமையின் ஈண்டு வினைத்தூய்மையையும் உடன் கூறினார்" என்பது ஒரு சொற்றொடர். ஈது ஒரு வியப்பு! இதற்கு முன்னைய அதிகாரம் "வினைத் தூய்மை" என்பதாகும். வினைத் தூய்மை என்ற அதிகாரம் கூறியதற்கு இத்தகைய முகவுரை பொருந்தும். அங்குக் கூறாது இங்குக் கூறுவது ஏன்? "வினைத் தூய்மையும்" என்ற உம்மை எதனைத் தழுவுகின்றது? "வினைத் திட்பம்" என்பதனையே ஆதல் வேண்டும். எனவே, வினைத் திட்பத்தினையே கூறுவார் பலர். ஆனால், அறநூல் போல, வினைத் தூய்மையைப் பொருள் நூல் கூறுமிடத்திலும் வள்ளுவர் வற்புறுத்துகின்றார் என்பதே இங்குள்ள சிறப்பு. இவ்வாறு பலதிறக் கொள்கைகளையும் வள்ளுவர் கூறுவது இந்திய நாட்டில் அருத்த சாஸ்திர ஆராய்ச்சியின் இயல்பு என்பதனைப் பரிமேலழகர் எடுத்துக் காட்டுகின்றார். வியாழவெள்ளிகளுடைய துணிபுகளைத் தொகுத்துக் கூறுவார் அவர்களுக்குப்பின் வந்த நீதி நூலுடையார் அனைவருமே ஆவர். "பின் நீதி நூலுடையார்" என்பதற்கு இந்தச் செம்பொருள் நேரே விளங்கவும், காமாந்தகம் ஒன்றனையே குறிப்பதாகக் கூறிக் காமாந்தகத்திற்கும் வள்ளுவர் நூல் பிந்திய நூல் என மன்றாடுவாரும் உண்டு. எவ்வாறு பொருள் கொண்டாலும், "வினைத் தூய்மையும்" உடன் கூறினர் என்பது இந்த இடத்தில் விளங்காத பாடமே

ஆம். "வினைத் தூய்மை"யோடு வினைத் திட்பத்தையும் உடன் கூறினர் என்று இத்தொடர் இருப்பின் பொருந்தும். அப்போதும் இத் தொடர் இந்த அதிகாரத்தின் முறை வைப்பு முறையைக் கூறியதன்பின் முன்னுரையாக அமைதல் வேண்டும். இல்லையேல், இப்போது இருக்கின்ற வடிவிலேயே முன்னதிகாரத்தின் முன்னுரையில் இடம் பெற்றிருக்கலாம். ஏடுகளின் முறை பிறழ்ச்சியால் இடப் பிறழ்ச்சி ஏற்பட்டு, இவ்வாறு இந்தச் சொற்றொடர் இப்போதுள்ள இடத்தில் எழுதப்பெற்றிருக்கலாம். எவ்வாறாயினும், திருவள்ளுவர் பல கொள்கைகளையும் வற்புறுத்துபவர் என்பது இதனால் நன்கு விளங்குகிறது.

ஐயத்திற்கு இடமான இந்தச் சொற்றொடரேயன்றித் தெளிவான பிற சொற்றொடர்களும் பரிமேலழகர் உரையில் வரக் காண்கிறோம். "வட நூலார் இவ்விரு வகையாருடன் (தானே வகுத்துக் கூறுவார், கூறுவது கூறுவார்) ஓலை கொடுத்து நிற்பாரையும் கூட்டித் தூதுரைத்தலை இடைகடை என வகுத்துக் கூறினர் ஆகலின், அவர் மதமும் தோன்றத் தலை என்றார்" எனவரும் பகுதி காண்க. ஓலை கொடுத்து நிற்பாரைத் தூது என வள்ளுவர் ஒப்புக்கொள்ளவில்லை. "அப்படிக் கூறுவாரும் உண்டு என்பதனை நினைப்பூட்டுகின்றார் வள்ளுவர்" என்பது பரிமேலழகர் கொள்கை. பெருந்தேவனார் பாரதம், இந்த வட நூல் மரபினைத் தமிழில் பாடியுள்ளது. "தானறிந்து கூறும் தலை; மற்று இடையது கோன் அறைந்தது ஈது என்று கூறுமால் - தானறியாது, ஓலையே காட்டும் கடை என்று ஒரு மூன்றும் மேலையார் தூது உரைத்த ஆறு." வட நூல் மரபினைச் சுட்டினாலும் வள்ளுவர் தம் கொள்கையாக அதனைக் கூறவில்லை என்பதே பரிமேலழகர் முடிபு.

அம்மட்டுமோ! வள்ளுவர் வடநூல் முடிபினை மறுத்துக் கூறுவதாகவும் பரிமேலழகர் எடுத்துக் காட்டவில்லையா? "இன்றியமையாச் சிறப்பின ஆயினும் குன்ற வருப விடல்" என்பது குறள். "இறப்பவரும்வழி இளிவந்தன செய்தாயினும் உய்க என்னும் வட நூல் முறையை மறுத்து உடம்பினது

நிலையின்மையையும் மரணத்தினது நிலையுடைமையையும் நோக்கி அவை செய்யற்க என்பதாம்" என்பது பரிமேலழகர் உரை. காமத்துப் பாலிலும் இவ்வாறு வடநூல் மரபின் வழிச் செல்லாதுபோதலை இந்த உரையாசிரியரே சுட்டுகின்றார். பிரிவினை நால்வகைத்தாக வட நூலார் கூறுகின்றார் எனப் பரிமேலழகர் சுட்டியதனை மேலே கண்டோம். "அஃதேல் வடநூலார் இவற்றுடனே சாபத்தினையை நீக்கத்தினையும் கூட்டிப் பிரிவினை ஐந்து என்றாரால் எனின், அஃது அறம் பொருள் இன்பம் என்னும் பயன்களுள் ஒன்றுபற்றிய பிரிவன்மையானும் முனிவராணையான் ஒரு காலத்து ஒரு குற்றத்து உளதாயுவல்லது உலகியல்பாய் வாராமையானும் ஈண்டு ஒழிக்கப்பட்டது என்க" என எழுதுகிறார். சகுந்தலையின் பிரிவு இந்த வகையின்பாற்படும் என்பதனை நினைவில் வைப்போமானால் பரிமேலழகர் கூறும் "ஒழிக்கப்பட்டது" என்பதில் குதித்தோங்கும் வள்ளுவர் துணிபு வெளியாகும்.

இங்குச் சில இடங்களில் பரிமேலழகர் வலிந்து பொருள் கொள்ளுதல் யாருக்கும் புலனாகும். மேலே தூதுபற்றிக் கூறுவதில் வரும் "தலை" என்ற சொல்லுக்குக் கொண்ட பொருளைக் கண்டோம். "நாண் என்னும் நல்லாள்-பெண்பாலாக்கியது வடமொழி முறைமைபற்றி" என்றுஎழுதுவதனை என் என்பது? நாண் என்னும் நல்லாள் என்பது உருவக அணிபட வள்ளுவர் பாடும் பாட்டு. லஜ்ஜா என்ற சொல் வடமொழி இலக்கணப் பால்வகையில் பெண்பாற் சொல்லாதலின், அங்கு உருவகமோ பாட்டோ இல்லை. வடமொழியிற் காண்பன வள்ளுவரிலும் உண்டு என்று காட்டி வடமொழி வெறியரைத் திருக்குறள் அன்பராக மாற்றுவதற்கு எடுத்த முயற்சியில் இவ்வாறு தம்மையும் மறந்து நலிந்து பரிமேலழகர் உரை எழுதுகிறார்.

வடநூல் மரபே குறளில் இல்லையென்று கூறுவதும் அடாததாம். இந்திய நாட்டாராய்ச்சி ஒருமுகப்பட்டுக் காஞ்சியிலும் நாளாந்தாவிலும் மதுரையிலும் தக்ஷசீலத்திலும் நடந்த காலம் ஒன்று உண்டு என்பதனை நாம் மறத்தலாகாது. அந்த ஆராய்ச்சியில், பிறநாட்டார் போலத் தமிழ்நாட்டுத் திங் நாகர் முதலி

யோரும் ஈடுபட்டமை பண்டைய சீனரும் அறிந்த உண்மை. ஆங்கில நூல்களை அறிந்து எழுதும் நாம், வள்ளுவர் தம் நாளைய வடநூல்களை அறியார் என்றோ, அவற்றின் போக்கினை அறியார் என்றோ, எவ்வாறு கூறமுடியும்? "பனுவற் றுணிபு" (21), "நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை" (322) என்று கூறுவது வள்ளுவர் வழக்கம். "வழக்கும் தண்டமும் உலகநெறி நிறுத்தற் பயத்தவாவது அல்லது ஒழுக்கம் போல மக்களுக்கு உறுதிபயத்தற் சிறப்பில ஆகலானும், அவைதாம் நூலானே அன்றி உணர்வு மிகுதியானும் தேய வியற்கையானும் அறியப்படுதலானும் அவற்றை ஒழித்து ஈண்டுத் தெய்வப்புலமைத் திருவள்ளுவரால் சிறப்புடைய ஒழுக்கமே அறம் என எடுத்துக்கொள்ளப்பட்டது. அது தான் நால்வகை நிலைத்தாய் வருணந்தோறும் வேறுபாடு உடைமையின் சிறுபான்மையாகிய அச் சிறப்பியல்புகள் ஒழித்து **எல்லார்க்கும் ஒத்தலின்** பெரும்பான்மையாகிய பொது வியல்பு பற்றி இல்லறம் துறவறம் என இருவகை நிலையாற் கூறப்பட்டது" என்று ஸ்மிருதிவழியே சென்று வள்ளுவர் தனிப்பெருமையினையும் விளக்கித் தெய்வப் புலவர் என வட மொழிவெறியர் எதிரே நிலைநாட்டுகிற அருமைப்பாடு எண்ணி எண்ணி இன்புறத்தக்கது. "எல்லா நூல்களிலும் நல்லன எடுத்து எல்லார்க்கும் பொதுப்படக் கூறுதல் இவர்க்கு இயல்பு" என மிக அழகாகப் பரிமேலழகர் விளக்கியுள்ளார். இதுவே முடிந்த முடிபு. தம் கொள்கையினையும் நிலைநாட்டு கின்றார் வள்ளுவர் என நாம் மேலே காட்டியதனை மறத்தல் ஆகாது.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு" (423)

என வள்ளுவரே தமது கொள்கையை விளக்கவில்லையா?

## 3

காமத்துப்பாலைப் பொறுத்த அளவில் வடமொழி மரபினை வள்ளுவர் பின்பற்றினாரோ என்பதே கேள்வி. பரிமேலழகர், "ஈண்டு இன்பம் என்றது ஒருகாலத்து ஒருபொருளான் ஐம்புலனும் நுகர்தற் சிறப்புடைத்தாய காம இன்பத்தினை. இது புணர்ச்சி பிரிவு என இருவகைப்படும். இவர் பொருட்

பாகுபாட்டினை அறம் பொருள் இன்பம் என வடநூல் வழக்குப்பற்றி ஓதுதலான், அவ்வாறே அவற்றை (இருத்தல், இரங்கல், ஊடல்) பிரிவின்கண் அடக்கினார்" என்று காமத்துப் பாலுக்கு உரை எழுதத் தொடங்குகிறார்; பிரிவாற்றாமை என்ற ஓரதிகாரத் தலைப்பே பிரிவெனப் பேசப் பல அதிகாரங்கள் இரங்கல், பருவரல் முதலாகப் பேசுவது நோக்கி மேலே எழுதுகிறார் : "இனி அவைதம்மையே தமிழ் நூல்களோடும் பொருந்தப் புணர்ச்சியைக் களவு என்றும், பிரிவைக் கற்பென்றும் பெரும்பான்மைபற்றி வகுத்து அவற்றைச் சுவை மிகுதி பயப்ப உலகநடையோடு ஒப்பும் ஒவ்வாமையும் உடைய வாக்கிக் கூறுகின்றார்" என்று கூறித் தப்பித்துக் கொள்கின்றார். பிரிவொடு புணர்த்துக் கற்பெனப்படுமே என்பது தொல்காப்பியமன்றோ. களவு கற்பு என்பது தொல்காப்பியர் கண்ட பாகுபாடு. வடநூலோடு உள்ள ஒற்றுமையும் அந்த வடநூல் முடிபு தமிழ் மரபாக வள்ளுவர் நூலில் வருவதனையும் பரிமேலழகர் உள்ளங்கை நெல்லிக்கனி யாக்கியுள்ளார்.

பிரிவினைக் கூறுவது வடநூல் மதம்பற்றி எனப் பரிமேலழகர் கொண்டதாக 1330-ம் குறளின் உரையின் கடைப்பகுதி சுட்டும். மேலும் எடுத்துக்காட்டினோம். "அவற்றுட் செலவு (ப்ரவாஸம்) பிரிவாற்றாமையுள்ளும், ஆற்றாமை (விரஹம்) படர்மெலிந்திரங்கல் முதல் நிறையழிதலீறாயவற்றுள்ளும்(10 அதிகாரம்), விதுப்பு(அபிலாஷம்) அவர்வயின் விதும்பல் முதல் புணர்ச்சி விதும்பல் ஈறாயவற்றுள்ளும் (3 அதிகாரம்), புலவி (ஈர்ஷ்யா) நெஞ்சொடுபுலத்தல் முதல் ஊடலுவகையீறாயவற்றுள்ளும் (4 அதிகாரம்) கண்டு கொள்க" என்பது அப் பகுதி. இதனைக் காமத்துப்பாலுரையின் முதலில் பரிமேலழகர் கூறாமை ஏன் என விளங்கவில்லை? பிரிவினைத் தமிழ்நூல் மரபுபற்றிக் கற்பென்றன்றோ பரிமேலழகர் முதலில் கூறியுள்ளார். இந்த நான்கு வகைக்கும் ஏற்ப இயல்களை அவர் வகுத்தார் இல்லை. ஆதலின், இது பரிமேலழகர் எழுதியதோ, அதனை ஓதிய வடநூல் அறிஞர் பாடங் கேட்டபோது குறிப்பாக எழுதிக்கொண்டதோ என்ற ஐயம் எழுவது இயல்பு. இந்த நால்வகைப் பாகுபாடு எல்லாப் பிரிவுக் கதைகளிலும் வருதலின், இதனை ஒரு

மொழிமரபு என எவ்வாறு கூறுவது? இந்தப் பகுதி நுண்பொருள் மாலையில் அந்த ஆசிரியரது விளக்கம்போல வருதலின் அவர்தாம் எழுதினரோ? இதற்கு முன்னுள்ள பகுதியும் நுண்பொருள் மாலையில் வந்திருந்தாலும், ஒருசில சொற்கள் விளக்கம்போல் வரக்காண்கிறோம். இந்தப் பகுதியில் அவ்வாறு காணோம். இதனை ஆராய்தல் வேண்டும். நிற்க. பிரிவாற்றாமை என்பதே ஆற்றாமையைத் தலைப்பில் கொண்டு விளங்க, அதனை ஆற்றாமையில் இந்த இடைச்செருகற்பகுதி அடக்காதது ஏன்? வேறு வகையாகச் செலவு என்பதனைக் காட்ட அதிகாரம் இல்லை என்றோ? வள்ளுவர் கூறும் புலவி ஈரிஷையே அன்று. விதுப்பு என்பதற்குப் பரிமேலழகர் 'வேட்கை மிகவினான் விரைதல்' என்றன்றோ பொருள் எழுதுகிறார்! குறிப்பறிவித்தல், புணர்ச்சி விதும்பல் என்பனவற்றில் பல குறள்கள் இந்த இடைச்செருகல் கொள்கைக்கு மாறாக முல்லை இன்பப் பாக்களாய் வருதலும் காண்க.

## 4

பரிப்பெருமாள் என்ற உரையாசிரியர் அருமையிற் கூடல் (இயற்கைப் புணர்ச்சி), பிரிந்து கூடல், ஊடிக் கூடல் என்ற மூன்று கூடலும் கூடுவதே காமத்துப்பால் என்பர். புணர்ச்சி மகிழ்தல் என முதற்கூட்டத்தில் கூடுதலையும், புணர்ச்சி விதும்பலெனப் பிரிவின்பின் கூடுதலையும், ஊடலுவகை என ஊடலின்பின் கூடுதலையும் திருக்குறள் கூறுவதால், இவ்வாறு மூன்றாகக் காமத்துப்பாலைப் பகுக்கின்றார் பரிப்பெருமாள்; இவற்றினைக் கூறுவது தமிழ்நடையன்றாதலின், "இதற்கு இலக்கணம் யாங்கனம் பெறுதும்," என்பதொரு கேள்வியை எழுப்புகிறார்; "இவ்விலக்கணம் தமிழ் நடையாயின் அகம்புறம் என்று கூறுதல் வேண்டும். அவ்வாறு கூறாது அறம் பொருள் இன்பம் என வடநூல் வழியே கூறினார் ஆகலின், இதற்கு இலக்கணம் வாத்ஸ்யாயனம் என்னும் காமதந்திரத்துச் சுரதவிகற்பம் என்னும் அதிகரணத்துள் கண்டுகொள்க" என்று விடை கூறுகிறார். வாத்ஸ்யாயனரை வள்ளுவர் பின்பற்றுவதால்

வள்ளுவர் பிற்காலத்தவர் எனப் புத்தம்புதிய ஆராய்ச்சி யாளர் முழக்கம் செய்கின்றனர்.

இங்கு ஒன்று குறித்திடல் வேண்டும். பரிப்பெருமாள் உரையும் மணக்குடவர் உரையும் ஏறக்குறைய ஒன்றேபோல் போகின்றன. மணக்குடவர் உரையினைத் தம் குறிப்புக்களோடு பரிப்பெருமாள் எழுதிவைத்தனர் போலும்! இங்குக் குறிக்கத் தக்கது மணக்குடவர் உரையில் வாத்ஸ்யாயனரைப்பற்றிய பகுதி இல்லை என்பதேயாம். எனவே, அது பரிப்பெருமாள் கண்ட புதுமையே அன்றிப் பழைய மரபன்று என்பது வெள்ளிடை மலை.

வாத்ஸ்யாயனர் கூறும் பொருள்களைப் பார்க்கலாம்; அறம் பொருள் இன்பப்பேறு—காமநுகர்வார் அறியவேண்டும் கலை கள்—காமப்பண்பாட்டில் மிக்க நாகரிக வாழ்க்கை—தலைவர் தோழர் வாயில்கள் என்ற இவர்கள் இயல்பு—காம அன்பு—அணைத்தல்—முத்தமிடல்—நகக்குறி — பற்குறி — பலநாட்டுப் பெண்கள் இயல்பு—தைவரல்—புள்ஒலி முதலிய எழுப்பல்—முதற் கூட்டம்—புணர்ச்சி—அதற்கேற்ற தக்கநிலை—பல வகைக் கூட்டங்கள்—இளைஞர் ஏமாறு நிலை—காதலியிடம் நம் பிக்கையை விளைவித்தல்—செயல் வழியும் அறிகுறிகள் வழியும் காதலைப் புலப்படுத்திக் காதலைத் தூண்டல்—வசிய முறை— மணவகைகள் — பத்தினிப் பெண்டிர் வாழ்க்கை முறை — பிரிவில் வாழும் நிலை — மூத்தாள் இளையாள் அல்லது கைம் பெண்ணும் மணமகள்—காதலன் கடிந்த மனைவி—அரசர்தம் அந்தப்புரத்துப் பெண்கள் — பல மனைவியரின் மணாளன் என்ற இவர்களது நடைமுறை — தன் மனைவி பிறன் மனைவி பொது மகளிர் என்பவரிடம் பெறும் இன் பம்—இன்பம் பெறும் முறை — ஆடவர் காதலைப் பெண் கள் வெறுப்பதன் காரணம்—காதலை விளைவிக்கும் கலை— பெண்மன ஆராய்ச்சி—கூட்டிவைப்பாளின் தொண்டு— பொதுவில் உபதேசங்கள்—ஒப்பனை—மன அடக்கம்—காம மருந்துகள்—இவ்வாறு பல தலைப்புக்களில் வாத்ஸ்யாயனார் தம் நூலை வகை செய்து எழுதியுள்ளார். தகையணங்குறுத்தல்— குறிப்பறிதல்—புணர்ச்சி மகிழ்தல்—நலம்புனைந்துரைத்தல்—

காதற் சிறப்புரைத்தல் — நாணுத்துறவு உரைத்தல் — அலர் அறிவுறுத்தல் — பிரிவு ஆற்ருமை — படர்மெலிந்திரங்கல் —கண்விதுப்பு அழிதல் — பசப்புறுவருவரல் — தனிப்படர் மிகுதி — நினைந்தவர் புலம்பல் — கனவுநிலை உரைத்தல் — பொழுதுகண்டு இரங்கல் — உறுப்பு நலன் அழிதல் — நெஞ்சொடு கிளத்தல்—நிறை அழிதல்—அவர்வயின் விதும்பல்—குறிப்பறிவுறுத்தல் — புணர்ச்சி விதும்பல் — நெஞ்சொடு புலத்தல் — புலவி — புலவி நுணுக்கம் — ஊடல் உவகை — என்ற தலைப்புக்களில் பாடுகிருர் வள்ளுவர். வள்ளுவர் பாடுவதற்கும் வாத்ஸ்யாயனர் கூறுவதற்கும் ஏதேனும் தொடர்பு உண்டா? ஒன்று பாட்டு; மற்ருென்று சாத்திர ஆராய்ச்சி. ஒன்று உணர்ச்சி வெள்ளம்; மற்ருென்று அறிவின் உழவு. ஒன்று அடையவேண்டும் உயர்நிலையைச் சுட்டுவது; மற்ருென்று உலகில் உள்ளவற்றை இழிவு உயர்வு என்ற பாகுபாடின்றி எடுத்துக் கூறுவது. ஒன்று ஓவியம்; மற்ருென்று புகைப்படம்.

இங்கு வள்ளுவர் கூறுவது அறமுறையே அன்றி விஞ்ஞான முறையன்று. வாத்ஸ்யாயனர் கூறும் முறை விஞ்ஞான ஆராய்ச்சி முறை; பலவகைச் செய்திகளையும் வகைப்படுத்திக் காணக்கூடிய முறைகண்டு அவற்றை அடக்கியாண்டு, வேண்டும் பயனைப் பெற முயல்வதே அவர் நோக்கம். பலவகையான காம இன்பங்களையும் நல்லது தீயது என்ற நிலையில் அன்றி, இருந்ததனை இருந்தபடி கண்டு, காரண காரிய வகை செய்து, காரண காரிய அறிவாராய்ச்சி முறையில் கூறுவதே அவர் நூலின் போக்கு. வள்ளுவர் கூறுவது இந்த இருப்புநிலை ஆராய்ச்சியன்று; (Normative) உயர்நிலையில் நம்மை ஈடுபடுத்தும் பாட்டு. இவர் கூறுவது ஒருவனும் ஒருத்தியுமாக வாழ்கிற காமவாழ்க்கையே அன்றிப் பிறர்மனை விழைவும் வரைவின்மகளிர் சேர்க்கையும் பல மனைவியர் கலவியும் அன்று.

இதனைப் பரிப்பெருமாளே எடுத்துக்காட்டுகின்ருர்: "காமத்துப் பாலானது மைந்தர்க்கும் மகளிர்க்கும் கலவியினுகிய இன்பப்பகுதி கூறுதல்; அஃது யாங்கனம் கூறினுர் எனின், ஒருவனுக்கு இன்பம் நுகர்தற்கு இடம் கன்னியரும், கணிகை

யரும், பிறர் தாரமும் என மூவகை யல்லது இல்லை. அவர் களுள் பிறர்மனைக்கூட்டம் பாவம் தரும் என்று அறத்துப் பாலில் கூறிக் கணிகையர் கூட்டம் பொருட்கேடுதரும் என்று பொருட்பாலுள் கூறினார். ஆதலின், அறனும் பொருளும் இன்பமும் வழுவாமல் வருவது கன்னியர் கூட்டம் என்று அஃது ஈண்டுக் கூறப்பட்டது என்க" என்று அறவழிச் செல்லும் வள்ளுவர் போக்கினையும், காம ஆராய்ச்சி செய்யும் வாத்ஸ்யாயனர் போக்கினையும் நன்கு விளக்கியுள்ளார்.

காமம் என்றால் கூடுதல் என்பதே பரிப்பெருமாள் கொள்கை. காமம் என்பதற்கு அன்பு எனப் பொருள் கொண்ட மணக்குடவர், "புணர்தல் எனினும் ஒக்கும்" என்று (1109) பொருள் எழுதுவதனை அடிப்படையாக வைத்தே பரிப்பெருமாள் மேற்செல்கின்றார்; புணர்ச்சி என்பது "அராகத்தவர் கூடும் கூட்டம்" என்றே கொள்கின்றார். அதனாலேயே, மூவகைக் கூடுதலையே வள்ளுவர் கூறினார் என அவர் கூறத் தொடங்குகிறார்; புணர்ச்சிமகிழ்தல், புணர்ச்சிவிதும்பல், ஊடலுவகை என மூன்று அதிகாரங்களை அடிப்படையாகக்கொண்டு மற்றவற்றை நிமித்தங்களாகக் கொள்கிறார். ஒன்றுமறியாத கன்னியொடு ஒரு புதுமையச்சந் தோன்றாதடங்கி உவகை தோன்றக் கூடுதல், பிரிந்த வருத்தம் மேலிட்ட போது அந்த வருத்தம் தோன்றாதடங்கி உவகை தோன்றக் கூடுதல், பொறாமை எரிவு தோன்றாதடங்கி உவகை தோன்றக் கூடுதல் என்ற நுட்பத்தினை வாத்ஸ்யாயனர் விளக்குவது கண்டு அதனையே வள்ளுவரும் கூறினார் எனப் பரிப்பெருமாள் விளக்குகிறார். கூட்டமே உவகையாக முடிந்தாலும் இன்ப அன்பின் விளக்கமாக அதனைக் காணுதல்வேண்டும் என்பதனை வற்புறுத்தவே 25 அதிகாரங்கள் கூறியுள்ளார் வள்ளுவர். இதுபற்றியே குறிஞ்சியாம் ஒன்றே என ஒழியாது குறிஞ்சி நெய்தல் முல்லை மருதம் பாலை என்று ஐந்தாகத் தமிழர் பாரித்துப் பேசுகின்றனர். எல்லா ஒழுக்கத்தின் முடிவிலும் கூடுதல் நிகழுமாதலின் குறிஞ்சியே தோன்றும். இதனைத் தொல்காப்பிய உரையாசிரியர்கள் எடுத்துக்காட்டுகின்றனர். இங்கு வற்புறுத்தப்பெறுவது, விலங்கிடத்தும் காணப்படும் கூடல் அன்று; ஈருடலும் ஒருயிருமாகும் இன்ப அன்பு நிலையே

ஆதலின், அதனை ஐந்து வேறு நிலையாகப் பேசவேண்டுவதாயிற்று.

ஆனால் விஞ்ஞான ஆராய்ச்சி மன நிலையை ஆராய்வது எங்ஙனம்? புறத்தே தோன்றும் நடத்தையினையே ஆராய்தல் கூடும்; ஆதலின் புறத்தே தோன்றக்கூடிய புணர்ச்சியினையே வாத்ஸ்யாயனர் ஆராய்கின்றார்; கூடுதற்குக் கிடைக்கக்கூடிய பெண்களையும் இதுபற்றியே ஆராய்ந்து பாகுபாடு செய்கின்றார்; ஸ்வகீயா (தன்மனை), பரகீயா (பிறர்மனை), ஸாதாரணா (பொதுமகள்) என்று பிரித்து வாத்ஸ்யாயனர் ஆராய்கின்றார். ஆனால், வள்ளுவர் போக்கு இதனிலும் முற்றிலும் மாறியுள்ளதனைப் பரிப்பெருமாள் உணர்கின்றார். அதனாலேயே மேலே கூறிய விளக்கம் தருகின்றார். வடநூல் வழிச்செல்கின்றார் வள்ளுவர் எனத் தொடங்கி அமைதிகூறுவதினும் தொல்காப்பியர் முதல் வழங்கிவரும் தமிழின்ப அன்பு மரபுகளையே கூறுகிறார் என்பது பொருத்தமாகாதோ? "இன்பம் ஒன்றையே நோக்கும் இன்ப நூலுடையார் இத்தீயொழுக்கத்தையும் பரகீயம் என்று கூறுவார்" என்று பரிமேலழகர் பரதாரிக ப்ரகரணை எழுதிய வாத்ஸ்யாயனர் முதலானோரைப் புறக்கணித்தல் காண்க. இது பற்றியே இவர் போசன் முதலான இலக்கியச் சுவையாராய்ச்சியாளரது வடநூன் முறையினைக் காமத்துப்பாலில் காட்டுகின்றாரே அன்றி வாத்ஸ்யாயனர் போன்றாரது காம ஆராய்ச்சியைச் சுட்டவில்லை.

பரிப்பெருமாள் கொண்ட கொள்கை வள்ளுவர் அமைத்த அதிகாரமுறைமைக்கு ஒவ்வாமையை அவரே உணர்கின்றார்.

"நீங்கிற் றெறூஉங் குறுகுங்காற் றண்ணென்னுந்
தீயாண்டுப் பெற்றா ளிவள்" (1104)

"உறுதோ றுயிர் தளிர்ப்பத் தீண்டலாற் பேதைக்
கமிழ்தி னியன்றன தோள்" (1106)

"வீழு மிருவர்க் கினிதே வளியிடை
போழப் படாஅ முயக்கு" (1108)

"ஊட லுணர்தல் புணர்த லிவை காமங்
கூடியார் பெற்ற பயன்" (1109)

என்பன புணர்ச்சி மகிழ்தல் என முதலிலியே வருவது எங்ஙனம்? முதலில்; கூடுதற்குமுன் பிரிவு ஏது? ஊடல் ஏது? கூடுதலைப்பன்மையாகக் கூறுவது எப்படி? இத்தகைய ஐயங்கள் எழுகின்றன. குறிப்பறிவுறுத்தல் காமத்துப்பாலில் 20-ஆம் அதிகாரம். அதில் தொடிநோக்கி என்ற குறள் (1279) உடன் போக்குக் கூறுவதாக மணக்குடவரும் இவரும் கூறுவர். 1274-ஆம் குறள் இரந்து பின்னிற்றல் என்பர். 1275-ஆம் குறள் தோழிக் கூட்டம் என்பர். திருக்குறள் காமத்துப்பால் பின்னுளைய கோவைகளைப்போலக் காதற் கதையைத் தொடர்ச்சியாகக் கூருமல் சங்க கால அகப்பாக்களைப்போலக் காம இன்ப அன்பின் ஒவ்வொரு நிலையையும் ஒவ்வொரு குறளில் தனித்தனி உணர்ச்சி ததும்பப் பாடுவதனை இவர் மறந்துபோகின்றார்; ஆதலின், மேலே காட்டிய நான்கு குறள்களைப் பற்றிப் பின்வருமாறு எழுதுகின்றார். இந்தக் "குறள் நான்கும் நலம் புனைந்துரைத்தலின் பின்னும், காதற் சிறப்புரைத்தலின் பின்னும், நாணுத் துறவுரைத்தலின் பின்னும் கூறற்பாலன. ஈண்டுக் கூறியது, களவுக் காலத்துக் கூடும் கூட்டம்எல்லாம் அருமையுடைத்து ஆதலானும், ஆண்டுத் தனி ஓரதிகாரம் கூறவேண்டுதலானும், அது கூறுங்காலும் புணர்ச்சி மகிழ்தல் என்று கூறவேண்டுதலானும ஈண்டுச் சேரக் கூறப்பட்டன" என்கிறார்.

ஆனல் மற்றோர் கேள்வி பிறக்கின்றது. "தகையணங் குறுத்தல் (109-ஆம் அதிகாரம்) முதலாக புணர்ச்சி மகிழ்தல் (111-ஆம் அதிகாரம்) ஈருக அருமையிற் கூடலும் அதற்கு நிமித்தமுமாகிய அதிகாரம் மூன்றும், நலம்புனைந்துரைத்தல் (112-ஆம் அதிகாரம்) முதலாகப் புணர்ச்சி விதும்பல், (129-ஆம் அதிகாரம்) ஈருகப் பிரிந்து கூடலும் அதற்கு நிமித்தமும் ஆகிய அதிகாரம் பதினெட்டும், நெஞ்சொடு புலத்தல் (அதிகாரம் 130) முதலாக ஊடல் உவகை (அதிகாரம் 133) ஈருக ஊடிக் கூடலும் அதற்கு நிமித்தமுமாகிய அதிகாரம் நான்கும், ஆக 25 அதிகாரம் கூறப்பட்டது என்று வகை செய்தாராயின், இக் கூட்டங்கட்கு நிமித்தமாகிய நலம்புனைந்துரைத்தல் முதலாகிய அதிகாரங்களை அருமையிற் கூடல் என்று கூற

வேண்டும்பிற எனின் ஒக்கும். அவையெல்லாம் புணர்ந்த பின்பு நிகழ்தலானும், பாங்கற் கூட்டமும் தோழியிற் கூட்டமும் இயற்கைப் புணர்ச்சியோடு ஒத்த இயல்பிற்று அன்மையானும், அவைதாம் பெரும்பான்மையும் பிரிந்து கூடுதலானும் கூறப்படா என்க" என்று அமைதி கூறுகிறார். தமிழ் மரபினை ஒட்டிக் களவு கற்பென உயர்நிலைக் குறிக்கோளாய் வருபவற்றை வாத்ஸ்யாயனர் கண்ட செயன்முறை விளக்கத்திற்கேற்ப அமைத்துக்காட்ட முயலுவதால் வரும் இடர்ப்பாடுகளே இவையெல்லாம். முழங்காலுக்கும் மொட்டைத் தலைக்கும் முடிபோடும் முயற்சியே இதுவாம்.

வாத்ஸ்யாயனர் போலச் செயல்முறை விளக்கமாக ஏன் இவர் கூறவில்லை என்ற கேள்வி பிறக்கிறது. இத்தகைய முயற்சியின் பயனாக இத்தகைய கேள்விகள் தொடர்ந்தெழும். இங்கும் வள்ளுவரின் தனிப்போக்குப் பரிப்பெருமாளுக்கு விளங்கினாலும் வாத்ஸ்யாயன பக்தியை அவர் மறக்க முடியவில்லை. கேள்விக்கு விடைகூறுகிறார்; கேட்போம்: "இதனுள் ஆலிங்கனம் முதலாயின கூறாது பசுக்களைப்போலப் புணர்ச்சி மாத்திரமே கூறிவிட்டது என்னை எனின், 'கண்டு கேட்டு' (1100) என்றார் ஆகலின் அவையெல்லாம் இதனானே சொன்னார் என்று கொள்ளப்படும்" என்கிறார். இவ்வாறு குறிப்பாகக் கூறுவதேன்? குறிப்பிற் கூறும் விஞ்ஞான நூலும் ஒரு நூலோ? மேலும் அமைதி கூறுகின்றார் பரிப்பெருமாள்; "இது காமப் பகுதி அன்றே! இதனை வடநூல் ஆசிரியர் கூறியதுபோல விரித்துக் கூறாதது என்னை எனின், அந் நூலகத்து விரித்துக் கூறியதெல்லாம் அளவும், காலமும், வேகமும் ஒவ்வாதாரை ஒப்பிக்கும் நெறியும், கைக்கிளை பெருந்திணைப்பாற்பட்ட கன்னியரைக் கூடுந் திறனும் கணிகையர் சீலமும் ஆம். ஈண்டு உழுவலன்பினாற் கூடுகின்ற நற்கூட்டம் ஆதலின் இவையெல்லாம் விதியினாலே ஒக்க அமைந்து கிடக்கும் ஆதலான் கூறாராயினர்" என்று முடித்து வடநூற் சிக்கலிலிருந்தும் உய்ந்துபோகின்றார். இதனை முதலிலேயே கூறித் தமிழ் மரபின்படி சென்று இத்தனை இக்கட்டுக்களும் வாராமற் காத்திருக்கலாம் அன்றோ?

*தமிழ் மரபினைப் பின்பற்றிப் பொருள் கூறமுடியும் என்பதனைப் பரிப்பெருமாளும் அறிவார். கன்னியர் கூட்டத்தினை. "அதுவே, தானே அவளே, தமியர் காணப் காமப்புணர்ச்சி இருவயின் ஒத்தல்" என்ற இறையனார் அகப்பொருள் (சூ. 2) கொண்டே இவர் விளக்குகிறார். அதன் உரையாசிரியரையும் குறிக்கின்றார். அம்மட்டுமா? "அன்றியும். புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் இவற்றின் நிமித்தம் என்றிவை— தேருங்காலைத் திணைக்குரிப் பொருளே (தொல். 953) என்றார் ஆதலின், அவற்றுள் இருத்தலும் இரங்கலும் பிரிந்துழி நிகழும் அன்றே! அவற்றைப் பிரிவினுள் அடக்கிப் புணர்தலும் பிரிதலும் ஊடலும் எனத் தமிழ் நடையிற் கூறினும் இழுக்காது" எனத் தமிழ் மரபு காட்டி முடிக்கின்றார். களவு கற்பு என்று தொல்காப்பியர் விரித்துக் கூறிய மரபுபற்றிப் பரிமேலழகர் புணர்தலும் பிரிதலும் என இரண்டாக அடக்கினர். புணர்தலும் பிரிதலும் ஊடலும் எனப் பரிப்பெருமாள் மூன்றுக்குகின்றார். வள்ளுவர் கூறும் ஊடற் சிறப்பின் புதுமையை நோக்கி இவ்வாறு வற்புறுத்திக் கூறுகின்றார் போலும்!*

## 5

*ஆனல், கற்பு களவு என்ற அளவிலோ, கூடுதல் பிரிதல், ஊடுதல் என்ற அளவிலோ, தமிழ் மரபினைப் பின்பற்றுவதோடு அமையாது, ஐந்திணையின் வழியே காமத்துப்பாலை வள்ளுவர் வகுத்துள்ளார் என்று கொள்வாரும் உண்டு. "குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தல், மருதம் என்ற முறையில் ஒவ்வொரு திணைக்கும் ஐயைந்து அதிகாரங்களாக இருபத்தைந்து அதிகாரங்களால் காமத்துப்பால் முடிகிறது" என்பதே அக்கொள்கையாகும்.*

*இதனை மணக்குடவர் உரைமுடிபு என எங்கள் ஆசிரியர் பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்த் தலைமை நடாத்திய திரு. செல்வக்கேசவராய முதலியார் தாம் எழுதிய திருவள்ளுவர் என்ற கட்டுரையில் குறித்துள்ளார் (1920 பதிப்பு பக்கம் 29). இப்போது வெளிவந்துள்ள மணக்குடவர் பதிப்புக்*

களில் இப்பகுதி காணப்பெறவில்லை. அச்சான மணக்குடவர் உரை நேரே கடவுள் வாழ்த்து என்ற முதலதிகாரத் தலைப்புக்குப் பொருள் எழுதத் தொடங்குகிறது. ஆனால், பொருட்பாலிலும் காமத்துப்பாலிலும் முன்னுரை எழுதியே மணக்குடவர் தொடங்கக் காண்கிறோம். ஆதலின், அவர் அறத்துப் பாலினை யும் முன்னுரை எழுதியே தொடங்கி இருப்பார். இதுவே அந்த முன்னுரை எனலாம். ஆனால், இந்த முன்னுரை, நூல் முழுவதற்கும் முன்னுரையாக அமைகிறது. அன்றியும், இப் போது பொருட் பாலுக்கும் காமத்துப் பாலுக்கும் உள்ள முன்னுரையாக மணக்குடவர் உரையில் அமைந்துள்ள பகுதி களில் காணப்படும் கொள்கைகளுக்கு இது முழுவதும் மாறு பட்டு இருக்கவும் காண்கிறோம். இவ்வாறானால், இதனை மணக் குடவர் உரை என எவ்வாறு கொள்வது? மணக்குடவர் உரை யினைப் பின்பற்றித் தாம் வேண்டும் விளக்கம் கூறிப் பரிப் பெருமாள் தம் உரையினை எழுதிப் போகின்றார். தம் கொள்கைகளைப் புகுத்தி எழுதுகின்றமையாலன்றோ அது வேறோர் உரையாக எண்ணப்படுகின்றது? பரிமேலழகர் உரை வெளிவந்தபின் பழைய உரைகள் நன்கு பேணப் பெறவில்லை. மணக்குடவர் உரையும் பரிப்பெருமாள் உரையும் மயங்கிக் கிடக்கக் காண்கிறோம். இந்த நிலையில் பரிப் பெருமாள் எழுதிய முன்னுரையினையே மணக்குடவர் முன்னுரை எனப் பின்னுளோர் வழங்கினர் போலும். காமத்துப்பாலின் முன்னுரையின் முற்பகுதி மட்டும் மணக் குடவர் உரையில் காண்கிறோம். பிற்பகுதியோடு இம் முற்பகுதியும் பரிப்பெருமாள் உரையிலும் வரக் காண்கிறோம். பரிப்பெருமாள் உரையினை ஓதியவர்கள் பின்னர் எழுதிய குறிப்பே இவ்வாறு தனித்துத் தோன்றும் பிற்பகுதி போலும். மணக்குடவர் உரையினை அரிதில் தேடிக் கண்ட கப்பலோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரனாரோடு பழகிய திரு. செல்வக் கேசவராய முதலியார் அவ்வுரைப் பிரதிகளில் இந்த முன்னுரையைக் கண்டதாலேயே மணக்குடவர் உரை எனத் துணிந்து எழுதுகிறார். இந்த உரையில் விளக்கப் பெறும் முறை பழையதொரு மரபினைப் பின்பற்றுகின்றது என்ற அளவிலேனும் இதனை இங்கு ஆராய்வது நல்லது. இன்று

வெளிவந்த மணக்குடவர் பதிப்புக்களில் இல்லாமையால் இந்தப் பகுதி முழுவதனையும் இங்குத் தருதல் பலருக்கும் பயனுடைத்தாம்:

"புருடார்த்தமாகிய தன்மார்த்த காம மோக்கங்களுள் முதன் மூன்றனையும் வழுவாதொழுகவே மோக்கம் எய்துதலான், அதற்கு வேறு வகுத்துக் கூறவேண்டுவது இன்மையின், அஃது ஒழித்துத் தன்மார்த்த காமப்பகுதிகளை அறத்துப்பால் என்று பெயர் கூறுவார்.

"மங்கலவகையான் எப்பொருட்கும் முதலாகிய கடவுள் வாழ்த்தும் அக் கடவுளினது செய்கைத்தாகி இவ்வுலகு இன்றியமையாதாகிய வான்சிறப்பும், பிறப்பினிற் சிறப்பு எய்துதற்கு உரியராகிய முனிவரது பெருமையும், அவராற் கொண்டுய்க்கப்படுகின்ற அறத்தினது வலியும், நான்கதிகாரத்தால் பாரித்துப் பிரமசரியம், காருகத்தம், வானப்பிரத்தம், சந்நியாதம் என்னும் நால்வகைப்பட்ட . அறத்தினுள் பிரமசரியம் சீடராய் நின்று ஓதுவதல்லது செய்வது பிறிது இன்மையின் அதனைப் புதல்வரைப் பெறுதல் என்புழி அடக்கி, காருகத்தம் இருபது அதிகாரத்தானும், வானப்பிரத்தம் பத்து அதிகாரத்தானும், சந்நியாதம் மூன்று அதிகாரத்தானும், எல்லார்க்கும் பொதுவாகிய ஊழ் ஓர் அதிகாரத்தானுமாக முப்பத்து நான்கு அதிகாரத்தான் அறத்துப்பால் கூறி,

"பொருட்பால் அரசனை முதலாக நாடி, அவனுக்குப் புறத்துறுப்பாவன: படை குடி கூழ் அமைச்சு நட்பு அரண் என ஆறுகப் பகுத்து அரசர்க்குரிய திறம் இருபத்தைந்து அதிகாரத்தானும், அமைச்சரது இயல்பு பத்து அதிகாரத்தானும், நாடும் அரணும் பொருளும் ஓரோர் அதிகாரத்தானும், படை இரண்டு அதிகாரத்தானும், நட்பு ஐந்து அதிகாரத்தானும், பகை ஆறு அதிகாரத்தானும், அரசர்க்கு அங்கமான பெரியாரைப் பிழையாமை முதல் மருந்தீருக ஆறும் ஆறு அதிகாரத்தானும், அதற்கு உறுப்பாகிய குடி முதல் நாணுடைமை எனப்படுவன ஏழ் அதிகாரத்தானும், அரசர்க்கும் ஏனை வருணங்களுக்கும் ஒப்ப உரித்தாகிய

குடிசெயல் வகையும் அவருள் பார்ப்பார் ஒழித்துப் பெரும் பான்மை வேளாளர்க்கு உரித்தாகிய ஏனையோர்க்கும் சிறு பான்மை உரித்தாகிய உழவு ஓர் அதிகாரத்தானும், அவ்வாறு பொருள் செய்யாதவழி உளதாகும் நல்குரவும் அதுபற்றித் தோன்றும் இரவும் இரவின் கண் உளதாகிய அச்சமும், இரப் போர்க்கு ஈயாதார் உள்ளிட்ட கயவரது ஒழுக்கமும், ஆகிய இந்நான்கும் ஒரோர் அதிகாரத்தானுமாக எழுபது அதிகாரத் தாற் கூறி,

"காமத்துப்பால் கூறுவார் : குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தல், மருதம் என்னும் ஐந்தனையும் முதல் கரு உரிப் பொருள் என்ற மூன்றனுள் பெரும்பான்மையும் உரிப் பொருள் பற்றிப் புணர்தலும் புணர்தல் நிமித்தமும் குறிஞ்சி எனவும், பிரிதலும் பிரிதல் நிமித்தமும் பாலை எனவும், இருத்தலும் இருத்தல் நிமித்தமும் முல்லை எனவும், இரங்கலும் இரங்கல் நிமித்தமும் நெய்தல் எனவும், ஊடலும் ஊடல் நிமித்தமும் மருதம் எனவும் ஒரோஒரு நிலம் ஐந்து அதிகார மாக இருபத்தைந்து அதிகாரத்தால் கூறி,

"ஆக நூற்று முப்பத்து மூன்று அதிகாரமாக்கி ஒரோ அதிகாரம் பத்துக்குறள் வெண்பாட்டாகக் கொண்டு இங்ஙனம் ஆயிரத்து முந்நூற்று முப்பது பாட்டான் வடநூலும் தமிழ் நூலும் கூறும் பொருள் எல்லாம் தொகுத்துக் கூறினர் என உணர்க."

வடநூலும் தமிழ்நூலும் கூறும் பொருள் எல்லாம் வள்ளுவர் கூறினர் என இந்த ஆசிரியர் வற்புறுத்திக் கூறுதலை நாம் குறித்து வைத்துக்கொள்ளுதல் வேண்டும்.

## 6

மற்றொரு வகையாகத் திருக்குறளுக்கு இயல் அமைப் பதும் உண்டு. இதுவும் பழைய மரபேயாம். திருவள்ளுவ மாலை திருக்குறளினது இயல் அமைப்பினை விளக்கிவரக் காண்கிறோம். இந்த நூலிலிருந்தும் "உப்பக்கம்" என்ற பாட்டினை கி. பி. 11-ம் நூற்றாண்டைய நேமிநாத உரை எடுத்துக்காட்டுதலால், இந்த நூல் கி. பி. 13-ம் நூற்றாண்டைய

பரிமேலழகருக்கும், அவருக்கு முன் வாழ்ந்த மணக்குடவருக்கும் முந்தியது எனலாம். ஆகவே, இது கூறும் இயல் அமைப்பு மிகப் பழையதே ஆகும். இதில் தொடித்தலை விழுத்தண்டினார் பாடிய பாடல் (22) காமத்துப்பாலில் மூன்று இயல்கள் உண்டு என்று தொகுத்துக் கூறுகின்றது. "காமத்திறம் மூன்று" என்பது அந்தப் பாடற் பகுதி. மோசிகீரனாரது பாடல் (27) இதனை விரித்து விளக்குகிறது:

"ஆண்பால் ஏழ்; ஆறிரண்டு பெண்பால், அடுத்தன்பு
பூண்பால் இருபால்ஓர் ஆறுக—மாண்பாய
காமத்தின் பக்கம் ஒருமூன்றாக் கட்டுரைத்தார்
நாமத்தின் வள்ளுவர் நன்கு"

ஆண்பால் இயலில் அதிகாரம் 7; பெண்பால் இயலில் அதிகாரம் 12; இருபால் இயலில் அதிகாரம் 6: இவ்வாறு வரிசையாகக் காமத்துப்பாலில் வகை செய்து கண்டுகொள்ளல் வேண்டும்.

"இந்த மரபு என்றேனும் வழங்கியதா?" என்பது அடுத்து எழுகின்ற கேள்வி. காளிங்கர் உரை இந்த முறைப்படி எழுதப்பெற்றதோர் உரையாகும். மணக்குடவர் உரை புலவிநுணுக்கம் ஊடலுவகை என்ற அதிகாரங்களில் பெரும்பான்மையும் காளிங்கர் உரையை அடியொற்றி ஒத்துப்போகக் காண்கிறோமாதலின், காளிங்கர் உரை பழைய உரையேயாம்; பழைய மரபே ஆம். 1221-ஆம் குறளில் "மாலைநீ" என்றும், 1251-ல் "அறிவென்னும்" என்றும் காளிங்கர் கொண்ட பாடமே மணக்குடவரும் கொள்கின்றார். பின்னும் பல இடங்களில் இந்த உண்மையைக் காண்கிறோம். திருவள்ளுவமாலை கூறும் இயலமைப்பிற்கு ஏற்ப உரை எழுதுகிறார் காளிங்கர் என்று கூற இடம் உண்டு. திருவள்ளுவமாலையின்படி 109-ஆம் அதிகாரம் முதல் 115 வரையுள்ள ஏழ் அதிகாரங்களை ஆண்பால் இயல் எனல் வேண்டும். 116-ஆம் அதிகாரத்திலிருந்து பெண்பால் இயல் தொடங்குதல் வேண்டும். அவ்வாறு தொடங்கும் இடத்தில் காளிங்கர் எழுதும் முன்னுரை இங்கு நாம் கூறுவதனை வற்புறுத்துவது காண்க. "தலைமகன் கூற்று முடிந்தது; இனித் தலைமகள் கூற்றுக்கிளவி வருமாறு" என்று எழுதிச் செல்கின்றார் அவர்.

மேலே குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தல், மருதம் என்ற பாகுபாட்டில் எந்த எந்தக் குறள்கள் எந்த எந்தத் திணையாயின? திருவள்ளுவமாலை கூறும் அமைப்பில் ஆண்பால் இயல் என்பது விளங்குகிறது. மற்றைய இயல்கள் எவ்வெவ்வதிகாரம் கொண்டு அமைந்தன? இத்தகைய கேள்விகளுக்கு விடையளிப்பது எளிதன்று. ஒவ்வோர் அதிகாரத்திலும் ஒவ்வோர் உரையாசிரியரும் வெவ்வேறு முறையில் குறள்களைக் கோத்தமைக்கக் காண்கிறோம். அதிகார அமைப்பும் பிறழ்ந்திருக்கலாம். ஓர் உரையில் ஓர் அதிகாரத்தில் காணப்படும் குறள் மற்றோர் உரையில் வேறோர் அதிகாரத்தில் காணப்படுகிறது.

> "நசைஇயார் நல்கா ரெனினு மவர்மாட்
> டிசையு மினிய செவிக்கு."

இந்தக் (1199-ஆம்) குறள் தனிப்படர் மிகுதி என்ற அதிகாரத்தில் உள்ளது. காளிங்கரோ இதனை நினைந்தவர் புலம்பலின் கடைசியில் அதாவது 1210-ஆம் குறளாகக் கொள்கின்றார். அவர்வயின்விதும்பல் என்ற அதிகாரத்தில் உள்ள,

> "உரனசைஇ யுள்ளந் துணையாகச் சென்றார்
> வரனசைஇ யின்னு முளேன்"

என்ற (1263-ஆம்) குறளைத் தனிப்படர் மிகுதியில் வைத்து அவர் எண்ணுகிறார்; நினைந்தவர் புலம்பலில் (1210-வதாக) உள்ள

> "விடாஅது சென்றாரைக் கண்ணினால் காணப்
> படாஅது வாழி மதி"

என்பதனை அவர்வயின்விதும்பலில் உள்ள (1266-ஆம்) குறளாகக் கொள்கின்றார். மூன்று அதிகாரங்களில் இவ்வாறு பிறழ்ச்சி காண்கின்றோம்.

நாலடியாரைத் தனிப்பாடல்களாகப் பலர் பாடியதனைப் பதுமனார் அதிகாரங்களாக அமைத்ததுபோலத் தனித்தனி குறளாகக் கிடந்தவற்றைப் பின்வந்தவர் அதிகாரங்களாக அமைத்துக்கொண்டனரோ என்று தூத்துக்குடி அறிஞர் திரு. பால் நாடாருக்கு ஓர் ஐயம் தோன்றியது உண்டு. இங்குக்

கூறியவற்றை எண்ணும்போது அந்த ஐயம் எழுவது இயற்கை என்றே தோன்றுகிறது. ஆனால், நாலடியார்போலத் திருக்குறள் பலர் எழுதியதாவது இல்லை. ஓர் ஒற்றுமை இங்கு ஐயத்திற்கிடமாகாமல் விளங்குகிறது. தனித் தனி குறளாகக் காமத்துப்பாலைக் கருதக்கூடும். ஆனால், "படை குடி கூழ் அமைச்சு நட்பு அரண் ஆறும் உடையான் அரசருள் ஏறு," என்று கூறி அவற்றை ஆராயும் பொருட்பால் அவ்வாறு தனித்தனி குறள்களாகக் கிடப்பதனை மனத்தால் எண்ணவேமுடியாது. பல அதிகாரங்களில் அதிகாரக் கருத்தினைவிளக்கும் சொற்களே எடுத்துக்காட்டாக அரண் என்ற அதிகாரத்தில் அரண் என்ற சொல் ஒவ்வொரு குறளிலும் வரக்காண்கிறோம். திருவள்ளுவ மாலை 700 ஆண்டுகளுக்கு முந்திய நூல் எனக் கொள்ளலாம். அதிலேயும் அதிகார அமைப்புக் கூறப்பெறுதலால்,அதிகார அமைப்புப் பழைய மரபு என்றே கொள்ளலாம். இங்குக் காட்டிய பிறழ்ச்சிகள் திருக்குறள் மிகப் பழைய நூலாய்ப் பல விடங்களிலும் வழங்கி வந்தமையால் எழுந்தனவாகும். பொது மக்களிடையேயும் பரவியதால் அவர்கள் வழங்கிய மொழிநடைக்கேற்ப மாறியும், மக்கள் நினைவு ஒன்றனையே நம்பியபோது முறை பிறழ்ந்தும் வந்திருத்தல் வேண்டும். எல்லா உரையாசிரியர்களும் அதிகார அமைப்போடேயே எழுதிவரக் காண்கிறோம் அதிகார முறையினையும் விளக்கி எழுதுகின்றனர் அல்லரோ ?

காமத்துப்பாலைப் பொறுத்த அளவில், மோசிகீரனார் காட்டிய அமைப்பினைப் பரிமேலழகரே மாற்றி அமைத்தார் என்பர் ஒரு சிலர். பரிமேலழகருக்கு முந்தியவர் மணக்குடவர். அவரே மோசிகீரனார் அமைப்பினைப் பின்பற்றுமையைக் காண்கிறோம். அவர் ஆண்பாலியலாகக் குறிப்பறிதல் (110 அதிகாரம்), புணர்ச்சி மகிழ்தல் (அதிகாரம் 111), நலம் புனைந்துரைத்தல் அதிகாரம் 112) என்ற மூன்றைமட்டுமே கொள்கின்றார். பெண்பாலினவாக அலரறிவுறுத்தல் (115 அதிகாரம்) தொடங்கி, அவர்வயின் விதும்பலோடு (125 அதிகாரம்) முடியும் 13 அதிகாரங்களையும் நெஞ்சொடு புலத்தல் (130 அதிகாரம்), புலவி (131 அதிகாரம்), புலவி நுணுக்கம் (132 அதிகாரம்) என்ற மூன்று அதிகாரங்களையும் சேர்த்து அந்த 16 அதிகாரங்களி

லும் அவ்வாறு பொருள்கூறுவர். மிகுந்து நிற்பனவாய்க் காமத்துப்பாலின் முதலில் வரும் தகையணங்குறுத்தலையும் (109 அதிகாரம்), இடையிடையே வரும் காதற் சிறப்புரைத்தல் (113 அதிகாரம்), நாணுத்துறவுரைத்தல் (114-அதிகாரம்), குறிப்பறிவுறுத்தல் (128) அதிகாரம் புணர்ச்சி விதும்பல் (129-அதிகாரம்) என்பவற்றையும் முடிவாக வரும் ஊடல் உவகை (133-அதிகாரம்) என்பதனையும் சேர்த்து அந்த 6 அதிகாரங்களிலும் இருபாலினர் கூற்றே வருவதாகப் பொருள் உரைப்பார். இவ்வாறு மோசிகீரனர் அமைப்பினைப் பின்பற்றி நின்றுர் மணக்குடவர் என்றே கூறலாம். ஆதலின், பரிமேலழகர்க்கு முன்னரே இந்த இயலமைப்பு மாறியது எனலாம்.

அங்கு ஒரு தெளிவினை நிலைநாட்டப் பரிமேலழகர் களவு கற்பு என்ற மரபினைப் பின்பற்றியுள்ளார். பரிமேலழகர் உரையில், முதல் நான்கு அதிகாரங்களும் (109, 110, 111, 112) தலைவன் கூற்றும். 114-ஆம் அதிகாரமும் தலைவன் கூற்றும். மிகுதி நிற்கும் இரண்டும் (113, 115) இருபாலினவாம். தோழிக் கூற்றும் (1150) கடைசி குறள். இது களவியலில் பரிமேலழகர் கண்ட கூற்று நிலை வகை. கற்பியலில் 1201, 1202, 1238, 1240 - 1268, 1275, 1280, 1299, 1300, 1305 - 1310, 1313-1320, 1325 - 1330 என்ற 36 குறள்கள் தலைவன் கூற்றும். 1151, 1231-1235, 1279, 1288, 1301, 1302 என்ற பத்துக் குறள்களும் தோழி கூற்றுகும். மிகுதி நிற்கும் 134 குறள்களும் தலைவியின் கூற்றுகும். 121, 124, 127, 128, 130, 131, 132, 133 என்ற அதிகாரங்கள் பரிமேலழகர் கருத்துப்படி இருபாலினவாம். மற்றப் பத்தும் (116, 117, 118, 119, 120, 122, 123, 125, 126, 129 - அதிகாரங்கள்) பெண்பாலினவாம். பெண்பாற் கூற்றுக் கற்பில் மிக்குவருதல் காண்க.

## 8

பரிமேலழகரை ஒட்டிக் களவு, கற்பு என இரண்டாகவோ, மணக்குடவர், பரிப்பெருமானை யொட்டி அருமையிற் கூடல், பிரிந்து கூடல், ஊடிக்கூடல் என மூன்ருகவோ, மோசிகீர

ஞரையும் காளிங்கரையும் ஒட்டி ஆண்பாலியல், பெண்பாலியல், இருபாலியல் என மூன்முகவோ, மணக்குடவரை ஒட்டி குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தல், மருதம் என ஐந்தாகவோ காமத்துப்பாலைப் பிரித்தாலும், எல்லா உரையாசிரியர்களிடத்திலும் உரைப்போக்கில் ஓர் ஒற்றுமை காண்கிறேம். மோசிகீரனுர் மரபினை ஒருவகையாகப் பின்பற்றிக் காமத்துப்பாலில் வரும் குறள்களைக் கூற்று வகையாகக் குறிப்பிட்டுத் தலைவி கூற்று, தலைவன் கூற்று எனவரைந்து எழுதுகின்றமையை எல்லா உரையாசிரியர்களிடமும் காண்கிறேம்.

காமத்துப்பாலில் வரும் குறள் ஒவ்வொன்றும் நாடக நூலில் வரும் பேச்சுக்கள்போல யாரேனும் ஒருவர் கூற்முக அமைந்திருப்பது வெள்ளிடைமலை. இதனுல் இதனை நாடக நூல் என ஒருவகையாகக் கூறலாம். நாடக வழக்கு எனத் தொல்காப்பிய மரபும், இறையனுரகப்பொருள் மரபும் கூறுவதனை உரையாசிரியர்கள் எடுத்துக்காட்டுகின்றனர் அல்லரோ? காமத்துப்பாலை இவ்வாறு அமைப்பதனைத் தமிழில் அன்றி வேறெங்கேனும் கண்டதுண்டா? வாத்ஸ்யாயனரோ, பப்ரவ்யரோ, நந்திகேசுவரரோ, உத்தாலகரோ, கொக்கோகரோ, பிறரோ இவ்வாறு கிளவிக் கோவையாக வடமொழியில் எழுதிய மரபினைக் கேட்டதேனும் உண்டோ?

உண்மை இன்பத்தின் உயர்ந்த நிலையைக் காட்டுவதே திருவள்ளுவர் குறிக்கோள் எனக் கண்டோம். உலகில் இருப்பதனை இருந்தபடி சீர்கேடான நிலையில் விளக்குவதன்று அவர் நோக்கம். மேல்வரிச் சட்டமாய் உயர்ந்த குறிக்கோளாய் அமையும் நிலையைக் காதலரது பேச்சாகவே பாடிக்காட்டுகின்ற முறையினை நாம் எங்குக் காண்கின்றேம்? சங்க இலக்கியம் பயின்முருக்கு இந்த முறை புதியதன்று: இது சங்கப் பாக்களில் கண்ட பழைய மரபு. நல்லது எனப் புலவரால் நாட்டப்பட்ட இந்தச் சீரிய ஒழுக்கத்தினைக் காதலர் கூற்முகவே பாடுவதன்றே அங்குக் காணும் அகப்பாட்டு முறை? இதுபற்றியன்றே தொல்காப்பியர் புறப்பொருளைத் திணைவகையாகக் கூறியது போலன்றி, அகப்பொருளை கைகோள் வகையாகக் களவு கற்பெனக் கொண்டு இரண்டு இயல்கள் வகுத்து ஒவ்

வொன்றிலும் தலைவி கூற்று, தலைவன் கூற்று, தோழி கூற்று என்று கிளவிகளைக் கோவைப்படுத்துகின்றார்? தொடர்ச்சியாக வரும் காதல் வரலாறு வழியே கோவைப்படுத்தக் காணோம். கதைப்போக்கன்று இங்கு நோக்கம்; பலபல நிலைகளில் விளங்கும் இன்ப அன்பின் சிறப்புநிலையைக் காண்பதே நோக்கம். அந்த அனுபவ நிலையைத் துய்த்தவர் அன்றி வேறொருவர் அதனைப் பேசுவதற்கு இல்லை. பேசினால் கதையாகிப் புறப்பொருளாகும். 'அனுபவித்தவர்களே அந்த அனுபவத்தின் போக்குவீடாகப் பேசுவது கதை அன்று; அவர் கள் வாழ்க்கையின் நிகழ்ச்சியாம். நாடகப் பேச்சுக்கள் இவ்வா றன்றோ அமைகின்றன? ஆதலின், அகப்பாட்டுக்களைத் தனித் தனி மணியாகக்கொண்டு தொல்காப்பியரும் வள்ளுவரும் கண்டு களிக்கின்றனர். எனவே, கூற்றுவகையால் காமத்துப் பாலைப் பாடும் பழந்தமிழ் மரபு வேறு எந்த மொழியிலும் காணாத புதுமரபு எனலாம்.

இங்ஙனம் அடிப்படையினை ஆராயாது, 'கூடல் பிரிவு' என்றோ, 'அருமையிற் கூடல், பிரிந்து கூடல், ஊடிக் கூடல்' என்றோ காதல் வரலாற்றை ஆராய்ந்தால், எந்த மொழியின் மரபில்தான் அவை இல்லை? எந்த நாட்டில்தான் இல்லை? பொது நிலையை விளக்குவதே வள்ளுவர் நோக்கம். ஆதலின், இவையெல்லாம் வள்ளுவரிலும் காணலாம். காதல் வாழ்க் கையில் உலகெங்கும் காணப்பெறுவன வள்ளுவரில் மறைந் தொழியுமோ? வடமொழியினை வள்ளுவர் நன்கு அறிந்தவர். வாத்ஸ்யாயனர் அவர் காலத்துக்குப் பிந்தியவர் என ஒரு சிலர் கொண்டாலும் வாத்ஸ்யாயனருக்கு முன்னைக் காமத்தினை ஆராய்ந்த பண்டைய ஆசிரியர்களை வள்ளுவர் அறிந்திலர் என அவர்மேல் அறியாமையை ஏற்றல் இயலாது. ஆனால், காமத்துப் பாலின் அடிப்படைப் போக்கில் வடமொழி மரபு ஏது? பிறமொழி மரபு ஏது? புணர்ச்சி என்றதும் வாத்ஸ்யாயனரிடம்தான் தஞ்சம் புகவேண்டுமா? அவருக்கு முன்னும் பின்னும் உலகம் அதனை அறியாதா?

காமத்துப் பாலில்வரும் ஒவ்வொரு திருக்குறளும் காதலின் உயர்நிலையை விளக்கத்தக்க உலக நிகழ்ச்சி ஒன்றில் முகிழ்த்

தெழுந்து உள்ளடங்காத இன்ப உணர்ச்சிப் பேச்சாக நின்று ஒழுக்கமணம் வீசி அன்புத்தேன் பிலிற்றி மலர்ந்து வரும் தமிழ்ப்பாடற் பூ ஆகும். ஒவ்வொன்றும் ஒவ்வொரு காதற் காப்பியம்; ஒரு பேச்சில் திரண்டு விளங்கும் நாடகம்; இந் நாளைய வழக்கில் விளக்கினால், ஒவ்வொன்றும் ஒவ்வொரு நாடக பாத்திரத்தின் பேச்சாக அமையும் சிறுகதை எனலாம். 250 சிறு கதைகளும் 250 காதல் துறைகளை விளக்கும் வழி யாகக் காதலின் கடவுள் தன்மையை விளக்குகின்றன. காமத்துப் பாலின் பழந்தமிழ் மரபினை உணர்ந்தாலன்றி இந்த உண்மை விளங்காது; இந்த இன்பம் தோன்றாது. அம் மட்டுமா? இந்த முறையில்தான் மற்றைய இரண்டு பால்களை யும் ஆராயவேண்டும் என்ற நுட்பமும் தோன்றாது ஒழியும். வாத்ஸ்யாயனர், போசன் என்று பேசிய உரையாசிரியர்களும் வெவ்வேறு வகையில் இயல்களை அமைத்தாலும் தொல்காப்பிய மரபினை ஒட்டி இடம்கூறி ஒவ்வொரு குறளையும் ஒவ்வொரு நாடக பாத்திரத்தின் கூற்றாகக் கொண்டே பொருள் எழுதிப் போவதால், அவர்கள் உரையில் இந்த இன்பத்தை நாம் இழப்பதில்லை.

காதலர் கதையினை முதலிலிருந்து முடிவுவரை கூறுவது கோவைகள் எழுந்தபின் பரவியதொரு வழக்காறாகும். தனி நிகழ்ச்சி ஒன்றனைக் காதலின் உயிர்நிலையை விளக்கும் வகையில் பேச்சாகப் பாடுவதே பழைய மரபு. நம்பி அகப்பொருள் போன்றவை எழுந்த பின்னரே, கோவை நூல்களுக்கு இடம் உண்டாயிற்று. திருக்குறளில் வரும் காமத்துப்பால், கோவை நூல்களுக்கு முந்தியது எனலாம்; வழிநிலைக் கைக்கிளையிலிருந்து முற்ற முடிய அனைத்துக் கிளவிகளையும் கோவைசெய்து வள்ளுவர் பாடவில்லை. அன்பின் விளக்கமே ஒவ்வொரு குறளிலும் வெவ்வேறு நிலைக்கேற்றக் காட்சிகளாகத் தோன்றக் காண்கிறோம். அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை முதலான தொகை நூல்கள்போலத் திருக்குறளில் வரும் காமத்துப் பாலும் விளங்குகிறது.

## 9

ஆனால், தொல்காப்பியத்திற் கூறியபடி காட்சியிலேதான் காமத்துப்பாலும் தொடங்குகிறது. அந்தக் காட்சி, காதலன் வாழ்க்கையில் ஒரு பெரும்புரட்சியாகும். நீர் ஓட்டத்தின் வழி வெள்ளத்திற் புல் சாய்ந்தாற்போலத் தலைவனும் இயற்கை அல்லது கடவுளது சட்டமாகும் பால்வழியோடி முனைப்படங்கி நிற்கின்றான். "அதுவே, அவளேதானே தமியர் காணப் காமப்புணர்ச்சி இருவயின் ஒத்தல்" என்ற இறையனார் சூத்திரத்துக்கு நக்கீரர் காணும் உரை, திருமூலர் கூறும் அன்பே சிவமாம் நிலைக்கு ஒத்திருக்கக் காண்கிறோம். இந்தச் சூத்திரம், "அவனேதானே ஆகிய அந்நெறி" என வரும் சிவஞான போதத்தோடு ஒருங்குவைத்து ஆராயத் தக்கது.

இந்த இன்பத்தினைக் கடவுள் இன்பத்தோடு ஒப்புக் கூறுதலும் காண்கிறோம். தாமரைக் கண்ணான் உலகு (1113), அமிழ்து (1106) என்பவற்றைக் காண்க. "சர்வகந்த:" "சர்வரச:" என்று ஆண்டவனைக் கூறுவது போல "வேட்ட பொழுதின் அவைஅவை போலுமே" (1105) என்று கூறுவதும் காண்க. "பாலொடு தேன் கலந்தற்றே" (1121), "உடலோடுயிரிடை நட்பு" (1122) என அத்துவித நிலைக்குப் பல உவமைகள் வருகின்றன. ஞானப்போக்கில் அறிதோறறியாமை காண்பதனையும் சுட்டுகின்றான் தலைவன் (1110). மிகச் சிறந்த குறிக்கோள்களை எல்லாம் உவமையாகக் கூறுகிற நிலைமையை இங்குக் காண்கிறோம். "தம்மிலிருந்து தமது பாத்துண்டற்றால்" (1107) என்ற பாட்டு, எத்தனை உயர்ந்த குறிக்கோள்களை நினைப்பூட்டுகின்றது? உழைத்தது கொண்டு உண்ணலின் உயர்வும், இனிமையும், பாத்துண்டலின் மேன்மையும், இன்பமும், ஆங்கிலேயர் பாடும் இனிய இல்லத்தின் அமைதி உணர்ச்சியும், காதல் இன்பத்திற்கு உவமையாக வருதல் காண்க.

இவ்வாறு காதலைத் தூய்மை செய்து கடவுட் காதலாக மாற்றிவிடுகிறார் வள்ளுவர். காமத்துப்பால் நேரே சிற்றின் பத்தையும் உள்ளுறை வகையால் பேரின்பத்தினையும் கூறுவது

போலத் தோன்றுகின்றது. இதனாலன்றோ இவரைப் பின் பற்றிய நாயன்மார்களும் ஆழ்வார்களும் ஆண்டவனோடு உயிர்களுக்குள்ள தொடர்பினையும், தம் வரலாற்றினையும் காதற் பாட்டாக அகப்பொருள் துறைவரப் பாடுகின்றனர்? வள்ளுவர் வகுத்த தூநெறியே இவர்களுக்கு வழியாக அமைந்தது. "கண்ணனுக்கே ஆமது காமம்" என வைணவப் பெரியோர்கள் காமத்திற்கே காதற்பொருள் கொண்டுள்ளனர் அல்லரோ? மருதத் திணையை வள்ளுவர் தூய்மை செய்தமையும் காண்போம்.

நக்கீரனார், காமம் என்றதனாலேயே இழிவாதல் இல்லை என்று உரை எழுதுகிறார். 'காமம்' என்று உயர்ந்த காமத்தினையே புனைந்துரைத்து, அதற்குத் தவம் செய்யவேண்டுமென்று காட்டி, அப்படித் தவம் செய்ய ஒருப்படுவானை, "இதனினும் உயர்ந்த நிலைக்காகத் தவம் செய்தல் நலனன்றோ?" என உணர்த்தி வீட்டின்பத்திற்காகத் தவம் செய்யத் தூண்டி ஒருவனை உயர் நெறிக்கு அழைத்துச் செல்வதனையே அவர் கூறுகின்றார். வள்ளுவரும் ஆழ்வார்களும் நாயன்மார்களும் அவ்வாறு ஏமாற்றுதல் ஒன்றும் கூறவில்லை. அன்பே சிவம் என்ற அடிப்படையில் எழுவன இப்பாடல்கள். கூடுதலைப்பற்றி வரும் பகுதி இவ்வாறு தெய்வமணங் கமழக் காண்கிறோம்.

இதனை அறியாது இதனையும் காமத்துப்பால் என்று இகழ்வாரை என் என்பது? மேனாட்டுப் பெரியார் "காமம்" என்ற சொல் கேட்டதும் கீழ்நிலையிற் புகுமோ என அஞ்சி இதனை ஓதாது இருந்தாராம்; தமிழாசிரியர் சொல்லக் கேட்டு ஓதினாராம்; எங்குங் காணாப் புதுமை கண்டாராம்; காமத்தினை இவ்வளவு தூய்மையாகப் பாட முடிகின்றதே என வியந்தாராம்; முன்னரே ஓதாமைக்குக் கழிவிரக்கம் கொண்டாராம். இந்தப் பாலினை ஓதுகின்ற ஒவ்வொருவருக்கும் இத்தகைய உணர்ச்சியே தோன்றுகிறது. காமத்தின் கடவுள் நிலையை உலகம் விலங்குணர்ச்சியோடு வைத்துப் பாழாக்கி வருகிறது. அதன் உயர்வினை—தூய்மையை—கடவுள் நிலையை வள்ளுவர் பாடும் காமத்துப்பாலில் முற்றமுடிய முழுவதும் கண்டு களிக்கிறோம். மற்றைய புலவர்கள் மின்னல்போல

ஒளிகாட்டிவரக் காண்கிறேம். இங்கோ முழுத்திங்கள் இன்ப அன்புத் தண்ணிலவினை உலகம் முழுதும் மகிழப் பொழிந்து வருதலைக் காண்கின்றேம். கடவுளநுபவமும் ஒரு மனமாற்றம்; இதுவும் ஒரு மனமாற்றம். அதனாலன்றே இதனை ஒரு புரட்சி என்றேம்?

## 10

இந்தக் காட்சிப் புரட்சியினை இலக்கியச் சுவையெல்லாம் தோன்றத் தாக்கணங்குறுத்தல் என்ற தலைப்பு விளக்குகிறது. 1082-ஆம் குறளில் தாக்கணங்கு என்ற தொடரும் வருகிறது. காட்சியின் நுட்பத்தினை இவர் போலக் கூறினார் யார்? கண்ணினை இவர் போலப் பாடினார் யார்?

"நோக்குங்கால் நோக்கின் அணங்காக்கும் சாயல்" எனக் கலித்தொகை (131) கூறினாலும், காதலியின் கண்ணோக்கின் பாரயத்தினைத் திருக்குறளிலன்றி வேறெங்கும் முற்றமுடியக் கண்டதுண்டோ? காட்சி என்றால் கண்ணின் விருந்தாம் புரட்சியே அன்றே? கண்ணினைக் கூற்றென்பதும் பழைய மரபேயாம் (கலித்தொகை 56; சிலப். இந்திர விழா: 9; சிலப். கானல்வரி). ஆனால் வள்ளுவர்போல அதனைப் பலபட விரித்துச் சொன்னவர் இல்லை. "ஒரு நோக்கு நோய்நோக்கு; ஒன்று அந்நோய் மருந்து" (1091) என்பது வள்ளுவர் கண்ட புதுமை. இதனைக் கண்டதும், தமிழே இமயம் என மருண்டார் கிரௌல் என்ற ஜர்மனியர். "கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள் என்ன பயனுமில" (1100) என்ற இடத்திலன்றே உயிரோடு பேசும் கண்ணினது காப்பியவீறு வெள்ளமிடுகின்றது! கண்கொண்டு ஒளிரும் காதலாராய்ச்சி இந்நூல் முடிய வருகிறது. தமிழில் வரும் வன்கண், சிறுகண், இன்கண், உண்கண், சிறக்கணித்தல் என்று கண்ணின் நுட்பத்தினை விளக்கும் சொற்றொடர்களின் நயத்தினை எல்லாம் காமத்துப்பால் நன்கு விளக்குகிறது.

வள்ளுவர் காட்சிமட்டும் கூறுகின்றார் என்பதில்லை. உரையாசிரியர்கள்—பாங்கற் கூட்டம் (1103, 1104), இடந்தலைப்பாடு (1102), பாங்கியிற் கூட்டம் (1105) என்றெல்லாம் பல குறள்களை எடுத்துக்காட்டுகிறார்கள். நலம்புனைந்துரைத்தலும்

காதற்சிறப்புணர்த்தலும் இன்பத்தின் மேல்எல்லையாம் பேரின்பத்தில் திளைத்தெழுந்த பாடல்கள். மடலேறுதல் நாணுத்துறவுரைத்தல் முதலியன இரங்கலைக் குறிப்பன. இரங்கல் என்ற சொல்லையும் படர்மெலிந்திரங்கல் என்ற தலைப்பில் காண்கிறோம்.

"உயிரினும் சிறந்தது நாணே, நாணினும் செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்ததன்று" என்பது தொல்காப்பியம் (1058). "காமமும் களவையும் உயிர் காவாத் தூங்குதலைக்" கலித்தொகை (142) கூறுகிறது; குறுந்தொகையும் (112) வற்புறுத்துகிறது. வள்ளுவரோ காமமும் நாணும் உயிர் காவாத் தூங்குவதனைக் கூறுகின்றார் (1162); "காமம் விடு ஒன்றோ நாண்விடு நல்நெஞ்சே" என்று பின்னும் (1242) நயம்படக் கூறுகிறார். இங்கு, வள்ளுவர் காமம் எனக் கூறுவது, தொல்காப்பியர் கூறும் கற்பெனும் உயர்நிலையாக முடிவது காண்க. காமம் என்பதற்கு எத்தகைய உயர்ந்த பொருள் கொண்டுள்ளார் வள்ளுவர்! காமத்தின் குடல்விளக்கம் செய்தபெருமானார் அல்லரோ அவர்? அதனாலன்றோ காமத்துப் பால் எனப் பெயரிடுகின்றார்? கண்ணைப்பற்றிய ஆராய்ச்சி களைப்போல இந்த நாணினைப் பற்றிய ஆராய்ச்சியும் இலக்கியச் சுவை ததும்புவதாகும். காமத்தினைத் தீ என்றும் கள் என்றும் கூறி வேறுபடுத்தும் நயமும் நுட்பமுடையதாகும்.

காமத்தினைக் களவைக்கு எதிரிடையாக வைத்துப் பலர் பாடியதனைக் கண்டோம். வள்ளுவரோ, "களவையால் கவ்விது காமம்" (1163) என்கிறார். அலரறிவுறுத்தலை வரவேற்கிற முறையில் வள்ளுவர் பாடுவது மற்றொரு புதுமை. "அலர் எழ ஆருயிர் நிற்கும்" (1141); "களித் தொறும் கள்ளுண்டல் வேட்டற்றால் காமம் வெளிப்படுந் தோறும் இனிது" (1145) என்பவை புத்தம்புதுப் பாஅமுதங்கள். வரைவு கடாவும் தோழி, இதனை மறுத்துரை யாடுவது இயல்பே (1148). களவை எருவாக அன்னைசொல் நீராகக் காமநோய் நீளுவது ஒரு புதுமை (1147).

பசலையைப் பற்றியும் வள்ளுவர் நயம்தோன்றப் பாடுகிறார். பசலை, காதலர் தொடுவழித் தொடுவழி நீங்கலும், விடுவழி விடுவழிப் பரத்தலும் சங்கப் பாக்கள் கண்ட இன்ப

உண்மையே ஆகும் (குறுந்தொகை 399 ; கலித்தொகை 130). "விளக்கற்றம் பார்க்கும் இருளேபோல்" எனப் புதியதோர் உவமையைக் காண்கிறார் வள்ளுவர்(1186). சாயலும் நாணும் அவர் கொண்டார் கைம்மாறு நோயும் பசலையும் தந்து (1183) என்பது, கொள்வதூஉம் மிகைபடாது கொடுப்பதூஉம் குறைபடாது நிகழும் அரிய பண்டமாற்று. "புல்லிக்கிடந்தேன் புடைபெயர்ந்தேன் அவ்வளவில் அள்ளிக் கொள்வற்றே பசப்பு" (1187) என்பது திருவாய்மொழிக்கு ஈடிட்ட பெரியாரின் உள்ளத்தைக் கவர்ந்ததொரு குறள். "புல்லிக்கிடந்தேன் இத்யாதி" என்று இதனை அவர் எடுத்துக் காட்டுகிறார்.

பொழுதுகண்டு இரங்கலும் வள்ளுவர் வழங்கும் இன்ப அமுத விருந்தாகும். பிரிந்து நிற்கும் துன்பத்திலும், காதலர் உடன் இருப்பதாக உணர்த்தும் பாக்கள் 'ஈருடலும் ஓருயிரும்' என்ற ஐந்திணை அகவொழுக்கப் பெருவிளக்கமாகும். "நினைப்பவர் போன்று நினையார்கொல் தும்மல் சினைப்பது போன்று கெடும்" (1203) எனத் தலைவனும் நினைக்கின்றானோ என்கிறாள் தலைவி. ஓஓ என் நெஞ்சத்துஓ உளரே அவர் (1204) என்ற முழக்கில் என்ன காதல் பொங்குகிறது? கனவுநிலை யுரைத்தலில் இது வெள்ளமிடக் காண்கிறோம்.

இவ்வாறு, பிரிவிலும் இரங்கலிலும் இருத்தலாகிய முல்லை பிணியுண்டுகிடக்கும் புதுமையைக் காண்கிறோம். இவற்றின் இணைபிரியா ஒற்றுமையைத்தான் பரிமேலழகரும் பரிப் பெருமாளும் பேசுகின்றனர். இங்குத்தான் சோகரசமாம் அவலச்சுவை நம் மனத்தையும் நீர்ப்பிண்டமாக உருக்கு கின்றது. இந்த இணைபிரியா நிலையை முல்லைப்பாட்டில் காண்கிறோம். இதற்கு உரைகாண வந்தோர், "முல்லையில் பாலை வருமோ, நெய்தல் வருமோ" எனத் தடுமாறுகின்ற நிலை யையும் காண்கிறோம். இந்த உண்மையை மனத்தில் வைத்துப் பாடுகின்ற வள்ளுவர் பெருமையை என் என்பது? வடநூல் முடிபு என்பதால் வரலாற்று விளக்கம் இங்குத் தோன்றாது ஒழிகிறது. வள்ளுவர் அகத்துறையில் புதியதாகக் கண்டு பாடியதனைத் தமிழ் வரலாற்றோடு ஒட்டி ஆராய்வதே விளக்கம்

தருவதாகும். வடமொழிக்குப் போவானேன் ? எல்லா மொழியிலும் எந்த நாட்டிலும் கூடுதலும் பிரிவுமாகத்தானே காதல் கதை நிகழ்கிறது ! "அகம் ஐந்து" எனப் பேசிய நாட்டில் இந்த உண்மையை வாழ்க்கையோடொட்டி நிலைநாட்டி, ஐந்திணை மரபினையும் மறவாமையே இங்குள்ள பெருமை. இங்கு உள்ள நுட்பம் என்ன ? பிரிவு என்ற பழங் கொள்கையும், சொல்லுமே வருகின்றன. இரங்கல் என்ற கொள்கையும் சொல்லும் வருகின்றன. மடலேறுதல் பசலைபாய்தல் போன்ற பழைய வழக்குக்களும் ஒளிர்கின்றன. இவற்றோடு கற்பின் சிறப்பியல்பாம் முல்லை என்கிற இருத்தல் ஒழுக்கமும், ஒருயிர் ஈருடல் என்று வற்புறுத்திப் பலபடப் பாரித்துப்பாடும் முகத்தால், இக் கருத்துக்களை அழகுசெய்வதனையும் காண்கிறோம். ஈதே இங்குள்ள புதுமை.

## 11

"தும்மல்" என்றோம். தும்மலில் காதற் கதையை வைத்து விளக்குகின்றார் வள்ளுவர். இங்கு ஒரு புதுமையைக் காண்கிறோம் :

> "வழுத்தினா டும்மினே னாக வழித்தழுதாள்
> யாருள்ளித் தும்மினீ ரென்று" (1317)
>
> "தும்முச் செறுப்ப வழுதா ணுமருள்ள
> லெம்மை மறைத்திரோ வென்று" (1318)

என்ற குறள்களை அறியாதார் யார் ? இங்கே தோன்றுகிறது வள்ளுவர் கண்ட புது நுட்பம்.

கூடுதல், இரங்குதல், ஊடுதல் என்று மூன்றாகக் கூறுகின்றார் வள்ளுவர். அதிகார அமைப்புக்கள் இதனையே வலியுறுத்துகின்றன. பிரிவில் இரங்குதல் சோகரசமாக, அவலச்சுவையாக வளர்ந்துவரக் காண்கின்றோம். இருவேறு மனங்கள் ஒன்றுவதே காதல் வரலாறு. உயிர் ஒன்றானாலும் உடலம் இரண்டாக இருப்பதால் எழும் இடர்ப்பாடுகள் பல. இருவேறு நிலையில் உள்ள மனங்கள் வேறுபட்டு ஊடாடிநிற்கும். இதுவே ஊடல் நிலை. இவை ஒன்றனை ஒன்று தெள்ளத் தெளிய உணர்வதே உணர்தல்நிலை. இந்த உணர்வே

முல்லையின் விளக்கம்; கற்பின் திறம். முல்லை என்றால் கற்பு என்றன்றோ பொருள்? இந்த உணர்வின் பழுத்த நிலையே உண்மைக் கூடல். முதலெழுந்த கூடல் ஒரு புரட்சி என்றோம். அஃது ஈருயிரும் ஈருள்ளமும் ஒன்றாகும் உண்மைக் கூடுதலாகிப் பழுத்திடவேண்டும். "அவளே தானே ஆகிய நெறி" அது. எங்கே இதற்கு இடர்ப்பாடு எழுகிறது? ஈருடலமாய் இருக்கும் நிலையில் பிரிவு எழும்போதன்றோ இந்த இடையாட்டத்தில் ஊடாட்டம் எழுகிறது? "பிரிந்த பிரிவால் எழுவது ஊடல்" என்பர் பரிமேலழகர். ஊடல் என்பதனைத் தலைவனது அண்மையில் - எதிரில் - நிகழ்வதாகக் கூறுவதே மரபானாலும், அதன் அடிப்படையானது பிரிவிலும் இரங்கலிலும் உண்டு. பிரிவில் அழுகையும், இரங்கலில் அழுகையின் முதிர்ச்சியாகிய கையறுநிலையோடு இளிவரலும் மேல் ஓங்கிநிற்கும். இவற்றிடையே முளைவிடும் சிறு வெகுளி ஊடலில் முன்நிற்கும். உணர்வே இங்குத் தோன்றுவதோர் உண்மைத் தெளிவு; கற்பின் விளக்கம்; அன்பின் முல்லை. இதன் முதிர்ச்சியே கூடுதல் நிலையில் நகையாய் மலர்ந்து உவகையாய்க் கனிகிறது.

"ஊடல், உணர்தல் புணர்தல் இவைகாமம்
கூடியார் பெற்ற பயன்" (1109)

என ஒரு புது விளக்கம் காண்கிறான் வள்ளுவர்தம் தலைமகன்.

ஊடுதல் - ஊடாட்டம் - இருமன இடையாட்டம் - ஒருயிராய் முற்றிப் பழுக்கும் காட்சி - களிப்பு - இன்பம்—இந்த வரலாறே காமத்துப்பால். ஊடல், உணர்தல், புணர்தல் என்ற மூன்றும் ஊடலில் விளக்கமாக அமைவது தெளிவு. தாக்கணங் குறுத்தலால் எழுந்த புரட்சியின் விளைவு இஃது. ஊடுதலைப் புணர்ச்சி மகிழ்தலிலேயே இவ்வாறு வள்ளுவர் நினைவூட்டு வதன் கருத்து இஃதே ஆகும். கடைசி ஐந்து அதிகாரங்கள் இந்த ஊடுதலின் வீறுபாடுகள். 125-ம் அதிகாரத்திலிருந்தே இதனைப் பற்றிக் கூறத் தொடங்குகிறார்

"கலந்துணர்த்தும் காதலர்க் கண்டால் புலந்துணராய்
பொய்க்காய்வு காய்திஎன் நெஞ்சு" (1246)

என்றும்,

"புலப்பல் எனச்சென்றேன் புல்லினேன் நெஞ்சம்
கலத்தல் உறுவது கண்டு" (1259)

*என்றும்,*

"புலப்பேன்கொல் புல்லுவேன் கொல்லோ கலப்பேன்கொல்
கண்ணன்ன கேளிர் வரின்" (1267)

*என்றும்,*

"தினைத்துணையும் ஊடாமை வேண்டும் பனைத்துணையும்
காமம் நிறையவரின்" (1282)

*என்றும்,*

"ஊடற்கண் சென்றேன்மன் தோழி அதுமறந்து
கூடற்கண் சென்றதுஎன் நெஞ்சு" (1284)

*என்றும் வருபவை, பிரிவில் எழும் ஊடல் நிலையிலும் உள்ளம் ஒன்றுபட்டுக் கூடியிருத்தலை வற்புறுத்தல் காண்க. ஈதன்றோ கற்பின் சிறப்பியல்பாம் முல்லை? அவனில்லாதபோது கூடுதல் நிலையில் திளைத்து, அவனெதிரே ஊடுதல்நிலையில் மறித்துப் பின் கூடி மகிழ்கின்றமையைக் காண்கிறோம். இதனாலேயே ஊடலுக்கும் புணர்தலுக்கும் இடையே உணர்தல் கூறுகின்றார். பிரிவு நிலையிலும், இரங்கல் நிலையிலும் இந்த உணர்தலே கற்பின் பெருந்திறனாகக் காமத்துப்பாலில் விளங்குதல் காண்க.*

*நெஞ்சொடு புலத்தல், புலவி, புலவிநுணுக்கம், ஊடலுவகை என்ற அதிகாரத் தலைப்புக்களிலேயே புலத்தல் ஊடல் என்ற பகுதிகள் வரக்காண்கிறோம். மணக்குடவர் உரை எனத் திரு. செல்வகேசவராய முதலியார் காட்டியதன்படி, கடை ஐந்து அதிகாரங்களும் மருதமாதல் வேண்டும். அவ்வாறானால் புணர்ச்சி விதும்பலும் ஊடல் நிலை கூறியதே ஆம். 1282, 1284 என்று மேலே காட்டிய குறள்கள் இந்தக் கருத்தினை வற்புறுத்துகின்றன.*

*காதற்கதை ஒருவகையாகக் கூடுதலின் கதையே ஆம்; அஃதாவது முடிவினை நோக்க அவ்வாறாகும். மற்றொருவகையால் தொடக்க நிலையில் வைத்துக் கண்டால், அஃது ஊடலின் கதையாகும். புணர்ச்சி மகிழ்தலிலேயே ஊடுதல் கூறுவதனைக் கண்*

டோம் (1109). பொழுதுகண் டிரங்கலில் பனி அரும்பிப் பைதல்கொள் மாலை துனிஅரும்பித் துன்பம் வளர வரும் (1223) எனத் துனி அரும்புகிறது. நெய்தலாம் இரங்கலிலும் துனி வருவது காண்க. 125, 126 என்ற அதிகாரங்களிலும் ஊடலினைப்பற்றிக் கேட்டோம். ஓரோவழிக்கேட்ட ஊடல் 129, 130, 131, 132, 133 என்ற அதிகாரங்களில் முற்றிப் பழுக்கிறது. கல்தச்சன் எதிரே கல் கிடக்கிறது; உளிகொண்டு செதுக்குகிறான்; போராட்டம் போலத் தோன்றுகிறது; இந்த ஊடாட்டம் என்ன ஆகிறது? அழகிய சிலை வடிவம் தோன்றுகிறது. கற்றச்சன் கண்ட கடவுள் காட்சி கல்லொடு கல்லாய், ஒற்றுமை பெற்றுக் கலைப்பொருளாய் உயிர் பெற்றெழுந்து கற்றச்சன் இறந்தாலும் இறவாத நிலை எய்துகிறது. உலகிடை அன்பில் எழும் ஊடாட்டம் ஒற்றுமை இன்பமாகவே முடியும். இதனைத்தான் ஊடலுவகை என்று வள்ளுவர் பாடுகிறார்.

அடிப்படை யுண்மையில் ஈடுபடுவதால், ஊடுதலின் உண்மைநிலை விளங்குகிறது. புலவியிலேயே நகைச்சுவை ததும்பி உவகைக்கு வித்திடுதலைப் புலவி நுணுக்கத்தில் திருவள்ளுவர் புதுவழிகண்டு கூறுகிறார். பரத்தையர் பிரிவு கூறி மருதத்தினைப் பாடும் பழையமரபு வள்ளுவர் நூலில் காணோம். வரைவில் மகளிரைப் பழித்தவர் அந்தப் பழைய மரபினை எவ்வாறு கூறுதல் கூடும்? உரையாசிரியர்கள் இந்த நுட்பத்தினை இங்குக் கணிகையர் கூட்டம் கூறப்பெறவில்லை என விளக்கினாலும், சில இடங்களில் பழைய மரபினை வள்ளுவரிடமும் காண முயல்கின்றனர். பழக்கம் கொடியது.

பிணங்குதலின் அடிப்படை உண்மையைக் கண்டோம். அதிலோர் இன்பமும் உண்டு என்கிறார் வள்ளுவர்.

"நலத்தகை நல்லவர்க்கு ஏஎர் புலத்தகை
பூஅன்ன கண்ணார் அகத்து." (1305)

"துனியும் புலவியும் இல்லாயின் காமம்
கனியும் கருக்காயும் அற்று." (1306)

இவை புலவியை வாழ்த்துகிற வாழ்த்துரைகள். கற்றச்சன் சிற்றுளிகொண்டு செதுக்குவதனை வாழ்த்தாது இருக்க

*முடியுமா? கவ்வையை வரவேற்கிறார் வள்ளுவர்; புலவியை வரவேற்கிறார். துன்பமும் இன்பவாயிலாகிறது இவருக்கு.*

" புல்லா திராஅப் புலத்தை அவருறும்
அல்லல்நோய் காண்கம் சிறிது." (1301)

*அந்த நோயே இன்ப அன்பின் வெள்ளப் பெருக்கு.*

" இல்லை தவறவர்க் காயினும் ஊடுதல்
வல்லது அவரளிக்கு மாறு " (1321)

" தவறில ராயினும் தாம்வீழ்வார் மென்தோள்
அகறலின் ஆங்குஒன் றுடைத்து " (1325)

*என்பன தலைவியர் கண்ட முடிபு. ஈருயிரும் ஓருயிராய் நிற்கின்ற நிலை இஃது. இதனை உணர்ந்தால், புலவி நுணுக்கத்தில் வள்ளுவர் கண்ட புதுமை விளங்கும். ஆனால், புலவி உப்பே போன்றது; சிறிது மிகுந்தால் அனைத்தும் பாழாகும் (1302). முதிர்ந்த துனி யில்லையாயின் காமம் அழுகிய பழமாம். இளைய கலாமாகிய புலவி இல்லையாயின் கருக்காயாம் (1306). இரண்டு மனமும் அழிதலன்று காமம். அதனதன் தனிப்பெருஞ்சிறப்போடு ஒன்றுதலே இன்பமாம். இவள் அன்புருவினள்; இவன் அறிவுருவினன். இந்த அடிப்படை வேறுபாடு அழிதலாகாது; இரண்டும் ஒன்றுபடுதல் வேண்டும். இவை ஒற்றித்த நிலையில் ஒருமையில் இருமைச்சுவை தோன்றும்; புலவி தோன்றும்; நாணம் மிகும்; கூடுதல் இனிக்கும்; புலவி, வீழுநர்கண் நீரிடை நிழல்போல் இனிது(1309); ஒற்றுமை இல்லாத போதோ வள்ளி முதலரிந்தாற்போல முடியும் (1304). அல்லல்நோய் காண்கம் என்றாள் மனமொன்றிய நிலையில். அல்லல்நோய் அன்பின் துடிதுடிப்பாகையால், அன்பில்லாத போது புலந்தாரைப் புல்லாது விட்டபோது உண்மை நோயே யாகும் (1303).*

*இந்த நுட்பத்தினால் அன்றோ,*

" மலரினும் மெல்லிது காமம் சிலரதன்
செவ்வி தலைப்படு வார் " (1289)

என்று நயம்பாராட்டுகிருர் வள்ளுவர்? கூடுதலைத் தாமரைக் கண்ணுன் உலகு (1103) என்று புகழ்ந்தவர், இதற்கு ஏற்ப ஊடல் உவகையில் புதுநயம் கூறவந்து,

“ புலத்தலின் புத்தேள்நாடு உண்டோ நிலத்தொடு
நீரியைந் தன்ஞர் அகத்து ” (1223)

என்று பாடுகிருர். இருவர் உயிரும் ஒன்ருதலைச் சங்கப் புலவராம் செம்புலப் பெயல்நீரார்போல் நிலத்தொடு நீரியைந் தற்று என வள்ளுவர் விளக்கிக் கூறுவதனை மறத்தலாகாது.

“ உணலினும் உண்ட தறலினிது, காமம்
புணர்தலின் ஊடல் இனிது ” (1326)

என்ற அடிப்படை அனுபவம்கொண்டு விளக்குகின்ருர் வள்ளுவர். இல்லையாஞல் இங்கே புதுமை ஏது?

“ ஊடுதல் காமத்திற்கு இன்பம் அதற்குஇன்பம்
கூடி முயங்கப் பெறின் ” (1380).

என முடிக்கின்ருர் வள்ளுவர்.

பரத்தையர் பிரிவு அன்று மருதம். இரண்டுமனம் ஒன்று சேரும் நயப்பாட்டில் விளையும் இன்ப ஊடலே மருதம். இவ்வாறு எங்கும் காண்கின்ற காப்பியச் சுவையினைப் புலவி நுணுக்கமாகக் கூறி, ஊடுதலின் பெருமையாகத் திருவள்ளுவர் காமத்துப்பாலில் தாம் கண்ட புதுமையை விளக்குகிருர். முல்லையும் நெய்தலும் இரங்கலும் உணர்தலாக அமைகின்ற கற்பின் நுட்பத்தினை வள்ளுவர் வழியே விளக்கிஞேம். இவை மூன்றும் ஒற்றித்துநிற்பதால் வேறு பிரித்துக் கூருத அழகினை வியந்தோம். ஆஞல், தொல்காப்பியரும் அகத்திணையியலில் ஐந்திணை கூறிஞலும், பின் அதனை விரித்துக் கூறுவார் முல்லை முதலானவற்றை வேறு பிரித்துக் கூருமல் களவு கற்பு என்றே வகைசெய்து விரித்துரைக்கின்ருர். ஆதலின் இந்த நுட்பம் தொல்காப்பியத்தில் ஒருவகையாகக் கண்டதே எனலாம். ஆஞல், தொல்காப்பியர் மருதத்தினைப் பரத்தையர் பிரிவு கொண்டே அழகுசெய்கிருர்; விருந்தெதிர் ஊடாமை, புதல்வர் எதிர் ஊடாமை, பரத்தையர் ஒழுக்கத்தினை வெளிப்

*படையாகக் கூறுமல் உள்ளுறையால் கூறுதல் முதலிய பண்பாட்டினை வளர்க்கின்ருர்; ஆனல் அத்தகைய சூழ்ச்சிகள் ஒன்றும் செய்யாமலே மருதவாழ்வினைக் காதலின் அடிப்படையாம் ஊடல் வாழ்வின் வளர்ச்சியாய்க் கூடல் வாழ்வின் இனிமையாய்ப் புனைந்துரைக்கிருர்* **வள்ளுவர்.** *பரத்தையர் என்ற பேச்சே இங்கு இல்லே. ஈதே வள்ளுவர் இங்குச் செய்த புரட்சி. வாழ்க அந்தப் புரட்சி!*

" இன்பமும் துன்பமும் என்னும் இவையிரண்டும்
மன்பதைக் கெல்லாம் மனமகிழ-அன்பொழியாது
உள்ளி உணர உரைத்தாரே ஓதுசீர்
வள்ளுவர் வாயுரை வாழ்த்து."

—மதுரை அறுவைவாணிகன் இளவேட்டனர்

# வள்ளுவர் வழங்கும் வீடு

மொ. அ. துரை அரங்கசாமி

தமிழ்நாட்டுச் சுவடிச் செல்வங்களுள் தலைசிறந்தது திருக்குறள். தாமே அதற்கு உரியவர் என்னும் தமிழரே அல்லாமல், அயலவரும் உரிமை பாராட்டிப் பயன் எய்துதற்கு மிக்க துணையாவது இந்நூல். தான் தோன்றிய நாள் முதல், தலைமுறை தலைமுறையாக, எத்துணையோ நாட்டவரும் மரபினரும் மொழியினரும் சமயத்தினரும் நுகர்ந்து பயன் பெறுமாறுசெய்தும் தேய்வும் திரிவும் மிகுதியின்றி, அசல் அழியாச் செல்வமாகத் திகழ்வது திருக்குறள் ஒன்றேயாகும். இதனை அளித்த செம்மலார் தெய்வப்புலமைத் திருவள்ளுவர் என்று வழங்கும் சிறப்புடையார். இவர், தமிழ்நாட்டுப் பெருஞ்சான்றோர் வரிசையில் தலைமை பூண்டு நிற்பதோடன்றி, உலகப் பெருஞ்சான்றோர் வரிசையிலும் தலைமைபூண்டு நிற்பவர் என்பது உயர்ந்தோர் துணிபு. 'பாம்பறியும் பாம்பினகால்' என்பது பழமொழி: தெய்வப்புலமைத் திருவள்ளுவர் மாண்பினை அமரகவி பாரதியார் அறிந்து கூறியிருப்பது முழுதும் உண்மையாகவே கொள்ளத் தகுவதன்றோ!

> "வள்ளுவன் தன்னை உலகினுக் கேதந்து
> வான்புகழ் கொண்ட தமிழ்நாடு"

என்று பாரதியார் கூறியிருப்பதில், உலகினுக்கே ஒரு புலவராய்த் திகழத் திருவள்ளுவரைத் தந்தமையாலன்றோ, தமிழ்

நாடு மிக்க புகழைப் பெறுவதாயிற்று என்ற உண்மை உணர்த்தப்பட்டதன்றே !

அண்மைக் காலத்துப் பாரதியாரேயன்றி, ஆன்றவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர் பலரும், திருக்குறளையும் திருவள்ளுவரையும் ஒருமுகமாகப் பண்டைக்காலத்திலேயே பாராட்டிப் புகழ்ந்துள்ளனர் என்பது போற்றியுணர்ந்துகொள்ளும் தன்மைத்தேயாகும்.

மதுரைத் தமிழ் நாயகனார் என்பார் பண்டைத் தமிழ்ச் சான்றோருள் சிறப்பும் தலைமையும் சேர்ந்திலங்கிய ஒருவர். தமிழ்மொழிப் புலமையில் நாயகராகத் தலைசிறந்து நின்றவர் இவர் என்பது இவருடைய பெயராலேயே உள்ளங்கை நெல்லிக்கனியாக விளங்கும். இவர் ஓதாத நூலில்லை. ஐயந்திரிபற எல்லா நூல்களையும் ஓதியுணர்ந்த இவர்,

> "எல்லாப் பொருளும் இதன்பால் உளஇதன்பால்
> இல்லாத எப்பொருளும் இல்லை"

எனத் திருக்குறளைச் சுட்டிச் சிறப்புரை பகர்ந்திருக்கிறார். இவ்வாறு இவர் கூறியிருப்பதன் கருத்துநயம் உணர்ந்து இன்புறற்பாலது: 'நூல்கள் எண்ணிறந்தனவாக உள்ளன. ஆனால், ஒவ்வொரு நூலும் ஒன்றே, சிலவோ கருத்துக்களையே உணர்த்துகின்றது. திருக்குறளோ எனின், வேறுவேறாக, வேறுவேறுபட உணர்த்தும் எல்லா நூற் கருத்துக்களையும் எழில்பட எடுத்தியம்புகின்றது. இத் திருக்குறளில் இல்லாத ஒரு கருத்தை வேறு எந்த நூலிலும் காணவே முடியாது'— இவ்வாறு, தமிழ்நூற்கடலைக் கரைகண்டு உணர்ந்த மதுரைத் தமிழ் நாயகனார் உணர்த்தியிருப்பது, நூல்களுள் தலையாயதும் சிறந்ததும் திருக்குறளேயாகும் என்னும் தேற்றத்தைக் குறிப்பதேயாகும்.

> "வாலறிவின்
> வள்ளுவரும் தம்குறள்வெண் பாவடியால் வையத்தார்
> உள்ளுவஎல் லாம் அளந்தார் ஓர்ந்து"

என்று பரணரும்,

" ஆயிரத்து முந்நூற்று முப்ப தருங்குறளும்
பாயிரத்தி னோடு பகர்ந்ததற்பின்—போயொருத்தர்
வாய்க்கேட்க நூல்உளவோ மன்னு தமிழ்ப்புலவ
ராய்க்கேட்க வீற்றிருக்க லாம் "

என்று நத்தத்தனாரும்,

" சாற்றிய பல்கலையும் தப்பா அருமறையும்
போற்றி உரைத்த பொருளெல்லாம்—தோற்றவே
முப்பால் மொழிந்த முதற்பா வலர்ஒப்பார்
எப்பா வலரினும் இல் "

என்று செயலூர்க் கொடுஞ்செங்கண்ணனாரும், திருவள்ளுவரையும் திருக்குறளையும்பற்றிச் சிறப்பித்துக் கூறியிருக்கும் உரைகள், மதுரைத் தமிழ்நாயகனார் கூற்றுக்கு அரண் செய்வன ஆகும்.

'தண்டமிழ் ஆசான்' என்னும் தனிப்பெருஞ் சிறப்புடைய மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் என்பார், காவிரிப்பூம்பட்டினத்துப் பூத சதுக்கத்துப் பூதம் எனப்பெறும் தெய்வத்தின் வாய்மொழியாகத் "தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள், பெய்யெனப் பெய்யும் பெருமழை என்றஅப் பொய்யில் புலவன்" என்று கூறுமிடத்துத் திருக்குறளின் நடுநாடியாகத் திகழும் திருக்குறளை அப்படியே எடுத்தாண்டு, அதனை அருளிச் செய்த திருவள்ளுவர் பெருமானைப் பொய்யில் புலவன் எனப் புகன்றிருப்பது, அவர்தம் நூலுள் ஒரு குறளேனும் ஐயந்திரிபான பொய்க்கருத் துடையதன்று; எல்லாக் குறள்களும், ஐயத்தின் நீங்கிய தேற்றமும், திரிபின் நீங்கிய உண்மையும் பொருந்தியனவே என்பதை வெள்ளிடை மலையாக விளக்குவதாகும்.

" கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள் "

என இடைக்காடனாரும்,

இன்னும் சிறக்க,

" அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள் "

என ஔவையாரும் வியந்துரைத்திருப்பன, இத் திருக் குறளின் முழுப்பயனும் பெறவிரும்புவார் அதனை எவ்வளவு ஆழ்ந்து பயிலுதல்வேண்டும் என்பதை வலியுறுத்துவன ஆகும்.

ஈண்டு எடுத்தோதப்பெற்ற சான்றோர் அனைவரும் திருவள்ளுவரோடு ஒருகாலத்தவரா, பிற்காலத்தவரா என்று கால ஆராய்ச்சியில் புகுந்து, ஒருகாலத்தவரானால் அவருரை கொள்ளத்தக்க தென்றும், பிற்காலத்தவரானால் அவருரை தள்ளத்தக்க தென்றும் கருதுவது அறிவுடைமை ஆகாது. எக் காலத்தவராயினும், திருவள்ளுவர் அருளிய திருக்குறளைப் பலகால் ஓதியுணர்ந்து முடிபு கூறுவாராயின், அவருரை பொன்னேபோற் போற்றுதற்கு உரியதேயாகும். அவ்வாறு போற்றின், பெரும்பயன் பெறலாம். இஃதன்றிக் கால ஆராய்ச்சியிலேயே தம் வாழ்க்கையைச் செலவிட்டுப் பயனடையார் முடிவு, செற்றையைக் குவிப்பதற்கே உழைப் பெடுத்துக்கொண்டு குளிர்காயாது மடிந்தவர் கதையாகும்.

"மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் பேசுவதால் மகிமை இல்லை; திறமான புலமை எனில் அயல்நாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும்." ஆம்! இவ்வுரைக் கிணங்க, அயல் நாட்டுச் சான்றோர் பலர், திருவள்ளுவரைப் பாராட்டியும், திருக்குறளைத் தத்தம் நாட்டு மொழியில் பெயர்த்தும் போற்றியும் பெரும்பயன் அடைந்திருக்கின்றனர்.

கிரீக்கு, இலத்தீன் போன்ற பண்டைய மொழிகளிலும், ஆங்கிலம், பிரெஞ்சு போன்ற பிற்கால மொழிகளிலும் புலமை சான்ற ஜி. யூ. போப்பையர் என்ற மேல்நாட்டார், நந்தம் தமிழ்நாட்டில் குடியேறித் தமிழ் நூல்களையெல்லாம் முறையாக ஓதித் தமிழ்மொழியிலும் புலமை சான்று, "உலகம் பெற்ற பேரறிஞர்களுள் திருமயிலை நெசவுக்காரரும் ஒருவர் என்பதில் ஐயம் சிறிதுமில்லை. முற்றமுடிந்ததாய் அவர் படைத்த ஒரே நூலாகிய திருக்குறள், காலச் சுழலில் அகப்பட்டும் கறை சிறிதும் அடையாமல், கருத்தை ஈர்க்க வல்ல எவ்வகைப் பாடபேதமும் இன்றித் தலைமுறை தலைமுறையாக வந்துள்ளது. நூற்சிறப்பில், அது, மற்றெல்

லாத் தமிழ் நூல்களையும் தாழ்த்தித் தான் உயர்ந்து நிற்கின்றது" என்று கூறியிருக்கின்றார் என்றால், ஈதொரு சான்றே அமையும், அயல்நாட்டார் திருக்குறளுக்கு வணக்கம் செய்திருக்கின்றனர் என்பதற்கு!

திருக்குறளை, வீரமாமுனிவர் இலத்தீன் மொழியிலும், டாக்டர் கிரால் என்பார் இலத்தீன் ஜெர்மன் மொழிகளிலும், இ. ஏரியல், பி. ஜி. டி. டுமாஸ், எம். லெமரேஸ், லூயி ஜெகோலியா, ஜி. பாரிகோபண்டெனோ உள்ளிட்டோரிற் சிலர் முழுமையாகவும், சிலர் அரைகுறையாகவும் பிரெஞ்சு மொழியிலும், எம். எப். கேப்பர்ஸ், பிரெடிரிக் ரக்கர்ட் உள்ளிட்டோர் அவ்வாறே ஜெர்மன் மொழியிலும் மொழி பெயர்த்துத் தத்தம் நாட்டவரைப் பயனடையச் செய்திருக்கின்றனர். இன்னும், ரெவரெண்டு எலிஜா ஹூல், ரெவரெண்டு டபிள்யூ. எச். ட்ரூ, சார்லஸ் ஈ. கவர், ரெவரெண்டு ஈ. ஜே. ராபின்சன், ரைட் ரெவரெண்டு ராபர்ட் கால்டுவெல், எம். ஏரியல், டாக்டர் பார்த், ரெவரெண்டு பர்சிவல், பேராசிரியர் விண்டர்னிட்ஸ், ரெவரெண்டு ஜே. லாஸரஸ்போன்ற அயல் நாட்டுப் பெருஞ் சான்றோர்களெல்லாம் திருவள்ளுவரையும் திருக்குறளையும் போற்றிப் புகழ்ந்துள்ளனர்.

நம் பாரத நாட்டு மொழிகளுள் சமஸ்கிருதம், தெலுங்கு, மலையாளம், கன்னடம், ஹிந்தி முதலிய மொழிகளிலும் திருக்குறளின் மொழிபெயர்ப்பு உண்டு.

தமிழில் தோன்றி, மேல் நாடாம் அயல் நாட்டு மொழிகளிலன்றி நம் நாட்டு அண்டை மொழிகளிலும் மொழி பெயர்த்துப் பாராட்டப் பெற்றிருக்கும் இத் தகைய சிறப்பு, வேறு எம் மொழியிலும் சமயச் சார்பற்ற எந் நூலுக்கும் இல்லவேயில்லை என்பது பன்மொழியும் பயின்றார்தம் துணிபுரையாகும்.

இவ்வாறாகவும், "அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என வகுத்து, அறம், பொருள், காமம் என்ற மூன்று உறுதிப் பொருள்களைமட்டும் அன்றே திருக்குறள் உணர்த்துகின்றது? 'அறம் பொருள் இன்பம் வீடு அடைதல்

நூற்பயன்' என அறைந்திருக்கின்றனரே! அறம் முதலிய நான்கு உறுதிப்பொருள்களையும் அறிவிப்பதன்றோ நூலென அழைப்பதற்கு உரியது! நான்கும் கூருது, மூன்றே கூறும் திருக்குறள், நூலாமாறு யாங்ஙனம்? ஆனபின், 'நூல்களுள் சிறந்ததும் தலையாயதும் திருக்குறள்' என்று கூறுவது எவ்வாறு அறிவுடைமையாகும்?" என்று ஒரு சிலர் கூற, அவர் கூற்றைக் கேட்கும் பலர், தம் மதி மருண்டு, தமக்கிருக்கும் மதிப்பையும் பறிகொடுத்துப் பயனடையாது ஏமாற்றம் உறுகின்றனர். பால்கள் மூன்ருகக் காணப்படுவதுமட்டுமே கொண்டு, நான்கு பொருள்களும் திருக்குறளில் இல்லையென்பார்க்கு, அவை நான்கும் இதன்பால் உள என்று காட்டி அவரைத் தெளிவிப்பது நம் கடமையாகும்.

'அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் எனக் கூறியிருப்பதுபோன்று, வீட்டின்பால் எனத் தனியே கூறியிருக்க வேண்டும்; அவ்வாறு திருக்குறள் கூறவில்லை' என்பது உண்மையே. அறம் முதலிய நான்கனையும் கூறுவதே நூல் எனப்படும் என்பதும் உண்மையே. ஆனால், பால்கள் மூன்ருக வகுத்துக்கூறும் திருக்குறள், நான்காவதான வீட்டைப் பற்றி ஒன்றுமே கூறவில்லை என்பது, அதனை நுனிப்புல் மேய்தலாகப் படித்தவர் கூறும் கூற்ருவதன்றி, ஆழ்ந்து பயின்று சுவைத்தவர் கூறும் கூற்ருவதில்லை. ஆழ்ந்து பயிலாதவர்க்குத் திருக்குறள் 'நாற்பொருள் பயக்கும் நடைநெறி'யுடையதாக இல்லை என்ற திரிபுணர்ச்சி ஏற்படுவது இயல்பேயாகும் என்பதைப் பண்டைச் சான்ருேர்களே எண்ணி உணர்ந்திருக்கின்றனர்; திருக்குறளைப் பலகால் ஓதி, வீடுபற்றி என்னவெல்லாம் உணர்த்தவேண்டுமோ, அன்னவெல்லாம் அஃது உணர்த்தியிருக்கின்றது என்று தெளிந்து, தாம் தெளிந்த உண்மையை, மற்றவரும், அதைப் பயிலும் முன்னரே அறிந்து, திருக்குறளில் ஈடுபாடுகொண்டு, அதைப் பயின்று பயனடைய வேண்டும் என்ற பெருநோக்கத்தால், "திருவள்ளுவர், முப்பாலில் நாற்பால் மொழிந்திருக்கின்றனர்; திருக்குறள் அறம் முதலிய மூன்றனேடு, நாலாவதாகச் சிறந்த சிறப்பென்னும் வீடும் மொழிந்திருக்கின்றது. யாம் பயின்று உணர்ந்தேம்.

நீவிரும் பயின்றுணர்ந்து பயனடைமின்" என்று உணர்த்தியிருக்கின்றனர்.

எல்லாம் வல்ல முழுமுதற் கண்ணுதற் பெருமானே இறையனுர் என்னும் புலவராக வந்து பாடிய பாடற்குக் குற்றம் கூறியதும், அவ் விறையனுர், தாம் கண்ணுதற் பெருமானுர் என்பதை உணர்த்தத் தம் நெற்றிக் கண்ணினைச் சிறிதே காட்டக் கண்ட நக்கீரர், "உம்பரார் பதிபோ லாக (உடம்பு) முற்றும் நீர் கண்ணுனும் மொழிந்தநும் பாடல் குற்றம் குற்றமே" என்று அஞ்சாது கூறினர் என்பர். அத்தகைய அஞ்சா நெஞ்சமும், வாக்கு வன்மையும் பெற்ற நக்கீரனுரே, தேவன்

"ஆறு அறமுதலாம் அந்நான்கும்—ஏனேர்க்கு
ஊழின் உரைத்தான்"

என்று கூறியிருக்கின்றுர் என்றுல், திருவள்ளுவர் வீடும் உணர்த்தியிருக்கின்றுர் என்பதைக் காட்ட வேறு சான்றென்றும் வேண்டற்பாலதன்று என்று கூறிவிடலாம்.

மாமூலனுர் என்னும் மாண்புடைப் புலவர்,

"அறம்பொருள் இன்பம்வீ டென்னுமந் நான்கின்
திறம்தெரிந்து செப்பிய தேவு"

என ஓதித் திருவள்ளுவர் நான்கன் திறத்தையும் செப்பியிருக்கிறுர் என்பதனேடு அமையாமல், அவர் தெய்வமும் ஆவார் எனத் தெரிவித்திருப்பது திருக்குறளில் எப்படிப்பட்டவரையும் ஈடுபடுத்திவிடுவதாகும்.

கீரந்தையார் என்பார்,

"முப்பாலில் நாற்பால் மொழிந்தவர்"

என்று கூறித் திருவள்ளுவர், தாம் அருளியிருக்கும் மூன்று பால்களிலேயே, நான்கு பால்களையும் நவின்றிருக்கின்றுர்; அஃதாவது, வீடும் விளம்பியிருக்கின்றுர் என்று விளக்கியுள்ளார்.

நரிவெரூஉத் தலையார் என்பார், 'பழைய நூல்கள், அறம் முதலிய நான்கனையும் அறைந்துள்ளன எனினும், அவற்றை,

மக்கள் தெளிய உணருமாறு தெரிவித்தில; ஆனால், திருவள்ளுவர் அந் நான்கையும் யாவரும் தெளிய உணருமாறு திருக்குறள் செய்திருக்கிறார்' என்னும் கருத்துடன்,

> " இன்பம் பொருளறம் வீடென்னும் இந்நான்கும்
> முன்பறியச் சொன்ன முதுமொழிநூல்—மன்பதைகட்(கு)
> உள்ள அரிதென்(று) அவைவள் ளுவர்உலகம்
> கொள்ள மொழிந்தார் குறள் "

என்றும், இவ்வாறே, கோவூர் கிழார், கொடிஞாழல்மாணி பூதனார் முதலியோர், நாற்பாலும் திருவள்ளுவர் நவின்றுள்ளார் என்றும் கூறியிருப்பனவெல்லாம், அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கு உறுதிப்பொருள்களையும் திருவள்ளுவர் தம் திருக்குறளில் உணர்த்தியிருக்கின்றார் என்பதற்குத் தக்க சான்றுகளாம்.

திருக்குறளுக்குப் பண்டே பலர் உரை எழுதியிருக்கின்றனர். இன்றும் பல்லோர் அதற்கு உரை எழுதியுள்ளனர். அன்றும் இன்றும் தோன்றியுள்ள எல்லா உரைகளுள்ளும், ஈடெடுப்பு அற்று இலங்குவது பரிமேலழகர் உரையொன்றே என்பது, நூற்கு உரை எழுதும் நுணுக்கம் நன்கு அறிந்தோர் துணிபாகும். எல்லா நூற்கருத்துக்களும் திருக்குறளின்பால் உள்ளன என்பதற்கேற்ப, அவ்வாறு வருமிடங்களில் அவை இன்னின்ன நூற் கருத்துக்கள் என்று சுட்டுவதும், வடநூலார் மதம்பற்றி இவ்வாறு திருவள்ளுவர் ஓதியிருக்கின்றார் என்று சிற்சில இடங்களில் சுட்டுவதும் கண்டு, அவற்றை அவர் சுட்டும் கருத்தின் உண்மை உணரலாற்றாது குற்றம் காண்பதன்றி, வேறு எவ்வகையான குற்றமும் அவர்பால் எவரும் காணல் இயலாது. பிறர் மதங்களைக் கூறவந்த இடங்களில், 'தமிழ் நூல்களொடும் பொருந்த இவ்வாறு ஆசிரியர் கூறியிருக்கின்றனர்' என்று அவர் விளக்கிக் கூறியிருப்பதை நோக்கினால், பரிமேலழகர் பல்வேறு சமயப் பாகுபாட்டினையும் நன்குணர்ந்தவர் என்பதையும், தமிழ் நூல்களால் தமிழர் சமயம் என வேறு பிரித்துக் கொள்ளத்தகுவதொன்று உண்டு என உணர்த்த முயன்றவர் என்பதையும், குன்றின் மேலிட்ட விளக்காக நன்குணரலாம்.

"பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ பாரிலுள்ள
நூலெல்லாம் வள்ளுவர்தம் நூலாமோ—நூலாற்
பரித்தஉரை யெல்லாம் பரிமே லழகர்
தெரித்தஉரை ஆமோ தெளி"

எனப் பண்டைச் செய்யுளொன்று திருவள்ளுவர் அருளிய திருக்குறளின் சிறப்பையும், பரிமேலழகர் உரைச்சிறப்பையும் உணர்த்துகின்றது. திருவள்ளுவரே, மீண்டும் பரிமேலழக ராகத் தோன்றித் தம் நூலுக்குத் தாமே உரைகண்டார் என்ற வரலாறு ஒன்றும் உண்டு.

எனவே, உரையாசிரியர்கள் வரிசையில் தலைமைபெற்று வீற்றிருப்பவர் பரிமேலழகர் என்பது அறிவுடையார் துணிவாதல் அறியலாம். திருக்குறளுக்கு உரையெழுதப் புக்கு, முன்னர் உரைப்பாயிரம் உரைக்க முற்பட்ட பரிமேலழகர், "இந்திரன் முதலிய இறையவர் பதங்களும், அந்தமில் இன்பத்து அழிவில் வீடும், நெறியறிந்து எய்துதற்குரிய மாந்தர்க்கு உறுதியென உயர்ந்தோரான் எடுக்கப்பட்ட பொருள் நான்கு. அவை அறம், பொருள், இன்பம், வீடு என்பன. அவற்றுள், **வீடென்பது சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்து** ஆகலின், துறவறமாகிய காரணவகையாற் கூறப்படுவதல்லது இலக்கணவகையாற் கூறப்படாமையின், நூல்களாற் கூறப் படுவன ஏனை மூன்றுமேயாம்..." என்று எழுதியுள்ளார்.

ஈண்டு எடுத்துக் காட்டிய அவர் கூற்றுப்படி, வீடென்பது எந்நூலானும்உணர்த்தலாவதொன்றுஅன்று என்பதும்,காரண வகையால்மட்டுமே உணர்த்தலாவதொன்று என்பதும் துணி யப்படும். எந் நூலானும் இலக்கண வகையால் உணர்த்தப் படாதது வீடாயின், திருவள்ளுவர், இலக்கண வகையால் வீடு உணர்த்தவில்லை என்று குற்றங் கூறுவது பொருந்தாது. துறவறமாகிய காரணவகையால்மட்டும் வீடு உணர்த்தப் படுவதாயின், துறவறவியல் என ஓரியல் வகுத்துக் கூறியிருக் கும் திருவள்ளுவர், அதை அவ்வகையால் உணர்த்தியே யிருக் கின்றார் என்றுகொண்டு, திருக்குறள், மூன்றனோடு நான்காவ தான வீடும் உணர்த்தியே யிருக்கின்றது என்று உடன்படல் வேண்டும்: பொதுவகையாக நோக்குவோமானால், பாயிரமும்

துறவறவியலும் வீடுபற்றிய கருத்துக்களையே உணர்த்தலைக் காணலாம். அவற்றுள்ளும், பாயிரத்துக் கடவுள் வாழ்த்தும், அறன்வலியுறுத்தலும், நீத்தார் பெருமையும், துறவற இயலுள் இறுதி நான்கதிகாரங்களும் சிறப்பாக வீடுணர்த்தும் பகுதிகளாகும். அவற்றை ஓதியுணர்ந்து, உணர்ந்தவாறு ஒழுக வல்லார், வேறொரு நூலும் பயிலுதலின்றியே வீடெய்துவர் என்பது திண்ணம். எனவே, ஏனைய நூல்கள்—வீடுணர்த்தும் நூல்கள்—வீட்டை எவ் வகையால் உணர்த்த முடியுமோ, அவ்வகையால் திருக்குறளும் உணர்த்தியிருக்கின்றது என்பது தேற்றம். அவ்வாறாயின், "திருக்குறள் வீட்டை உணர்த்தவில்லை; வீட்டுப்பால் என ஒரு பாலைத் தனியே வகுத்துக் கூறவில்லை; ஆதலின், நான்கு உறுதிப் பொருளும் நவிலவில்லை. ஆகவே, அஃது ஒரு நூலாமாறு எங்ஙனம்?" என்று கூறுவது எவ்வாறு பொருந்தும்?

இனி,

"ஈதலறம் ; தீவினைவிட் டீட்டல்பொருள் ; எஞ்ஞான்றும்
காதல் இருவர் கருத்தொருமித்(து)—ஆதரவு
பட்டதே இன்பம் ; பரனைநினைந்(து) இம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு"

என்ற ஒரு நேரிசை வெண்பாவால், நான்கு பொருள்களின் இயல்பையும், ஔவையார், சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல் என்ற அழகு பொருந்த உரைத்திருத்தலைக் காணலாம். திருக்குறளை ஔவையாரிடம் காட்டி, அது வீடுணர்த்தவில்லையே என்று குற்றஞ் சாட்டினார்க்கு, அவர், அதை ஒரு முறை புரட்டிப் பார்த்துவிட்டு, "நான்கு பொருளையும் திருக்குறள் நவிலுகின்றதே! அது கூறும் நான்கு பொருள்களின் சுருக்கம் இதுவாகும்" என்று இவ் வெண்பாவைப் பாடினார் என்று அறிவுடையோர் பகர்வர். பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் அறநெறி நின்று, அவ் வறத்திற்கு உறுதுணையான பொருளைத் தீவினையின் நீங்கி ஈட்டி, தான் விரும்பும் காதலி, தன்னை அவ்வாறே விரும்ப, தான் அவள் என ஈருடலால் வேறுபட்டவர், கருத்தொருமித்து அன்பால் ஒன்றுபட்டு, ஒருயிராய் நிறைவு பெற்று, இன்பம் எய்ந்து, பின் உலகி

யல் பற்றிய இம் மூன்றும் நிலையில்லாதவை என்று உணர்ந்து, இவற்றிலிருந்து பற்று நீங்க இறைவனிடம் பற்றுவைத்துப் பயின்று, பயிற்சி முதிர்ச்சியால் உலகியற்பற்று அறவே நீங்கி, இருவரும் ஒருங்கே துன்பம் முற்றும் நீங்கிப் பேரின்பநிலை எய்துவதே வீடாகும்" என்ற பொருளுடைய வெண்பாவில், பெருநூலாம் திருக்குறளின் பொருள் முழுதும் ஔவையார் பிழிந்துவடித்துத் தந்திருத்தல் உணரலாம். இதில், பரனைப் பற்றாக நினைந்து, அறம், பொருள், இன்பம் இவற்றைப் பற்றாக நினைந்த நினைவிலிருந்து நீங்கித் துன்ப நீக்கமும் இன்பப் பேறும் ஒருங்கே எய்துவதே பேரின்பமான வீடாகும் என்று தெளிவிக்கப்பட்டுள்ள கருத்து, "பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு" (கு. 350) என்ற குறளை யும், வீடுபற்றிக் கூறப்பெற்றிருக்கும் ஏனைய குறள்களையும் கண்டு கூறியதேயாகும் என்பது வெளிப்படை.

தமிழ் மொழியில் 'வீடு' எனப்படுவது, வடமொழியில் 'மோக்ஷம்' எனப்படும். இவ் விரண்டு சொற்களும் 'விடுதல்' என்ற பொருளையே உணர்த்தும். 'தர்மார்த்த காம மோக்ஷம்' என்ற வடநூல் வழக்கிலோ, 'அறம் பொருள் இன்பம் வீடு' என்ற தமிழ் நூல் வழக்கிலோ, மோக்ஷம், வீடு என்பன விடுதலாற்பெறும் பேரின்பத்தையே உணர்த்தும் என்பர். ஆனால், இத்தகைய பொருளில் 'வீடு' என்னும் சொல் திருவள்ளுவரால் திருக்குறளில் யாண்டும் ஆளப்படாதது ஒரு புதுமையாகவே உள்ளது. "நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின் வீடில்லை நட்பாள் பவர்க்கு" (கு. 791) என்ற ஒரு குறளில்மட்டுமே 'வீடு' என்னும் சொல் ஆளப்பெற்றிருக்கின்றது. ஈண்டு, 'வீடு' என்பது, 'விடுதல்' அல்லது 'நீங்குதல்' என்ற பொருளைமட்டுமே உடையது. ஒருவரை அல்லது ஒன்றைவிட்டு நீங்குதல் என்று வரும் பொருளுடைய இவ் வீட்டைத் 'தீர்தல்' (தொல். 562) என்ற சொல்லால் தொல்காப்பியர் குறித்துள்ளார். இவ்வாறு ஒரு பொருளைவிட்டு நீங்குதல், அல்லது நீங்குதலால் எய்தும் இன்பம், தமக்கு உடன்பாடன்று என்பதை உணர்த்தவோ என்னவோ, நான்காக எண்ணப்படும் தொடரில் வரும் 'வீடு' என்ற சொல்லை, வீட்டின்பம் ஆகிய உறுதிப்பொருளைக்

குறிக்கத் திருவள்ளுவர் ஆளவில்லை என்று கருத வேண்டியிருக்கின்றது.

பிரம்மசரியநிலை நின்று ஓதவேண்டுவன அனைத்தும் ஓதியுணர்ந்து, பின் மணம்பூண்டு மனைவியோடு இல்லற நெறி நின்று, அதன்பின் மக்களையும் மனையையும் பொருளையும் துறந்து மனைவியொடு காடு புகுந்து ஆண்டு மனைவியை விட முயலும் வானப்பிரத்த நிலையில் நின்று, இறுதியில் மனைவியையும் விட்டுச் சந்நியாசம் என்னும் துறவுநிலை நின்று, பின் உடல் நீங்கி ஒருவன் எய்தும் நிலையே மோக்ஷம் அல்லது வீடு என்னும் பேரின்பம் என்று பெரும்பான்மையோர் கருதுவர். இவ்வாறு நால்வகை நிலை நின்று வீடு எய்துதற்குத் தகுதியுடையோர் அந்தணர், அரசர், வணிகர் என்ற மூவருணத்தினரே என்றும், இனி, வேளாளருள் உயர்ந்தோரும் அதற்கு உரியோர் என்றும் அன்னோர் அறைவர். வீடென்பது ஒருலகம் என்றும், ஒருவகை நிலையென்றும் இருவகையாகக் குறிப்பதுண்டு. வீடெய்தும் தகுதி பெற்றோர், உலகில் உடலோடு கூடி வாழும் வரையில் சீவன்முத்தர் என்றும், உடல் நீங்கிய பிறகு விதேகமுத்தர் என்றும் அழைக்கப்பெறுவர். பெண்டிர்க்கு வீடு இல்லை என்பாரும், உண்டு என்பாரும் இருவகையர் உளர். இவ்வாறெல்லாம் உரைக்கப்பெறும் வீட்டியல்பினைக் குறித்துத் திருவள்ளுவர் கூறியிருப்பதை இனி ஆராய்வோம்:

உறுதிப் பொருள்களுள் ஒன்றாகவைத்து எண்ணப்படும் சிறப்புடைய அவ் வீட்டினை, 'நிலம்' (கு. 3) என்றும், 'யாண்டும் இடும்பை இன்மை' (கு. 4) என்றும், 'இருவினையும் சேராமை' (கு. 5) என்றும், 'நீடுவாழ்தல்' (கு. 6) என்றும் 'பிறவிப் பெருங்கடல் நீந்துதல்' (கு. 10) என்றும், 'வரன் என்னும் வைப்பு' (கு. 24) என்றும், 'சிறப்பு' (கு. 31, 358) என்றும், 'வாழ்நாள் வழியடை' (கு. 38) என்றும் 'அவ்வுலகம்' (கு. 247) என்றும், 'வானோர்க்கு உயர்ந்த உலகம்' (கு. 346) என்றும், 'பிறப்பறுத்தல்' (கு. 349) என்றும், 'பற்றுவிடல்' (கு. 350) என்றும், 'இன்பம்' (கு. 352) என்றும், 'வானம்' (கு. 353) என்றும், 'பிறவாமை'

(கு. 362) என்றும், 'தூஉய்மை' (கு. 364) என்றும், 'பேரா இயற்கை' (கு. 370) என்றும் திருவள்ளுவர் பலவாறாகக் குறித்துள்ளார். இவற்றையெல்லாம் வகைப்படுத்தி ஆராயுமிடத்துத் திருவள்ளுவர் கருதும் வீடு இன்னது என்று துணியலாம். நிலம் (கு. 3), வைப்பு (கு. 24), உலகம் (கு. 247, 346) என அது கூறப்படுதலால், காணப்படும் இவ் வுலகம் போன்றதோர் உலகமே வீடென்னலாம். வானம் (கு. 353), வானோர்க்கு உயர்ந்த உலகம் (கு. 346) எனப் படுதலால், அது, 'மேலே உள்ள ஓர் இடம்; வானவர் உறையும் மேலுலகத்தினும் மேலே உள்ள ஓர் இடம்' என்னலாம். இனி, உலகம் என்பதை ஒருவகை நிலை எனக் கொண்டு, மேம்பட்ட நிலைகளுள் மிக மேம்பட்ட நிலை அஃது எனினும் அமையும். அவ் வுலகில் அல்லது அந்நிலையில், நல்வினையும் தீவினையும் தம் பயன் தருதற்கு உளவாகா (கு. 5); காரணகாரியத் தொடர்ச்சியாய்க் கரையின்றி வரும் பிறவிகள் கடக்கப்பெறும் (கு. 10)) ; உயிர் யாக்கையோடு கூடும் நாள் வரும்வழி அடைபடும் (கு. 38); பிறவி அறும் (கு. 349); மீண்டும் பிறவாமை ஏற்படும் (கு. 362); எஞ் ஞான்றும் ஒரு தன்மையாய் நிலைபெறும் தன்மை கிடைக்கும் (கு. 370); எக்காலத்தும் துன்பமே ஏற்படாது (கு. 4); எக் காலத்தும் ஒரு தன்மையாய் வாழும் வாழ்வு நிலைபெறும் (கு. 6); என்றும் இன்பமாம் (கு. 352); எல்லாப் பேறுகளிலும் அதுவே சிறந்த பேறும் (கு. 31); எல்லா நிலைகளிலும் மிகச் சிறந்த நிலையாவது அஃது (கு. 24); உயிர், அவிச்சை அல்லது அறியாமை முதலிய மாசு நீங்குதலால் எய்தலாகும் தூய நிலையது (கு. 364); யான் என்னும் அகப்பற்றும், எனது என்னும் புறப்பற்றும் விடலால் எய்தற்பாலது (கு. 350).

எனவே, பற்றுவிட்டு, மெய்யுணர்வு வாய்ந்து, பிறவித் துன்பம் நீங்கி, என்றும் இன்பமாய் வாழ்வதற்குரிய சிறந்த இடம் அல்லது சிறந்த நிலையே நான்காம் உறுதிப் பொருள் ஆன சிறப்பென்னும் வீடாகும் எனத் திருவள்ளுவரால் கருதப்பட்டது என்பது மேற்குறித்தவற்றின் திரண்ட பொருளாகக் கொள்ளலாம். இன்னும் சுருங்கக் கூறுவோ

மானால், துன்பம் முழுவதும் நீங்கிப் பேரின்பம் எய்துதலே சிறப்பு எனப்படும் வீடாகும் எனலாம்.

ஈண்டொன்று ஊன்றி உணரத்தக்கது. வீட்டின்பம் எய்துதற்குப் பற்று விடவேண்டும் என்று திருவள்ளுவர் கூறியிருக்கின்றாரே ஒழிய, மனையையோ மனைவியையோ மக்களையோ விட்டு நீங்கவேண்டும் என்று யாண்டும் கூறவே யில்லை. உள்ளத்தால், ஒன்றன்கண் உள்ள விருப்பத்தை விடுதலையே 'பற்றுவிடல்' (தொல். 562) எனத் தொல்காப் பியரும் குறித்துள்ளார்.

வீடெய்துதற்குத் தகுதியுடையோர் யாவர்? இதுவே வீடுபற்றி உணர்த்தும் சமய நூல்களுள் ஒவ்வொன்றும் முதல்முதல் எழுப்பும் வினா. வீடுபற்றி உணர்த்தும் சமய நூலாகத் திருக்குறளைக் கருதும்போது, அதுவும் முதல் முதல் இவ் வினாவை எழுப்பி விடை இறுத்தாக வேண்டும்.

'எல்லாப் பொருளும் இதன்பால் உள' எனத் திருக் குறளைச் சுட்டுவர் என்பது மேலே கூறப்பட்டது. ஆங்ஙன மாயின், எல்லாச் சமயக் கருத்துக்களும் திருக்குறள் உடைய தெனல் வேண்டும். எனவே, வீடெய்துதற்குத் தகுதி யுடையார், ஒவ்வொரு சமய நூலுக்கும் ஏற்ப, ஒவ்வொரு வகையானவர் என்றே அஃது உணர்த்த வேண்டுவது முறையாகும் என்று பலர் கருதலாம். உண்மையில் இவ்வாறு கருதுவது தவறாகும் என்பது சமயநூற் பயிற்சியுடையார்க்கு நன்கு விளங்கும்.

ஒவ்வொரு சமய நூலும் பல சமயக் கருத்துக்களையும் உடையதே. அவையெல்லாம், ஒவ்வொரு சமயநூலிலும் முதற் கண் உணர்த்தப்படும். ஆனால், அவற்றையெல்லாம் இடை யிடையே மறுத்து, இறுதியில், தன் சமயமே முடிவானது, உயர்ந்தது என்று ஒவ்வொரு சமய நூலும் நிலைநாட்டும். பல சமயக் கருத்துக்களையும் உடைய ஒரு சமய நூல், அவ்வெல்லாவற்றையும் உடையதேயாயினும், அவ்வெல்லாம் அதற்கு உடன்பாடானவை என்று கொள்ளுவது அறியாமை யாகும்.

இம் முறையில், திருக்குறளும் பல சமயக் கருத்துக் களையும், ஏன், எல்லாச் சமயக் கருத்துக்களையும் கூறுவதே யெனினும், இடையிடையே அவற்றை மறுத்தோ உடன் பட்டோ நின்று, இறுதியில் தன் கொள்கையை நிலைநாட்டி, அதுவே உயர்ந்ததாகக் கடைப்பிடித்தற்கு உரியதென உணர்த்தல் வேண்டும். மறுத்துக் கூறப்பெற்ற சமயங் களெல்லாம் பூர்வபட்சம் செய்யப்பெற்றவை என்றும், முடிவாக அவற்றின் உயர்ந்தது என்று முடிவு செய்யப்பெற்ற சமயம் சித்தாந்தம் செய்யப்பெற்ற சமயம் - தன் சமயம் - என்றும் ஒவ்வொரு சமய நூலும் குறித்தல் காணலாம். திருக்குறள் பூர்வபட்சம் செய்யும் பிறசமயங்களும், சித்தாந்தம் செய்யும் அதன் சமயமும் உணர்ந்தால், அத் திருக்குறட் சமய நெறியால் வீடெய்துதற்குத் தகுதியுடையார் இன்னார் என்று காணலாம். எனவே, 'ஏனைய சமயங்களினும் வேருகத் திருவள்ளுவர் உணர்த்தும் சமயம் ஒன்று உண்டு; அதன்படி உணர்த்தப்பெற்றதே மேலேகுறித்த வீட்டின் இயல்பாம்' என்று கொண்டு, அச் சமயச் சார்பான எல்லாக் கருத்துக்களையும் அறிந்து, முடிவான சமயப் பேற்றினையும் எய்த முற்படுவது திருவள்ளுவரைப் போற்றுவோர்க்கு ஏற்றதாகும்.

மற்றெல்லாச் சமய நூல்களுக்கும், திருக்குறளாகிய **திருவள்ளுவர் சமய நூலுக்கும்** பூர்வபட்சம் செய்கிற வகை யில் ஒரு வேறுபாடு உண்டு. மற்றவற்றுள் ஒவ்வொன்றும் பிறசமயக் கருத்துக்களை மறுக்குங்கால், அவற்றைப் பழித்தும், தாக்கியும் கூறும்; தன் சமயத்தில் குறைபாடு உளதாயினும் எவ்வாற்ருலேனும் தன் சமயமே உயர்ந்ததென்று கூறி நிலை நாட்ட முற்படும். இதனைப் பரிமேலழகர், 'ஒருவாற்ருல் பிறர் மதம் களைந்து தம் மதம் நிறுத்தல் எல்லாச் சமய நூல்கட்கும் இயல்பு' (கு. 353) என உணர்த்துவது காண்க. ஆனுல், திருக்குறளோ எனின், அவ்வாறு பிறர் மதம் களைந்து தன் மதமே நிறுத்தல்வேண்டுமென விடாப்பிடி கொள்ளாமல், பிறர் மதங்களை உடன்படவேண்டி வந்தால் அவற்றை உடன் பட்டும், எல்லா மதங்களையும் உயர்த்தியே கூறியும், உடன்

பாடு இலாத சிறுபான்மைக் கருத்துக்களை மறுக்கவேண்டி வந்தால், மற்றச் சமய நூலுடையார்போல வெறுப்புணர்ச்சி காட்டி மறுக்காமல், 'இன்னும் இவ்வாறு சிறிது சேர்த்துக் கொண்டால் மிக்க நலமாகுமே; மிக்க பயன் எய்தலாமே!' என்பதுபோல் உணர்த்தியும், தான் முடிபாகக் கூறவந்த சமயம் ஓரினத்தவர்க்கே உரியதெனக் கூறுவதற்கு உரியதாயினும், அவ்வினத்தவர்க்கே அஃது உரியதென்றோ, அவ்வினத்தவரே அதற்குரியரென்றோ கட்டுப்பாடொன்றும் ஏற்படுத்தாமல், உலகில் உள்ள எல்லாச் சமயத்தினரும் அதைப் போற்றிப் பயன் எய்துதற்கு உரியவர் என்று நயம்பட உரைத்தும் உலகோர் அனைவரையும் ஒரு சமயத்தினராக ஆக்கவே முற்படுகின்றது. இத்தகைய சிறப்பு, ஏனைய நூல்களுக்கெல்லாம் இல்லாத சிறப்பு, இதன்கண் இருத்தலாற்றான், உலகப் பெருமறையாகத் திருக்குறள் இன்று திகழ்கின்றது; திருவள்ளுவர் உலகப் பெரியாராக உலகில் உள்ள அறிவுடையோர் அனைவராலும் போற்றப்பெறுகின்றார்.

எடுத்துக்காட்டாக ஒரு சிலவற்றை ஈண்டு நாம் காண்போமாக: யோக நூலுடையார், 'சித்தத்திலிருந்து கிளைத்தெழும் விருத்திகள் என்னும் எண்ணங்களைத் தடுத்து நிறுத்துவதே யோகம்; அதுவே அச் சித்த அலைவினால் வரும் துன்பம் நீக்கும் வழி' எனத் தம் மதம் நாட்டுவர். 'உரன் என்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான் வரன் என்னும் வைப்பிற்கோர் வித்து' (கு. 24) எனவும், 'செயற்கரிய செய்வார் பெரியர்' (கு. 26) எனவும், 'ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின் எழுமையும் ஏமாப் புடைத்து' (கு. 126) எனவும் வருமிடங்களில், அவர்தம் மதக் கொள்கையைப் பொன்னேபோல் திருக்குறள் போற்றுகின்றது. ஆனால், 'ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே மெய்யுணர்வு இல்லாத வர்க்கு' (கு. 354) என்று பின்னர்க் கூறி, 'ஐயுணர்வாய மனம், தம் வயத்ததாய வழியும், மெய்யுணர்வு இல்லாதவர்க்கு, அதனால் பெறவேண்டும் முழுப்பயனையும் பெறமுடியாதே! அவரும் மெய்யுணர்வு பெற்று முழுப் பயனும் பேரின்பம் அடைய முன் வருவார்களாக!' என்று நயமாக உணர்த்தி, அவர் மதத்தில் உள்ள குறைபாட்டினைச்

சிறிதளவாகக் காட்டி, அக் குறையை நீக்கிப் பயனடையுமாறு அவருக்கு அறிவுறுத்துகின்றது. இவ்வாறு உணர்த்தும்போது, தம் குறைபாட்டினையுணர்ந்து, அதைப் போக்கிக்கொண்டு பயனடைய யாவரே விழையார்? ஆனால், ஈண்டொன்று கருதத்தக்கது. யோக நூலுடையார்க்கு மெய்யுணர்வு தேவை என்று திருக்குறள் உணர்த்துவதால், திருக்குறள், யோக நூலுடையார் சமயத்தினும் வேறுபட்ட சமயமுடையது என்றுதானே கொள்ளுதல் வேண்டும்? திருக்குறள் உணர்த்தும் சமயம் யோகநூலார் சமயம் அன்றன்றோ!

பௌத்த நூலுடையார், தாமாக ஓருயிரைக் கொன்று அதன் இறைச்சியைத் தின்னுதல் பாவம்; மற்றவர் அதைக் கொன்று அதன் இறைச்சியை விற்றால், அதை வாங்கித் தின்பதால் பாவமில்லை என்பர். அவர்க்கு அறிவு கொளுத்தும் நோக்கத்துடன், "பௌத்த நூலுடையீர்! நீவிர் ஊன் தின்பது காரணமாக அன்றோ, மற்றவர் உயிர்க்கொலை புரிகின்றனர்? அதைத் தின்பதில்லையெனின் அவர் கொலை செய்வரா? கொலை நேர்வது நும்மாலாதலால், நீவிரே உயிர்க்கொலை புரிந்தவராகின்றீரே! இதனை உணராத நும் அறிவு இருந்தவாறு என்னே!" என்பது போன்று, 'தினற்பொருட்டால் கொல்லாது உலகெனின் யாரும் விலைப்பொருட்டால் ஊன் தருவாரில்' (கு. 256) என்று கூறுகின்றது. பௌத்தரைத் திருத்தியாட்கொள்ளும் நோக்கத்துடன் இவ்வாறு கூறும் திருக்குறட் சமயம், பௌத்த சமயமன்று; அதனினும் வேறுபட்டது என்பது தேற்றமன்றோ!

சாங்கியர், தத்துவங்கள் இருபத்தைந்தெனக் கூறி, அவற்றுள், இருபத்து நான்கு தத்துவங்கட்கு வேறானது உயிரென அறிந்து, அவற்றிலிருந்து நீங்கி நிற்பதே வீடென்பர். இதனை, 'சுவையொளி ஊறோசை நாற்றமென் றைந்தின் வகைதெரிவான் கட்டே உலகு' (கு. 27) எனத் திருக்குறள் போற்றிக்கொண்டு, பின்பு, அவர்க்கும் மெய்யுணர்வு வேண்டுமென்று அறிவிக்க, 'எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு' (கு. 355) என்று

கூறிநிற்கின்றது. இதனால் சாங்கியர் சமயத்தினும் வேறுபட்டது திருக்குறட் சமயமாதல் பெறப்படும்.

கொல்லாமை அறத்தைப் பொன்னேபோல் போற்றுபவர் சமணர். பொதுவாக அறங்களையெல்லாம் உயிரினும் மேலாகப் போற்றுபவர் அவரே. 'ஒன்றாக நல்லது கொல்லாமை' (கு. 323) என அந்த அறத்தைத் தலையானதாகத் திருக்குறள் சிறப்பிக்கின்றது; 'வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன் வாழ்நாள் வழியடைக்கும் கல்' (கு. 38) என அறமாற்றுதலே பிறவியறு நெறி என முடிவுசெய்து உரைக்கின்றது; இவ்வாறு போற்றுவதால் இதுவே முடிவெனக் கொள்ள வேண்டா என்று, 'பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப் பென்னும் செம்பொருள் காண்ப தறிவு' (கு. 358) எனக்கூறி, 'பிறப்பிற்குக் காரணமான அறியாமை நீங்கச் சிறப்பென்னும் வீட்டிற்குக் காரணமான செம்பொருள் காண்பதறிவு' என்று கூறிச் சமணரைத் தன்மதம் தழுவும்படி அழைக்கின்றது திருக்குறள். 'ஐம்புலப் பேருரு ஐந்தும் ஐந்தணுவால் இம்பரிற் சமைதலாக'ச் சமணர் உணர்த்துவர். அவர்க்கு உலகம் நான் முகனால் படைக்கப்படுவ தொன்றன்று. ஆனால், நான்முகனை 'உலகியற்றியான்' (கு. 1062) எனத் திருக்குறள் கூறி, உலகம், ஐந்தணுவால் தானே உண்டாவதென்னும் சமணர் கூற்றை உடன்படாமல், நான்முகனால் படைக்கப்படுவது என்று உணர்த்தித் தன்மதமே நாட்டுகின்றது. பெரும்பான்மையாகச் சமணர் மதமுடிபுகளையெல்லாம் ஒப்புகின்றதெனினும், அவர் மதமுடிபுகளுக்கு வேறாகச் சிலவற்றைத் தன்மத முடிபுகளாகக் கூறும் திருக்குறட்சமயம் சமண சமயத்தினும் வேறுபட்டதேயன்றோ!

வேள்வி தழுவுவாரை நோக்கி, 'அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன் உயிர்செகுத்து உண்ணாமை நன்று'(கு.259) என்று வேள்வியை மறுத்துக் கூறும் திருக்குறட் சமயம் வேள்வி தழுவுவார் சமயத்தினும் வேறுபட்டதென்பது வெளிப்படை.

இம் முறையே பலப்பல வேறுபாடுடைய சமயத்தினர் அனைவர்க்கும் அறிவுகொளுத்தித் தன்னுடையது எனத்

தெரிந்து உணர்வதற்குரிய சமயத்தைச் சார்ந்து பயன்பெற வேண்டும் என்று கருதும் திருக்குறட் சமயநெறியைப் பின்பற்றி வீடடையும் முறையை ஓர்ந்து கடைப்பிடிப்பது, திருக்குறளைப் போற்றும் நம் கடமையாகும். எனவே, அம் முறையை இனி நோக்குவோம் :

தேவர், மக்கள், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்ற எழுவகைத் தோற்றங்களாக மாறிமாறிப் பிறப் பெய்தும் நிலையையுடையது உயிர். இவ்வாறு பிறப்பு ஏழு உண்டு என்பது திருக்குறளுக்கு உடன்பாடாகும். இதனைப் பல இடங்களில் (கு. 62, 107) 'எழுபிறப்பு' என அதுகுறித்தல் காணலாம். அவ்வாறு, உயிர், மாறிமாறி வேறுவேறு பிறப்பு எய்துவதற்குக் காரணம், ஒவ்வொரு பிறப்பிலும் அது செய் யும் நல்வினை தீவினைப்பயனே (கு. 5). ஒரு பிறப்பில் ஆற்றிய இவ் விருவினைகள் அடுத்த பிறப்பிற்குமட்டும் கருவாய் நின்று, அவ்வடுத்த பிறப்பைத் தந்து தம்பயனை ஊட்டிக்கழிவன அல்ல. ஒரு பிறப்பில் செய்த இவ் வினைகள் அடுத்து ஏழு பிறப்புக்கள் வரையில் தொடர்ந்து தம்முடைய விளைவை உண்டாக்கும் ஆற்றல் உடையன :

"ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து" (கு. 126)

என்ற குறளையும், 'ஒருமைக்கட் செய்த வினையின் பயன் எழுமை யும் தொடரும் என்பது இதனால் அறிக' என்று பரிமேலழகர் கூறும் குறிப்பையும் நோக்குக.

இனி, இவ் விருவினைகள் போல, ஒருபிறப்பில் கற்ற கல்வி யும் ஏழுபிறப்பில் தொடரும் என்பது,

"ஒருமைக்கட் டான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து" (கு. 398)

என்ற குறளால் சுட்டப்படுகிறது. "வினைகள்போல உயிரின் கண் கிடந்து, அது புக்குழிப் புகுமாகலின், (கல்வி) எழுமையும் ஏமாப்புடைத்து" என்றார் (வள்ளுவர்) என்று பரிமேலழகர் ஈண்டுத் தரும் விளக்கம் போற்றிக்கொளற்பாலது. 'வினைகள்

போல' என்றதால், நல்வினை தீவினைகளுக்கு வேருகக் கல்வி கல்லாமைகளும் உயிரொடு தொடரும் தன்மையுணர்ந்து, நல்வினைப் பயனுன செல்வமெய்துத லின்றியும் தீவினைப்பயனுன வறுமையி லுழந்தும் வருந்துவார், அவ்வாறு வருந்துதலை விட்டுத் தம் முயற்சியைத் துணையாகக்கொண்டு அறநூல் சமயநூற்கல்வி கற்பதில் தம் கருத்தைச் செலுத்துவாராயின், அடுத்த ஏழு பிறப்புக்களில் அக் கல்வியின் உதவியால் மேம்பாடு பெற்றுச் சிறத்தலோடு, பிறவியறும் பேறும் பெறலாம் என்பதை உணர்த்தும் திருக்குறள், ஏழைஎளியவர்க்கெல்லாம் உயிர்தரும் மருந்தென்றே கொள்ளற்குரியது.

நல்வினைதீவினைகளால் முறையே செல்வ வறுமைகளும், கற்றல்கல்லாமைகளால் முறையே அறிவுடைமை இன்மைகளும் ஏழுபிறப்புக்களிலும் தொடர்ந்துவரும் என்பது மக்களாகப் பிறந்தார் அனைவரும் அறிய வேண்டும் உண்மையாகும். அறிவின்மையும் ஏழு பிறப்புக்களில் தொடர்ந்து வரும் என்பதை,

> "ஒருமைச் செயலாற்றும் பேதை எழுமையும்
> தான்புக் கழுந்தும் அளறு" (கு. 835)

என்று உணர்த்துகின்றது திருக்குறள். ஈண்டொரு கருத்து நுணுகி உணரற்பாலது. "யாதும் அறியாத பேதை, நல்வினை ஆற்ற அறியான் ஆயினுற் போலத் தீவினையும் ஆற்ற அறியானுதலின், அவ் விரண்டாலும் வரும் பயன் அவனுக்கு இலவாதல் வேண்டும்; ஆகவே, 'எழுமையும் நிரயம் புக்கழுந்தும்' வினையைச் செய்துகொள்ளுவான் என்பது எங்ஙனம் பொருந்தும்?" எனின், அறியாமையால் நிகழ்வன பெரும்பான்மையும் தீவினைகளே ஆகலின், ஒன்றும் அறியான் நல்வினைகள் ஆற்றும் அறிவின்மையால், தீவினைகளே ஆற்றுவான்; எனவே, அத் தீவினைகள் காரணமாக என்றும் நிரயத் துன்பமே அடைவான். "நல்லது செய்தல் ஆற்றீ ராயினும், அல்லது செய்தல் ஓம்புமின்" (புறநானூறு 195) என்று கூறி, அதனேடு அமையாது, "நல்லாற்றுப்படூஉம் நெறியுமார் அதுவே" என்றும் தொடர்ந்து கூறும் சங்கச் செய்யுளின் கருத்தை உன்னுக. "அறியாமையால் தீவினைகளே நிகழ்வன;

அவற்றைச் செய்யாது பாதுகாத்தல் வேண்டும். இவ்வாறு தீவினைகளைச் செய்யாது பாதுகாக்கும் திறன் உண்டாய்விடின், அது, நல்வினை ஆற்றுதலால் வரும் நல்விளைவு இன்னது என்று உணர்ந்து நல்லதே ஆற்றலைத் தலைப்படுத்தும். ஆதலால், 'நல்லாற்றுப்படூஉம் நெறியுமார் அதுவே' ஆகும்" என்ற நுட்பமான கருத்து, அறிவின்மையால் மயங்கிக் கட்சிகள் பல தோற்றுவித்துக் கொண்டு தலைமை பூண்டு, நுட்ப மதியில் லாரைத் தீநெறியில் செலுத்துவார் அறிந்து போற்றற்குரிய அருமணியாகும். இக் கருத்தை இன்னும் விளக்கமாகவும், வெளிப்படையாகவும்,

" அறத்தினூஉங்கு ஆக்கமும் இல்லை ; அதனை
மறத்தலின் ஊங்கில்லை கேடு" (கு. 32)

என்று பாடி, "நல்வினை செய்தலால் உயர்வுகளெல்லாம் வரும்; செய்யாது கைவிடுதலால் கேடுகளெல்லாம் வரும்" என்று உணர்த்துதல் வாயிலாக, "அறமாகிய நல்வினையைச் செய்தே ஆகல்வேண்டும்; அதனை மறத்தலால் தீவினைகளைச் செய்தாகவேண்டியே வரும். ஏனெனின், உடலெடுத்த உயிர் யாதொன்றும் செய்யாது இருத்தல் இயற்கையன்று ஆகலின்" என்ற விளக்கத்தை உணர்ந்து உய்யுமாறு நெறிப்படுத்துகின்றது திருக்குறள். "எவ் வுயிரும் ஒரு நொடிப் பொழுதும் யாதும் செய்யாது இருத்தல் முடியாது" என்று பகவற் கீதையும் கூறுகின்றது.

ஊழ் காரணமாக நன்மை தீமைகளும், செல்வ வறுமைகளும், இன்ப துன்பங்களும் வரும் என்பதே நம் பாரதநாட்டுப் பெரும்பான்மையான சமயங்களின் கருத்து. இவற்றையெல்லாம் திரட்டி, இவற்றிற்குக் காரணமான ஊழ்வகை ஒன்று உண்டு என்று கூறி, அறிவு அறியாமைகளுக்குக் காரணமான ஊழ்வகை வேறொன்று உண்டு என்று திருக்குறள் குறிக்கின்றது:

" இருவேறு உலகத் தியற்கை ; திருவேறு
தெள்ளியர் ஆதலும் வேறு." (கு. 374)

"நல்வினை தீவினை ஆற்றும் உயிர், கல்வி கற்றலால் அறிவுடைமையும், கல்லாமையால் அறிவின்மையும் உறுமாதலால்,

தீவினைகளை நீக்கி நல்வினைகளையே ஆற்றுதற்கு இன்றியமையாத அறிவுடைமை பெறுதற்குக் கல்வியை, "உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்று" (கு. 395) அறியாமையை ஒழித்துவிடல் வேண்டும். ஏழு பிறப்புக்களிலும் வந்து உதவுவதாகிய கல்வியறிவால் அறங்களை மறவாது ஆற்றினால் ஆக்கமும், ஆற்றாவிட்டால் கேடும் வரும் என்று முற்கூறியதனோடு அமையாமல், மீண்டும்,

"புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டும்; செய்யா(து)
இகழ்ந்தார்க்கு எழுமையும் இல்" (கு. 538)

என்று திருக்குறள் வற்புறுத்திக் கூறுவதனால், "அறநூல் புகழ்ந்தவற்றைக் கடைப்பிடித்துச் செய்தல் வேண்டும்; செய்யாது இகழ்ந்தவர்க்கு ஏழு பிறப்பிலும் நரகத்துன்பமே ஏற்படும்" என்பதை என்றும் சோர்ந்தும் மறத்தல் ஆகாது.

இனி, ஒருவர் தாம் செய்த வினையின் பயனேயன்றித் தம்மொடு தொடர்புடையார் செய்த வினையின் பயனையும் துய்ப்பர் என்பதை, முதற்கண், தொடர்பு மிக நெருக்கமாகவுடைய நன்மக்கள்மேல் வைத்து,

"எழுபிறப்பும் தீயவை தீண்டா, பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்" (கு. 62)

என்று அறைந்து, பின், ஏழுபிறப்பில் மட்டுமன்றி, ஏழேழு பிறப்புக்களிலும் தமதும் பிறரதுமாய ஊழ்வினை வந்து ஊட்டுமென்பதை,

"எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
விழுமம் துடைத்தவர் நட்பு" (கு. 107)

என்பதால் திருக்குறள் உணர்த்துகின்றது.

இவ்வாற்றால், ஒரு பிறப்பில் செய்த வினையின் பயன் ஏழு பிறப்புக்களிலும், ஏழேழு பிறப்புக்களிலும் தொடர்தல் உண்டு என்று உணர்த்துதல் வாயிலாகப் பிறப்புக்கள் மாறி மாறி உயிர்க்கு உண்டாவது திருக்குறளால் நன்கு அறியக் கிடக்கின்றது.

மக்களாகப் பிறந்தவரே, நல்வினை தீவினை செய்தற்குரிய தகுதியுடையவர் என்றுகொண்டு, மாறி மாறி வரும் பலவகை யான பிறப்புக்களில் மக்கட் பிறப்பாக வரும் ஏழன்கண், ஒரு பிறப்பில் செய்த வினைப்பயன் தொடர்ந்துவரும் எனக்கொள் வாரே சமய நூலுடையாருட் பெரும்பான்மையோர். இவ் வாறு கொள்வார்க்குச் சிலந்தியாகப் பிறந்த உயிர், நல்வினையால் கோச்செங்கணான் என்ற சோழ அரசுபதவி பெற்ற வரலாறு உண்மையெனக் கொள்ளுத லாற்றாது பயனின்றிக் கழியும். "மக்கள் தாமே ஆறறிவுயிரே; பிறவு முளவே அக்கிளைப் பிறப்பே" (தொல். மரபு: 33) என்ற தொல்காப்பியர் கருத்தும், "மக்கட் பிறப்பல்லாத பிற பிறப்புயிர்களுள்ளும் சில, நல்வினை செய்து நற்பயனும், தீவினைசெய்து தீப்பயனும் எய்தும்" என்பதால், தமிழ்த் தொன்னூல் முறைப்படி எவ் வுயிரும் ஒரு பிறப்பில் செய்த வினையின் பயனை அடுத்த ஏழு பிறப் பிலோ, ஏழேழு பிறப்பிலோ அடையும் என்று கொள்ளுதலே திருக்குறட் கருத்தெனத் தெளிதல் நேர்மை. இவ்வாறு கொள் ளாக்கால், "மயக்கமில்புலி வானரம் நாகம்" (சுந்தரர் தேவாரம் 55 : 6), முதலியவை இறைவனைப் பூசித்துப் பயனுற்றன என் பதும், "உழுவை, கடிக்கும் பன்னகம், பிடிப்பருஞ் சீயம்" (சுந். தே. 65 : 6) முதலியவற்றிற்கு ஆலநிழற்கீழ் ஆண்டவன் அறமுரைத்தான் என்பதும் நம்பொணாச் செய்திகளாகும்.

வினைக்கீடாக உடலைப்பெற்று வாழுமுயிரை, அவ் வினை தீர்ந்ததும் உடலிலிருந்து நீக்கிக்கொண்டு போம் கூற்றுண்மை யைப் பலப்பல இடங்களில் திருக்குறள் குறிக்கின்றது. நல் வினைக் கீடாக மேலுலகங்கள் பல எய்துதலும், தீவினைக் கீடாக நிரயம் புக்கு அழுந்துதலும் உயிர்க்குண்டு என்பதையும் திருக்குறளில் பல இடங்களில் காணலாம்.

மாறி மாறி, நிலையாமையோடு பொருந்திய பிறப்புக்களைப் பெற்றுநிற்கும் எவ் வுயிரும், என்றும் அழியாது மன்னும் தகையது. இதனை, 'மன்னுயிர்' (கு. 68, 244, 268, 318, 457, 1168) என்றும், "மன்னும் உயிர்" (கு. 190) என்றும் திருக்குறள் சாற்றுகின்றது. எவ் வுயிரும் என்றும் அழிவதில்லை என்னும் இது, நம் பாரத நாட்டுச் சமயங்கள் எல்லாவற்றிற்கும் உடன்பாடேயாகும்.

பல்வேறு உடம்புகளை வினைக்கீடாகப் பெறும் தகுதியுடைய உயிர்களெல்லாம் ஒரு நிகரனவேயாகும். அவை பெற்று நிற்கும் உடல் வேறுபாட்டால், உயர்வு தாழ்வு அவற்றிடையே கற்பித்தல் அறியாமையே யாகும். உயர்வு தாழ்வுகளுக்குப் பண்பும் தொழிலும் கருவியாவனவேயன்றி, உடல்களோ, அவற்றிடையே கற்பித்துக் கொள்ளும் வருணம், சாதி, இன்ன பிறவோ கருவிகளாக மாட்டா. இதனை,

"உறுப்பொத்தல் மக்களொப் பன்றால் வெறுத்தக்க
பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு" (கு. 993)

என்பதனாலும்,

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்" (கு. 972)

என்பதனாலும் திருக்குறள் தெளிய உணர்த்துகின்றது.

"குண கர்மங்களுக்கு ஏற்பவே நான்கு வருணங்கள் ஏற்பட்டன" என்ற பகவற்கீதைக் கூற்றம், 'பிறப்பினாலே சாதி வருண பேதங்கள் ஆமாறில்லை; அவரவர் குணந்தொழில்களின் சிறப்புண்மைக்கும் சிறப்பின்மைக்கும் ஏற்ப ஆவன' என்பதற்கு அரணாவதாம்.

இவ்வாற்றால், "இயல்புடைய மூவர்" (கு. 41) என்ற இடத்துக் கருதப்பெறும் நிலைவேறுபாடுகளைத் தழுவுவதற்கு உரியோர் எனப்பெறும் பிராம்மணர் முதலியவராகக் குறிக்கப்பெற்ற சாதி வகையினர், பிறர்மதம் பற்றித் திருக்குறளில் காட்டப்பெற்றனர் என்றே கொள்ளுதல் வேண்டும். எனவே, எல்லா உயிர்களும், பண்பும் தொழிலும் பற்றுக்கோடாகக் கொண்டு முயன்று, வீடு பெறற்கு உரியன ஆதலின், அவ்வெல்லா உயிர்களும் வீடு பெறற்குத் தகுதியுடையன என்பதே திருக்குறளின் உட்கோள் ஆகும்.

எல்லா உயிர்களும் முயன்று வீடு எய்துவதற்குத் தகுதியுடையனவே எனினும், அறியவேண்டுவன அறிந்து நல்லன ஆற்றி, அல்லன அகற்றி ஒழுகுதற்கு வாய்ப்புடையன மக்களுயிர்களே. இதுபற்றியே, 'பெறும் பேறுகளுள் மக்கட்

பேறே சிறந்தது; அஃதும் அறியவேண்டுவன அறிதற்குரிய மக்கட்பேருதல் வேண்டும்' என்று பெற்ரோர்களால் விழை யப்படுவதாயிற்று.

> " பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த
> மக்கட்பே றல்ல பிற " (கு. 61)

என்பது இவ் வுண்மையை உணர்த்தவே எழுந்தது. 'மக்கள் செய்யும் வினை, தம்மை நோக்கி வரும்' (கு. 63) ஆகலானும், 'பழியிறங்காப் பண்புடை மக்களைப் பெற்ருல் எழு பிறப்பும் தீயவை தீண்டா' (கு. 62) ஆகலானும் இவ்வாறு பெற்ரோர் விழைவாராயினர்.

மக்களுடம்பு பெற்றவருள்ளும் மக்கட்டன்மை உடைய வர்களே மக்கள் எனற்கு உரியவர். மக்கட்டன்மை உடை யோராவார், நல்லன தீயன வேறுபடுத்துணரும் பகுத்தறிவு பெற்ருராய், நல்லன ஆற்றித் தீயன களையும் ஒழுக்கமுடை யவர். இத் தன்மை யுடையாரல்லோர் கயவர் அல்லது கீழோர் எனப்பெற்று, உயர்திணையாகக் கருதப்பெருமல் அஃறிணையாக இழிக்கப்பெறுவர். " உயர்திணையென்மனுர் மக்கட்சுட்டே; அஃறிணையென்மனுர் அவரல பிறவே " (தொல், சொல். 1) என்றும், " மக்களே போல்வர் கயவர் அவரன்ன ஒப்பாரி யாங் கண்ட தில் " (கு. 1071) என்றும் வருவன இக் கருத்தை யுடையன.

உயர்ந்தோராய மக்கட்சுட்டுடையோர், கடவுளும், இரு வினைப் பயனும், மறுபிறப்பும் உண்டெனக் கொள்வோர். அல் லோர், தம் புல்லறிவால் அவற்றை இல்லையென்று தள்ளு வோர். இத் தகையோர், மக்களுடம்பே கொண்டவ ரெனினும் அவ் வுடம்பில் தோன்றும் பேய் என்று கருதவேண்டும் என்று திருக்குறள் கழறுகின்றது.

> " உலகத்தார் உண்டென்ப தில்லென்பான் வையத்(து)
> அலகையா வைக்கப் படும். " (கு. 848)

இத் தகையோர், மக்களுடம்பு பெற்றும், " மக்கள் தாமே ஆறறிவுயிரே " (தொல். 1532) என்ற வண்ணம் ஆறறிவு உடைய ரல்லராய், " மாவும் மாக்களும் ஐயறிவினவே "

(தொல். 1531) என்பதற்கேற்ப விலங்கினத்தை யொப்ப ஐயறிவே உடையராய் நின்று, செவியுணர்வாகிய கேள்வியுணர் வின்றி, அரிதிற்பெற்ற மக்கட்பிறப்பிலும், பிறப்பறுத்து, வீடு பெறும்பேறு எய்த முயலாது வாழ்பவர். இவர் உயிருடன் இருந்தாலும் உலகிற்கு நன்மையில்லை ; செத்தாலும் அதற்குக் கேடு ஒன்றுமில்லை என்று,

“ செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என் ?” (கு. 420)

என்ற குறளால் அது வெறுத்துரைக்கின்றது.

உடல் வளர்ச்சி ஒன்றையே நாடி, அறங்களுள் ‘ ஒன்றாக நல்லது கொல்லாமை’ என்பதை ஓராது, ஊனுக்கு ஊன் என்று நாடிக் கொலைவினை புரிந்தொழுகும் இழோர், “ கொலை வினையாராகிய மாக்கள்” (கு. 329) என்றே திருக்குறளால் பழிக்கப்பெறுவர்.

மக்களுடம்பால் இம்மையில் அறங்கள் ஆற்றிப் புகழ் பெறவேண்டும் எனின், அதைக் கனவிலும் கருதாது வாழும் இவர், வாழ்ந்தும் வாழாதவரே:

‘‘ விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தார்இல்
தீமை புரிந்(து)ஒழுகு வார். ’’ (கு. 143)

நூலுணர்வு பற்றி வாழ வகையறியாதவ ரெனினும், உயர்ந்தோர் வாழும் வாழ்க்கையைப் பின்பற்றியாதல் வாழ்ந்து உய்தி பெறலாமே! அதையும் கடைப்பிடிக்காத இவர்கள் நடைப்பிணங்களே ஆவர் :

‘‘ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் ; மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும் .’’ (கு. 214)

அறவழியால் மறுமையின்பம் பெறவிரும்பாத இவர்கட்குப் பேரின்பத்தில் கருத்தே இல்லையோ எனின், அதில் கருத்து மிக உண்டு. ஆனால், இவர்கள் பேரின்பம் எனக் கருதுவதெல்லாம், மங்கையர் கூட்டத்தால் பெறும் நுகர்ச்சியேயாகும். பிறர் மனைவியரேயாயினும் தமக்கு அவர்பால் நுகர்ச்சி பெற விருப்பம் ஏற்பட்டுவிட்டதாயின், அவர், தமக்கு ‘உடுக்கையிழந்தவன்

கைபோல் இடுக்கண் களையும்' நண்பர் மனைவியரே எனினும் நன்றியறிவோ, கண்ணோட்டமோ ஒன்றும் இன்றித் தம் விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்ளவே நாடிநிற்பர். இத் தகையோர், இருந்தும் இறந்தோரே என்பது திருக்குறள் உள்ளக் கிடக்கை:

"வசையொழிய வாழ்வாரே வாழ்வார்; இசையொழிய
வாழ்வாரே வாழா தவர்." (கு. 240)

கயவர் தன்மைகளையெல்லாம் மற்றவரறிந்து, அவரை நீங்கி உய்யவேண்டும் என்னும் அருளுள்ளத்தோடு, வடலூர் இராமலிங்க அடிகள் ஒரு பாட்டோவியத்தில் தீட்டிக் காட்டியிருப்பது ஈண்டுப் போற்றத்தகுவதாம்:

"பரமேது? வினைசெயும் பயனேது?
பதியேது? பசுவேது? பாசமேது?
பத்தியே(து)? அடைகின்ற முத்தியே (து)?
அருளேது? பாவபுண் ணியங்களேது?
வரமேது? தவமேது? விரதமே(து)?
ஒன்றுமிலை; மனம்விரும் புணவுண்டுநல்
வத்திரம ணிந்துமட மாதர்தமை
நாடிநறு மலர்சூடி விளையாடிமேல்
கரமேவ விட்டுமுலை தொட்டுவாழ்ந்
தவரொடு கலந்துமகிழ் கின்றசுகமே
கண்கண்ட சுகமிதே கைகண்ட
பொருளெனும் **கயவரைக்** கூடாதருள்
தரமேவு சென்னையில் கந்தகோட்
டத்துவளர் தலமோங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச்
சைவமணி சண்முகத் தெய்வமணியே."

ஈண்டுக் கயவர் கூட்டத்தை விட்டு விலகுவது நம்முடைய முயற்சியினாலேயே ஆவதொன்றன்று என்று சுட்டுவான் வேண்டியும், இறைவன் அருளால்தான் அஃது ஆவதொன்று என்று தெளிவிப்பான் வேண்டியும் 'கயவரைக் கூடாதருள்' என்று அடிகள் முருகனை வேண்டிக்கொள்ளும் வகையில் நமக்கு உணர்த்தியிருக்கின்றார். கண்டதே காட்சி; கொண்டதே கோலம் எனத் திரியும் கயவர் திருத்தலாகாதார். அவர்களிடம் ஒழுக்கம் என்பதே சிறிதும் இராது; ஒருகால்

*சிறிதளவாவது இருப்பின். அதற்கு அச்சம் காரண மாகலாம் (கு. 1075).*

*மக்கட்சுட்டு உடைய உயர் மக்கள் ஒழுக்கம் விழுப்பமாகக் கொண்டவர்; தம்முயிர்க்கு இன்னாதது என்பதொன்று கண்டாராயின், மன்னுயிர்க்கு மறந்தும் அதனைச் செய்ய விழையாதவர்;*

" இன்னா எனத்தான் உணர்ந்தவை துன்னாமை
வேண்டும் பிறன்கட் செயல் " (கு. 316)

*என்பதைப் போற்றிக் கடைப்பிடிப்பவர்;*

" அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
தன்நோய்போல் போற்றாக் கடை " (கு. 215)

*என்று அடிக்கடி கருதிப் பார்ப்பவர்;*

" பிறர்க்கின்னா முற்பகல் செய்யின், தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும் " (கு. 319)

*என்பதை மறவாதவர்;*

*பிறர், அறிவில்லாது தவறு செய்யின், அதுகருதி வெகுளி கொண்டால், அதனால் தமக்கே கேடுவரும் ஆதலால்,*

" சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கைபிழையா தற்று " (கு. 307)

*என்பதை உறுதியாக உணர்ந்தவர்;*

" நோயெல்லாம் நோய்செய்தார் மேலவாம் நோய்செய்யார்
நோயின்மை வேண்டு பவர் " (கு. 320)

*என்பதுணர்ந்து, மற்றவர்க்கு யாது கருதியும் துன்பம் இழையாதவர்;*

செய்தொழில் வேற்றுமையால் சிறப்பு உண்டாம் (கு. 972)

*என்பதுணர்ந்து இடைவிடாது நற்றொழில் புரிந்து கொண்டே யிருப்பவர்;*

" இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான் " (கு. 1062)

*என்று, இரத்தலின்னாமையை மிகுதியும் வெறுப்பவர்;*

முயன்று ஈட்டிய பொருளைக் கற்றார் பலருக்கும் பகுத்தளித்துத் தாமும் அதுகொண்டு பயனடைபவர் ;

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை" (கு. 322)

"பாத்தூண் மரீஇ யவனைப் பசிஎன்னும்
தீப்பிணி தீண்டல் அரிது" (கு. 227)

"ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர்" (கு. 228)

"பழிஅஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழிஎஞ்சல் எஞ்ஞான்றும் இல்" (கு. 44)

என்பனவெல்லாம் என்றும் உள்ளத்துக்கொண்டு, பழியஞ்சிப் பொருளீட்டிப் பிறர்க்குப் பகுத்துக் கொடுத்துத் தாமும் உண்டு வாழ்க்கை நடத்துபவர்.

ஆன்றோர் வரையறுத்த இவையும் பிறவுமான அறங்களைப் போற்றியும், மறுத்த மறங்களை மறந்தும்மேற்கொள்ளாதும் வாழும் வாழ்க்கையே அறவாழ்க்கை என்றும், சிறந்த ஒழுக்கமுடைய வாழ்க்கை என்றும் திருக்குறள் திட்பமுடன் வகுத்துரைக்கின்றது. இங்கே எடுத்துக் காட்டிய இவற்றைக் கண்டு, "அறங்கள் பலவாலோ, ஆற்றல் ஒல்லாதாலோ!" என்று எவரும் திகைப்புறல் வேண்டா என்று கருதித் திருவள்ளுவர்,

"ஒல்லும் வகையால் அறவினை ஓவாதே
செல்லும்வாய் எல்லாம் செயல்" (கு. 33)

என்றும்,

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற" (கு. 34)

என்றும் கூறி, 'எல்லா அறங்களும் கடைப்பிடிக்க வேண்டுவதில்லை; முடிந்த வரையில் நல்லதெனக் கண்டவிடத்து அதை ஆற்றுக; மனத்தில் மாசின்மையே அறமாம்; ஆதலால், மனம் மாசிலதாமாறு போற்றுக' என எளிமையும் இனிமையும் சுருக்கமும் தோன்ற உரைத்திருப்பது பாராட்டுதற்கு உரியது.

இங்ஙனம், நல்லதை நாள்தோறும் ஒருவன் தவறாமல் செய்துவருவானாணல், அதுவே அவனுக்கு வீடு பயக்கும் என்பதை,

" வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்கும் கல்" (கு. 38)

என்று உணர்த்தியிருப்பது, எந் நாட்டவர்க்கும், எச் சமயத்தவர்க்கும் திருக்குறள் பொதுமறையாமாற்றைத் தெளிவிப்பதாகும்.

மறவினையை மறுத்து, அறவினையையே தம் ஊக்கமும், ஆள்வினைஎனப்படும் மெய்ம்முயற்சியும் துணையாகக் கொண்டு, விழிப்புடன், இடைவிடாமல் ஆற்றிவருவோரும் அதன்பயனாய இன்பமே எஞ்ஞான்றும் பெறாது, ஒரொருகால் துன்பமும் எய்தி வருந்தக் காண்கிறோம்; 'முயற்சி மெய்வருத்தக் கூலிதரும்' (கு. 619) பயன் விளைப்பதன்றி, முழுப் பயனாய பேரின்பம் தாராமையையும் காண்கின்றோம்; அம் மட்டோடன்றி, முயற்சியும் ஒவ்வொருபோது தடைப்படக் காண்கின்றோம். இவ்வாறெல்லாம் துன்பமும் தடையும் ஏற்படுதற்குக் காரணம் ஒன்று வேண்டுமன்றோ! அஃதே ஊழ் அல்லது முற்பிறப்புக்களில் செய்த வினைப்பயன் எனப்படும்.

" எனைப்பகை உற்றாரும் உய்வர்; வினைப்பகை
வீயாது பின்சென் றடும்" (கு. 207)

என இதனைத் திருவள்ளுவர் திட்பம்பெற உணர்த்தியுள்ளார்.

"வீயாது உடம்போடு நின்ற உயிருமில்லை" (புறநா. 363) ஆதலால், இவ் வினைப்பகை நீங்காது, உயிர் புகுந்த இடந்தோறும் புகுந்து கொல்லுவதாகும். "ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்" (சிலப். பதி. 57); "உம்மை வினைவந்து உருத்தல் ஒழியாது" (மணி. வஞ்சி. 32); "வெல்வதற் கரிதால் வினையின் பயன்" (யசோ. 144); "உறற்பால நீக்கல் உறுவர்க்கும் ஆகா" (நாலடி. 104); "வேண்டினும் வேண்டா

விடினும் உறற்பால தீண்டாவிடுதல் அரிது" (நாலடி. 109) என, முன்னைவினை விடாதுசென்று செய்தவனை அடுதலைப் பன்னூல்களும் பாரித்துரைக்கின்றன. இவ்வாறு, வினைப் பயன், செய்தவனையே சென்றடைதற்கேதுவாய நியதியே ஊழ் எனப்படுகிறது. இம்மை முயற்சியால் கோடிக்கணக் கான பொருளீட்டினும், ஊழ்வகுத்த வகையானன்றி, ஒருவர் அதை நுகரவே முடியாதென்பதை, "வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது" (கு. 377) என்று திருவள்ளுவர் தெளியக் கூறியுள்ளார்.

எனினும், ஊழ் விலக்கும் விலக்கிற்கு இளையாது, வினையைத் தாழ்வறச் செய்தல்வேண்டுவது மக்களது தலையாய கடன் என்பதும், அவ்வாறு தாழ்வின்றி இடைவிடாமல் முயல்வார், "ஊழிற் பெருவலி யாவுள" (கு. 380) என அஞ்சத்தக்கதாக ஊழ் ஓதப்பட்டதாயினும், அதை வெல்ல வல்லவராவர் என்பதும்,

> "ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
> தாழாது உஞற்று பவர்" (கு. 620)

என்பதால் திருக்குறள் கட்டுரைக்கின்றது. ஊழ், ஒருமுறை அல்லது இருமுறையன்றி விலக்காமையின், பலமுறை முயன்று நல்வினையை இப் பிறப்பில் ஆற்றவேண்டு மென்பது இக் குற ளின் கருத்தாகும். முயலுங்கால் இடுக்கண் வரின், அதற்குத் தளராது முயலும் முயற்சிப் பயனே அடுத்த பிறப்புக்களில் துணையாகுமன்றி, வேறு பொருளோ, மனையோ, மனைவியோ, மக்களோ, பிறவோ துணையாதல் இல்லை. இடுக்கணிற்கு ஒல் காது முயன்று வெற்றிகாண விரும்புவார்க்கு, எல்லா அறிவும் எல்லா ஆற்றலும் உடைய ஒன்றன் துணை இன்றியமையாது வேண்டப்படும்.

இவ்வுலகமும், இதுபோன்றுள்ள பல வேறு உலகங் களும், செஞ்ஞாயிறும், வெண்டிங்களும் போன்ற வியத்தகு பொருள்களெல்லாம் தத்தம் நிலையில் திரியாது இயங்கும் இயக் கத்தைக் காணுந்தோறும், இவற்றை யெல்லாம் இயக்கும் **இயவுள்** ஒன்று இருத்தல்வேண்டுமென்று கொள்வதே

அறிவுடைமையாகும். ஆட்டுவோனையின்றிப் பாவை தானே ஆடமாட்டாது போன்று, இயக்குவோன் ஒருவனை இன்றி இவையெல்லாம் தாமாக இயங்கமாட்டா. இனி, அவ்வாறு இயங்கும் ஆற்றல் இவற்றிற்கு இயற்கையிலேயே உண்டென்று கொண்டாலும், காலமும் முறையும் தவறுமல் இவை இயங்குவதற்கு, இவற்றை ஏவிப் பணி கொள்ளும் தலைவன் ஒருவன் உளனாதல் வேண்டும் அன்றோ! யாவும் இயற்கை என்று கொள்வோர் சிலரை நோக்கி **வில்லியம் ஜேம்ஸ்** என்பார், "மலை நிற்பது இயற்கை; ஆறு ஒருவழியாக ஓடுவது இயற்கை. ஆனால், பூகம்பம் ஒன்று தோன்றின், மலை மடுவாகின்றது; ஆறு, வழி மாறுகின்றது: இவை இயற்கையே எனின், மடுவான மலை முன்போல் நிற்பதாதல் வேண்டும்! ஆறும் முன்சென்ற வழியைப் பின்பற்றவேண்டும்! அங்ஙனம் அவை ஆகாமையின், எல்லாம் இயற்கையே என்று கூறுவது எவ்வாறு பொருந்தும்?" என்று கேட்கின்றார். எனவே, இயற்கைக்கும் அப்பாற்பட்டதாய், அவ் வியற்கையையும் தொழிற்படுத்துவதாய், அதனின் மேம்பட்ட ஒரு பொருள் இன்றியமையாது வேண்டப்படும். அத்தகைய பொருள் யாதென்று மனம் நாடி நிற்பின், அம் மனத்தைக் கடந்து அது நிற்கின்றது. மொழி, கூற முடியாதபடி அது அதனைக் கடந்து நிற்கின்றது. மெய், பற்றமுடியாதபடி அதனையும் அது கடந்து நிற்கின்றது. இவ்வாறு மன மொழி மெய் மூன்றையும் கடந்து நிறபதால், அதனைக் **கடவுள்** என்று ஆன்றோர் அழைக்கலாயினர். அதுவே உள்ளும் புறமும் நிறைந்து நிற்பதெனக் கொண்டு, அதனை **இறை** என்று வழங்கலாயினர்; அதுவே யாவற்றையும் இயக்குதல்பற்றி, அதனை **இயவுள்**என்று இயம்பலாயினர்; ஆனால், மக்கள் தாம் நினைத்த வடிவாகவோ, பிறிதாகவோ, அதனருள் பெற்று அதைக்கொள்ள விழைந்தால், அது கொள்ளுதற்கு உரியதாகவும் இருத்தல்பற்றி, அதைத் **தேவு** எனவும் தெளிந்து உணர்த்துவாராயினர். "தேவுக் கொளற் பொருட்டே" என்பர் தொல்காப்பியர் (தொல். சொல்: 345). இத் தேவு என்னும் சொல்லடியாகவே, தேவன், தேவி, தேவர், தெய்வம் என்ற இந்தமிழ்ச் சொற்கள் தோன்றித் தமிழ்நூல்களுள் பயின்று வருதல், ஏனைக் கடவுள்,

இயவுள், இறை என்ற சொற்கள் உணர்த்தும் பொருள்களை விடக் கொண்டும், கண்டும், அதுவாகியும் பயன் பெறுவிக்கும் சிறப்புப் பொருள் பற்றியே ஆகும்.

திருவள்ளுவர் அக் கடவுட் பொருளின் சிறப்புக்கள் அனைத்தையும் சுருங்கக் கூறி விளங்கவைத்துள்ளார். உலகுயிர்கள் தம் வினைப்பயனைத் துய்ப்பதற்கும், துய்த்துத் தீரக்கழியாத முன்பே தளர்ச்சியடைந்த விடத்து ஆறுவதற்கும், முறையே தோற்றமும் ஒடுக்கமும் பெற அவற்றிற்கு ஆதியாய் நிற்றலின் 'ஆதிபகவன்' (கு. 1) என அப் பொருள் கூறப்படுகின்றது. உயிர்களெல்லாம், ஆதிபகவன் போன்றே என்றும் அழியாது நிலைபெறும் பொருள்கள் என்பது, 'மன்னுயிர்' என்பதால் முன்னரே தெளியப்பட்டது. எனினும், பேதைமை, அறியாமை, அஞ்ஞானம், அவிச்சை எனப் பலவாறு கூறப்படும் அதனால், அவை மாறிமாறிப் பிறப்பெய்தும் தகையன. பிறவிக்குக் காரணம் பேதைமை என்பது, "பிறப்பென்னும் பேதைமை" (கு. 358) என்பதால் உணரலாம். ஊழிதொறும் உயிர்களுக்கு ஒடுக்கம் ஏற்படுதல், "ஊழி பெயரினும்" (கு. 989) என்றவிடத்து வரும் ஊழி என்னும் சொல்லால் தெளியலாம். இவ்வாற்றால், மாறிமாறிப் பிறந்திறந்துவரும் உயிர்கள், ஊழி முடிவில் தன்னில் ஒடுங்கியவாறே மீண்டும் தோன்றுவதற்கு, பிறந்திறக்கும் தன்மையில்லாத தான்ஆதியாய் நிற்பதுபற்றியே அம் முதற்பொருள் ஆதிபகவன் எனப்படுவதாயிற்று. இயல்பாகவே உயிர்கள் அறியாமையோடு கூடி நிற்க, அம் முதற் பொருளோ, அறியாமை சிறிதும் இல்லாத தூய மெய்யுணர்வாம் தன்மையது என்பார், "வாலறிவன்" (கு. 2) என அதைத் திருவள்ளுவர் உணர்த்தினர்; அன்பால் நினைவாரது உள்ளமாகிய மலரின்கண், அவர் நினைந்த வடிவோடு விரைந்துவந்து பொருந்துமென்பார், அதனையே "மலர்மிசை ஏகினன்" (கு. 3) என்றார். இதனைப் பகவற் கீதையும் (7:21), சிவஞான சித்தியாரும் (115) உணர்த்துதல் காண்க. அறியாமை காரணமாகவே உயிர்க்கு ஒரு பொருளின்கண் விருப்பும், ஒரு பொருளின்கண் வெறுப்பும் உண்டாவது ஆதலால், அறியாமை அறவே இன்றிய

அப் பொருள் "வேண்டுதல் வேண்டாமை இலான்" (கு. 4) எனப்பட்டது. யாண்டும் நீக்கமற நிறைந்திருந்தாலன்றி, உயிர்களெல்லாம் ஆற்றும் வினைகளை அறிதலியலாது ஆகலான், நீக்கமின்றி யாண்டும் நிறைந்திருப்பது அப்பொருள் என்பது "இறைவன்" (கு. 5) என்ற சொல்லால் இயம்பப் பட்டது. பேதைமை காரணமாகப் பிறப்புற்றோர்க்கே ஐம்பொறி களும், அவற்றை வழியாகவுடைய ஐந்தவாவும் உள்ளன. முழு முதற் பொருளோ பேதைமை இன்றியது; பிறப்பற்றது; ஆதலின், ஐம்பொறி வாயிலாகத் தோன்றும் ஐந்தவாவும் இயல்பாகவே இல்லாத, அது "பொறிவாயில் ஐந்தவித்தான்" (கு. 5) என்று புலப்படுத்தப்பெற்றுள்ளது. ஒப்பாரும் மிக் காரும் இன்றிய அது, "தனக்குவமை இல்லாதான்" (கு. 7) என்று தனிச்சிறப்போடு கூறப்பட்டது. எல்லாவுயிர்களிடத் தும் வேறுபாடின்றித் தண்ணளியுடையதாய், அவைஅனைத் தும் பிறவிப்பிணியிலிருந்து நீங்கிப் பேரின்பம் எய்தவேண்டும் என்னும் அறக்கருணை யுடையதாய், அஃது அவற்றிற் கிழைக் கும் இன்ப துன்பங்களெல்லாம் அவ் வறக்கருணைபற்றியே என் பார், அதனை "அற ஆழி அந்தணன்" (கு. 8) என வள்ளுவர் வாயாரப் புகழ்ந்துள்ளார்; எண்ணப்படும் குணச் சிறப்புக்க ளெல்லாம் ஆன பொருள் அல்லது ஒப்பற்ற எட்டுக் குணங் களே வடிவமான பொருள் அஃது என்பார் அதனை "எண் குணத்தான்" (கு. 9) என ஏத்தினர். இவ்வாறெல்லாம் இயம்புதலோடு இன்னும் பிறவாறெல்லாம் இயம்பு தற்கு உரிய அப்பொருள் நீக்கமற நிறைந்திலங்கி நிற்கும் பரிபூரணமாந்த வாழ்வாகிய ஒரு பொருளே என்பார் முடிந்தது முடித்தலாக மீண்டும் "இறைவன்" (கு. 10) என்று அதை இயம்பி முதலதிகாரத்தை அவர் முடித்துள்ளார்.

இவ்வாறு அம் முழுமுதற் பொருளின் இயல்புகளையெல் லாம் விளக்கியவர், மாறி மாறிப் பிறந்தும் இறந்தும் களைத்த தாம், இளைப்பாறுதற்காகத் தம் அறியாமையோடும் அதன்கண் ஒடுங்கியவாறே, தம் மலக் கழிவின் பொருட்டு மீண்டும் தோன்றிய தோற்றத்திற்கு ஆதியாய் உள்ளது அதுவே என மக்களுடம்பு பெற்றவர் தம் பகுத்தறிவால் உணர்தல் வேண்டும் என்பதை முதற் குறளாலேயே உணர்த்தினர்.

பகுத்தறிவால் பொதுமையாக உணர்ந்தவர், சமயநூற் கல்வியால் அதன் இலல்புகளை யெல்லாம் சிறப்பாக உணர்ந்து தெளிந்த உணர்விற்குப் பயன் அதன் தாளை வணங்குதல் ஆகும் (கு. 2). அதன் இணையடிகளை இடைவிடாமல் அன்பால் நினைந்து உருகுபவர் மேலான வீட்டுலகின்கண் அழியாமல் வாழும் வாழ்க்கை பெறுவர் (கு. 3). அவ்வாறு நினைப்பவர்க்கு எக் காலத்தும் பிறவித் துன்பங்கள் உளவாகா (கு. 4). அதன் மெய்ம்மையான புகழை விரும்பினவரிடத்து இருள் என்றும், மயக்கம் என்றும், அறியாமை என்றும், பேதைமை யென்றும், அவித்தை என்றும் நன்னூல்களால் பலவாறு இயம்பப்பெறும் அதனால் வரும் நல்வினை தீவினை என்னும் இரண்டு வினைகளும் உளவாகா (கு. 5). அம் முதற் பொருள் ஓதிய ஒழுக்கநெறியில் நிற்பார், பிறப்பிறப்பின்றி எக்காலத்தும் ஒரு தன்மையராய் வீட்டுலகில் வாழும் தன்மையர் ஆவார் (கு. 6). அதன் திருவடிகளை இடைவிடாமல் அன்போடு நினைப்பார்க்கு மனக்கவலையே ஏற்படாது (கு. 7). அவ் வடிகளை நினைப்பவர்க்கே பொருளின்பங்கள் நிலையாதன என்ற எண்ணமுண்டாய், அவற்றை நீங்கி உய்யும் வழியுண்டாகும் (கு. 8). அதன் தாளை வணங்காத் தலை பயனற்றதாகும் (கு. 9). அதனடியை இடைவிடாது நினைப்பவரே, தொடர்ச்சியாய் வரும் பிறப்பிறப்புக்களிலிருந்து நீங்கிப் பேரின்பம் அடைவர்; அல்லார் அடையார் (கு. 10): இவ்வாறெல்லாம் உணர்த்துதல் வாயிலாக, அம் முழுமுதற் பொருளை வணங்கலும், வாழ்த்தலும், நினைதலும், நன்னெறிக்கண் நிற்றலுமே பிறப்பிறப்பறுத்துப் பேரின்பம் பெறும் வழியாம் எனத் திருவள்ளுவர் எச் சமயத்தாரும் ஏற்று உய்யும் முறையைத் தெளிவாக விளக்கியிருப்பது, வேறு எந் நூலிலும் கண்டறிதற் கியலாத தனிச்சிறப்பாகும். ஈண்டுக் கூறப்பெற்ற பத்துக் குறளிலும், அம் முழுமுதற் பொருளை உருவுடைப் பொருளாக, உறுப்புடைப் பொருளாக, வள்ளுவர் ஓதியிருப்பது, வடிவுடைப் பொருளையே பற்றிப் பழகிய மக்களுயிர்க்கு, வணங்கி வாழ்த்தி நினைந்து வழிபடுதற்கு, வடிவுடைப் பொருளாக அது கொள்ளப்பெற்றாலன்றிக் கூடாது என்பது கருதியேயாகும். அருவாய் யாண்டும்

நீக்கமின்றி நிறைந்திருக்கும் இயல்புடைய அம் முழுமுதற் பொருள், அன்பால் நினைவார் நினைந்தவண்ணம் உள்ளக் கமலத்தில் பொருந்தி நின்று, அவர்தம் உள்ளத்தில் தெளிவு உண்டாக்கி, அறநெறியையே பற்றிநிற்கச்செய்து, மனமாசிலை தாக்கி, மெய்யுணர்வுறுத்திப் பேதைமை நீங்கிப் பேரின்பம் பெறச் செய்விக்கும் என்ற நுட்பமான பொருள், இவ் வதிகாரத்தோடு மெய்யுணர்தல் முதலிய ஏனை யதிகாரங்களையும் கூட்டியுணர்வார்க்கு, உள்ளங்கை நெல்லிக்கனியாகும்.

மழையின்றி மாநிலமும், அதன்கண் வாழ்வெய்தும் உயிர்களும் இல்லையாதலால், அம் மழையைப் பெய்வித்து உயிர்களை வாழ்விக்கும் அதன் வரம்பிலா அருளுடைமை, வான் சிறப்பால் அறிதற்கு உரிமையாக்கப்பட்டது (கு. 11-20).

அற ஆழியாகிய அதனை உள்ளவாறு உணர்வதற்குரியோர், ஒழுக்க நெறி நின்று, அம் முதற் பொருளின்கண்ணும் அஃதோதிய நெறியின்கண்ணும் பற்றுச் செய்து,நிலையாத பொருளின்பங்களில் பற்றுச் செய்யும் இயல்பை நீத்தவர் ஆவர். இவ்வாறு நின்று நீத்தவரே, பிறப்பறுத்து வீடு பெறற்குரிய அறநெறியை உலகிற்கு உணர்த்தவல்லார் ஆதலின், அத் தகைய நீத்தார் பெருமை அளவிடற்கரியதாகும் (கு. 22). இவர்கள் துன்ப இன்பக் கூறுபாடுகளை ஆராய்ந்தறிந்து, பிறப்பறுத்தற்பொருட்டு, நிலையாத பொருள்களில் பற்றினைத் துறந்த பெருமையுடையவர்கள் (கு. 22); நெஞ்சுறுதியால், பொறிகளைப் புலன்களில் அவை விரும்பியவாறே செல்லவொட்டாதபடி தடுக்கவல்லவர் (கு. 24); இவ்வாற்றால், செயற்கரிய செய்ய வல்லவர்கள் (கு. 25); நாற்றம், சுவை, ஒளி, ஊறு ஓசை என்று கூறப்படுகின்ற தன்மாத்திரைகள் ஐந்து, அவற்றின் காரியமாகிய மண் நீர் தீ வளி வெளி என்று கூறப்படுகின்ற பூதங்கள் ஐந்து, மெய் வாய் கண் மூக்குச் செவி என்னும் அறிகருவிகள் ஐந்து, வாய் கை கால் குதம் குறி என்னும் தொழிற் கருவிகள் ஐந்து, மான் என்னும் புத்தி ஒன்று, அகங்காரம் ஒன்று, மனம் ஒன்று, இவற்றிற்குக் காரணமான மூலப் பிரகிருதி ஒன்று, இவை எல்லாவற்றையும் அறியும் புருஷன் எனப்படும் ஆன்மா

ஒன்று ஆகிய தத்துவங்கள் இருபத்தைந்தும் அல்லாது உலகம் எனப் பிறிதொன்றில்லை என அறிந்து, ஆன்மாவானது இந்தத் தத்துவக் கூட்டத்திலிருந்து அறிவு வகையால் பிரிந்து நின்று, ஏனையவற்றில் வைத்துள்ள பற்றை விடுத்துச் செம்பொருளிடத்துப் பற்றுக் கொண்டால், மீண்டும் இத் தத்துவக் கூட்டத்தில் சிறைப்படாது பிறப்பறும் என்பதை உறுதியாகக் கொள்ளவல்லவர் (கு. 27); இவர்கள், உண்மையை உணர்ந்தோராதலின், நிறைமொழியர் (கு. 28); பற்றறுகை, மெய்யுணர்வு உறுகை, அவா அறுகை என்னும் குணங்களின் குன்றேறி நிற்பவர் (கு. 29). இவர்களே, எல்லா உயிர்களிடத்தும் மிக்க தண்ணளி பூண்டு, தாங்கள்பெற்ற இன்பம் அவையும் பெறவேண்டும் என்று எண்ணும் அந்தணர் (கு. 30).

இவர்களால் உணர்த்தப்படுவதே அறமென்னும் நலமாம். அறமாய நல்வினை யாற்றுதலே பிறப்பறுத்து வீடெய்து விக்கும் (கு. 38) என்னும் அதன் ஆற்றலை இவர்களே நன்கு உணர்த்தவல்லவர் என்பது கருதி, அறன்வலியுறுத்தல் என்னும் அதிகாரத்தை, நீத்தார்பெருமை என்னும் அதிகாரத்தின்பின், திருவள்ளுவர் அமைத்துள்ளார்.

இறைவனடிகளை இடைவிடாமல் வணங்கியும் வாழ்த்தியும் நினைந்தும், அறவழி நின்றும், துன்பம் சிறிதும் இன்றி இன்பமாக வாழ்ந்துவரும் நீத்தாரை, வடமொழியில் சீவன்முத்தர் என்று வழங்குவர். இவர்களையே, சைவர்கள் 'அடியார்கள்' என்றும், வைணவர்கள் 'ஆழ்வார்கள்' என்றும் கூறுவர். உடலோடு வாழ்கின்ற காலத்திலேயே உலகியற் பொருளிற் பற்றுவிட்டு, வீடு பெற்றவர் என்பது 'சீவன் முத்தர்' என்னும் தொடர்க்குப் பொருளாகும். 'நீத்தார்' என்ற சொல்லிற்கும் பொருள் இதுவே. எதைவிட்டு, வீடு பெற்றவர் இவர் என்பதை விளங்க அறிந்துகொள்ளுதல் தக்கது. நால்வகை நிலைகளைக் கூறுவோர், பிரம்மசரிய நிலையில் ஓத வேண்டுவன ஓதியறிந்து, கிருஹஸ்த நிலையில் மனையாளோடு கூடி இன்பம் நுகர்ந்து மக்களைப் பெற்று வாழ்ந்து, வானப்பிரஸ்த நிலையில் மனையையும் மக்களையும் விடுத்து

மனைவியோடுமட்டும் காட்டிற்குச் சென்று அவளைவிட முயன்று நின்று, சந்நியாச நிலையில் அவளையும் விட்டு நீங்குதல் என்று கூறுவர். திருவள்ளுவர்க்கு இஃது உடன்பாடன்று. இது பற்றியே, இவர் நால்வகை நிலையைக் கூருது, இல்லறம் துறவறம் என இருவகை நிலையையே கூறி, அவ் விரண்டையும் ஒன்றுசேர்த்து அறத்துப்பால் என ஒரு பாலாகவும் அமைத்துவிட்டார். பிரம்மசரியத்தை இல்லறத்திலும், வானப் பிரஸ்தத்தைத் துறவறத்திலும் அடக்கிக் கூறியிருக்கிருர் திருவள்ளுவர் என்று கருதுவர் சிலர். துறவற இயலில், விடுதல் குறித்துத் 'துறவு' என்னும் ஓர் அதிகாரமும் இவர் அமைத்துள்ளார். ஆண்டு, முன்ஐந்து குறள்களை நோக்கு மிடத்து, மேற்குறித்தது போன்று, மனையையும், மனைவியையும், மக்களையும், பொருளையும் விடுதலே துறவு என்பதுபோன்றுகூடத் தோன்றும். ஆனல், பின் ஐந்து குறள்களும் **பற்றினை** விடுதலே துறவாகும் என்பதைத் தெளிவாக உணர்த்துதல் காணலாம். பற்றினை விடாமல், பொருளைவிட்டு நீங்குபவர்க்கு, மற்ருேரிடத்தில் அதே வகையான பொருள் தோற்றமளிப்பின், கழியாது நின்ற பற்றுக் காரணமாக அப் பொருளினிடத்தில் தொடர்பு ஏற்பட்டுவிடும். அப்படியாயின் பொருளைத் துறப்பது எவ்வாறு கூடும்? இக் கருத்தைத் துறவு அதிகாரத்தின் முதற் குறள் தன்னகத்தே அடக்கியிருத்தல் வியப்பைத் தருவதாகும். மரபாக அக் குறளைப் பிரித்துப் பொருள் செய்தலொழித்து, "யாதனின் யாதனின் நீங்கியான் **ஓதல்** அதனின் அதனின் இலன்" (கு. 341) எனப் பிரித்துவிட்டால், திருவள்ளுவர் கருத்து நன்கு விளங்கலாம். ஓதல் என்பது ஒழிதல் என்னும் பொருள் தருதலை, "ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை" (கு. 653) என்ற இடத்துக் காண்க. "எவ்வெப் பொருளிலிருந்து நீங்கினுனே அவ்வப் பொருளி லிருந்து உண்மையில் நீங்கி ஒழிந்தவன் ஆகான்; ஆனல், பற்று விட்டவனே உண்மையில் நீங்கினவன் ஆவான்" என்று பொருள் கொண்டால், துறவாவது: பற்று விடுதல் என்ற திருவள்ளுவர் கருத்து வெளிப்படுத்தியதாகும். இவ்வாறு பற்றுவிடுதல் இயற்கையான துறவேயல்லாது, பொருளையும்

மனைவியையும், மக்களையும், பிறவற்றையும் விடுதல் இயற்கையான துறவேயாகாது. பற்று விடுதலாகிய துறவே தமிழ்த் தொன்னூல்களால் விதிக்கப்பட்ட துறவாகும். இவ் வகைத் துறவைத் திருவள்ளுவர் வற்புறுத்தலைத் தொடர்ந்து காண்போம்: 'தானல்லாத உடம்பைத் தானென்றும், தன்னோடு இயைபில்லாத பொருளைத் தனதென்றும் கருதி அவற்றின்கண் பற்றுச் செய்வதற்குக் காரணமான மயக்கத்தைக் கெடுப்பான் வீட்டுலகம் எய்துவான்' என்பார், "யானெனத தென்னும் செருக் கறுப்பான் வானோர்க்கு உயர்ந்த உலகம் புகும்" (கு. 346) என்றார் வள்ளுவர். இதனால், மயக்கம் என்னும் பேதைமை அல்லது அறியாமை நீங்கின் பற்றறும்; பற்றறுதல் வீடுதரும் என்ற உண்மை, திருக்குறளின் சிறப்பியல்பாதல் உணரலாம். (யான், எனது) என்னும் இருவகைப் பற்றினையும் இறுகப் பற்றி, அவற்றை விடாதவரைப் பிறவித் துன்பங்கள் இறுகப்பற்றி விடமாட்டா (கு. 347). ஆதலால், பற்றுவிடலே வீடென்பது இக் குறளால் நன்கு வலியுறுத்தப்பட்டது. இவ்வாறு பற்றுக்கொள்வதற்குக் காரணமாக இருப்பது செருக்கு அல்லது மயக்கம் அல்லது அறியாமை அல்லது புல்லறிவாண்மை யாகும். 'நில்லாதவற்றை நிலையின என்று உணர்வது' இப் புல்லறிவாண்மையால்தான் (கு. 331). பெருஞ் செல்வம் ஒருவனிடம் வந்து பொருந்துவதும் நீங்குவதும், கூத்தாட்டுக் காண்பதற்குப் பெருங்கூட்டம் வந்து கூடுவதும், கூத்து முடிந்தபின் அது நீங்குவதும்போன்று நிலையாமையுடையனவாம் (கு. 332). ஆகையால், நிலையாத செல்வம் பெற்ற காலத்தில், அதனிடத்துப் பற்றுக்கொள்ளாமல், அதனால் செய்தற்குரிய அறங்களைச் செய்தல் வேண்டும் (கு. 333). இவ்வாறே, உடலும், வாழ்நாளும், காணப்படும் எல்லாப் பொருள்களும் நிலையாதன ஆதலால், அவை உள்ளபோதே அவற்றால் பெறத்தக்க பயனை அடையப் பற்றின்றி முயல வேண்டுமே ஒழிய, அவற்றை விடுதலே வீடாம் எனின், கட்டி வாழும் வீடேயில்லாது காட்டில் வாழும் விலங்குகள் வீடெய்தற்பாலன என்று கொள்ளவேண்டும்.

*அறிந்தோ அறியாமலோ பொருளின்பங்களில் பற்று ஏற்படுகின்றது. இப்பற்றுனது, கடந்த பல பிறப்புக்களில், உடலில் யானென்றும், பொருள் முதலியவற்றில் எனது என்றும், மயக்கத்தால் தொடர்புகொண்டு பழகிய பழக்கத் தொடர்ச்சியால், தன்னையறியாமலே ஒருவனுக்கோ ஒருத்திக்கோ இயல்பாகவே ஏற்படுவதாம். இப் பற்று நீங்கினலொழிய உய்தியில்லை என்பதை உண்மையாகவும் உறுதியாகவும் உணர்ந்தபின், பற்றுவிடவேண்டும் என்னும் நல்வேட்கை உண்டாம். வேட்கை உண்டாகியும், பற்று வைத்தே பழகிய பழக்கத்தால், ஏதாவதொரு பொருளைப் பற்றி நிற்கவே, உயிர் முற்படும்; அன்றிப் பற்றின்றி நிற்றல் ஆற்றுது. இவ்வாறு இடர்ப்படும் உயிர்க்குத் திருக்குறள் உயரியதோர் உபாயம் கூறுகின்றது; 'பற்று நீக்குவான் வேண்டி இடர்ப்பட வேண்டா. பொருளின்பங்களிலும், உடலிலும், உற்றுரிடத்திலும் வைக்கும் பற்றுதலை, யாண்டும் நிறைந்திலங்கும் இறைவன்பால் வைத்துப் பழகினல், நுனியிலிருந்து கரும்பு தின்பார்க்கு அடிப் பகுதியை நெருங்க நெருங்க இனிப்புச் சுவை மிகுதியாக ஏற்படுதல் போன்று, அவனிடத்தில் முதன்முதல் பற்றுக் கொள்ளுங்கால் ஏற்படும் சிற்றளவினதான இன்பம், நாள் செல்லச் செல்ல மிகுந்து, முடிவில், ஒரு நாள் எல்லையில்லாத இன்பமாகி விடுங்கால், உலகியற் பொருளில் இருந்த பற்று அறவே கெட்டொழியும். இறைவனிடமே பற்றுக்கொண்டொழுகுபவர், உயிர்விடுங்கால் அவனையே நினைந்து உயிர் நீங்குவாராதலின், அவனையே திண்ணமாக அடைவர். இச் சிறப்பெய்துதலே வீட்டின்பம் அடைதலாகும்'. எனவேதான்,*

"பற்றுக பற்றற்ருன் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு" (கு. 350)

*எனத் தெளிய உணர்த்தியுள்ளது திருக்குறள். ஆகாயம், ஏனைய பூதங்களையும் அவற்றின் காரியங்களையும் பற்றி நின்றே, அவற்ருேடு தொடர்பின்றி நிற்றல் போன்று, இறைவன் எல்லாப் பொருளையும் பற்றிநின்றே பற்றின்றி இருப்பவன் ஆதலால், அவனிடம் பற்றுவைத்துப் பழகுவார், உயிர்,*

சார்ந்ததன்வண்ணம் என்றபடி, தாமும் பற்றற்றவராவார்; எனவே, ஒரு பற்றும் இல்லாமையால் வீட்டின்பம் எய்துவர். அவன் ஓதிய வீட்டு நெறியைப் பற்றுவார், விடாது வந்த பற்றிலிருந்து நீங்குவார் என்பதும் இக் குறளுக்குப் பொருளாம் என்றாலும், முடிவு ஒன்றேயாதல் காணலாம். பற்று நீங்குதற்கு இத் தகைய துறவு மனப்பான்மை வேண்டற் பாலதேயன்றித் துறவிகள்போல் வேடம் புனைதல் முதலியன வேண்டற்பாலன அல்ல. அவ்வாறு கொள்வன எல்லாம் பிறரை ஏமாற்றுதற்கு உரியனவாய், இறுதியில் தாமும் ஏமாற்றம் உறுதற்கே உதவும்.

"மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின்" (கு. 280)

"பற்றற்றேம் என்பார் படிற்றொழுக்கம் எற்றெற்றுஎன்று
ஏதம் பலவும் தரும்" (கு. 275)

"வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும்" (கு. 271)

"வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று" (கு. 273)

"தவம்மறைந்து அல்லவை செய்தல் புதல்மறைந்து
வேட்டுவன் புட்சிமிழ்த் தற்று" (கு. 274)

என்றெல்லாம் எடுத்தியம்பி, வேடங்களால் பற்றற்றவர்போல் நடிப்பவர் செயலைத் திருக்குறள் வன்மையாகப் பழித்திருத் தலைக் காண்பார், பற்றற்ற வாழ்க்கையாவது, தம் மனமே தமக்குச் சான்று பகருமாறு, தம் உள்ளம் ஒன்றுமேயறியப் பற்றற வாழ்தலாகும் என்று தேறி, அவ்வாறு வாழ முயன்று பேரின்பமாம் பயன்பெற நாட வேண்டுமே யன்றி, வேடம் முத லியன புனைந்து துறந்தார்போல் ஒழுகுதல், நற்பயன் ஒன்றுமே தாராததோ டன்றிப் பழிபாவமாம் தீயவிளைவுகளை மிகுத்து விடும் என்பதைத் தெள்ளத்தெளிய உணர்தல் வேண்டும். "உற்றநோய் நோன்றல் உயிர்க்கு உறுகண் செய்யாமை அற்றே தவத்திற்கு உரு" (கு. 261) எனத் தவத்திற்குத் தனிச் சிறப் பான இலக்கணம் வகுக்கும் குறள், தவசிகளாய்க் கோலம்

கொண்டு ஒழுகுவார்க்கு உணர்த்தும் ஒப்புயர்வற்ற உண்மையும், நெறியும் ஆகும்.

பற்றற்ற இறைவனிடத்துப் பற்றுக் கொள்வதிலோ, பற்றற்ற அவ் விறைவன் ஓதிய வீட்டுநெறியின்கண் பற்றுக்கொள்வதிலோ முனைவார்க்கே, பிறப்புவீடுகளையும், அவற்றின் காரணங்களையும் ஐயம் திரிபு அற உணரும் உணர்வு உண்டாகும். பிறப்பு எத் தன்மையது? பிறப்பு இன்பம் இன்றியது. பிறப்பு உண்டாவது எதனால்? பிறப்பு உண்டாவது மெய்ப்பொருள் அல்லாதவற்றை மெய்ப்பொருள் என உணரும் திரிபு உணர்ச்சியால். திரிபு உணர்ச்சியாவது யாது? மறு பிறப்பும், இருவினைப் பயனும், கடவுளும் இல்லையெனவும், மற்றும் இத் தன்மையவும் சொல்லும் மயக்கநூல் வழக்குக்களை மெய்ந்நூல் வழக்கெனத் துணிதல்: ஒன்றைப் பிறிதொன்றாகத் துணிதலே திரிபு உணர்ச்சி எனப்படும். மருள், மயக்கம், திரிபு, அவிச்சை முதலியன ஒருபொருட்கிளவிகள். இத் தகைய திரிபு உணர்ச்சியிலிருந்து நீங்கி, மெய்யுணர்வை உடையராயினார்க்கு, அம் மெய்யுணர்வு, பிறப்பினை நீக்கி வீட்டினைக் கொடுக்கும். இனி, ஐய உணர்ச்சியும் பிறப்பிற்குக் காரணம் ஆகும். ஐயம் என்பது ஒன்றன்கண் பல தலையாய உணர்வு. அஃதாவது மறு பிறப்பும், இருவினைப்பயனும், கடவுளும் உளவோ இலவோ என ஒன்றன்கண் துணிவு பிறவாது நிற்றல். ஒருவாற்றால் பிறர் மதம் களைந்து தம் மதம் நிறுத்தல் எல்லாச் சமயநூல் கட்கும் இயல்பாகலின், அவை கூறுகின்ற பொருள்களுள் யாது மெய் என நிகழும் ஐயத்தினை, யோக முதிர்ச்சியுடையார் தம் அனுபவத்தால் நீக்கி மெய்யுணர்வர். அவர்க்கு அவ் வனுபவ உணர்வு பழகி வரவர, பழைய உலகியலுணர்வு தூர்ந்து வரும்: இவ்வாறு, "ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின் வானம் நணியதுடைத்து" (கு. 353).

மெய்யுணர்வு இல்லார்க்கு, மனம்மட்டும் தம் வயப்படுதலால் வீடு உண்டாகாது. பற்றறுதலால் பிறப்பறும் என்பதை உணர்ந்தார்க்கும், ஐயம் திரிபின்றிய மெய்ப்பொருளுணர்வு ஏற்பட்டாலன்றி, அம் மெய்ப்பொருளாம் செம்பொருளிடத்துப் பற்றுச்செய்தல் வாயிலாகப் பொய்ப் பொருளில் பற்றுச் செய்தலிலிருந்து விடுதலை பெறமுடியாது.

இனி, மெய்ப் பொருளுணர்வாவது யாது? நிலம் முதல் உயிர் ஈருகத் தத்துவங்கள் இருபத்தைந்து என முன்னர் எண்ணப் பட்ட அவற்றைத் தத்தம் காரணங்களுள் ஒடுக்கிக்கொண்டு சென்ருல், காரண காரியம் இரண்டுமின்றி முடிவாய் நிற்பதனை உணரலாம். ஏனைய தத்துவங்களெல்லாம் காரண காரியமாக நிற்றலும், உயிர் காரண காரியம் இரண்டுமின்றி அழிவில்லாமல் நிற்றலும் உள்ளவாறு உணர்தலே மெய் யுணர்வு அல்லது மெய்ப்பொருளுணர்வு ஆகும். இவ்வாறு உணர்ந்தபின், அவ் வுயிர், மற்றத் தத்துவங்களோடு கூடி, அவற்றில் பற்றுறுவது மருள் என்னும் மயக்கவுணர்வு என் பதும், அவ்வாறு பற்றுறுவதே பிறவிக்குக் காரணமாம் என் பதும், அப் பற்று அறுதலே வீட்டிற்குக் காரணமாம் என்பதும் தெளிய உணர்ந்தபின், பற்றுத் தானே நீங்கியொழியும். நுட்ப மாக நோக்குமிடத்து, மெய்ப்பொருளுணர்வு உண்டானபோதே மயக்கவுணர்வு நீங்குதலும், பற்றறவு உண்டாதலும் அமை யும். மற்றீண்டு வாராநெறி எய்த விரும்புவார், இப் பிறப் பிலேயே அநுபவமுடைய ஆன்ருேரான நீத்தோர்பால் மெய் யுணர்வு உண்டாதற்குக் கருவிகளான உபதேசமொழிகளை ஐயந்திரிபறக் கேட்டு மெய்ப்பொருளுணர்வு பெறுதல் வேண்டும். அங்ஙனம் கேட்ட உபதேசமொழிகளை, அளவை களானும், பொருந்துமாற்ருனும் ஒருவனுள்ளம் தெளிய ஆராய்ந்து, அதனுல் முதற் பொருளை உணருமாயின், அவனுக்கு மாறிப் பிறப்புளதாக நினைக்கவே வேண்டுவதில்லை. இதனைக் கேட்டல் சிந்தித்தல் தெளிதல் வாயிலாக ஒருவன் எய்திவிடின், பிறப்பொழிந்து பேரின்பம் உண்டாகும்; மெய்ப்பொருளுணர் வால், தான் ஏனைய தத்துவங்களின் வேருய்க் காரண காரிய மின்றி நிற்றலையும், செம்பொருள், முதற்பொருள், மெய்ப் பொருள் எனப்படும் கடவுள், தோற்றக் கேடுகள் இன்மை யால் நித்தமாய், நோன்மையால் தன்னை ஒன்றும் கலத்தலின் மையின் தூயதாய், தான் எல்லாவற்றையும் கலந்து நின்றும் விகாரமின்றி என்றும் ஒரு தன்மைத்தாயிருத்தலின் செம்மை யாய் நிற்றலை உணர்ந்து, தனக்கும் அதற்கும் உள்ள தொடர்பு, நில முதலான இருபத்து நான்கு தத்துவங்களால் பிரிக்கப்பட் டுள்ளது, மயக்கம், ஐயம் என்னும் பொய்யுணர்வால் என்பது

தெளிந்து அவற்றில் பற்றுக்கொண்டு பிறந்திறந்து துன்பம் எய்தி வந்த அறியாமையிலிருந்து நீங்கின், இப் பிறப்பிலேயே வீடென்னும் பேரின்பம் எய்தலாகும். இவ்வாறு மெய்யுணர்வு பெற்றோர்க்கு, முற்பிறப்புக்களில் செய்த வினைப்பயன்களும் (சஞ்சிதம்), இனிமேல் வரக்கடவ வினைப் பயன்களும் (ஆகாமியம்), கதிரவன் தோன்றக் கங்குல் நீங்குவது போன்று நீங்கிக் கெட்டொழியும் என்பது மெய்யுணர்தல் என்றும் அதிகாரத்தால் திருக்குறள் தெளிய உணர்த்தியிருக்கின்றது.

மெய்யுணர்வால் வினைத் தொடர்பு அறுத்தார்க்கு, இப்போதுள்ள உடம்பும், அது நுகர்தற்குக் கொண்ட வினைப் பயன்களும் (பிராரப்தம்), உயிர் நீங்கும்வரையில் உளவாம் ஆகலின், உணவு, உடை, உறையுள் முதலியனபற்றிப் பழைய பயிற்சி வயத்தால் உலகப் பொருள்களில் பற்று ஏற்படுதல் கூடும். அவ்வாறு பற்றுக் கொள்ளும் நினைவும் அவிச்சை எனப் பிறப்பிற்கு வித்தாகும். அதனை இடைவிடாத மெய்ப்பொருளுணர்வால் அறுத்தல் இன்றியமையாது வேண்டப்படும். பற்றுவிட்ட பொருள்களில் மீண்டும் பற்றுக் கொள்ளுதல் **அவா** எனப்படும். இந்த அவாப் பிறப்பு எனும் வித்தாகும் (கு. 361). உடம்பு நீங்கிப் போம் காலத்து அடுத்த வினையும், அது காட்டும் கதி நிமித்தங்களும், அக் கதிக்கண் அவாவும் உயிரின்கண் முறையே வந்து உதிப்ப, அறிவை மோகம் மறைப்ப, அவ் வுயிரை அந்த அவா அக் கதிக் கண் செலுத்துமாகலின், அவாவே பிறப்பீனும் வித்தாகின்றது. பிறவாமை வேண்டுவார், ஒன்றையும் அவாவாமை வேண்டும் (கு. 362). அவாவாமை, சிறந்த செல்வம் எனப்படும் (கு. 363). இஃது, இடைவிடாது—தமிழில் **வாய்மை** என்றும், வடமொழியில் '**சத்**' என்றும் வழங்கப்படும்—செம்பொருளிடத்துப் பற்று வைப்பதனால், தானே நீங்கியொழியும் (கு. 364). பிறவி அற்றவர் என்று கூறப்பெறுபவர் அவா அற்றவரே (கு. 365). மக்களை வஞ்சிப்பது இந்த அவாவே (கு. 366). இந்த அவா அற்றவர்க்குப் பிறவித் துன்பம் உண்டாகாது (கு. 368). அவாவே துன்பத்துள் துன்பமாகும்; இஃதொழியின் இடைவிடாது இன்பம் உண்டாகும் (கு. 369). இதுவே '**பசை**' என்றும் கூறப்படுவது (திருவாய்மொழி -

78 : 6). ஒருபோதும் நிரம்பாத இயல்புடைய அவாவை ஒருவன் நீக்கிவிட்டால், அவ்வாறு நீத்தல், அவனுக்கு அப்பொழுதே, என்றும் ஒரு நிலையனும் இயல்பாகிய வீட்டைத் தரும் (கு. 369).

இவ்வாறு நீத்தவரே, '**நீத்தார்**' என்று சிறப்பித்துக் கூறப்பெறுவர். இவர் அவாவை நீத்தல், ஒருநாள் இருநாள் அளவில் பயிலும் பயிற்சியால் உண்டாதல் இல்லை. சிறப்புடைய ஒழுக்கமே அறம் எனப்படும் அன்றே! உணர்வு தோன்றிய நாள்முதல், அவ் வொழுக்க நெறியில் நிற்றல் வேண்டும். அவ்வாறு நின்றால், அறம் எனப்படும் புண்ணியம் வளரும்; புண்ணியம் வளரப் பாவம் தேயும்; பாவம் தேய அறியாமை நீங்கும்; அறியாமை நீங்க, நித்த அநித்தங்களது வேறுபாட்டுணர்வும், அழிதல் இயல்பினவான இம்மை மறுமை இன்பங்களின்கண் வெறுப்பும், பிறவித் துன்பங் களும் தோன்றும்; அவை தோன்ற, வீட்டின்கண் விருப்பு உண்டாம்; அஃது உண்டாகப் பிறவிக்குக் காரணமான பயனில் முயற்சிகளெல்லாம் நீங்கி, வீட்டிற்குக் காரணமான யோக முயற்சி உண்டாம்; அஃதுண்டாக மெய்யுணர்வு பிறந்து புறப்பற்றாகிய எனதென்பதும், அகப்பற்றாகிய யானென்பதும் விடும். இது கருதியே 'ஒழுக்கத்து நீத்தல் வேண்டும்' (கு. 21) எனத் திருக்குறள் வற்புறுத்துவதாயிற்று. இவ்வாறு, அகப்பற்றும் புறப்பற்றும் விட்டவர், எவ் வுயிர்க் கும் இரங்கி, அவை உய்ய வேண்டும் என்னும் அருள் உளங் கொண்டு, அவற்றை உய்விக்கும் வகையில் தொண்டாற்றி, உயிர்களிடையே உடனிருந்து வாழ்வாரே அல்லாது, தாம் மட்டும் உய்யவேண்டும் என்று கருதி, மலைக்கோ, மரம் அடர்ந்த காட்டிற்கோ, மறைவான குகைக்கோ சென்றொழியார்: அவ்வாறு செல்லவேண்டும் என்று திருக்குறள் யாண்டும் உணர்த்தவேயில்லை. மாறாக, எவ் வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகும் தன்மையே வேண்டப்படுவது என விதித்து, அத் தன்மையுடையவரை அறவோர் என்றும், அந்தணர் என்றும் சிறப்பித்துக் கூறியுள்ளது (கு. 30).

இதனால், ஆண் பெண் என்ற இருபாலாரும் மணம்புரிந்து கொள்ளாமல் தனித் தனியே இருந்தோ, மணம்புரிந்து வாழ்க்

கை நடத்திப்பின் ஒருவரைவிட்டு ஒருவர் நீங்கியோ வீடடைய முயலவேண்டும் என்பது திருக்குறள் கருத்தன்று என்பது துணியலாம். பெண்ணுய்ப்பிறந்த ஒருத்தி, மணம்புரிந்து கொண்டு வாழவேண்டுமே அன்றித் தனியே இருந்து வாழ்தலாகாது என்று விதிப்பதுபோல், "அற்ருர்க்கொன்று ஆற்ருதான் செல்வம் மிக நலம் பெற்ருள் தமியள் மூத்தற்று" (கு. 1007) என்றதொரு குறளை அது தன்னகத்தே கொண்டிருத்தல் காண்பார், பெண்கள் மணம் புரிந்துகொண்டு வாழ ஆண்கள் உதவி, அவர்களோடு ஒன்றுபட்டு வாழும் கடமையுடையவர் என்பதை எண்ணியுணரலாம். மண வாழ்க்கையே ஒழுக்கத்தைப் பழகுதற்குரிய வாழ்க்கையாகும். 'ஒழுக்கத்து நீத்தல்' என்பது மணவாழ்க்கை யுடையார்க்கே நூற்றுக்கு நூறு பொருத்தமுடையதாகும். மற்றவரெல்லாம் நல்லாற்றில் நிற்கத் துணை ஆதற்கு (கு. 41) உரிய கணவனுக்கு வாழ்க்கைத் துணையாதற்குச் சிறந்த மனைவி, அவனுடைய வாழ்க்கையின் இறுதி வரையிலும் துணையாக நிற்றல்வேண்டும் என்ற கருத்துப்பற்றியே, அவளை வாழ்க்கைத் துணை என்றே திருக்குறள் குறிக்கின்றது. அவளுக்குத் தனியே வீடடைதற்கு உரிய நெறி இன்னதென்று யாண்டும் குறிப்பிடாமல், 'அவள் மனையறத்திற்குத் தக்க மாண்புடையளாதல் வேண்டும்; தன்னை மணந்து கொள்பவன் வருவாய்க்குத் தக்க வாழ்க்கை நடத்த வல்லவள் ஆதல் வேண்டும்; கற்புடையள் ஆதல் வேண்டும்; தன் கணவனையே தெய்வமாகக் கருதவேண்டும்; பிறந்த இடத்திற்கும், புகுந்த இடத்திற்கும் புகழ் உண்டாக நடந்துகொள்ளுதல் வேண்டும்: இவையெல்லாம் பெற்ருல் தேவரும் போற்றும் சிறப்புறுவள் என்றெல்லாம் வாழ்க்கைத்துணைநலம் என்ற அதிகாரத்தில் திருக்குறள் உணர்த்துவதால், 'அவள், மனைக்கு அரசியாய், மணாளன் வாழ்க்கைத்துணைவியாய், அவன் கூறுகின்ற சொற்படி அறங்கடைப் பிடித்து ஒழுகுபவளாய் நிற்றல்வேண்டும்: அதுவே அவள் பிறப்பறுத்தற்கு உரிய நெறி' என்பது திருக்குறட் கருத்தாம்.

பெண்பிறப்பு எடுத்தவள், கற்றலும், அதனுல் அறிவு பெறுதலும் மனைவாழ்க்கையைச் செப்பமாக நடத்துவதற்கும்,

தான் பெறும் மக்களை ஒழுக்க நெறியில் வளர்ப்பதற்கும் துணையாதற்கே யல்லாமல், கணவனைப்போல் மனையை விட்டு வெளியே சென்று பொருளீட்டுவதற்கோ, கற்றூர் அவையில் பங்கு கொள்ளுவதற்கோ அல்லவாம். சங்ககாலத்தில், பெண்களுள் ஒரு சிலர் புலமை வாய்ந்து, கற்றூர் அவையில் பங்குகொண்டிருந்தமை காணப்படுகின்றதெனினும், அது கொண்டு, பெண்களெல்லாம் ஆண்களை ஒப்ப மனையிகந்து அவையிற் பங்கு கொண்டோ, தொழில் நிலையங்களில் பணி புரிந்தோ வாழ்தற்கு உரியர் என்பது, வீடுபற்றிய உணர்வு உடையராயினூர்க்குப் பொதுமை இலக்கணமாகக் கொள்ளும் தகையது ஆகாது. திருக்குறள் முழுதும் நுணுகி ஆராய்வார்க்கு, மகளிர் மனம் இயல்பில் அடிக்கடிமாறும் தன்மையுடையதென்பதும் (கு. 822), அவர் மனம் ஒருமையாதற்குத் தாம் கொண்ட கணவன்மாரைத் தெய்வமாகக் கொண்டொழுகும் ஒழுக்கம் போற்றலல்லது பிறிதில்லை என்பதும் (கு. 974), அக் கற்பொழுக்கத்தால் கணவன்மாரை வழிபட்டொழுகுவார் புத்தேளிர் வாழுமுலகில் பெருஞ்சிறப்புப் பெறுவர் என்பதும் (கு. 58) வெள்ளிடை மலையாய்த் துலங்கும்.

அன்பு காரணமாகத் தான் அடைந்த கணவனுக்கு வாழ்க்கைத் துணைவியாய், அவன் சொல்வழி நின்று, அவனைத் தெய்வமாகக் கொண்டொழுகும் ஒருத்தியும், அவ்வாறே அவளைத் துணைவியாகக்கொண்டு அவளுக்கு வழித்துணையாய், மற்றவர்க்கெல்லாம் உற்றவிடத்து உறுதுணையாய் அறவழி நிற்பான் ஒருவனும், ஒன்றுபட்டு, ஒருவரை ஒருவர் விட்டுநீங்காது வாழ வேண்டும் என்பதே திருக்குறளின் துணிபாகும். "தாம் வீழ்வார் தம் வீழப் பெற்றவர் பெற்றூரே காமத்துக் காழில் கனி" (கு. 1191) என்ற குறளால், அன்பு ஒத்த இருவர் ஒன்றுபட்டு வாழும் வாழ்க்கையே நிறைவுடைய வாழ்க்கையாதல் குன்றின்மேலிட்ட விளக்காகும். மகளிர் மனம் ஒருமைப்பட்டு நிற்றல் அருமை ; அவ்வாறு ஒருமைப்பட்டு, ஒருவனைப்பற்றி, அவன் மொழியைத் தேவ வாக்காகக் கொண்டு அவனோடு வீட்டு நெறிபற்றி ஒழுகும் தலைவி ஒருவனுக்கு வாய்ப்பாளாளூல், அந் நெறிபற்றி ஒழுகும் ஒருவன், ஈண்டே பேரின்ப உலக அநுபவம் பெறலாம் என்பதை, 'தாம் வீழ்வார்

மென்றேள் துயிலின் இனிதுமன் தாமரைக் கண்ணுன் உலகு" (கு. 1103) என்னும் குறள் உணர்த்துகின்றது.

"கமம் நிறைந்தியலும்" என்பது தொல்காப்பியம். நிறைவுடைமை என்னும் பொருளதே காமம் என்றும் செந்தமிழ்ச் சொல் (காமம் என்னும் சொல் தமிழ்ச் சொல்லாய் இப் பொருள் தருதலை யாம் பல்கலைக் கழக ஆராய்ச்சித் துறை வெளியீடு ஒன்றில் எழுதிய 'பண்டைத் தமிழர் கடவுள் நெறி' என்னும் கட்டுரையில் விரிவாய்க் காணலாம்.) "பிரிவரிதாகிய தண்டாக் காமமொடுஉடனுயிர் போகுக தில்ல, கடனறிந்து இருவேமாகிய உலகத்து ஒருவேமாகிய புன்மை நாம் உயற்கே" (குறுந். 57) என்ற சங்கப் பாட்டில், காமம் என்பது நிறைவுடைமை என்னும் பொருளையே குறிப்பதை உணர்க. கணவன் மனைவி என இரு வேறு வடிவம் கொண்டார் ஒருவரே; ஒருவரே இருவரானது, வினைவயத்தால் எடுத்தபிறப்பில் கடனுற்றிப் பிறப்பறுத்தற்கே ஆதலால், இருவரும் ஒருவரை விட்டு ஒருவர் நீங்கிப் பிறப்பறுத்தற்கு முயலுதல் ஒல்லாது. இருவராய் வேறு வேறிடத்தில் தோன்றிப் பின் ஒன்றுசேர்ந்து அன்பால் நிறை வெய்தி, அந் நிறைவு குறைதலில்லாது ஒழுகவல்லராயின், எடுத்த இப் பிறப்பில் இருவரும் ஒருவராய் வீடெய்துவர் என்பதே தொல்லைத் தமிழ் நூல்களின் முடிபாகும். இது பற்றியே, "காமம் அணங்கும் பிணியும் அன்று; புதுப்புது இன்பம் தரும்" என்ற பொருளில், "விருந்தே காமம்" (குறுந். 204) என்று அது சிறப்பிக்கப்பட்டுள்ளது. இப் பொருளிலேயே, காமம் என்ற சொல்லைப் பயில வழங்கி, நிறைவெய்தும் வழியை உணர்த்தும் பகுதிக்குக் **காமத்துபால்** எனப் பெயரிட்டுத் திருவள்ளுவர் செந்தமிழ்க் காமச் சொல்லின் சிறப்புத் தன்மையை ஆண்டு விளக்கிச்செல்கிறுர்.

வடமொழியில் வரும் காமம் என்ற சொல், விருப்பம் அல்லது ஆசை என்னும் பொருளுடையது. தமிழ்க் காமச் சொல்லோ நிறைவென்னும் பொருளுடையது. 'நிறைவு சான்ற பின்னும், அந் நிறைவு குலையாதவாறு, அத்தகைய நிறைவுடைய ஏமம் சான்ற மக்களொடு செறிந்து பழகி, அறமே பயின்று, அவ் வறமே பயிலும் அச் சுற்றத்தோடு, சிறந்தது என்று சிறப்

பிக்கப்படும் வீடடையும் நெறிநின்றுபழகுதல், பற்று நீங்கி, அன்புடைய ஒருவனும் ஒருத்தியும் மற்றவர்க்குத் தொண்டாற்றும் கடப்பாட்டொடு ஒருவர்க்கொருவர் துணையாய் வாழும் வாழ்க்கையின் பயனும்' என்க் கற்பியல் இறுதியில் தொல்காப்பியர் கூறியிருப்பதும் (கற்பியல். 192) காண்க. நிறைவுடைமை என்னும் பொருளில் காமம் என்ற தமிழ்ச் சொல் பயின்று வருதலை உணர்தலாற்றுது, நெறி தவறி, ஊற்றின்பமே உணர்த்தும் வட சொற் காம வடிவமாக அதைக்கொண்டு, தமிழர் தம்பண்டைய மரபினை மறந்து மயங்கி நின்ற தன்மையை, காமம் என்ற சொல் பண்டைத் தமிழிலக்கியங்களில் வருமிடங் கண்டு தொகுத்து ஆராயின் தெளிய உணரலாம்.

ஒன்றே எனப்படும் பரம்பொருளே, தன்னிடம் மலத்தோடு ஒடுங்கிய உயிர்கள், மலக்கழிவு பெற மீண்டும் ஒடுங்கிய வாறே தோன்றவேண்டும் என்று எண்ணுகின்றபோது சக்தியும் சிவமும் என இரு பொருளாய்ப் பிரிந்து தோன்றுகின்றது என்பதும், படைப்பு முதலிய முத்தொழில் கருதி நான்முகன், திருமால், முக்கண்ணன் என முப்பொருளாயும் அவரவர் சக்திகளொடு அறுபொருளாயும் பிரிந்து தோன்றுகின்றது என்பதும், சிவமும் பல சக்திகளுமாய்ப் பல வடிவமாய்ப் பிரிந்து தோன்றுகின்றது என்பதும் சமய நூல்கொண்டு அறிவார்க்கு, ஒருவரே ஆணும் பெண்ணுமாய் இரு வேறு வடிவொடு தோன்றுதலும், ஒருவரே, தலைவனும் காதல் மனைவியும் காமக் கிழத்தியும் பன்மனைவியருமாய்த் தோன்றி, அன்பு சார்பாய் ஒரு குடும்பமாய் நிறைவுற்று வாழ்தலுமுண்டு எனச் சங்கநூல்களில் காண்பது மலைவாகாமையாகக் காட்சி அளிக்கும்.

நிறைவுடைய வாழ்க்கை வாழும் ஆணும் பெண்ணுமாய்க் கணவன்மனைவியர் பெறும் பேறுகளுள் மக்கட்பேறே சிறந்ததாகும். 1330 அருங்குறளையும் அருளிய திருவள்ளுவர், அவற்றுள் மும்மணிகளாய்த் திகழத் தம் சொந்த அநுபவத்தை மூன்று குறளால் உணர்த்தியுள்ளார். அவற்றைச் சிறிது நோக்குதல் பயனுடையதாகும் (இது பற்றி விரிவாக, 'மணிக்

குறள் மூன்று' என்ற கட்டுரையில் யாம் எழுதியிருத்தலைப் படித்துப் பயன் பெறலாம்). அக் குறள்கள்,

"யாம்மெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற" (கு. 300)

"பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற" (கு. 61)

"மக்களே போல்வர் கயவர் அவரன்ன
ஒப்பாரி யாங்கண்ட தில்" (கு. 1071)

என்பன.

இம் மூன்று குறள்களும் வீட்டின்பத்தை அடைய விரும்புவார்க்குச் சிலவாய் நின்று பலவகைப் பொருள்களையும் முழுமையாக அறிவிப்பன ஆகும். இவற்றுள் 'யாம்' என்ற சொல் இவற்றை வரிசைப்படுத்திப் பயன்கொள்ள உதவுவதாம். இங்கே வரிசைப்படுத்திக் காட்டிய இவற்றுள் முன்னதில், 'யாம்' என்ற சொல் முதலிலும், நடுவணதுள் அது நடுவிலும், பின்னதில் அஃது இறுதியிலும் நிற்றல் காண்க. அறங்களுள் வாய்மையறம், ஏனைய அறங்களெல்லாவற்றையும் தன்பால் பிணிக்கவல்ல தாதலின், ஒருவன் வாய்மையறம் கடைப்பிடிப்பானாயின் ஏனைய அறங்களெல்லாம் கடைப்பிடித்தவன் ஆவானாதலால், வாய்மையறத்தைவிட மேம்பட்ட அறம் வேறு ஒன்றும் இல்லையென்றார், இவற்றுள் முதற் குறளால், திருவள்ளுவர்.

அவ்வாறு கூறிய அவரே, பெறும் செல்வங்களுள், அறிய வேண்டுவன அறிதற்குரிய மக்கட் செல்வமே உயர்ந்தது என்றார், மேலே காட்டிய இரண்டாம் குறளால். ஏன் அவ்வாறு மக்கட்செல்வத்தை உயர்ந்த செல்வமாக அவர் கூறினார்? அறமெலாம் கடைப்பிடித்து விழிப்பொடும் ஒழுகும் ஒருவன், பழக்க வழக்கத்தால், தன்னையறியாமல், அறமல்லதனையும், அறியாமையால் ஒரோருகால் மேற்கொண்டொழுகுதல் கூடும். தன்மகன் தன்வசத்திலேயே இருக்குமளவும், தான் கூறியனவே கூறுதலும், தான் செய்தனவே செய்தலும் முறையே கேட்

டலும் காண்டலும் செய்துவருங்கால், அறவழியே ஒழுகிவரும் தன் சொற் செயல்களிலிருந்து மாறுபட்டு ஒழுகுதலைத் தன் மகன் பால் காணும் ஒருவன், உளம் திடுக்கிடாமல் இருத்தல்முடியாது; அதனோடு அமையாமல், விரைந்து தன் மகனைத் திருத்தவே விரும்புவான். அறிவுடையவனாயின், அவனுடைய மாறுபட்ட ஒழுக்கத்திற்குக் காரணம் யாதென எண்ணிப் பார்ப்பான்; அப்போது, அதற்குக் காரணம் தானேயாதல் உணர்ந்து நாணு வான். கண்ணாடியில் காணும் தன் நிழலில் (பிரதி பிம்பத்தில்) முகத்தில் கரிபடிந்திருக்க ஒருவன் கண்டானாயின், அந் நிழலில் காணும் கரியைத் துடைக்க முனையமாட்டான்; முனைந்தாலும், அது முடியாத செயலாகும்; மாறாகத் தன் முகத்தில் அதைப் போக்கவே முற்படுவான். அவ்வாறு போக்கினவுடன், நிழலிற் கரி இருந்த இடம் தெரியாமல் ஒடியொழியும். உண்மையில், தன் உணர்வின்றி ஆற்றும் அறமல்லாத சொற்செயல்களைக் காட்டும் சிறந்த கண்ணாடிகள் அறிவுடைய மக்கள். அவர்க ளிடம் குற்றம் கண்டதும், அது, தன் குற்றம் என உடனே உணர்ந்து, தன் குற்றத்தைப் போக்கிக்கொள்ள ஒருவன் முற் படவேண்டும். அவ்வாறு முற்பட்டால், சிறிதும் மாசின்றிய வனாய் ஒருவன் ஆதல் உறுதி. எனவே, தன்னை நிறைந்த அற வொழுக்கமுடையவனாக்குவதற்கு மகன் இன்றியமையாத் துணையாய் நிற்பதனால்தான், ஒருவனுக்கு மகனே சிறந்த செல் வம் என்று திருவள்ளுவர் போற்றியுரைத்தார். பழிபிறங்காப் பண்புடைய மக்களைப் பெற்றால் எழுபிறப்பும் தீயவை தீண்டா (கு. 62) எனத் திருவள்ளுவர் உணர்த்தியதன் உண்மை, இத்தகைய சிறப்பு மக்களிடத்தில்இருப்பதனால்தான் என்பது இப்போது தெளிவாகலாம். 'மிக்க அறமே விழுத் துணையாவது' (மணி. 22 : 138) என்றாலும், அவ் வறம் நிரம்பு தற்கு மக்கள் இன்றியமையாதவர்களாதலால், புத்தேள் உல கம் புதல்வர் தருதற்கு உரியவரே; 'புத்தேள் உலகம் புதல்வரும் தாரார்' (மணி 22 : 137) என்பது திருக்குறட் சமயத்தில், உண்மையன்று என்று கூறிவிடலாம். தன்னிடம், மறதியாலும் எவ் வகையான ஒழுக்கக்கேடும் இல்லாதிருந்தும், தன் மகனிடம் ஒழுக்கக்கேடு இருக்க ஒருவன் காண்பானானால், அம் மகன் தனக்குப் பிறந்த மகனல்லன் என்று துணிந்து கூறுக (கு. 958)

என்று திருவள்ளுவர் துணிந்துணர்த்துவது, இக் கருத்திற்கு அரணாகும். ஆனால், தந்தை சூழலைவிட்டுப் பிறர் சூழலில் பழகும் வயது வந்தபின் மகனிடம் ஏற்படும் தவறுகளைக் கொண்டு, தந்தை தவறுடையவன் என முடிவு செய்ய முற்படுவது பொருந்தாது.

வாய்மையறம் போற்றி, அறியாது மேற்கொண்டிருந்த ஒழுக்கக் கேடுகளை மக்களால் அறிந்து நீக்கி வாழுமொருவன், அறவொழுக்கத்தை மறந்தும் போற்றாத கயவர் கூட்டத்தைக் கண்ணெடுத்தும் பாராது நீங்கினாலன்றித் தூய வாழ்வு வாழ முடியாது. சார்ந்ததன்வண்ணம் ஆகும் தன்மையுடையவர், கயவர் கூட்டத்தைச் சார்வாராயின், முன்னர் எவ்வளவு தூய ஒழுக்கம் போற்றியவராயினும் கயவர் அனையவரே ஆவர். ஆகையினால்தான், ஏமஞ்சான்ற மக்களொடு செறிந்து வாழ்தல் சிறந்தது பயிற்றுவார்க்கு இன்றியமையாதது எனத் தொல்காப்பியரும் உணர்த்தியுள்ளார். எனவே, கயவர் தன்மையை உணர்த்துதல் வாயிலாக, அவரை நீங்கி வாழ்தலைத் திருவள்ளுவர் உணர்த்தியுள்ளமை மேற்காட்டிய மூன்றும் குறளாலும், கயமை அதிகாரத்தில் வரும் பிற குறள்களாலும் நன்கு உணரலாம்.

வாய்மையறம் போற்றி, மக்கட் செல்வத்தால் தவறெலாம் களைந்து, கயவரைச் சேராதொழுகுவார், வீட்டின்பம் பெறுதற்குரிய பிற நலங்களெல்லாம் தாமாக வாய்க்கப்பெற்றுத் திண்ணமாய் வீட்டின்பம் பெறுவர் என்பது இம் மூன்று குறள்களாலும் திருவள்ளுவர் நன்கு உணர்த்தியிருப்பது வியத்தொறும் வியப்பிறந்ததாகின்றது.

இதுகாறும் கூறியவாற்றால், பண்டைத் தமிழ் நூல் வரிசையில் இலக்கியத்தலைமை வாய்ந்தது திருக்குறள் என்பதும்; இதனைத் தமிழரேயன்றி அயல்நாட்டவரும் அயல்மொழியினரும் தலைசிறந்ததெனப் போற்றிப் புகழ்ந்துள்ளனர் என்பதும்; முப்பாலின் நாற்பால் முழுதும்நவின்றுள்ளது இஃதென்பதும்; உயிர்கள் யாவும் நிலைபேறுடையன ஆதலால், எல்லாம் ஒத்த தன்மையன என்பதும்; எனவே, எல்லாம் வீடுபெறும்

தகுதியுடையன என்பதும்; அவற்றுள், மக்களுடம்பு பெற்ற உயிர்கள் மதி நுட்பமும் நூலறிவும் கொண்டு வீடு பெறற்குச் சிறந்தன என்பதும்; மக்களுடம்பு பெற்ற உயிர்களுள்ளும், மக்கட்டன்மை எனப்படும் உணர்வுடையனவே வீடு பெற விழைவு கொண்டு, அதற்குரிய நன்னெறி கடைப்பிடிப்பன என்பதும்; அஃதில்லாதவை, கயமை என்னும் கீழ்மைத் தன்மை உடையன என்பதும்; அவை, வீட்டின்பங் குறித்து விழைவு கொள்ளாதன என்பதும்; உலகியற்பொருள்கள் நிலையில்லாதன எனவும், யாண்டும் நீக்கமற நிறைந்திலங்கும் செம்பொருளே நிலையுள்ளது எனவும் ஓர்ந்து, நிலையில்லாத உலகியற்பொருளோடு உளதாம் பற்றினை விடுதலாகிய துறவுமேற் கொண்டு, மெய்யுணர்வு பெற்று, அவாஅறுத்தலால் வீடுபேறு உண்டாம் என்பதும்; உலகியற் பொருளிற் பற்றினை விடுதற்கு உபாயம் செம்பொருளைப் பற்றுதலாம் என்பதும்; ஆணும் பெண்ணுமாகத் தோன்றிய அன்புடையார், கணவனும் மனைவியுமாதற்கு முன் இருவராய் இருப்பினும், உண்மையில் ஒருவரேயாவர் என்பதும்; ஊழ் கூட்டிய வழியே கணவனும் மனைவியுமாகச் சேர்ந்தவர் ஒழுக்கநெறியில் நின்று, உண்மை நிறைவெய்தி, ஒருவரேயாய் வீட்டின்பம் பெறும் தகுதியுறுதல் பிறப்பின் பயனைகப் பெறுதற் குரியதாம் என்பதும், அவ்வாறு நிறைவெய்திய பின்னரும், நிறைவு குலையாமலிருக்க அத் தகைய நிறைவுடையார் கூட்டத்தில் சேர்ந்து, மக்களுக்குத் தொண்டாற்றி வருதல் வேண்டும் என்பதும்; இருவரும் ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்து வீட்டின்பம் கருதி முயறல் தமிழ் மரபன்று என்பதும்; இயற்கையொடு பொருந்தாத மரபாம் என்பதும்; சுருங்கக் கூறின், வாய்மையறம் பேணி, நன்மக்களைப் பெற்றுத் தவறு முற்றும் களைந்து, கயவரோடு தொடர்பு கொள்ளாது வாழும்நெறி வீடு பெறற்குத் தகுதியுடைய நெறி என்பதும்; இவ்வாறு சாதி, மொழி, சமயம் என வேறுபாடு கருதாது உலகிலுள்ளார் யாவரும் வீடு பெறற்குப் போற்றத் தகும் செம்மை சான்ற நெறி திருக்குறள் உணர்த்தும் நெறியே யாவதென்பதும்; இவ்வாற்றால், உலகிலுள்ள யாவரும் பிறவித் துன்பம் நீங்கிப் பேரின்பமாம் வீடுபெறும் நெறியை ஐயம் திரிபற உணரும் முறையைத் திருவள்ளுவர் தம்

நூலாகிய திருக்குறளில் வழங்கியிருக்கின்றார் என்பதும்; அவர் வழங்கியிருக்கும் நெறியைப் பற்றிப் பிறப்பெடுத்த உயிரனைத்தும் துன்பம் நீங்கி இன்பம் அடைதலே தாம் பெற்ற பிறவியால் எய்தும் பயன் ஆகும் என்பதும்; பிறவும் தெளிய உணரலாம். இத்தகைய வீடு வழங்கியிருக்கும் திருவள்ளுவர் புகழ் என்றும் உலகில் நிலை பெறுக! திருக்குறள் உலக மறையாய்த் திகழ்ந்து வாழ்க!

# திருவள்ளுவரும் அருணகிரிநாதரும்

கிருபாநந்த வாரியார்

மிகுந்த வெயிலால் புழுக்கம் ஏற்படும்போது, "இன்று மழை வரும்" என்று நாம் கருதுகின்றோம். அவ் வண்ணமே மழை பொழியவும் காண்கின்றோம். அதுபோல், அநீதியாகிய வெப்பம் மிகுந்தபோது, ஞானமாகிய வானத்தில், அருளாகிய கொண்டல் தோன்றி நீதிமழை பொழியும்.

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னே, நீதி எது அநீதி எது என்ற விளக்கமின்றி, உயிர்களாகிய பயிர்கள் அருங் கோடையால் வாடியபோது, மெய்ஞ்ஞானமாகிய வானத்தில், திருவள்ளுவராகிய அருள் மேகம் தோன்றி, அறம் பொருள் இன்பம் என்ற மூன்று உலகங்களும் தழைக்க ஆயிரத்து முன்னூற்று முப்பது முறை நீதி மழை பொழிந்தது. அந்த மழை நன்னீர் இன்றும் வற்றுமல், கீழ்நாடாம் பள்ளத்திலே மட்டுமன்றி, மேல்நாடாம் மேட்டிலேயுங்கூடத் தேங்கி நிற்கின்றது.

உள்ளுதொறும் உள்ளுதொறும் தெள்ளமுதெனத் தெவிட்டாத இன்பத்தை அள்ளித் தருவது வள்ளுவர் வாக்கு. தக்கார் அனைவரும் எக்காலத்தும் போற்ற என்றும் நின்று இளமையுடன் விளங்கும் வளமையுடையது அது.

> "அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
> என்னுடைய ரேனும் இலர்"

என்பது பொதுமறையின் புனித வாக்கு.

" அறிவும் சிவமும் இரண்டென்ப ரறிவிலார்
அறிவே சிவமாவது ஆரும் அறிகிலார்
அறிவே சிவமாவ தாரும் அறிந்தபின்
அறிவே சிவமாய் அமர்ந்திருப் பாரே "

—திருமூலர் திருமந்திரம்

*சிவம் வேறு, அறிவு வேறு அல்ல. அறிவாம் சிவமே மெய்ப் பொருள். ஏனைய வெல்லாம் பொய்ப் பொருள்களாம். பொய் என்பதற்கு நிலையில்லாதது என்பது பொருள். நிலைபேறுனது கடவுள் ஒன்றே. மற்றவை யெல்லாம் தோன்றி, நின்று, ஒடுங்குவனவாம்.*

*எனவே, சிவம், என்றும், எப் பொருள்களிலும் ஊடுருவி நிற்கின்றது. அதனை அறிவதே அறிவு எனத் தெளிக.*

" எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு "

*என்கின்றார் தெய்வப் புலவராகிய திருவள்ளுவர்.*

*அருணகிரிநாதர்,*

" அறிவு திருமேனி யென்று ணர்ந்து
அருண சரணரவிந்த மென்று பெறுவேனோ "

" அறிவை யறிபவர் அறியும் இன்பந்தனை "

*எனப் பலபடக் கூறக் காண்கிறோம்.*

*திருவள்ளுவரை நன்றாக உணர்ந்தவர் அருணகிரிநாதர். 'பாம்பறியும் பாம்பினகால்' என்பதுபோல, ஞானிகளை ஞானிகளே யறிவர்.*

*மக்களுள்ளே மூன்று பிரிவுகளுண்டு: மனிதவுடம்பு எடுத்த விலங்குகள், மனிதவுடம்பு எடுத்த மனிதர்கள், மனித வுடம்பு எடுத்த தேவர்கள்.*

**1. மனிதருள் விலங்குகள் :**—*செய்வன தவிர்வன அறியாது உண்டு உடுத்து உலாவி உவகையுறுபவர்.*

**2. மனிதருள் மனிதர்கள் :**—*நன்மை தீமை தெரிந்து, மனத்தைச் சென்றவிடத்துச் செலவிடாது தடுத்து, தீது ஒருவி, நன்றின்பாலுய்த்து நலமுற வாழ்பவர்.*

**3. மனிதருள் தேவர்கள் :—** மெய்யுணர்வு பெற்று, நான் எனது என்னும் இருவகைப் பற்றுக்களும் அற்று, பற்றற் ருனைப் பற்றி, திருவருள் நெறி நின்று, கருணை வடிவினராய்த் திகழ்பவர்.

திருவள்ளுவர் மனிதருள் தேவர். அவரை மனிதருள் மனிதராக எண்ணக்கூடாது; அவரைத் தேவர் என்று ஆன்றோர்கள் கூறி மகிழ்ந்தார்கள். இதனை,

"தேவர் குறளும்"

என்ற வெண்பாவினால் அறிக.

அருணகிரிநாதர், திருவள்ளுவரைத் 'தேவர்' என்கின்ருர். அன்றியும், திருக்குறளைப் படிக்கக்கூடாது; ஓதுதலும் உணர்தலும் வேண்டும் என்கிருர். படிப்பது சாமானியம்; ஓதுதல் உயர்வுடையது. ஓதுவதற்கு மூன்று இலக்கணங்கள் உண்டு; (1) ஓதுகின்ற நூலின் மீது காதல்; (2) ஓதும் போது உள்ளங் கசிதல்; (3) அதற்கு அடையாளமாகக் கண்ணீர் மல்குதல்.

"காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார்." —திருஞானசம்பந்தர்

திருவள்ளுவரும் "ஓதியுணர்ந்தும்" என்கின்ற அருமையை யுணர்க.

அருணகிரிநாதர்,

"திருவள்ளுவ தேவர் வாய்மை என்கின்ற
பழமொழியை ஓதியே யுணர்ந்து"

என்று திருப்புகழில், ஓதியுணர்தல் இன்றியமையாதது என் பதை மிக அழகாகக் கூறியருளினுர்.

இனி வள்ளுவர், அறம் பொருள் இன்பம் என்று முப்பாலாகச் செப்பினுர். இதனை அருணகிரிநாதர்,

"இடரற முப்பால் செப்பிய"

என்று கூறுகின்றனர்.

***ஆதலின், உலகப் பொதுமறையாகிய, உயர்ந்த திருக்குறளை எம் மதத்தினரும், ஏனேரும் ஓதியுணர்ந்து உயர்வு பெறுவார்களாக!***

*அநீதியாகிய அருங் கோடையை மாற்ற, ஞானவானத்தில் எழுந்த அருள் மேகம் திருவள்ளுவர் என்பதும், அவர் பொழிந்த பொதுமறையாகிய நீதிமழை பள்ள மேடுகளிலும் இன்றும் தங்கியுதவுகின்றது என்பதும், அறிவு மயமாகிய மெய்ப்பொருளை யறிவதே அறிவின் பயன் என்பதும், திருவள்ளுவர் மனிதருள் தேவர் என்பதும், அவர் அருளிய குறளை ஓதியுணர்தல் வேண்டும் என்பதும், அஃது எப்பாலாரும் ஒப்ப முடிந்த முப்பால் என்பதும் இதுகாறும் கூறிய வாற்ருல் விளங்குகின்றன அல்லவா?*

# திருவள்ளுவர் மருந்து

டாக்டர் தி. இரா. அண்ணாமலை

திருவள்ளுவர், தமிழ் நாட்டிற் றோன்றி, உலகத்துக்கே ஒரு நடுநாயகமாய் விளங்கும் தனிப்பெருஞ் சித்தராவர். அவர், எல்லாம் வல்ல ஆண்டவன் அருள் நிரம்பியவராதலின், மக்கள் மேல்வைத்த அன்பின் முதிர்ச்சியால், தாங்கண்ட உண்மைகளை ஆயிரத்து முந்நூற்று முப்பது தூய குறட்பாக்களாக அமைத் தருளியவர்; இவ் வுலகமும் அதன் வாழ்வும் மக்கள் தோய்ந்து துய்க்க வேண்டும் உள்பொருள்களென்று தம் பட்டறிவிற் கண்டதுமன்றி, இல்லறத்துக்கே தனிச் சிறப்பளித்த பெருந் தகைமையர்; பல்லாயிரம் ஆண்டுகளாக, இல்லறத்திற்கும் துற வறத்திற்கும் இன்றியமையாதனவாக நம் முன்னோர் கண்ட மருத்துவ நல்வழி உண்மைகளைத் தாமும் உணர்ந்து, அவை களை நமக்கு எளிய முறையில் 'மருந்து' என்னும் அதிகாரத் தில் எடுத்துக்காட்டியுள்ளவர். இவ் வதிகாரத்திற் கூறியுள்ள மருத்துவக் குறிப்புக்களை நமது வாணாளில் கடைப்பிடித்து ஒழுகுவோமாயின், நோயற்ற வாழ்வைப் பெறுவது திண்ணம்; உடலை வளர்ப்பதன் பயனாகிய உயிர் மேம்பாடும் ஓங்கிவரும். இத் தகைய சீரிய குறிப்புக்களை நாமும் நன்காராய்ந்து கடைப் பிடித்து நடைமுறையிற் கொண்டுவர முயலவேண்டும். இம் முயற்சி திருவினையாக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

**'மருந்து' என்னும் அதிகார முறைமை :—** இவ் வதிகாரம், பொருட்பால், அங்க இயலில் இறுதியாய் அமைந்துள்ளது.

அரசன், தனது செங்கோலைச் செவ்வனே நடத்துதற்குத் துணையாயுள்ளன: அவனுடைய பல அங்கங்கள் (அமைச்சு, நாடு, அரண், படை, தூது முதலியன). இவ் வங்கங்கள் பழுதுபடாம லிருந்தாலல்லது, அரசனது காவற்றிறமையும் சிறந்த முறையில் நடைபெறமாட்டாது. இக் காவலுக்கு இடையூறுயுள்ளன: தீநட்பு, கூடாநட்பு, பேதைமை, இகல் முதலியனவாகும். இங்ஙனமே, வரைவின்மகளிர் நட்பு, கள்ளுண்ணல், சூது முதலிய தீய ஒழுக்கங்களால் நாட்டில் நோய் அதிகமாக, அரசனுடைய அங்கங்களின் வலிமை குன்றும்; மருந்தும் வேண்டியிருக்கும். மருந்தை முடிந்தவரையில் விலக்க வேண்டுமென்னுங் கருத்தை விளக்குவதற்காகவே, ' மருந்து '- அதிகாரத்தை அங்க இயலின் இறுதியாக அமைத்தனர் போலும்!

இன்னும், விலைமாதர்நட்பு, கள்ளுண்ணுதல், சூதாடுதல் இவை மூன்றிலும் சிக்குகின்றவர்கள் தப்பாது விரைவில் கெடுவர்; கடுநோயால் வருந்துவர்; அவர்களது குடும்பமும் நோய் வாய்ப்பட்டு வறுமையாற் பிணியுண்டு கெட்டொழியும். இவர்களுக்கு மருந்து இன்றியமையாதது என்பதை வலியுறுத்தற்காகவே, இம் மூன்று அதிகாரங்களின் பின்னர் ' மருந்து ' அதிகாரம் அமைக்கப்பட்டுள்ளது. பொதுமகளிர், கள், சூது இம் மூன்றும் நோய்க்கு அடிப்படையான காரணங்கள் என்பது எவரும் மறுக்க முடியாத உண்மை. **பொது மகளிர்** (Prostitutes) வரம்பில்லாதவர்கள் ஆனபடியால், இவ் விலைமாதரை, வள்ளுவனார், ' இருட்டறைப் பிணம் ', ' அணங்கு ' (பேய்), ' பூரியர்கள் ஆழும் அளறு (கீழ் மக்கள் அழுந்தும் நரகம்) என்று மனம் நொந்து கூறுகின்றனர். இவ் விலைமாதர்பால், தீ நட்புக் கொண்டவர்களைப் பல தொத்து நோய்கள் துன்புறுத்தும்; இன்னும் அவர்களுடைய மனைவிகளையும் குழந்தைகளையும் இக் கொடிய நோய்கள் தீண்டி உருக்குலைத்து அக் குடும்பத்தையே வேர்அறுத்துவிடும். **கள்ளுண்ணுதல்** பெருங் குற்றமென்றும், கள்ளுண்பவன் நஞ்சுண்பவனென்றும், உள்ளூரிலேயே அவன் ஏளனஞ் செய்யப்படுவானென்றும் வள்ளுவர் எடுத்துக்காட்டுகின்றனர். எங்ஙனம், மீன், தூண்டிலில் அகப்பட்டு, இரும்பை விழுங்கி மடிகின்றதோ,

அங்ஙனமே சூதாடுபவர் கெடுவரென்றும், செல்வம், பண்பு, வாய்மை, கல்வி, புகழ், உணவு, உடை, இன்பம் அனைத்தையும் இழப்பரென்றும் திருவள்ளுவர் ஓலமிடுகின்றனரே! விலைமாதர், கள், சூது இம் மூன்றும் நாட்டையே பாழாக்கிவிடும் என்னும் கருத்தை ஒரே குறட்பாவில் அழகுபெற அமைத்து உரைக்கும் அருட்டிறமை திருவள்ளுவ நாயனாருக்கே உரித்தாகும். "இருமனப் பெண்டிரும், கள்ளும், கவறும் திருநீக்கப் பட்டார் தொடர்பு" (கவறு - சூது). இம் மூன்றையும் நம் நாட்டைவிட்டு அறவேஒழிக்குமாறு பரத்தையர் சேரிஒழித்தல் (The Brothels Act), மதுவிலக்கு (Prohibition), சூதாட்டம் தடுத்தல் (Prevention of Gambling Act) என்னும் மூன்று சட்டங்களைப் பரப்பியுள்ள நம் அரசாங்கத்தார் பெரு முயற்சியை ஆண்டவன் கண்காணித்து வெற்றியளிப்பானாக! இதில், சீரிய வெற்றியடைந்த காலத்து, நம் நாடு உலகுக்கே வழிகாட்டியாய்த் திகழுமன்றோ! இத் தகைய தூய கொள்கைகளைக் கடைப்பிடித்தொழுகும் நமது மாட்சிமை தங்கிய அரசாங்கம் என்றும் ஓங்குக!

**இனி, மருந்து என்னும் அதிகாரத்தில் அடங்கிய பத்துக் குறட்பாக்களையும் வகுத்தும் தொகுத்தும் கூர்ந்து நோக்குவோமாக:**

## 1

"மிகினுங் குறையினும் நோய்செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று."

*(இதன் பொருள்.) உணவுஞ் செயல்களும் ஒருவன் பகுதிக்கொத்த அளவினவன்றி, அதனின் மிகுமாயினும் குறையுமாயினும், மருத்துவ நூலோரால் (சித்தர்களால்) விதிக்கப்பட்ட வாதம், பித்தம், கபம் என்னும் மூன்று நோயும் அவனுக்குத் துன்பம் செய்யும்.*

*குறிப்பு :— உணவும் செயலும் அளவின்றிக் குறைவதும் கூடுவதுமே அநேக நோய்களுக்குக் காரணமாயுள்ளன. செல்வர்களின் நோய்க்கு முக்கிய காரணம், உணவை அளவின்றி உண்ணுதலும், செயலாற்றாமல் மடி மிகுந்திருத்தலு*

மாகும்; ஆனால், தக்க உணவு குறைவதும், தொழில் (செயல்) மிகுவதும் வறியவர்களுக்கு நோயைத் தருகின்றன. ஆயினும், சிறசில நோய்கள் இவ்விரண்டு காரணங்களுமில்லாமலும் நிகழ்கின்றன. இதற்கு இரண்டொரு சான்று காட்டுதும்: மருத்துவர் ஒருவர், நெருக்கடியான பேறு காலத்தில் (Difficult Labour) ஆயுதம் (Forceps Application) போட்டுக் குழந்தையை வெளியே எடுக்கின்றனர். சில சமயங்களில் அவ் வாயுதம் தக்க முறையில் இடுக்கப்படாததால், பிறந்த குழந்தைக்குக் கைகால் விளங்காமற் போவதை நாம் காண்கிறோம். ஆகாயக் கப்பலிற் சென்ற ஒருவன், ஆபத்தில் அகப்பட்டுத் திடீரென்று நரம்புத் தளர்ச்சியாகி, செயலற்று, எழுந்திருக்க முடியாமல், படுக்கையிலேயே இருக்கின்றான். இங்குச் சுட்டிய நோயாளிகள் இருவருக்கும் உணவாவது தொழிலாவது கூடவுமில்லை, குறையவுமில்லை.

இம் முதற் குறளில் திருவள்ளுவ தேவ நாயனார், எல்லா நோய்களுக்கும் மூல காரணமாயுள்ள ஒரு நியதியைச் சுட்டுகின்றனர் (Universal cause of disease). 'வளி முதலா எண்ணிய மூன்று' என்பது வளி (காற்று), தீ, நீர் மூன்றையும் குறிக்கும். "நிலம், தீ, நீர், வளி, விசும்போ டைந்தும் கலந்த மயக்கம் உலக மாதலின்" என்பது தொல்காப்பியம். 'வளி தீ நீர் மண் தொடங்கியே' என்பதும், 'சேத்துமந் தண்ணீர், பித்தம் தீ, காற்று வாதமே' என்பதும் தமிழ்நாட்டு வித்தகச் சித்தர்களின் கூற்று. நமது உடலில், வளி (வாதம்) ஒரு பங்கென்றும், தீ (பித்தம்) அரைப் பங்கென்றும், நீர் (கபம்—ஐ—சிலேத்துமம்) காற் பங்கென்றும் சித்த மருத்துவ நூல்கள் கூறும். வாதம், பித்தம், கபம் இம் மூன்றனுள்ளும், ஒன்றுக்கொன்று உள்ள அளவு கூடினும் குறையினும், நோய் அணுகுவது திண்ணம். இங்ஙனம் பொருள் கொள்வதே மருத்துவ முறைக்கும் பொருத்தமாகும். நமது உடலையே 'முப்பிணி' என்றும் நம் முன்னோர் அழைத்தனர். நிலையாமை என்னும் அதிகாரத்தில், **"புக்கில் அமைந்தின்று கொல்லோ, உடம்பினுள் துச்சில்இருந்த உயிர்க்கு"** என்னும் குறளில் உடம்பினுள் உயிர், வழிப்போக்கன் அல்லது ஒட்டுக் குடியாயிருக்கிறதென்றும், வாதம் பித்தம் கபமே உடலுக்கு உடைமைக்

காரரென்றும் குறித்துள்ளனர். இங்ஙனம் சுட்டியுணர்த்தியது மன்றி **உயிருக்குச் சொந்த வீடு இறைவன் திருவடிதான்** என்பதை மறைமுகமாய்க்கூறிய அருட்குறிப்பை என்னென்று கூறுவது ! ஆகவே, தமிழ் நாட்டிற் பல்லாயிரம் ஆண்டுகளாக வழங்கி வந்த சித்தர் முறையைக் கைக்கொண்டே, வள்ளுவர், இக் குறளை இயற்றி, நோய்க்கு மூலகாரணம், வாதம் பித்தம் கபம் என்பன தத்தம் அளவிலிருந்து குறைந்தும் கூடியும் மாறுபடுதலே என்னும் குறிப்பை இங்கு வலியுறுத்தினர். இந்தக் காரணம், இறத்தல் உள்பட எல்லா நோய்களுக்கும், மூலகாரணமாய் நின்றியங்கும்.

## 2

" மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின். "

(இ - ள்.) ஒருவன், தான் உண்ட உணவு நன்குகச் செரித்துக் கழிந்துவிட்டதென்று உறுதியாக அறிந்தபின், அடுத்த உணவு உட்கொள்வாயின், அவனது உடம்பிற்கு மருந்தே தேவையில்லை.

**அருந்தியது** என்னும் சொல், சோறு போன்ற கட்டிப் பொருளை உண்பதையும், மோர் போன்ற நீர்ப்பொருளை உட்கொள்வதையும் ஒருங்கே உணர்த்தும். ஆதலின், ஒருவன் உண்ட உணவு எத் தகையதாயினும், முழுவதும் செரித்துப் போகவேண்டும் என்பது இங்கு வலியுறுத்தப்பட்டது. **யாக்கை** என்பது எலும்பு, இரத்தம், மூளை, சதை, நரம்பு, சாறு (juices), விந்து (சுக்கிலம்) என்பவைகளால் சேர்த்து ஆக்கப் பட்டதாகையால் இப்பெயர் பெற்றது. **அருந்தியது அற்றது போற்றியுணின்** இந்தஏழு தாதுக்களும் தத்தம் நிலையில் நின்று, தொழிற்பட்டு நோய்வாராமல் தடுத்துக்கொள்ளும் என்பது அறியக் கிடக்கின்றது. இத் தகைய சீரிய முறையைக் கைக் கொண்டு, நம் முன்னோர், நூற்றுக்கணக்கான ஆண்டுகள் உயிர் வாழ்ந்தனர் என்பது நம் நாட்டுச் சரித்திர வரலாறு. பண்டைக் காலத்தில் நம்முடைய முன்னோர் இறப்பதேயில்லை யாதலின், ஆதிச்சநல்லூர் முதலிய ஊர்களில் தோண்டியெடுக்கப்பட்ட

முதுமக்கள் தாழியில், உயிரோடு வைத்துப் புதைத்துவிட்டனர் என்று கூறுவாரும் உளர்.

## 3

" அற்றால் அளவறிந்து உண்க; அஃதுஉடம்பு
பெற்றான் நெடிதுஉய்க்கும் ஆறு. "

(இ-ள்.) முன் உண்ட உணவு செரித்தபின், வயிற்றுக் கேற்ற அளவுப்படி ஒருவன் உண்ணல் வேண்டும்; அங்ஙனம் செய்யின் இவ்வுலகில் நெடுங்காலம் வாழலாம்.

**அளவறிதல்:** நாட்டின் தட்ப வெப்பநிலை, வயது, நிறை, தொழில் போன்ற பலவிதக் குறிப்புக்களைப் பொறுத்து ஒருவனது உணவு அளவிடப்பட வேண்டும். மேனாட்டு மருத்துவத்தில் உடல் நிறையைக் கணக்காகக் கொண்டு, அதினின்றும் Caloric value என்னும் ஓரளவைக்கொண்டு அவனது உணவையும் தீர்மானிக்கிறார்கள். நம் நாட்டில், அளவறிந்து உண்ணுதல், நோன்பிருத்தல், உண்ணாது பட்டினியிருத்தல் முதலிய நல்வழி முறைகள் வள்ளுவர் காலத்துக்கும் முந்தியது என்பது சங்க இலக்கியங்களிலிருந்து தென்படும். அளவறிந்து உண்ணுதலுக்கும் வாணாளை நீட்டித்தலுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டென்பதே வள்ளுவர் கொள்கை.

**உடம்பு பெற்றான்:** மனித உடம்பு பெறுவதே பெரும் பேறு; உயிரானது, தான் பெற்ற உடம்பைக் கொண்டே தன்னையும் உய்வித்துக்கொள்ளவேண்டும் என்னும் கருத்து இங்குக் குறிப்பாய் உணர்த்தப்பட்டுள்ளது.

## 4

" அற்ற தறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்க துவரப் பசித்து. "

(இ - ள்.) முன் உண்ட உணவு அற்றுப்போயிற்றென் பதை அறிந்து, தீரப் பசித்தபின், மறுபடி உண்ணவேண்டும்; அப்படி உண்ணுங் காலத்தும், அவ்வுணவு உடம்பிற்கு மாறு கொள்ளாதது என்பதை, பன்முறை ஆராய்ந்து தெளிந்து தான் உண்ணல்வேண்டும்.

* துவர என்னும் சொல்லாட்சியைப் பண்டைத் தமிழ் இலக்கியங்களிலிருந்து நன்கு அறியலாம்.

**துவர** என்னும் சொல் தமிழ் நாட்டில் இன்றும் வழக்கில் இருந்துவருகிறது. 'துவரப் பசித்தல்' என்பது 'கள்ளப் பசி'க்கு எதிர்மறையாகக் கூறலாம். வயிற்றில் உணவு முழுவதும் அற்றுப்போகாவிட்டாலும், வழக்கமாய் ஒருவன் சாப்பிடும் நேரத்தில், பசிவந்த மாதிரி உணர்ச்சி தோன்றுவது இயற்கை. இதுதான் கள்ளப்பசி. ஆனால் 'துவரப் பசித்தல்' என்பது உண்மையான பசி. இந்தக் கடும்பசி வந்த காலத்து உணவு உண்ணுவிட்டால், அதனால் தலைக்குத்து (மண்டையிடி), வயிற்றுக் காந்தல் முதலிய குணங்கள் தோன்றி உடலையும் வருத்தும். இத்தகைய 'துவரப் பசித்தல்' வந்தகாலத்து உண்ணுதல்தான் உடலுக்கு நலந்தரும் என்பதை இங்கு வள்ளுவர் வலியுறுத்தியுள்ளனர். **மாறல்ல துய்க்க:** மாறுபட்ட உணவை அறிந்து கொண்டால், 'மாறல்ல' எளிதில் அறியலாம். மாறுபட்ட உணவு பல்வகைப்படும் :—1. சமைத்துண்ண வேண்டும் உணவைச் சமையாது உண்ணல். 2. பச்சையாய் உண்ணவேண்டும் உணவுப்பொருளைச் சமைத்து உண்ணல். 3. உடலுக்குத் தேவையில்லாத பொருள்களை உண்ணுதல்—(உ-ம்.) கள்(மது), புலால் (Flesh-eating), காப்பி, தேயிலைமுதலியன. 4. அரிசி முதலிய தானியங்களை, இயந்திரங்களில் அரைத்துச் சாப்பிடுதல். 5. ஈக்கள், கிருமிகள் தொத்திய உணவை அருந்துதல் (Infected food). 6. அழுகிப்போன காய் கறி பழங்களை உண்ணுதல்: இவைபோன்ற மாறுபட்ட உணவுகளை நீக்கி, உடலுக்குத் தக்க உணவுகளை உண்ணல் வேண்டும். அவைகளையும் 'துய்க்க துவரப் பசித்து' என்றனர்: துய்த்தலாவது உணவைப் பசிவேளையில் மகிழ்ச்சியோடு சுவைத்துச் சுவைத்து அருந்துதல் (Enjoying the food) ஆதலின், விரைவாய் விழுங்கிவிடுதல் உடலுக்கு நலமன்று என்பது 'துய்க்க' என்னும் சொல்லால் சுட்டப்பட்டிருக்கிறது.

---

"மகர இறுதி வேற்றுமை யாயின்,
**துவரக்**கெட்டு வல்லெழுத்து மிகுமே"—தொல்காப்பியம்.
"துவர முடித்த துகள்அறு முச்சி" - நக்கீரர்- திருமுருகாற்றுப்படை.
"அரவுரி அன்ன அறுவை **துவர** நல்கி"-பொருநராற்றுப்படை.

**5**

"மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துண்ணின்
ஊறுபாடு இல்லை உயிர்க்கு.

(இ-ள்.) மேற்குறளிற் கூறிய மாறுமாடு இல்லாத உணவை ஒருவன் தன் உள்ளம் விரும்பிய அளவை மறுத்து, நோய் வாராத அளவாக உண்ணுவானானால், அவனுடைய உயிர்க்கு நோயினால் என்றும் துன்பம் உண்டாகாது.

சிற்றுண்டிச் சாலையைப் பார்த்ததும், வயிறு நிறைய உண்டவனுக்கும், அதில் மாறுபாடு இல்லாத சுவையுடைப் பண்டங்களே உள்ளன என்றும் கருத்தால், அதனுள் புகுந்து சில சுவைப் பண்டங்களைச் சுவைக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்படுவது இயற்கை. அவ்வாறு எண்ணம் ஏற்படும் போது அந்த எண்ணத்தை எழுப்பிய உள்ளத்திற்கு அடிமையாவதும் இயற்கை. அப்போது அந்த உள்ளத்தை அடக்கி ஆள்வதுதான் அதனை மறுத்தல் ஆகும். அவ்வாறு மறுக்க வகையறியாது அதற்கு அடிமையாய்விடின், அதனால் உயிருக்குத்தான் துன்பம் உண்டாகும். எனினும், அப்போது உள்ளத்தை மறுத்து வெற்றி பெறுவது அருமையாதலின், '**மறுத்து உண்ணின்**' என்றார். 'அத்தைக்கு மீசைமுளைப்பின் சிற்றப்பனும்' என்ற இடத்தில் 'முளைப்பின்' என்பது முளையாது என்பதைக் காட்டுவதுபோல, '**மறுத்து உண்ணின்**' என்பது 'மறுத்து உண்ண முடியாது' என்பதையே காட்டுகின்றது. இங்கே மக்களுக்கு உள்ள முயற்சியை ஆளும் திறமையைத் திருவள்ளுவர் அருமையாக நினைவு படுத்துகிறார் என்று கூறலாம். ஒருவன், தன் முயற்சி துணையாக உள்ளத்தை வென்று அது வேண்டுமாறு உண்ண முற்படாது, நோய் வாராத வகையாகத் தான்வேண்டுமாறு உட்கொள்ளவேண்டும் என்று திருவள்ளுவர் எச்சரிக்கை செய்யும் திறம் போற்றிக்கொள்ளும் தன்மையது மாறுபாடு இல்லாத உணவாயினும், உள்ளம் வேண்டும்போதெல்லாம் உண்ணுதல் கூடாதென்பது இதனால் வற்புறுத்தப்பட்டது.

இனி மாறுபாடில்லாத உண்டியாயினும், அஃது அமிழ்தமேயாயினும், அளவுக்குமேல் உண்ணுதலை உள்ளம் விரும்பு

மாயின், அதனை வென்று, அதையும் அளவிற் குறைவாக உண்ணுதல் வேண்டும் என்று பொருள் கொள்ளினும் அமையும். அளவுக்கு மிஞ்சினால், அமிழ்தமும் நஞ்சாகு மன்றோ!

## 6

"இழிவுஅறிந்து உண்பான்கண் இன்பம்போல் நிற்கும்
கழிபேர் இரையான்கண் நோய்."

(இ-ள்.) குறைவாக உண்ணுதல் நலமென்றுதெரிந்து அங்ஙனம் உணவு கொள்பவனுக்கு உடல் நலம் நிலைத்து இன்பந் தருவதுபோல, அதிகமான உணவை உண்பவனிடம் பிணியும் நீங்காது நின்று துன்பந் தரும்.

மேலைக் குறட்பாவில் கூறியபடி, மறுத்து உண்ணத் தெரிந்தவனே 'இழிவு அறிந்துண்பான்' (இழிவு-குறைவு). குறைத்து உண்பவனிடம் வாதம் பித்தம் கபம் தத்தம் நிலையிலேயே நிற்கின்றன; மனம் மொழி மெய்களைத் தன்வயப்படுத்தும் ஆற்றலும் அதிகமாகும். மெய்யுணர்விற்கும் இறை பணி நிற்பதற்கும் இஃது உறுதுணையாகும். இதனால், மனஅமைதியும் இன்பமும் பெறுவது திண்ணம். மனம் போனவாறு அளவு கடந்து உண்டு களிக்கும் பெருந்தீனிக்காரனுக்கு நோயும் நீங்குவதில்லை; வாணாளுங் குறைந்துவிடும்.

**கழி பேர் இரையான்**-'இரை' பொதுவாய் விலங்குகளின் உணவைக் குறிக்கும். நன்றாய்ச் சுவைக்காது விழுங்கிவிடுகிற உணவையே நம் நாட்டில் 'இரை' என்றழைப்பது மரபு. 'கழி' 'பேர்' என்னும் இரண்டு அடைமொழி கொடுத்தது: அளவை முற்றிலும் மறந்து தெவிட்டும் வரையிலும் உண்ணுதலைக் குறிக்கும். முதலடியில் இன்பத்தைக் கூறி, இன்பமிருக்கத் துன்பத்தை நாடுவானேன் என்று கேட்பதுபோல் அமைந்துள்ள இக் குறள் எத்தனை நயம்! "கனியிருக்கக் காய் கவர்ந்தற்று" என்பதை நமக்கு இது நினைப்பூட்டுகிறது.

## 7

"தீயளவு அன்றித் தெரியான் பெரிதுண்ணின்
நோயளவு இன்றிப் படும்."

(இ-ள்.) தன் உடம்பில் அமைந்துள்ள பசியை அளவாகக் கொள்ளாது அதிகமாக உண்டு வருவானாயின் அவனிடம் நோயும் அளவு கடந்து அதிகமாகிக் கொண்டே வரும்.

**'தீயளவுஅன்றி'** என்றும், **'நோய் அளவு இன்றி'** என்றும் வேற்றுமைப்படுத்திக் கூறியது இங்கு நோக்கத்தக்கது. **அன்றி** என்பது அன்மையைக் (Reciprocal Negation) குறிப்பதற்கும், **'இன்றி'** என்பது இன்மையைக் (Total Negation) குறிப்பதற்கும் அமைக்கப்பட்டுள்ளன. செந்நாப் போதார், சொற்களை அளந்துதான் பயன்படுத்தியுள்ளார் என்பதை 'அன்றி', 'இன்றி' என்னும் இரு சொற்களும் நன்கு விளக்கும்.

நீரிழிவு (Diabetes) முதலிய சில நோய்களில் கழிபெரும் பசி (Voracious appetite) நோயாளியை வருத்துவதுபோல் தோன்றும். ஆனால், அது, அந் நோயின் குறியே தவிர உண்மைப் பசியன்று. ஆதலின், அத் தகைய பசியைத் தீயளவாக வைத்துக்கொள்ளப்படாது என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

## 8

" நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்."

(இ-ள்.) நோயின் குறிகளை ஆராய்ந்து,நோயின் காரணத்தை அறிந்து, அக் காரணத்தின் வலிமையைக் குறைக்கும் வழியை ஆய்ந்து, தெளிந்து அதனை முறையோடு செய்தல்வேண்டும். ஆங்கில மருத்துவ நூல்களில் நோய் நாடுதல் - Disease and its Symptoms-Diagnosis; நோய் முதல் - Aetiology - Cause of disease; அது தணிக்கும் வாய்—Principles of Treatment; வாய்ப்பச்செயல் - Actual Treatment - என்பன வகுக்கப்பட்டுள்ளன. ஆகவே, திருவள்ளுவ தேவ நாயனார் காட்டிய முறைதான் இன்று மேனாட்டு மருந்து நூல்களிலும் கையாளப்பட்டுவருவது பெருவியப்பன்றோ?

**நோய்முதல்**—நோயின் மூலகாரணத்தை ஆராய்ந்து கண்டுபிடிப்பது இன்றியமையாததென்பதும், அதைத்

தவறவிட்டு, நோயின் குறிகளுக்கு மாத்திரம் மருத்துவம் செய்வது பெருந் தவறென்பதும் இங்குப் பொய்யா மொழியாக எடுத்துக் காட்டுவது சாலச் சிறப்புடைத்து. இதை விளக்குவதற்குத் தக்க சான்று காட்டுதும்; இளைஞன் ஒருவனுக்குக் காது நன்ருகக் கேட்கவில்லை. இதற்குக் காரணம் அவனது தொண்டையில் சதை வளர்ந்துள்ளது (Enlarged tonsils). காதுக்கும் தொண்டைக்கும் உள்ள ஒரு **பிலத்து** (சிறுமடை) (Eustachian tube) என்னும் பெயரால் அழைப்பது, (தொண்டையில் சதைவளர்ச்சியால் அடைபட்டுக் கொண்டது. இதுதான் காது கேளாத தற்குக் காரணம். இதை யறியாது, காதுக்கு எவ்வளவு மருத்துவம் செய்யினும் பயன் தாராது. மூலகாரணமாகிய தொண்டைச் சதையைக் கரைத்துவிட்டால், காது தானுகக் கேட்கும். ஆதலின், **நோய்முதல்** கண்டுபிடிப்பது (Diagnosis) தான் மிகவும் இன்றியமையாதது என்பதைச் சித்தர் முறையில் அடிப்படையாகச் சுட்டிய பெருமை வள்ளுவருக்கே உரியது. அது **தணிக்கும்** வாய்நாடி: **தணிக்கும்** என்னும் சொல்லி லுள்ள மருத்துவக் குறிப்பு, உலக முழுவதும் தலைமேற் கொள்ளவேண்டுவ தொன்ருகும்; மருத்துவர்கள், கணந் தோறும் நினைவைவிட் டகற்ருமலிருக்கவேண்டும் சிறப்புடை யது. **தீர்க்கும்** என்று கூருது, **தணிக்கும்** என்று கூறியதன் உட்கருத்தென்னை? நோயின் மூலத்தை முற்றிலும் மருந்திஞல் தீர்க்க முயலுவது தவறு; ஆனல், அதைப் படிப்படியாய்க் குறைத்து விடுதலே நலம் என்பதை உறுதிப்படுத்தியுள்ளனர். 106° காய்ச்சல் உள்ளவனைத் திடீரென்று 96°-க்குக் கொண்டு வருவது பெரும் பிழையாகும். அதனல், நோய்க்குப்பின் விளையும் தளர்ச்சிகள் (After-effects) அதிகமாகும். நோயின் வலிமையைக் குறைத்து, உடலின் ஆற்றலை அதிகமாக்கி, நோயைத் தீர்ப்பதே சிறந்த முறை என்பதைத் **தணிக்கும்** என்னும் சொல்லால் வலியுறுத்தியுள்ளனர். உடலின் ஆற்றல் அதிகமாகியுள்ளது; அது நோயின் மூலத்தைக் கண்டித்துவிடும் என்று கண்டதும் அதற்குமேல் நோயின் வலியை மருந்தால் குறைக்க முயலுவது முறையன்று என்பதையும் உறுதிப் படுத்தியுள்ளார். இதற்கு மற்ருெரு சான்று காட்டுதல் நலம்:

Typhoid என்னும் சன்னிக் காய்ச்சலில் சூடு குறைந்து உடலுக்கு ஏற்பட்ட வெப்பத்துக்கு அரை அல்லது ஒரு degree அளவுக்குள் ளிருக்குமாயின், அப்பொழுதே மருந்தை நிறுத்தி விடவேண்டுமென்ற குறிப்பைத் **தணிக்கும்** என்னும் ஒரு சொல்லை வைத்துச் சுட்டிவிட்டனராயின், வள்ளுவர் தனிப் பெருஞ் சித்தர் என்பதில் ஐயமுண்டோ?

**வாய்நாடி வாய்ப்பச் செயல்:** உடலுக்கு மருந்து ஏற்றும் பல வழிகளையும் ஆய்ந்து நோயாளிக்குத் தக்க வாய்ப்பைக் கண்டு, அதன்படி மருத்துவஞ் செய்தலே மேம்பாடுடைத்து என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளார். சித்த மருத்துவம், மருத்துவ முறைகளிலெல்லாம் உயர்ந்து பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாக நம் நாட்டில் நிலவியதாயினும், இன்று கையாளப்படு முறையில், சில மருத்துவர்கள், மருத்துவன் என்று போலிப்பெயர்கொண்டு மக்களுக்கு அல்லல் விளைத்து வருவது மிகமிக வருந்தத்தக்கது. மருந்தைச் சிறந்த முறையில் செய்து, நோயாளிக்குத் தக்க வழியில் அதை உடலில் ஏற்றுதலே பண்டைக் காலத்தில் நம் நாட்டில் நிலவிய முறை. அதைக் கடைப் பிடித்து ஒழுகுவோமாக!

**வாய்நாடி** மருந்தளித்தல் பலவிதம்—வாய் வழியாய் மருந்தைக் கொடுத்தல், (Oral administration), எண்ணெய் தேய்த்து அதன்மூலம் மருந்தை உடலில் ஏற்றல் (Inunction), புகைபிடித்தல் (Inhalation), இரத்தக் குழாய்கள் மூலம் மருந்தை ஏற்றுதல் (Injection), ஒத்தடம் போடுதல் (Fomentation) முதலியன. இவைகளில் நோயாளியின் உடலுக்குப் பொருந்திய முறையைத் தெரிந்தெடுத்தல் மருத்துவனது கடமையாகும்.

## 9

"உற்றான் அளவும் பிணியளவும் காலமும்
கற்றான் கருதிச் செயல்"

(இ - ள்.) மருத்துவ நூலைக் கசடறக் கற்று, அதனாற் கிடைத்துள்ள நூலுணர்வையும், அவ்வறிவைப் பயன்படுத்தி நோயாளிகளுக்கு மருத்துவஞ் செய்து பொருந்திய அனுபவத்

தையும் ஒருங்கே தொகுத்து வடித்த பட்டறிவு நிறைந்தவனே உண்மை மருத்துவன்; அவன் நோயாளியின் நிலையையும், நோயின் குணங்குறிகளையும், நோய் தொடங்கிய காலத்தையும் கொடூரத்தையும் கணித்து ஆய்ந்து, அவற்றிற்குத் தக்கபடி மருத்துவ முறையைக் கைக்கொள்ளவேண்டும்.

**உற்ருன் அளவு**—நோயாளியின் வயது. உடற்போக்கு, முன்னுல் வருந்திய நோய்கள், தொழில், அத் தொழிலால் ஏற் படக்கூடிய நோய், இவைகள் எல்லாம் 'கற்ருன் அளவு' என் பதில் அடங்கும்.

**பிணி அளவு**—நோயின் வகை (Type of diseases), கொடூரம் (Intensity) முதலியவை பிணி அளவாகும்.

**காலம்:** நோய் தொடங்கிய காலம், மருத்துவன் அறிந்து கொள்ள வேண்டும் இன்றியமையாத குறிப்பாகும். Typhoid fever என்னும் இருபத்தொரு நாள் சன்னிக் காய்ச்சலில் வருந்தும் நோயாளிக்கு ஒவ்வொரு வாரத்துக்கும், மருந்து வேறே வேறே மாற்றவேண்டும். இது போன்ற காரணங் களுக்காகவே நோய் தொடங்கிய காலம் அளவிடப்படல் வேண்டும்.

**கற்ருன் கருதிச் செயல்:** மேற்கூறிய அளவுகளையெல்லாம் பொறுமையாய் அறிந்து ஆழ்ந்து சிந்தித்து, முடிவுகட்டி நோயைத் தணிக்கும் வழியிற் செய்யும் மருத்துவ முறையே 'கருதிச் செயல்' ஆகும்.

## 10

"உற்றவன் தீர்ப்பான் மருந்துஉழைச் செல்வான்என்று
அப்பால்நாற் கூற்றே மருந்து."

(இ - ள்.) நோயாளி, மருத்துவன், மருந்து, மருந்தைப் பிழையாமல் இயற்றுபவன்-என நான்கு பகுதிகளையுடையது மருத்துவ முறை; இது, 'அப்பாலும்' நான்கு பகுதிகளையே யுடையது.

**அப்பால் நாற் கூற்றே:** மருத்துவன் கொடுக்கும் மருந் திஞல், தீரா நோய்கள் சில உள. அத் தகைய நோய்களுக்கு, இறைவனை (தீர்ப்பான்) முற்றிலும் நம்பி, அவனது திரு மந்தி

ரத்தை அகத் தூய்மையுடன் ஓதி, 'பக்தி வலையிற் படுவோன் காண்க' என்றபடி, அவனது திருவடியே நோய்க்குத் தப்பாத மருந்தாகக் கொண்டு, தீர்க்க முயலுவதே சால்புடைத்து. அங்ஙனம், உள்குவார் உள்ளத்து ஆண்டவன் தன்னருள் பரப்பி, அவர்களை உய்விப்பானென்பது திண்ணம். ஆண்டவன் ஆலயங்களில், நோன்பிருந்து, தீரா நோய்கள் தீர்ந்தன வென்று, கடவுள் உணர்ச்சியுடைய எல்லா நாடுகளிலும் எத் தகைய சமயத்தாராலும் நம்பப்படுகின்றது; சரித்திர வரலாறும் இதுவே. ஆகவே, 'அப்பால்' என்பது (இப்பால்) இவ் வுலகத்துக்கும் அப்பாலாயுள்ளது.

இன்னும், பிறப்பினையே பிணியாகக் கருதும் கொள்கை யுடையவர்கள், மலத்தில் அழுந்தும் நோயாளிக்கு (உற்றவன்) பிறவி நோயைத் தீர்ப்பவன் இறைவன் (தீர்ப்பான்). அவன் ஆசாரியனாக (உழைச்செல்வான்) அருள் சுரந்து, 'விண்ணோர் மருந்தாகிய' தனது அருள் நோக்கால் பிறவி வேரறுக்கும் பெம்மான் என்பதை, இவ் வதிகாரத்தின் இறுதிக் குறளில் வள்ளுவப் பெருமானார் மறை பொருளாய், வாயுறை வாழ்த்தாய் வழங்கினாரென்று கொள்வதும் சாலப் பொருத்த மாகும்.

## 'மருந்து' என்னும் அதிகாரத்தில் அடங்கிய பொதுக் குறிப்புக்கள்

இவ் வதிகாரத்தில் உள்ள பத்துக் குறட்பாக்களில், **ஏழு பாக்களில்** நோய் வாராமல் தடுப்பதற்குண்டான முறைகளைக் கூறுவது (Prevention of Disease) மக்களுக்குச் சிறந்த படிப்பினை அளிக்கின்றது. இன்று, உலகமெங்கும், நோய் வராமல் தடுக்கும் முயற்சியைத்தான் சிறந்த முறையாக ஒப்புக்கொள்கிறார்கள். இவ் வதிகாரத்தில் நோய் வருவதற்கு முதற் காரணத்தைச் சுட்டினர். முதல் ஏழு குறட்பாக்களிலும் நோய், மக்களை அணுகவிடாமல் தடுக்கும் முறைகளை, பசுமரத்தாணிபோல் பாகுபடுத்தி அருளிய பெருமை திருவள்ளுவருக்கே உரித்தாகும். எட்டாம் குறளில், **நோய் முதல் (Diagnosis)** நாடுவதே மருத்துவனது குறிக்கோள் என்பதை வெகு அழகாய் எடுத்துக் காட்டியது

'நாடி' என்னும் சொல்லை மூன்றிடத்தில் ஆண்டு, மூன்று நாடிகளை (இடகலை, பிங்கலை, சுழுமுனை)க் கொண்டுதான் நாம் கடைத்தேறவேண்டுமென்று கூறுவதுபோல் அமைந்துள்ளது. **தணிக்கும்** என்னும் சொல்லை வழங்கி, **இயற்கையை ஒட்டியே,** மருத்துவம் செய்யப்படவேண்டும் என்னும் குறிப்பைத் திறம்பட அமைத்தருளினர். இறுதியாக, இவ்வுலகிலுள்ள மருத்துவர்கள் தீர்க்க முடியாத நோயைக் கடவுளே தீர்த்தருள முடியுமென்று வற்புறுத்துவதற்காக, 'அப்பால்' என்னும் ஒரே சொல்லால், மக்களை, தாம் புகவேண்டிய ஆண்டவனது திருவடிக்கு அழைத்துச் செல்வது அப் 'பெருங் கருணையாளனே வருந்துயரந் தீர்க்கு மருந்து' என்பதை நினைப்பூட்டி, நினைக்குந்தோறும் உடலுக்கும் உயிருக்கும் நலன் விளைக்கும் அமிழ்தமாகும். வள்ளுவர் தோன்றிய நாட்டில் பிறந்ததே நமது அரும்பெரும் பேறு என்று கூறுவது மிகையாகாது.

**வாழ்க தமிழ் !**

# உரைவளத்தில் ஒவ்வொரு அகப்பை

திரு. ச. தண்டபாணி

திருக்குறள் தெளிந்த நீரூற்று. அதைச் சுற்றிலும் அன்புப் பளிங்கால் அகன்ற கரையைக் கட்டிப் பாதுகாத்து வருகிறார்கள், அதனைச் சொந்தமாகக் கொண்ட தமிழர்கள். பளிங்கின் ஒளியும், நீரின் ஒளியும் கலந்து, அசையா நீர்நிலையாக இருக்கின்றது திருக்குறள். அதில், எட்டிப்பார்த்தவர்களுடைய முகமெல்லாம் தெரிகின்றன. ஏன்? முகம்மட்டுமா?-அகமுந்தான். அவர்கள் தங்களுடைய முக அழகையும் அக அழகையும் காண்கின்றார்களேயன்றி, நீரின் சுவையைக் கண்டவர்களல்லர். அந்த ஊற்றின் ஆழத்தைக் கண்டவர்களும் இதுவரை யாருமில்லை. இமயத்தின் சிகரத்தைக்காண இன்றளவும் முயற்சிப்பது போலத்தான் குறளின் ஆழத்தைக் காண பகீரத முயற்சி செய்துவருகிறார்கள். வள்ளுவரே, நூலின் ஆழம், முழுகமுழுகப் பெருகிக்கொண்டே போகுமென்கிறார். அந்த இலக்கணம் அவர் நூலுக்கு மட்டும் இல்லையா என்ன? ஆதலால், கடந்த எண்ணூறு ஆண்டுகளுக்குமுன் பலர் ஊற்றின் ஆழங்காணத் தொடங்கியவர்கள். அவர்கள் யார்? பரிமேலழகர் முதலிய நமது உரையாசிரியர்கள்தாம். அவர்கள் கண்ட ஆழம் எவ்வளவு என்று நாம் அவர்களை ஆழம் பார்ப்பதும், முடிந்தால், சுவைதரக் கூடிய செயலே. குறள் முழுதும் சுவைக்க முடியாது. ஒவ்வொரு அகப்பை அள்ளிச் சுவைப்போம்.

**முதற்குறள்**, கடவுள் உண்டென்று சொல்லுகிறது; அதற் கொரு சிறந்த உவமானமும் உரைக்கிறது. அதற்கு உரை யெழுதவந்த பரிமேலழகர், ‘எல்லா மொழிக்கும் அகரம் முதல்; உலகத்திற் கெல்லாம் இறைவன் முதல்வன்’ என்றார். மணக் குடவர், இவரினும் முந்தியவர். அவர், ‘எழுத்தெல்லா’ மென் பதற்கு உயிரும் மெய்யுமாகிய எழுத்தெல்லா மென்றார். அது மட்டுமா! இறைவன், உலகம் என்று ஒன்றிருப்பதால் அதனைப் படைத்து அதில் கலந்திருப்பதால் முதல்வனாகவில்லை; இயற் கையே முதல்வன் என்பார், ஆதியாய பகவனை முதலாக உடைத்து உலகம் என்றார். பழைய உரைகாரரோ அகரமுதல என்பதை, முதலாகிய அகரம் எனக் கொள்ளாது அகரத்தை முதலாகவுடைய எழுத்தென்றார். அதாவது உயிரெழுத்து. அவை பன்னிரண்டும் கலந்தால்தான் மெய்யியங்கும். அது போல, உலகம் மெய்; அது இயங்க வேண்டுமானால், இறைவன் வேண்டும். அவனே ஆதி பரமேசுவரன் என்கின்றார். பரிதியார், உயிர் பன்னிரண்டுக்கும் அகரம் முதல். உயிர்க்கெல்லாம் முதல் இறைவன் என அறிவித்தார். காளிங்கர், அகரமும் அதுதான். முதலும் அதுதான். இந்த அகரத்திலிருந்துதான் எல்லா எழுத்துக்களும் விரிந்தன. இறைவனிடமிருந்துதான் எல்லா உலகங்களும் விரிந்தன என்பர். இவைகளை யெல்லாம் ஒரு சேர நமது உள்ளத் தராசில் இட்டுப்பார்த்தால், சிலர் உலக மொழிகளுக்கெல்லாம் என்கிறார்கள். சிலர் உயிரும் மெய்யுமாகிய எழுத்திற் கெல்லாம் என்கிறார்கள். சிலர் உயிருக் கெல்லாம் என்கிறார்கள். இவர்களில் யார் கூற்றுக்கு மாற்றுண்டு என்பதை உறைத்துத் தெரிவது சிரமந்தான். ஆனாலும் உலகம் ஒருவனிடமிருந்து விரிந்தது. உயிரிடத்து அகரத்திலிருந்து விரிந்தது போல் என்ற காளிங்கர் முன்னணிக்கு வருகிறார்.

இக் குறட் கருத்தை அப்படியே குழைத்தமைத்துச் சம்பந்தமூர்த்தி சுவாமிகள், ‘அகர முதலானை’ என்கின்றார் கள். சுந்தரரோ, ‘அகரமுதலினெழுத்தாகி நின்றாய்’ என்று இறைவனைப் போற்றுகின்றார்கள். இந்த உண்மை இந்த உலக மக்களுக்குத் தெரியவில்லையே என்று இரங்குவார் போலத் திருமூலர், ‘ஆரும் அறியா அகரம் அவ’னென்று

கூறுகிறார்கள். சிவஞானபோதமும் சிவஞான சித்தியாரும் 'அக்கரங்கள் இன்றும் அகர வுயிரின்றேல்' என்றும், 'அக்கரங்கள் தோறும் சென்றிடும் அகரம்போல நின்றனன் சிவனும் சேர்ந்தே' என்றும் எல்லா எழுத்துக்களிலும் அகரம் கலந்து நின்று இயக்குதலைக் காட்டின. இப்படியே ஏனை நூல்களும். ஆதலால், அகரம் முதன்மை பெற்று மட்டும் உவமமாகவில்லை; இறைவனும் முதல்வன் என்பதால் கருத்தாவாகவில்லை; அகரம் எல்லா வெழுத்துக்களோடும் கலந்து நின்று இயக்குகின்றது; இறைவன் எல்லா வுயிர்களோடும் உயிர்க்குயிராய் நின்று இயக்குகின்றான். அதனால் உலகிற்கு முதல்வனாயினான் என்ற கருத்தையே இலக்கிய ஆசிரியர்கள் பலர் கருதியிருக்கிறார்கள்.

பரிமேலழகர் 'உலகு' என்றது ஈண்டு 'உயிர்களை' என்றார்; அடுத்த வாக்கியமாக, 'காணப்பட்ட உலகத்தாற் காணப் படாத கடவுட்கு உண்மை கூற வேண்டுதலின்' என்றார். இவ் வாக்கியங்கள் முன்னொடு பின் முரணாயிருப்பது வெளிப் படை. உலகமென்பது உயிர்களை உணர்த்துமானால் அவை காணப்படுவதெப்படி? என்ற ஐயம் எழாமலிராது. அப்போது, பரிமேலழகர் உரையைப் பற்றிய ஆய்வு எண்ணமும் தோன் றத்தான் செய்யும்; எண்ணூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னிருந்த வெள்ளியம்பலவாண முனிவர் இப் பகுதியை எடுத்துக் காட்டி, மாறுபட உரை கண்டாரென்பர். பின்வந்த நுண்பொருள் மாலையுடையார், 'காணப்பட்ட உலகு' 'உயிர் மேல் நின்றால்' காணப்படுதல் எவ்வாறு எனில், 'உலகம் வழங்கி வருதலால்' என்பதற்கு, 'உயிர் உடம்பொடு காணப் பட்டு வருதலால்' என்று பரிமேலழகர் உரை கூறுகிறார். அதனால், காணப்படுதலென்பதற்கு உடம்பொடு கூடிக் காணப் படுதலென்றே உரைகொள்ளவேண்டும் எனப் பரிமேலழ கர்க்கு அரண் அமைத்துக் கொடுக்கின்றார். இப்படி உரை நயங்களைப் பின்வருபவர்கள் காப்பது கருத்திற்குப் பெருவிருந் தாகும்.

தொல்காப்பிய உரையாசிரியராகிய நச்சினார்க்கினியர், தம்முடைய உரைப் போக்கில், இக் குறளுக்கு ஒரு அருமை

யான நயத்தை எழுதிச்செல்லுகின்றார். அது, 'அகரம் தனியே உயிராயுமிருக்கின்றது. பல மெய்களோடு சேர்ந்து அந்தந்த மெய்யெழுத்துக்களுக்கேற்ற ஓசையும் தந்து நிற்கின்றது. அதுபோல, கடவுள் ஒன்றோடும் பொருந்தாது எல்லா வற்றிற்கும் தலைமையாயும், வேறு நிற்கின்றார். எல்லா உயிர்களோடும் கலந்து உயிர்க்குயிராய் நிற்கின்றவர்' என்பதாம். இப்படி முதற் குறளுடைய ஆழமும் தெளிவும் அமைகிறது.

**நீத்தார் பெருமையில்**, 'குணமென்னும் குன்றேறி நின்றார்' என்பது ஒரு குறள். அதற்குப் பரிமேலழகர், முனிவர்களுக்குக் கோபம் வரும்; கணப் பொழுதுதான் நிற்கும். ஆனாலும், அதன் வேகத்தை ஒருவனும் தாங்க முடியாது என்பர். மணக் குடவரும், அங்ஙனமே கூறி, நகுஷன், அகஸ்தியர் சாபத்தால் பாம்பான கதையை எடுத்து அணைகட்டுவர். பழைய உரை காரரும் பரிதியாரும், முனிவருக்கு ஒரு கணப்பொழுதுகூடக் கோபமே வராது என்பார்கள். காளிங்கர் கோபம் முனிவர்களைப் பார்த்து 'ஐயா முனிவர்களே! என்னிடத்தில் கொஞ்சநேரம் தங்கியிருங்கள்' என்று வேண்டிக் கொண்டாலும், அஃது அவர் களிடம் நடக்காது என்கின்றார். இவ் வுரைகளை ஊன்றி ஒப்பு நோக்குங்கள். பரிமேலழகர் **நீத்தார்** என்பதற்கு இலக்கணம் எழுதும்போது, 'இருவகைப் பற்றினையும் முற்றத் துறந்தவர்' என்பர். இருவகைப் பற்றுக்களாவன: யான் என்பதும் எனது என்பதும். இந்த இரண்டற்கும் ஆபத்து வந்தபோதுதான் ஒரு மனிதனுக்குக் கோபம் நிகழும். இந்த இரண்டையும் அறவே விட்டவர்கள் முனிவர்கள். அவர்களுக்குக் கோபமே வர ஏது இல்லையல்லவா? அப்படியிருக்க, 'அவர்களுக்கும் கோபம் வரும். கணப்பொழுதுதான் இருக்கும். அதற்குள் பெரிய தீமையைச் செய்துவிடும்' என்பது எப்படிப் பொருந்தும்? அதே அதிகாரத்தில், செயற்கு எளியன இவையென விளக்கலுற்ற பரிமேலழகர் பொறிவழி புலன்களைச் செலுத்தலும், வெஃகலும் வெகுடலு மென்றார். இங்ஙனம் வெகுளுதல், எளிய காரியமாயிருக்க, அரிய செய்யும் நீத்தாருக்கு இது குணமாவது எப்படிப் பொருந்தும்?

அப்படிப் பொருந்துவதா யிருந்தால், நீத்தார்க்குப் பெருமை கூறுவது போல வந்து இழிவைக் கற்பித்ததாக அல்லவா முடியும்! இதற்காகவே பரிதியாரும் பழைய உரைகாரரும், 'குணமலையின் உச்சியில் போனவர்கள் கோபத்தை ஒரு கணப் பொழுதுகூட கொள்ளவே மாட்டார்கள்' என்று பெருமையைப் பெருமையாகவே கொள்ளும்படி சாதித்திருக்கிருர்கள். இவற்றுள் சிறந்தது தெளிதல் தெள்ளியோர் கடனும்.

ஆனாலும், பரிமேலழகருடைய கருத்து, பழம் புலவர்களின் இலக்கியங்களிலும் இலங்காமலில்லை. சீவக சிந்தாமணியில், குதிரை வியாபாரிபோல வேடம் பூண்டு விதேய நாட்டுக்குச் செல்லும் சீவகன் வழியில், மருதம் நெய்தல் முல்லை குறிஞ்சி இவற்றைக் கடந்து சென்று பாலைநிலத் தடைந்தான் என்கிற திருத்தக்க தேவர், பாலைவனத்தைக் கடந்து சென்ற வேகத்தைக் காட்டுகிருர், அநேக உவமைகளால். அதிலொன்று 'முனிவர்களுக்கு வந்த கோபம்போல' என்பது. இதனுல், முனிவர்கள் கோபம் இருப்பது கணமாயினும், இயற்றும் இன்னல்கள் பலவென்று எடுத்துக் காட்டுகிருர். இதனேடு இணைநூலாகிய நாலடியார், 'வெந்நீரைப்போல வெப்பமாய் இருந்தாலும், பெரியோர் கோபம் தணியும்' என்கின்றது. கம்பர், 'அந்தணர்க்குக் கோபம் வரும்; அதனுல் பலபேர் கஷ்டப்பட்டிருக்கிருர்கள். சந்தோஷம் வரும்; அதனுல் பலபேர் வாழ்ந்திருக்கிருர்கள்' என்று வசிஷ்டர் வாயில் வைத்துக் காட்டுகிருர். இவையெல்லாம் பரிமேலழகருக்கு உதவும் சிந்தனைகள்.

**அறன் வலியுறுத்தலில்** ஒன்பதாங்குறள் 'அறத்தான் வருவதே இன்பம்' என்பது. இதைப்பற்றிய விளக்கம் தரப் பரிமேலழகரை முதலில் அழைப்போம். அவர் சொல்லுவார், 'இல்லறத்தோடு வருவதுதான் இன்பம்; அதனேடு பொருந்தாதனவெல்லாம் இன்பமாயிருந்தாலும் துன்பம்தான்; அது மட்டுமா! புகழும் இல்லை' என்று. அடுத்தது மணக்குடவரையழைப்போம்: அவர், 'அறத்தால் இன்பமும் புகழும் வரும்; மறத்தால் துன்பமும் இகழ்வும் வரும்' என்பார். பரிதியார்

தருமத்தால் வந்த இன்பமே இன்பம், தன்னிடத்திலுண்டான பொறையும் புகழும் இன்பமாகா' என்பார். காளிங்கர் பரிமேலழகருக்கு வாக்களிப்பார். பழைய உரைகாரர் மணக்குடவரைச் சார்ந்து நிற்பார்: இவர்கள் கருத்தைச் சீர்தூக்கிப் பார்ப்போம்:

**அதிகாரம் அறன் வலியுறுத்தல்:** இது பாயிரப்பகுதி. அதிலும் சிறப்புப் பாயிரம், தெய்வ வணக்கமும் செயப்படு பொருளும் எய்த உரைப்பது. அதில் செயப்படுபொருளைத் தெரிவிப்பது இந்த அதிகாரம். இந்த நூல் முழுவதுமே அறம் கூறுவது என்பதை 'அறம் கூறிற்றே ஆயிழை கணவ', 'அறம் வகுத்த தேவை', என்ற பாராட்டுகள் நன்கு விளக்கும். ஆகவே, அறன் வலியுறுத்தல், இல்லறம் துறவறமாகிய இரண்டற்கும் பொதுவாக நூல்நுதலிய பொருளைச் சொல்வது. அப்படியிருக்க, இல்லறத்தால் விளைவதுதான் இன்பமென்றால், துறவால் எய்தும் வீட்டின்பம் பெரிது என்ற கருத்தோடு மாறுபடுமல்லவா? தோற்றுவாய் செய்யும் பாயிரப்பகுதியிலேயே, 'எல்லாம் புறத்த' என்று ஒதுக்கிவிட்டால், ஏனைய அறத்தை மேற்கொள்வார் யார்? அதனால், அறத்தின் ஒரு பகுதி பயனற்றதாய்ப் போய்விடாதா? அதற்காகவே பரிதியாரும் பழைய உரைகாரரும் இன்ன அறம் என்று சொல்லாமல், பொதுவாக, அறத்தொடு பொருந்தியன இன்பம்; அறத்தொடு பொருந்தாதன வெல்லாம் சாரமில்லாதன என்றார்கள். மேரு மந்தர புராணகாரரும், 'நல்ல திருவுடை யறத்தது செய்கை' எனப் பொதுவகையாற் கூறினர்.

**வாழ்க்கைத் துணைநலத்தில்** பத்தாங்குறள், 'மங்கலமென்ப மனைமாட்சி' என்பது. இந்தக் குறட் கண்ணுடியில் பலபேருடைய அகத்தினழகு விளங்குகிறது. 'நல்லொழுக்கமுடைய மனைவி, ஒருவனுக்கு அழகு; அவ் வழகுக் கழகுசெய்யும் ஆபரணங்கள், நல்ல பிள்ளைகள்' என்பது மணக்குடவர் கருத்து. 'மனைவியினுடைய நல்ல குணமும் நல்ல செயல்களுமே ஒருவனுக்கு நன்மை; அதற்காபரணம் நல்ல பிள்ளைகளைப் பெறுதல்' என்பது பரிமேலழகரும் பழைய உரைகாரருமாகிய இருவரது எண்ணம். 'பதிவிரதைக் கழகு சிறப்பாகக் குடும்பம் நடத்துவது. அவளுக் கழகெல்லாம் நல்ல பிள்ளை

களைப் பெறுதலே' என்பர் பரிதியார். 'மனைவிக்கு நன்மை யாவது கற்பினுல் உயர்தல்; அவளுக்கு ஆபரணம் புதல்வர்களைப் பெறுதல்' என்பர் காளிங்கர். இவ் வுரைகளில் சிந்தனைக்குக் கொண்டுவர வேண்டிய விஷயங்கள் சில. மங்கலம் என்ற சொல்லுக்கு, அழகு என்று பொருள் காண்பர் சிலர். யாருக்கு என்ற ஆராய்ச்சியில் மனையாளுக்கு நன்மை யென்பர் சிலர். கணவனுக்கு நன்மை யென்பர் சிலர். மிகத் தந்திரக்காரரான பழைய உரைகாரர், ஒருவர்க்கென உரைத்துப் பொதுவாக விட்டார். இதில் ஆழ்ந்து சிந்திக்க வேண்டுவன சில. அதிகாரம் வாழ்க்கைத் துணைநலம். ஒருவனுக்கு நன்மை என்று கொண்டவன்வழியாக மனைவியின் உயர்வை நாடுதலைக் காட்டிலும், மனைவிக்கு நன்மை என்று நேரே சொல்லிவிடுவதில் சிறப்பு இருக்கிறதோ என்று சிந்திக்க நேருகிறது. வேறொரு சிந்தனை. பிள்ளைகளை மனைவிக்கு நல்ல ஆபரணமாகச் சொன்ன வள்ளுவர், அவளுடைய நல்ல குணங்களையும் ஆபரணத்தோடு இனமான ஆபரணமாகத்தான் சொல்லியிருக்க வேண்டும். இங்கே ஒரு ஞாபகம் வருகிறது. கம்பர், பிராட்டியின், மங்கல அணியைக் காப்பாற்றியன சங்கிலியும் சரப்பள்ளியுமாகிய மற்றைய ஆபரணங்களே யென்றார். பிராட்டியைத் தவிர்த்த ஏனைய பெண்களுக்கோ தோடும் தொங்கலும் சங்கிலியும் சரப்பள்ளியுமாகிய இவற்றைக் காப்பது மங்கல அணிதான் என்பது உலக வழக்கம். இந்த எண்ணத்தை வைத்துக் கொண்டு இந்தக் குறளை நோக்குங்கள்: அப்போது 'மனைவிக்கு நல்ல குணமும் நல்ல ஒழுக்கமும் இல்லாமல் முடியாத மங்கல அணியாகிய தாலியைப்போல' என்றும், 'புதல்வரைப் பெறுதல் மற்ற அணிகளைப்போல' என்றும், சிந்திக்க நேரும். தாலி இருந்தாலல்லது மற்ற நகைகளைப் போட முடியாது. நல்லொழுக்கம் இருந்தாலல்லது கணவனோடு களித்து வாழ முடியாது. பிள்ளைகளைப் பெறவும் முடியாது. இந்தக் கருத்துக்களை ஊன்றி நோக்கும்போது மங்கலம் என்பதற்கு அழகு, நன்மை என்ற பொருள்களைக் காட்டிலும், அணி யென்ற இனம் பற்றியும், இன்றியமையாமை பற்றியும் தாலி யென்று பொருள் கொள்ளுதலே பொருந்துவதாகுமோ என்பது அறிவுலகத்திற்கு அளிக்கும் காணிக்கை.

'மங்கல அணியிற் பிறிதணி மகிழாள், என்ற சிலம்பு தரும் சிந்தனையையும் நோக்குக.

**புதல்வரைப் பெறுதலில்** 'ஈன்றபொழுதில்' என்ற குறளுக்குப் பரிமேலழகர் 'பெண்ணியல்பால் தானாக அறியலாகாமையின் கேட்ட தாய்' எனக் கூறினார் என்ற உரை இன்றைய அறிஞர் சிந்தையை மிகவும் கவர்ந்திருக்கிறது. உண்மைதான்! மக்கள் சமுதாயத்தில் சரிவாழ்வு நடத்தும் ஒருபாலாரை இழிப்பதால் இவ் வெண்ணம் உண்டாவது இயல்பே! காளிங்கர் மிக விளக்கமாக 'உலகத்துச் சிறந்தோர் பலரும் இவன் பெரிதும் சால்புடையான் என்று எடுத்துச் சொல்லக் கேட்ட தாய் மிக மகிழ்வாள்' என்கிறார் இதனால் தாய்க்கு அறிவும் ஆற்றலும் இருப்பினும் 'காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சாக'த் தோன்றுதல்போல் வாரம் பட்டுழித் தீயவும் நல்லவாம் ஆதலால் தன்பிள்ளையை யறிவாளி யென்று தானே அறிந்துகொள்வதில் அவளுக்கு அவ்வளவு மகிழ்ச்சி உண்டாவதில்லை. மதிக்கக் கூடிய மக்களால் மதிக்கப் பெறுதலாலேயே மகிழ்கிறாள். இதனை நன்கு குறிப்பது காளிங்கர் உரை.

**ஈகையில்** 'இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்' என்பது ஒரு குறள். இது ஒவ்வொருவரையும் ஒவ்வொரு கருத்துச் சொல்ல வைத்துவிட்டது.

'பாவம் எனக்கு வயிற்றிற்கு இல்லை. வறுமையால் வாடுகிறேன்' என்று பிறருக்குச் சொல்லிக் கொள்வதில் எவ்வளவு இழிவு. 'தோழனோடும் ஏழைமைபேசேல்' என்பது முதியோர் மொழி. அப்படியிருக்க அந்நியன் ஒருவனிடத்தில் 'நான் ஏழை' என்று சொல்லிக் கொள்வது எவ்வளவு இழிவான செயல்? அதிலும் பசியே அறியாத-பணப்பஞ்சமே அறியாத-புளிச்ச ஏப்பக்காரன் ஒருவனிடத்தில் சொல்லிக் கொள்வதானால் எவ்வள்வு கஷ்டம். வயிற்றுக் கொடுமை இவ்வளவையும் மறந்து ஒருவரிடம் சொல்லச் செய்துவிடுகிறது. கேட்ட செல்வனோ தன்னுடைய பெருமையை வெளிப்படுத்திக் கொள்வதற்காகத் தன்னிடம் வருவார் போவார்களிடமெல்லாம் 'என்ன ஐயா! இவர்கள் எல்லாம் இல்லை இல்லை யென்று சொல்லிக்கொண்டு ஓயாமல் வந்து தொல்லை கொடுக்கிறார்கள்' என்று சொல்லிக் கொள்ளாமல் கொடுப்பது குலதருமம் என்பர் பரிமேலழகர்.

# வள்ளுவரும் சாஅதியும்

## திரு. ர. பா. மு. கனி

தமிழ்த் தாயின் இனிய உயிர் நிலையாக நின்று நிலவும் திருக்குறள் நல்கிய வள்ளுவர் ஓர் உலக மேதை; மிகச் சிறந்த சிந்தனை வாதி.

அவருடைய அறிவுரைகளில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய தமிழனுடைய பண்பாடு தேங்கிக் கிடக்கிறது. அன்று நம்மவர் வாழ்ந்த நாகரிக வாழ்வு குறளிலே பிரதிபலிக்கிறது. உலகின் பல்வேறு பாகங்களிலும் பற்பல காலத்தே வாழ்ந்த சிந்தனையாளர்களின் கருத்துக்களோடு நமது வள்ளுவர்ப் பெருந்தகையின் கருத்துக்களை ஒப்பு நோக்கினால் அவருடைய சிந்தனையின் திறமும், அவர் பெருமையும் நமக்கு வெகு நன்றாக விளங்கும்.

இங்கிலாந்திலே ஒரு பேக்கன் பிரபு; பிரான்ஸில் ஒரு ரோஷிபோக்கோ (La Rochefoucauldt); சீனாவில் ஒரு கன்ஃபூஸியஸ் (Confucius); பாரசீகத்திலே ஒரு ஷேக் சாஅதி இத்தகைய சிந்தனையாளர்களோடு வள்ளுவரை ஒப்பு நோக்குதல் ஒரு பரந்த ஆராய்ச்சி; நூலுருவில் வெளிவர வேண்டிய ஒரு முயற்சி.

பேக்கன் பிரபு எலிஸபெத் அரசியின் அவையிலே இடம் பெற்ற ஓர் அரசியல் வாதி; அவர்கால அரசியல் சூது நிறைந்ததாக இருந்தது. இதனால் அவருடைய அறிவுரை

களும் அதற்கு ஏற்ற முறையிலேயே அமைந்துவிட்டன. உதாரணமாகப் பொய் சொல்வது தீமை என்பது நமது கொள்கையாக இருக்கிறது. அதைச் சான்றோர் பழிக்கும் வினையாகக் கருதுகிறோம். ஆனால், பேக்கன் பிரபு சொல்கிறார், 'ஒவ்வொருவருக்கும், குறிப்பாக, அரசியல் வாதிகளுக்கு, பொய் சொல்லத் தெரிந்திருக்க வேண்டும்' என்று. இதனால், இவரை வள்ளுவரோடு ஒப்பு நோக்க இங்கு நான் முயல வில்லை.

இதுபோலவே ரோஷிபோக்கோவையும், கன்ஃபூஸிய ஸையும் இங்கு வள்ளுவரோடு ஒப்பு நோக்குவது என் நோக்க மன்று. பிரெஞ்சு நாட்டில் வாழ்ந்த தத்துவ ஞானி ரோஷிபோக்கோ கசப்பான வாழ்க்கை அனுபவங்களைப் பெற்றார். இதனால் இவர் வெளியிடும் போதனைகளும் கசப்பானவையாகவே இருக்கின்றன. உதாரணமாக, செய்ந் நன்றி மறவாமையை நாம் போற்றிக் கொண்டாடுகிறோம். ஆனால், இந்த ஞானி சொல்கிறார், 'நன்றி தெரிவிப்பது இன்னும் ஏதாவது உதவி பெறுவதற்கான அறிகுறிதான்' என்று. சீன ஞானி கன்ஃபூஸியஸ் இன்றும் அந் நாட்டில் தெய்வமாக வழிபடப்படுகிறார். அங்கே ஊர்தோறும் இவருக் குக் கோயிலுண்டு. இவர் திருவள்ளுவருக்கு முந்திய காலத் தவர்: அதாவது கிறிஸ்துவுக்குச் சுமார் ஐந்நூறு ஆண்டுகள் முந்தியவர். இப் பெரியார் அக் கால அரசியலில் முக்கிய பங்கு எடுத்துக்கொண்டிருக்கிறார்; நீதிபதியாகவும் தொழிலாற்றி யிருக்கிறார். அரசனின் சர்வாதிகாரத்துக்கு மக்கள் உட்பட்டே ஆகவேண்டும் என்பது இவர் கொள்கை. மண்மீது மானிடன் நடக்கவேண்டிய முறை எது என்று இவர் கருதினாரோ அதை யன்றித் தெய்வம்பற்றியோ, மறு உலக வாழ்வுபற்றியோ இவர் போதனை புரிந்ததில்லை. பெண்களைப் பற்றியும், திருமணம் பற்றியும் அலட்சியமான மனப்பான்மையோடு பேசுவது தவிர, மற்றப்படி இவர் பல விஷயங்களில் வள்ளுவரோடு ஒப்பு நோக்கத் தக்கவரே. இருந்தாலும் இமாம் ஷேக் சாஅதியைப் பற்றி ஓரளவு கற்றவன் என்ற முறையிலும், அவருடையவும் அவர் நூற்களுடையவும் விரிவான

வரலாற்றினை எழுதியிருப்பவன் என்ற முறையிலும் இங்கு அவரைத் திருவள்ளுவரோடு ஒப்பு நோக்கத் துணிகிறேன்.

இமாம் ஷேக் சாஅதி ஷிராஜி ரஹ்மத்துல்லாஹி பாரசீகத்திலே ஷிராஜ் என்ற நகரத்தில் வாழ்ந்தவர்; வள்ளுவருக்கு ஆயிரம் ஆண்டுகள் பிற்பட்டவர். பாரசீக மொழிக்குப் பெருமையைத் தரும் "குலிஸ்தான்" (மலர்த் தோட்டம்), "போஸ்தான்" (பழத் தோட்டம்) ஆகிய இரு நீதி நூற்களையும் இவர் நல்கினார்.

வள்ளுவருடைய அனுபவ ஞானம் பற்றியோ, அவர் வாழ்ந்த விதம் பற்றியோ ஆதாரபூர்வமாக நாம் எதுவும் அறியக்கூடவில்லை. ஆனால், சாஅதியின் வரலாறு தெளிவானது. அன்றைய உலகின் மிகப் பெரும் பகுதிக்கு இவர் சென்றிருக்கிறார்; கால்நடையாகவே சோலைகளையும், பாலைகளையும், நகரங்களையும், சிற்றூர்களையும் கடந்து சென்றிருக்கிறார்; பிரயாண விடுதிகளிலும், பள்ளிவாசல்களிலும், தருமச் சாலைகளிலும், சிறைக்கூடத்திலும், வழிப்பிரயாணத்திலும் தாம் சந்தித்த எண்ணற்றவர்களோடு—ஞானியர் முதல் கள்ளர்கள்வரை, கற்றோர் முதல் கயவர்வரை பலரோடு—பழகியிருக்கிறார்; இன்பகரமான, துயரமான அனுபவங்களையெல்லாம் பெற்றிருக்கிறார்; மணவாழ்வு புகுந்து இன்னல் பல அடைந்திருக்கிறார்; இளமையில் துடுக்கான போக்குடையவராக இருந்து, நாற்பது வயதுக்குமேல் நல்லவராகி, பிறகு ஞானியாகி நல்லுபதேசம் புரிந்திருக்கிறார்; உலகைச் சுற்றிய பிறகு ஒரு ரோஜா வனத்தை நிர்மாணித்துக்கொண்டு தமது எண்பத்து நான்காம் வயதில் 'குலிஸ்தான்' 'போஸ்தான்' மற்றும் பல நூற்களை எழுதத் தொடங்கியிருக்கிறார். நூற்றுப் பத்து வயதுவரை இவர் ஜீவித்திருந்தார்.

சாஅதி தம் கருத்துக்களை வெளியிடும் முறை வள்ளுவருடையதைப் போன்றதன்று; தமது அனுபவத்திலிருந்து ஒரு சம்பவத்தை அல்லது ஒரு கதையைத் தந்து, அதன் முடிவில் நீதி போதனை புரிகிறார், இடையிடையே அழகிய கவிதைகளையும் தருகிறார்.

வள்ளுவரும் சாஅதியும் தமக்கு முற்பட்ட கால ஆசிரியர்களின் கூற்றுக்களை எடுத்தாண்டிருக்கின்றனர். திரு· தீக்ஷிதர் எழுதிய "Studies in Tamil Literature" என்ற நூலில் வள்ளுவர் வடமொழி தர்மசாஸ்திரம், சாணக்கியரின் அர்த்த சாஸ்திரம், வாத்சாயனரின் காமசூத்ரங்கள் ஆகியவற்றை முறையே அறம் பொருள் இன்பத்துப் பால்களை எழுதப் பயன் படுத்திக்கொண்டிருக்கிறார் என்கிறார்· இது, மிகவும் அசம்பாவிதமானதாகவும், வள்ளுவர் பெருமைக்கும், அவருடைய சிந்தனசக்திக்கும் இழுக்குத் தரும் நோக்கத்துடன் சொல்லப் படுவதுமாகவே தோன்றுகிறது· குறிப்பாக, சாணக்கியரும், வாத்சாயனரும் வள்ளுவருடைய காலத்தவர்களாகவோ, சற்றுப் பிந்தியவர்களாகவோகூட இருத்தல் கூடும். இந்த அறிஞர்கள், தமக்கும் முந்திய காலத்தவர்களான காமந்தகர், வெள்ளி போன்றோரின் கருத்துக்களைத் தம்முடைய நூற்களில் எடுத் தாண்டிருக்கின்றனர்· திருவள்ளுவரும் (பரிமேலழகர்போல் வடமொழி கற்றவரர்கவோ, அவ் விதம் கற்றவரின் உதவியைப் பெற்றவராகவோ இருந்திருந்தால்) இந்தக் காமந்தகர், வெள்ளி போன்றோரின் கருத்துக்களைத் தமது குறளில் எடுத்தாண்டிருத் தல் கூடும்· சில குறள்களில் 'என்ப' என்று வருவதும் இவ் விதம் தாம் பிறர் கருத்துக்களை எடுத்தாள்வதைக் குறிக்க வள்ளுவர் உபயோகிக்கும் பதமாக இருக்கலாமல்லவா!

சாஅதியோ தமக்கு முன் வாழ்ந்த பலருடைய கருத்துக் களையும் ஆங்காங்கே மேற்கோள் தருகிறார்; திரு குர்ஆன் வசனங்களைத் தம்முடைய நூற்களில் எடுத்தாண்டுள்ளார். 'போஸ் தா'னும், 'குலிஸ்தா'னுமே திரு குர்ஆனைப் பின்பற்றி எழுதப் பட்டவைதாம் எனலாம்·

இனி, வள்ளுவருடைய கருத்துக்களோடு சாஅதியின் கருத்துக்கள் எப்படிப் பொருந்துகின்றன என்று பார்க்கலாம். இவை இரண்டின் நயங்கள் குறித்தும் நான் பேச அசக்தனாக இருப்பதை ஒப்புக்கொண்டு மேலே செல்கிறேன். இவற்றை ஒப்பு நோக்கி நயங்காணும் வேலையை அன்பர்களுக்கே விட்டு விடுகிறேன்·

அரசனோடு நெருங்கிய தொடர்புகொண்டவர்கள் நெருப் போடு பழகுவதுபோல் நடந்து கொள்ளவேண்டும். அதிலும்

குளிர் காய்வதன் பொருட்டு நெருப்பை அண்டியிருப்பவர்கள் அதிகம் விலகியிருந்தாலும் பயனில்லை; மிக நெருங்கி உட்கார்ந் திருந்தாலும் ஆபத்து. இது போலவே அரசனோடு பழகுபவர் களும் எட்டியே இருந்துவிடாமலும், மிகுந்த நெருக்கங் காட்டாமலும் நடந்துகொள்ள வேண்டும். அதாவது,

அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்

என்றார் வள்ளுவர்.

சாஅதி சொல்கிறார்: சிங்கத்தைப் பழக்கும் ஒருவனிடம் சிலர் வினவினர், 'நீ ஏன் இந்தத் தொழிலை மேற்கொண்டாய்?' என்று. "சிங்கம் உண்டதுபோக, மீதி யுணவு எனக்குக் கிடைக்கிறது; மேலும் அதன் அருகேயிருக்கும் நான், என் எதிரிகளிடமிருந்து பாதுகாக்கப்படுகிறேன்"—என்று அவன் பதிலளித்தான்.

"நீ அதன் பாதுகாவலில் இருப்பதாகச் சொல்கிறாயே! அதனிடம் இன்னும் கொஞ்சம் ஏன் நெருங்கிப் பழகக் கூடாது?" என்று கேட்டார்கள்.

அவன் சொன்னான்: "அதற்கு இரையாகி விடாமல் இருப்பதற்குத்தான்."

**(கவி)** மசூஸிகள் நெருப்பை வணங்குகிறார்கள்;
ஆனால் அதில் விழுந்தால்
சாம்பலாக வேண்டியதுதான்.

**(நீதி)** "அரசனிடம் நெருங்கிப் பழகுபவனுக்கு ஒரு தடவை பொற்கிழி கிடைக்கலாம்; ஒரு தடவை தலைக்கே ஆபத்து வரலாம். ஆகவே, மன்னரைச் சேர்ந்தொழுகுவோர் மன்னர் நிலைமையை அறிந்து விழிப்புடன் இருக்க வேண் டியது அவசியமாகிறது" (குலிஸ்தான். அத்தியாயம் 1, கதை 15).

—இன்னொரு குறள்: அரசனிடம் ஒரு விஷயத்தை விண்ணப்பித்துக்கொள்வதென்றால் அதற்குக் காலமும் நேர மும் உண்டு. மேலும், சொல்லக் கூடிய விஷயம் அரசனுக்கு வெறுப்பைத் தராமல் இருக்கவேண்டும். இது சொல்லும்

முறையைப் பொறுத்தது. அரசன் மகிழ்ச்சி கொண்டிருக்கும் சமயம் அதைத் தக்க விதத்தில் எடுத்துச் சொன்னால், அதற்கு நல்ல பயன் கிடைக்கலாம்.

அதாவது,

குறிப்பறிந்து, காலங் கருதி, வெறுப்பில
வேண்டுப, வேட்பச் சொலல்

என்றார் வள்ளுவர். குறிப்பறிய வேண்டும் ; காலமும் சரியானது தானா என்று நோக்க வேண்டும். விஷயம் அரசனுக்கு வெறுப்பற்றதாக இருக்க வேண்டும். தனக்கு வேண்டும் இத் தகைய காரியத்தையும் அரசன் விரும்பிக் கேட்கத்தக்க விதமாகக் கூற வேண்டும்.

சாஅதி சொல்லுகிறார் : ஓர் அரசனிடம் சிலர் ஒருவிஷயத்தைச் சொல்ல வருகின்றனர். அப்போது, அரசனோ நாட்டு நிலைமையைப் பற்றித் தீவிரமாக யோசனை செய்துகொண்டிருக்கிறான். அதைக் கவனியாது, வந்தவர்கள் தமது விண்ணப்பத்தைத் தெரிவிக்கின்றனர். அரசன் கோபங்கொள்கிறான். 'அரசியல் விஷயங்களிலே முழுக் கவனமுங் கொண்டு ஏனையவற்றைக் கவனிக்க இயலாத நிலையிலுள்ள அரசனின் கோபத்திலிருந்து நம்மைக் காத்துக்கொள்வதே சாலச் சிறந்தது. தன் தேவையைத் தெரிவிக்கத் தக்க சந்தர்ப்பம் பாராதவனுக்கு அரசனின் உதவி கிடைப்பது அபூர்வம். உன் அபிப்பிராயத்தைத் தெரிவிக்கச் சந்தர்ப்பம் கிடைக்கும் வரை வீண் பேச்சால் உன் லக்ஷியத்தை நாசஞ் செய்து கொள்ளாதே!' (குலிஸ்தான். அத். 1, கதை 13).

—இன்னொரு குறள் :

அகழ்வாரைத தாஙகும் நிலம்போலத தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை.

சாஅதியின் நீதி : நீ கஷ்டத்துக்கு உட்படுத்தப்பட்டால் சகித்துக் கொள் ; மன்னிப்பளித்தால் நீ பாவத்தை விட்டும் பரிசுத்தமாக்கப்பட்டவனாகிறாய். சகோதரா, இறுதியில் மண்ணாகப் போவதை உணர்ந்து இப்போதே மண்ணைப்போல் சகிப்புத் தன்மையோடிரு! (குலிஸ்தான். அத்தியாயம் 2, கதை 40).

*—வள்ளுவருடைய உன்னதமான குறள்களில் இது ஒன்று :*

இன்னா செய்தாரை யொறுத்தல், அவர்நாண
நன்னயம் செய்து விடல்.

*தீமைக்குப் பிரதியாகத் தீமை செய்யச் சொல்வது காட்டு மிராண்டியின் சட்டம். பழிக்குப் பழி, இரத்தத்துக்கு இரத்தம் என்பது யூதச் சட்டம். இஸ்லாமிய தர்மம் பதிலுக்குப் பதில் தான் செய்ய வேண்டும் என்று கூறவில்லை. ஒருவன் உன்னை அடித்தால், நீ அதற்காக அவனை அடித்துவிட விரும்பினால், அவன் அடித்த அதே அளவுக்குத்தான் நீயும் அடிக்கலாம். அவனுடைய அடியை விட உன்னுடையது பெரிதாக விழுந்து விடுமோ என்று பயந்தால் அடியாதே. உன்னைப் பதிலுக்கு அடிக்கச் சொன்னது உன் கோபத்தை ஆற்றுவதற்காகத்தான். ஆனால், இறைவனின் இறுதித் தூதர் முஹம்மது நபி (ஸல்) : அவர்களைப்போல் உன் கோபத்தை ஒழிக்க முயல். சாந்தத் தோடு உன் கோபத்தைக் கரைத்துக்குடி. துன்பம் செய்தவ னுக்கு நன்மை செய்—இதுதான் இஸ்லாமியச் சட்டம். இதை வள்ளுவர் வெகு அருமையாகச் சொல்லியிருக்கிறார். ஒரு கன் னத்தில் அறைந்தால் மறு கன்னத்தைத் திருப்பிக் காட்டு என்ற ஏசு பெருமான் போதனைக்கும் இது ஒருபடி மேலே போகிறது. உன் கன்னத்தில் அறைந்த எதிரிக்குக் கை புண் பட்டிருந்தால் அதற்கு மருந்துபோடு ; அவன் தன் நடத்தைக் காக வெட்கப்படும்படி செய் என்கிறது திருக்குறள்.*

*சாஅதி சொல்கிறார் : என் ஷேகிடம் (குருவிடம்) சென்று என் நடத்தையைக் குறித்து ஒருவன் வீண் வதந்தியைப் பரப் பினான் எனப் புகார் செய்தேன். அந்தப் பெரியார் சொன் னார், 'நீ அவனுக்கு நன்மை செய்து அவன் வெட்கப்படும் படி செய்துவிடு' என்று. (குலிஸ்தான். அத்தியாயம் 2, கதை 23).*

*இதற்கு இலக்கணமாக ஒரு கதையையும் தருகிறார் சாஅதி : கலிபா ஹாரூன் அல் ரஷீதின் மகன், தன் தந்தை யிடம் வந்து ஒருவன் தன் தாயின் பெயரைச் சொல்லித்*

தன்னைத் திட்டியதாகத் தெரிவித்தான். கலிபா ஹாரூன் தம் மந்திரிகளை விளித்து, அதற்கு என்ன தண்டனை விதிக்கலாம் என்று கேட்டார். ஒருவர் அவனைத் தூக்கிலிட வேண்டும் என்றார். ஒருவர் அவன் நாவைத் துண்டிக்க வேண்டும் என்றார். ஒருவர் அவனை நாடு கடத்த வேண்டும் என்றார். ஆனால் ஹாரூன் தம் மகனை நோக்கிக் கூறினார், 'மகனே, அவனை மன்னித்து அவனுக்கு ஏதாவது உதவி செய்வது தான் சிறந்ததாகும். உனக்கு அதில் இஷ்டமில்லையானால் நீயும் அவன் தாயைத் திட்டிவிடு. அதுவும் அவன் பேசிய அளவுக்கு அதிகந் திட்டினால் குற்றம் உன்னுடையதாகவும், அவன் உன்மீது குற்றஞ் சாட்டக்கூடியதாகவும் ஆகிவிடும்' என்று. (குலிஸ்தான். அத். 1, கதை 34).

—'மருந்து' என்ற அதிகாரத்தின் முதல் குறளில் உணவுண்ண வேண்டிய அளவை வள்ளுவர் சுட்டிக் காட்டுகிறார். மீதூண் விரும்புதலும், மிகக் குறைவாக உண்டலும் உடல் நலங்கெடுக்கும் என்கிறார் :

> மிகினும் குறையினும் நோய்செய்யும், நூலோர்
> வளிமுதலா எண்ணிய மூன்று.

உணவு தேவைக்குச் சற்று அதிகமானாலோ, குறைந்தாலோ வாத பித்த சிலேத்ம நாடிகளில் கோளாறு ஏற்பட்டு விடுமாம்.

சாஅதியும் இதை வற்புறுத்துகிறார் : ஓர் அறிஞர் மிதமாக உண் என்று தம் மகனுக்குப் போதனை புரிந்தார். 'மிதமாக உண்டால் பசி அடங்குவதெப்படி?' என்று அவன் கேட்டான். அவர் சொன்னார் : 'மகனே, மிதமாக இருக்கக் கற்றுக்கொள்; இறைவன் குர்ஆனிலே சொல்கிறான், (உணவை) உண்ணுங்கள் ; (நீரைக்) குடியுங்கள் ; ஆனால் மிதமிஞ்சியன்று' என்று. உணவு, வாழ்க்கைக்கு இன்றியமையாததேனும் வாழ்க்கை நாசமாகும்படி உண்ணாதே! அமிர்தமும் அதிகமாக உண்டால் விஷமாகிவிடும். காய்ந்த ரொட்டியும் சரியான வேளையில் உண்டால் அமிர்தந்தான்? (குலிஸ்தான். அத். 3, கதை 8).

இது சம்பந்தமாக நபி பெருமானார் வாழ்க்கையில் நடந்த ஒரு சம்பவத்தையும் வேறோர் இடத்தில் சாஅதி குறிப்பிடுகிறார். பாரஸிக அரசர் நபி பெருமானாரின் சமுகத்துக்குச் சிறந்த வைத்தியர் ஒருவரை அனுப்பிவைத்தார். ஆனால், அந்த வைத்தியர் மாதக் கணக்கில் அங்குத் தங்கியிருந்தும் யாரும் நோய் என்று அவரிடம் மருந்து கேட்க வரவில்லை. தாம் வேலையின்றி வாளாவிருக்கநேர்ந்தது பற்றி அவர் நபி பெருமானிடம் முறையிட்டார். "எங்கள் மக்கள் பசித்தாலன்றி புசிப்பதில்லை; முழுப் பசியும், அடங்குமுன் புசிப்பதை நிறுத்திவிடுவதுமுண்டு" என்று அவர்கள் தெரிவித்தார்கள். அதுதான் யாருக்கும் வியாதி வராத காரணம் என்றார் அந்த அரச வைத்தியர். (குலிஸ்தான். அத். 3, கதை 4).

தோன்றிற் புகழொடு தோன்றுக, அஃதில்லார்
தோன்றலிற் றேன்றுமை நன்று

என்றார் வள்ளுவர்.

சாஅதியின் போஸ்தானில் (அத். 9-ல்) இவ்விதம் காணப்படுகிறது: லுக்குமான் ஹக்கீம் வெகு அருமையாகச் சொன்னார்: பாவாத்மாவாகப் பல வருஷங்கள் வாழ்வதைவிடப் பிறவாமல் இருப்பது நலம். நஷ்டத்துக்கு விற்பதைவிடக் கடையைக் காலையிலேயே மூடிவிடுதல் நலம்.

வள்ளுவர் சொல்கிறார்:

குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
உடம்பொ(டு) உயிரிடை நட்பு.

யுக்த காலத்தில் முட்டைத் தோட்டைவிட்டு விலகிப் பறவை வெளியாகிவிடுவது போல, உடம்பைவிட்டு உயிரும் விலகிவிடக் கூடியதாக இருக்கிறதாம்.

சாஅதி சொல்கிறார்: "உன் வாழ்க்கையொரு பறவை; அதன் பெயர் மூச்சு; கூண்டைவிட்டோடும் பறவை மீண்டும் கூண்டை அணுகாது." (போஸ்தான். அத். 9).

இவ் வுலகச் செல்வங்களும், இவ் வுலக வாழ்வும் நிலையானவையல்ல என்பதை யுணர்த்திப் பிறகு துறவு எது என்று வள்ளுவர் விளக்குவது போலவே சாஅதியும் விளக்குகிறார்.

நேற்றிருந்தார் இன்றில்லாத இவ்வுலகத் தன்மையை வள்ளுவர் கூறுவது போலவே சாஅதியும் கூறுகிறார். சாஅதி சொல்கிறார், "ஒருவன் தன் நோயாளி நண்பனின் படுக்கையருகில் இருந்து இரவு முழுதும் அழுதுகொண்டிருந்தான். மறுநாட் காலையில் அவன் இறந்துவிட்டான்; அந்த நோயாளி குணமடைந்துவிட்டான்!" (குலிஸ்தான். அத். 2, கதை 16).

உண்மையில் மனத் துறவு கொள்ளாது துறவிபோல் வேஷமிட்டலைபவனைவிட அயோக்கியனே இல்லை என்கிறார் வள்ளுவர்.

நெஞ்சில் துறவார் துறந்தார்போல் வஞ்சிதது
வாழ்வாரில் வன்கணார் இல்.

ஒரு போலித் துறவியின் திருட்டுக் கதையைக் கூறும் சாஅதி சொல்கிறார்: "துறவு உடையளவில் மட்டுமன்று; அது உலகையும், ஆடம்பரத்தையும், மமதையையும் துறப்பதாகும். ஆனால் வீரனுடைய உடையை வீரன்தான் அணியவேண்டும்; கோழை அணிவதால் என்ன பயன்? போலித் துறவியைப் போல் சமூகத் துரோகி யாருமில்லை." (குலிஸ்தான். அத். 2, கதை 5).

தான் செய்யும் குற்றம் தனக்கே நன்கு தெரியும். இது தவறான காரியம் என்று தெரியும். இருந்தும், அதை ஒருவன் செய்கிறான். அப்படிப்பட்டவனுடைய வெளித் தோற்றமும் கம்பீரமும் எப்படியிருந்தால்தான் பயனென்ன? மக்கள் அவனைப் புகழ்வதனால்தான் பயனென்ன? வள்ளுவர் சொல்கிறார்:

வானுயர் தோற்றம் எவன்செய்யும், தன்னெஞ்சம்
தான்அறி குற்றப் படின்.

வெளித்தோற்றத்துக்குக் கந்தர்வனைப்போலோ, மகானைப் போலோ இருப்பதனால் என்ன பயன்? தன் மனத்திற்குத் தவறு என்று படும் காரியத்தை அவன் செய்தால், அவ் வெளித் தோற்றம் பயனற்றதாகிவிடுகிறது.

சாஅதி சொல்கிறார்: சிலர் ஒரு பிரபுவின் நற்செயல்களைப் புகழ்ந்து பேசினர். அதைக் கேள்வியுற்ற அந்தப் பிரபு தனக்

குள் கூறிக்கொண்டார்: 'மற்ருேர்க்கு என் வெளித் தோற்றம் நல்லதாகப் படுகிறது. ஆனல், என் மன அழுக்குக் கண்டு நானே தலைகுனிகிறேன். மக்கள் மயிலின் அழகிய பல வண்ணத் தோகை கண்டு வியக்கின்றனர்; ஆனல் மயிலோ தன் விகாரமான கால்களைக் கண்டு தலைகுனிகிறது' (குலிஸ்தான். அத். 2, கதை 8).

வள்ளுவரும் சாஅதியும் பகைவரை எப்படி அடக்க வேண்டும் என்று சொல்வதிலும் கருத்து ஒற்றுமை காட்டு கின்றனர். ஆனல், இருவரும் வெவ்வேறு உபமானங்கள் கூறு கின்றனர்.

எதிரியின் பலத்தைப் பற்றி அலக்ஷியமாக எண்ணிவிடக் கூடாதாம்.

முள் மரத்தை அது முளைக்கும்போதே கிள்ளி எறிந்து விடுவது எளிது. ஆனல், அது வளர்ந்து பெரிய மரமான பிறகு அதைப் பிடுங்க முயன்ருல் அதிலுள்ள முட்கள் கை முழுவதும் குத்தி வருத்தந் தரும். பகையும் இது போன்றது தான். வளர்ந்தபின் அதைத் தொலைப்பதென்பது கடினம் என்கிருர் வள்ளுவர்.

இளைதாக முள்மரம் கொல்க, களையுநர்
கைகொல்லுங் காழ்த்த விடத்து.

நெருப்பு, சிறிய பொறியாக இருக்கும்போதே அதைக் காலால் மிதித்தோ, வாயால் ஊதியோகூட அணைத்து விடுவது எளிது. ஆனல், அது பெரிதாக வளர்வதற்கு இடங் கொடுத்து விட்டால், பிறகு அதை அழிப்பது கடினம்; அது நம்மை அழித்துவிடலாம். சாஅதி சொல்கிருர்: 'பகை, நெருப்புப் போன்றது. நெருப்பைச் சிறு பொறியாக இருக்கும்போது இலகுவாக அணைத்துவிடலாம். சிறு பொறி பெரு நெருப்பாய் விட்டால் அது உலகையே விழுங்கிவிடலாம். இன்று நீ உன் எதிரிக்கெதிராக விற்பிடித்துக் குறிபார்க்க முடிகிறது; அவனை மட்டும் உன்னை நோக்கிக் குறிபார்க்க விட்டுவிடாதே!' (குலிஸ்தான். அத். 8, நீதி 12).

மருவுக மாசற்ருர் கேண்மையொன்(று) ஈத்தும்
ஒருவுக வொப்பிலார் நட்பு.

குற்றமற்ஞேர் நட்பினையே பெறவேண்டும்; உலகத்துக் கேற்ற நன்னடத்தை யற்ஞேரின் நட்பை அறியாது பெற்றிருந்தால், எதைக் கொடுத்தேனும் அதை விட்டுவிட வேண்டும்.

சாஅதி சொல்கிஞர்: நான் சிறுவஞக இருந்தபோது என் தகப்பஞரோடு ஒரு திருவிழாப் பார்க்கச் சென்றிருந்தேன். கூட்டத்தில் நான் என் தகப்பஞரைத் தவற விட்டுவிட்டேன். நான் பயந்து அழுதேன். ஆஞல், விரைவில் அவர் என்னைக் கண்டுபிடித்துக் கோபத்தோடு என் காதைத் திருகிஞர். "என் சட்டையைப் பிடித்துக்கொள், என்று எத்தனை தடவை சொல்வது?" என்று அவர் என்னைக் கடிந்துகொண்டார்.

ஒரு குழந்தைக்குத் தனியாகப் போகத் தெரியாது. எப் பாதையிலும் பிறர் காணுதபடி போவதும் கடினம்.

ஹே எளியவனே, நீ உன் முயற்சிகளில் ஒரு குழந்தையைப் போன்றிருக்கிஞய். போ, நல்லோரின் சட்டை நுனியைப் பிடித்துக்கொள். கீழானவர்களோடு பழகாதே! நல்லோர்களின் குதிரைச் சேணத்திலுள்ள கயிற்றையாவது உறுதியாகப் பற்றிக்கொள். (போஸ்தான். அத். 9).

சாதாரணமாகச் சொல்லப்படும் வள்ளுவர்-வாசுகியம்மை இல்வாழ்க்கை வரலாற்றை நம்புவதாஞல், திருவள்ளுவர் கீழ்ப் படிதலுள்ள மனைவியைப் பெற்றிருந்தார் என்றும், அவள் அவருக்குச் சேவை செய்வதையே தன் பாக்கியமாகக் கொண் டிருந்தாள் என்றும் அறிகிஞேம். ஆஞல், சாஅதியோ கசப் பான இல்வாழ்க்கை யனுபவம் பெற்றவர்; மனைவியின் கொடுமைக்கு உள்ளாகித் துயர மனுபவித்தவர். எனவே, அடங்கா மனைவியைக் கடுமையாக நடத்தவேண்டும் என்ற கருத்தை அவர் நூற்களில் காண்கிஞேம்.

எந்த வீட்டிலிருந்து கணவன் குரலைவிட மனைவியின் குரல் எடுப்பாகக் கேட்கிறதோ அங்கிருந்து மகிழ்ச்சி வெளியேறி விட்டது என்று உணரும்படி சாஅதி கூறுகிஞர்.

"உன் மனைவி வீஞக வெளியிடங்களுக்குச் சென்ஞல், அவளை அடி; அல்லது நீ, பெண்ணைப்போல், அவள் உட்கார்ந் திருக்கவேண்டிய இடத்தில் இரு! அந்நியர் முன்னிலையில்

அவள் கண்கள் குருடாக இருக்க வேண்டும். உன் வீட்டை விட்டு அவள் எங்கேயாவது உன்னை மீறிப் போவதானால் அது சவக் குழிக்காகத்தான் இருக்கவேண்டும்" (போஸ்தான். அத். 7) என்கிறார் சாஅதி.

இல்வாழ்க்கைக்கு உகந்த மனைவியைப் போற்றும் வள்ளுவரும், மனைவிக்குக் கீழ்ப்படிந்து அவள் தாசனாய் ஒழுகும் கணவனை இகழ, "பெண் வழிச் சேறல்" என்று ஓர் அதிகாரத்தையே செலவிடுகிறார். மனைமாட்சியைப் பற்றிச் சொல்லும் இடத்தேயும்,

> மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின், வாழ்க்கை
> எனைமாட்சித் தாயினும் இல்

என்கிறார். சரியான மனைவிமட்டும் வாய்க்காவிட்டால், வேறு எந்த நலன்களிருப்பினும் கணவன் வாழ்வு வறண்டது தான் என்பது அவர் கருத்து.

தம்முடைய சொந்த இல்வாழ்க்கை அனுபவத்தை விவரிக்கும் சாஅதி சொல்கிறார்: "அமைதியாக வாழக்கூடிய ஒருவன் வீட்டில் காதகியாய் இருக்கும் மனைவிதான் அவ் வீட்டை நரகமாக்கி விடுகிறாள். இறைவனே, இந்த நரகின் கொடுமையினின்றும் நீதான் எங்களைக் காப்பாற்ற வேண்டும். நரகமும் சுவர்க்கமும் என் வீட்டினுள்தான் இருக்கின்றன." (குலிஸ்தான். அத். 2, கதை 35).

திருவள்ளுவரின் கருத்துக்களையும், சாஅதியின் கருத்துக்களையும் அதிக விளக்கந்தராது ஒப்பிட்டுக் காட்டியுள்ளேன். இதுபோல், பிற சிந்தனையாளர்களுடைய கருத்துக்களையும் வள்ளுவர் கருத்துக்களுடன் ஒப்பு நோக்கவேண்டும். ஒப்பு நோக்கிச் சிந்தித்து வள்ளுவர் பெருமையை இன்னும் அதிகமாக விளங்க வைக்கவேண்டும். அதற்கு இக் கட்டுரை ஓர் ஆரம்பமாக உதவுமாக!

# திருவள்ளுவர் மதம்

திரு. A. C. ஷண்முக நயினர், பி. ஏ., பி. எல்.

திருவள்ளுவர் காலத்திலிருந்த சமயங்கள் உலகாயதம், பௌத்தம், ஆருகதம், ஏகான்மவாதம், சைவம், வைணவம் முதலியன. கிறிஸ்துவ மதமும் மகமதிய மதமும் அவர் காலத்திற்குப் பின் தோன்றியனவாகலான், இவ் விரண்டு சமயங்களைப் பற்றி நாம் கருத வேண்டுவதில்லை.

திருவள்ளுவர் உலகாயதரா? உலகாயதருக்குக் காட்சி யளவை யொன்றே பிரமாணம். கருதலளவையும், நூலளவையும், அவர் கொள்ளார். திருவள்ளுவர் "அகர முதல வெழுத் தெல்லா மாதி—பகவன் முதற்றே யுலகு" என்றதால் கருதலளவையையும், "கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ னற்றா டொழாஅ ரெனின்" என்றதால் உரை யளவையையுங் கொள்கின்றார். உலகாயதர், காட்சியளவைக் கெய்துகின்ற மண், புனல், அனல், வளி யென்னும் நான்கு பூதங்களே உண்டென்பர். திருவள்ளுவர், "வஞ்ச மனத்தான் படிற் றொழுக்கம் பூதங்கள் ஐந்து மகத்தே நகும்" என்ற குறளில் பூதங்கள் ஐந்தென்று கூறுகிறார் (ஐந்தாம் பூதம் வெளி). உலகாயதர், உடம்பிற்கு வேறே உயிர் உண்டென்பது பொய் யென்பர். திருவள்ளுவர், "குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே உடம்போ டுயிரிடை நட்பு" என்ற குறளால் உடல் வேறு, உயிர் வேறு என்பார்.

உலகாயதர், உடம்பிற்கு இன்ப துன்பங்கள் இயல்பாயுள்ளன ; இவற்றிற்குக் காரணம் வினை யென்பது பொய்; மயிலைச் சித்திரித்தாரும் குயிலைக் கூவுவித்தாருங் காணப் பெறுமையின், கடவுள் உண்டென்பதும் பொய் என்பர். திருவள்ளுவர், "பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக் கல்" என்பதால் வினை உண்டென்றும், 'இருள்சேர் இருவினை' என்றதால் நல்வினை தீவினை யென இரு வினை உண்டென்றும், "வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி தொகுத்தார்க்கும் துய்த்த லரிது" என்றதால், இன்ப துன்பங்களை இறைவன் வகுத்துக் கொடுக்கின்றான் என்றும், 'ஆதி பகவன் முதற்றே உலகு' என்றதால் உலகிற்கு முதலாகிய கடவுள் ஒருவர் உண்டென்றும் கூறுகின்றார்.

உலகாயதர், ஈண்டே, மங்கைப் பருவத்து மகளிரோடு உண்டு உடுத்து வாழ்வதே துறக்க இன்பம்; பகைவரால், நோயால், வறுமையால், நூல்களால், பிறவற்றால் வருந்துவது நிரயத் துன்பம் : இவை தவிர வேறு துறக்க நிரய மென்பது பொய் யென்பர். திருவள்ளுவர், "புத்தே ளுலகத்து மீண்டும் பெறலரிதே ஒப்புரவி னல்ல பிற", "உண்ணாமை யுள்ள துயிர்நிலை ஊனுண்ண அண்ணாத்தல் செய்யா தளறு" என்று கூறுதலால், துறக்க நிரயங்கள் வேறுள என்பது பெறப்படுகின்றது. இந்திரிய வயப்படாது ஐம்புலன்களிற் செல்கின்ற அவா ஐந்தனையும் அடக்க வேண்டுமென, "ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான் இந்திரனே சாலுங் கரி" யென்ற திருக்குறளால் உணர்த்துகின்றார்.

உலகாயதர் நான்கு பூதக் கூட்டுறவில் பிராண வாயு நீங்கின் உணர்விழந்து உடம்பு நாசமாம்; இஃதே வீடுபேறு; வேறு வீடுபேறென்பது பொய் யென்பர். திருவள்ளுவர். "அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால் பிற ஆழி நீந்தல் அரிது" என்பதால், வீடுபேறு இன்னதென்பதை விளக்குகின்றார்.

உலகாயதரிற் பல பிரிவினர் உளர். அப் பிரிவினர் கருத்தையெல்லாங் கூறின் இக் கட்டுரை பெருகுமாகலின் விடுத்தாம். இதுவரை எழுதியவற்றால், திருவள்ளுவ நா

ருக்கு உலகாயதர் கொள்கைகள் உடன்பாடில்லை யென அறிகின்றோம்.

திருவள்ளுவர் பௌத்தரா? உலகத்துப் பிறந்து இறந்து உழன்று, சில முதலியவற்றால் நல்லுணர்வு தோன்றப்பெற்று முழுதுணர்ந்து முத்திபெற்றுத் தம்மைப்போல் பிறரும் உணர்ந்து உய்தற் பொருட்டுக் கருணையினால் பிடகநூல் செய்தவர் புத்தக் கடவுள். இந் நூலில் கூறும் முக்கிய பொருள் ஞானமே ஆன்மா எனப்படும். அது, நீரோட்டம்போலத் தொடர்ச்சியாய்க் கணந்தோறும் தோன்றி அழியும்; அங்ஙனம் தோன்றி அழியுங்கால் முற்கணத்தில் அழிவெய்தும் ஞானத்தில் தோன்றிய வாசனை, பிற்கணத்தில் தோன்றும் ஞானத்தில் பற்றுதலால் அறிவு முதலாயின நிகழும். மற்றும் உள்பொருள் எனப்பட்டவை எல்லாம் கணந்தோறும் தோன்றி அழியும். இந்த ஞானத்தில் தோன்றிய வாசனை அழிவதே முத்தி என்பதாம். பௌத்தர்கள் பதமுத்திகள் உண்டெனக் கொள்வதில்லை. பிடக நூலில் பொருந்திக் கொள்ளப்படும் அளவைகள்: காட்சியும் அனுமானமும் ஆம். திருவள்ளுவர் மூன்று அளவைகள் கொள்வதை முன் பார்த்தோம். திருவள்ளுவர்,

> "அறிதோ றறியாமை கண்டற்றாற் காமஞ்
> செறிதோறுஞ் சேயிழை மாட்டு"

என்றதால், ஞானத்தின் வேறாய் ஆன்மா உண்டென்பது தெரிகிறது. மற்றும்,

> "தாமவீழ்வார் மென்றோட் டுயிலினி னினிதுகொல்
> தாமரைக் கண்ணா னுலகு"

என்றதால் பதமுத்தித் தானங்களாகிய வேறு உலகங்கள் உண்டென்பது புலப்படும். பௌத்தரில் சிலர் ஆன்மா இல்லை என்பர். திருவள்ளுவர் உண்டென்பதை அவர் இயற்றிய நூலில் பல இடங்களில் கூறியிருக்கின்றார்.

பௌத்தர்கள் ஜாதி, வேதம், திக்கு, காலம், நூல், கடவுள் எல்லாம் இல்லை என்று கூறுவர். திருவள்ளுவர் ஒவ்வொன்றையும் மறுக்கின்றார்:

"மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்"

என்பதால், ஜாதி, வேதம் உண்டென்றும், "தென்புலத்தார்" என்றதால் திக்கு உண்டென்றும்,

"நெருந லுளனொருவ னின்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு"

என்பதால் காலம் உளதென்றும், முதற் குறளால் கடவுள் உண்டென்றும் உறுதி கூறுகின்றார். தவிரவும், பௌத்தர்கள் கொள்கைப்படி ஓர் உயிரைக் கொல்வது குற்றமுடைத்து. கொன்றதைத் தின்பது குற்றம் இல்லை. ஆனால், திருவள்ளுவர் கொல்வதையும் கொன்றதைத் தின்பதையும் அழுத்தமாகக் கண்டிக்கின்றார்:

"அருளல்ல தியாதெனிற் கொல்லாமை கோறல்
பொருளல்ல தவ்வூன் றினல்"

என்ற குறளை ஆராய்க.

பௌத்தர்களுக்குத் தவம் என்பதும் உடன்பாடில்லை. திருவள்ளுவர், தவம் யாதெனக் கூறுகின்றார், பின்வருகின்ற குறளில்;

"உற்றநோய் நோன்ற லுயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவததிற் குரு."

தவிர, "கூற்றம் குதித்தலும் கைகூடும்" என்று தவத்தான் வரும் ஆற்றலையும் குறிப்பிடுகிறார்.

தெய்வப் புலவர் வழங்கிய கடவுள் பெயரெல்லாம் அருகனுக்கே அன்றிப் புத்தருக்கும் மற்றக் கடவுள்களுக்கும் ஒக்குமாதலின் இப் பெயர்களைமட்டும் வைத்துத் திருவள்ளுவர் இன்ன சமயத்தைச் சார்ந்தவர் என்று கூற.முடியாது. முதற் குறளில் வரும் பகவன் என்னும் பெயர் சமண நூலாகிய சூடாமணி நிகண்டில்,

"பகவனே ஈசன் மாயோன் பங்கயன் சினனே புத்தன்"

என்று கூறப்படுவதால் இப் பெயர் பொதுப்பெயர் ஆகின்றது மூன்றும் குறளில் வருகின்ற, "மலர்மிசை எகினன்" என்னும்

பெயரும் பொதுப் பெயராகும். "பூமேல் நடந்தான்" என்று ஜைனர் தங்கள் கடவுளைக் குறிப்பிடுவர். இது புத்தர் பெயர்களில் ஒன்றுமாகும். "பூவேறு நான்முகன்" என்று திருவாசகத்தில் வருவதால் இஃது அயனைக் குறிக்கும். "தண்டாமரை சுமக்கும் பாதப் பெருமாள்" என்று திருவாய் மொழி திருமாலை உபசரிக்கின்றது.

"எரியாய தாமரைமேல் இயங்கி ஞரும்
இடைமருது மேவிய எம ஈசன்"

என்ற தேவாரம் சிவபெருமானைக் குறிக்கின்றது. "வேண்டுதல் வேண்டாமை இலான்", "பொறிவாயில் ஐந்தவித்தான்" என்பன பொதுப் பெயர்கள். இவை புத்தருக்கும் பொருந்தும், ஆகையால், பெயரைமட்டும் வைத்துச் சமயத்தை நிச்சயிப்பது, வழுக்குப் படிந்த பாறையில் ஊன்றுகோலின்றி நடப்பது போலாகும். உலகாயதரைப் போலப் பௌத்தருள்ளும் பல பிரிவினர் உண்டு. இதுவரையில் கொடுத்த குறிப்புக்களால், திருவள்ளுவர் பௌத்தர் அல்லர் என்பது விளங்கும்.

திருவள்ளுவர் ஆசீவகரா (சமணரா)? திருவள்ளுவர் வழங்கும் கடவுள் பெயரெல்லாம் அருகக் கடவுளுக்குரிய பெயராகலானும், அவற்றுள் "மலர்மிசை ஏகினன்" என்பது அவருக்கே சிறந்தது ஒன்று ஆகலானும், ஜைனரின் முக்கிய கொள்கையாகிய கொல்லாமையே சிறந்த அறம் ஆகலானும், ஜைனர் இயற்றிய நாலடியார் முதலிய நூல்களோடு திருவள்ளுவர் நூல் கருத்துக்களில் ஒத்திருப்பதாலும் திருவள்ளுவர் ஜைனர் எனக் கூறப்படுவர். ஆயின் ஜைனர், 'உலகம் ஒருவரால் இயற்றப்பட்டது அன்று' என்று சொல்லுவர். திருவள்ளுவரோ,

"இரநது முயிர்வாழ்தல் வேண்டிற் பரநது
கெடுக வுலகியற்றி யான்"

என்றதால், உலகம் ஒருவனுல் இயற்றப்பட்டது என்று அழுத்தமாகக் கூறுகின்றூர். ஜைனர்கள் வேதத்தையும் வேள்வியையும் நிந்திப்பர். திருவள்ளுவர் "மறப்பினும் ஒத்து ......" என்ற குறளால் வேதம் உண்டென்றும்,

"ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல் மறப்பர்" என்ற குறளால் வேள்வி உண்டென்றும் கூறி, அவைகளைப் பெருமைப்படுத்துகின்றார்.

அனந்தஞானனாகிய அருகப் பரமன் ஆதியிலே உண்டாக்கப்பட்ட நூலில், பொருள்கள் தாமும் பூரணமாக, அணுக்கள் ஐந்து என்று கூறும். அவை பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஜீவன் அல்லது ஆன்மா. ஜீவஅணு, வினைக்கு ஈடான உடலை ஏனைய நான்கு அணுக்களின் கூட்டுறவால் எடுக்கும். ஜீவஅணு, கண்ணில் காண்டற்கரிதாகிக் கன்மத்தாலே ஜனித்து உருக்களாகப் பொருந்தி நிற்கும். செல்வம் முதலிய கூடுதலும் நீங்குதலும் துக்க சுகங்கள் உறுதலும் உடலோடு நீங்காமையும் வேற்று நாட்டுச் சேறலும் விருத்தாவத்தையும் மரணமும் முற்பிறப்பின் வினையில் உள்ளவாய்க் கர்ப்ப கோளகையிலே கைக்கொள்ளப்பட்டுள்ளவாம் ஆதலால், தெளிவாக முற் பிறப்பில் செய்த வினையில் அகப்பட்டு இம் முறையிலே நடந்துசெல்வது உலகம். இவ் வணுக்கள் ஒருவரால் நியமிக்கப்பட்டன அல்ல. அஃதாவது உலகத்தைப் படைக்கின்ற கடவுள் ஒருவர் உண்டென்று அவர்கள் கொள்ளவில்லை. உயிர்களுள் முதல்முதல் நற்கதி எய்திய ஓர் ஆன்மாவையே கடவுள் என்றனர். திருவள்ளுவ நாயனார் முதற் குறளால் உலகுக்குக் கர்த்தா உண்டென்றும், "வகுத்தான் வகுத்தவகை ...... அரிது" என்றதால் கன்ம பலன்களை ஆன்மாவுக்குக் கடவுளே கொடுக்கின்றார் என்றும் வலியுறுத்துவதால் இவர் ஆசீவகர் அல்லர் என்று ஐயம் அறக் கூறலாம்.

திருவள்ளுவர் ஏகான்மா வாதியா? ஏகான்ம வாதிகள், மெய்யுணர்வால் தெளிவுற்ற காலத்தில், பரப்பிரம்மம் ஒன்றே உளதாம்: உயிர்களோடு கூடிய உடல்கள் உலகம் பொருள்கள் எல்லாம் கானல்நீர் போலக் காணப்படுவனவாம் என்பர். நாயனார்,

> "துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத
> திறந்தாரை யெண்ணிக்கொண் டற்று"

என்றதால் உயிர்கள் பலப்பல என்பதாலும் முதற் குறளில் உலக முதற் பொருளும் உண்டென்பதாலும் திருவள்ளுவர் ஏகான்மவாதி ஆகார்.

மாயாவாதியா? பரமான்மாவுக்கு வேருக ஜீவான்மா இல்லை என்றும், வேதாந்த ஞானத்தால் அகமும் புறமும் நானே பிரமம் என்று அறிவதே முத்தி என்றும் மாயாவாதிகள் கூறுவர் என்று சித்தாந்த நூலுரைகள் கூறும். திருவள்ளுவர், பரமான்மாவுக்கு வேருக ஜீவான்மா உண்டென்று

"பகுத்துண்டு பல்லுயி ரோம்புத லூலோர்
தொகுத்தவற்று ளெல்லாந் தலை"

என்ற குறளில் நிலைநாட்டி,

"பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தா
ரிறைவ னடிசேரா தார்"

என்று இறைவனடி சேருவதே முத்தி என்கிருர்;

"யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த வுலகம புகும"

என்று, யான் எனது என்ற பற்றுக்களை விடவேண்டுமென்று அறிவுறுத்துகின்ருர்.

திருவள்ளுவர் வைஷ்ணவரா? வாசுதேவன் பரம்பொருள். எல்லா உலகமும் அவன் பரிணமம். பாஞ்சராத்திர முறையே தீக்ஷை பெற்று, வாசுதேவனை வழிபட்டு, அவன் உருவில் இலயம் ஆதலே முத்தி என்பார் வைணவர். திருவள்ளுவர், ஆதிபகவனை உலக காரணன் என்ருர்; வாசுதேவனிடம் இல்லாத எண்குணங்கள் ஆதிபகவனிடம் காணப்படுதலால் அவனடி சேர்ந்து நிற்பதே முத்தி என்பர். பாஞ்சராத்திரர் வாசுதேவனைக் குண தத்துவத்தின் மேல் 25 ஆம் தத்துவமாக வைத்து வழிபடுவர் என்று சைவ நூல்கள் உணர்த்தும். திருவள்ளுவர், ஆதிபகவன் தத்துவங்களைக் கடந்தவன், என்று 'பற்றற்ருன்' என்கிருர்.

கிருஸ்தவ மகம்மதிய சமயங்கள் தத்துவக் கொள்கை அளவில் ஆன்மாவும் கடவுளும் ஒன்று என்று கொள்வன. ஆகையால் இவைகள் ஏகான்ம வாதத்தைச் சார்ந்தன.

சைவ சித்தாந்தக் கொள்கை ஆவது: பதி, பசு, பாசம் என்ற முப்பொருள் உண்டு. பதியானவர் சக்தியோடு கூடி அம்மை அப்பராய் விளங்கும் சிவபரம் பொருள்; இவர் எண்குணம் உடையவர். தத்துவங்களை எல்லாம் கடந்தவர்; உலகுக்கெல்லாம் அகர எழுத்துப்போல் முதன்மையாயும் உயிராயும் நின்று தோன்ருத் துணையாய்க் கலந்து உலகை இயக்குகின்றவர்.

உயிர்கள் பல பல. இவை கடவுளுக்கு வேருய் நிற்பன. இவைகளைப் பந்தப்படுத்தும் பாசங்களாகிய ஆணவம், கன்மம், மாயை என்று மும் மலங்கள் உண்டு. கன்ம பலன்களை அனுபவிக்கச் சுவர்க்க நரகங்கள் உள்ளன. அப்படி அனுபவிக்குங்கால், உயிர்கள் தேவராகியும் அலகையாயும் பிறக்கும். இதனுல் மறு பிறப்பு உண்டென்றும் புலப்படும்: கன்ம பலன்களை அனுபவிப்பது நிச்சயம். பலன் இறைவனுல் ஊட்டப்படுகின்றது. முத்தி உலகமென்பது தேவலோகத்திற்கு அப்பாற்பட்டது. இறைவனடி சேருவதே முத்தி என்பது சைவ சித்தாந்த முடிவு. கடவுளிலிருந்து உலகம் உண்டாகிறது என்ற கொள்கை சைவசித்தாந்தத்தில் இல்லை. உயிர் எதைச் சார்ந்ததோ அதன் வண்ணமாம் தன்மையது. எப்போதும் உயிர்கள் கடவுள் உதவியை வேண்டிநிற்பன. உடம்பை நடத்துகின்ற உயிர் எப்படி உடம்போடு அத்துவிதமாய்க் கலந்து நிற்கின்றதோ அப்படியே கடவுளும் உலகோடு அத்துவிதமாய்க் கலந்து நிற்கின்ருர்.

“அகர முதல வெழுத்தெல்லாம ஆதி
பகவன் முதற்றே யுலகு”

—இக் குறளால் கடவுள் உண்டென்பதை வள்ளுவர் தாபிக்கின்ருர். எழுத்துக்களெல்லாம் அகரமாகிய முதலை உடையன; அதுபோல, உலகம் ஆதிபகவன் ஆகிய முதலை உடையது. அகரத்திற்குத் தலைமை இயல்பாற் பிறந்தது. ஆதிபகவற்குத் தலைமை செயற்கை உணர்வான் அன்றி, இயற்கை உணர்வான் முற்றும் உணர்தலால் கொள்ளல் வேண்டும். உலகு என்பது உயிர்மேல் நின்றது. அகரம் இயற்கைத் தோற்றம் பெற்று நிறைந்து முதன்மையாய்

நிற்கின்றது. மற்றைய எழுத்துக்கள் அகர எழுத்தால் வியாபிக்கப்பட்டுப் பரதந்திரமாய் நிற்பவை. அது போல, ஆதிபகவன் இயற்கை உணர்வால் முற்றும் உணர்ந்து எங்கும் நிறைந்து முதல்வனாய் நிற்க, உலகமும் உயிர்களும் அவன் ஆணையால் வியாபிக்கப்பட்டுப் பரதந்திர முற்று, வினைக்கு ஈடாகத் தனு கரணம் உடையதாய்த் தோன்றும்.

"அகர உயிர்போல் அறிவாகி எங்கு
நிகரிலிறை நிற்கு நிறைந்து"

என்றதும் இக் கருத்துப் பற்றியே. அகரமுதல என்பதற்குத் தமிழில் உள்ள ஆகாரம் முதல் ஔகாரம் ஈருகப் பதினொன்று உயிர் எழுத்துக்களும், ககரம் முதல் னகரம் ஈருகப் பதினெட்டு மெய்யெழுத்துக்களும் அகரத்தினை முதலாகக் கொண்டு அதனோடு சிவணி இயங்குவன. அகரம் இன்றேல் மற்ற எழுத்துக்கள் இயங்குவதுமில்லை. ஆகையால், அகரமாகிய முதல் மற்ற எழுத்துக்களுக்கு இன்றியமையாதது ஆகும். அது போலக் கடவுள் உலகுக்கு இன்றியமையாதவராகின்றார்.

"அக்கரங்க ளின்று மகரவுயி ரின்றே
லிக்கிரமத் தென்னு மிருக்கு."

"......அக்கரங்கள் தோறும் சென்றிடு மகரம்போல் நின்றனன்
சிவனும சேர்ந்தே."

என்று சித்தாந்த சைவ சுருதிகள் இயம்புகின்றன. எழுத்துக்கள் உயிர் மெய் என இரண்டாய், அகர முதல ஆதல்போல, உலகம் சேதனம், அசேதனம் என்ற இரண்டாய் ஆதிபகவனாகிய முதலை உடையது. உயிர் எழுத்து, ஜீவான்மாவிற்கும், மெய்யெழுத்து, தத்துவ உலகத்திற்கும், அகரம் ஆதிபகவற்கும் உவமை ஆயின. இங்ஙனம் உவமை யளவின் வைத்து ஆதிபகவனாகிய முதற்கடவுளும், பசுபாசமாகிய இருவகைச் சேதனாசேதன உலகும் என்னும் முப்பொருளும் இம்முதல் திருக்குறளால் நாயனார் விளக்கியருளினார்.

இவ்வாறு விளக்கி,

"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ
னற்றா டொழாஅ ரெனின்."

என்று ஆன்மாக்கள் ஆதிபகவனை அவனருளிய மெய்ந்நூல் கற்றுணர்ந்து மனமுதலிய முக்கரணங்களையும் அவன் பணிக் காக்கின், அவன் திருவருட்பேறெய்திப் பேரின்ப வாழ்வினைக் கூடுமென்றும்,

"கோளில் பொறியிற் குணமிலவே யெணகுணததான்
தாளை வணஙகாத் தலை"

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேரா தார்"

என்று அவ்வாறு வழிபாடு செய்யாவழிப் பிறவிப் பெருங் கடலில் அழுந்துமென்றும் மக்களுக்கு நல்லுரை கூறுகின்றார். நாயனார், 'சிறப்பென்னுஞ் செம்பொருள்', 'கற்றீண்டு மெய்ப் பொருள் கண்டார்' என்று ஆதிபகவனை நித்திய சத்தென்று எடுத்து ஓதியது போல, ஆன்மாக்களையும் 'மன்னுயிர்க் கின்னா செயல்', 'மன்னுயிரெல்லாந் தொழும்' என்று உயிர்கள் நித்தியப் பொருள்களென்று ஓதுகின்றார். பரிமேலழகியாரும் "உயிர்கள் நித்தமாகலின் மன்னுயிரென்றார்" என்று உரை கொண்டார்.

ஆதிபகவன் என்பதில் ஆதி யென்பது இச்சை கிரியை ஞானம் முதலிய சத்திகளுள் ஒன்று. (திருக்குற்றாலத் தல புராணம். பராசத்தி பீடச் சுருக்கம் 5.) பகவன் என்பது பகம் என்ற ஐசுவரியம் வீரியம் புகழ் திரு ஞானம் வைராக்கியம் ஆறையுமுடையவன். அதர்வணவேத சிவ நாமங்களுள் பகவன் என்ற பெயர் வருகின்றது. சுவேதாச்சுவதரோப நிடதம் சிவபிரானைப் பகேசன் என்று ஓதுகின்றது. ஹரதத்தாச் சாரியாரும் உமாபதி சிவமும் சதுர்வேத தாத்பரிய சங்கிரகத் திலும் பவுட்கராகம விருத்தியிலும் பகவப் பெயர் சிவபர மாதலை விளக்கியிருக்கின்றார்கள். தவிர, பரமசிவனைத் 'துரிய மூர்த்தி' என மூவரின் வேறாக வைத்து உபநிடதம் ஓதுதலா லும், 'குணாதீதன்' என்று கூறுதலாலும், அம் முழுமுதல்வன் ஆதிசத்தத்தால் விசேடிக்கப்பட்ட பகவனென்பது வெளிப் படை.

ஆதிபகவன் என்பது அம்மையப்பர் என்று சொல்வது போலக் கொள்வது முண்டு.

*ஆசிரியர் சிவஞான முனிவர்,*

" சீர்கொளிறை யொன்றுண்டத் தெய்வநீ யென்றெப்பாற்
சோர்விலடை யாற்றெளிந்தோஞ் சோமேசா—வோரில்
அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே உலகு, "

*என்று சோமேசர் முதுமொழி வெண்பாவிற் கூறியுள்ளார். முதற்றிருக்குறளை ஆராயின், அதன்கண் பிரயோகிக்கப்பட்ட ஒப்பாற் சீர்கொளிறை ஒன்று உண்டென்பதும், அடையான் அத்தெய்வ நீ என்பதும் தெளிந்தோம் என்றார். அடையென்றது ஆதிசத்தத்தினை. நாயனார்,*

" பிறப் பென்னும **பேதைமை நீங்கச்** சிறப்பென்னும்
செமபொருள் காண்ப தறிவு, "

*என்றதால் ஆணவமல முண்டென்றும்,*

" சார்புணர்ந்து **சார்பு கெட** ஒழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய் "

*என்றதால் கன்மமல முண்டென்றும்,*

" **காமம் வெகுளி மயக்க மிவைமூன்ற
னாமங் கெடக்**கெடும நோய் "

*என்றதால், மாயாமல முண்டென்றும் பெறப்படுகின்றன. இதனாலே, ஆன்மா மும்மலங்களினின்றும் நீங்கி ஆதிபகவன் திருவடிச்சார்பு தலைக்கூடி ஆனந்த சொரூபியாய் வாழ்தலே வீடு பேற்றின் சிறப்பியல்பு என்பது நாயனார் கருத்தாகத் தெரிகின்றது. மலம் நித்தமாகலின் 'நீங்க' என்றும், 'கெட' என்றும் கூறப்பட்டது. நீங்குதலாவது ஆன்ம ஞானத்தினைத் தடை செய்யமாட்டாது தன் வலிமை குன்றுதலாம்.*

*ஆதிபகவனோடு ஏகமாய் நிற்கும் முத்தான்மாவை மும் மலங்களும் வாதியா என்று சிவஞானபோதமுங் கூறுகின்றது.*

" அவனே தானே யாகிய அந்நெறி
ஏக னாகி யிறைபணி நிற்க
மலமாயை தன்னொடு வல்வினை யின்றே "

*சில அறிஞர்,*

" தாம்வீழ்வார் மென்றோட் டுயிலி னினிதுகொல்
தாமரைக் கண்ணா னுலகு "

என்ற குறளுக்கு வீடுபேறுவது செங்கண்மால் உலகு எய்தி வாழ்வது என்று பொருள் கொள்கின்றனர். இவ் வுலகு காமிய கன்ம தவயோக முழப்பார் உறும் பதமுத்தியாகும்; நிட்காமிய மெய்ஞ்ஞான முடையா ரெய்தும் பரவீடு பேறுகாது. செங்கண்மால் குணமூர்த்திகளில் ஒருவராய்த் தத்துவ புவனங்களைக் காக்குங் கடவுளாவர்; நிர்க்குண சொரூப வீடு பேறருளும் ஆதிபகவனல்லர்.

தேவரும் அலகையும் உண்டென்பது முறையே, "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந் தெய்வத்துள் வைக்கப்படும்", "உலகத்தா ருண்டென்ப தில்லென்பான் வையத் தலகையா வைக்கப் படும்" என்ற குறட்களால் விளங்கும். "இம்மைப் பிறப்பிற் பிரியல மென்றேனக் கண்ணிறை நீர்கொண்டனள்" என்ற குறளால் மறுபிறப்பு உண்டென்றும், "அறத்தா றிதுவென வேண்டா சிவிகை பொறுத்தானோ டூர்ந்தா னிடை" என்றதால் கன்ம பேதத்தால் போக பேதங்கள் விளையுமென்றும், "எனைப்பகை யுற்றாரு முய்வர் வினைப்பகை வீயாது பின்சென் றடும்" என்று கன்மபல அநுபவம் உறுதி யென்றும், "வகுத்தான் வகை... அரிது" என்றதால் கன்மபலனை இறைவனே கொடுப்பான் என்றும், "அன்றறிவா மென்னா தறஞ்செய்க மற்றது பொன்றுங் காற் பொன்றாத் துணை" என்று அறஞ் செய்யவேண்டு மென்றும், "அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன் உயிர்செகுத் துண்ணாமை நன்று" என்று சீவகாருணியம் அவசியமென்றும், "அருளிலார்க் கவ்வுலக மில்லை பொருளிலார்க் கிவ்வுலக மில்லாகி யாங்கு" என்று வீடுபேறடைய உயிர்கள் பால் அருள் வழங்கவேண்டு மென்றும், "யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்கு உயர்ந்த உலகம் புகும்" என்றும், முத்தியுலகம் தேவலோகங்களுக்கு அப்பாற்பட்ட தென்றும், "வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது வேண்டாமை வேண்ட வரும்" என்று முத்தி சாதனத்தையும், "நிலத்தியல்பா னீர்திரிந் தற்றாகு மாந்தர்க் கினத்தியல்ப தாகு மறிவு" என்றதால் உயிர்கள் எதைச் சார்ந்தனவோ அவ் வண்ணம் பெறு மென்றும், அதனால் பற்றற்றான் பற்றைப் பற்றவேண்டு மென்றும், அப்படிப் பற்றினால் மல நீக்கமும் முத்திப் பயனும்

கிடைக்குமென்று "இருணீங்கி யின்பம் பயக்கும் மருணீங்கி மாசறு காட்சி யவர்க்கு" என்ற குறளிற் கூறுதலாலும் அடிசேர் முத்தியாகிய சித்தாந்த முத்தியை "மலர் மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார் நிலமிசை நீடுவாழ் வார்" என்றும், "பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார் இறைவ னடிசேரா தார்" என்றும், "அறவாழியந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லாற் பிறவாழி நீந்த லரிது" என்றும், "கோளில் பொறியிற் குண மிலவே யெண்குணத்தான் தாளை வணங்காத் தலை" என்றும் அருளிச்செய்திருப்பதால் திருவள்ளுவர் சித்தாந்தசைவர் என்று உறுதியாய்க் கூறலாம்.

# திருவள்ளுவரும் சமயமும்

## திரு. T. S. கந்தசாமி முதலியார்

வரலாற்றுக் காலத்திற்கு மிக முன்புதொட்டே, மக்கள், ஒருவரோடொருவர் கூடி மகிழ்ந்து வாழும் இயல்புடையராகக் காணப்படுகின்றனர். அத் தகைய கூட்டு வாழ்க்கைக்கு, ஒழுக்க நலன் இன்றியமையாது வேண்டற்படுகின்றது. கூட்டு வாழ்க்கையில் தலைப்படுங்காலத்திலேயே ஒழுக்கநெறி தோன்றுகிறது. ஒழுக்கம் என்பது இடையறு நல்லொழுக் கத்தைக் குறிக்கும். குறைகளை நீக்கி, குணம் கைக்கொண்டு, திருத்தமாய் வாழ்வதே நல்லொழுக்கம்; கூட்டுறவு வாழ்க்கை யின் நீங்கி, தனிப்பட்டு வாழும் மனிதனுக்கு, ஒழுக்கம் வேண்டற்பாலதே. இவ் வொழுக்கம் அற ஒழுக்கம் எனப் படும். சமூக வாழ்க்கைக்கு, அற ஒழுக்கம் இன்றியமையாது வேண்டப்படுவது. ஏனெனில், நல் ஒழுக்கம் இல்லையேல், திருந்திய சமூக வாழ்க்கையுமில்லை; திருந்திய சமூகமும் இல்லையாகும். ஆகவே, சிறந்த சமூகத்திலேதான் சிறந்த நூல் கள் தோன்றும். பண்டைத் தமிழர் மேதக்க சமுதாயத்தை உருப்படுத்தி, அதில் வாழ்ந்தாராதலின், அவர் வாழ்க்கையில் கண்ட ஒழுக்கநலன்கள் அவர்தம் இலக்கியங்களில் மலர்ந்து, என்றும் வாடாது மணம் வீசுகின்றன. சமுதாய வாழ்க்கை யில் தோன்றிக் கனிந்த ஒழுக்க நலன்கள், சமுதாயத்தின் தனிப் பட்ட ஆன்ம ஒழுக்கத்தை உருப்படுத்தின. சமூக வாழ்க்கை யில் திருத்தமடைந்த ஒருவன் ஆன்ம வாழ்க்கையிலும் சீரும்

சிறப்பும் அடைகின்றான். இவ் வான்ம வாழ்க்கையே சமய வாழ்க்கையாகும். இவ் வுலக வாழ்க்கையிலேயே சமய ஒழுக்கமும் விரவப் பெற்று வாழ்தல் அமையுமெனக் கருதிய பண்டைச் சான்றோர் பலர், உலக வாழ்க்கையில் சிறந்து வாழும் முறைமை கூறுமுகத்தாலே சமய வாழ்க்கையும் வகுத்தருளியுள்ளார்கள்; சமய நெறியென, உலக நெறியின் வேறாக அவர்கள் வகுக்கவில்லை ; ஏனெனில், சமயம், வாழ்ந்து இன்புறுதற்குக் காரணமாம் எனக் கண்டனர். திருவள்ளுவரும் சமய நெறியைத் தனியாக வகுத்து ஓதாமல் உலக வாழ்க்கையின் நெறி கூறுமுகத்தால் சமய நெறியும் கூறினார்.

இக் காரணத்தினாலேயே திருவள்ளுவர் எத் தகைய சமயச் சார்பும் உடையரல்லர் எனவும், சமயநெறி கூறிற்றில ரெனவும், அவர் நூலைச் சமயக்கண் கொண்டு பார்த்தல் அடாதெனவும் பலர் கூறுவர்.

திருவள்ளுவர் தோன்றுவதற்கு முன்பு, தமிழகம், பிற நாடுகள் பலவற்றினும் அரசியல், வாணிகம், அறிவு நிலை, அன்பு நிலை, ஒழுக்கம் முதலிய பல துறைகளிலும் மிகமிக மேம்பட்டு விளங்கியது. அரசர் குடிதழுவிச் செங்கோல் செலுத்தினர். மக்கள், அறிவிலும் அன்பிலும் சிறந்து விளங்கினர். சான்றோர் பலர், மக்கட்கு வாழ்வுமுறைமை காட்டும் ஞாயிறு போல விளங்கினர். வாணிகர், உலகின் பன்மருங்கும் சென்று, பொருள் கொணர்ந்து, தம் நாட்டை வளம்படுத்தினர். இத் தகைய சமுதாயத்தில், திருவள்ளுவர் தோன்றியருளினார்.

தமிழர் மாட்சியில் அழுக்காறு கொண்ட சிலர், அக் காலத்துத் தமிழர், அறத்தின் நழுவி, மறத்தில் வீழ்ந்து, பழி செய்து வாழ்ந்தாரெனவும், அதனால்தான் சில அறிஞர்கள் பெரும்பாலான மக்களை நோக்கி, "பொய்யற்க, கள்ளற்க" என நீதி கூறினர் எனவும் கூறுவர். பழியிலே வாழும் மக்களிடையே அறங்கூறும் தலைமைசான்ற புலவன் தோன்றமாட்டான் என்னும் சிறந்த உண்மையை அவர் அறிந்திலராதலின், அவர் அத் தகைய பழிமொழி கூறினர்.

ஆகவே, திருவள்ளுவர், அறத்தில் அடிப்பட்டு ஒழுகி, சமயவாழ்விற் சிறந்து விளங்கிய தமிழர் சமுதாயத்தினிடைத் தோன்றி, சமய வாழ்விற் பிறங்கி, சமய வாழ்வின் நலமெலாம் கைவரப் பெற்று, அவற்றை நுகர்ந்து, உலகத்து ஆருயிர்கட்கெல்லாம் அத் தூய இன்ப வாழ்வினை அடைவிக்குமாறு தம் வாழ்வின் பயனாகிய திருக்குறளை எடுத்தோதினர் எனல் சாலும். சமய நெறியைத் தனியாக எடுத்து ஓதவில்லையாயினும், அவர், சமயத்தின் உயர்ந்த நிலையில் வாழ்ந்தார் ஆதலின், அவர் நூலுள் சிறந்த சமய உண்மைகள் பலவும் காணப் படுகின்றன.

திருவள்ளுவர் எச் சமயத்தைச் சார்ந்தவரென ஆராயப் புகுந்தார் பலர். அவரெல்லாம், தத்தம் சமயத்தைச் சார்ந்தவர் திருவள்ளுவரென, பல ஏதுக்கள் கூறித் தத்தம் கொள்கையைச் சாதிக்க முயன்றனர். அவர்களுள் ஒருசிலர், தம் சமயத்தில் வழங்கப்பெறும் சில சொற்களும், சொற்றொடர்களும் திருவள்ளுவரில் கண்டு, திருவள்ளுர் சமயம் தம்மதே என்பர். இன்னும் சிலர், தம் கொள்கையிற் சிறந்த சிலவற்றைத் திருவள்ளுவரில் கண்டு, திருவள்ளுவரைத் தம்மவர் எனக் கூறவும் செய்வர். காய்தல் உவத்தலின்றி நடுநின்று ஆராய்ந்து, ஒரு பொருளின் முடிவு காண்பதே அறிஞர் கடன்.

உலகமெல்லாம் ஒரு குடைக்கீழ் வைத்து உலகாண்ட மன்னர் மன்னன் முடிமிசை யணிந்த, வைர முதலிய நவ மணிகள் அழுத்தப் பெற்ற, மணிமுடி யொன்று சான்றோர் மன்றிடைக் கிடந்தது. அம் முடியணிந்த மன்னன் அதனை விட்டு நீங்கி, யாருமறியா ஒருவன்போலிருந்து வாழ்ந்தான். மணிமுடி கண்ட சான்றோர், அதனை அதற்குரியவன்பால் சேர்த்தல்வேண்டும் என விரும்பினர். அச் சான்றோர், மணிமுடி தம்பாலுள்ளமையும், அதனை ‘உரியவர் வந்து பெறுக’ எனவும் பறையறைவித்து, மன்றிடை வீற்றிருந்தருளினர். அக் காலை பலர், அம் மணிமுடி தமது தமது என இகலி, அதனைப் பெறுமாறு சான்றோர் மன்றில் நின்றனர். அவருள் ஒருவர் சான்றோரிடையே நெருங்கி, அதனைத் தமதெனக் கூறி வழக்கிட்டனர். அவரைத் தம்மிடம் அணுக அழைத்து, அம்

மணிமுடியை அவர் தலைமிசை வைத்தனர்: வைக்கவும், அவர் முகம் முழுவதையும் அம் முடி மூடி மறைத்து, அவர் வழக்கைப் பொய்யென நிறுவியது. அவரும் வெள்கிச் சரேலென மறைந்து போயினர். பின்னர் மற்றொருவன், மன்றில் சான்றோர் முன் நின்று, முடி தனதே என்று வாதித்தான். அவன் தலையினும் அம் மணிமுடியை வைத்துப்பார்க்க, அம் மணிமுடியினும் அவன் தலை மிகப் பெரிதாய், அத் தலையின் சிறுபாகமும் முடியொடு பொருந்தாமை கண்டு, சான்றோர் புன்னகை செய்தனர். அவனும் வெள்கி விரைந்தோடினான். பின்பு, சான்றோர், அங்குக் கூடியுள்ளாரில் ஒருவன் தோற்றப் பொலிவையும் எழிலையும் நோக்கி, அவன் தலைமிசை மணிமுடியைக் கவிழ்த்தனர். கவிழ்க்கவும், அவன் தலையொடு அம் மணிமுடி பொருந்தி, அத் தலைக்கே பேரணி செய்தமை கண்டு, 'முடி நினதே' என அம் மன்னனிடை யதனைச் சேர்ப்பித்தனர். அம் முடியொடு அம் மன்னனும் சிறந்து வீறுடன் சென்றனன்.

அம் மணிமுடியே வள்ளுவர் வாய்மொழி. அதனைப் பெற விழைந்து இகலினோரே, திருவள்ளுவர் தத்தம் சார்பினர் என வாதிடும் சமயிகள். நடுநிலையாளர், உடகோட்டமின்றி அச் சமயிகள் இகலுரைகளை ஆய்ந்து முடிவுசெய்தல் வேண்டும்.

சமணர், கடவுள் வாழ்த்தில் கடவுளை, 'மலர்மிசை ஏகினான்' எனப் போற்றியுள்ளமையால், திருவள்ளுவர் கொள்ளும் கடவுள் 'பூமேனடந்தானாகிய அருகன்' என இகலுரை கூறித் தம் கொள்கையை மெய்ப்பிக்க முயல்வர்.

கொல்லாமையே அறவினையுள் தலையாயதென அருகர் கூறினர். அதனையே,

"அறவினை யாதெனில் கொல்லாமை"

"ஒன்றாக நல்லது கொல்லாமை"

என அருகர்வழி நின்றோதினர் திருவள்ளுவர், என்று அருகர் கூறுவர். மலர்மிசையேகினான் என்னும் தொடர் பூமேனடந்தான் என்பதின் வேறு. அருகனை உயிர்களுள் ஒருவரெனவே பலரும் கொள்வர்; முற்றறிவுடைய பரம்பொருளெனச் சம

ணரும் கூறுர். அத் தொடரின் பொருள் எங்ஙனமாயினுமாகுக. அம் மலர்மிசை யேகினனுக்கு வள்ளுவர் கூறும் இலக்கணம் பொருந்துமா என நோக்குதல்வேண்டும். மலர்மிசை யேகினன் என்ற தொடரினுலேயே, அவன் அருகன் எனக் கூறுவது எங்ஙனம் பொருந்தும்? அத் தொடருக்கு மலர்மேல் பொருந்தினவன் என்பதுதானே பொருள்! மலர்க்கும் பொருந்து தற்கும், தத்தம் கொள்கைப்படி பொருள் கூறி, தத்தம் கடவுளரை அச் சொற்றொடர் குறிக்குமெனக் கொள்ளல் சாலுமாதலின், அச் சொற்றொடரைவிட்டுக் கடவுட்கு வள்ளுவர் கூறும் இலக்கணத்தை அளவையாகக் கொண்டு, திருவள்ளுவர் சமயம் இன்னதெனத் துணிதல் வேண்டும்.

கொல்லாமை, சமண சமயத்திற்குமாத்திரம் உரிய தனிக் கொள்கை யன்று. "அஹிம்சா பரமோதர்ம:" எனக் கொல்லாமையையே வேதம் மிகுத்துக் கூறியதென்பர் வேதியர். சைவம் என்பதற்குக் கொல்லாமையும், புலாலுண்ணுமையும் பொருள் எனச் சைவரே யன்றிப் பிறரும் கூறுவர். சைவர் என்பதற்குக் கொல்லாநோன்பிகள்—புலாலுண்ணு நோன்பிகள் - என்றும் பொருள் என்று உலக மக்கள் பலரும் அறிவர்.

ஆதலின், இவ் விரண்டும் கருவியாகக் கொண்டு, திருவள்ளுவர் சமயத்தைத் துணிதல் அமையாது, வேறு அளவைகள் கொண்டு இவர் கொள்கையினை ஆராய்தல் வேண்டும்.

ஆருகதர், உலகம் உள்பொருள் எனக் கூறுவராயினும், அதற்கு முதற்காரணம் அணு எனக் கூறுவர். அன்றியும், அவ் வுலகிற்குப் படைப்புக் கடவுள் இல்லை யெனக் கூறுவர். இவைபற்றித் திருவள்ளுவர் கருத்து என்னையோ? உசாவுவோம். உலகிற்கு, முதற் காரணம் அணு அன்று என்பது வள்ளுவர் கொள்கை;

> "சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்
> வகைதெரிவான் கட்டே யுலகு"

எனக் கூறியுள்ளார். சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பன அணுக்களின் புகலிடமாய், ஐம்பூதங்கட்கும் காரணமாய் உள்ள, நுண்பூதமெனப்படும் தன்மாத்திரைகளாம்

தன்மாத்திரைகளின் வகை தெரிவானிடத்தே உலகம் உளதென வள்ளுவர் கூறினாராதலின், நுண்பூதங்கட்கும், அவையொடுங்கும் காரணம் உளதெனக் கூறியுள்ளமை காண்க. அணுவும் காரியப் பொருள் என்பது வள்ளுவர் கொள்கை. ஆதலின், உலகிற்கு அணுவே முதற் காரணம் எனக் கூறும் ஆருகதரின் வேறானவர் வள்ளுவர் என்பது தெளிவு.

> "இரந்தும உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
> கெடுக உலகியற்றி யான்"

என்னும் திருக்குறளை உற்று நோக்குக. இவ் வருமைத் திருக்குறளில், உலகம் உள்பொருள் என்பதும், அஃது, என்றும் உளதாய், முதற் காரணத்தினின்று ஆக்கப்படும் என்பதும், அதற்கு இயற்றுதல் கருத்தா ஒருவன் உண்டென்பதும், அக் கருத்தா மற்றொரு பெரும்பொருளின் ஆணைவழி நின்று அதனை ஆக்குமென்பதும் உய்த்துணரவைத்துள்ளமை காண்க. கடவுளை, 'இறைவன்' எனப் பிறவிப் பெருங்கடல் என்னும் தொடக்கத்துத் திருக்குறளிலும், பிறவிடத்தும் குறிப்பிடுகின்றார். இறைமைக் குணம் உடையவன் கடவுள் என்பது வள்ளுவர் கொள்கை. ஆதலின், வள்ளுவர் சமணரல்லர்.

பௌத்தர், வள்ளுவரைத் தம் சமயத்தவரென்பர். பௌத்தரோ, உலகம், வெள்ளம்போல் என்றும் மாறுவதே இயற்கையாகக் கொண்டுள்ள ஒரு பொருளென்பர். அஃது என்றும் ஆக்கப்படாததென்பது அவர் கருத்து; என்றும் அஃது இன்றுபோல் உளதாம் பண்புடையது என்பர். வள்ளுவரோ, மேற்கூறியாங்கு, உலகம் தனக்கு முதற் காரணமாகிய பிறிதொரு பொருளினின்று ஆக்கப்படுமென்றும், அதற்கு ஆக்குவான் ஒருவன் உண்டென்றும், அதற்கு அழிவும் உண்டென்றும் கூறியுள்ளார். இச் சான்று ஒன்றே திருவள்ளுவர் பௌத்தரல்லர் என்பதை நிலைநிறுத்தத் தக்கதொன்று.

புலாலுணவை, புத்தர் விலக்கினாரெனினும், எவ் வுயிரையும் தம் கையால் கொல்லாது புலால் பெறலாமாயின், அங்ஙனம் தாம் கொல்லாது, ஊனுண்ணல் அமையுமென்று விதித்

தனர். அதனையும் உடன்படாது, ஊனுண்ணுவார் உள்ள வரை உயிர்க் கொலை செய்து ஊனை விலைக்கு விற்பார் உண்மைகூறி, அங்ஙனம் ஊன் உண்ணலையும் வள்ளுவர் விலக்கியுள்ளாராதலின், பௌத்தரின் வேறுவர் வள்ளுவர்.

பௌத்தரும், சமணரைப் போலவே உலக வாழ்க்கைக்கு ஒழுக்கநெறி கூறினரன்றி, வள்ளுவரைப்போல் ஆன்ம வாழ்க்கையில் விழுப்பயனடைய வழி வகுத்தார்களில்லை. சமண பௌத்தர்கள் வகுத்துள்ள முத்தி நிலை, முற்றிலும் எதிர் மறைத் தன்மையுடையது. வள்ளுவர் வகுத்தது உடன் பாடாகும் தன்மையுடையது; பேரின்ப நிலையாம் வீடுபேறு.

'ஆதிபகவன்' என, பரம்பொருளை வள்ளுவர் சுட்டுகிறார் ஆதலானும், 'பகவன்' என்னும் சொல் 'நாங்கள் பரம்பொருளைச் சுட்டிக் கூறும் எங்கட்கே உரிய தனிச் சொல் ஆதலானும், 'வள்ளுவர் கடவுள் விண்டு' என்பர் வைணவர்.

"தாம்வீழ்வார் மென்தோட் டுயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணா னுலகு"

என்னும் திருக்குறளைக் காட்டி, முத்தி நிலையைத் தாமரைக் கண்ணான் உலகெனவும், முத்திக்கு வித்தாம் முதல்வனைத் தாமரைக் கண்ணான் எனவும் கூறியதாலும், வள்ளுவரை வைணவரென அவர் சான்று காட்டுவர். ஐம்புல நுகர்ச்சியான் ஆகும் காம இன்பத்திற்குத் தாமரைக்கண்ணான் உலகை ஒப்புமை காட்டி, முன்னையது பின்னையதினும் விழுமியதெனக் கூறிய வள்ளுவர், வைணவச் சார்புடையராவாரா என நோக்குக. பரந்தாமன் உலகம், தலைவன் தலைவியர் நுகரும் இன்பத்திற்கு இணையாகாதென எந்த வைணவரும் கூறத் துணிவரா? துணியாரென்பதைப் பரிமேலழகரும் கண்டு இக் குறளுக்குப் பெரிதும் இடர்ப்பட்டுப் பரந்தாமன் உலக இன்பத்தினை வருந்தாமல் எய்தல் அமையுமா எனப் பொருள் கூறினர். காம நுகர்ச்சியில் மிதந்து கூறிய ஒருவன் கூற்றாக இக் குறளை வள்ளுவர் அமைத்துப் பாடியுள்ளமையே, பரந்தாமன் உலகம், வள்ளுவர் கொள்ளும் முத்திநிலை யன்றெனக் காட்டும் தக்க சான்று.

"மடியிலா மன்னவ னெய்தும் அடியளந்தான்
தாஅய தெல்லாம் ஒருங்கு"

என்னும் குறளில், பரந்தாமனை 'அடியளந்தான்' எனக் கூறுகிறாராதலின், அவனே திருவள்ளுவர் கொள்ளும் முதற் கடவுள் என மற்றுமோர் சான்று அவர் காட்டுவர். அடியளந் தான் என்னும் தொடர், மூவடியால் உலகம் அளந்தவன் என்னும் பொருள் தரும் எனினும், தம் மேதக்க புலமையால் அத் தொடர் வாளா பெயராய் நின்றதெனவும், அதற்குப் பொருள் இறைவன் எனவும் பொருள் கூறத் தலைப்பட்டுப் பரிமேலழகர் பெரிதும் இடர்ப்படுவர். இவ் வரலாற்றுக் கதையில், அளந்தானின் வேறாயது உலகம் என்றும், உலகம் அவனால் அளக்கப்படும் பொருள் என்றும், உலகம் அவனினும் வியாபகமுடையது என்றும் வள்ளுவர் கூறியுள்ளமை தெளிவு. இப் பொருள் இறைமைக் குணத்துக்கு இழுக்குத் தரும் ஆதலால், வள்ளுவர் வைணவரெனல் எங்ஙனம் சாலும்! உலகம் உள் பொருளென வைணவர் கூறுவராயினும், வாசுதேவனே உலகமாகவும், உயிர்களாகவும் பரிணமிப்பன் எனப் பரிணாம வாதங் கூறுவர்; உலகமும் உயிரும் இறைவனின் பகுதியே என்பர். உலகம் உயிரன்று; உயிரும் இறையன்று; உயிர், உயிரே; இறை, இறையே என்னும் உண்மைகள் திருவள்ளு வரின் பல இடங்களிலும் பிறங்கக் காணலாம்.

மாயாவாதிகள் உலகும் உயிரும் பொருளல்ல என்பர்; பிரமமே பொருள், பிறிதொரு பொருள் இல்லை யென்பர். வள்ளுவரோ எனின், உலகம் உள் பொருள்; உயிரும் உள் பொருள் என்பர்; உயிர்கள் பல என்பர்; உயிர்களும் நித்தம் என்பர். ஆதலின், வள்ளுவர் மாயாவாதியு மாகார். பின், வள்ளுவர் எச் சமயத்தைத்தான் சார்ந்தவரோ எனில், வள்ளுவர் வாய்மொழியில் காணப்படும் சமயப் பொருள்கள் ஈண்டுக் கூறப்படும். இவ் விருவகைப் பொருள்களையும், ஒப் புமைகளையும் சீர்தூக்கி, வள்ளுவர் சமயம் சைவச் சார்புடை யதா, பிறசார்புடையதா என்பதை அறிஞர்களே முடிவு செய்துகொள்க.

*திருவள்ளுவர் சமயக் கொள்கைகள் :—*

" இரநதும உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான். "

*இப் பாட்டின் பொருள் வருமாறு :— எவ்வுயிரையேனும், பிறர்பால் இரத்தல் செய்தே அவ் வுயிர் வாழ்தல் வேண்டு மெனப் படைப்புக் கடவுள் தானே நியமிப்பானாயின், அவனும் பலரிடை யிரந்து முடிவில் கெட்டொழிக.*

*இத் திருக்குறளில், உலகம் ஒருவனால் படைக்கப்படும் எனக் கூறப்பட்டுள்ளது: படைப்பினைச் செய்வானும் ஒருவன் உளன் எனவும் போதருகின்றது. 'இயற்றியான்' எனவே, அவ் வுலகம், மற்று ஒரு நுண் பொருளிலிருந்து ஆக்கப்படுமென் பது புலனாகின்றது. 'பரந்து கெடுக' எனவே, அப் படைப்புக் கடவுள் தானும் அழிவெய்தும் தகைமையன் : அவனால் படைக்கப்படும் உலகமும் அழிவெய்தும் தன்மையது : படைப் புக் கடவுளை நியமிக்கும் ஒரு முழுமுதற் கடவுளுண்டு என்னும் இப் பொருள்கள் இக் குறளில் பொதிந்துள்ளன. இவ் வுலகம், அழிக்கவும், பின்னர் ஆக்கவும்படும் என்பதும் இக் குறளில் மறைந்துகிடக்கின்றது. இதில் கூறப்படும் உலகம் ஆக்கப்படும் காரிய உலகம். இக் காரிய உலகத்திற்கு முதற் காரணம் உள்ளது என்னும் உண்மை இயற்றப்படும் என்னும் தொடரில் உய்த்துணரப்படுவதோடு, "சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐந்தின் வகை தெரிவான்கட்டே யுலகு" என்னும் அழகிய திருக்குறளிலும் கூறப்பட்டுள்ளது. சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பன புலன்களல்ல எனவும், அவை தன்மாத்திரைகள் எனவும் கண்டோம். அத் தன்மாத் திரைகள், நுண் பொருள்கள். அவற்றின் வகையெனவே அவையுமொடுங்கி, அவை ஒடுங்குவதற்கு நிலைக்களமாய் உள்ளதும், பரம்பரையில் ஒடுங்கி எல்லாப் பொருளும் ஒடுங்கு தற்கு நிலைக்களமாயுள்ள ஒன்றாய், அருவாய், அகிலத்துக்கோர் வித்துமாய் இருக்கிற பரம முதற் காரணமாகிய மாயையும் குறித்து நிற்கின்றது. உள்பொருளே தோன்றுமெனத் தன் நுண்ணிய நிலையிலிருந்து படிப்படிப் பருமையுடையதாய், முடி*

வில் அண்டமாய், அகிலாண்டமாய்விரியும் என்னும் கொள்கை சத்காரியவாதமெனப்படும். இதனை யடிப்படையாகக்கொண்டு தான் திருவள்ளுவரும், சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் தொடக்கத்திய அருமைத் திருக்குறளை ஓதியருளினர்.

சத்காரியவாதம், ஆசிரியர் திருவள்ளுவதேவருக்கு உடன் பாடென்பது பிறிதுமோர் குறளிலும் விளங்குகிறது. இதனை,

"புறந்தூய்மை நீரா னமையும் அகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும்"

என வாய்மை என்னும் அதிகாரத்தில் தேவர் கூறியுள்ளார். இதன் பொருள்: ஒருவன் புற உடலின் தூய்மை, நீராடுதலால் உளதாகும்; அதுபோல், உள்ளத் தூய்மையும், வாய்மை பேசுவதால் காணப்படும் என்பது. புறந்தூய்மையை நீரால் உண்டாகுமென்று கூறி, அதனோடு உவமித்துக் கூறப்படும் அகந்தூய்மையை வாய்மையால் உளதாகுமெனக் கூறாமல், 'வாய்மையால் காணப்படு'மெனக் கூறினர். அங்ஙனம் ஒப்புமை கூறவந்தவிடத்துத் திருவள்ளுவர் வேற்றுமைப்படச் சொற்படுத்துக் கூறியதென்னை? உளம் தூய்மை பிறிதொன்றுலா? அல்லது வாய்மையினாலேதானா? வாய்மையினால்தான் எனின், ஈண்டும், அமையுமெனக் கூறாது 'காணப்படும்' எனக் கூறுவானேன்? காணப்படுமென்பதால், அகந்தூய்மை பிறிதொன்றால் உள்தாகி வாய்மையினால் வெளிப்படுத்தமட்டும் படும் என்று பொருள் பயவாதா என ஆராய்ந்தால், உள்ள பொருளே தோன்றுமாகலின், இல்லாத பொருளுக்குத் தோற்றமின்மையின், உளதாம் தன்மையை அப் பொருண்மை கருதி அப் பொருளையே, அஃதாவது உளதாம் என்னும் பொருளையே, சத்காரிய வாதத்தை உட்கொண்டு காணப்படும் என்னும் பிறிதொரு வாய்பாட்டால் கூறினர்.

உலகம் உளதெனக்கூறி, உயிர் இல்லையெனக் கூறுவாருமுளர். உயிர் உளதென்பாருள்ளும், உயிரின் தன்மை கூறுமிடத்து வேறு வேறாகக் கூறுவாருமுளர். பகுத்தறியுமிடத்து உளதாகி, பின் உண்மையில் உயிர் இலதாய் முடியுமென்பர் சிலர். உயிர், அணுவென்பர் வேறு சிலர்; உணர்வுடைய

தென்பர் சிலர். உணர்வற்ற தென்பர் வேறு சிலர். உயிர் உண்டென்பாரும், அது முற்றறிவுடையது என்று சிலரும், சிற்றறிவுடையது என்று வேறு சிலரும் கூறுவர். சிற்றறிவுடைய தென்பாரும், கருவி கரணங்களால் வரும் அறிவையே உடைய தென்பாரும், கருவி கரணங்களோடு கூடா விடத்து அதற்கு அறிவே இல்லை யென்றும், அது தன் இயல்பில் அறிவில்லாத பொருளாதலால், அறிவேயில்லாத பொருள் என்றும் சிலர் கூறுவர். சிலர் அது அநித்தப் பொருள் என்றும், சிலர் நித்தப்பொருள் என்றும், வேறு சிலர் இயற்கையில் அறிவுடையது உயிர் என்றும், அஃது ஆணவத்தோடு அநாதியே கூடினமையால் அதற்கு அறியாமை வந்தது என்று சிலரும் கூறுவர். ஆணவத்தால் விளைந்த அறியாமை, கருவி கரணங்களோடு உயிர் கூடுகின்றபொழுது, சிறிது சிறிதாக நீங்குமென்பர் சிலர். உயிர் இயற்கையிலேயே அறிவற்றதாயின், இயற்கையிலே உயிரும் அறிவுமில்லாத கருவி காரணங்களை அணைத்தாலும் அவ் வுயிர் அறிவினையடையமாட்டா தென்பர் அவர். உயிர்கள் எண்ணிறந்தன; உணர்த்த உணரும் தன்மையன.

"மன்னுயி ரோம்பி அருளாள்வார்க் கில்லென்ப
தன்னுயி ரஞ்சும் வினை"

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்"

என்னும் குறள்களில் 'மன்னுயிர்' என்பதால் உயிர் நித்தம் என வள்ளுவர் விளங்கவைத்தனர்; 'எல்லா உயிர்க்கும்' எனப் பன்மை கூறியதால் உயிர்கள் பல என உய்த்துணர வைத்தனர்;

"பொருள்மாலை யாளரை உள்ளி மருண்மாலை
மாயுமென் மாயா உயிர்"

என்னும் குறளில், மாயா என்னும் சொல்லால் உயிரின் அழியாத் தன்மையை விளங்க வைத்தனர்.

"வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும்"

என்னும் குறளில் பூதங்கள் என்னும் சொல் அகப் பூதங்களைக் குறிக்கும். அகப் பூதங்களோடு கூடிய கருவிகளோடு, உயிர் கூடி அறிவினை அடையும் ஆதலின், அகப் பூதங்களுக்குத் தெரிய வொட்டாமல் மறைத்து வஞ்சனையால் செயலாற்றலாம் என்று கருதுதல் பேதைமை என்பதை உட்கொண்டு 'பூதங்கள் ஐந்தும் அகத்தே நகும்' என்று கூறினர். கருவிகளோடு கூடி, உயிர், விஷயங்களை அறியும் என்றமையால், உயிர் இயற்கையில் தன்அறிவுடையது எனவும் ஆசிரியர் கூறினாராவர்.

> " இருள்சேர் இருவினையுஞ் சேரா இறைவன்
> பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு "

என்னும் குறளில், உயிர், அநாதியே அறியாமையைச் செய்யும் இருளாகிய ஆணவ மலத்தைக் கூடிற்று என்பது பெறப்படுகிறது. இருள் காரணமாக, மூல கன்மத்தால் வினையையும் உயிர் சேர்ந்தது. அவைபற்றி அறியாமையும், இன்ப துன்பங்களும் உயிர்க்கு வருகின்றன என்பது மேற் கூறிய குறளால் இனிது விளங்கும். ஆணவ மலமும் வினையும் நீங்கப்பெறுதற்கு, இறைவன் பொருள் சேர் புகழை இடைவிடாது நினைத்தலே சிறந்த சாதனம் என்பதும் இக் குறளால் உணரப்படுகின்றது. உயிர், அறியும் திறமும், அறிந்தவற்றைக் கடைப்பிடித் தொழுகும் திறமும் அவ் வுயிர்க்கு இருத்தலால்தான், வள்ளுவர் தம் பொது மறையில் 'செய்க', 'செய்யற்க' என விதி விலக்குகளைச் செய்து,

> " செயற்பால தோரு மறனே ஒருவற்கு
> உயற்பால தோரும பழி "

எனச் செய்வதும், தவிர்வதும் உடன்கூறினர்.

உயிர் மாசுடையது; அம் மாசினைப் போக்குதல்வேண்டுமென ஆசிரியர் பணித்துள்ளார். 'மனத்தது மாசாக', 'மனத்துக் கண் மாசிலனாதல்' என ஆசிரியர் அருளிச் செய்கின்றமையால், அவர் கருத்துத் தெளிவாகப் புலனாகும். உயிர், தீமை செய்வதற்குக் காரணம் அதன் ஆணவமே. ஆணவமாகிய மாசு நீங்கப்பெறின், உயிர் தூய்மையடைந்து இன்ப நெறியில் தலைப்படும். உயிர்கள் இறைவன்போல நிர்மலத்தன்மையுடையன அல்ல.

இறைவனைக் கடவுள் எனக் கூறினர் பண்டைச் சான்றோர். இறைவன் உயிருடைப் பொருள், உயிரில் பொருள் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றல்லன். அவன் உருவில்லாதவனுமல்லன். அவன் அருளே திருமேனியாக உடையவன். அவன் அருட்டிருமேனியைத்தான், அவன் அடியென ஆன்றோர் பேசுவார்கள். அவன் அருளைச் சரணடைதலே வீட்டிற்கு வாயிலாகும். அவன் வரம்பிலாற்றலுடைமை முதலிய எண் பெருங் குணங்களையுடையவன்; இயல்பாகவே பாசங்களின் நீங்கியவன். இப் பொருளை,

> "கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்
> தாளை வணங்காத் தலை"

என்னும் திருக்குறளில் ஆசிரியர் விளங்கவைத்துள்ளார். "எண்குணத்தான்" என்னும் தொடர், சைவ ஆகமங்களில் சிவபெருமானை உணர்த்தும் எனினும், ஆருகதர், அத் தொடரால் தம் அருகக் கடவுளைக் குறிப்பர். திருவள்ளுவர், ஆருகதர் அல்லர் என முன்னரே துணிந்தோம் ஆதலின், அத் தொடர் சிவபெருமானையே குறிக்கும். இறைவனை எண்குணத்தான் எனச் சைவ ஆகமங்களில் சிவபெருமானை உணர்த்துவதற்கு வந்த சொல்லாகியஎண்குணத்தான்என்னும் சொல்லினாலேயே வள்ளுவர் உணர்த்தினர். குணங்கள் என ஈண்டுப் பிரகிருதி வழித்தாய் வரும் குணதத்துவங்களைக் குறித்தாரல்லர்; பிரகிருதியைக் கடந்து நின்ற பேசரிய பெருங்குணத்தையே, ஈண்டு எண்குணமெனக் குறித்தனர். இப் பொருளுக்கு இக் குறளில் வரும் 'எண்குணம்' என்பது, இதற்கு முன் கூறிப்போந்த கடவுள் வாழ்த்திலுள்ள ஏனையெட்டுக் குறள்களில் கூறப்பட்டிருக்கும் குணங்களைக் குறித்ததென்பர் சிலர். அக் குறள்கள் எட்டிலும் நுணித்து ஆராயின், இறைமைக் குணங்கள் கூறப்படவில்லை என உணரலாகும். ஆதலின், எண்குணத்தான் என்னும் சொல் சிவபெருமானையே குறித்துநின்றது.

> "பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
> செம்பொருள் காண்ப தறிவு"

என்னும் திருக்குறளில், செம்பொருள் என்பது சிவனென்னும் நாமம் தனக்கேயுடைய செம்மேனி யெம்மானையே குறிக்கும்.

சிவன் என்னும் சொல் செம்மேனி எம்மானை யுணர்த்தும் தனித் தமிழ்ச் சொல்லெனக் 'கால்டுவெல்' என்னும் பாதிரி மகனாரும் அன்றே கூறியுள்ளார். இப் பரம்பொருளே திருவள்ளுவருக்கும் பரம்பொருளென்பது முதல் திருக்குறளாகிய,

"அகர முதல எழுததெல்லாம ஆதி
பகவன் முதற்றே யுலகு"

என்னும் குறள் வெண்பாவில் ஆதிபகவன் என்னும் சொல்லால் இனிது விளங்கும். ஆதிபகவன் என்பதற்கு ஆதியாகிய பகவன் எனப் பொருள் கூறி, அதற்கு இலக்கணமும் கூறினார் பரிமேலழகர். ஆதியும் அந்தமும் இலான் இறைவன் என்னும் உண்மை, கடவுள் கொள்கையுடைய எல்லாச் சமயங்கட்கும் உடன்பாடாகும். அங்ஙன மிருப்பவும், ஆதியாகிய பகவன் எனக் கடவுட்கு ஆதி கூறினார் திருவள்ளுவர் எனக்கூறல் திருவள்ளுவர்க்கு ஏலாத இழுக்கைக் கூறுதலாய் முடியும். பரமசிவம், பிரளய காலத்தில் எல்லாப் பொருள்களையும் தன்னகத்தே அடக்கியுள்ள மாயையும் ஏனைய உயிரையும் தன்னகத்தே அடக்கிக் கொண்டிருக்கவும், அப்போது மாயை, தொழில்படாது அடங்கியிருக்கும். இறைவன் சிற்சத்தியும் அவனுள் அடங்கித் தோன்றாது. சிவத்தோடு ஒன்றாய் இருக்கும் மாயையை உள்முகமாக, படைத்தல் கருதி நோக்குங்கால் பிரியாத சக்தி பிரிந்து தோன்றும்; பிரியாது பரமசிவத்தில் சக்தி யடங்கி நிற்குங்கால், அதுவே ஆதிசக்தி எனப் பெயர்படும். இந்த ஆதியோடு கூடிய இறைவனைத்தான் ஆதிபகவன் என்னும் திருப்பெயரால் தமிழ் மாதவராம் திருவள்ளுவ தேவர் வாழ்த்தியருளினார். பகவன் என்னும் சொல், கேட்ட மாத்திரத்தில் ஆதி பகவன் என்னும் சொற்றொடரின் பொருண்மையும் நோக்காது ஆதியாகிய பகவான் என்று பொருள் செய்து, பகவான் என்னும் பெயர் பல பொருள் ஒரு சொல் என்பதையு மறியாது அச் சொல் எங்கள் வாசுதேவனையே குறிக்குமெனக் கூறமுன்வரல் அவர் துணிவுடைமையைத்தான் காட்டும். பகவன் என்னும் சொல்லுக்கு மாயோன், சினன், புத்தன், சிவன் என்னும் பொருள்களும் உண்டென நிகண்டுகள் வரையறை செய்யும்.

பொருள் ஒன்றே யெனக் கூறும் சமயிகளுடன் சாராது பொருள்கள் ஒன்றின் மேற்பட்டவை என்று ஐயத்திற் கிடமின்றித் திண்ணமாக,

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

என வள்ளுவர் கூறியுள்ளார். உலகு, இறை, உயிர் எனப் பொருள்கள் மூன்றெனத் தேவர் கூறியமை முன்னர்க் கூறப் பட்டது. அவ் வொவ்வொரு பொருளுக்கும் பொதுஇலக்கண மும் சிறப்பிலக்கணமு முண்டு. அவற்றை வடவர், தடத்தம், சொரூபமென இரு கூறுபடுத்திக் கூறுவர். தடத்தமெனினும் பொதுவெனினும் ஒக்கும். சொரூபமெனினும் சிறப்பு எனினும் ஒக்கும். ஒவ்வொரு பொருளையும் பிறபொருளோடு சேர்த்து நோக்காது, தனித்தனி நோக்கிக் காணும் அவ்வவற் றின் தன்மை, சிறப்பெனப்படும். பிறவற்ருேடு கலந்துள்ள நிலைமையின் தன்மை பொதுவெனப்படும். இந்த அருமைத் திருக்குறளில் முப்பொருள்களுள் ஒவ்வொன்றையும் சிறப்புத் தன்மையில் அறிவதே மெய்ப்பொருள் எனப்படும்.

இறைவன் எண்குணத்தன் எனத் திருவள்ளுவர் கூறி யமை முன்னர்க் கண்டோம். அவ் வெண் குணங்களும் சத்து, சித்து, ஆநந்தம் என்னும் மூன்று குணங்களுள் அடங்கு மென்பர் அறிஞர். இது அவன் சிறப்புத் தன்மை.

இறைவன் ஒருவனே. உயிர்கள் எண்ணில. உயிர்கட் கெல்லாம் தலைவன் இறைவன் ஒருவனே. இறைமைக் குணங்கள் இலராயினுரை உளரெனக் காணல் பேதைமை. அதனுல், உயிர்க்குப் பிறப்புஇறப்புக்கள் ஒழியா.

அகர முதல எழுத்தெல்லாம் என்ற திருக்குறளில் அதனை உவமையாக்கி, அதுபோல் உலகிற்குத் தலைவன் ஆதிபகவனே எனக் கூறினர். உலகு என்பது ஈண்டு உயிர்களைக் குறிக்கும். அவ் வுயிர்களாவன : இறைவன் ஒருவனைத் தவிர ஏனைய தேவர், மூர்த்திகள், வானவர், மக்கள் முதலாய எல்லா உயிர்களும் உயிர்க்குயிராய் நிறைந்து நின்றும் உயி ராகாது, அவற்றைக் கடந்து நிற்பவன் முழுமுதற் கடவு

ளாவான். அவனே ஆதிபகவன். அவன் ஐந்தவித்தான். ஐந்தவித் தான் என்னும் தொடர் இயல்பாகவே பாசங்களின் நீங்கியான், அனுநிமித்தமுத்தன், சிறப்பெனும் செம்பொருள் என ஆசிரியர் ஓதியருளினமையின் அவன் வீடு பேறுமாய் நின்ற ஒருவன் என வள்ளுவர் குறித்துள்ளார். அவன் 'உவமனில்லி' என்னும் திருமுறைப் பொருள், ஆசிரியர் தனக்குவமையில்லாதான் என்னும் தொடரில் விளங்கி நிற்கிறது.

வேண்டும் செய்தி முறைமை: ஆகவே, மாசுடை உயிர் மாசினின்றும் நீங்குவதற்கு, மாசிலா இறைவனை அடைந்து அவனோடு இரண்டறக் கலந்து இன்புறுதலே வீடுபேறெனப் பல இடங்களிலும் திருவள்ளுவர் குறித்துச் செல்லுகிறார். அவ் விதம் வீடுபேற்றை அடைவதற்கு உயிர்கள் கைக் கொண்டு ஒழுக வேண்டும் சாதனம் யாது? அச் சாதனத்தைத் திருவள்ளுவர் தம் தமிழ் மறையினிடத்து வகுத்து அருளியுள் ளாரா? வகுத்தருளினரென்றால் அஃது யாது என ஈண்டு ஆராய்தல்வேண்டும். உயிர்கள், அன்புடையவைகளை, தத்தம் கடமைகளைச் செய்தல் வேண்டும். அஃதாவது அறத்தினைச் செய்தல் வேண்டும். பழிதரும் செயலை ஒருதலையாகச் செய்யாது விடுதல்வேண்டும்.

"செயற்பால தோரும் அறனே ஒருவற்கு
உயற்பால தோரும பழி"

என வள்ளுவர் வகுத்தருளினமை காண்க. அறத்தினைச் செய்தற்கும் மறத்தினைச் செய்யாது விடுதற்கும் இன்றியமையாது வேண்டப்படும் கருவி அன்பு.

"அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கு மஃதே துணை"

என்பது தமிழ் மறை. இம்மை வாழ்விலே, உயிர்கள் அன்பின் வழிப்பட்டு அறத்தினைக் கைக் கொள்ளல் வேண்டும் என, திருவள்ளுவ தேவர் வகுத்தருளியிருக்க, அதனை அறியாது, தமிழர் சமயத்துள் அறநெறி தக்க இடம் பெற வில்லை யெனச் சிலர் கூறுகின்றனர். தமிழர் சமயத்துள் ஒன்று

கிய சைவ சமயத்துள் அற வழி நிற்றல் அவர் கடன் என அவர் சமய நூல்கள் கூறவில்லை யெனச் சில மேனாட்டறிஞர்கள் குறை கூறுகிறார்கள். அவர் கூற்றுப் பொருந்தாது. சமய நிலையில் நில்லாதவர்களும் அறத்தின் வழி நிற்றல்வேண்டும் எனத் தமிழர் கூறாநிற்பர். அவ் வறத்தின் வழி நிற்கமாட்டா தார், சமய நெறியில் புகுந்தும், சமய நெறியில் சிறிதும் நிற்க மாட்டார். ஆதலால், சமய நெறியில் புகுந்தவர்கள், அறநெறியில் காப்புப் பெற்றவராய் இருத்தல் ஒருதலை யெனக் கொண்டு, அவ் வுண்மையை உய்த்துணரவைத்துச் சமயத்தின் ஆறெலாம் சமய நூல்களில் விளக்கிக் கூறியுள்ளார். அங்ஙனம் கூறியுள்ளது, அம் மேனாட் டறிஞர்களின் பிறழ்ச்சி யுணர்வுக் குக் காரணம். திருவள்ளுவரோ, இம்மை வாழ்க்கையில் கைக் கொள்ளவேண்டும் கடன்களை விதந்து விதந்துகூறி, வீட்டுலக வாழ்வுக்கு வேண்டும் சமயக் கடன்களைச் சிறுகக் கூறிப் பெரிதும் உய்த்துணரவைத்துச் சென்றுள்ளார்.

ஆதலால், அறத்தை முழுதும் உணர்ந்து அதன்வழி ஒழுகியும் முடிவிலா இன்பத்தைக் காணமாட்டாது, காண வேண்டுமென்னும் வேட்கை மிக்குடைய உயிர்களுக்கு வேண்டும் செய்தி முறைமையாகிய சாதனமும் எஞ்சாது கூறியுள்ளார்.

பொறிபுலன்கரணங்களாகிய கருவிகளின் துணை கொண்டு உயிர்கள் காணப் புகின் அவ் வுயிர்கள் இறைவனைக் காண மாட்டா. கருவிழிகளின் துணைகொண்டு அறியும் ஆற்றலை யுடைய உயிர்கள் பின் எவ்வாறு இறைவனைக் காணும்? கருவிகள் காட்டுவதெல்லாம், தோன்றி நின்றழியும் சடப் பொருளையே. சடப் பொருளல்லாது உயிரினும் வேறாய், ஆனால் உயிருக்கு உள்ளுமாய் இருக்கும் இறைவனை உயிர்கள் காணுமென்றால், அது உண்மையாகுமா என வினவலாம். உயிருக்குக் கருவியானாகிய அறிவும் உண்டு; கருவிகளின் வயப் படாமல் ஒரு தக்கவழி நின்றால், இறைவனைக் காணும் அறிவையும் உயிர்கள் அடையலாம். வாக்குமனங்கட்கு எட்டாத இறைவன், மெய்யுணர்விற்கு எட்டுவன். மெய் யுணர்வாவது மெய்யினது அறிவினால், மெய்யைக் காணும்

அறிவு. ஈண்டு மெய் என்றது இறைவனை. இறைவன் அறிவு பேரறிவு; அறிந்தாங்கு அறியும் அறிவு. கருவிகளின் வயப் பட்டு நின்ற உயிர், அவற்றினின்று ஒருவி, இறைவன் பேரருள் வயப்பட்டு நின்றால், அவ் வுயிரில் அப் பேரறிவு பதிந்து விளங்கும். அதுவேதான் மெய்யுணர்வு பதிஞானம், மெய்யறிவு சிவஞானம் எனப் பல பெயர்களால் குறிக்கப் படுவது. அப் பேரறிவை உயிர்கள் அடைதல்வேண்டும். அறத்தின் வழிநின்று அன்பு முருகி எல்லையின்றி வளர்ந்து சிறப்புற்று இறைவன் திருவடியினைப் பற்றி நிற்பின், அப் பற்றே வீடுபேற்றிற்குச் சாதனமாய்ப் பதிஞானத்தை உரிய காலத்தில் அவ் வுயிர்களுக்குக் கொண்டுவந்து சேர்க்கும். அப்படிச் சேர்கின்ற காலமேதான், உயிர்கள் இருவினை யொப்பை அடைந்து, ஆணவ மலம் பரிபாக முற்று, இறைவன் பேரருள் சக்தி உயிர்களிடத்தில் பரவி நிற்கும் காலம்.

இறைவன் உயிர்களின் உள்ளத்தே உயிர்க்குயிராய் வீற்றிருக்கிறான். ஆதலால், உயிர்க்கு அந்நிய மல்லாத இறைவனைப் பிரித்துணர்தல் சாலாது. கட்டுற்ற நிலையில், உயிர்களின் வேறல்லனாய் இறைவன் நிற்கிறான். ஆதலால், உயிர்கள் தம் முயற்சியினால், தம் மறிவினால் இறைவனைக் காணுதல் அமையாது. அன்றியும், அவன் அளவிறந்த பொருள்' வாக்கிற்கும் மனதிற்கும் எட்டாத பொருள். ஆதலால்' வாக்கும் மனமும் துணையாகக் கொண்டு அறிவுறுத்த முயலும் எந்தத் தேசிகனுக்கும், ஆருயிர்க்கு, இறைவனைக் காட்டுதலும் சாலாது. ஆதலால், அளவில்லதொரு பொருளாகிய இறைவன், அருளே காரணமாய், குருவே மூர்த்தமாய்க் கொண்டு நிற்கும் பக்குவமுடைய உயிர்கட்குத் தன்னையும் உணர்த்தியரு ளினால்மட்டும் உயிர்கள் உணரும் பான்மையன. இக் கருத்தே யுடையார் திருவள்ளுவர் :

" பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்."

இவ் வருமைத் திருக்குறளுக்குப் பல்கலைப்புலமைப் பரிமே லழகரும் பொருள் செய்துள்ளமை யாரும் அறிவார். பொறி வாயிலைந்தவித்தான் என்ற தொடருக்கு, அவர், இயல்பாகவே

பாசங்களின் நீங்கியான் எனப் பொருள் கூறி, இயல்பாக மலம் சேரப் பெருதவனுகிய, விமலனுகிய இறைவனையே குறித் துள்ளார். 'அவித்தான்' என்னும் சொற்கு, உளதாயிருந்த பொறிவாயில்களைப் பின் 'அவித்தான்' எனப் பொருள் கூறலே ஏற்புடைத்தாகும். பிறிதோரிடத்தும்,

> " ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்
> இந்திரனே சாலுங்கரி "

என்னும் குறளில் ஐந்தவித்தான் என்னும் தொடர்க்கு, அவித்த ஒருவனைத் திருவள்ளுவர் சுட்டிக் கூறியுள்ளமை காண்க.

ஆதலால், ஆருயிருள் ஒருவராய்ப் பிறந்தும், மலம் நீங்கப் பெற்றும், கரணங்கள் எல்லாம் பதி கரணங்க ளாகப் பெற்றும், மெய்யுணர்வை ஆருயிர்க்கு உணர்த்துகின்ற உறுபெருமான் இறைவனே யாவான் என்பது தமிழர் துணி பாதலின், அத் தகைய குருவினைத் திருவள்ளுவர், பொறிவாயி லைந்தவித்தான் என்று குறித்தருளியுள்ளார் எனக் கோடல் பொருந்தும். அவனே, ஞான நெறியினை உணர்த்துபவன். அவனே கடவுள் உணர்வாகிய மெய்யுணர்வை உயிர்க்கு உணர்த்துபவன். அவன் வகுத்தருளிய நெறியே, பொய்ந் நின் றகன்ற, மெய்கண்ட நெறியெனக் குறித்தருளுவர் பொய்தீர் ஒழுக்க நெறி நின்றார். இப் பொருளைச் சார்ந்தே மெய்யுணர் விலும்,

> " கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
> மற்றீண்டு வாரா நெறி "

என ஓதி அருளியுள்ளார் திருவள்ளுவர்.

கற்று என்ற சொல்லிற்கு, பரிமேலழகரும், ' அனுபவ முடைய ஞானதேசிகன்பாற் கேட்டு' எனப் பொருள் செய்துள் ளமை காண்க. பூதிமான் ஆகிய ஞான குருவே மெய்ஞ் ஞானத்தை உணர்த்தும் தகுதிப் பேறுடையவன். அனுபவ முடைய ஞான தேசிகன் எத்தனை உயர்ந்த அறிவைப் பெற் றிருந்தாலும், அனுபூதிமா னில்லாவிடத்து, உயிர்க்கு மெய்ஞ்

ஞானம் கைவரச் செய்யும் ஆற்றல் இல்லாதவனே என்பது திருவள்ளுவர் கொள்கை.

ஆதலால், கற்று என்னும் சொல்லுக்கு மலம் நீங்கப் பெற்று அனுபூதியடைந்த ஞான குரவன் என்பதே பொருள். மலம் நீங்கப் பெற்று அனுபூதிமாளுகிய ஞான குரவன் உள்ளமே கோயிலாக் கொண்டார் நம்பெருமான். அக் குரவரின் வழி ஞானத்தை நல்குவன். அக் காலே ஞான குரவன், இறைவனே. அந்த ஞானத்திலேயடையும் தகுதிப்பேறு, உயிர்க்கு, அவ் வுயிர் முன்னைப் பிறவிகளில் சிவனடித்தொண்டு செய்து வந்த தவத்திஞல் வரும்.

அங்ஙனம் மெய்யுணர்வினைத் தலைப்பட்ட உயிர், ஆணவமாகிய இருளின் வலிமையினின்றும், வினையின் வலிமையினின்றும் நீங்கப்பெறும். அந் நீக்கம், என்றும் சலியாமைப்பொருட்டு "அவன் பொருள் சேர்புகழாம்" அவன் திருநாமத்தை, அஃதாவது திருவைந்தெழுத்தை, இடையருது புரிதல் வேண்டும். புரிதலாவது, அதனை இடையருது ஞானகுரு அருள் செய்தாங்கு உள்ளத்தில் கணித்தல் ஆகும். கணித்தலாவது கருத்தில் முன்வைத்தல் என்பதாகும். இவ் வைந்தெழுத்தை முத்தி பஞ்சாக்கரம் என ஆன்ருேர் கூறுவர். அங்ஙனம் ஆற்றல் பெற்ற உயிர், இறைவன் உயிர்களின் வேருவான். ஆயினும், உயிர்கள் கட்டுற்ற நிலையில் உயிர்களேயாய் நிற்றல் போல, இக் காலத்து இறைவனின் வேருகிய உயிர் இறைவனேயாக, அவனேடு ஒன்றுபட்டு நின்று அவன் பேரறிவுள் தன்னறிவு வேருய் விளங்காததாய் அடங்கி நின்று அவ் விறைவன் பேரருளே கண்ணுகக் கொண்டு, அவனைக் கண்டு ஆனந்தப் பெரு வெள்ளத்தில் மூழ்கி நிற்றல்வேண்டும். அந் நிலையில், ஆருயிர்க்குத் தனக்கெனச் செயல் வேறில்லை. இவ் வுண்மையினைத் திருவள்ளுவ தேவர்,

"ஓர்ததுள்ளம உள்ள துணரின் ஒரு தலையாப்
பேர்ததுள்ள வேணடா பிறப்பு."

என்னும் திருக்குறளில் தெருட்டியுள்ளமை காண்க.

ஈண்டு ஓர்த்து என்றது வேருகும் இயல்புடைய உயிர், இறைவனின் வேறல்லதாய், 'ஏகளுகி' என்பது பொருள்.

உள்ளம் என்பது ஈண்டு உயிரின் மேற்று. உள்ளது என்பது உயிரின் உள்ளாகிய செம்பொருளை. ஒரு தலையா என்பது, இருதலைப்படாமலும், வேற்றுமை யுணர்ச்சி யின்றியும் என்பது. உணரின் என்பது அனுபூதியால் தெளியின் என்பது.

ஆருயிர்க்கு அறிவு நால்வகைப்படும் என்பதைத் திருவள்ளுவர் முன் உணர்வுடையோர்க் கெல்லாம் தெளிவுற வகுத்தருளியுள்ளார். அவையாவன :

1. இயற்கையாகிய நுண்ணறிவு.

2. அதனை அடிப்படையாகக் கொண்டு நூல்களின் பயிற்சியால் வரும் செயற்கையாகிய நூலறிவு.

3. இவற்றின் வேருய் உயிர்க்கு வரும் நலந்தீங்கறிந்து தீமையின் விலக்கி, நன்மையில் ஒழுகச் செய்யும் அறிவென்னும் பெயருக்குச் சிறப்புடையதாய் நிற்கும் ஒழுக்க அறிவு.

4. இம் மூன்றினும் வேருய், ஞான குரவனுல் உணர்த்தப்படும் மெய்ப்பொருளை யறியும் மெய்யுணர்வு.

இப் பொருள்கள் முறையே கீழ்க் கண்ட குறள்களில் காண்க:

"மதிநுட்பம நூலோ டுடையார்க்கு அதிநுட்பம்
யாவுள. முன்னிற் பவை."

இக் குறளின்கண் இயற்கையாகிய நுண்ணறிவும், செயற்கையாகிய நூலறிவும் சுட்டப்பட்டமை காண்க.

"சென்ற விடத்தாற் செலவிடா தீதொரீஇ
நன்றின்பா லுய்ப்ப தறிவு."

இதன்கண் ஒழுக்க அறிவு கூறப்பட்டுள்ளது.

"பிறப்பென்னும் பேதைமை நீஙகச சிறப்பென்னும
செமபொருள் காண்ப தறிவு."

இதன்கண் மெய்யுணர்வு என்னும் பதி ஞானம் கூறப்பட்டுள்ளது தெளிவு.

இறைவன் திருவருளை அவன் அடி எனக் கூறுதல் மரபு. இறைவன் அடிஞானமே வீடுபேற்றை நல்கும். திருக்குறட்

கடவுள் வாழ்த்தில், இறைவன் திருவடியை ஏழு திருக்குறள் களில் குறிப்பிட்டுள்ளார். யான் எனதற்ற இடத்திலே இறைவன் திருவடி காணலாம் என ஆன்றோர் கூறியுள்ளார். யான் எனதெனுது திருவருள் வயமாய் நிற்றலே இறைபணி. இக் கருத்து,

"யான்என தென்னும செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த உலகம புகும"

என்னும் திருக்குறளில் விளங்குவது காண்க. ஆதலால், அடி சேர்தலாவது உயிர், யான் எனதென்னும் செருக்கற்று, இறைவன் பேரருளைக்கண்டு, அதன்கண் அடங்கிநின்று, அவன் காட்டக் கண்டு, அவன் உணர்த்த உணர்ந்து, அவன் நுகர்த்த நுகர்ந்து, அவ் வருள் வெள்ளத்தில் தன்னைச் செலவிடுதல். அவ் வருளே கண்ணுகக் காணி னல்லால் இறைவன் 'சிவனென' வானோர்க்கும் காணல் அரிது. அந் நிலையேதான், தீரத்துறத்தலுமாம். அவ் வுண்மை நோக்கியேதான் இறைவன் திருவருளாகிய திருவடியைத் தலைப் பட்டார்தாம் தீரத்துறந்தார் ஆவர் என வள்ளுவர் வகுத் தருளியதும். உண்மை இவ்வாறிருக்க, தீரத்துறந்தார் தலைப் பட்டார் என மாற்றிப் பரிமேலழகர் பொருள் செய்துள்ளார். முன்னைய பொருள்தான் மெய்ப்பொருள் என்பது,

"உன்னை ஒழிய உறவில்லை என்றுமதி தன்னை யறியும்
தனியறிவைத் தலைப்பட்டார் தீரத்துறந்தார்"

என்னும் உமாபதி சிவாசாரியார் திருவாக்கால் உணரப்படும்.

ஆதலால், இறைவன் திருவருளையே பற்றுகப் பற்றின வர்க்கு யாதொரு அவாவுமில்லை. அவரே, அவாவினை ஆற்ற அறுத்தவ ராவர்.

"அவாவினை ஆற்ற அறுப்பின் தவாவினை
தான்வேணடு மாற்றன் வரும"

எனக் கூறி, திருவருளைத் தலைப்பட்டு அவாவினை முற்ற அறுத்தார்க்குத்தான் செய்தனவெல்லாம் அறமாம் என விளக் கியருளினர். இக் கருத்தினை உட்கொண்டே, அடியார்க்குச் செய்தனவே தவமாம் எனவும், சித்தம் சிவமாக்கிச் செய்தனவே

தவமாக்கும் எனவும் ஆன்ருேர் அருளியுள்ளார்கள். அவர்கள், இவ்வுடம்பு பெற்றுள்ளபோதே, இப் பிறப்பிலேயே வீட்டின்பத்தை அடைந்தவர்கள் ஆயினும், உயிர் உடம்புள் நின்று வந்த எண்ணில் பிறவியின் வந்த பயிற்சியினுல், அத் தகையோரும், உலகரோடு பழகும்படி ஒரோவழி நேர்ந்தால், மீண்டும் உலக வாசனை மெல்ல வந்து தாக்கும் ஆதலின், அவ் வண்ணம் அது தம்மைத் தாக்காமைப் பொருட்டு, அத் தகைய சான்ருேரும், எப்போதும், இறைவன் திருவடியைச் சார்ந்தார் திருக்கூட்டத்துள்ளேயே இருந்துவரல் வேண்டுமெனச் சான்ருேர் ஓதியுள்ளார். திருவள்ளுவ தேவரின் அப் பேருண்மை,

"மருவுக மாசற்ருர் கேண்மை"

என்றும்,

"ஒருவுக ஒப்பிலார் நட்பு"

என்றும் திருக்குறளில் பிறங்குகிறது.

மேற்கூறிய சாதனத்தால், உயிர் அடையும் விழுப்பயன் வீடுபேறு. வீடுபேறும் சமயந்தோறும் வெவ்வேருய் நுவலப்படுகின்றது. உலகப் பொருளைப் பற்றி நின்று, உலக இன்பமாகிய புலனின்பத்தை அடைதலே வீடுபேறு என்பர் ஒரு சிலர். உடம்பு அறுதலே முத்தி என்பர் வேறு சிலர். மயக்க உணர்வு நீக்கமும் உண்மைப் பொருளின் புணர்வும் வீடுபேறென்பர் இன்னும் சிலர். வினை ஒழிதலே முத்தி என்பர் சிலர். கந்தம் அறுதலே முத்தி என்பர் சிலர். நிருவாணமே முத்தி என்பர் வேறு சிலர். கற்போல் கிடத்தலே முத்தி என்பர் சிலர். இறைவனேடு சமமாய் நிற்றலே முத்தி என்பர் சிலர்.

இங்ஙனம் பல சமய வாதிகளும் ஒருவரோடொருவர் மலைந்து, பலப்பல விதமாக முத்தி நிலையைக் கூறுநிற்பர்.

திருவள்ளுவரோ எனின், இந் நிலைகளுள் ஒன்றும் முத்திப் பேருக மாட்டாது என அறுதியிட்டுத் தெள்ளத் தெளிய ஐயம் இன்றி முத்தி நிலை இன்னதெனத் தெருட்டியுள்ளார் :

"பேரா, ஒழியா, பிரிவிலா, மறவா, நினையா
அளவா, மாளா, இன்ப மாகடலாகிய"

இறைவனைச் சேர்ந்து உயிர் அவ் வின்பத்தினுள் அழுந்தித் திளைத்தல் வீடுபேறும். இவ் வுண்மையை,

"இன்பம் இடையரு தீண்டும் அவாவென்னும்
துன்பத்துள் துன்பங் கெடின்"

எனவும்,

"அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்
தின்புற்றார் எய்தும் சிறப்பு"

என்றும்,

"ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும்"

என்றும்,

"புக்கில். அமைந்தின்று கொல்லோ உடம்பினுள்
துச்சி லிருந்த உயிர்க்கு"

என்றும்,

"பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னுஞ்
செம்பொருள் காண்ப தறிவு"

என்றும் பலபட விளக்கித் திருவள்ளுவர் கூறியுள்ளார்.

ஆதலின், பேரின்பக் கடலைச் சார்ந்து, அப் பேரின்பக் கடலினுள் ஆழ்ந்து, பேரின்பம் நுகர்தலே வீடு பேறு என்பது திருவள்ளுவர் திருக் கருத்தாகும்.

# இரண்டாம் பாகம்

# எல்லீசர் கண்ட குறள்

## ரா. பி. சேதுப் பிள்ளை

[ஆங்கில நாட்டில் தோன்றினார் எல்லீசர் என்னும் நல்லறிஞர்; இந்தியத் துரைத்தனத்திற்குரிய கலைகளைக் கற்றுத் தேறினார். அவர் சிறந்த மதி நலம் வாய்ந்தவர்; எப் பொருளையும் ஆராய்ந்து மெய்ப்பொருள் காணும் மேதை.

அரசியலார் அவரைச் சென்னை நிலவரி மன்றத்தின்† செயலாளராக முதலில் நியமித்தனர். எட்டாண்டுகள் அவர் அம்மன்றத்தில் சிறந்த பணி புரிந்தார்; அக் காலத்தில் தென்னாட்டுக் காணியாட்சி* முறைகளைக் கற்றார்; காணியாளருடைய கடமையையும் உரிமையையும் தெள்ளத் தெளிய அரசியலாருக்கு உணர்த்தினார். மிராசு முறையைக் குறித்து அவர் எழுதிய நூல் இன்றும் ஆதாரமாகக் கொள்ளப்படுகின்றது.

பின்னர்ப் பத்தாண்டுகள் எல்லீசர் சென்னைக் கலெக்டராக இருந்தார்; அப்போது இந்திய நாட்டு மொழிகளைக் கற்றுணர ஆசைப்பட்டார்; நல்லாசிரியர்களின் உதவி பெற்று வட மொழியும் தென் மொழியும் வருந்திக் கற்றார். தென்னாட்டில் வழங்கும் மொழிகளுள் தமிழ் மொழியின் செம்மையும் தொன்மையும் அவர் உள்ளத்தைக் கவர்ந்தன. சென்னையில் சிறந்த தமிழ்ப் புலவர்களாக விளங்கிய சாமிநாத பிள்ளை, இராமச் சந்திர கவிராயர் முதலியோருடன் ஏட்டுச் சுவடிகளில் அமைந்த

† நிலவரி மன்றம் - Board of Revenue

* காணியாட்சி - Land Tenure

தமிழ் நூல்களை அவர் நாள்தோறும் மெய் வருத்தம் பாராது கற்ருர். பழந்தமிழின் பண்புகளைப் பளிங்குபோற் காட்டும் திருக்குறளை மேல் நாட்டாரும் அறிந்து போற்ற வேண்டும் என்பது அவருடைய ஆசை. அந் நோக்கத்தைக் கொண்டு திருக்குறளுக்கு ஆங்கிலத்தில் அவர் விளக்கமான விரிவுரை ஒன்று எழுதத் தொடங்கிஞர். ஆனல், அப் பணி முற்றுப் பெருது போயிற்று. அடியும் முடிவுமின்றி அது அரைகுறை யாக அச்சிடப்பட்டிருக்கின்றது. அந் நூல் ஒன்றே எல்லீசரது தமிழ் புலமைக்கு அழியாதநினைவுச் சின்னமாக நிலவுகின்றது.]*

தமிழ் மொழியில் உள்ள நூல்களிலே தலை சிறந்தது திருக்குறள். அந் நூலைப் பொதுமறை என்றும், தமிழ்மறை என்றும் தமிழ் மக்கள் போற்றுவர். தென்னுட்டில் எழுந்த திருக்குறள், எந் நாட்டவர்க்கும், எக் காலத்தவர்க்கும், எச் சமயத்தவர்க்கும் பொது நூலாய் இலங்குகின்றது. அந் நூலின் அருமை யறிந்து, பழங்காலத்தில் சங்கப் புலவர்கள் பாமாலை சூட்டினுர்கள்; சான்ருேர்கள் அந் நூலைச் சான்ருக எடுத்துக் காட்டினுர்கள்.

ஓதற்கு எளிதாய், உணர்தற்கு அரிதாய் உள்ள திருக் குறளை விளக்குவதற்கு, உரைகள் பல எழுந்தன. உரை செய்தவர் ஒரு காலத்தவ ரல்லர்; ஒரு சமயத்தவ ரல்லர்; ஒரு கொள்கையின ரல்லர். முன்னுளில் பத்துப் புலவர்கள் அந் நூலுக்கு உரை இயற்றினுர்கள் என்று ஒரு பழம் பாட்டுக் கூறுகின்றது. இந் நாளில் மேலைநாட்டு அறிஞர்களும் திருக் குறளின் பெருமை யறிந்து போற்றுகின்ருர்கள். அவர்கட்கு வழிகாட்டியவர், இத்தாலிய தேசத்திலிருந்து தமிழ் நாட்டிற் போந்து யேசுமத சேவை செய்த வீரமாமுனிவர். ஆங்கில நாட்டு அறிஞர் அவரைப் பின்பற்றினர்.

சென்னை மாகாணத்தில் அரசாங்க சேவை செய்வதற்காக வந்த ஆங்கிலநாட்டு அறிஞர்களில் சிலர் தமிழ் மொழியை விரும்பிக் கற்ருர்கள்; அதன் அருமைபெருமைகளை அறிந்து போற்றினுர்கள். அன்னவருள் ஒருவர் எல்லீஸ் என்பவர். Francis Whyte Ellis என்பது அவர் முழுப் பெயர். சுமார்

* பதிப்பாளர் முன்னுரை

நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னே, அவர் சென்னையிலே சேவை செய்ய வந்தார். அப்போது, அவர் இருபது வயதுக்கு உட்பட்ட இளைஞர். பொறுப்புள்ள அரசாங்க வேலையில் ஈடுபட்டிருந்தபோதிலும், எல்லீசரது விருப்பம், பாரதநாட்டு மொழிகளிலும் கலைகளிலும் கவிந்தது. வட மொழியாகிய ஆரியத்தையும், தென் மொழியாகிய திராவிடத்தையும் அவர் கருத்தூன்றிக் கற்றார்; திராவிட மொழிகளுள் தலைமை சான்ற 'தேமதுரத் தமிழ்' அவர் செவியையும் சிந்தையையும் கவர்ந்தது.

அந் நாளில் தமிழ் நூல்கள் அச்சிடப்படவில்லை; ஏட்டுச் சுவடிகளில் அடங்கியிருந்தன. ஆயினும், தமிழறிந்த தக்காரைத் துணைக்கொண்டு, வேலையொழிந்த நேரத்தில் தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்களையும், திருக்குறள் முதலிய சிறந்த இலக்கிய நூல்களையும் மெய் வருத்தம் பாராது அவர் ஓதியுணர்ந்தார். அவருடன் இருந்து தமிழ்க் கல்விக்குத் துணை புரிந்தவர்களுள் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவர்கள், இராமச்சந்திர கவிராயரும், வித்துவான் சாமிநாத பிள்ளையும் ஆவர். இவ் விருவரும் செய்த நன்றியைப் பாட்டாலும் உரையாலும் பாராட்டியுள்ளார் எல்லீசர்.

அக் காலத்தில் நாட்டு மொழிகளைப் பேணிப் பாதுகாப்பதற்காக ஒரு கல்விச் சங்கத்தை அமைத்தது சென்னை அரசாங்கம். The College of Fort St. George என்னும் பெயரால் அமைந்த அச் சங்கத்தில், பொறுப்புள்ள உறுப்பினராய் எல்லீசர் அமர்ந்து பணி செய்தார். நல்ல தமிழ் நூல்களைத் தொகுப்பதற்கும், அவற்றைப் படிப்பதற்கும் சென்னைக் கல்விச் சங்கம் அவர்க்குச் சிறந்த சாதனமாயிற்று. அச் சங்கத்தின் வாயிலாக அவர் செய்த சேவையை அறிந்தோர் வாயாரப் புகழ்ந்துரைத்தார்கள். "கொழுகொம்பில்லாது அலைகொடி போலும், கொழுநன் இல்லாக் குலக்கொடி போலும் ஆதாரமின்றித் தேய்ந்து கிடந்த ஆரியம், தெலுங்கு, மலையாளம் முதலிய இத் தேச பாஷைகளில் தேர்ந்து, தமிழ்

கல்விச் சங்கம் நாட்டுதற்கு வேண்டும் முயற்சி செய்து அமைத்து அப் பல்கலைச் சங்கத்தைப் பாண்டியனைப்போல் பாதுகாத்தார் எல்லீஸ் துரை" என்பது ஒருவர் பாராட்டுரை.

இவ்வாறு தமிழ் நலம் பேணிய எல்லீசர், திருவள்ளுவர் இயற்றிய திருக்குறளைத் தலைக்கொண்டு போற்றினார்; தமிழகத்தின் செம்மைக்கும் சீர்மைக்கும் சிறந்த சான்றாக நின்றிலங்கும் முப்பாலாகிய திருக்குறள் எப் பாலவரும் இசைந்து ஏற்றுக் கொள்ளத்தக்க உலகப் பொது நூல் என்று கருதினார்; ஆங்கில மொழியின் வாயிலாக அதன் செம்மையை மேலை நாட்டார்க்குக் காட்ட ஆசைப்பட்டார்; ஆழமும் அழகும் வாய்ந்த திருக்குறளின் கருத்துக்களைப் பிற நாட்டார் உள்ள வாறு உணர்ந்துகொள்ள வேண்டுமாயின் அந் நூலை மொழி பெயர்த்தால்மட்டும் போதாது: விளக்கமான உரையொன்றும் இன்றியமையாதது என்று எண்ணி ஆங்கிலத்தில் ஒரு விரிவுரை எழுதினார்.

எல்லீசர் இயற்றிய திருக்குறளுரை ஆங்கில அறிவாளர்க்கு ஒரு நல் விருந்து; தமிழ்க் கலைவாணர்க்கு ஒரு களஞ்சியம். அவ் வுரையில் எடுத்தாளப்படுகின்ற நூல்களே, அவருடைய கல்விப் பெருக்கத்தையும், கலையின் விளக்கத்தையும் எடுத்துக் காட்டும். சங்க நூல்களும், சமய நூல்களும், காவியங்களும், புராணங்களும் அவருரையிலே கலந்து இலங்கக் காணலாம். சங்க இலக்கியங்கள் என்று புலவர்கள் பாராட்டும் திருமுருகாற்றுப்படையும் புறநானூறும் அதில் எடுத்தாளப்படுகின்றன. நீதி நூல்களாகிய நாலடியும் பழமொழியும், அருள் நூல்களாகிய திருவாசகமும் திருவாய்மொழியும் ஆங்காங்கு அமைந்து அழகு செய்கின்றன. சிந்தாமணி முதலிய சிறந்த காவியங்களும், பெரிய புராணம் முதலிய அரிய புராணங்களும் காட்சி தருகின்றன. வேதாந்த நூல்களாகிய பகவத் கீதையும் ஞானவாசிட்டமும், சித்தாந்த நூல்களாகிய திருமந்திரமும் திருவருட்பயனும் ஏற்ற இடங்களில் அமைந்து இலங்குகின்றன. இன்னும், கிருஸ்தவர் போற்றும் பைபிள் என்னும் வேத நூலின் கீதங்களும், வீரமாமுனிவர் இயற்றிய தேம்பாவணிப் பாடல்களும் விளக்கந் தருகின்றன.

மேலை நாட்டு அறிவாளர்களாகிய சிசரோவின் செம்மொழி களும், அரிஸ்டாட்டிலின் அரிய மொழிகளும் அழகுற மிளிர்கின்றன.

இவ்வாறு எல்லீசர் வளமுற இயற்றிய உரையின் செம்மையைச் சிறிது பார்ப்போம்: திருக்குறளின் முதல் அதிகாரமாக விளங்குவது கடவுள் வாழ்த்து என்பது. எல்லாச் சமயங்களுக்கும் பொதுவான இறைவனது தன்மை யைப் பத்துக் குறளால் உணர்த்துகின்ருர் திருவள்ளுவர்; ஆதிபகவன் என்று முதற் குறளிலே இறைவனைக் குறிக் கின்ருர். பகவன் என்னும் சொல் பல சமயத்தாரும் வழிபடும் பரம்பொருளை உணர்த்தும். "பகவனே ஈசன், மாயோன், பங்கயன், சினனே, புத்தன்" என்று பகர்ந்தது பண்டை நிகண்டு. எனவே, சிவனை வணங்கும் சைவருக்கும், திருமாலைச் சேவிக்கும் வைணவருக்கும், அருகனை வழிபடும் சமணருக்கும், புத்தனைப் போற்றும் சாக்கியருக்கும், பிற பெயர்களால் பரம் பொருளை வணங்கும் பிற சமயவாதிகளுக்கும் பொதுவாக அமைந்தது திருக்குறளில் உள்ள கடவுள் வாழ்த்து என்பது தெளிவாகத் தெரிகின்றது.

ஆயினும், சமய வாதிகள் தத்தம் சமயச் சார்பிற்கு ஏற்ற வாறு உரை எழுதினுர்கள். அதனுல், கருத்து வேற்றுமை உண்டாயிற்று. இவ்வாறு வேறுபட்ட கருத்துக்களை யெல்லாம் எல்லீசர் நன்கு ஆராய்ந்து நல்லுரை காண முயன்ருர். அவருடைய உரை நலத்தை இப்போது காணலாம்:

"அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கலலால்
பிறவாழி நீந்தல் அரிது"

என்ற குறளுக்குப் பலர் பல வகையாகப் பொருள் கூறிப் போந்தனர். இந்தக் குறளில், 'அறவாழி அந்தணன்' என்பது கடவுளைக் குறிக்கின்றது. அந்தணன் என்ற சொல்லுக்கு அருளுடையவன், கருணையுடையவன் என்பது பொருள். அறவாழி அந்தணன் என்ற பெயர் அருக தேவனுக்கே பொருந்தும் என்பது சமணர் கொள்கை. அன்னூர் கொள்கைப்படி அறவாழி என்பது தரும சக்கரம்.

தரும சக்கரத்தையுடையவன் அருகன். இதற்குச் சான்முகச் சிந்தாமணி என்னும் பெருங்காவியத்தையும், சூடா மணி என்னும் நிகண்டையும் எடுத்துக் காட்டுவர் சமணப் புலவர்கள். 'அறவாழி அண்ணல்' என்று அருகதேவனைக் குறிக்கின்றது சிந்தாமணி. 'அறவாழி வேந்தன்' என்பது அருகனுக்குரிய பெயர்களுள் ஒன்று என்று சூடாமணி கூறு கின்றது. எனவே, தமிழ் இலக்கிய மரபிற்கு ஏற்ப, அறவாழி அந்தணன் என்னும் சொல்லுக்கு அருகன் என்றே பொருள் கொள்ளுதல் வேண்டும் என்பர் சமணர்.

இந்தப் பொருளைத் திருக்குறளுக்குச் சிறந்த உரை யெழு திய பரிமேலழகர் ஏற்றுக்கொள்ள வில்லை. அறவாழி என்ப தற்குத் தரும சக்கரம் என்ற பொருள் பொருந்தாது என்பது அவர் கருத்து. ஆழி என்பது கடல்; அறவாழி என்பது அறக் கடல், அல்லது தரும சமுத்திரம் என்று பொருள்படும். இறை வன், அறங்கள் எல்லாவற்றையும் தனக்கு வடிவாக வுடைய வன் : ஆதலால், திருவள்ளுவர், இறைவனை அறவாழி அந்த ணன் என்றார் என்பது பரிமேலழகர் கொள்கை.

இவ் விரண்டு கொள்கைகளையும் நன்றாக விளக்குகின்றார் எல்லீசர். அவருக்குக் கிடைத்த உரைகள் மூன்று: பரிமேலழ கர் உரை ஒன்று; கவிராஜ பண்டிதர் என்ற சமணர் உரை ஒன்று ; வீரமாமுனிவர் உரை ஒன்று. முனிவர் உரையை Latin Commentary என்று எல்லீசர் குறிப்பிடுகின்றார். அறவாழி அந்தணன் என்பதற்குப் பரிமேலழகர் சொல்லும் பொருள் சிறந்ததோ, அன்றிச் சமணர் சொல்லும் பொருள் சிறந்ததோ என்ற தொல்லையான ஆராய்ச்சியில் எல்லீசர் ஈடு படவில்லை ; இருதிறத்தார் கருத்தையும் எடுத்துரைத்து மேற் செல்கின்றார்.

அந்தக் குறளிலே, பிறவாழி என்ற சொல்லும் வரு கின்றது. 'பிறவாழி நீந்தல் அரிது' என்ற திருக்குறளடியில் பிறவாழி என்பதற்குப் பொருள் யாது? இதிலும் கருத்து வேறுபாடு உண்டு. பிறவியாகிய கடலே பிறவாழி என்னும் சொல்லாகக் குறிக்கப்பட்டது என்பது சமணப்புலவர் கருத்து. எனவே, பிறவியாகிய கடலைக் கடந்து கரையேறுவதற்கு அருக

னுடைய திருவடித்துணை இன்றியமையாதது என்று அன்னார் பொருள் கொள்ளுவர்.

பரிமேலழகர் இதற்கு வேறு வகையாகப் பொருள் கூறு கின்றார். அறம், பொருள், இன்பம் எனப்படும் மூன்றனுள் அறக்கடல் அறவாழியென்று முன்னே கூறப்பட்டமையால், ஏனைய பொருட் கடலும் இன்பக் கடலும் பிறவாழி என்னும் சொல்லால் குறிக்கப்பட்டன என்பது பரிமேலழகர் கருத்து. அறக்கடலாகிய இறைவனுடைய திருவடியைச் சேர்ந்தாலன்றி, பொருட் கடலையும் இன்பக் கடலையும் கடக்க முடியாது என்பது அவர் கொள்கை.

இந்த உரைகளை ஆராய்ந்தார் எல்லீசர். பிறவாழி என்ற சொல்லுக்கு வேறு ஒரு பொருள் கண்டார் அவர். அறவா ழிக்கு மாறானது பிறவாழி. அறவாழி என்பது அறக்கடல் என்றால் பிறவாழி என்பது பாவக்கடல். எனவே, அறமே உரு வாயுள்ள இறைவன் திருவடியே பாவக்கடலைக் கடப்பதற்கு ஏற்ற சாதனம் என்று பொருள் உரைத்தார் எல்லீசர். ஆங்கி லத்தில் அறவாழி என்பதை Sea of Virtue என்றும், பிறவாழி என்பதை Sea of Vice என்றும் அவர் மொழி பெயர்த் துள்ளார்.

இவ்வாறு, எல்லீசர் தமது அறிவால் கண்ட பொருளைப் பழைய உரையாசிரியர்களுள் ஒருவர் கொண்டுள்ளார் என்பது இப்போது தெரிகின்றது. திருக்குறளுக்கு முன்னையோர் இயற்றிய பத்து உரைகளில் நாடறிந்த பரிமேலழகர் உரை யைத் தவிர, பரிதி, மணக்குடவர், காளிங்கர் ஆகிய மூவரும் செய்த உரை இக் காலத்தில் கிடைத்துள்ளன. அவற்றைத் தொகுத்து, "திருக்குறள் - உரைவளம்" என்னும் பெயரால் தருமபுர ஆதினம் வெளியிட்டிருக்கின்றது. அந்த நூலிலுள்ள பரிதியுரை எல்லீசருரையை ஆதரிக்கின்றது. சைவ உரை யாசிரியராகிய பரிதியார் எழுதியுள்ள உரையைப் பார்ப்போம்: "தருமம் என்னும் சமுத்திரமாகவுள்ள பரமேசுரன் பாதத் துணையில்லாதார் பாவக்கடலை நீந்தமாட்டார்" என்ற உரை எல்லீசர் உரையை ஒத்திருக்கிறதன்றோ?

*திருவள்ளுவரைப் பற்றித் தமிழ் நாட்டில் வழங்கும் கதைகளையும், மேலைநாட்டார் அறிந்துகொள்ள வேண்டும் என்று ஆசைப்பட்டார் எல்லீசர். இல்லறமே நல்லறம் எனக் கருதிய திருவள்ளுவர், வாசுகி யென்ற பெண்ணை மணந்தார் என்றும், அடிசிற்கினியளாய், அன்புடையளாய், படி சொல் தவருத பாவையாய் அவள் வாழ்ந்தாள் என்றும், வாழ்க்கைத் துணையாய் அமைந்த அந் நல்லாள் இறந்த பொழுது அவர் வருத்தமுற்று ஒரு பாட்டுப் பாடினுர் என்றும் கதை கூறு கின்றது. இக் கதையையும் பாட்டையும் 'வாழ்க்கைத்துணை நலம்' என்ற அதிகாரத்திற்கு எழுதிய உரையிலே எடுத்துக் காட்டுகின்ருர் எல்லீசர்.*

" அடிசிற் கினியாளை ஆக்கம்செய் வாளைப்
படிசொற் படிகட வாளை—அடிவருடிப்
பின்துஞ்சி முன்னெழூஉம் பேதையைவிட் டையையோ
என்துஞ்சும் என்கண் ணிணை "

*என்பது எல்லீசர் எடுத்துக் காட்டும் பாட்டு.*

*[அவர் கண்ட பாட்டுக்கும், இப்போது நாட்டில் வழங்கும் பாட்டுக்கும் சிறிது வேற்றுமை யுண்டு.]*

*இப்படியே புறநானூற்றிலிருந்து அவர் எடுத்து மேற் கோளாகக் காட்டும் செய்யுளிலும் பாடபேதம் காணப்படு கிறது. "எந்நன்றி கொன்ருர்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு" என்ற திருக்குறளின் பொருளை விளக்குவதற்கு அவர் எடுத்துக் காட்டும் புற நானூற்றுப் பாட்டிலே,*

" **குரவர்த்** தப்பிய கொடுமை யோர்க்கும்
**வருவாய்** மருங்கிற் கழுவாயு முளவே "

*என்ற பாடம் காணப்படுகின்றது. ஆனுல், இப்போதுள்ள புற நானூற்றுப் பதிப்புக்களிலே,*

" **பார்ப்பார்**த் தப்பிய கொடுமை யோர்கும்
**வழுவாய்** மருங்கிற் கழுவாயு முளவே "

*என்ற வரிகள் அச்சிடப்பட்டுள்ளன.*

*இங்ஙனம், திருக்குறளுக்கு நல்ல விரிவுரை யொன்று செய்யத் தலைப்பட்ட எல்லீசர் வாழ்வு நாற்பதாம் வயதிலே*

முடிந்துவிட்டது. அறுபத்தொன்பது குறளுக்கு அவர்எழுதிய உரைமட்டும் கிடைத்தது. அதைத் தலையும் காலும் இல்லாமல் காலமும் பேரும் போடாமல், முந்நூற்று நான்கு பக்கங் கொண்ட நூலாக யாரோ வெளியிட்டிருக்கின்றார்கள். அதைப் பாதுகாத்து நல்ல முறையில் அச்சிட்டுப் பல்லோரும் அறியப் பரப்புதலே திருவள்ளுவருக்கும் எல்லீசருக்கும் தமிழகம் செய்யத்தக்க சிறந்த கைம்மாறாகும்.

இக் கட்டுரை சென்னை வானொலியாளர் இசைவு பெற்று வெளியிடப் பெற்றது.

# திருக்குறளும் இல்லறமும்

G. சுப்பிரமணிய பிள்ளை

அறம், பொருள், இன்பம் என்னும் உறுதிப் பொருள்கள் மூன்றனையும் அடிப்படையாகக் கொண்டெழுந்தது முப்பால் என்னும் திருக்குறள் நூல். நான்காவதாகிய வீடு என்னும் உறுதிப் பொருள் மாற்ற மனம் கழிய நின்ற தொன்ருகலின், துறவறமாகிய காரணவகையாற் கூறப்படுவ தல்லது இலக்கண வகையாற் கூறப்படுவ தன்றெனப் பரிமேலழகர் விளக்கியுள்ளார். அவற்றுள், முதலாவதாகிய அறம் என்பது, நூல்களில் விதித்தன செய்தலும், விலக்கியன ஒழிதலுமாம். அஃது ஒழுக்கம், வழக்கு, தண்டம் என மூவகைப்படினும், ஒழுக்கத்தையே சிறப்பாக அறம் என எடுத்து வள்ளுவர் தமது நூலில் வற்புறுத்தியுள்ளார். ஒழுக்கமாவது, தத்தமக்குரிய நிலையினின்று, அதற்குரிய அறங்களின் வழுவாது ஒழுகுதல். அறத்தையும்-இல்லறம், துறவறம் என இரண்டு பெரும் பிரிவுகளாகக் கொண்டு, சிறப்பாக இல்லறத்தையே முதற்கண் எடுத்து, ஐந்தாவதாகிய 'இல்வாழ்க்கை' என்னும் அதிகாரம் தொடங்கி, இருபத்து நான்காவதாகிய 'புகழ்' வரை, இருபது அதிகாரங்களால் இல்லற வாழ்க்கையைப் பற்றி வள்ளுவர் கூறியுள்ளார். ஆகவே, இப் பகுதிக்கு 'இல்லறவியல்' என்று பெயர் வந்தது. ஆயினும், இல்லறத்தைப் பற்றி இவ் விருபது அதிகாரங்களில்மட்டுமே கூறப்பட்டது என்று எண்ணிவிடக்கூடாது. காமத்துப்பால் முழுமையும்

இல்லறத்தார்க்கு உரியதாகவே அமைக்கப்பட்டிருக்கின்றது. பொருட்பாலினும் பல்வேறு குறிப்புக்கள் இல்லறத்தார்க்குரியனவாகக் காணப்படுகின்றன. பெண் வழிச்சேறல், குடிசெயல்வகை முதலிய அதிகாரங்கள் இல்லறத்தார்க்கே எழுதப்பட்டன என்பதைச் சொல்லவேண்டுவ தின்று. இன்னும் சற்று நுணுகிப்பார்ப்போமானால், திருக்குறள் நூல் முழுதுமே இல்வாழ்வானுக்கு இன்றியமையாத ஒரு சிறந்த வாழ்க்கைத் துணை நூலாகக் காட்சியளிக்கும்.

இல்லறம் என்னும் நல்லறம், மனையாளோடு கூடி வாழும் வாழ்க்கை. அஃதாவது, இல்வாழ்க்கை நிலைக்குச் சொல்லுகின்ற நெறிக்கண் நின்று அதற்குத் துணையாகிய கற்புடை மனைவியோடும் செய்யப்படுவதே இல்லறம். இவ் வுலகத்திலே இல்லற வாழ்க்கையைச் சரிவர நடத்தி ஒருவன் எப்படி வாழ வேண்டுமோ அப்படி வாழ்வானாயின், அவன் சாதாரண மனித நிலையினின்றும் மாறி அமர நிலையை எய்துவான் என்கிறார் வள்ளுவர் :

> "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்
> தெய்வத்துள் வைக்கப் படும்."

இல்லாளோடும் கூடி வாழ்தலின் சிறப்பை, 'இல் வாழ்க்கை' என்ற அதிகாரத்தில் வள்ளுவர் வகுத்தோதுகின்றார். இல்வாழ்க்கை எப்படி அமையவேண்டும்? ஒருவன் இல்வாழ்க்கை, தன் மனைவிமேல் செய்யத்தகும் அன்பினையும், பிறரோடு பகுத்துண்டலாகிய அறத்தினையும் உடையதாக இருக்க வேண்டும். மனைவிமேற் படரும் அன்பே இல்வாழ்க்கையின் பண்பு. பிற உயிர்கள்மேல் தொடரும் அறமே இல்வாழ்க்கையின் பயன். மனைவிமேற் காட்டும் அன்பே இல்லறத்தின் மாண்பு. தன்னிடம் இருக்கும் பொருளைப் பிறர்க்கும் உண்ணக் கொடுத்துத் தானும் உண்பதே இல்லறத்தின் குறிக்கோள்: அதன் முக்கிய நோக்கம். கணவனும் மனைவியும் உள்ளம் கலந்து அன்பு கொள்ளாதவழி, பிற உயிர்கள் மேற் செய்யப்படும் அறம் தோன்றாதாகலின், அன்பே இல்வாழ்க்கையின் பண்பாயிற்று. கணவனும் மனைவியும் கருத்தொருமிக்கும் அன்பாகிய பண்பினால் விளைய நிற்பது அறம். ஆகையால், அதுவே பயனாயிற்று :

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பணபும் பயனும் அது."

ஆகவே, இல்லறத்தின் முக்கிய நோக்கம் மனைவிமாட்டும் பிற உயிர்கள் மாட்டும் அன்பு செலுத்துதல். மனையாளை நேசித்து மனையிலிருந்து வாழ்ந்துவிட்டால்மட்டும் இல் வாழ்க்கை சிறந்துவிடாது. இல்வாழ்க்கை அற வாழ்க்கைய தாகிப் பிற உயிர்களுக்கு நன்மை பயப்பதாகவும் இருக்க வேண்டும். தானும் தன் மனைவி மக்களும் வாழ்ந்தால் போதும் என்ற குறுகிய நோக்கம் இல்வாழ்வான் இதயத்தில் நுழைந்து விடக்கூடாது. உணவுப் பொருள்களை ஏராளமாக வீட்டில் குவித்து அடைத்து மறைத்துவைத்துக்கொண்டே, பிறர்க்கு இம்மியும் ஈயாது, தானே உண்டு கொழுத்து உல்லாசமாய்த் திரியும் செல்வன் உளனாயின், அவன் உண்மையில் இல்லற வாழ்க்கையை உடையவன் ஆகமாட்டான். அவன் பிச்சைக்கார னிலும் கேடுகெட்ட பிச்சைக்காரன் என்கிறார் திருவள்ளுவர்.

"இரததலின் இன்னது மன்ற நிரப்பிய
தாமே தமியா உணல்."

இல்லறத்தானை நம்பி, அவன் உதவியை நாடி வாழ்வார் இவ் வுலகத்தில் பலராவர். பிறர்க்கு உணவருத்திப் பசியினைப் போக்குவதற்கு இல்வாழ்வானே பெரிதும் பொருத்த முடையவனாவான். பிரமசரிய விரதம் பூண்டவர்களுக்கும், வனத்திற் சென்று தவம் செய்வோர்க்கும்,பற்றினை உதறிய முற்றத்துறந்த முனிவர்களுக்கும் இல்வாழ்வானே உணவு கொடுத்து ஆதர வளிக்க வல்லவன். இதுவே இல்லறத்தின் முதற் கடமை. இதனை இல்லறத்தான் சரிவர நடத்தாது போனால், துறவி களின் தவநிலை கவலைக்கிடமான அவநிலை யாகிவிடும். யாவரும் மேற்கொள்ளவேண்டும் தவநிலையை இல்வாழ்வான் கைவிட் டதே, துறவிகளின் தவம் இனிது நடந்தேறுவதவற்குத்தான் போலும் என்று வியக்கிறார் திருவள்ளுவர். ஏனெனில், எல் லாரும் தவநிலையை மேற்கொண்டுவிட்டால் அவரைத் தாங் குவார் ஒருவரும் இலராவர். அதுகருதியே இல்லறத்தார் தவம் செய்ய மறந்தார்கள் போலும், என்று நயம் படக் கூறுகிறார் திருவள்ளுவர் :

“ துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல்
மற்றை யவர்கள் தவம்.”

இதனால், துறவறத்தார்க்கு உண்டியும், மருந்தும், உறையுளும் போல்வன அளித்துதவித் துணையாக இருக்கவேண்டுவது இல்லறத்தார் கடமையாயிற்று. இதுமட்டுமா? இல்வாழ்வான் - ஏழை பங்காளனாய், ஆபத்துக் குதவுபவனாய், அகதிக் குறுதுணையாய், பரோபகாரியாய்த் திகழவும் வேண்டும். களைகணனவரால் துறக்கப்பட்ட அநாதைகளுக்கும், நல்கூர்ந்தார்க்கும் இல்வாழ்வான் துணையாக நின்று அவரவர்களுக்கு வேண்டுவன கொடுத்து ஆதரித்தல் வேண்டும்; ஒருவரு மின்றித் தன்னை வந்தடைந்து பின் மாண்டுபோனவர்களுக்கு நீர்க்கடன் ஆற்றி, அவர் உயிர்களை நல்லுலகின்கட் செலுத்தவேண்டும்; பிதிரர், தேவர், விருந்தினர், சுற்றத்தார், தான் என்ற ஐவரிடத்தும் செய்யவேண்டும் அறநெறியை வழுவாமற் செய்யவேண்டும். இவற்றைச் செம்மை பெற நடத்துவதற்குப் பொருள் வேண்டும். அதற்காகத் தீயவழிகளிலே சென்று பொருள் திரட்ட முற்படுதல் கூடாது. இல்வாழ்வான் நல்ல வழியிலே பொருளீட்டி, அதைப் பிறர்க்கும் பகிர்ந்து கொடுத்துத் தானும் உண்ணவேண்டும். பிறர் பொருளைக் கொள்ளையடித்துப் பகுத்துண்ணுவானாயின், அதன் புண்ணியமெல்லாம் அப் பொருளுக்கு உண்மையாக உரியவர்களைச் சென்று சேரும். அதன் பாவம் மட்டுமே இவனுக்கு எஞ்சி நிற்கும். ஆதலால், பழியஞ்சிப் பொருளீட்டிப் பிறர்க்கு உதவவேண்டும் என்கிறார் திருவள்ளுவர்:

“ பழியஞ்சிப் பாத்தூண உடைததாயின் வாழ்ககை
வழியெஞ்சல் எஞ்ஞான்றும இல்.”

இல்வாழ்க்கைக்கு நல்ல மனைவி மிக அவசியம். இல்லறம் நடத்துவதற்குரிய வாழ்க்கைத் துணைவியாகும் மனைவியின் சிறப்பையெல்லாம் வாழ்க்கைத்துணைநலம் என்றஅதிகாரத்திற் காணலாம். மனைவியாவாள் மனையறத்திற்குத் தக்க நற்குண நற்செயல்களை யுடையளாய், கணவன் வருவாய்க்குத் தக்க வாழ்க்கையை யுடையளாய், கற்பு என்னும் திண்மை பெற்றவளாய், கணவனையே தெய்வமாகத் தொழுபவளாய், கணவனுடையதும் தன்னுடையதுமான புகழையும், நன்

மதிப்பையும், உடல் நலத்தையும் சோர்விலாது காப்பவளாய் அமையவேண்டும். அத் தகைய மனையாளை எய்துவதைவிட வேறு சிறந்த பொருள் ஒருவனுக்கு இவ் வுலகத்தில் இல்லை. கற்புடைய மாதரைத் தெய்வமும் பணிந்து ஏவல் கேட்டு நிற்கும். தேவர் உலகமும் அவர்களுக்கு எளிதிற் சித்திக்கும். மனையறத்திற்குத் தக்க இத் தகைய நற்குண நற்செய்கைகள் ஒருவன் மனைவியிடத்தில் இல்லாவிடில், அவன் இல்வாழ்க்கை, வேறு எத் தகைய செல்வம் இருந்தபோதிலும் சிறப்புறாது. மாட்சிமை யில்லாத மனைவியை உடையவன் வெளியில் தலை தூக்கி நடக்கவும் இயலாது இழிவெய்துவான். சிறந்த மனைவி வாழும் மனையில் எல்லாப் பொருளும் நிறைந்திருக்கும். கணவன் கேட்டதற்கு இல்லையென்ற சொல்லே மனைவி வாயில் வாராது. இல்லறத்தில், கணவன், கடவுளை மறவாதும், மனைவி, தன் கணவனே கடவுள் என்பதை மறவாதும் வாழ்க்கையை நடத்திவர வேண்டும். ("He for God only : she for God in him"):

> "தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
> பெய்யெனப் பெய்யும மழை."

இக் குறளுக்கு ஒரு விளக்கவுரை தருவதுபோல் இளங்கோ வடிகள் கீழ்வரும் வெண்பாவைப் பாடினர் :

> "தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுவாளைத்
> தெய்வந் தொழுந்தகைமை திண்ணிதால்—தெய்வமாய்
> மண்ணக மாதர்க் கணியாய கணணகி
> விண்ணகமா தர்க்கு விருந்து."

இதனால், வேறு தெய்வத்தை வணங்காளாய்த் தன் கணவனை வணங்குவாளைத் தெய்வமும் வணங்கும் தன்மை கண்ணகி வாழ்க்கையிலிருந்து உறுதி பெறுகின்றது. ஆயினும், கண்ணகி சீறிக் கனன்று மதுரையை எரித்தது போல், பெண்ணினல்லார் தங்கள் அரிய சக்தியைக் கொண்டு அழிவுச் செயல் களைச் செய்துவிடாது, ஆக்க வேலைகளில் முனைய வேண்டும் என்னும் நினைப்பால், வறங்கூர்ந்த காலை வான் பொழிய வைப் பார் என்றார் திருவள்ளுவர். கண்ணினின்றும் கணப் பொழுதில் கன மழை சொரியவல்ல காரிகை மாதரார் விண்ணினின்றும் வேண்டுமழை பொழியச் செய்வர் என்ற

உண்மையும் போதரும். பெய் என்று கூறியவுடன் மழை பெய்யும் என்றது ஓர் எடுத்துக்காட்டே யாகும். நினைத்தது நினைத்தபடி நிகழச் செய்வர் கற்புடைப் பெண்டிர்.

கணவனைத் தெய்வமாகக் கருதி வழிபடும் நெறியிலும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு முறைகள் உள. அவற்றைக் கீழ்வரும் பாடலால் அறியலாம்:

"கடிமனை விளக்கல் சரியை கணவர் உணணும்
படிஅறு சுவையூட்டல் கிரியை பதியோடு ஒன்றி
ஒடிவிலா இன்பம் துய்த்தல் யோகம் உரையில நிற்றல்
துடியிடை மடவார்க் கெல்லாம் ஞானமென் றுரைப்பர் தொல்லோர்."

இவ்வாறு இல்வாழ்க்கையின் அணிகலம் மனையாளுடைய நற்குண நற்செய்கைகள் ஆகும். ஆயின், இல்வாழ்க்கையின் அணிகலம் யாது? வாழ்க்கைத் துணைவிக்கு மிகுதியான பொன்னாலும் மணியாலும் நகைகளைப் பூட்டிச் செல்வத்துள் மூழ்க வைப்பது அணிகலம் ஆகாது: இல்வாழ்க்கையும் சிறக்காது. இல்வாழ்க்கையின் உண்மையான அணிகலம் நல்ல குழந்தைகளைப் பெற்றெடுப்பதுதான். குழந்தைகள் என்றால் ஆண் குழந்தைகளை மட்டும் குறிக்கும் என்பது தவறு. பெண் குழந்தைகளையும் சேர்த்தே திருவள்ளுவர் பொதுப்பட 'நன் மக்கட் பேறு' என்று கூறினர்.

"மஙகலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு."

அங்ஙனமாயின், 'புதல்வரைப் பெறுதல்' என்று தனியாகவே ஓர் அதிகாரம் இருக்கிறதே என்ற கேள்வி எழலாம். 'புதல்வரைப் பெறுதல்' என்பதற்குப் பதிலாக 'மக்கட் பேறு' என்ற பாடமும் ஏட்டுச் சுவடிகளிற் காணப்படுகிறது: பின்னதே சிறந்த பாடமாகும். பெண் மகவை யொழித்து ஆண் குழந்தையைக் குறிப்பிட வேண்டின், திருவள்ளுவர் 'மகன்' என்று ஐயமறக் கூறிவிடுவார். அவ் விதம் வந்த குறள்கள் மூன்றுள (67, 69, 70). மக்கள் என்ற சொல் ஆண் குழந்தைகளையே குறிக்கும் என்ற கொள்கையைக் கண்டிப்பவர்போல் சிவப்பிரகாசர் பாடிய பாடல் ஒன்றுளது. அது வருமாறு :

"கற்றோர் அறிகுவர் மக்கள்தம் பேறெனக் கட்டுரைத்த
சொற்றோன் ஒருபெண் ஒழித்ததென் பாரொடு தொல்லுலகில்
நற்றாண் மகற்பெறு கென்றுசி சொல்பவர் நாணஉனைப்
பெற்றோன் மலையரை யன்குன்றை வாழும் பெரியம்மையே."

சமூக வளர்ச்சிக்கு இல்லற வாழ்க்கையில் நாட்டமும் நன்மக்களைப் பெற்றெடுத்தலில் தேட்டமும் இன்றியமையா தனவாகும். துறவற வாழ்க்கையைவிட இல்லற வாழ்க்கையை இனிதெனக் கண்டார் திருவள்ளுவர்; அதனை மேலெனவும் கொண்டார்; எல்லாச் செல்வங்களுள்ளும் மக்கட் செல்வத்தையே சிறந்ததாகக் கருதினார். குழந்தைகளுள் ஆண் என்றும் பெண் என்றும் அவர் வேறுபடுத்திய தில்லை. ஆண் பிள்ளையே யாயினும், பெண்மகவே யாயினும், அவர்கள் நம் அன்பிற்கு உரியராவர். பால் மணம் மாறாப் பச்சிளங் குழந்தை யிடத்தே பெற்றோர் உள்ளம் கழிபேரின்பம் காண்குறும். உண்ணும்பொழுது குழந்தையை அருகில் வைத்து உண்ணும் இன்பம் வேறு எவ் வுலகிலேதான் ஒருவனுக்குக் கிடைக்கப் போகிறது? தன் அல்லிமலர்க் கரங்களால் சோற்றைக் கிண்டியும், கீழே சிதறியும், மேலே வாரி இறைத்தும், குழந்தை செய்யும் சிறு தொழில்கள் கண் கொள்ளாக் காட்சியாகும். அது குறுகக் குறுக நடந்து வந்து, தலையை அசைத்து, உதட்டை நெளித்துக் கன்னங்குழியச் சிரித்துத் தன் குஞ்சுக் கைகளால் துழாவித் துழாவி அளாவியிடுவது கூழேயாயினும் தேவாமிர்தத்தினும் மேலாகச் சுவைத்து அதன் பெற்றோர் இனிமை காணலாம் என்கிறார் திருவள்ளுவர் :

"அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ்."

குழந்தையின் மழலை மொழிகள் பெற்றோர்களை உவகை யால் மயக்கிக் கவலையைப் போக்கிவிடும். குழந்தையின் கொஞ்சும் குதலைச் சின்மொழிகள் மதியை மயக்கி மனத்தைப் பிணிக்கவல்லன. மழலை கேட்டு மகிழாத செவிகளுக்குத்தான் குழல் இசையும் யாழ் இசையும் மேலாகத் தோன்றும் என்று அழகுறக் கூறியுள்ளார் திருவள்ளுவர் :

"குழலினி தியாழினி தென்பதம் மக்கள்
மழலைச் சொற் கேளா தவர்."

கணவன்மனைவியரிடையே காதலை வளர்ப்பதற்கும், கருத்தினைப் பிணைப்பதற்கும் குழந்தை வேண்டப்படுவதாகும். மக்களைப் பெற்றுவிட்டால்மட்டும் போதாது. அவர்களை நல்ல முறையிலே வளர்த்து அறிவு புகட்டவேண்டுவதும் பெற்றோர் கடமையாகும். அதிலும், முக்கியமாய் ஆண்மகனுக்குக் கல்வி வருவித்து, அவையிலே முதலிடம் பெறும்படியாகச் செய்ய வேண்டுவது தந்தையின் கடனாகும்:

"தந்தை மகற்காற்று நன்றி அவையத்து
முந்தி யிருப்பச் செயல்."

தன் மகன் அறிவுடையவனா, இல்லையா என்பதை அறியாத தாய் இல்லை. 'தாய்க்கும் ஒளித்த சூல் உண்டா?' என்ற பழமொழியும் கேட்டிருக்கிறோம். தன் மகன் அறிவுள்ள உத்தமன் என்பதைத் தாயானவள் தெரிந்திருந்தாலும், உலகமும் அவனைப் பாராட்டும்பொழுதுதான் அவளுக்குப் பெருமகிழ்ச்சி உண்டாகுமாம். 'காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு' என்பர். ஆதலால், தன் பாராட்டுதலுக்கு உகந்தவனாய்மட்டும் தன் பிள்ளை இருந்துவிட்டால் அவளுக்குப் போதாது. பிறரும் அவ்வாறு அவனைப் போற்றும்பொழுதுதான் அவள் மனம் இன்பம் அடையும். இதனை வள்ளுவர்,

"ஈன்ற பொழுதிற பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்"

என்றார்.

இல்வாழ்க்கையை மேற்கொண்டவன் பழிபாவங்களுக்கு அஞ்சிப் பொய்தீர் ஒழுக்க நெறி நின்று, தன் கடமையை ஆற்றுவதில் சோர்வுபடாது அறத்தைச் செய்துவரவேண்டும். அப்பொழுதுதான், அவன் குழந்தையும் குட்டியும் பெற்றெடுத்துப் பெருவாழ்வு எய்துவான். ஒருவனுடைய குடும்பமானது வாழையடி வாழையாகப் பெருகி, ஓங்கி வளர வேண்டும் என்ற கொள்கையை உடையவர் திருவள்ளுவர். ஆதலால், அவர் ஆங்காங்குக் குடும்பம் சந்ததியற்று அழிந்து போவதற்கு ஏதுவாய குற்றங்களை எடுத்துக்காட்டி, அவற்றை அஞ்சிக் களைந்தொதுக்கவேண்டும் என்று வற்புறுத்தி எச்சரித்துச் செல்கிறார்.

*கீழ்க்கண்ட குறள்கள் அவற்றுட் சிலவாகும் :*

" கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉம இன்றிக் கெடும்."

" குடியென்னுங் குன்று விளக்கம் மடியென்னும்
மாசூர மாய்ந்து கெடும்."

" நடுவின்றி நன்பொருள் வெஃகிற் குடிபொன்றிக்
குற்றமும் ஆங்கே தரும்."

" தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சததாற் காணப் படும்."

*குடும்ப நாசத்திற்குக் காரணமாகவுள்ள தீமைகளைக் குறித்ததுபோல், குடும்ப நலத்திற்கும், ஆக்கத்திற்கும், வளர்ச்சிக்கும் ஏதுவாய பல நன்மைகளையும் மறக்காமல் திருவள்ளுவர் குறித்துச் செல்வது நாம் அறியத்தக்க தாகும்:*

" பழிபஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல்."

" செப்பம் உடையவன் ஆக்கம் சிதைவின்றி
எச்சதிற்(கு) ஏமாப் புடைதது."

" மனந்தூயார்க்(கு) எச்சமநன்(று) ஆகும் இனந்தூயார்க்(கு)
இல்லைநன்(று) ஆகா வினை."

*இதனால், குடும்பம் பெருகி வளரும்படி இல்வாழ்வான் நடந்துகொள்ளவேண்டும் என்ற வள்ளுவரின் முதன்மையான எண்ணம் நன்கு விளங்குவதாகும். தலைமுறை தலைமுறையாக ஒருவன் குடும்பம் தட்டின்றித் தழைத்தோங்கிவருவது, அவனுக்கும் நல்லது; நாட்டிற்கும் நல்லது.* "I was ever of opinion that the honest man, who married and brought up a large family, did more service than he who continued single and only talked of population," *என்று ஆங்கிலப் பேரறிஞர் கோல்டு சுமித் கூறினார். அஃதாவது, தனி மனிதனாய் இருந்துகொண்டு மக்களின் பொது நலத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருப்பதைவிட, நேர்மையான மன முடைய ஒருவன், மணம் செய்து மக்களைப் பெற்றுக் குடும்பத்தைக் கவனித்துவருவது மேலான சிறந்த தொண்டாகும் என்பதாம். இவ்வாறு இல்லற நெறியிலே நின்று, மனைவி மக்களுடன் வாழ்ந்து, பிறர்க்கு உதவியாளனாக வேண்டிப் பொருளீட்டி உலகியலை நடத்தி வருபவனே,*

சமுதாயம் சீர்குலேயாதபடி செய்வதற்குத் தகுந்த பாத்திரவாளுவான். அரசியல் அலேக்கழிவுருது அமைதியுடன் ஆற்றப்படுவதற்கும், இல்லறத்தைக் கண்ணும் கருத்துமாய் நடத்தி வருபவனே இன்றியமையாதவனுவான். அத் தகையவர் களேயே அரசியலார் தேர்ந்தெடுத்து அரசியற் காரியங்களில் அமர்த்துவிக்கவேண்டும் என்பதைத் தெய்வப் புலவர் எதிர்மறைமுகத்தால் கூறியுள்ளது இங்கே கருதற்பாலது. அஃதாவது-குடும்ப வாழ்க்கை, சொத்து, சுகம், மனேவி, மக்கள் ஒன்றும் இல்லாது, யாதொரு பற்றுதலுமின்றித் தன்னே எளிதிலும், விரைவிலும், எதற்கும் விற்றற்குரியனுய் நிற்கும் குடும்ப வாழ்க்கை அற்றவன் எவனேயும், அரசியற் காரியங் களுக்குத் தேருது விடுக்க என்று எச்சரிக்கிருர் வள்ளுவர் :

" அற்ருரைத் தேறுதல ஓமபுக மற்றவர்
பற்றிலா நாணுர் பழி."

பொருளும், சுற்றமும், குடும்பமும் இல்லாதோரை 'அற்ருர்' என்ருர். உலகத்தார் பழிப்பன ஒழிதற்கும், புகழ்வன செய் தற்கும் ஏதுவாகிய உலக நடை யியல்பு இல்லற வாழ்க்கை யில்லார்க்கு இல்லேயாம். இத் தகையார் பழிபாவங்களுக்கு அஞ்சமாட்டார்கள். தம்மைச் சேர்ந்தவர்களாகிய உற்ருர் துயருறலாகாதே என்ற கவலே அவர்களுக்குக் கிடையாது. நன்மையே வரினும், தீமையே வரினும் அவர்கள் இழக்கக் கூடியது ஒன்றும் இல்லே. ஆதலால், அவர்கள் எதற்கும துணிந்திருப்பார்கள்; புரட்சி வீரர்களாய்ப் புறப்பட்டு விடுவார்கள். பொது நலம் அவர்கள் கைப்பட்டால் உருப் படாமல் சிதைந்து சின்னபின்னமாகும். நீதியோ, நியாயமோ, அவர்கள் நிழலடியிலும் நிற்காது. இதற்குக் காரணம், அவர் 'பற்றிலர்', அதனுல், 'பழி நாணுர்' என்ருர் திருவள்ளுவர். உண்மையைக் கண்டு மறைக்காது, பொய்க்காது, அறத்திற் காகப் பாடுபடும் உத்தமச் சான்ருேர்கள் இல்லறத்தாரே யாவர் என்ற கொள்கை தமிழ் நாட்டில் தொன்றுதொட்டு நிலவிவந்திருக்கிறது. குழந்தைகுட்டிகளே உடையோர், தீவினேக்கஞ்சி நல்லதையே எப்பொழுதும் நாடிநிற்பர்; கரி பொய்க்கமாட்டார்கள். இது கருதியே, மதுரைத் தெருவில் கணவனே இழந்து கண்ணீர் பெருக்கிக் கதறிய கண்ணகி,

'இங்கு மக்களைப் பெற்ற மாண்புடையாளர் இல்லையா? அவர்கள் இருந்துமா இந்த அநீதி நடந்தது?' என்று கேட்டாள் :

" சான்றோரும் உண்டுகொல் சான்றோரும் உண்டுகொல்
ஈன்ற குழவி எடுத்து வளர்க்குறூஉம்
சான்றோரும் உண்டுகொல் சானறோரும் உண்டுகொல் !"

இல்லற வாழ்க்கையாகிய சகடம் இனிது நடந்தேறுவதற்கு, இல்வாழ்வான் சில சிறந்த பண்புகளை உடையவனாகத் திகழ வேண்டும். அவற்றை நிரல்படக் கோத்துத் தனித்தனி அதிகாரமாகத் திருவள்ளுவர் இனிது கூறியுள்ளார். அவை யாவன: அன்புடைமை, விருந்தோம்பல், இனியவை கூறல், செய்ந்நன்றி யறிதல், நடுவு நிலைமை, அடக்க முடைமை, ஒழுக்க முடைமை, பிறனில் விழையாமை, பொறையுடைமை, அழுக்காறாமை, வெஃகாமை, புறங்கூறாமை, பயனில சொல்லாமை, தீவினை யச்சம், ஒப்புரவறிதல், ஈகை என்பனவாகும். இவற்றுள், முக்கியமாக அன்பும், விருந்தோம்பலும் இங்கே குறிப்பிடத்தக்கன. இல்லறமாகிய இன்பக் கனி, அன்பிலே தோன்றி, அன்பிலே தழைத்து, அன்பிலே கனிவதொன்றாகும். இல்லறம் என்னும் மகிழ்ச்சிக் கோட்டைக்கு, அன்பையே அடிப்படையாக அமைத்தல்வேண்டும். இல்வாழ்க்கையை முறையாக நடத்தி மனைவியோடும், மக்களோடும், ஒக்கலோடும் கூடியின்புற்றார், விருந்தோம்பல் முதலாகிய வேள்வித் தொழிலால் தேவராகி, மறுமைக்கண்ணும் துறக்க இன்பத்தைத் துய்த்து வாழ்வார் என்பது வள்ளுவர் துணிவு. தவத்தால் துன்புற்று எய்தும் துறக்க இன்பத்தினை, ஈண்டு இன்புற்ற நிலையிலேயே எய்துதல் அன்பினால்மட்டுமே முடியும். வேறாகாத அன்புடைய ஆடவனும் பெண்ணும் கூடியல்லது இல்வாழ்க்கை இயலாதாகையால், அன்புடைமை முதன்மையாக வேண்டப்பட்டது. இதனை வள்ளுவர்,

" அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத(து)
இன்புற்றார் எய்துஞ் சிறப்பு "

என்று கூறியுள்ளார்.

விருந்தினரைப் பேணி, அவர்க்கு உபகாரம் செய்தற் பொருட்டேதான், வனம் செல்லாது மனைவியோடும் இல்லின்

கண் இருந்து பொருள்களைப் போற்றி இல்லறம் நடத்தப் படுகிறது என்பதை இல்வாழ்வான் நன்கு உணரவேண்டும். விருந்தோம்பல் ஒன்றுமே இல்வாழ்வானுடைய தலைசிறந்த முதன்மையான குறிக்கோள் என்கிறார் திருவள்ளுவர் :

" இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு. "

கோவலன், பரத்தை வயப்பட்டு, நெறியைத் துறந்து, மனையை மறந்து வெளியுறைந்த காலத்தில், இல்லறம் நடத்த முடியாது போனதால் இல்லற வாழ்க்கையின் சிறந்த பயனைத் தான் இழந்த செய்தியைக் கண்ணகி பின்னர் நினைந்து கூறி வருந்தியதைப் படிப்போர் மனம் என்றும் பரிந்துருகாநிற்கும்:

" அறவோர்க் களித்தலும் அந்தணர் ஓம்பலும்
துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை—. "

மனைவிக்கு இலக்கணம் கூறி அவள் கடமைகளை எடுத்து விரித்துக் கூறிய திருவள்ளுவர், கணவர் கடமைகளை ஏன் தனியாக எடுத்துக் கூறவில்லை என்று எண்ணுவோரும் உண்டு. திருவள்ளுவர் அவற்றையும் எடுத்துக் கூறித்தான் இருக்கிறார். திருக்குறள் முழுதுமே மக்கள் கடமைகளை எடுத்துக் கூறுவதால், கணவர் கடமைகளையும் கூறியதாகவே நாம் கொள்ள வேண்டும். உதாரணமாக,

" ஒருமை மகளிரே போலப் பெருமையும்
தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு "

என்ற குறளை நோக்கலாம். பெண்கள் கொலுவீற்றிருக்கக் கற்பு என்னும் கோயில் அமைத்த திருவள்ளுவர், ஆடவரை அக் கோயிலின் சிற்பிகளாகச் செய்திருக்கிறார். கவராத மனத்தினையுடைய மகளிர், நிறையின் வழுவாது தம்மைத்தாம் எவ்வாறு காத்துக்கொள்ள வேண்டுமோ, அவ்வாறு ஆடவரும் நிறையின் வழுவாது தம்மைத்தாம் காத்துக்கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு காத்துக்கொள்ளும் மகளிரிடத்தில் உண்டாவது கற்பு ; ஆடவரிடத்தில் உண்டாவது பெருமை. இந்தக் கற்பும் பெருமையும், ஒன்றை யொன்று தூண்டி இயக்கி ஒளி கொடுத்து உயிர் பெறுவனவாகும். அவை

இரண்டும், இல்லற வாழ்க்கையின் இருதலையும் இயங்கும் சுடர்விடு சோதிகள். அவற்றில், ஒன்று அணைந்தால் மற்றொன்றும் மங்கிவிடும். திருவள்ளுவர், உவமையும் பொருளுமாக இவ் விரு உண்மைகளையும் ஒற்றுமைப்படுத்திக் கூறும் திறன் வியக்கற்பாலது. கற்பு என்னும் பெண்களுடைய திண்ணிய சுவர், ஆண்களுடைய பெருமை என்னும் கற்களைக் கொண்டு, அன்பு என்னும் சாந்தாலே அமைக்கப்பட வேண்டும். அச் சுவர் சரிந்து விழுமேயானால், கல்லிலும் சாந்திலுமே ஏதோ குறையிருக்கவேண்டும்.

ஒரு வயலுக்கு உரியவன் தன் நிலத்தைப் பராமரிப்பது போல், கணவனும் மனைவியைக் கவனித்து வரவேண்டும், நிலத்தின் பயிருக்கு நிலத்துக்காரனை அடையாளம் தெரியும். அவன் நாள்தோறும் வந்து நான்கு எல்லைகளையும் சுற்றிப் பார்த்துப் பயிரைக் கவனித்தால், பசிய பயிர்கள் செழித்து வளரும். உரிய காலத்தில் செய்யவேண்டி இவனும் பேணுதல்களைத் தட்டின்றிச் செய்ய முடியும். பயிர்கள் பொதிபொதியாய்க் கதிர் தள்ளி முப்போகம் பொழியும். 'உள்ளவன் இல்லாவிடில் ஒரு முழம் கட்டை' என்பார்கள். பயிருக்கு உரியவன், தன் நிலம் எங்கிருக்கிறது, எவ்வாறு இருக்கிறது என்றே கவனியாது, கூலிக்காரரிடம் குத்தகைக்கு அடைத்துவிட்டு, வீட்டில் தூங்கிக்கொண்டிருந்தால், நிலம் என்னும் நல்லாள் பலன்தரமாட்டாள். நிலத்துக்காரன் போகம் இழப்பான். நல்ல விளைவு தாராது நிலமே கெட்டுவிடும். அந்த விதத்தில்தான் நிலம் தன் சொந்தக்காரனிடம் கோபித்துக்கொள்ளும். ஆகவே, நிலத்தை உணக்குதல், எருவிடுதல், நீர் பாய்ச்சுதல், களை கட்டுதல், வரப்புத் தறித்து மிதித்தல், நீர் வடித்தல், காவல் செய்தல் முதலிய பராமரிப்புக்கள் அனைத்தையும்,காலம் தவறுமல், நிலத்துக்குச் சொந்தக்காரன் தானே நேரில் சென்று கவனிக்க வேண்டும். தவறினால் நிலவளம் கெட்டு விளைவு குன்றும். அதுபோல், கணவனும், மனைவியிடம் அன்பு காட்டி அவள் மனம் அறிந்து நலத்தைப் பேணுதுவிட்டால், மனையாளும் ஊடிவிடுவாள்; எழில் நலம் வாடிவிடுவாள். கணவன் போகம் இழப்பான்.

வீட்டினுள்ளே என்ன நடக்கிறது என்பதையே கவனியாது வெளிக்கூடத்திலே காலம் கழிக்கும் ஆண்பிள்ளைகளும் உண்டு. இவர்களுக்கு மனைவியின் உடல் நலம் எவ்வாறு இருக்கிறது, அவள் தேவைக் குறைகள் யாவை, அவள் வேண்டுவது யாது, உண்டாளா, உறங்கினளா என்ற கவலையே கிடையாது; உள்ளே சென்று விசாரிக்கவும் மாட்டார். இன்பவுரை கூறி அன்பு காட்டுவதற்கு அவகாசமே இருக்காது. இதனால், மனைவியின் நிலை மாறிவிடும். கட்டுக்கிடைத் துணிபோல் அவள் கசங்கிவிடுவாள். வாழ்க்கை,சாரமற்று வறிதாகப் போய்விடும். அவள் உள்ளவெழுச்சியும் மனக்கொர்ந்தளிப்பும் மங்கிவிடும்; உற்சாகம் சிறிதுமின்றி, ஓயாமல் மூலை தேடி முடங்கிக்கொள்வாள். இல்லாத நோய்கள் எல்லாம் 'இருக்கிறோம்' என்று எழுந்துவிடும். ஆடும் சரக்கு அறுபத்துநாலும் வீடு நிறைந்து இருந்தாலும் போதா. தாலிகட்டிய கணவன், அன்பு வேலியைக் கோலி ஆதரம் காட்டுவதையே அகமுடையாள் வேண்டிநிற்பாள். "நீ சாப்பிட்டாயா?" என்று அவன் ஒரு வார்த்தை கேட்டால், அவள் உள்ளம் குளிர்ந்துவிடும்; "நீ விரும்பிய பொருள் இதோ கொண்டு வந்தேன்" என்று கணவன் கொடுத்தால், அவன் தன் மேற்கொண்டுள்ள அன்பையும் நன்மதிப்பையும் அறிந்து பெருமைகொள்வாள்; அவனை மகிழ்விப்பதற்குப் புதிய புதிய துறைகள்கண்டு இன்பம் ஊட்டுவாள். அவன் தன்னை மறவாது நினைவில் வைத்திருக்கிறான், அவன் மனக்கோயிலில் தனக்கு இடம் உண்டு என்ற உறுதி அவள் உயிரைத் தளிர்க்கச் செய்யும். என்றும் கணவனுடன் கொஞ்சிக் குலாவி மகிழ்வதே அவள் நெஞ்சு நிறைந்த விருப்பம். ஆகவே, கணவன், மனைவியை நேரிற் கவனித்து அன்பு காட்டுதல் இல்லறத்திற்கு இன்றியமையாது வேண்டப்படும்: அது கணவனுடைய கடமை. இல்லாவிடில் மனைவி மனம் ஒடிந்து மாறிவிடுவாள்: கணவனும் போகம் இழப்பான்.

"செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்(து)
இல்லாளின் ஊடி விடும்."

இவ் வருமைத் திருக்குறளில், 'ஊடி விடும்' என்ற முடிபின் நயம் சிந்திக்கற்பாலது. நிலத்திற்கு உரியவன் நேரிற்

சென்று கவனியாதுவிட்டால், 'தூங்கினவன்காணி, விழித்தவன் கையில்' என்பதுபோல், பக்கத்து நிலத்தார்கள் கொஞ்சம் கொஞ்சமாய்த் தங்கள் நிலத்தோடு இவன் நிலத்தைச் சேர்த்துக்கொள்வார்கள். சோம்பியிருந்தவன் நிலம் அவனை விட்டுப் போய்விடும். அதுபோல், தலையளி செய்யாது தளரவிட்ட மனையாளும், கணவனிடம் ஊடிப் பின் விடும்; அதாவது, அவனிடம் கோபித்துக்கொண்டு, பின் அவனைவிட்டு நீங்குவாள்.

இவ்வாறு மனைவிமாட்டுக் காதலுடையனாய் வாழும் கடப்பாடுடைய இல்லறத்தான், காமத்தனாய் வாழுதல் மிகப் பொல்லாது. காதல், காமமாக மாறும்பொழுது, அஃது ஆக்கம் சிதைத்து அழிவினைத் தந்துவிடும். காமத்தால், தன் வழியொழுகற்பாலளாய இல்லாள்வழியே தான் ஒழுகத்தொடங்கி, இம்மையையும் மறுமையையும் ஒருங்கே கணவன் இழந்துவிடுவான். மனைவிக்கு அன்பு செலுத்தவேண்டுமே யொழிய அடிமைப்பட்டுவிடக் கூடாது. ஆதலால், திருவள்ளுவர், 'பெண்வழிச்சேறல்' என்னும் அதிகாரத்தில், பெண்ணேவல் செய்தொழுகும் பேதை இல்லற இன்பத்தை இழப்பான் என்பதை நன்கு எடுத்துக் கூறினார். இல்லறத்தான், பிறன் மனைவியை விரும்புதலும், வரைவின் மகளிர்பால் வாரம் வைத்தலும், அவன் மனையாள்பாற் கொள்ளவேண்டும் அன்பினுக்கும் ஊறு செய்து அவனையும் அழித்துவிடு மாகையால், இக் குற்றங்களும் தன்கண் வாராமல் பாதுகாத்துக்கொள்ள வேண்டுவது அவன் கடமையாகும். இவற்றைப் 'பிறனில் விழையாமை', 'வரைவின் மகளிர்' என்ற அதிகாரங்களில் விரிவாகக் காணலாம். இவை இல்லற வியலிலே அமைந்திராவிடினும், இல்வாழ்வானுக்காகவே எழுதப்பட்டவை என்பது நன்கு உணரப்படும்.

ஒருவன், எந்த வருணத்திலே பிறந்தவனாய் இருப்பினும், தான் பிறந்த குடியின் நிலையை உயர்த்திச் செழிக்கச் செய்ய வேண்டுவது அவசியம். அதிலும், இல்லறத்தானுக்கே இது முதற்கடமையாகும். இதனைக் 'குடிமை', 'குடி செயல் வகை' என்ற அதிகாரங்களில் வள்ளுவர் இனிது புகலக் காண

TAMILSANGAM

லாம். அவ் விதம் தன் குடியை உயர்த்துவதற்காகப் பாடுபடுபவனை அவன் சுற்றத்தார் சூழ்ந்து புகழ்வதோடல்லாமல், தெய்வமும், வேட்டியை இறுக்கி யிழுத்துக்கட்டிக்கொண்டு வந்து அவனுக்கு ஒத்தாசையாய் முன் நின்று உதவி புரியும் என்கிறார் திருவள்ளுவர் :

> " குடிசெயவல் என்னும ஒருவற்குத தெய்வம
> மடிதற்றுத தான்முந் துறும. "

இவ்விதம் வாழும் இல்லற வாழ்க்கை மேலா? அல்லது உலகப் பற்றினைவிட்டுத் துறவறம் மேற்கொள்வது மேலா? என்ற கேள்வி நெடுநாளாகக் கேட்கப்பட்டுவருகிறது. இதற்குத் திருவள்ளுவர் கூறும் விடை யாது? திருவள்ளுவர் விடையும் ஒரு கேள்வி உருவத்தில் மாறி நம்மிடம் வருகிறது. ஒருவன் பழியஞ்சினவனாய், அன்புடைமையையும், பகுத்துண்டலையும் மேற்கொண்டு இல்லலறம் நடத்துவானாயின், அவன் அவ்வறத்தால் பெறமுடியாததாய்த் துறவற நெறியிற் சென்று பெறக்கூடியது வேறு யாது உளது? அவன் துறவற நெறியிற் புகுந்து பெறக்கூடியதை யெல்லாம் இல்லறத்தின் வழியாகவே எளிதில் அடைந்துவிடலாம் என்பதுதான் இதன் கருத்து :

> " அறததாற்றின் இல்வாழக்கை ஆற்றிற் புறததாற்றிற்
> போஒய்ப பெறுவ(து) எவன ?"

ஒன்றுமில்லை என்பதே இதன் விடை. இது மட்டுமா? உலக இன்பங்களை யெல்லாம் வெறுத்து, உடலினை வருத்திப் புலன்களை விடமுயல்வார் எல்லாரையும்விட, உலக இன்பங்களை இகழாது நுகர்ந்துகொண்டே, இல்வாழ்க்கையை அதற்குரிய இயல்போடுங் கூடி நடத்துபவன் மேலானவனே யாவான் அல்லனோ? இதனையும் வள்ளுவர் கூறியுள்ளார் :—

> " இயலபினுன் இல்வாழ்கை வாழ்பவன என்பான்
> முயலவாருள் எல்லாம தலை "

தவ வலிமையை உடையவர்களுடைய ஆற்றல், அல்லது வலிமை, அல்லது சிறப்பு யாதென்றால், தம்மையுற்ற பசியைப் பொறுத்தல். இல்வாழ்வானுடைய ஆற்றல் அல்லது சிறப்பு யாதென்றால், பிறர் பசியைப் போக்குதல். பிறர் பசியைப் போக்கத் தவம் செய்வோரால் இயலாது; தம் பசியைத் தாங்கு

வதே அவர்களுக்குப் பெரும்பாடாய் முடியும். ஆகவே, தாமும் பசித்துப் பிறர் பசியையும் போக்க மாட்டாதவர்கள் துறவி கள். இல்லறத்தாரோ என்றால், தாமும் பசியாது, பிறர் பசியை யும், ஏன் அத் துறவிகளின் பசியையுங்கூட, தீர்த்துவைக்கும் ஆற்றல் பெற்றவர்கள். ஆதலால், துறவறத்தாரைவிட இல் லறத்தாரே சிறப்பு உடையவர்கள் என்பது நன்கு துணியப் படும் அல்லவா? இதனைத் திருவள்ளுவரும்,

"ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலிற் பின"

என்று கூறியுள்ளார்.

ஆதலால், துறவறத்தார்களும் இல்லறத்தாரின் உதவியை நாடியே தம் நிலையையும் உயிரையும் காப்பாற்ற வேண்டி யிருக்கிறது என்பது சொல்லாமலே பெறப்படும். இவ்வாறு, தவம் செய்வாரையும் அவரவர்கள் நெறியிலே தயங்காது நின்று ஒழுகப்பண்ணித் தாமும் தம்முடைய அறத்தில் தவறாத இல்வாழ்க்கையை உடையார் அத் துறவிகளின் நிலையைவிட மிகப் பெரியதொரு பொறுப்பைத் தாங்கி நடத்தும் பெருமை யும் சிறப்பும் உடையாரே யாவர்.

"ஆற்றின் ஒழுக்கி அறன்இழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து."

இத் தகைய காரணங்களால், இல்லறம் துறவறம் என்ற இருவகை அறத்தினும், நூல்களாலும் மற்றும் அறிந்தோ ராலும் அறன்என்று சிறப்பித்துச்சொல்லப்படுவது இல்லறமே என்று முடிவு கட்டுகிறார் திருவள்ளுவர். துறவறம், மனத்தை யும் பொறிகளையும் ஒறுத்தடக்கவல்ல அருமைப்பாடுடையது. துறவற நெறியில், பிறர் குற்றம் குறை கூறாதபடி நடந்துகொள் வது மிகக் கடினம். அவ்வாறு பிறரால் பழிக்கப்படாதபடி பெரிதும் வருந்தி ஒருவகையாகத் துறவறத்தை நடத்த முடியு மானால், ஐம்புல இன்பங்களை ஆரத்துய்த்து எளிதில் நடத்தக் கூடிய இல்லறத்தோடு ஒருபடித்தாக வைத்து அதனை எண்ணலாம் என்கிறார் திருவள்ளுவர் :

"அறன்எனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்ப தில்லாயின் நன்று."

இத் தகைய சிறப்பு வாய்ந்த இல்வாழ்க்கையைப் பிறர் பழிப்புக்கு இடம் கொடாமல் நடத்தினால் எவ்வளவு நன்றாக இருக்கும்!

# திருவள்ளுவரும் துறவறமும்

## தெய்வசிகாமணி அருணாசல தேசிகர்

"அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்ப தில்லாயின் நன்று"

*என்று திருக்குறளிலே ஒரு குறள் உள்ளது. இதை வைத்துக்கொண்டு பலர் திருவள்ளுவர் இல்லறத்தையே உயர்வாகக் கூறினர் என்றும், இல்லறமே உயர்ந்தது என்றும் பேசுகின்றனர். அவர்கள் கூறுவதற்கு ஏற்றாற்போல் உரை காணவந்த பரிமேலழகரும், 'அஃதும்' என்பது, ஏனைத் துறவறத்தைக் குறிக்கும், என்று கூறிப்போந்துள்ளார். "நூல்களால் சிறப்பித்துக் கூறப்படுவது இல்லறமே" என்றும், "ஏனைத் துறவறம் பிறரால் பழிக்கப்படாத நிலையில் கண்டப்பிடிக்கப் படுமாஞல் இல்லறத்தோடு ஒப்பிட்டுக் கூறத்தக்க நன்மை யுடையது" என்றும் அவர் அக் குறளுக்குப் பொருள் கண் டிருக்கிருர்.*

*அவர் கூறிய உரை சரிதான என்றும், வள்ளுவர் இல்லறத் திற்கு அதிக உயர்வு கொடுத்திருக்கிருரா அல்லது துறவறத் திற்கு அதிக உயர்வு கொடுத்திருக்கிருரா என்றும் நாம் சற்று ஆராய்வோம்.*

*திருவள்ளுவர்-இல்லறவியல், துறவறவியல் என இரண்டு இயல்களைத் தனித்தனியாக வகுத்திருக்கிருர். எதை எடுத்துக் கொண்டாலும், எடுத்துக் கொண்டதைமட்டிலுமே கூறும் ஒழுங்கும், முறையான அதிகார வரிசையும் தவருத வள்ளுவர்,*

இல்லறவியலில் இல்வாழ்க்கையைப்பற்றிக் கூறும்பொழுது, 'அஃதும்' என்று சொல்லுகின்ற சொல் ஏனைத் துறவறத்தைக் குறிக்கும் என்று வலிந்து பொருள்கொண்டது விந்தையினும் விந்தையாக இருக்கிறது. இல்லறத்தைவிடத் துறவறம் தாழ்வுடையது என்று திருவள்ளுவர் கருதியிருப்பாராஞல், பாயிர இயலில் கடவுளைப் பேசிய நாவால், அடுத்தாற்போல் நீத்தார் பெருமையைப் பேசி இருக்கமாட்டார். அதிகார வரிசையை அமைப்பதில்கூட மிகுந்த கருத்துச் செலுத்தித் தொடர்புற அமைத்திருக்கும் திருவள்ளுவரின் நுண்ணிய புலமையை மனத்தில் வைத்துச் சிந்தித்துப் பார்த்தால்,நீத்தார் பெருமை பேசியது துறவற உயர்வுகருதியே என்பது நன்கு விளங்கும்.

திருவள்ளுவர் 'அஃதும்' என்று கூறியது இல்லறத்தையே அன்றித் துறவறத்தை அன்று. "அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை"என்ற குறளுக்கு "இல்லறமும் பெயரளவில் நல்லது தான்; அவ் வறமும் பிறரால் பழிக்கப்படாத நிலையில் நடத்தப் படின் நன்று" என்பதே பொருளாயிருக்க வேண்டும். 'அஃதும்' என்பதற்கு அந்த இல்லறமும் என்று பொருள் கொள்ள வேண்டுமே யன்றித் துறவறத்தில் நுழைதல் கூடாது.

பிறர் பழிக்க இயலாவண்ணம் துறவற நிலையில் நிற்க வேண்டு மென்பதைத் திருவள்ளுவர் துறவறவியலில்,

" மழிததலும நீட்டலும வேணடா உலகம்
பழிததது ஒழிதது விடின்"

என்று கூறியிருப்பதால், அதே கருத்தை முதலிலும் சொன்ஞரென்பது தவருகும். கூறியது கூறும் பழக்கம் திருவள்ளுவரிடம் இல்லவேயில்லை ஆதலால், "அஃதும் பிறன்பழிப்பதில்லாயின் நன்று" என்பது பிறர் பழிக்காவண்ணம் இல்லற வழி நிற்கவேண்டும் என்பதை வற்புறுத்தக் கூறியதேயாகும்.

திருவள்ளுவர் துறவறத்தைப் பற்றிப் பேசும்போதெல்லாம் மிகவும் அழுத்தமாகப் பேசுகிருர்.

"இருமை வகைதெரிந்து ஈண்டறம் பூண்டார் பெருமை பிறங்கிற்று உலகு" என்று நீத்தார்பெருமையில் துறவறப்பெருமையை அவர் வானளவ உயர்த்திவிட்டார்.

திருவள்ளுவர் இல்லறத்தார்க்கு வீட்டின்பம் இல்லை என்று சொல்லுவார்போல் ஓர் இடத்தில் சொல்லுகிறார்:

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"

என்று அவர் கூறும்பொழுது, 'இல்லறத்தினருக்குத் தேவ வாழ்க்கைதான் கூறப்படுகிறது. துறவு நிலையைச் சொல்லும் பொழுதோ, திருவள்ளுவர்,

"யானெனை தென்னும செருக்கறுப்பான் வானோர்கு
உயர்ந்த உலகம் புகும்"

என்று அழுத்தமாகவும் வெளிப்படையாகவும் கூறியுள்ளார்.

இல்லறத்தானை "வானுறையும் தெய்வத்துள் வைக்கப் படும்" என்று சொல்லியவர், துறவிகள் வானோர்க்கும் உயர்ந்த உலகம் புகுவர் என்று கூறுவது ஈண்டு நோக்கத்தக்கது. இவற்றைப் பார்க்கும்பொழுது, திருவள்ளுவர் துறவியாக இருந்து துறவின் பெருமை உணர்ந்துதான் இவ் விதம் சொன்னாரோ என்று எண்ணக்கூடத்தோன்றுகிறது. திருவள்ளுவர், முதலில் ஒழுக்கத்தைப் பற்றிப் பேசினார்; பின்னர், சிலர் துறக்காமலிருக்கின்றாரே, அஃது எதற்காக என்று கேட்டார். வேலை செய்கின்றவன் உயர்ந்தவனா, வேலை வாங்குகின்றவன் உயர்ந்தவனா என்று ஆராய்ந்தால், வேலை வாங்குவோன்தானே உயர்ந்தவன்? அது போலத் துறவு உயர்ந்ததா, துறக்காமலிருப்பது உயர்ந்ததா என்ற கேள்விக்குத் துறவோர்க்குத் தொண்டு செய்வதற்காகவே ஏனையோர் துறக்காமலிருக்கின்றார்கள் என்று திருவள்ளுவர் கூறிய கூற்றிலிருந்து பதில் கிடைக்கிறது.

இல்லறத்தில் நின்று அறத்துடன் வாழ்தல் எளிது. ஆனால், துறவறத்தில் அவ்விதம் வாழ்தல் மிகக் கடினம், இல்லறத்தில் தவறிவிட்டாலும் மன்னிப்புண்டு; துறவறத்தில் தவறிவிட்டால் மன்னிப்பில்லை. துறவுநிலையிலுள்ளவன் கரடு முரடான மலையில் சென்றே வெற்றி காணவேண்டும். அதனால்தான், இல்லறத்தை அறமென்ற ஒரு சொல்லால் பாராட்டிய திருவள்ளுவர், (அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை) துறவறத்தைப் பாராட்ட அஃதேபோல் ஒரு சொல்கிடைக்காமல், துறந்தார் நிலை, சொல்லுக்கும் சிந்தனைக்கும் அப்பாற்பட்ட தென்கிறார்:

"துறந்தார் பெருமை துணைககூறின் வையதது
இறந்தாரை எணணிககொண டற்று"

என்று அவர் கூறியது துறவின் பெருமையை யன்றோ காட்டுகின்றது!

இனி, இல்லறத்திலிருந்து பின்னர்த் துறவறத்திற்கு வருந் தன்மையைப் பற்றித் திருவள்ளுவர் ஏதேனும் கூறியிருக்கிறாரா என்று சற்று ஆராய்வோம். இல்லறத்தில் நின்று ஒழுகாமல், நேரடியாகத் துறவறத்தை மேற்கொள்வதே துறவறத்திற் குரிய நெறியென்று திருக்குறளிலிருந்து நாம் அறிய முடிகின்றது. இல்லறத்துக்குப்பின் துறவறம் பூணுதல் என்னும் வழக்கம்,.வேறு எந்த நாட்டில் வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனால், இல்லறம் செல்லாமலே துறவறம் பூணும் நெறிதான் துறவறம் என்று நம் நாட்டில் கருதப்பட்டிருக்கின்றது. திருவள்ளுவர் கருத்தும் ஈதாயிருப்பதால்தான், அவர் துறவறத்தைப்பற்றிக் கூறத்தொடங்கியதும், கூடாவொழுக்கம் என்று ஓர் அதிகாரம் கூறுகின்றார். இல்லறத்திலிருந்து துறவறத்திற்கு வரும் வழக்கம் உண்டென்றால், அவ் விதம் வருபவன் யாவற்றையும் அனுபவித்துச் சலித்து வெறுத்து ஒதுக்கித்தானே துறவறத்திற்கு வந்திருக்கவேண்டும்? அவனுக்குக் கூடாவொழுக்கத்தைப் பற்றிப் போதிக்கவேண்டுமோ ? இல்லறத்தினின்று ஒழுகாமல் நேராகத் துறவறத்தை மேற்கொண்ட ஒருவனுக்குத் தான் காணாத இல்லறவின்பத்தில் சபலமும் வேட்கையும் உண்டாகலாம். ஆதலால், அவர்களுக்குக் கூடாவொழுக்கத்தைப்பற்றிக் கூறி எச்சரிக்கவேண்டுவது இன்றியமையாததாகிறது.

இதுவரை யாம் கூறியவற்றால் திருவள்ளுவர் இல்லறத்தை விடத் துறவறமே பெருமையுடையதெனக் கொண்டாரென்பதும், இல்லறத்தில் நின்று ஒழுகாமலே துறவறத்தை மேற்கொள்வதுதான் பண்டைய வழக்கம் என்பதும் பெறப்படும்.

# வள்ளுவரும் சொல்லாட்சியும்

**எஸ். மகராஜன்**

"என்றுமுள தென்தமிழ் இயம்பி இசை கொண்டான்" என்று அகத்தியரைப் பாராட்டுகிறார் கம்பர். ஆனால், அகத்தியர் செய்த நூல் ஒன்றாவது நமக்குக் கிடைக்கவில்லை. அவர் தமிழுக்குச் செய்த தொண்டு என்னவென்று கணிப்பதற்கோ, நேரடியான ஆதாரம் ஒன்றும் இல்லை.

வள்ளுவரைப் பற்றி இப்படியெல்லாம் சந்தேகிக்க வேண்டும் அவசியமில்லை. அவர் தமிழ் மொழியின் தந்தை. அவர் தமிழ் மொழிக்கு என்ன சேவை செய்திருக்கிறார் என்பதற்குத் திருக்குறள் முழுவதுமே சாட்சி சொல்லிக்கொண்டு நிற்கிறது. அவருடைய உள்ளத்திலே நிகழ்ந்த மகத்தான அனுபவங்களை நேரடியாகக் கண்டு ஆனந்தித்த வார்த்தைகள் இன்றும் உயிரோடு இருக்கின்றன. இருப்பது மாத்திரமல்ல; "வள்ளுவருக்கு இன்னின்ன அனுபவங்கள் ஏற்படும்போது நாங்கள் அவருடைய உள்ளத்திலிருந்தோம்; நேரடியாக அந்த அனுபவங்களைக் கண்டோம்" என்று பறை சாற்றிக் கொண்டிருக்கின்றன அந்த வார்த்தைகள். அவைகள் சொல்லும் வாக்குமூலத்தை வைத்து, வள்ளுவர் தமிழுக்குச் செய்த சேவை என்ன என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னால் நாம் நிர்ணயம் செய்யமுடிகிறது.

வள்ளுவர் என்ன செய்தார்? தமிழுக்கு அற்புதமான குறளைக் கொடுத்தார்; தமிழருக்கு நடை பழக்கினார்; தமிழ்ச் சொல்லுக்குத் தெளிவும், ஒளியும் கொடுத்தார்; வேகமும், அர்த்த புஷ்டியும் தந்தார்.

மின்சாரக் கம்பி இவ்வளவு "லோட்"தான் தாங்கும் என்று ஒரு கணக்குண்டு: தமிழ்ச் சொல்லுக்கும் இவ்வளவு பாரம்தான் தாங்கலாம்; இவ்வளவு வேகம்தான் ஏற்றுக் கொள்ளலாம் என்று ஒரு வரம்புண்டு.

சாதாரணமாக, நாம் தமிழ்ச் சொல்லைப் பிரயோகிக்கும் போது கால் வேகம், அரைக்கால் வேகம்தான் கொடுக்க முடியும். கம்பரைப் போன்ற மகாகவிகள் முழுவேகத்தோடு பேசும்படி செய்வார்கள். ஆனால், வள்ளுவர் கையிலே ஒன்றேகால் வேகத்தோடு தமிழ்ச் சொல் பேசுகிறது; ஏது, அர்த்தபாரம் பொறுக்கமாட்டாமல் சொல்லின் இடை நொடிந்துவிடுமோ, வார்த்தை சப்பழிந்து போகுமோ, மூச்சு விட்டுவிடுமோ என்ற பயம் ஒவ்வொரு குறளையும் படிக்கும் போதும் நமக்கு ஏற்படுகிறது. அவ்வளவு அசாதாரண மான, அமானுஷ்யமான சொல்லாட்சித் திறமை அவரிடத்தி லிருக்கிறது.

வைர வியாபாரி, வைரத்தை நவநவமான கோணங் களிலிருந்து பார்ப்பான்; பூதக் கண்ணாடியை வைத்துப் பார்ப்பான்; எந்தக் கோணத்திலிருந்து பார்த்தால், "டால்" அதிகமாக அடிக்கும்; எந்தக் கட்டுமானம் கொடுத்தால், அதன் முழு ஒளியையும் வெளிப்படுத்தலாம் என்றெல்லாம் ஆராய்ச்சி செய்வான். அதே முறையிலே தமிழ்ச் சொல்லை ஆராய்ச்சி செய்தவர் வள்ளுவர்.

அவருடைய சாந்நித்தியத்திலே, கட்டுக்கடங்காது, திமிறி அலைந்த வார்த்தைகள் எல்லாம், பயபக்தியோடு கை கட்டி, வாய் புதைத்து, தலை குனிந்து அவருடைய ஏவலாட்களாகப் பணி புரிந்தன.

இந்தச் சாதனையை அவர் எவ்வாறு கற்றுக்கொண்டார்? ஒவ்வொரு சொல்லுக்கும் அத்துக்கட்டி, அதன் அதிகாரம் இவ்வளவுதான் என்று முடிவு கட்டினார்.

> "சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
> வெல்லும்சொல் இன்மை யறிநது."

கருத்தைச் சொல் மூலமாக வெளியிடுவதற்கு முன்னால், என்ன செய்ய வேண்டுமாம்? அந்தக் கருத்தைச் சொல்லத்

தெரிந்த,கிட்டத்தட்ட சம அர்த்தமுள்ள வார்த்தைகள் எல்லாம் நம் மனத்தகத்தே வந்து அணி வகுத்து நிற்கவேண்டும். நினைத்ததை நினைத்தபடி சொல்ல ஏலாத வார்த்தைகளை யெல்லாம் ஒதுக்கித் தள்ளிவிடவேண்டும். மிஞ்சி நிற்கிற வார்த்தைகளை ஒன்றோடொன்று மோதவிட்டு, எது இதர வார்த்தைகளை வென்று வெற்றி பெறுகிறதோ, அந்த வார்த்தையைத்தான் சொல்லவேண்டும் என்றார்.

"சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லும்சொல் இன்மை யறிந்து"

இந்த முறை யோகாப்பியாசத்தோடு சேர்ந்தது. நமக்குக் கோபம் வருகிறது; வெறி ஏறிக்கொண்டே போகிறது. உடனே நிதானமில்லாமல் வார்த்தைகளைக் கொட்ட ஆரம்பிக்கிறோம். ஆனால், குறளாசிரியர் என்ன செய்யச் சொல்லுகிறார்? நிதானத்தோடு தராசை எடுத்து, வார்த்தையை எடைபோட்டு, சமயத்துக்கேற்ற பதம் என்ன என்று நிர்ணயம் செய்து, அதன் பின்தான் வார்த்தையைச் செலவழிக்க வேண்டும் என்று சொல்லுகிறார். இப்படியெல்லாம் நிதானிக்க ஆரம்பித்தவுடனேயே கோபம் பறந்துவிடுகிறது.

சிந்தனைக்கும் சொல்லுக்கும் நெருங்கிய தொந்தம் இருக்கிறது. சிந்தனை, சொல்லைப் பாதிப்பதுபோல், சொல் சிந்தனையைப் பாதிக்கிறது. இந்த மர்மத்தை உணர்ந்த வள்ளுவர், கல்லை வணங்குவதற்குப் பதில், சொல்லையே வணங்கலாம் என்று ஒரு புதுச் சமயத்தை நிலைநாட்டுகிறார்.

"திறனறிந்து சொல்லுக சொல்லை அறனும
பொருளும அதனினூங் கில"

என்பது குறள். புருஷ தர்மம் என்றால், ஒன்றுதானிருக்கிறது. புருஷ லக்ஷியமும் ஒன்றே ஒன்றுதான். சொல்லைத் திறன் அறிந்து சொல்லவேண்டும்; இதை மாத்திரம் கற்றுக் கொண்டால், வேறு தர்மத்தைப் பற்றியோ, லக்ஷியத்தைப் பற்றியோ மனிதன் கவலைப்பட வேண்டுவதேயில்லை என்று சொன்னார். சொல்லிலே தெளிவு ஏற்பட்டால், மனசிலே தெளிவு ஏற்படும்; மனசிலே தெளிவிருந்தால், நடத்தையிலே தெளிவிருக்கும்; ஆகவே, திறனறிந்து சொல்லுக சொல்லை-

17

மார்க்கஸ் அரீலியல் என்ற ரோமன் தத்துவ ஞானியும் பேச்சில் நிதானம் வேண்டும் என்று வற்புறுத்திவந்தார். ஆனல், அவர்கூட, அதுதான் மகோன்னதமான அறம், அதுதான் பொருள், அதுவே மனித லக்ஷியம் என்று இவ்வளவு துணிச்சலோடு சொல்லவில்லை. இந்தப் பேருண்மையைக் கண்டு, ஸ்வானுபவத்தோடு எடுத்துச் சொன்னவர், உலக இலக்கியத்திலேயே வள்ளுவர் ஒருவர்தாம் என்று கூடச் சொல்லலாம்.

John Drinkwater என்ற ஆங்கிலக் கவிஞர் சொன்னர் :

"It is the custom of poets to lead us to the brink of silence and to do so by means of intelligible speech."

கவிஞர்கள் என்ன செய்கிறர்கள்? நாதக் குதிரை மேலே நம்மை ஏற்றி ஒரு தட்டுத் தட்டுகிறர்கள்; அது நம்மை மோன வரம்புக்கே இழுத்துச் சென்றுவிடுகிறது. இதைத்தான் தாயுமானவர் "நாதாந்த மோனமே" என்று சொன்னர். நாதத்தின் அந்தத்திலே இருக்கிறது மோனநிலே. அந்த மோன நிலேயே உண்மை நிலே.

எங்கும் வியாபித்திருக்கிறது பரதத்துவம்; அதிலே ஓர் அசைவு ஏற்பட்டது—நாத அசைவு. அதிலிருந்து தோன்றியதுதான் உலகம் எல்லாம். ஆகவே, அந்தப் பரதத்துவத்தின் மோன நிலேக்குச் செல்லவேண்டும் என்று நினைக்கும் கவிஞர்கள் நாதத்தின் துணையை நாடுகிறர்கள், வள்ளுவரைப்போல.

மோனநிலே யிருக்கட்டும். லௌகிகத்திலுங்கூடச் சொல் திறனுக்கு எவ்வளவோ பலனிருக்கிறது. நீதி மன்றத்திலிருந்து பார்த்தால்தான், சொல்லுக்கு இவ்வளவு விலேயுண்டா என்பது தெரியவரும். சுமார் எழுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னல், ஆங்கிலேயரால் நிர்மாணிக்கப்பட்ட சட்டம் Indian Evidence Act; வாழ்க்கையிலே ஏற்படுகிற எந்த விதமான சிக்கல்களுக்கும், சந்தர்ப்பங்களுக்கும் நுணுக்கத்தோடு ஜவாப்

கொடுக்கக்கூடிய சட்டம் அது. இத்தனை வருஷங்களாகியும் அதிலே ஒரு வார்த்தையைக்கூட, ஒரு 'காமாவை' க்கூடச் சீர்திருத்த வேண்டும் அவசியம் இதுவரை ஏற்படவில்லை. திருக்குறளைப்போல், துல்லியமும், தொய்வும், சமய சந்தர்ப்பங்களுக்கு ஏற்றவாறு வளைந்து கொடுக்கும் தன்மையும் அந்தச் சட்டத்துக் கிருக்கிறது.

ஆனால், நம்மவர்கள் நேற்றுப் போட்ட சட்டத்திலே ஆயிரம் சீர்திருத்தம் தினம்தினம் செய்ய வேண்டியிருக்கிறது. ஒவ்வொரு பிரிவிலும் நூறு பீத்தல்; எவ்வளவு அக்கிரமம் செய்கிறவனும், அந்தப் பீத்தல் வழியாகச் சட்டத்துக்குப் பாய்ச்சல் காட்டி, தப்பியோடி, மறைந்து கொள்ள முடிகிறது. சென்னை விவசாயக் கடன் நிவாரணச் சட்டம் ஒன்றைப் போட்டார்கள்: அது வக்கீல்கள் கையிலும், நீதிபதிகள் கையிலும் அகப்பட்டுப் படுகிற பாட்டைச் சொல்லி முடியாது. ஏன்?

"சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லுமசொல் இன்மை யறிநது"

என்ற உண்மையைக் கொஞ்சமும் பழகாதவர்கள் சட்டம் போட ஆரம்பிக்கும்போது, இத்தனை அலங்கோலமும் ஏற்படுகிறது.

"சொல்லைத்தான் ஆளத் தெரியவில்லை. சொல்லாமலிருக்கவாவது கற்றுக் கொள்" என்று எச்சரிக்கிறார் வள்ளுவர்:

" கல்லா தவரும் நனிநலலர் கற்றார்முன்
சொல்லா திருககப் பெறின்."

"கற்றவர்கள் பலர் கூடியிருக்கும் இந்தச் சபையிலே, மூன்று மணி நேரம் உன் ஊத்தை வாயைத் திறக்காமலிருந்தாயே! பலே?" என்று தட்டிக்கொடுக்கிறார், ஒரு கல்லாதவனைப் பார்த்து. அவனுக்குச் சும்மா இருக்க முடியாது; ஏதாவது 'ராபணா' என்றாவது சொல்லி, ரஸாபாஸப்படுத்தினால்தான், அவனுடைய அந்தராத்மாவுக்குச் சாந்தி ஏற்படும். அவன்

னுக்கு அப்படித் துடித்துக்கொண்டேயிருக்கும். அதற்குக் கடிவாளம் போட்டு அடக்கிவிட்டானேயானால், அதுவே ஒரு பெரும்பேறு. பெரிய புத்திசாலியாகிவிட்டான் என்பதற்கு அஃது ஒரு சான்று.

எழுத்துக் கூட்டி வாசிக்கத் தெரியாதவனுயிருப்பான்; அவன் கண்ணில் ஒரு பிரசங்கமேடை தென்பட்டுவிட்டதோ, ஆபத்துத்தான். அதைக் கண்டவுடனே அவனுக்குக் காதல் தலைக்கேறிவிடும்; தொண்டையைக் கிழித்துக்கொண்டு கத்தினுலொழியக் காமம் தீராது. வள்ளுவர் காலத்தில்கூட இப்பேர்ப்பட்ட காமுகர்கள் இருந்திருக்கிறுர்கள். அவர்களைப் பார்த்துப் பெருமூச்சு விடுவார் வள்ளுவர். பெருமூச்சிலிருந்து பிறக்கிறது கீழ்க்கண்ட குறள் :

"பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற
சிலசொல்லல் தேற்ரு தவா."

'மன்ற' என்ருல் "ரொம்ப ரொம்ப" என்று அர்த்தம்.

இந்த ஐந்துக்களைக்கூட மன்னித்து விடுவார் வள்ளுவர். விருதாப் பேச்சுப் பேசுகிறவர்களைக் காணும்போதுதான் குறளாசிரியர் சீறி விழவே ஆரம்பித்துவிடுகிருர். "வெற்று வார்த்தை, பயனில்லாத வார்த்தையைச் சொல்லாதே. கெடுதியுள்ள வார்த்தையையாவது சொல்லித் தொலை; பயனில் சொல் பேசாதே. நீ பேசினுலும், பயனில் சொல் சொல்லுகிறவனைப் பாராட்டாமலாவது இரு" என்று இடித்துச் சொல்லுகிருர் :

"பயனில்சொல் பாராட்டு வானை மகன்எனல
மக்கட் பதடி எனல்."

அவனை மனித சமுதாயத்தின் பதர் என்று சொல்லுவதற்குப் பதில், மரியாதைக்காக, அவனையும் மனிதன் என்று சொல்லிக்கொள்ளுகிருேம். இந்தக் குறளில் எவ்வளவு கசப்பு இருக்கிறது! எவ்வளவு காரம்! இந்தக் குறளை எழுதும்படி தூண்டிய நாகரிகம் எவ்வளவு சிக்கலுள்ளதாகவும் முறுக்கேறியதாகவும் இருந்திருக்க வேண்டும்! இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, தமிழ் நாட்டின் பொதுவாழ்க்கையிலே அபத்தம் ஏறிப்போயிருந்தது. இதை யெல்லாம்

பார்த்தார் வள்ளுவர். தமிழனுடைய பண்பாட்டுக்கே பங்கம் வந்துவிடுமோ என்று பயந்து, "பயனில சொல்லாமை" என்று ஓர் அதிகாரமே வகுத்துவிட்டார். இந்த அதிகாரத்திலே, பத்துக் குறள், ஒவ்வொன்றும் பயனில் சொல்லைப் பழித்துக் கூறும் குறள். வள்ளுவர் காலத்திலேயே தமிழர் வாழ்க்கையிலே சூதும், வாதும், பொய்யும், புலையும், அதோடு உயர்ந்த பண்பாடும், கருணையும் பின்னிக்கிடந்தன - ஒளியும், நிழலும் போல. தற்கால France எவ்வளவு உயர்ந்த பண்பாட்டோடும், திருகுமுறுகலாகவும் விளங்குகிறதோ, அவ்வளவு பண்பாடு, அவ்வளவு திருகுமுறுகல் தமிழ் நாட்டிலிருந்தது, இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன். நாட்டிலே நிலவும் வார்த்தைப் படாடோபத்தைத் தாங்க முடியவில்லை வள்ளுவருக்கு. பெரும் பயனில்லாத சொல்லைச் சொல்லுவதில்லை என்று விரதம் பூண்டார். அவர் நோன்பிருந்த கதையை ஒவ்வொரு குறளும் எடுத்துச் சொல்லுகிறது.

வள்ளுவரின் ஆழமான அனுபவங்களை, விஸ்தாரமாகவும் அலங்காரமாகவும் எடுத்துச் சொல்வதற்குத் தமிழில் விருத்தம் வெண்பா முதலிய அற்புதமான பாவினங்கள் இருந்தன.

வள்ளுவரைப் போன்ற சிறந்த கவிஞன், வெண்பா அல்லது விருத்தப் பாவினுள்ளே பூர்ண சுதந்திரத்தோடு நடமாடலாம். ஒவ்வொரு விருத்தத்திலும் நான்கு வரிகள் : ஒவ்வொரு வரியிலும் எத்தனையோ சீர்கள் : எதுகை மோனைகள் கவரி வீச, நீண்டு விரிந்த சீர்கள் அணிவகுத்து நிற்க, உணர்ச்சி பாவத்தோடு தமிழ்ச் சொற்கள் நடனமாட, கவிஞன், ராஜ கம்பீரத்தோடு, நான்கு வீதிகளும் சுற்றிப் பவனிவரலாம்; நிற்கவேண்டிய இடங்களில் நின்றும், துரித வேளைகளில் துரிதமாகச் சென்றும் காட்சி கொடுக்கலாம். இந்த வசதிகளையெல்லாம் ஒதுக்கித் தள்ளிவிட்டு, வளமான பாவினங்களையெல்லாம் துறந்து, ஒன்றேமுக்காலடிக் குறள் ஊசியின் முனையிலே, ஒற்றைக் காலில் நின்று காட்சி கொடுக்கிறார், தியாக மூர்த்தியான வள்ளுவர். இவ்வளவு கட்டுப்பாடும், துன்பமும், அடக்கமும் தேவையா ? என்றுகூட நாம் வள்ளுவரைப் பார்த்து அனுதாபப்படுகிறோம்.

*ஆனால், வள்ளுவர் மெய்யுணர்வு பெற்ற ஞானி; கட்டுப்பாட்டின்மூலம்தான் மனிதன் உண்மையான வல்லமையைப் பெறலாம் என்று தெரிந்தவர். சொல்லினால் செய்த தவம், அவருக்கு மாத்திரமன்று, தமிழ் மொழிக்கே என்றுமில்லாத சொல்லாட்சித் திறமையைக் கொடுத்துவிட்டது.*

"கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட்ட வர்க்கு."

# தெள்ளியர் என்பார் யார்?

ஈ. த. இராசேசுவரி

"எப்பொருள் யாாயார்வாய்க் கேட்பினும அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு."

"காலத்துக்கு ஏற்ற கோலம்" என்பது ஒரு பழமொழி. உலக மாறுதலைக் கண்டு வியப்படையாத மனிதர் இல்லை. இன்று என்ன என்ன அற்புதம்! என்ன என்ன விநோதம்! வாழ்க்கையில் எவ்வளவு மாறுதல்! ஆனால், மனிதன், உறுப்பு அளவிலே ஏதாவது ஒரு சிறு மாற்றமேனும் அடைந்தானா என்று பார்த்தால், ஆதி மனிதனுக்கும் இன்றைய மனிதனுக்கும் அவ்வாறு யாதொரு வேற்றுமையும் காணோம். மனித வளர்ச்சி, அவன் நாகரிகத்தையும் அவன் பண்பாட்டையும் ஒட்டி இருக்கிறது. அஃது அவன் பெற்ற கல்வியைப் பொறுத்திருக்கும்.

எனவே, உலகில், காலத்துக்கு ஏற்றபடி கல்வியும் கல்வி முறைகளும் எழுகின்றன. பண்டைக் காலத்தில் குருவினுடைய வார்த்தையே வேதம் எனக் கருதிய மாணவன், குருவின் உபதேசத்தை மனப்பாடம் செய்து, என்றும் மறவாது ஜபித்துக் கொண்டிருந்தான். பண்டையோர், அறிந்தவற்றைக் கொண்டு வாழ்ந்தால் போதும் என்றபோது, இவ்வாறு உருப்போடுதலே நல்ல கல்வி முறையாயிற்று. உலகம் முழுவதும் ஒன்றான இந்த நாளில், புதுப்புதுப் புதுமைகள் தோன்றும் இந்த நாளில், அந்த முறை செல்லாது. புதுமைகளுக்கு ஏற்ப வாழக்கூடியபடி

நாம் மாறக்கூடிய நிலையைப் பெற்றாலன்றி வாழமுடியாது. 'குதிரைக்கு எத்தனை பல்?' என்பது பழைய கேள்வி. குதிரையின் பல்லைப்பற்றி வாழ்க்கையில் பயன்படுத்த முடியாத காலத்தில்,அவை எத்தனையானால் என்ன? ஏதோ,நூலில் பார்த்துக்கொண்டு போனால் போகிறது என்ற மனநிலை எழுந்தது. குதிரையின் பல்லை எண்ணி, அதன் பிறப்பையும், விலங்கு வளர்ப்பையும் (Evolution) ஆராயும்போது, அப்படி உருப் போட்டுப் படித்தால் போதுமா? குதிரையின் வாயைத்திறந்து எண்ணித்தான் தீரவேண்டும்!

16-ஆம் நூற்றாண்டு வரை, அப்படித் திறந்து பார்க்க ஒருவருக்கும் தோன்றவில்லை. அப்போது மனிதன், தன் நாட்டை விட்டு வெளியே சென்று, புதுப்புது உலகங்களைக் கண்டு வியந்தான்; கடல் கடந்து உலகினைச் சுற்றி வந்தான். "கற்றது கைம் மண் அளவு; கல்லாதது உலகளவு" என்பது தோன்றிற்று. கதைகள் சொல்லுவது வேறு; அங்குக் காண்பது வேறு. இதனால், நேரிற் கண்டு ஆராய்ந்து தெளியவேண்டும் என்ற எண்ணம் தோன்றிற்று. ஆராய்ச்சியினால், மனிதன், பொருள்களின் ஆழத்தையும் அகலத்தையும் எட்டிப் பார்க்கிறான். நாம் பயில்கின்ற கல்வி, பாடம் சொல்லிக்கொடுக்க அன்று. "அது கிளிப்பிள்ளை பயிலும் கல்வி" என்பதை உணர்ந்ததும், நாம் எதற்காகக் கற்க வேண்டும் என்ற கேள்வி எதிரே நிற்கிறது. அன்றாட வாழ்க்கைக்குப் பயன்பட, மனிதனுக்கு உலக வாழ்க்கையில் இன்பம்தர, மனித வாழ்வை உயர்தத- இவை போன்ற பல துறைகளில் பயன்பட நாம் கல்வி பயில வேண்டும்.

எனவே, நமது கல்வி, எந்திரம் செய்யப் பயன்படவேண்டும் என்று சொல்லும்போது, எந்திரம் செய்யும் உண்மையைப் புத்தகத்தில் படித்துத் தெரிந்துகொண்டால்மட்டும் போதுமா? நேரிற் செய்து பார்த்து அறிந்துதீர வேண்டாமா? பையன் கல்லை விளையாட்டாக மேலே வீசி எறிகிறான். அஃது அப்படியே வானத்தில் பறந்து போவதில்லை; கீழே திரும்பி வருகிறது. 'ஏன் விழுகிறது?' என்று எண்ணினார் ஒருவர்; 'பளுவாய் இருப்பதால்-குருத்துவம்' என்றனர். இதில் உண்மை

காணத் தத்துவசாத்திரம் பேசினூர் **அரிஸ்டாடில்** (Aristotle). எந்திர உலகம்-அரபிய இரசாயனம் (Chemistry) வளர்ந்த உலகம்-**ரோஜர் பேக்கன்** (Roger Bacon) வாழ்ந்த உலகம்-இந்த உலகில் **கலிலியோ** (Galileo) என்ன செய்தார்? சிறிய பளுவுள்ள பொருளையும் (பட்சி இறகு), பெரிய பளுவுள்ள பொருளையும் (பொற்காசு-கினி-Guinea), சாய்ந்த **பைசா கோபுரத்தின்** (Leaning Tower of Pisa) மேலிருந்து கீழே வீசினூர். இரண்டும் ஒன்ருகத் தரையை வந்து சேர்ந்தன. இதனுல், மேலே வீசி எறிந்த பொருள் கீழே வருவதற்குக் காரணம் அதன் பளுவன்று (weight) என்று நிரூபித்தார்.

இவருக்குப் பின் **நியூடன்** (Newton) கவர்ச்சிச் சட்டத்தினை விளக்கி வைக்க இடம் ஏற்பட்டது. இஃது ஒருநாள் வேலேயா? அல்லது, சிறிய வேலேயா? நியூடன், பல ஆண்டுகளாக விடாமுயற்சியுடன், ஒவ்வொரு கிரகத்தின் நிலேயையும் தொடர்ந்து பார்த்துக்கொண்டே போனதால் இவைகளுக்குள் உள்ள தொடர்பை அறிய முடிந்தது. பின்னர்க் கணக்கிட்டுப் பார்த்து, அந்த உண்மையைக் கண்டு சட்டமாக விளக்கிவைத்தார். இதனுல் என்ன நேரிடுகிறது? இந்தக் "கவர்ச்சிச் சட்டம் எப்படி இயங்குகிறது? இதனை எப்படி அடக்கி ஆளலாம்" என்றெல்லாம் ஆராய்ந்ததால், கவர்ச்சிச் சட்டத்தையும் எதிர்த்து இன்று ஆகாயத்தில் பறக்கிருேம். எல்லாவற்றையும் செய்துபார்த்து உண்மை காண்பதே இந் நாளைய ஆராய்ச்சி. இதன் இலக்கணம்: செய்து அறிதல், பிறகு அறிந்த உண்மைகளேக் கோவைப்படுத்துதல், அதன்பின் அதிலுள்ள உண்மை நியதி காணுதல், பின்னர்ச் சரிபார்த்தல், பின்னர் அந்த உண்மையை உலகுக்குப் பயன்படுத்தி எந்திரம் முதலியன செய்தல் என்று படிப்படியாக வளர்வதே ஆம்.

விஞ்ஞான ஆராய்ச்சி 5000 ஆண்டுகளாக நிகழ்ந்திருந்தும், அவ் வாராய்ச்சிகள் தனி மனிதர்களின் முயற்சியினுல் ஆனவை. இன்ருே, சமுதாய முழுதும் ஈடுபடுகிறது இற்றைக்குச் சுமார் 300 ஆண்டுகளுக்குமுன், உலகம் முழுவதும் எந்திரப் புரட்சி நிகழ்ந்த காலத்து, ஆராய்ச்சித் துறையில் மனிதர் ஈடுபட்டனர். இதன் பயனுகப் பல அரிய பெரிய உண்மை

கள் வெளியாயின. எண் சாண் மனிதன், உலகிடையே துரும்பைப் போல் இருப்பவன், என்ன என்ன செய்தான் ? பூமியை அளந்தான்; அதன் எடையைக் கணக்கிட்டான் ; சூரியனையும் அதனைச் சுற்றி ஓடும் மற்றக் கிரகங்களையும் இருந்தபடியே அளந்து அறிந்தான்; அதற்கு அப்பால் அண்டத்தையும் அளந்தான்; அதன் எடையையும் கணக்கிட்டான்; உயிர் வாழும்செடி மரம், புழு, மீன், விலங்கு, மனிதன் என்று வளர்ந்து வந்த வளர்ச்சியும் ஆண்டுகள கணக்கிட்டு அறிந்தான். பூமியின் வயது பலகோடி ஆண்டுகள் என்று அறுதியிட்டுத் தரை சாஸ்திர நிபுணர்கள் கூறுகிறார்கள். மனிதன் அணுவையும் பிளக்கின்றான்;இதனையும் விட்டபாடில்லை. இதன் சக்தியை, நாம் மறந்தாலும் ஜப்பானியர் மறக்க முடியுமா? கடலினுள்ளே சென்று அற்புதக் காட்சிகளைக் கண்டுமகிழ்ந்தார் டாக்டர் பீபி. மனிதன் பூமியைத் தொளைத்து, அதன் வயிற்றினையும் ஆராய்கிறான். இன்று மின்சாரம் மனிதனுடைய அடிமை. அதன் விந்தைகளையும் பேச வேண்டுமா ? வைத்திய முறையில் என்ன என்ன புது மாதிரிகள்! கண்ணையும் ஊசி கொண்டு குத்துகிறார்கள்; மூளையையும் திறந்து பழுது பார்க்கிறார்கள் மேனாட்டு வைத்தியர்கள்; இருதயத்தைக் கையில் எடுத்து ஆட்டியும் பார்க்கிறார்கள். இதனால் மனிதன் செத்தானில்லை; வாழ்கிறான்; வாழ வைக்க வந்த முறைகளேதாம் இவைகள். காண முடியாத இடத்திலிருக்கும் மைந்தனை, அவனுடைய தந்தை, தான் இருந்த இடத்திலிருந்தபடியே, வானொலிப் பெட்டி (Television) வழியே கண்டும் அவன் பேச்சைக் கேட்டும் மகிழ்கிறான். ஆராய்ச்சியினால் எழுந்த பயன் யாது? காலம், கையில் அடங்கிவிட்டது. உலகம் முழுவதனையும் 80 நாட்களில் அன்று சுற்றினார்கள் : இன்று 80 மணி நேரத்தில் சுற்றமுடியும். தேசங்கள் எல்லாம் அயல் நாடுகள் அல்லாமல், அண்டை வீடுகளாயின.

இந்தியாவில் அணை கட்டுகிறார்கள். சிமெண்டில் கட்டுவதாய் இருந்தால் கோடி கோடி ஆகும். கட்டியபோதும் சில சமயங்களில் அதில் பிளவு ஏற்படுவதுண்டு. பண நஷ்டம்-பொது மக்கள், ஏழை மக்களின் பணம் வீணாகப் போவதா ? ஆராய்ச்சி அறையிலே பொய் ஆறு சிருஷ்டிக்கப்படுகிறது.

இதே மாதிரி அணைக்கட்டும் அமைக்கப்படுகிறது. தண்ணீர் வெள்ளம் எடுத்துவரும் நிலையை விளைவித்துப் பார்க்கிறார்கள். மண்ணாலேயே அணைகட்டினால் போதும் என்பது விளங்குகிறது. ஆனால், எல்லா மண்ணும் அதற்குப் பயன்படாது என்பதும் தெரிகிறது. பல வகை மண்கொண்டு ஆராய்ந்தனர் **பவானி திட்டத்தில் (Bavani river Project)** கிடைக்கும் மண் போதும் என்பது பலவகைச் சோதனையால் தெளிவாயிற்று.

வரலாற்றிலும் இப்படி ஆராய்ச்சி வேண்டும். வெறுங் கதைகள் ஓர் உணர்ச்சியை எழுப்பக் குழந்தைப் பிராயத்தில் உள்ளவர்க்கு வேண்டும். உணர்ச்சி வந்ததும் அறிவு வளர வேண்டும். நமக்கு இன்று கிடைத்துள்ள இலக்கியக் குறிப்புக்களைக் கொண்டு தமிழர் காலத்தைச் சங்ககாலம் - பல்லவர் காலம் - தேவார காலம் - சோழர் காலம் என்று பிரிக்கலாம். கல்வெட்டுக்கள் இங்கே உதவுகின்றன. தமிழ் மொழியும் வளர்ந்துகொண்டே வருகிறது. எனவே, இலக்கணக் குறிப்புக்களைக் கொண்டும் ஆராய்ச்சிகள் செய்யலாம். "கின்று" என்ற இடைநிலையே இல்லாத காலம், "கின்று" புகுந்த காலம் - இப்படிப் பலவகையாலும் ஆராயவேண்டும். இதன்றியும் பிறநாட்டார் இங்கு வந்து தமிழ் நாட்டில் இருந்து தமிழைப் பயின்று பின்னர்ச் சில குறிப்புக்களை எழுதிவைத்துள்ளார்கள். சங்க காலத்துப் புலவர்கள் தமிழ் நாட்டுத் துறைமுகங்களைப் புனைந்து உரைப்பதும், யவன அறிஞர்கள் தங்கள் கிரேக்கமொழியில் இத் துறைமுகங்களைப்பற்றி எழுதியிருப்பதும் ஒத்திருப்பதால், இவர்கள் காலம் ஏறக்குறைய ஒன்றென்றே கூறிவிடலாம். யவனப் பேரறிஞர்கள் எழுதிய காலம் கி.மு., கி.பி. முதலாம் இரண்டாம் நூற்றாண்டுகள் எனத் தெளிவாக உலகம் அறியும். "கல் வெட்டுத்தான் முக்கியம் - இலக்கியந்தான் முக்கியம் - பிறநாட்டார் குறிப்புத்தான் முக்கியம்" என்று முரட்டுத்தனம் செய்யாமல், எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப் பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு என ஆராயவேண்டும். பல சான்றுகளும் ஒத்திருக்கின்றனவா எனக் காணவேண்டும். நாம் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என அடம் பிடிக்கக் கூடாது.

விஞ்ஞான உலகில் நேற்று அணுவைப்பற்றிக் கூறியது ஒன்று; இன்று கூறுவது வேறு. ஆதலின்,பிடிவாதம்கூடாது. உண்மை காண்பதே நோக்கமாக வேண்டும். பழைய நூல்கள்தாம் சிறந்தன: காலத்தால் பிந்திய நூல்கள்தாம் சிறந்தன அல்ல என்று கூறுவதற்கு இல்லை. ஆகையால், எல்லாவற்றிற்கும் காலம் இரண்டாயிரம் ஆண்டுகள் என்று சொல்வது தகாது. இதற்கு என ஒரு சிலர், எல்லா நூலும் சில நூறு ஆண்டுக்கு முன்தான் ·தோன்றின எனத் திடுக்கீடு ஆராய்ச்சி செய்து தங்கள் பெயரை எல்லோருக்கும் தெரியவைத்துக்கொள்கின்றனர். மேனாட்டார் செய்யும் ஆராய்ச்சியைப் பார்க்கவேண்டும். ஆனால், அங்கும் மண்டைக் கோளாறு உண்டு. இருந்தாலும் கல்வெட்டாராய்ச்சி, புதைபொருள் ஆராய்ச்சி - இவை அங்கே எவ்வளவோ முன்னேறி இருக்கின்றன. நாணயங்கள் சேர்த்து வைக்கின்ற வழக்கம் நம் பிள்ளைகளிடம் பரவக் காணோம். சங்க கால ஆராய்ச்சியிலேயே நாம் இன்று ஈடுபட்டு இருக்கிறோம். தெரிந்து தீர்த்துவைக்கக் கூடிய பலவற்றை விளக்க ஆள் காணோம். உண்மையே நாட்டமாய்க் கிடைத்ததனை விளக்க ஆள் வேண்டும்.

இலக்கிய ஆராய்ச்சியும் வேண்டும். ஏன்? தமிழில் சில நூல்கள் எல்லோராலும் மதிக்கப்பெற வில்லையா ? அவற்றின் அழகு என்ன ? இதனை ஆராய,இங்கு மேனாட்டு ஆராய்ச்சி,வழி காட்டும். ஆனாலும் அப்படியே அவற்றைக் கிளிப்பிள்ளை போல் ஒப்புவித்தலும் பலன் தராது. அரிஸ்டாடல் (Aristotle) சொன்ன முறை ஷேக்ஸ்பியர் (Shakespeare) நூலுக்குப் பொருந்தாததனைப் பார்க்கவில்லையா ? ஆகையால், மேனாட்டார் சொல்லியதனைத்தும் நம் நாட்டு நூலுக்குப் பொருந்தாமற் போகலாம். நம் இலக்கியத்தின் சிறபபியல்பினை நாம் வெளியிட வேண்டும். மேனாட்டார் அதைப் படித்துப் பயன்பெறுமாறு அதனைத் தெள்ளத் தெளிய வெளியிடவேண்டும். அனைத்தும் தமிழில் அடங்கி ஒடுங்கிக் கிடக்கின்ற பெருமையைத் தமிழன் மாத்திரம் அறிந்து பயன் என்ன ?

ஆரிய அரசன் பிரகத்தன் கபிலர் செய்த உதவியால் தமிழை ஆராய வில்லையா ? இன்று எத்தனை எத்தனை பிரகத்தர்கள் தமிழ் நாட்டில் இருக்கிறார்கள். இவர்கள் கண்களைத்

திறக்க எத்தனை கபிலர்கள்வேண்டும்? உண்மையானஆராய்ச்சி யாளர்கள் வேண்டும். ஆராய்ச்சி என்று நூலைப் படிக்காமலே நூலைப் பற்றிப் பரக்க மேடைமீது நின்று பேசுகின்ற வழக்க மும், பத்திரிகைகளில் எழுதும் வழக்கமும் அறவே ஒழிய வேண்டும். சுவைப்பதற்கே இலக்கிய விருந்து; அதனை விளக்க முடியுமானால் ஆராய்ச்சி வரலாம். அது வாராததால் இலக்கிய விருந்து கெடாது. கானல்வரிப் பாட்டைப் படித்தால் எல்லோ ருக்கும் இன்பம் உண்டாகிறது. அஃது ஏன் உண்டாகிறது என்று யோசிப்பவர் மிகச் சிலரே. காரணம் சொல்ல முடியு மானால் சொல்லுங்கள். சொல்ல முடியாதபோது கானல்வரி யையும் படியாது வெறும் பேச்சுப் பேசிப் பயன் என்ன? மாம் பழம் தின்பதே முக்கியம். "ஏன் இனிக்கின்றது?" என்று ஆராய்ச்சி செய்து முடிவுகட்ட முடியுமானால் நல்லது. உண்ணா மலே அதன் பெருமையைப் பற்றிப் பேசுவதில் பேசுவோர்க்கும் பயனில்லை; கேட்போர்க்கும் சுகமில்லை.

எனவே, இன்று நம் நாட்டிற்கு ஆராய்ச்சி இன்றியமை யாதது. நம் நாட்டவர் அயல் நாடு சென்று தமிழ் மணத்தை எங்கும் பரப்பும் காலம் நெருங்கிவிட்டது. தமிழன் விழித்து எழ வேண்டும்; குருட்டு நம்பிக்கையில் வாழலாகாது. எதையும் ஆரத் தீர ஆராய்ந்து, கேட்பவர் மனம் குளிரத்தக்க பதில் அளிக்கவேண்டும். விஞ்ஞான உலகத்தில் ஆராய்ச்சியே கடைக்கால். தமிழ் ஆராய்ச்சி வளர்க! தமிழ் வாழ்க!

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."

# வள்ளுவரும் அரசியலும்

வி. ஆர். ஆர். தீட்சிதர்

*தந்தித் தபால் இல்லாத காலத்திலே, விருப்பம் போலப் போய் வர ஊர்திகளும், பெரு வழிகளும் இல்லாத காலத்திலே, மணிக்கு 400—500 மைல் வேகத்தில் பறக்கின்ற எஃகு பறவைகள் இல்லாத காலத்திலே, இருந்த இடத்திலிருந்து தொலை தூரத்திற்கப்பாலுள்ள நண்பனொருவனோடு பேசக் கருவிகள் இல்லாத காலத்திலே, மணிக்குப் பல்லாயிரம் பிரதிகளாக அடித்து வாரி எறிகின்ற அச்சுப் பொறிகள் இல்லாத காலத்தே, இருந்த இடத்திலிருந்தே உலக நிகழ்ச்சிகளைப் பத்திரிகைகள் வாயிலாகவோ வானொலிப் பெட்டிகள் மூலமாகவோ அறிந்து தெளியக் கருவிகள் இல்லாத காலத்தே, மின்சார வசதிகளை ஒருகால் நூல்வாயிலாக வன்றிப் பிறவற்றால் அநுபவித்தறியாக் காலத்தே, நந்தமிழ் மூதாதையர் பலரும் நயக்குமாறும் திகைக்குமாறும் கோனாட்சியிற் குடியாட்சியை நிறுவி, அரசனுங் குடிகளும் வேறலராய் நடத்தி வந்த திறத்தை யெல்லாம் ஒன்றானும் விடாது ஆடியிற்போலறியத் திருக்குறளே கருவி. அதுதான் அறக்கருவூலம்; பொருட்சரக்கறை; இன்பக் களஞ்சியம்: இந் நூலையன்றி மக்கள் உறுதிப் பொருள்களை யறிதற்கான பற்றுக்கோடான பிற நூல் தமிழ் மொழியில் இல்லை; திருக்குறள் தோன்றிய காலத்தின் முன்னரும் இல்லை; பின்னரும் இல்லை. அதனைப்போல் பல நூல்களும் இல்லை. இவ் வொரு நூலே எவர்க்கும் எல்லாவற்றையும் எஞ்சாது எஞ்ஞான்றும் தருவதாயுளது.*

திருவள்ளுவர் எக் காலத்தினர்? எம் மதத்தினர்? என்னுங் கேள்விகட்கெழுந்த விடைகள் எவரையுந் திகைக்கச் செய்கின்றன. அவர் அரிசனரா? காலாட்டித் தறி யோட்டினரா? அப்பாஸல் ஸெயின்தாமஸ் ஸெயின்தொமியிற் செய்த ஏசுநாதரின் மலைப்பேச்சுக்களைக் கேட்டுக்கேட்டுப் பக்குவம் அடைந்து குறட்பாக்களை யாத்தனரா? இல்லறத்தாரா? துறவியரா? தமிழ் நாட்டுப் பெருஞ் சோதி! பேரொளி!!

ஏனிந்த மயக்கமும் தியக்கமும்! தமிழிற் பிறந்து தமிழில் வளர்ந்து, தமிழே பயின்று பிறமொழிகளை இயன்ற அளவிற் கற்றுக் கேட்டு, சாதிமதத் தளைகளை யெல்லாங் கடந்து, இறைவனடிகளையே தஞ்சமெனக் கொண்டு எந் நாட்டாரும் எம் மதத்தினரும் உச்சிமேற்கொண்டு போற்றும் அருமைத் திருக்குறளை இதுவே முதல், இதுவே இறுதியென உள்ள வெறுக்கையுடன் எழுதித்தந்து பேரொளி படைத்த பெரியார் என்பதில் தடையேது? உண்மை, அறிவு, ஆநந்தம் என்னும் மூன்றிலும் இடையறாது திளைக்கும் மாபெரும் யோகியல்லவா அவர்? பொதுவாக, இந்தியர்க்குப் பகவற்கீதை எப்படி? தம்மபாதம் புத்த மதத்தினர்க் கெப்படி? அப்படித் தமிழர்க்குத் திருக்குறள் என்னும் பெருநூல். ஏறக்குறைய கி. மு. முதல் நூற்றாண்டினெழுந்த திருக்குறளடிகளைத்தாம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டினெழுந்த சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோவடிகள் மேற்கோளாக எடுத்தாண்டார். பற்பல நூற்றாண்டுகளாகத் தமிழ் மக்களை நல்லொழுக்கிற் செலுத்தி வந்த பெருநூலிது. வள்ளுவர் முப்பாலை அறியாத தமிழர் இல்லை. அம் முப்பாலே மக்கள் உய்தி பெறுதற்கான அறம் பொருளின்பங்கள். இதுவே வடநூலார் கொண்ட திரிவர்க்கம். தர்மார்த்த காமங்களே திரிவர்க்கம் என்பன. இதனால் முப்பாலும் திரிவர்க்கமும் ஒரே பொருளைத் தருதலைத் தெளியலாம். நாட்டிலுள்ள உயிர்களையும் அவர்தம் உடைமைகளையும் பாதுகாத்தல் வேந்தன் கடனாதலின் அவற்றையும் உள்ளடக்கித் தண்ட நீதியையுஞ் சுருக்கிக் கூறினர். (குறள். அதி. 55—9, 10.) திருக்குறள் போன்ற நீதிநூல் வள்ளுவர் காலத்திற்கு முன் ஒன்றிருந்ததெனக் கூறுதற்குப் போதிய அகச் சான்றுகள் இல்லை.

திருக்குறள் மூன்று பகுப்பினையுடையதாதலின் முப்பாலென்பர்; பாயிரத்தை உள்ளிட்டு நூற்று முப்பத்து மூன்று அதிகாரங்களையுடையது. அறத்துப்பால் 38 அதிகாரங்களையுடையது. இதனைப் பாயிரம், இல்லறவியல், துறவறவியல், ஊழ் என நான்காகப் பகுத்தாரும், பாயிரத்தை நீக்கி மூன்றாகப் பகுத்தாரும் உண்டு. முதல் நான்கு அதிகாரங்களும் திருக்குறளுக்கே பாயிரமாக அமைந்துள்ளன. ஆலத்தூர் கிழாஅர் இந் நூலை அறமென்பர். அறத்துப் பாலில் ஒழுக்கம் பற்றிய அறனும், பொருட்பாலில் பொருளீட்டல் காத்தல் வகுத்தலாதிய அறனும், காமத்துப்பாலில் இன்பத்தைச் சார்ந்த அறனும் கூறப்பட்டமை தெளியலாம். அறத்துப்பாலிலுள்ள உயர்தனிக் கருத்துக்களைப்போல வேறு எந்த நூலிலும் நாம் காணமுடியாது. கட்டியொன்று கடித்த இடனெல்லாம் இனிப்பதுபோல, இன்பொருட் களஞ்சியமாய் விளங்குகின்றது. இப் பாலுள் இவை நல்ல, அவை தீய எனத் தேர்தற்கு, வள்ளுவர், எவர்க்கும் இடந்தந்திலர் என்றாலும் 71, 76, 115, 128, 156, 207, 247, 314, 341, 360, 363 என்னும் எண்ணுள்ள குறட்பாக்கள் கற்றோர் உளத்தைக் கடிதில் ஈர்த்துப் பிணிப்பனவாம்.

அடுத்த எழுபது அதிகாரங்களில் பொருளறத்தை அரசியல், அங்கவியல், ஒழிபியல் என மூவகைப் படுத்துக் கூறுகின்றார். எஞ்சிய இருபத்தைந் ததிகாரங்கள் இன்பவறன் அல்லது காமத்துப் பால். இந் நூலை உற்று நோக்குவார்க்கு வள்ளுவர் அரசியலை முதன்மையாக்கி அதனைப் பல அதிகாரங்களாற் கூறுவது தெள்ளிதின் விளங்கும். அறத்துப்பாலுள் மக்களுக்கு ஒழுக்கமும் வாய்மையும் இன்றியமையாதனவென வற்புறுத்துகின்றார். ஒழுக்கம் உயிரினும் ஓம்புதற்குரியதென்பது வள்ளுவர் கருத்து. உலகம் முன்னேற ஒழுக்கம் வேண்டும். அவ் வொழுக்கந்தானும் மன்னன் செங்கோலால் எய்தப்பெறுவதாம். மன்னன் கோல் கோடின், மக்களின் ஒழுக்கங் குன்றும். குன்றின், அரசனுமில்லை ; குடிகளுமில்லை. மன்னரும், அமைச்சரும், பிற உறுப்பினரும் தத்தம் பொறுப்புக்களையும் கடமைகளையும் உணரப் பொருட்பாலிற் பல அதிகாரங்களை வகுத்துள்ளனர். வாழ்க்கையின் உயர்வினை

அறிந்து, மக்கள், ஒழுக்கமுடையராகி, பொறுப்பினையும் கடமைகளையும் உணர்ந்து ஒப்புரவாற்றற்கென்றே வகுத்த வாய்ப்புடைப் பெருநூல் இத் திருக்குறள்; சாதிமதங் கடந்த சமரசப் பெருநோக்குடையது; எந் நாட்டிற்கும் எக் காலத்திற்கும் உரியது. பொன்னீட்டுங் கருத்து முற்றிப் பொன்னி வணக்கமே சென்னி வணக்கமென யாதாயாதமாய்ச் சூறையிற் பட்ட பஞ்சுபோல் பசையுற்று, உணர்ச்சியற்று, இரக்கம் விட்டு வஞ்சம் முற்றிப் பொய் பேசி, மெய்ம்மறந்து, பொருளீட்டிக் குவித்து, அதனை இம்மியுங் குறையாது கண்விழித்துக் காக்கும் பூதங்கள் இந் நூலைப் பயின்று பின்பற்றுமேல் அவைகளும் அடையும் நன்மைகள் பலப்பலவாம். வள்ளுவப் பெருந்தகையின் நீதிகள் உலகெலாம் ஒலிபெருக்கி வாயிலாய்ப் பரவ வேண்டும் என்னும் உணர்ச்சியில்லாதவர் யாவர்? இச் செயலால் பலர் மனப்பண்படைவர். இந் நீதிகளை அறியாது பாழ்பட்ட பல்லாயிரக் கணக்கான மூழைகட்குத் திருக்குறளைப்போல் கடைத்தேறுவதற்கான நூல் இல்லை.

வடமொழி இலக்கியங்களில் மக்கள் அடையவேண்டும் உறுதிப் பொருள்கள் நான்கெனக் கூறப்பட்டிருக்கின்றன. அவற்றுள் 'வீடு' என்பதே நான்காம் உறுதிப்பொருள். அங்கே, சிந்தையும் மொழியுஞ் செல்லா. அது துறவறமாகிய காரண நெறியாற் கூறப்படுவதல்லது இலக்கணவகையாற் கூறப்படாது. நூல்களாற் கூறப்படுவன அறம்பொருளின்பங்களே. அவ் வீடுபேறுதான் வாழ்க்கைத் தளைகளை அறுத்துத் தகர்த்தெறிவதாம். அறத்தாற் பொருளும், பொருளால் இன்பமும் என வள்ளுவர் முறைபற்றியே கூறினர். முதல் மூன்று பொருள்களையும் அறிந்து, ஆற்றி, ஈட்டித் துய்த்தால் நான்காவதாகிய வீடுபேற்றினை ஒருவன் அடையலாம். ஆதலின், தெய்வப் புலவர் அதனைக் கூறவில்லை; மன்னனது ஆட்சித் திறனே இவ் வுறுதிப் பொருள்களை அடையச் செய்யுமதல்லது பிறிதொன்றில்லை—என்னுங் கருத்தினை மேற்கொண்டனர் போலும்! அரசியலுக்கு அடிப்படை அறன் அல்லது தருமம். இவ் வறந்தான் " விரிந்த பொருளுடையது; ஏதோ ஒரு பொருளில் அடக்கிவிட முடியாது. அறன் எனப்பட்டதே

இல்வாழ்க்கை யென்பர் பொய்யில் புலவர். தமர்மாட்டு முதற்கண் அன்பு செலுத்துவதன் பயனாகச் சமூகத்தினிடம் அன்பு செலுத்தவேண்டும். விரிந்த மனமுடையார்க்கு உலகமே ஒரு குடும்பம். அங்ஙனம் அன்புகாட்ட ஓர் ஒழுங்கு வேண்டும் அவ் வொழுங்குதான் மன்னனாலும் அமைச்சராலும் வரையறுக்கப்படுகின்றது. அனைவரும் ஒன்றாய் ஒத்துழைத்துக் கருத்துவேறுபாடின்றி ஒழுக்க முற்றியவராய்ச் செயல் ஆற்றினால், நாட்டிற் செல்வம் பெருகும்; ஒழுக்கம் வளரும். ஆதலால், வள்ளுவர் எச் சாதியாரும், எம் மதத்தாரும் அறத்தினையே ஆற்றவேண்டும் என்கின்றார். அறத்துள்ளே தானம் தவ மிரண்டும் சிறந்தன. இதனால் வள்ளுவர் தந்நலத்தைக் கடிந்து அஃதின்மையை எவர்க்கும் வேண்டுவர்.

வடமொழியில் அறநூல்கள் தவப்பல. என்றாலும், திருக்குறள் அந் நூல்களினும் அதிகமாக நல்ல பல செய்திகளை ஒழுங்காய்ச் சொல்லி, அரசியற்கும் அறம் பொருளின்பங்களுக்கும் உள்ள நேரான தொடர்பினை எடுத்துக் காட்டுகின்றது. அரசன் நல்லாட்சியின்பாற்பட்ட நாட்டிலே மக்களுக்கு முதன்மையாக அமைய வேண்டுவது நல்வாழ்க்கை. அவ் வாழ்க்கை, செல்வப் பெருக்காலும், பெருகிய செல்வத்தை இறுக்கிப் பிடிக்காமல் ஒழுங்குடன் செலவு செய்தலாலும் நன்னர் அமையும். அவ் வாழ்க்கை, மக்கள் ஊறின்றிச் செல்லுமாறு துணைசெய்யும். மக்களொடு மகிழவும் வேண்டும். மனையறங் காத்தலும் வேண்டும். அளவினை மீறாமல் இன்பத்தினைத் துய்த்தலும் வேண்டும். ஆண்டு முதிரமுதிரப் பற்றுக்கள் கழலவேண்டும். நல்வாழ்க்கை ஒழுக்கமுடையார்க்கன்றி ஏனையோர்க் கினியாது. ஆதலின், ஒழுக்கங்கள் பேராற்றலாற் போற்றப்பெறவேண்டும். இதனை நன்குணர்ந்த வள்ளுவர் ஒழுக்கத்தைப் பன்னிப்பன்னிக் கூறுகின்றனர். இவ் வொழுக்கங்களினின்றும் மக்கள் வழுவா வண்ணம் பாதுகாக்க மன்னன் இன்றியமையாதவனாகின்றான்.

அரசர்தம் ஆட்சியும், அவ் வாட்சிக்குட்பட்ட நாடுகளும், சமூகமும் என்று தோன்றின, ஏன் தோன்றின என்னும்

கடைபோகாக்கொள்கைகளை ஆராய்வதில் தலையிட்டு வள்ளுவர் உழலவில்லை; முறையாக நிறுவப்பெற்ற ஓர் அரசாங்கத்தை, ஒழுக்கமும் ஆற்றலும் ஒருங்கே பொருந்திய அரசனை அதன் தலைவனுக்கிப் பொருட்பாலின் முதற்கண் இறைமாட்சியைப் பற்றிப் பேசத்தொடங்குகின்றார். அவர் பேசும் ஆட்சி கோனாட்சி; அரசன் மகன் அரசன் என்னும் வழி (Law of Primo Geniture). கோனாட்சி ஆயினும், மக்கள் விருப்பின்றி, அரசனுதற்கில்லை. அரசனின்றி மக்கள் உறுதிப்பொருள்களை அடையமாட்டார்கள் என்று சொன்ன பிளேட்டோ, அரிஸ்டாடில் என்னும் அறிஞர் கொள்கைகளும், வள்ளுவனார் வகுத்த அரசியல் தத்துவங்களும் ஒன்றானவைதாம்.

எந்த அடிப்படையான அரசியல் தத்துவங்களைக்கொண்டு விரிந்த அரசியலொன்றை வள்ளுவனார் நிறுவ முன்வந்தனர் என்பதனையும் ஆய்வோம். திருவள்ளுவர், பொருள் நூல் எழுதிய கௌடில்யர் கொள்கைகளையே பின்பற்றினார் என்பதற்குச் சில அகச்சான்றுகள் உண்டு. கௌடில்யர் தென்னாட்டினர்; தென்னாட்டிலிருந்தபோது, வள்ளுவர் அரசியற் கொள்கையை நன்கறிந்து, வடநாட்டிற்போய் அக் கொள்கைகளைத் தம் கொள்கைகளாகக்கொண்டு நூலொன்று எழுதிய காரணத்தால் கருத்துக்கள் ஒன்றாகக் காணப்படுகின்றன எனக் கருதுவாரும் உளர். மனுநூலுள் அரசியல், சமூகம் என்னும் இவற்றைப் பற்றி ஆற்றுவனவெல்லாம் தொண்டாகவே கூறப்பட்டிருக்கின்றன. அரசன் நாட்டின் தலைவன். அவன் பேராற்றல் வாய்ந்தவன் என்றாலும், சட்டத்தை மீறி எதனையும் செய்துவிட முடியாது; அமைச்சர் முதலியோரைக் கலவாமல் தன் கருத்துப்படி எந்தச் செயலையும் செய்துவிட முடியாது. குடிமக்களை அலைக்கத் தொடங்கும் மன்னன் வேருடன் அழிவான். அவன் தீய ஒழுக்கமுடையனாய் இருத்தல் முடியாது. ஒழுக்கமே மன்னற்கு உயிர். அவ் வொழுக்கங்களை வள்ளுவர் இரண்டதிகாரங்களிற் கூறுவர். உரிமை மகளிரிடத்து மன்னன் இன்பந் துய்த்தலை வள்ளுவர் கடியாது, அறிவுதப வருகின்ற வரம்பு மீறிய ஒழுக்கத்தையே கூடாதெனக் கடிந்தார். வள்ளுவரைப் போலவே கௌடில்யரும் கள் உண்டலைக் கடிகின்றனர். அது

கடியப்பெறுவிட்டால், அரசன் அரசியல் அறநெறி நில்லாது. ஆனால், சங்க இலக்கியங்கள் அப் பழக்கத்தினைக் கடியவில்லை. கள்ளுண்டலைப்போலவே சூதாடுதலும் தீய ஒழுக்கமாகக் கடியப்படுகின்றது. இவற்றை வடநூலார் வ்யஸனம் என்பர். வேதகாலத்திலிருந்து மக்கள் கருத்துச் சூதாட்டத்திற் சென்று வந்ததென்றாலும், சட்டமும் வழக்கமும் அதனைக் கடிந்தே வருகின்றன. அத் தீய ஒழுக்கங்கள் அரசர்க்கொல்லா. அரசர் அத் தகைய தீய ஒழுக்கமுடையராயின், தம் கடமைகளை முட்டின்றி ஆற்றார். அவர்தம் உடல் நலமும் குன்றிப்போகும். குன்றவே, மனம் ஒருநெறிப்படாது. உடல் நலமும் உள நலமுமின்றி அவர் என்செயற்பாலர்?

கௌடில்யனார் அரசியல் உறுப்புக்களை ஏழென்றார்: வள்ளுவர் ஆறென்றார். அவை படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் என்பன. முன்னவர் அரசனைச் சேர்த்தார்: வள்ளுவர், அரசனைத் தனியாக்கிச் சிறப்புத் தந்தார். வள்ளுவர் பகுப்போடு அரசனையும் ஒருங்குவைத்தெண்ணினால் ஏழாகும். இவ் வுறுப்புக்கள்மாத்திரம் அரசற்குப் போதமாட்டா; இன்னுஞ் சில வேண்டும். வேண்டுவ, காலமறிந்து துணியப் பெறும். மன்னன் கடமைஉணர்ச்சி உடையவனாய்க் குடி புரப்பதிலேயே கண்ணுங்கருத்தும் உடையவனாதல் வேண்டும்; தன்னுயிர்க்கு இறுதிவரினும் குடிமக்களைப் பாதுகாப்பதாகிய பேரறத்தின்கண்ணே நிற்றல் வேண்டும். அரசன், கூரிய அறிவும், எஞ்சாத் திண்மையும், ஆற்றலும், கொடையும் உடையனாயிருத்தல் வேண்டும். இயற்கையறிவோடு நூலறிவும், எப்போதும் விழிப்புடன் இருத்தலும் அரசற்கு இன்றியமையாதன. அரசன், வேண்டாச் செலவுகளை யொழித்து, ஈட்டிய பொருளைக் காத்தல்வேண்டும்; அமைச்சரொடு சூழ்தலின்றி வினைசெய்யத் துணியலாகாது; அமைச்சர் அறிவுரைகளைப் பின்பற்றவேண்டும்; செவி கைப்பச் சொற்பொறுத்தல் வேண்டும். இடிப்பாரை இல்லாத மன்னன் கெடுப்பாரிலாமல் அழிவான்.

நல்லொழுக்கமும், அன்பும், அருளும், கல்வியும், கேள்வியும், கொடையும் உடைய அரசனை மக்கள் கடவுளாகவே

எண்ணுவர். கடவுள் உயிர்ப்பன்மைகளிடத்து ஓரமின்றிப் பாதுகாப்பதுபோலவே, மன்னனும் முறைசெய்து தன் குடி மக்களுக்கு அவ்வப்போது தோன்றும் துன்பங்களைப் போக்கி நல்லன நல்கிக் காப்பாற்றல் வேண்டும்; காட்சிக் கெளியனும் கடுஞ்சொற் கூறாதவனும் இருத்தல் வேண்டும். வேந்தனுக்குச் சிடுசிடு சினம் கூடவே கூடாது; அஞ்சாமையும் ஊக்கமும் வேண்டும். அரசன் மறம் இழுக்கா மானத்தைப் போற்ற வேண்டும்; இயற்றலும், ஈட்டலும், காத்தலும், வகுத்தலும் வேண்டும்; இன்சொற்கூறி ஈதலும் வேண்டும்.

மன்னற்கு நூலறிவு இன்றியமையாதது. கல்லாமை பெருங்குற்றம். கல்வியே மன்னற்குச் செல்வம். அதனிற் செல்வம் கேள்வி. கேள்வியே செவிக்குணவு. செவிக்கு விருந்தும் அதுவே. கற்றலிற் கேட்டலே நன்று. ஒழுக்க முடையார் வாய்ச்சொல்லைக் கேட்டால், அச் சொல், வழுக்கிய போது ஊன்றுகோலைப்போலக் காக்கும் திறனுடையது. வறிதேனும் நல்லது கேட்டல்வேண்டும். கேள்வியில்லாத செவி செவியன்று. கேள்விச் செல்வம் உடையாரே வணங்கிய வாயினர் ஆவர். வாய் உணர்ச்சி ஒன்றையே பெற்ற மக்கள் செத்தாலும் வாழ்ந்தாலும் ஒன்றுதான். இவற்றை மன்னன் மேற்கொள்வதால் அவன் அறிவு கூர்மையாகும். அந் நிலை நல்லதன் நலனையும், தீயதன் தீமையையும் அறியத் துணை செய்யும். மேல்வருவனவற்றைச் சூழ்ந்தறியும் திறனையும் அவன் பெறுவான். அரசியல் என்னும் மரக்கலத்தை ஓட்டு தற்கு இவ் வறிவு நல்ல கருவியாகும்.

மன்னற்குப் போரில் வெற்றி தருவது வேலன்று. ஆட்சி நன்றாயின் வேலும் நன்றாகும். அரசனது கொற்றம் அறநெறி முதற்று எனப் புறப்பாட்டொன்று கூறும். மன்னர், பதன் எளியராகிக் குடிமக்களின் குறைகேட்டு முறை செய்தல் வேண்டும். மன்னர் தந்நலமுடையராய் ஏதிலாளர் பொதுமொழி கேட்டு நடப்பாராயின் அவர் அரசரல்லர். அவர் ஆட்சியில் நியாயம் இராது: தடியெடுத்தோர் தண்டற்காரராவர்: அராசகம் தலைகாட்டும்: குழப்பம் மிகும்: பகையரசரை ஊக்கும். முறைதவறும் அரசர் நாட்டிலே பருவமழை

பெய்யாது. கோன்நிலை திரிந்தால் கோள்நிலை திரியும்: கோள் நிலை திரிந்தால் மாரி வறங்கூரும். அறம் அற்றுப்போன நாட்டிலே பசுக்கள் கறவா: பால் குன்றி அவி குன்றும்; அவி கொடுத்தற்குரிய மந்திரம், கற்பம் முதலியவற்றை அந்தணர் ஓதார். இவை குன்ற, வேள்வி குன்றும். வேள்வி குன்றின், வானம் பொய்க்கும். வானம், தவமிலார் இல்வழி இல்லை. தவம், அரசர் இல்வழி யில்லை. வாரி குன்றினும் மாரி பொய்ப்பினும் இக்கண்ணகன் ஞாலம் காவலர்ப் பழிக்கும். ஆதலின், மன்னரே காலத்தின் காரணராவர். உலகில் மன்னரே கடவுளர். அதுவே தமிழரின் கொள்கை. சிலர் இதனை மூடக் கொள்கை என்பர். அவர் அறியார்; பெரிதும் அளியர். ஆதலால், மன்னன் அன்போடும் அருளோடும் முறைசெய்து மக்களைக் காப்பாற்றவேண்டும்.

இடைவிடாத உடல் முயற்சி மன்னர்க்கு இன்றியமையாதது. இச் செயல் ஆற்றுதற்கருமை யென்று தளர்ச்சியடைதல் கூடாது; இடைவிடாது முயலல் வேண்டும்: முயலவே பெரியராவர். அரியனவும், எளிதில், விரைவில் முடியும். வினைசெய்யாவிட்டால் அரசரை உலகம் கைவிடும். முயற்சியென்னும் உயர் குணத்திலேதான் உலகம் தங்கி நிற்கின்றது. முயற்சி இல்லாதவர் பலர்க்கும் உதவி செய்ய முடியாது. வினைமுடித்தலை விரும்புகின்ற மன்னர், சுற்றத்தார் நாட்டார் இவர்தம் வறுமையைத் தீர்ப்பர். சேட்டைத் தேவி சோம்பற்கண் தங்குவாள். திருமகள் மடியில்லா மன்னர் ஆள்வினைக்கண்ணே தங்குவாள். தெய்வத்தால் துன்பம் வந்தாலும், மன்னர், தம் முயற்சியைக் கைவிடுதல் கூடாது. பொருட் குறைவாலும் மெய்வருத்தத்தாலும் துன்பம் வந்த போது மன்னர் மனங் கலங்கக்கூடாது. அத் துன்பங்களை இன்பமாய் நினைக்க அவையனைத்தும் நீங்கும். விடாது முயன்றால் வினை முற்றும். சாகாட்டினை ஈர்த்துச் செல்லும் எருது பக்கங்களிலே உராய்ந்தும், நிலத்தில் மூக்கை ஊன்றிக் கொண்டும், கால்களை மண்டியிட்டு இழுத்தும் செல்வதுபோல, அரசர், காவற் சாகாட்டினை உகைத்தற்பாலர். அரசர் தம் கையில் பொருள் நிறைய இருக்கும்போது, இறுக்குமுட்டி

போடாமல், தம்மைச் சார்ந்த பரிசனங்களுக்குக் கொடுத்துவரல் வேண்டும். கொடுத்தால், அம் மக்கள் செல்வம் குறைந்த காலத்தும்கூடப் பழைய அன்பினைப் பாராட்டிப் பெருந்துணை செய்வர்.

உயிர்க்குத் துன்பம் இயல்பு. அதுதானும் கணிகம். அத் துன்பமும் மனத்துக்கண் நிகழும் கோட்பாடு. அதனை இன்பமாகக் கொள்ள மனம் மகிழும்; மனம் மகிழ்ந்தால் தொடங்கிய வினையை அரசன் முடித்தே விடுவான். இந் நிலையை வடநூலார் **உத்தானம்** என்பர்.

மன்னன், சட்டத்திற்கு அடங்கியவனே. அவன் அமைச்சர் உரையை ஏற்றுக்கொள்ளவேண்டும். அமைச்சர்கள் இயற்கை யறிவும் நூலறிவும் வாய்ந்தவர்; நடுவுநிலையும், எப் பொருளை யும் ஆராய்ந்து உண்மை காண்டலில் ஆற்றலும் உடையவர். அமைச்சன், ஒரு வினையைத் தொடங்கும்போது, நன்மை தீமை களைச் சூழ்ந்து, காலமும் இடமும் அறிந்து, கடைபோகுமட்டும் முயன்று உண்மை காண்கின்றான். அமைச்சன் திண்ணிய உளமும், அஃகா ஆற்றலும் உடையவன்; பகைவரிடையே ஒற்றுமை யின்மையை விளைத்து, நண்பர் நட்பினை உறுதிப் படுத்தி, பழைய நட்பாளரைப் பேணியும் வருகின்றவன். அமைச்சன், அரச நீதியை மாத்திரம் அறிந்தாற் போதாது. சிறந்த அறிவாளியாயும், உலகியல் அறிந்து வினைசெய்பவனாயும் இருந்தால்தான் அரசியல் நிர்வாகம் சிறந்து விளங்கும். தன் அறிவுரையை அரசன் ஏற்றுக் கொள்ளாவிட்டால், அமைச்சன், 'ஆவதாக' என்று அரசனைப் புறக்கணித்து விடக் கூடாது. இரவுபகலாக, அமைச்சன், தன் உரைகளை ஏற்றுக்கொள்ளுமாறு மன்னனை வற்புறுத்தி இறுதியில் அவனை நல்வழிப்படுத்த வேண்டும்.

அமைச்சர்க்கு மொழிப் புலமையும் பேச்சு வன்மையும் இன்றியமையாதன. அமைச்சர், பேசும்போது ஒழுங்காகவும், நியாயமாகவும், முரண்பாடில்லாமலும், கேட்டவரையெல்லாம் பிணிக்குமாறும் பேசவேண்டும்; பேசும்போது கலங்காத் திண்மையுடையராதல் வேண்டும்; சொற்போர்க்குச் சிறிதும் அஞ்சல் கூடாது; வினைசெய்தற்கண் தளாச்சி கூடாது.

செய்வனவற்றையும் தவிர்வனவற்றையும் அமைச்சர் நன்கு அறிந்திருத்தல் வேண்டும். வந்த துன்பங்களுக்கேற்பத் தீர்வு நாடி அமைச்சர் வல்லே செய்தற்பாலர். நாநலம் உடைய அமைச்சரே உலகத்தைத் தம்மடிப்படுத்த வல்லர். அவர் குடிப் பிறப்பு, கல்வி, ஒழுக்கம், செல்வம், உருவம், பருவம் என்னு மிவற்றால் வரும் தகுதி வேறுபாடுகளை அறிந்து சொல்ல வல்ல ராதல் வேண்டும். பிறர் அறியும் வண்ணம் பேசமாட்டாத அமைச்சர், கொத்தில் மலர்ந்தும் மணம் வீசப்பெறாத மலரைப் போன்றவ ராவர். அமைச்சர், சீர்த்த நாகரிக முறையில் தம்மை நடத்திக்கொள்ள வேண்டும்; வினைத் தூய்மையும், வெற்றி விரும்பும் பான்மையும் உடையவராதல் வேண்டும். அரசர்க்கு இம்மையிற் புகழும் மறுமையில் அறமும் பயவாத வினைகளை அமைச்சர் தவிர்தல் வேண்டும். 'என்ன காரியஞ் செய் தோம்' என்று இரங்கும் வினைகளை ஒருகாலும் அமைச்சர் செய்தல் கூடாது. மயக்கத்தால் அங்ஙனம் செய்தாலும் இரங்கல்களை வெளிக்காட்டா திருத்தல் நன்று. அறிவுடைச் சான்றோர் பழிக்கும் வினைகளை அமைச்சர் செய்தல் அடாது. நிலையாத செல்வத்தின் பொருட்டு, நிலைத்த பழியினை மேற் கொள்ளுதல் அமைச்சர் பெருமைக்கும் தகுதிக்கும் வறிதும் ஏலாது. சாத்திரமறிந்தோர் செய்யலாகாதென விலக்கிய வினை களைப் பொருள் வெஃகிச் செய்த அமைச்சர்க்குத் துன்பமே உண்டாகும். தீய வினைகளால் பொருளீட்டி அரசற்கு நன்மை செய்தல், பசிய மண்கலத்தில் நீரைவார்த்து ஏமஞ் செய்ததனோ டொக்கும்.

அமைச்சர், தாம் செய்யப் புகுந்த வினைகருதித் துணிவினை அடையுங்காறும் சூழ்தல் வேண்டும்; சூழ்ந்து துணிவு பெற்ற வினையை உடனே ஆற்றல் வேண்டும்; காலம் நீட்டித்தும், நீட்டியாதும் செய்யப்படும் இருவகை வினைகளை யும் மாறிச் செய்தல் கூடாது. செய்தால், அவ் வினைகள் வாயா. பகைவரினும் தாம் வலியராயின் அக் காலைத் தண்டமே ஏற்றது: ஒத்த காலமும் மெலிந்த காலமுமாக இருந்தால் சாம பேத தானம் என்னும் மூன்றனுள் ஒன்றனை நாடிச் செய்க. அழியும் பொருள், ஆகும் பொருள், தம்

தானைக்கும் பகைவர் தானைக்குமுள்ள ஒற்றுமை வேற்றுமைகள், தமக்காங் காலம், பகைவர்க்காங் காலம், தாம் செய்ய வல்ல வினை, பகைவர் செய்யவல்ல வினை, தாம் வெல்லுமிடம், பகைவர் வெல்லுமிடம் என்னுமிவை நன்றாய் ஆராய்ந்து அறுதியிடப் பெறுதல் வேண்டும். ஒன்றுக்கொன்று மாறுபட அறிந்து வினை செய்தல் கூடாது. தொடங்கிய வினை பிறிதொருவினை முடித்தற்குக் கருவியாய் இருத்தல்வேண்டும். அங்ஙனம் செய்ய, எல்லா வினைகளும் எளிதில் முடியும். அரசரைச் சார்ந்தேயிருந்து அவர்க்குக் கத்தி வைக்கின்ற அமைச்சரைக் காட்டிலும் எழுபது கோடி பகைவரை நல்லராகக் கருதவேண்டும். பகைவர் வெளிப்பட நிற்றலால் ஆற்றல் கொண்டு தடுக்கலாம். அமைச்சர் வெளித் தோற்றத்திற்கு வேண்டியவர்போலிருந்து உள்ளே பகைப்பான்மையோடிருந்தால் அவரை எங்ஙனம் தடுத்தல் இயலும்?

அரசாங்கத்தின் உறுப்புக்களுள் ஒன்று நாடு, அல்லது இராஜ்யம்; அந் நாடு அரசனாலும், அமைச்சராலும் ஆட்சிப் பொறுப்பினை யேற்று நடத்தவல்லதா யிருத்தல்வேண்டும். அரண், பொருள், படை, நட்பு என்னும் இந் நான்கு அங்கங்களுக்கு இன்றியமையாச் சிறப்புடையது நாடு. குறையாத விளையுளை விளைப்பவரும், அறநெறியில் நடப்பவரும், குறைவில்லாத செல்வமுடையவரும் நாட்டில் ஒருங்கு வாழ வேண்டும். வீடு பெறுங் கருத்துடன் தவஞ் செய்வார்க்கும் நாடு இடமாதல் வேண்டும். மறுமை கருதி இல்லறம் நடத்துவார்க்கும் அதுவே இடனாதல் வேண்டும். அளவிட முடியாததும், அள்ளக் குறையாததுமான பொருள் மிகுதியால் அயல் நாட்டாராலும் விரும்பத்தக்கதாகி, ஈதிபாதைகள் என்னும் அருங்கேடில்லாமல், மிகமிக விளைவதே நாடாகும். அயல் நாடுகளிலிருந்து பல காரணங்களால் எத்தனை பிராணிகள் வந்தாலும் தங்குதற்கு இடப் பரப்பையும் பொருள் வளத்தையும் நாடு நிறையப் பெற்றிருக்கவேண்டும். குடிமக்கள், அரசனுக்கு இறைப்பொருள் கொடுப்பதில், மகிழ்ச்சியோடு தாமே விரும்பிக் கொடுக்கும் தன்மையராதல் வேண்டும். அழிபசியும், தீராநோயும், அழிக்கும் பகையும் தலைகாட்டா

மல் இனிது நடப்பதே நாடாகும். சாதி பற்றியும், கடவுள் பற்றியும் மாறுபட்டுக் கூடுகின்ற பல கூட்டங்களும், உடனிருந்தே அழிவைத்தரும் உட்பகையும், வேந்தரை அலைக்கும் குறும்பரும் இல்லாததே நாடு. எம் முயற்சிக்கண்ணும் பகைவரால் அழிக்க முடியாததாய், ஒருகால் அழியினும் வளங்குன்றுத தாய் இருக்கின்ற நாடு மிகச் சிறந்ததாகும். கிணறு, குளம், ஏரி, ஆறு இவற்றைப் பெற்று, ஏற்றவிடத்தில் வாய்ப்புடைய மலையொன்றும், மலையினின்று பெருகிவரும் நீரும், அழியாத கோட்டையும் நாட்டிற்கு உறுப்புக்களாம். நோயின்மையும், செல்வமும், நெல் முதலான விளைவும், இன்பமும், காவலும் என்னுமிவ் வைந்தும் நாட்டிற்கு அழகு செய்வனவாம். தேடியுழலாமல் தானே வந்தடையும் செல்வமுடைய நாட்டை நாடென்று நூலோர் கருதுவர். தேடி வருந்திய பின்னர்ச் செல்வம் அடைவிக்கும் நாடுகள் நாடாகமாட்டா. இவையெல்லாம் நிறைந்திருந்தாலும், குடிகட்கு அரசரிடத் தன்பும், அரசர்க்குக் குடிமக்களிடத் தருளும் இல்லாவிடத்துப் பயனில்லை. எவ்வளவு குணங்கள் நிறைந்துள்ள நாடாயினும், அரசர்க்கும் குடிகட்கும் ஒற்றுமை யில்லாவிட்டால் அந் நாடு வாழ்தற் கிடனுகாது.

பகைவரால் அழிவு வந்தபோது, நாட்டிற்கும் அரசர்க்கும் பாதுகாப்பாதல் பற்றி, அரணை ஒரு தனியுறுப்பாகக் கூறுவர் திருவள்ளுவர். அறிவு, ஆண்மை, பெருமை என்னும் மூவகை ஆற்றலும் உடையராய், பகைவர்மீது போர்க் கெழுவார்க்கும் அரண் வேண்டும். அவ் வாற்றல் இல்லாமற் பகைவர்க்கஞ்சி இருப்பார்க்கும் அரண் வேண்டும். இவ் வரண் நீரரண், நிலவரண், மலையரண், காட்டரண் என இயற்கையுஞ் செயற்கையுமாகி நான்கு வகைப்படும். நாடு, மேற்கூறிய அரணுற் சூழப்பட்டிருத்தல் வேண்டும். வடநூலார் இவற்றை ஜல துர்க்கம், ஸ்தல துர்க்கம், கிரி துர்க்கம், வன துர்க்கம் என்பர். ஏணி வைத்தாலும் எட்டாத உயர்ச்சியினையுடையதாய், புறத்துள்ளார்க்குத் தோண்ட முடியாதபடி அகலமான அடியினை யுடையதாய், உள்ளே யிருப்பவர் நின்று வினை செய்யலாம்படி தலையகல முடையதாய், கருங்கற்களாலும்

செங்கற்களாலும்கட்டப்பெற்றுக்குத்தப்படாததாய்,இயந்திரங்களால் நெருங்குதற் கருமை யுடையதாய், பகைவர் எளிதிற் கைப்பற்ற முடியாததாய் அரண் இருத்தல் வேண்டும். பகைவர் அசதியில் அரணை முற்றுகையிட்டு, உள்ளிருப்பவர் வெளிச் செல்லாதபடி போர் செய்யத் தொடங்கினும் அகத்தார்க்கு வேண்டும் உணவுப் பொருள்களை அதுமிகுதியாகப் பெற்றிருத்தல் வேண்டும்; அதனுடன், அமயம் நோக்கிப் பின்வாங்காமல், அரசரிடத்தன்பும், மானமும், வீரமும், தளர்ச்சியில்லாமையும், பகைவர்க்கு நெகிழ்ச்சிதராமல் போராற்றும் வன்மையும், பகைவர் வயப்படாது போற்றிக் கொள்ளும் மதுகையும் உடைய வீரர் பலரைப் பெற்றிருத்தல் வேண்டும். எத்துணைச் சிறந்த அரணாயினும் வினை செயமாட்டாரைப் பெறுவிட்டால் அவ் வரண் வறிதும் பயன்படாது.

இன்னோர் உறுப்புப் படை. யானை, தேர், குதிரை, காலாள் என்னும் நால்வகை அங்கங்களையுடையதும், பகைவர் புண்ணுக் கஞ்சிப் பின்வாங்காது நிலைத்து நிற்பதும், பகைவெல்ல வல்லதுமாகிய படை - அமைச்சு, நாடு, அரண், பொருள், நட்பு என்னும் உறுப்புக்களினும் சிறந்ததாகும். கூற்றுவனே சினந்து வந்தாலும் நெஞ்சொத்து எதிர்தாங்கும் பேராற்றல் வாய்ந்தது படை. அஃது ஏழு உறுப்புக்களையுடையதும், நான்கு வகைகளைக் கொண்டதும், முப்பது விரியினை யுடையதுமான படைவகுப்பினைக் கொண்டதாதல் வேண்டும். சிறந்த வீரர் பலரிருந்தாலும் சேனைத் தலைவரில்லாவிடத்துச் சேனை நிலை குலையும். கம்பீரமான தோற்றமில்லாவிட்டாலும், அரசராற் பொருட்குறைவும் அவமதிப்பும ஏற்பட்டாலும்; படை நில்லாது. வீரராயுள்ளவர் பகைவரால் புண்படுதற்கஞ்சார்; கையிற் படையில்லாதபோது, தம் மெய்யிற் றைத்துள்ள வேலையே பறித்தெடுத்துக் களிற்றின் மீதெறிவார். பகைவர் படைக்கலங்களை ஓச்சியெறிய, அவற்றைஏற்கும் வீரர் கண்ணிமைப்பராயின் அவ் வீரர்க்கு அது தோல்விக் குறியாகும். முகத்திலும் மார்பிலும் புண்படாத நாட்களைப் பயன்படாது கழிந்த நாட்களாக வீரர் எண்ணுவர். தம் அரசர் வந்து தடுத்தாலும், வீரர் போரினை நிறுத்தமாட்டார். வஞ்சினங் கூறிப்

போருக்கெழுந்த வீரர் அவ் வஞ்சினம் பலியாமுன் பகைவரா லிறந்தாலும் அவர்க்கது தோல்வி யாகாது. வஞ்சினத்தை நிறைவேற்றியவராகவே அவர் கருதப்பெறுவர்.

வேற்று வேந்தரிடைச் செல்லத் தூதுவர் வேண்டும். அவர், தாமே வகுத்துக் கூறுவார், கூறியது கூறுவார் என இரு வகையர். தூதுவர்க்கு அன்பும், உயர் குடிப்பிறப்பும், அரசரால் விரும்பப்படும் பெற்றியும் வேண்டும். அரசர் மாட்டன்பு, அறிவுடைமை, வேற்றரசரிடைச் செல்லும்போது வேண்டும் பேச்சுவன்மை இம் மூன்றும் தூதுவர்க்கு வேண்டும் குணங்களாம். இயற்கையறிவும், கண்டார் விரும்பும் தோற்றப் பொலிவும், ஆராய்ந்த கல்வியும் உடையானே வேற்று வேந்தரிடைத் தூதுவினைக்குச் செல்ல வேண்டும். தன்னுடைய கடமைகளை உணர்ந்தவனாய், பகை வேந்தரின் காலம் நோக்கிக் காரியம் சொல்லுதற்கேற்ற இடத்தை யறிந்து, நன்றாய் ஆராய்ந்து பேசுபவனே தூதருட் சிறந்தவனாவான்.

திருவள்ளுவர் ஒற்றரையும் ஒற்றாடலையும் பற்றிப் பேசும்போது கௌடில்யர் பொருணூலையே பின்பற்றுகின்றார். அரசர்க்குக் கண்கள் இரண்டு: ஒன்று ஒற்றர்; இன்னொன்று நீதி. தம் நாட்டிலும் பிறர் நாட்டிலும் ஒற்றர் மாறு வேடத்தோடு போகி, ஆங்காங்கு நிகழும் நிகழ்ச்சிகளை அரசர்க்கறிவிப்பர். அரசாட்சியைப் பற்றிப் பொது மக்களின் கருத்தை அரசர் ஒற்றர் வாயிலாகவே அறிந்துவந்தனர். அரசியற் பகுப்பிற்கும் ஒற்றர் நியமிக்கப்பெற்றிருந்தனர். இதனால், அரசாங்கம் தூய்மையும் ஆற்றலும் உடையதாய் அமைய வேண்டுமென்பதே அவர்தம் நோக்கமாதலைத் தெளியலாம். ஒற்றர் சிலர், துறவி வேடத்தோடு நாடெங்கும் போய் அங்குள்ள உண்மை நிகழ்ச்சிகளை அரசர்க்கு அறிவித்தும் வந்தனராம். அந் நிகழ்ச்சிகள் உண்மையா என்றறியப் பிற ஒற்றர்கள், ஒருவரை யொருவர் அறியாமல், ஆங்காங்கே அனுப்பப்பெறுவர். எல்லா ஒற்றரும் ஒன்றாக மொழிந்தவிடத்து அரசர் அவற்றை நம்பி வினைபுரிவர். ஒற்றர்கள் வெளிப்படையாகப் பாராட்டப்பெறுதற் குரியரல்லர் என்பது வள்ளுவனார்

கருத்து. மறை பிறரறியக் கூடாதென்பதே இதன் கருத்தாதல் வேண்டும். நம்புதற்குரிய அறிஞர்களே தூதுவராகவும் அனுப்பப்பெறுவர்.

எவரை நட்பினராகக் கொளல்வேண்டும், எவரை அங்ஙனம் கொள்ளுதல்கூடா தென்பதனைப் பற்றி வள்ளுவனார் மிக விரிவாகக் கூறுவர். உண்மை நண்பன் கவசம் போல்வான். பயனளிக்குமென்னின், நட்புப் பெரிதும் இன்றியமையாதது. உற்றவிடத் துயிர்வழங்கும் தன்மையுடையாரும், வாழ்விலும் தாழ்விலும் கலந்து வாழ்கின்றாரும் உண்மை நட்பினராவர். கூடா நட்பு அரசர்க்குப் பல இன்னல்களையே தரும்.

குறையாத செல்வமுடைய வேந்தன் படையே பகை வெல்லுமென்பது வள்ளுவர் கருத்து. நன்னெறியில் ஈட்டிய பொருளே பொருளாவதன்றிக் குடிமக்களை வருத்தி இறை கொண்டு பொருளறையை நிறைத்தல் தக்கதன்றாம். இறை கொள்ளும் முறையில் வள்ளுவனார்க்கும் வடமொழி நீதிநூல்களுக்கும் எத்தகைய வேற்றுமையும் இல்லை. அறத்தாற் பொருளும், பொருளால் இன்பமும் வருதல் வேண்டுமென்பதே அவர் கருத்தாம். வைத்தார் இறந்துபோக, நெடுங்காலம் பூமியிற் புதையுண்டு கிடந்து பின்பு கண்டெடுக்கப் பெற்றதும், ஒருவனால் ஈட்டப்பெற்று முதலில் அவன் சந்ததியாருக்கும், அவரில்லா வழிப் பங்காளிகளுக்கும், அவரும் இல்லாவிடின் பிறரெவருக்கும் உரியதல்லதும் ஆன பொருள் அரசர்க்கே உரியதென வள்ளுவர் கூறுவர். கலத்தினும் காலினும் வரும் பண்டங்களுக்கு வரியுண்டு. பகைவரை ஒழித்தற் காகவே பொருளெல்லாம் பயன்படுகின்றன. பகையொழிந்த வழி நாட்டில் அமைதியும் நன்மையும் ஏற்படுகின்றன.

இன்னோரன்ன காரணங்களால் எது நல்ல அரசாங்கமெனக் கூறி இக் கட்டுரையை முடிக்கின்றோம்: எங்கே அறிஞர் நிறைந்து மகிழ்ச்சியுட னிருக்கின்றனரோ, எங்கே வணிகரும் உழவரும் அடுத்தடுத்திருந்து நண்புடனும் பண்புடனும் வாழ்கின்றனரோ, எங்கே அமைதியும் அன்பும் நிறைந்துள்ளனவோ அவ் விடம் நல்லிடம்: அதன் ஆட்சி

செங்கோலாட்சி. அவ் வாட்சி சாதி சமயப் பூசல்களுக்கிடந் தரல் கூடாது. குட்டிக் கலகமும் குழப்பமும் விளைதல் கூடாது. அறிஞர் வகுத்த நிலைகளின்படி யன்றிப் பிற நிலைகட் கிடமில்லை. வள்ளுவர் அரசியல் ஒற்றுமையையா வேண்டு மென்றார்? அன்று; சமூக ஒற்றுமை வேண்டுமென்றார். தற் காலத்து நிகழும் சாதி சமயப் பூசல்களை அறவே ஒழித்துவிட இருபது நூற்றாண்டுகட்கு முன்னே எழுதிய வள்ளுவர் வாய் மொழியை மேல்வரிச் சட்டமாகக்கொண்டு அறிவும் இன்பமும் நிறைந்தவராகி வாழ்தல் நம்மால் இயலாதா?

# திருக்குறளும் பொருளாதாரமும்

## பா. நடராஜன்

" எல்லாப் பொருளும் இதன்பால் உள இதன்பால்
இல்லாத எப்பொருளும இல்லையால் "

என்ற ஆன்றோர் மொழி ஒரு சில எல்லைகளுக்கு உட்பட்ட தாகும். திருக்குறள், ஒழுக்கம் கூறவந்த நூல்; வரலாற்று நூலன்று: வையக வாழ்வின் அடிப்படையான கருத்துக் களைக் கூற வந்த நூல்; கற்பனை நூலன்று. அக் கருத்துக் களும் காலஇடங்களைக் கடந்தவை. எனவே, காலத்திற்கேற்ப, இடத்திற்கேற்ப, உலகியல் வழக்கு—புலனெறி வழக்குக் கண்டு, மதிநுட்பங் கொண்டு பயன் காணல்வேண்டும். மேலும், கருத்துக்களைச் செறிவுறச் சொல்ல வந்த கவிதை நூல் ஆதலின், விரிப்பன விரித்தும், வாழ்வியலோடு பொருந்த அமைத்தும் தெளிவு காணல்வேண்டும். இம் முறை யாராய்ச்சி ஆய்வு நூல் முறைக்குப் புறம்பானதன்று.

சமூக ஆக்கத்திற்கும், நிலைபேற்றிற்கும், வளர்ச்சிக்கும் அறிஞர் மூன்று காரணங்களைப் பொதுவாகப் பேசுகின்றனர். அவற்றுள், சமயமே முதலென்பர் வரலாற்று நூலோர். பொருளே முதலென்பர் பொருள்நூற் புலவர். உளநூற் புலவரோ இன்பமே அடிப்படை யெனக் கூறுவர். வள்ளுவர் மூன்றும் இன்றியமையாதனவென வற்புறுத்துவா ராயினர். வரலாற்று முறையில் இவற்றை வள்ளுவர் வரையறுக்க

வில்லை; இவை எவ்வாறாக இருத்தல் வேண்டும் என்றே நிலைநாட்டப் புகுந்தனர்.

அறமே சமயம் என்பது வள்ளுவர் கருத்து. அறத்தையும் சமயத்தையும் வெவ்வேறாகப் பாகுபாடு செய்ய அவர் முற்படவில்லை; அறவுணர்ச்சியற்ற சமயம் சமயமே யாகாது என்பதை வலியுறுத்தவே அறத்துப்பால் என்றார். அரசியலையும், பொருளாதாரத்தையும் வெவ்வேறாகப் பிரிக்க அவர் விழையவில்லை. ஏனெனில், சீரிய பொருளாதார அமைப்பே அரசியல் அமைப்பும் ஆகும். அத்தகைய பொருளாதார அமைப்பே அரசியலின் முதற் கடமையும் முழுக்கடமையு மாகும். ஆதலின், 'அரசுபால்' என்று கூறாது 'பொருட்பால்' என்று அவர் கூறினார். காமத்தையும், கற்பையும் வேறு படுத்தல் அவர்க்கு உடன்பாடன்று. தூய காம ஒழுக்கமே கற்பொழுக்க மாதலின், அவர் 'கற்புப்பால்' என்னாது 'காமத்துப் பால்' என்றார். 'சமயம்', 'அரசு', 'கற்பு' என்று கூறாது, 'அறம்', 'பொருள்', 'காமம்' எனச் சொன்னமைக்கு இதுவே காரணமாகும்.

'சமயம்' என்று கூறுங்கால் அறவொழுக்கம் பின்னடையும்; வெளி வேடங்களும், சடங்குகளும் விரிவடைந்து அறம் மறக்கப்படும். இதற்கஞ்சியே, அவர் 'அறம்' என்றார். 'அரசு' எனக் கூறின் அதிகாரச் செருக்கே எங்கும் தலைவிரித்தாடும்; பொருளாதாரம் புறக்கணிக்கப்படும். அதைத் தவிர்க்கவே, அவர் 'பொருள்' என்றார்; 'கற்பு' என்றவழி உயிர்க்கின்றியமையா நல்லின்பம் நலிந்து சமூக வளர்ச்சி தடைப்படுமோ எனக் கவன்று, 'காமம்' என்றே கூறினார். அறமே சமயத்திற்கு ஆதி; பொருளே அரசியலுக்கு உயிர்; காமமே கற்பிற்கு வித்து.

அறத்திற்கும் காமத்திற்கும் நடுநாயகமாகப் பொருள் அமைந்துள்ளது. அறத்தையும் இன்பத்தையுந் துய்க்க உதவுவது இப் பொருளே யாதலால், அவ் விரண்டற்கு மிடையே பொருளை வைத்தாரெனத் தொன்றுதொட்டு விளக்கம் சொல்லப்படுகிறது. ஆனால், அதனினும் சிறந்த விளக்கம் மற்றொன்று உண்டு.

வாழ்வு என்பது ஒரு தராசாயின், அதன் ஒரு தட்டு அறமாகும்: பிறிதொரு தட்டுக் காமமாகும்: பொருள் இவ் விரண்டனையும் பிணைத்துச் சமன் செய்யுங் கோல். அறம் மிகின் காம நலன் குறையும்: காமம் மிகின் அறவுணர்ச்சி யருகும். ஆதலின், இவ் விரண்டும் மிகுதலும், குறைதலும் நேராதவாறு, பொருளை இரு தட்டிலும் நேரிதிற் பெய்து சமன் செய்தல் வேண்டும். அந் நிலையிலேதான், ஏருது இறங்காது வையத்துள் வாழ்வாங்கு வாழ்தல் நடைபெறும்; இயல்பினுடைய வாழ்வு இனிது செல்லும். சமநிலை வாழ்வைக் கண்டு உணர்த்த வந்த நூலே திருக்குறள். அவ்வா றன்றி இல்லறத்திற்கும் ஏனைத் துறவறத்திற்கும் அறத்துப்பால் இணைப்பு முறையில் வந்ததெனக் கருதுதல் பொருத்தமுடைய தன்று. இம் முறையில் ஆராயின், பரிமேலழகர் வகுத்துள்ள அதிகார வைப்புமுறையைச் சற்று மாற்றி யமைத்தல் வேண்டுவதாகும். ஆயினும், அதில் தீங்கொன்றுமில்லை.

எத்தகைய மேதையும், தான் வாழ்ந்த கால எல்லையையும் சூழ்நிலையையும் முற்றும் கடக்கும் வன்மை யுடையனல்லன் எனின், வள்ளுவர்மட்டும் இவ் வுண்மைக்கு விதிவிலக்காதல் கூடுமோ? அங்ஙனமாயின், வள்ளுவர் வாழ்ந்த காலமென்ன? அவர் கற்ற நூல்கள் எவை? அந் நூல்கள் கொண்ட கொள்கை கள் எவை? அவர் காலப் பழக்கங்கள் யாவை? நம்பிக்கைகள் எவை? இவ் வினக்கள், கருதியபொருளின் எல்லையைக் கடந்தனவாயினும், ஆராய்ச்சிக்குப் பொருட்பால் விளங்க, நெருங்கிய தொடர்புடையனவே. வள்ளுவர் காலப் பொருளா தார நூல்கள் யாவை? அவற்றிற்கும் வள்ளுவர் பொருட்பாற் கருத்துக்களுக்கும் தொடர்பு உண்டோ? வள்ளுவர் அவற்றைக் கற்றனரா என்பனவற்றை எண்ணித் துணிதல் வேண்டும்.

பொருளாதாரம் அல்லது பொருள் செயல் வகை பற்றித் தனி நூல்கள் பண்டை நாளில் இருந்தனவாகத் தெரிகின்றன. மாதவச் சிவஞான யோகிகள் தாம் செய்த சிவஞான பாடியத் திலே வித்தைகள் பதினெட்டைப் பற்றிச் சைவ புராணம் வாயுசங்கிதை பூர்வபாகம் முதல் அத்தியாயத்திலிருந்து

மேற்கோள் காட்டுகிறார். அவற்றுள் அருத்த நூல் என்ற ஒன்றும், உபவேதம் நான்கனுள் ஒன்றாக வைத்துப் பேசப் படுகின்றது; "இம்மைக்கும், மறுமைக்கும் ஏதுவாய பொருள்களை யீட்டும் உபாயம் உணர்ப்பிப்பது அருத்த நூல்" என்ற விளக்கமும் காணப்படுகின்றது. பெருங் கதையிலும், 'பொருள் புரி நூல்' என்றொரு தனிநூல் குறிக்கப்பட்டுள்ளது.

ஆயினும், அத் தகைய அருத்த நூல்களெல்லாம் அன்றைய அரசிய லமைப்பைப்பற்றிப் பெரும்பான்மை யாகவும், அரசியற் பொருளாதாரத்தைப்பற்றிச் சிறுபான்மை யாகவும் கூறுகின்றன; அவ்வாறன்றி, இன்று நாம் பொரு ளாதார நூலின்கண் அறியும் வகையில், பொருளாதார விதிகளை எடுத்துச் சொல்லவில்லை. எடுத்துக்காட்டாக, வட்டி, வாரம், ஊதியம், கூலி முதலியவை எவ்வாறு தோன்றின? அவற்றின் நிலையான அளவென்ன? அவற்றிற்கும் உற்பத் திக்கும் ஏதேனும் தொடர்புண்டா? பொருளுற்பத்திக்கும், அவற்றை வழங்குவதற்கு முள்ள தொடர்பென்ன?—இவை போன்ற இன்றைய பொருளாதார நூற் கேள்விகளெல்லாம் அன்றைய அருத்த நூல்களுள் எழவில்லை. ஏற்றுமதி இறக்கு மதிகளுக்கும், நாட்டின் பொருளாதார நல்வாழ்வுக்கு முள்ள இணைப்பு ஆராயப்படவில்லை. தொழில்கள் மிகுந்தும் குறைந்தும் அவ்வக் காலங்களிற் காணப்படுவதன் காரணங்கள் பற்றி ஆராய்ச்சி எழவில்லை. அவற்றை வரையறை செய்யும் வழிகளும் வகுக்கப்படவில்லை.

இதில் வியப்பொன்றுமில்லை. பொருளாதாரம் ஒரு தனிக் கலையாக ஏற்பட்டதே அண்மையிலேதான். 'பொரு ளாதார நூலின் தந்தை' யெனப்படும் ஆதம் ஸ்மித் 'நாடு களின் செல்வம்' என்ற நூலை எழுதியதே கி. பி. 1776-ல்தான். அதுவரையில், பொருளாதாரம் அரசியல் நூலின் ஒரு பகுதி யாகவே எங்கும் கருதப்பட்டது. மக்களின் பொருளாதார வாழ்க்கை அரசாங்கத்தின் மேற்பார்வையில் நடந்துவந்த காலத்தில், பொருளாதாரம் அரசியலின் ஓரங்கமாகவே இருந்தது. ஆதம் ஸ்மித் கூட, 'பொலிட்டிகல் இகானமி'

அதாவது, 'அரசாங்கப் பொருளாதாரம்' என்றே பெயரிட்டார். பின்னர், அவரால் ஒரு கொள்கை வெளியிடப்பட்டது. அதன்படி, அவர் அரசாங்கம் தனி மனிதனின், பொருளாதார முயற்சிகளில் தலையிடலாகாது: அதுவே மக்கள் நலனுக்கு உறுதி பயப்பதாகும்: காத்தற் கடமையைச் சரிவரச் செய்து முடிப்பதே அரசன் கடமை என்றார். அதன் பின்னரே பொருளாதார நூல் அரசியல் நூலினின்றும் பிரிந்து ஒரு தனி நூலாகியது; அதன் பெயரும் மாறியது. 'பொலிட்டிகல் இகானமி' என்பது அரசியற்றொடர்பு நீங்கி, இன்று 'எகனமிக்ஸ்' எனத் தனி விஞ்ஞானப் பண்பைக் காட்டும் வகையில் பெயர் மாற்றம் பெற்றது.

இக் கருத்தும் மாறிவிட்டது. அரசாங்கம் தலையிட்டு உருப்படுத்தாத வகையில் ஒரு பொருளாதார நெறியில்லை. எனவே, பழைய அரசியற் பொருளாதாரம் என்பதைக் குறிக்கும் 'பொலிட்டிகல் இகானமி' என்னும் சொற்றொடரே தனி விஞ்ஞானப் பண்பைச் சுட்டும் 'எகனமிக்ஸ்' என்னும் பெயரினும் சிறந்தது எனக் காலஞ் சென்ற டாக்டர் கீன்ஸ் நிறுவிப் போந்தார். அரசியலின்றிப் பொருளாதாரம் இல்லை. பொருளாதாரம் அரசியலினின்றும் பிரிந்து வாழ்த லருமை.

அன்றைய அருத்த நூல்கள் எல்லாம் பொருளாதாரத்துக்குத் துணைக் காரணமாயிருந்த அரசியல்பற்றியே பெரும்பாலும் பேசின. அற்றை நாளில், இன்றைய பொருளாதாரச் சிக்கல்களும் விரிந்த அளவிலில்லை. இதனால், வறுமையேயில்லை; பொருளாதார ஏற்றத் தாழ்வு இல்லை என்பது முடிபன்று. அன்றைய கோட்பாடு பொருளாதாரக் கலையை ஆராய்ச்சித் துறையில் இறங்கவிடவில்லை. அவனவன் முன்னாட் செய்த அறப் பயனே, பொருளாதார ஏற்றத் தாழ்விற்குக் காரணம் என்ற கருத்து வேரூன்றி யிருந்தது. அந் நாளில், வாணிகம் விரிவடையவில்லை. ஆதலின், வாணிகம் பற்றிய இன்றைய அயல்நாட்டுச் சிக்கல்கள் எழவில்லை. நாணயச் செலாவணி அன்று மிகுதியாக இல்லை. ஆதலின், இன்றைய நாணயச் சேமிப்புச் சிக்கல்களும் இல்லை. எளிமையாய்ச் சுருக்கமாய்ப் பொருளாதாரப் பேரலைப்புக்க ளின்றிக் கலக்கமில்லாது வாழ்வு நடந்த காலம் அது.

இங்ஙனம், அரசியற் செல்வாக்கில் எழுந்த பொருளாதார நூல்களிலே வடமொழியில் கௌடில்யர் எழுதிய 'அர்த்த சாஸ்திரம்' பெயர்பெற்றது. அவர் தென்னாட்டிலிருந்து வடநாடேகிய முன்குடுமி யந்தணரென்றும், மகதநாட்டுச் சந்திரகுப்த மௌரியன் அரசவையைச் சார்ந்து அவன் பகைவரான நந்த மன்னரை வீழ்த்தத் துணையாகிப் பின் அமைச்சராயமர்ந்து அருத்த நூல் எழுதினரென்றும் கருதப்படுகின்றார். சந்திரகுப்தன் காலம் கி. மு. நான்காம் நூற்றாண்டாகலின், அருத்த நூலின் காலமும் அதுவேயாதல் வேண்டுமெனப் பலர் கருதுகின்றனர்.

அருத்த சாஸ்திரத்தின் பல கருத்துக்கள் வள்ளுவர் பொருட்பாலில் அமைந்திருக்கின்றன வென்றும், எனவே, வள்ளுவர் கி. மு. நான்காம் நூற்றாண்டிற்குப்பின் வாழ்ந்தவராதல் வேண்டுமென்றும் கருதுகின்றனர். கௌடில்ய சாஸ்திரத்துடன் வள்ளுவர் நூலுக்குரியதாகக் கருதப்படும் தொடர்பினை யாராய மூன்று கருத்துக்களைத் துருவியறிதல் வேண்டும்: (1) கௌடில்யர்க்கு முன் அருத்த நூல்கள் இல்லையா? (2) கௌடில்யர் காலம் கி. மு. நான்காம் நூற்றாண்டு என்பது பொருந்துமா? (3) வள்ளுவர் இவர்தம் நூற் கருத்துக்களைப் போற்ற இசைவுண்டா?

கௌடில்யர் தமது நூலின் முதல் அத்தியாயத்தில் சுக்கிரனுக்கும், பிருகஸ்பதிக்கும் வணக்கம் செலுத்துவதால் இவ் விருவரும் சிறந்த அருத்த நூல் ஆசிரியர்களாதல் வேண்டும். தம் நூல்,முன்பிருந்த அருத்த நூல்களைக்கண்டு திரட்டியதென்கிறார் கௌடில்யர்; ஏழாம் அத்தியாயத்தில் அமைச்சரிலக்கணங் கூறுங்கால் பரத்துவாசர், விசாலாட்சர், பராசரர், பிசுனர், குணபாதாந்தர், வாதவிபாதீ, பகுதந்தியின் மகன் என ஏழு ஆசிரியர்கள் கருத்தையும் மேற்கோள் காட்டி ஆராய்ந்து முடிவிற்கு வருகின்றார். இவ் வெழுவரும் அருத்த நூற் செய்தவராதல் வேண்டும். இதுவன்றி, ஆங்காங்கே தம்முடைய ஆசிரியர் கருத்தைக் காட்டி, ஒட்டியும் வெட்டியும் தமது மதத்தை அவர் நிலைநாட்டிச் செல்கிறார். இந் நிலையில் எத்துணையோ அருத்த நூல்கள் கௌடில்யருக்கு முன்னிருந்தனவாதல் தெளிவு.

அருத்த சாஸ்திரத்தின் காலத்தைப் பற்றி முடிவான கருத்துக்கள் இன்னும் ஏற்படவில்லை. சந்திரகுப்த மௌரியர் காலமாகிய கி. மு. நான்காம் நூற்றாண்டென அந் நூலைப் பதிப்பித்த டாக்டர் சாமு சாஸ்திரியும், முகவுரை எழுதிய டாக்டர் பிளீட்டும் கருதுகின்றனர். அவ் விருவர் கொள்கையையும் தழுவிய ஜாக்கோபி, ஜயஸ்வால், டி. ஆர். பந்தர்கர், ராதா குமுதமுகர்ஜி, என். என். லா., எச். சி. ரே., வின்ஸெண்ட் ஸ்மித் ஆகியோரும் எழுதினர். ஆர். ஜி. பண்டார்கர் கி. பி. முதல் நூற்றாண்டையது அருத்த சாஸ்திரம் என்றார். கி. பி. மூன்றாம் நூற்றாண்டென்று ஜாலி, ஸ்மித் ஆகியோர் பதிப்பித்த அருத்த சாஸ்திரத்தினாலும், விண்டர் நீட்ஸ் அவர்களின் ஆராய்ச்சியாலும் பெறப்படுகிறது. கே. எம். முன்ஷியின் முகவுரையோடும், ஆதரவோடும், ‘பம்பாய் பாரதீய வித்யா பவன்’ வெளியிட்டுள்ள ‘ஏஜ் ஆப் இம்பீரியல் யூனிட்டி’ என்ற இந்திய வரலாற்றின் இரண்டாம் தொகுதியில் கௌடில்யர் காலம் வரையறுக்கப்படவில்லையாயினும் மோரியர் காலத்திற்கு ஒரு சில நூற்றாண்டுகளுக்குப் பின் எழுந்ததே என்பதற்கு ஆறு உண்மைகள் குறிக்கின்றனர். (1) கௌடில்யர் கி. மு. நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்தவரென்பதற்குச் சான்றாக எடுத்தாளப்படும் ஆசிரியர்கள் எவரையும் கி. பி. மூன்றாம் நூற்றாண்டுக்கு முன் வாழ்ந்தவர்களாக உறுதியாகச் சொல்வதற்கில்லை. (2) அர்த்த சாஸ்திரத்தில் அரசியல் மொழி சமஸ்கிருதம் எனச் சொல்லப்படுகிறது. மோரியர் காலத்திலோ பிராகிருதம் அரசியல் மொழியாகும். கௌடில்யர் கருத்துப்படி எழுத்துக்கள் அறுபத்து மூன்றாகும். மோரியர் காலத்து இருந்தவையோ நாற்பத்து மூன்று எழுத்துக்களே. (3) கௌடில்யர் நூற்படி அரண் செங்கல்லால் அமைந்தது. ஆனால் ஆரியன், மெகஸ்தனீஸ், ஸ்டிராபோ ஆகிய கிரேக்க ஆசிரியர் விளக்கப்படி சந்திரகுப்தன் கோட்டை மரத்தாலாகியது. (4) அர்த்த சாஸ்திரத்தில் குறிக்கப்படும் விருதுகள் மௌரியர் காலத்தவை யல்ல. (5) கௌடில்யர் ஆளும் அரசிய லலுவலரைக் குறிக்கும் சில சொற்கள், பிற்காலத்திய கல்வெட்டுக்களிற் காணப்படுவனவன்றி மோரியர் காலத்துக் கல்வெட்டுக்களிற் காணக்கிடைத்தில.

*(6) கௌடில்யர் குறிக்கும் நிலவெல்லை, மோரியர் காலத்தவர் அறியாதது. கௌடில்யர் 'பார சமுத்திரம்' என்ற நாட்டைக் குறிக்கிறார். கி. பி. முதல் நூற்றாண்டிற் றோன்றிய 'பெரி புலுஸ்' என்ற கிரேக்க நூலில் "பண்டைய 'தாமிரபருணி' என்ற தீவே இன்று 'பார சமுத்திரம்' என்று வழங்குவது' என்ற குறிப்புக் காணப்படுகிறது, மோரியரோ 'தாமிரபருணி' என்ற பெயரையே அறிந்திருந்தனர். சீனமும் கம்போடியாவும் அர்த்த சாஸ்திரத்திற் குறிக்கப்படுகின்றன. மோரியர் காலத்தில் இந் நாடுகள் பற்றி அறிந்ததில்லை. கி. மு. 206-க்கும் கி. பி. 220-க்கும் இடையே சீனத்தையாண்ட 'ஹான்' வமிச அரசர்க்குமுன் சீனாவுக்கும், இந்தியாவுக்கும் தொடர்பிருந்ததாகத் தெரியவில்லை. நேபாளம் போன்ற நாடுகளைக் குறிப்பதும், கௌடில்யர் மோரியர் காலத்திற்குப் பிற்பட்டவர் என்பதையே விளக்கும்.*

*'பாரிடேல்சீத்தின்' ஆராய்ச்சிப்படி, கௌடில்யர் நூல் கி. பி. நான்காம் நூற்றாண்டை ஒட்டிய காலத்தில் வைக்கப் படலாம்; கி. மு. நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த சந்திர குப்த மௌரியர் காலத்ததன்று என்பதும் தெளிவு.*

*வள்ளுவர், அர்த்த சாஸ்திரத்தைப் பின்பற்றித் தம் பொருட்பாலை யமைத்தாரென்று சொல்வோமானால், அவர் தம் குறள் கி. பி. நான்காம் நூற்றாண்டிற்குப் பின் தோன்றிய தென்பது புலப்படும். அங்ஙனம் கூறத் துணிவார் தமிழருள் ஒருவரே. அவர் திருக்குறள் கி. பி. 450-ல் தோன்றியிருக்க லாம் என்று கருதுகின்றார். அர்த்த சாஸ்திரம் கி. பி. நான்காம் நூற்றாண்டிற் றோன்றியதெனின், அது தமிழில் ஆக்கம் பெறுதற்கு ஐம்பது யாண்டுகள் போதா என்பதையும் மனங்கொள்ளுதல் வேண்டும். அதன்படி திருக்குறளின் காலம் இன்னும் பிந்தியதாகவே முடிவு கட்டல் வேண்டும். அவ்வாறாயின் கி. பி. ஆறாம் நூற்றாண்டினைச் சார்ந்து எழுந்ததாகவே திருக் குறளைக் கருதுதல் வேண்டும். இங்ஙனம் கருதுவார் சொற்றொடர் ஆட்சிகளையே சிறந்த ஆகாரமாகக் கொண்டு கருத்தை நிறுவ முயல்கின்றனர். ஆனால், திருக்குறளின் தொடர்களும் கருத்துக்களும் புறநானூறு முதலிய சங்க இலக்கியங்களிலும்*

சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற காவியங்களிலும் பரக்க எடுத்தாளப்பட்டுள்ளன. வள்ளுவரே மேற்கூறிய இலக்கியங்களினின்றும் மொழிகளையும், தொடர்களையம் எடுத்தாண்டிருத்தல் கூடும் என்ற கருத்து இலக்கிய மரபிற்கு முற்றிலும் முரண்படும். இலக்கணம்போன்று சுருக்கச் சுவையும், விளக்கப் பொலிவும் சிறந்த திருக்குறளின் திட்பநுட்பஞ் செறிந்த பாக்களையே பொன்போற் போற்றிக் கவிஞர்கள் தம் இலக்கியங்களில் எடுத்தாண்டிருத்தல் கூடும் என்ற கொள்கை முற்றிலும் பொருத்தமுடைத்தாகும். எனவே, திருக்குறள் மேற்கூறிய நூல்களுக்குமுன் கி. மு. முதல் நூற்ருண்டுக்கும், கி. பி. முதல் நூற்ருண்டுக்கும் இடையே விளங்கியதெனக் கருதலாம்.

வள்ளுவரோடு தொடர்புடையவராகக் கருதப்பெறும் ஏலேல சிங்கரென்பார் சோழநாட்டிலிருந்து இலங்கை சென்று ஈழ நாட்டிலே செழுந் தமிழ் வளரச்செய்த செம்மலாய்க் கி. மு. முதல் நூற்ருண்டில் வாழ்ந்தவரென்ற உண்மை திரு இராமச்சந்திர தீக்ஷிதரவர்களால் உறுதியாகின்றது. எனவே, அதை யொட்டியே வள்ளுவர் காலமு மமைதல் வேண்டும். இம் முறையில் எண் ணுங்கால், கௌடில்யர் அர்த்த சாஸ்திரத்திற்கு, வள்ளுவர் நூல் காலத்தால் எவ்வாற்ருனும் பிற்பட்டதன்று என்பது வெள்ளிடைமலை. அர்த்த சாஸ்திரத்தை 'மாக்கு வல்லி'யின் அரசியல் நூலுடன் ஒப்பிட்டுக் கூறுவர். இதற்கு மாருகப் 'பாரிடேல் கீத்' என்ற ஆசிரியர், இரண்டிற்குமுள்ள மாறுபாடுகளைக் காட்டி 'மாக்வல்லி'யின் ஒப்புமையற்ற உயர்வைப் புலப்படுத்துகின்றனர். இவ்வாருக ஒழுக்கமே உயிராக யாத்த திருக்குறளாசிரியர் அர்த்த சாஸ்திர ஆசிரியருடன் எங்ஙனம் ஒப்புமைக் குரியார்? இருவர்க்கும், ஒற்றுமை சிறிது; வேற்றுமை பெரிது. அடிப்படைக் கருத்துக்களில் வள்ளுவர் பொருட்பாலுக்கும், அர்த்த சாஸ்திரத்திற்கும் எவ்வாற்ருலும் பொருத்தமில்லை. திருவள்ளுவர், பொருளுக்கே அடிப்படையாக உழவைச் சிறப்பிக்கின்ருர்; அதற்கெனத் தனித்ததோரதிகாரம் வகுத்து, "உழுவார் உலகத்தார்க் காணி" என உயர்த்துகின்ருர்; "பலகுடை நீழலுந் தங்குடைக்கீழ்க் காண்ப" ரென்று மன்னர்க்கு நிகராக மதிக்கிருர். அர்த்த

சாஸ்திரத்திலோ உழவரை நயத்தாலும் பயத்தாலும் நவி வுறுத்தி வரி வாங்கச் சட்டம் சமைக்கப்பட்டுள்ளது.

அர்த்த சாஸ்திரம் சாதிப்பிரிவினைகளை யடிப்படையாகக் கொண்டது; நால் வருணம் வகுத்து அவற்றின் அடிப்படை யின் மேல் அறம் பொருள் இன்பத்தை யமைக்கிறது; அறத் தொடும், இன்பத்தொடும் தொடர்பற்ற ஓரரசியல் நிலையையும் பொருள்செயல் வகையையும் வற்புறுத்துகிறது. திருக் குறளோ, "பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்கும்" எனப் பேசி வருணப் பாகுபாட்டை வன்மையாகக் கண்டிக்கிறது; "பொருளானும் எல்லாம்" என மருண்டு சமூக வளர்ச்சியின் அடிப்படையாகும் அறத்தைக் கைவிடும் கண்மூடி நெறியை மருளெனப் பேசுகிறது. எனவே, பொருளின் சிறப்பை வள் ளுவர் போற்றும் முறை வேறு; அர்த்த சாஸ்திரம் தரும் சிறப்பு அதற்குப் பல் வகையிலும் மாறுபட்டது.

மக்கள் ஆறிலொன்று கொடுப்பதையே . அரசனுக்குரிய வரியென வள்ளுவர் வகுக்கிறார். அதுவும் மக்கள் மனமுவந்து ஈதலாக விருத்தல் வேண்டும். மக்கள் மனம் நோக அச்சுறுத்தி வரி வாங்குதலை வள்ளுவர் வன்மையாகக் கண்டிக்கிறார்; பாலைவனத்தே வேல் காட்டி வழிபறி செய்யும் கள்வனும் கொடுங்கோன்மையால் குடிகளை நலிந்து வரிகொள்ளும் மன் னவனும் ஒருநிகர்பட்ட கயவர் எனக் கடிந்துரைக்கின்றார்.

"வேலொடு நின்றான் இடுவென் றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு" என்பது குறள்.

அர்த்த சாஸ்திரப்படி, அரசன் பொருளின் பொருட்டுச் செய்கின்றவை வியப்பையும் நகைப்பையும் விளைவிப்பன. மன் னனின் ஒற்றர்கள் மாறுவேடம் புனைந்து நாட்டு வணிகருடன் கூட்டுத் தொழில் நடத்திப் பொன்னும் வெள்ளியும் கைவரப் பெற்றபின் வஞ்சித்து நீங்கிவிடுவர்; பொருள் கொடாத செல் வர்கள் இல்லங்களைக் கொள்ளையடித்தற்கும் அஞ்சார்; ஆலயங் களில் அற்புதங்கள் தோன்றுவனவாய் மயக்கி அச்சுறுத்திப் பொருளீட்டுவாரு முண்டு; மரத்திலும் ஆலயங்களிலும், பேயும் பாம்பும் உறைவதாகப் பிதற்றிக் குருட்டு நம்பிக்கை யூட்டிப் பொருள் கொள்வாருமுளர். குற்றமற்ற செல்வர்களை,

ஒற்றர்தம் புனைந்துரையால் குற்றவாளிகளாக்கித் ‘ தண்டம் ’ என்ற பெயரில் பொருளைப் பறிக்கவும் அரசன் தயங்கான். தவவேடத்தில் மறைந்து, பொருளும், செல்வமும், மாதரும் “ மந்திரத்தாற் றருவே ”மென மக்களை மயக்கி அரசாங்கத் திற்குப் பொருள் திரட்டும் ஒற்றர்களும் உளர். பொருட் பெண்டிர் விடுதியின் மூலம் வரிதிரட்டுதலையும் அர்த்த சாஸ்திர அரசாங்கம் அனுமதித்துவந்தது.

“ திரு நீக்கப்பட்டார் தொடர்பு ” என வள்ளுவரால் வெறுத்தொதுக்கப்பட்ட வரைவின் மகளிரை வருவாய்க் கருவி யாகக்கொள்ளும் அர்த்த சாஸ்திரம் வள்ளுவர்தம் வாய்மொழி யுடன் பொருந்துமோ ? இருநூற்று முள்ள முரண்பாட்டை விளக்கப் பிற சான்றுகளும் வேண்டுமோ ?

கௌடில்யர் உழவர்க்கு விதிக்கும் வரிகளாவன :

(1) உற்பத்தியில் ஒரு பகுதி.

(2) பலி—அப் பகுதிக்கு மேலும் இடும் ஒரு வரி.

(3) உடைமைகளின்மீது வரி.

(4) மேய்ச்சல் நிலங்களின்மீது வரி.

(5) நிலங்களை யளத்தற்கும் அறுதியிடுதற்கும் வரி.

(6) காவல் வரி.

அறிவையும் உடலையும் கெடுக்கும் கள்ளை அறவே “ உண்ணற்க கள்ளை ” என வள்ளுவர் ஒதுக்குகிறார். ஆனால், அர்த்த சாஸ்திரமோ மதுவை ஆக்கவும் பரப்பவும் அரசாங்க மேற்பார்வையாளனை அமைக்கிறது. இம்மேற்பார்வையாளன் கோட்டைகளிலும், நகரங்களிலும், கிராமங்களிலும் சென்று மதுவை வழங்குவான். நறுமணப் பொருள்களும், நல் லிருக்கைகளும், மென்படுக்கைகளும், மலர் மாலைகளும் விளங் கக் கருத்தைக் கவரும் காலத்திற் கேற்ற இனிய கோலத்தில் மதுவருந்தும் சாலைகள் காணப்படும். இங்குத் தம் மனைவிமக்களுடன் குடிமக்கள் குடித்து மயங்குவர் எனக் கூறுகிறது அர்த்த சாஸ்திரம்,

இங்ஙனம் பற்பல அடிப்படை வேற்றுமைகள் இருக்க, மேல்வாரியாகக் காணப்படும் சிற்சில ஒற்றுமைகளைக்கொண்டு இரு நூலுக்கும் ஒற்றுமை காண முயல்வது இரங்கத்தக்கதாகும்.

உழைத்து வருந்தும் உரிமை கீழ்மக்களுக் கென்றும், தழைத்துப் பயன்பெறும் உரிமை மேன்மக்களுக் கென்றும் வகுக்கப்பட்டன. ஸ்மிருதியில் பிருகஸ்பதி என்பான் உழவினால் பொருளீட்டுதலை வேதத்தாலும், வீரத்தாலும், துறவாலும் பொருளீட்டுதற்கு அடுத்தபடியாகவும், சூதாலும், களவாலும் பொருளீட்டுதற்குச் சற்று உயர்ந்தபடியாகவும் கூறுகிறான். மனுவும் பசுக்கள், குதிரைகள், வண்டிகள் ஆகியவற்றை விற்று வாழ்தலையும் உழவுத் தொழில் புரிதலையும் இழிவாக எண்ணச் செய்கிறார்: (மனு iv 5–6, iii 64).

இங்ஙனம் அடிப்படைக் கொள்கையில் வேறுபாட்டினையுடைய வள்ளுவர் பொருட்பால், வடமொழி நூல்களுக்குக் கருத்து வகையால் சிறிதும் கடப்பாடு உடையதன்று. பெருநூல்கள், எத்துணை தாம் சிந்தனையின் உச்சியை எய்தின வாயினும், கற்பனைத் தருவிற் கனிந்தனவாயினும், வினையின் நீங்கி விளங்கிய அறிஞரால் யாக்கப்பட்டனவாயினும், அந் நூலாசிரியர் கால மக்களின் பண்பாட்டையும், அக் கால நிலையையும், ஓரளவிலேனும் நிழல் செய்தே தீரும். எனவே, வள்ளுவர் கண்ட பொதுப் பேருண்மைகள் அவர் காலத் தமிழர்தம் பண்பாட்டை நன்கு காட்டுகின்றன.

அர்த்த சாஸ்திரம் இவ்வாறாக, அதற்கும் முன்னே நிலவிய வடமொழியாசிரியர்களின் அருத்தநூற் கருத்துக்களை வள்ளுவர் கொண்டனரோவெனின், அதற்கும் இடமில்லை. மேற்காட்டிய அடிப்படை வேற்றுமையே காரணம். கௌடில்யரைப் போலவே ஒரு குலத்துக்கொரு நீதி வழங்கும் சாதியடிப்படையிலேயே அந் நூல்களனைத்தும் இலங்குகின்றன. ‘ஸ்மிருதிகள்’ என்னும் வடமொழித் தர்ம சாஸ்திர நூல்கள் பிறப்பினால் வகுத்த வருணாஸ்ரம உயர்வு தாழ்வுச் சட்டங்களெல்லாம் பொருளுற்பத்தி முறையைப் பெரிதும் குலைப்பனவாக அமைந்தன. பொதுவாக அந் நூல்களெல்லாம் உழவை

யும், தொழிலையும் இழிவாகவே கருதின. உழைப்போர் பல் வகைச் சமய சமூக இடர்ப்பாடுகளுக் கிலக்காயினர். நீதி வழங்குவதில் இவர்களுக்கு ஓரம் காட்டப்பட்டது. வள்ளுவர் சிறப்பிக்கும் உழவு, நாலாம் வருணமாகிய, இழிந்தோராகக் கருதப் பட்ட, சூத்திரர்க்கே யுரியதாக்கப்பட்டது. அக் காலத்து அயராது உழைத்து வருந்தும், உண்மைகளின் ஊற்றுனதோர் உயர்ந்த நாகரிகத்திலும், பண்பாட்டிலும் பொலிந்துநின்றது. ஆனால், வடமொழி அடுத்த நூல் காட்டும் மக்களிடத்தே நிலவிய அக் கால நாகரிகம், பண்பாடு, சூழ்நிலை யாவும் தமிழர்க்குப் பெரிதும் பொருந்தாதனவாகும். தாம் வாழப் பிறர் தாழ, வாழ்வுக்குப் போராடும் நிலையில் அந் நாட்டு மக்கள் இருந்தனர். "யாதும் ஊரே, யாவருங் கேளிர்" என்ற பெருமிதப் பேருணர்ச்சி பூத்துக் காய்த்துக் கனியு மளவில் வடவர்தம் நாகரிகப்புலம் பண்பாடு அடையவில்லை.

எனவேதான், வடநூலொடுமட்டு மன்றி வீரவாழ்விற் பொலிந்த பண்டைக் கிரேக்கர் கருத்துக்களோடுகூட ஒற்றுமை காணுதற்கில்லாதனவாய் வள்ளுவர் பொருளாதாரக் கருத்துக்கள் பொலிவுற்று மிளிர்கின்றன. வடமொழியாளரைப் போலவே, வள்ளுவர் மரபுக்கு வேறுபட்டதாகக் கிரேக்க ஆசிரியரான அரிஸ்டாட்டிலும் 'அரசியல் நூல்,' 'ஒழுக்க நூல்' இரண்டையும் தொடர்பற்ற தனித்தனி நூல்களாக எழுதியுள்ளார்; 'கிரேக்கர்,' 'அடிமைகள்,' என்று தாம் வாழ்ந்த சமூகத்தை இரு பிளவு படுத்துகின்றார்; உடலுழைப்பை இழித்து, உழவை அடிமைகள் தொழிலென ஒதுக்குகிறார். ஈதலைப் பெரிதென மதியாத அரிஸ்டாட்டில் அதனை விரித்தாரில்லை. காரணம், பிறருழைக்கத் தாம் வாழ்தலென்னும், நாகரிக நிலையிலேயே அரிஸ்டாட்டில் காலத்துக் கிரேக்கர் நின்றமையே. சுரண்டலற்ற நாகரிக நிலையிற்றான் உயர்வு தாழ்வற்ற அகன்ற இலட்சியங்கள் செழிக்கமுடியும். வள்ளுவர் காலத் தமிழர் வாழ்வு அங்ஙனம் பொலிந்து நின்றதாற்றான், வள்ளுவரின் அடிப்படைக் கொள்கைகள் தமக்கே உரியனவாய், மற்றவர்க்கும் கடப்பாடற்றனவாய்த் தனித்து மிளிர்கின்றனபோலும்!

பெர்ட்ரன்று ரஸ்ஸல் என்பார் ஒழுக்க நூலிலக்கணம் கூறப்போந்து முப்பேர் ஆய்வு முறைகளைக் கற்பிக்கிறார் :

TAMIL SANGAM

(1) ஆசிரியர் எழுதும் நூலகத்தே காணப்படும் ஒரு கருத்தோடு அதனுள்ளேயே மற்றொரு கருத்துக்கு முரண்பா டுண்டா?

(2) ஒரு நூலகத்தே சொல்லும் கருத்துக்குப் புறத்தே அவ் வாசிரியரின் வேறு நூல்களில் முரண் காணுமாறுண்டா?

(3) நமது சீரிய ஒழுக்க உணர்ச்சிக்கிசைய ஒழுக்கம் பற்றி எழும் வினுக்களுக்கு அந் நூலில் விடைகளுண்டா?

இம் மூன்று முறைகளையும் உரைகல்லாய் வைத்து வள் ளுவர் நூலை ஆராய்கையில், அகமுரண்பாடற்ற ஒருமைப் பாட் டுடன் திருக்குறள் யாண்டும் பொலிவதைக் காணலாம். ஒவ் வோர் அதிகாரத்திலும் நுதலிய பொருள் அறுதியிட்டு வரை யறை செய்யப்பட்டிருத்தலைக் காண்கிறோம். இது, வள்ளுவர் கையாளும் தனித்ததோர இலக்கிய வுத்தி. நூல் முழுவதும் உண்மையின் ஒருமைக் காட்சியில் தோய்ந்து நிற்கும் வள்ளுவர், அனைத்தையும் ஊடுருவிப் பிணைத்து நிற்கும் நடுச் சரடாய் அறம் என்ற ஒன்றனையே அமைத்துள்ளார். இரண்டாம் முறையாகிய புற முரண்பாட்டு ஆராய்ச்சிக்கு வள்ளுவர்பால் இடமில்லை. திருக்குறள் ஒன்றே அவர்தம் ஒருதனிச் செல்வ மாக நின்று நிலவிவருகிறது. மூன்றாவதாகக் கருதப்படும் ஒழுக்க இசைவுமுறையில் தமிழகத்துச் சான்றோரின் ஒழுக்க வுணர்வுக்கும் தமிழ் மாநிலப் பண்பாட்டு நெறிக்கும் ஒப்பற்ற கருவூலமாக வள்ளுவர்தம் கருத்துக்கள் திகழ்கின்றன.

எனவே, கிரேக்க அறிஞர் நூல்களும், வடமொழி அருத்த நூல்களும் வள்ளுவர் வகுத்த பொருட்கொள்கைகளோடு நிக ராக நிற்கமாட்டாமல் பின்னடைதல் தெளிவு. வள்ளுவர்தம் ஒண்பொருள், ஒப்பற்றதாய், உவமையற்றதாய், நாகரிகம் தழைப்பதாய்த் தனியரசு ஓச்சுகின்றது. இற்றை நாளில், பொருளாதார நூலென்பது ஒரு வெறுங் கருவிநூலாகவே கருதப்படுகின்றது. முதலாளித்துவம், பொதுவுடைமை, அல் லது இரண்டுங்கலந்த அமைப்பு எனப் பிறர் வகுக்கும் ஓர் இலக் குக்கு வழிதுறைகளை வகுப்பதே பொருளாதார நூலின் கட னெனக் கருதப்படுகின்றது. கருவிநூலாகலின் ஒழுக்க நெறிக் கும், அதற்கும் தொடர்பு யாதும் இன்றெனக் கொள்ளப்படு

கின்றது. இலட்சியம் வகுப்பது பிறர்கடன்; அதற்குக் கருவிகள் வடிப்பது பொருளாதார நூலின் கடன் என்ற கோட்பாடே நிலவிவருகிறது.

இங்ஙனம் தனக்கெனக் குறிக்கொள் ஏதுமில்லாது வெறும் கருவிநூலாய் அமைவது நூலிலக்கணத்திற்குச் சிறப்பின்றும். குறிக்கோளில்லா எக் கலையும் கலையாகாதெனச் சுட்டவே, வள்ளுவர், முதலதிகாரத்திலேயே, "கற்றதனாலாய பயனென் கொல்...?" என்று கேட்டுப் போந்தனர். இவ்விடத்தே, காந்தியடிகளின் பொருளாதார நூல்பற்றிய கருத்துக்கள் ஒப்புநோக்கி இன்புறத்தக்கன. அண்ணல் அருள் மொழியாவன:

"ஒழுக்கத்தை மறப்பதாகவோ, புறக்கணிப்பதாகவோ பொருளாதாரம் அமையுமாயின், அது பொய்யானதாகும். எங்ஙனம் மெய்யான ஒழுக்கநூல் சீரியதொரு பொருளாதார நூலாகவு மமையுமோ, அங்ஙனமே மெய்யான பொருளாதார நூலும் ஒழுக்க நூலின் சாலச் சிறந்த பண்புகளோடு முரண்படாது பொலிவுறும். பொருளையே தேவென வணங்கச் செய்து, மெலியாரை வருத்தி வலியார் பொருள் திரட்ட வுதவும் ஒரு பொருளாதார நூல் பொய்யுடைத்தாய், இருள் பரவியதாய்ப் போந்த ஒரு புலைக்கலையாகும். அது சாவுக்கு வழி காட்டுவதாகும். ஆனால், மெய்யான பொருளாதாரமோ பொது நீதிக்கு வழிகாட்டுகின்றது; எளியவர் உட்பட எவரையும் சமமாக முன்னேற்றுகின்றது; மனிதன் மான வாழ்வுக்கு இன்றியமையாது நின்று நிலவுகின்றது."

வள்ளுவர்தம் பொருட்பால் தனிச் சிறப்புடையதாய், காந்தியடிகள் காட்டிய பொருளாதார இலக்கணத்திற்கு இலக்கியமாய்ப் பொலிந்துநிற்றல் தமிழர்தம் தனிப்பெருமைக்குரியதாகும். மெய்யான ஒழுக்கமே உறுதி சான்ற பொருளாதாரமாகும். ஒழுக்கத்தின் இன்றியமையா உயிர்நிலையாக அமையவேண்டுவது பொருளாதாரம். அப் பொருளாதாரமே கருவிநூலும் இலட்சியநூலும் இரண்டுமாகப் பொலிவது.

வள்ளுவர்தம் பொருட்பால் கைக்கொண்ட கருவி அறம். காணத்துடிக்கும் இலட்சியம் பின்வரும் குறள்மணியாகும்:

> "இரந்துமுயிர்வாழ்தல் வேண்டிற் பரந்து
> கெடுக உலகியற்றி யான்."

# வள்ளுவரும் குடிமையும்

## மு. வரதராசன்

''படைகுடி கூழ்அமைச்சு நட்புஅரண் ஆறும
உடையான் அரசருள் ஏறு''

என்று அரசின் அங்கமாகத் திருவள்ளுவர் ஓதிய ஆறனுள் 'குடி' என்னும் குடிமைபற்றிப் பொருட்பாலின் இறுதியில் விளக்குகின்றார். எந்த நாட்டில் குடிமக்கள் நல்லவர்களாய் விளங்குகின்றார்களோ, அந்த நாட்டில் நல்லரசு எளிதில் நிலவும். மக்கள் தக்கவர்களாக இல்லாதபோது, நாடாளும் தலைவன் எத்துணை முயற்சி செய்தபோதிலும், நல்லரசை நிறுவுதல் அரிது. ஆதலின், ஒரு நாட்டிற்குப் படையும் பொருளும் அமைச்சும் நட்பும் அரணும் எவ்வளவு இன்றியமையா தனவோ, அவ்வளவு இன்றியமையாதது குடிமையும் என்பது வள்ளுவர் கருத்து.

சமுதாயமாய்ச் சேர்ந்து வாழ்வதற்குப் பல நல்ல பண்பு கள் வேண்டும். குடி மக்களுக்கு அந்த நற்பண்புகள் இயல்பாக அமைந்திருந்தால்தான், நல்லரசு நிலவுதல் இயலும். அச்சுறுத் தல் காரணமாகவோ, கட்டாயப்படுத்தல் காரணமாகவோ, சிறிது காலம் நல்ல பண்புகள் உடையவராய் நடித்தல் கூடும். அதனால் பயன் இல்லை. அத் தகைய மக்கள் பலர் வாழும் நாட்டில் அரசு அமைதியாக நெடுங்காலம் நீட்டிக்காது. எதிர் பாராதன நிகழ்ந்து அல்லல் விளையும். ஆகவே, அச்சுறுத்தல் இன்றி, கட்டாயப்படுத்தல் இன்றி, நற்பண்புகள் இயல்பாகவே அமைதல் வேண்டும் என்கின்றார் திருவள்ளுவர்.

"இற்பிறந்தார் கண்அல்லது இல்லை இயல்பாகச்
செப்பமும் நாணும் ஒருங்கு."

இவ்வாறு இயல்பாக அமைதற்குரிய நற்பண்புகள பல. குடிமை என்னும் அதிகாரத்தில் திருவள்ளுவர் நற்குடிப் பிறந்தாரின் பண்புகளாக எடுத்தோதுவன : செப்பம், நாண், நகை, ஈகை, இன்சொல், பணிவு, குன்றுவ செய்யாமை என்பன,

பொது வாழ்க்கையில் ஈடுபடுவோர்க்குச் செப்பம் வேண்டும். செப்பம் என்பது நடுவு நிலைமை. தமக்கு ஒருவகையும் பிறர்க்கு ஒரு வகையுமாக நடப்போரால் பொது வாழ்க்கையில் பற்பல தீமைகள் விளையும். இத் தகையோர் நீதிமுறை வழுவு வதற்கு அஞ்சார் ; கையூட்டு (லஞ்சம்) வாங்குவதற்குத் தயங் கார் ; பொதுப் பணத்தைக் கையாள நாணார் ; அறநெறியைப் பொருட்படுத்தார். ஆகவே, குடிமக்களுக்கு இன்றியமை யாத குடிமைப் பண்புகளை அறிவுறுத்தும் திருவள்ளுவர், முதலில் செப்பம் வேண்டும் என்கின்றார்.

அடுத்த நிலையில் கூறப்படும் பண்பு, நாணுடைமை என் பது. தகாத செயல்களில் ஈடுபடாமல் நாணும் தன்மை குடி மக் களுக்கு வேண்டும். திருவள்ளுவர் இந்தச் சிறந்த பண்பைப் பற்றித் தனியே ஓர் அதிகாரத்தில் விரித்துரைக்கின்றார்; நாணுடைமைதான் மக்கட் பிறப்பின் சிறப்பு என்றும், சான் றோர்க்கு அதுவே அணிகலன் என்றும், பிறர் பழியையும் தம்பழிபோல் கருதி நாணுதல் வேண்டும் என்றும் நாணம், வாழ்க்கைக்கு வேலி போன்றது என்றும், அதனை மேற்கொள் ளாதவர் பொது வாழ்க்கையில் புகலாகாது என்றும், விளக்கு கின்றார். நாணம் இல்லாத மக்கள் வாழத் தகுதியில்லாதவர் என்னும் கருத்துடன், அவர் உயிரோடு வாழும் வாழ்வு போலி வாழ்வே என்றும், கண்டோர் மயங்குமாறு மரப்பாவை உயி ருள்ளதுபோல் கயிற்றால் இயங்குவதைப் போன்றது என்றும் எடுத்துரைக்கின்றார் :

"நாணஅகத் தில்லார் இயக்கம் மரப்பாவை
நாணால் உயிர்மருட்டி யற்று."

நாணுடைமை என்னும் பண்பைத் தனி அதிகாரத்தில் விளக்கும் திருவள்ளுவர், குடிமை பற்றிப் பொதுவாகக் கூறும் போதும் இருமுறை குறிக்கின்றார். அதனைத் தொடர்ந்து, அவர் எடுத்துரைக்கும் குடிமைப் பண்புகள் ஒழுக்கம் வாய்மை என்பன. நல்ல ஒழுக்கமும் உண்மை வாழ்வும் குடி மக்களுக்கு வேண்டும் என்கின்றார்.

மலர்ந்த முகம், கொடைப் பண்பு, இன்சொல் கூறல், பிறரை இகழாமை ஆகிய நான்கும் மேலனபோலவே இன்றியமையாதவை. ஒருவரோடு ஒருவர் கூடிப் பழக வேண்டிய பொது வாழ்க்கையில மலர்ந்த முகம் இல்லையேல் பெருங் குறையாகும். உதவும் நெஞ்சம் இல்லையேல், முகமலர்ச்சியும் பயனில்லாமற் போகும். கடுஞ்சொல், பிரிவுக்கும் பகைக்குமே இடந்தரும் ஆதலின், ஒன்றுபடச் செய்யும் ஆற்றல் உள்ள இன்சொல் வேண்டும் என்கின்றார். பிறரை இகழ்வோர் ஒற்றுமையைக் குலைத்துப் பாழ்படுத்தும் போக்கினர்; ஆதலின், இகழாமை வேண்டும் என்கின்றார்.

"நகைஈகை இன்சொல் இகழாமை நான்கும்
வகைஎன்ப வாய்மைக் குடிக்கு."

இந்த நான்கு அரிய பண்புகளைப்பற்றித் திருவள்ளுவர் மேன்மேலும் வலியுறுத்துகின்றார்: வஞ்சனை யுள்ளத்தோடு தகாதன செய்தல் கூடாது என்றும், ஈரநெஞ்சம் வேண்டும் என்றும், வாய்ச்சொல் தீமையற்றதாய் இனியதாய் இருத்தல் வேண்டும் என்றும், பணிவுடைமை வேண்டும் என்றும் கூறிச் செல்கின்றார். கூடிவாழும் வாழ்வுக்கு - ஒற்றுமைக்கு - இடையூறுக உள்ளவற்றை எல்லாம் கடிந்துரைத்து, ஒற்றுமையை வளர்க்கும் நற்பண்புகளைப் போற்றி யுரைக்கின்றார்.

பொருளாசையை ஒழித்தல்வேண்டும் என்னும் அறிவுரை துறவிகளுக்குமட்டும் உரியது அன்று. துறவிகள் முற்றத் துறக்க வேண்டும்; தீரத் துறந்தவராய் விளங்கல் வேண்டும்; அவர்கட்குப் பொருளாசை எள்ளளவும் ஆகாது. இல்லறத்தாராகிய ஏனையோர்க்கு ஓரளவு பொருள்தேடும் முயற்சி வேண்டும். ஆயின், தேடிச் சேர்த்து வைக்கும் இவறன்மையும் கூடாது; மேன்மேலும் சேர்த்துப் பெருக்கல் வேண்டும்

என்னும் பேராசையும் கூடாது. அறத்துப்பாலில் 'வெஃகாமை' என்னும் அதிகாரம், பிறர்பொருளை விரும்பாமை பற்றி அறிவுறுத்துவது. பொதுவாழ்வு சிறந்தோங்கவேண்டும் என்னும் நல்லெண்ணம் உடையவராய்க் குடிமக்கள் வாழ வேண்டுமாயின், பொருளாசையை வரம்புகடந்து கொள்ளலாகாது. பொருளாசை மிகுந்த நெஞ்சம், அறநெறியைப் போற்றாது ; நீதியின் வரம்பைக் கடந்து செல்லத் தூண்டும். ஆதலின், குடிமக்களுக்குத் திருவள்ளுவர் உறுதிபெற அறிவுறுத்தும் வகையில்,

> " அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்
> குன்றுவ செய்தல் இலர்"

என்கின்றார் ; தகாதன செய்வதன் வாயிலாகக் கோடிக் கணக்கான பொருள்பெற முடிவதாக இருந்தாலும், அவற்றைச் செய்யாமல் விடவேண்டும் என்கின்றார்; பொருளை ஒருபால் வைத்து, மற்றொருபால் 'குன்றுவ செய்யாத மான'த்தை வைத்து, முன்னதைக் கைவிட்டுப் பின்னதைப் போற்றல் வேண்டும் என்று அறிவுறுத்துகின்றார்; மானம் என்ற அடுத்த அதிகாரத்தில் இதனையே பலபட விரித்துரைக்கின்றார் ;

> " இன்றி யமையாச் சிறப்பின ஆயினுங்
> குனற வருப விடல்."

> " சீரினும் சீரல்ல செய்யாரே சீரொடு
> பேராண்மை வேணடு பவா."

பொருள்பெற முடியாத நிலையில் நின்று மானத்தைக் காத்தலால், வறுமை வருவதாயினும் அதுபற்றிச் சோர்வுறாமல் தாழ்வுறாமல் உயர்ந்து விளங்கவேண்டும் ; "சிறிய சுருக்கத்து வேண்டும் உயர்வு;" மானத்தைவிட்டு அதனால்பொருள்பெற்று வயிறு வளர்த்து வாழும் இழிந்த வாழ்வு வேண்டா ; அதை விடச் சாவதே நன்று; மானத்தின் காரணமாக இவன் கெட்டான் என்று உலகத்தாரால் சொல்லப்படும் நிலைமையே நல்லது; சாவு என்றும் வருவது, வந்தே தீர்வது ; சிலநாட்கள் அதனிடமிருந்து தப்புவதற்காக மானத்தை விடலாகாது ; பெருமை அழிந்தபோது கவரிமான் என்னும் விலங்கும் உயிர் துறப்பதால், ஆறறிவுள்ள மனிதன் உயிர் துறக்கத் தயங்க

லாகாது ; அப்படி உயிர் துறந்து மானத்தைப் போற்றியவர்கள் அழியாப் புகழ்பெறுவர் :

" ஒட்டாபின் சென்றொருவன் வாழ்தலின் அந்நிலையே
கெட்டான் எனப்படுதல் நன்று. "

" மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்."

" இளிவரின் வாழாத மானம் உடையார்
ஒளிதொழுது ஏத்தும் உலகு. "

பொருளாசையாலும் உயிராசையாலும் நெறி பிறழாமல் வாழ வல்ல குடிமக்கள் ஊக்கம் மிக்கவராய்ச் செயற்கரிய செயல்களைச் செய்தல் வேண்டும் என்பது திருவள்ளுவரின் அடுத்த அறிவுரை. பெருமை என்னும் அதிகாரத்தில், ஊக்கம் மிகுந்த வாழ்வே ஒளியுள்ள வாழ்வு என்கின்றார். அந்த ஊக்கம், சிறந்த தொழில்கள் செய்வதன் வாயிலாக விளங்க வேண்டும். இழிவான தொழில்கள் செய்து இழிவு தேடிக்கொள்ளலாகாது. கற்புடைய மகளிர் தம்மைத்தாம் காத்துக்கொள்ளல்போல் பெருமை விரும்புகின்றவர், இழிதொழில்களில் புகாதவாறு தம்மைத்தாம் காத்துக்கொள்ளல் வேண்டும். அவ்வாறு காத்துக்கொண்டால்தான், செயற்கரிய செயல்களை நெறி அறிந்து செய்து முடிக்கும் ஆற்றல் ஏற்படும் :

" ஒருமை மகளிரே போலப் பெருமையும
தன்னைததான் கொண்டொழுகின உண்டு. "

" பெருமை உடையவர் ஆற்றுவர் ஆற்றின்
அருமை உடைய செயல். "

இவ்வாறு தம்மைத்தாம் காத்துக்கொண்டு ஊக்கம் குன்றாமல் வாழ்ந்து அரிய செயல்களைச் செய்வோர், அந்த ஆற்றலுக்கு இழுக்குத் தேடிக்கொள்ளாமல் வாழவேண்டும் என்னும் 'எச்சரிக்கை'யும் செய்கின்றார். ஆற்றலுடையவர் ஆற்றல் இல்லாதவரை இகழ்தல் கூடாது ; தம் ஆற்றலை நினைந்து செருக்குக் கொள்ளலாகாது ; பிறரிடம் குற்றம் கண்டு தூற்றித் திரிதலாகாது. இவ்வாறு திருவள்ளுவர் கூறும் அறிவுரைகளைக் கருதும்போது, அரிய செயல்கள் செய்து உலகத்தை ஆள விரும்புவோர் முதலில் தம் உள்

ளத்தைத் ஆளவேண்டும் என்னும் விழுமிய நெறி புலனாகின்றது. 'பெருமையும் தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு' என்னும் மணிமொழி பொன்போல் போற்றத்தக்கது.

'சான்றாண்மை'யில் நற்குணங்கள் நிறைந்த தன்மை கூறப்படுகின்றது. அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்னும் ஐந்தும் சான்றோர் தன்மைக்கு ஐந்து தூண்களாகக் கூறப்படுகின்றன. பிறர் தீமை சொல்லாத தன்மையும், பகைவரிடத்தும் பணிந்து திருத்தும் ஆற்றலும், நிகரல்லாதவிடத்தும் தோற்று விட்டுக்கொடுக்கும் பெருந்தன்மையும், இன்னா செய்தவர்க்கும் இனியவை செய்யும் தகவுடைமையும் பெறுதற்கரிய பேறுகளாகும். இவை அமைந்த சான்றோர், உலகம் எந்த நிலைக்குப் பிறழ்ந்து மாறினாலும் தாம்மட்டும் பிறழாமல் ஒரு நெறியே உறுதியாக வாழ்வர். இத் தகையோர் உலகில் இருத்தலால்தான், உலகம் அழிவுறாமல் விளங்கிவருகின்றது:

"ஊழி பெயரினும் தாமபெயரார் சான்றாண்மைககு
ஆழி எனப்படு வார்."

"சானறவர் சான்றாணமை குன்றின் இருநிலந்தான்
தாஙகாது மன்னோ பொறை."

மற்றவர்களின் இயல்பு அறிந்து நடத்தல் குடிமக்களுக்கு வேண்டிய மற்றொரு சிறப்பியல்பாகும். அதுவே பண்புடைமை எனப்படுவது. அதற்கு அடிப்படையாக வேண்டியது யாது? எளிமை; எல்லோரிடத்தும் எளிய செவ்வியோடு பழகும் தன்மை. பகைவரிடத்தும் இனிமையுற நடந்துகொள்ளல் வேண்டும்; நயமில்லாதன செய்து பகைப்பவரிடத்தும், கடுமை யின்றி நடத்தல் நல்லது. பலரோடும் கலந்து வாழும் வாழ்வில், உள்ளத்தில் மகிழ்ச்சி நிலவுமாறு விளங்கவேண்டும். இத் தகைய பண்பு இல்லாதவர் பிறரோடு கூடி வாழ்தல் இயலுமோ? இயலாது. அவர்கள் கைகால் முதலிய உறுப் புக்கள் உடையவராய் மக்கள்போல் தோன்றினும் மக்கள் அல்லர்; அரம்போல் கூர்மையான அறிவு உடையவரேனும் மக்கள் அல்லர்; மரம் போன்றவரே ஆவர். உலகம் இவர்

களால் நன்மையுறுவதில்லை. உலகம் அழியாமல் நன்மை யுற்று நிலவுவது பண்புடையவர்கள் இருத்தலாலேயே ஆகும்:

"உறுப்பொத்தல் மக்கள்ஒப்பு அன்றால் வெறுத்தக்க
பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு."

"அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண்பு இல்லா தவர்."

"பண்புடையார்ப் பட்டுஉண்டு உலகம்; அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மன்."

நற் பண்புகள் இல்லாத குடிமக்களிடத்தில் செல்வம் சென்று சேர்ந்திடுமானால், அது நாட்டுக்கே தீமையாகும். அவ்வாறு தீமையாய் விளைவது செல்வத்தின் குற்றம் அன்று; செல்வத்தைப் பெற்ற கீழ்மக்களின் குற்றமே ஆகும். அக்கீழ் மக்களுக்கும் பயன்படாமல், நாட்டுக்கும் பயன்படாமல், செல்வம் வீணாகின்றது; அத் தகைய செல்வம் உடையவர் களின் வாழ்வோ 'பூமிக்குப் பாரம்'. அந்தச் செல்வமோ அவர் களுக்கு ஒரு நோய். அந்தச் செல்வத்தால் நன்மை விளையும் என்று எதிர்பார்க்கும் நிலைமைபோய், தீமையே விளையும்; அது 'நடுஊருள் நச்சுமரம் பழுத்து' விளங்குவதைப் போன்றது. நச்சுமரம் ஊர் நடுவே இல்லாமல் எங்கேனும் காட்டினிடையே இருந்தால் கவலையில்லை; அல்லது, நடுவூரில் தோன்றிய அந்த நச்சுமரம் பழுக்காமல் வாளா நின்றாலும் தொல்லை இல்லை. அது பழுத்துக் கவர்ச்சியாக விளங்கு வதால், பலர் மயங்கி வாழ்வைப் பாழ்படுத்திக்கொள்ள நேர்கின்றது. பண்பு இல்லாத மக்களும் நாட்டில் வாழாமல் காட்டு விலங்குகளோடு கலந்து திரியக்கூடாதா? நாட்டினுள் வாழ்ந்தாலும் வாழட்டும்; செல்வம் இல்லாத சாதாரண மக்களாய் வாழ்ந்தொழியக்கூடாதா? செல்வம் நிரம்பிப் பலர் வாழ்வைக் கெடுக்கும் செல்வாக்குப் பெற்று விளங்குதல் வேண்டுமா? இந்த நிலைமை நாட்டுக்குப் பெருந்தீங்கு ஆகும்:

"நச்சப் படாதவன் செல்வம் நடுவூருள்
நச்சு மரம்பழுத் தற்று."

இவ்வாறு கூறுவதன் வாயிலாக, குடிமக்கள் நாட்டுக்கு நல்ல வர்களாய் வாழ்வதானால், தாம் பெற்ற செல்வத்தைப் பிறர்க்குப்

பயன்படச் செய்தல் வேண்டும் என்று திருவள்ளுவர் அறிவுறுத்துகின்றார். அவ்வாறு செல்வம் பிறர்க்குப் பயன் படுவதால் வறுமை வந்தபோதிலும் அதை வரவேற்பதே குடிமக்களின் கடமை என்கின்றார்:

“சீருடைச் செல்வர் சிறுதுனி மாரி
வறங்கூர்ந் தனைய துடைத்து.”

இத் தகைய உயரிய குறிக்கோள் கொண்டு, ஒவ்வொரு வரும் தாம் பிறந்த குடும்பமும் சுற்றமும் ஊரும் நாடும் உயர் வதற்காக உழைக்கவேண்டும். ‘குடிசெய்வல்’ (யான் பிறந்த குடியை உயரச் செய்வேன்) என்பது ஒவ்வொருவர்க்கும் நோன்புமொழியாக விளங்கவேண்டும். இதுவே நல்ல ஆண்மையாகும். இவ்வாறு உழைக்க முன்வருவோர்க்கு எல்லாக் காலமும் நல்ல காலமே ஆகும். அவர்கட்குக் குடியின் மானம் பெரிதே அன்றித் தன்மானம் பெரிது அன்று. ஆகவே, காலத்தை எதிர்பார்க்காமல், மானத்தையும் கருதாமல் விடாமுயற்சியுடன் ‘குடிசெய்வல்’ என்று உழைக்க வேண்டும். துன்பங்கள் பல வரலாம்; கவலையுறலாகாது; அவற்றை ஏற்பதே யாக்கையின் கடமை என்று துணிதல் வேண்டும்; அவ்வாறு துணிந்தால்தான் பிறர் துன்பத்தைப் போக்கும் ஆற்றல் நிரம்பும். இத் தகைய முயற்சியும் துணிவும் ஆற்றலும் உடையவர்கள் குடிமக்களாய் வாழும் நாடே நல்ல நாடு; இல்லையேல், எந்த நாடும் ஊரும் குடியும் வாழ முடியாமல், துன்பத்தால் நலிந்து அழிந்து போகும்:

“குடிசெய்வல் என்னும ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்.”

“இடுக்கண்கால் கொன்றிட வீழும் அடுத்தூன்றும்
நல்லாள் இலாத குடி.”

குடி மக்கள் எவ்வாறு உழைக்க வேண்டும்? ஏதேனும் ஒரு தொழில் செய்து நாட்டின் வளத்தைப் பெருக்கவேண் டும். தொழில்களில் சிறந்தது, அடிப்படையானது, உலக வாழ்வுக்கு அச்சாணி போன்றது உழவுத் தொழில். இல்லறத் தாரின் வாழ்வுக்குமட்டும் அல்லாமல், துறவிகளின் துறவறத் திற்கும் உயிர்தந்து காப்பது இத்தொழிலே. இரத்தல் என்னும்

*கொடுமையை ஒழிக்க வல்லதும் இதுவே. இவ்வாறு திருவள்ளுவர் கூறும்போது, உலகம் வேந்தனுடைய குடை நிழலில் வாழ்கின்றது என்பவர் எல்லோரும் திகைக்கும் வகையில் ஒரு பெரிய உண்மையை விளக்குகின்றார் ; அரசர்களின் குடைகளுக்கும் நிழல் தருவது உழவர்களின் தொழிலாகிய குடையே என்கின்றார் ; அரசர்களின் ஆட்சி முறை எல்லாவற்றிற்கும் அடிப்படை தொழிலாளர்களின் உழைப்பே என்னும் உண்மையை உணர்த்துகின்றார்:*

"பலகுடை நீழலும் தம்குடைக்கீழ்க் காண்பர்
அலகுடை நீழ லவர்."

*நிலம் உள்ள வரையில் உழைப்புக்கு இடம் உள்ளது என்றும், உழைப்பவன் நிலமகளை என்றும் மறத்தலாகாது என்றும், வறுமையால் வாடுவோரைக் கண்டு நிலமகள் நகைக்கின்றாள் என்றும் திருவள்ளுவர் கூறும் பொய்யா மொழிகள் பொன்போல் போற்றத் தக்கவை:*

"செல்லான கிழவன் இருப்பின் நிலம்புலந்து
இல்லாளின் ஊடி விடும்."

"இலமஎன்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலம்என்னும் நல்லாள நகும."

*இத் தகைய உழைப்பும் உழைப்பின் பயனும் இருக்கும் போது, வறுமை என்ற ஒன்று வந்தது எப்படியோ என்று திருவள்ளுவர் கருதி உருகுகின்றார். வறுமையினும் கொடியது உலகில் இல்லை ; குடி மக்களின் பண்பையும் புகழையும் கெடுக்கவல்ல ஆற்றல் வறுமைக்கு உள்ளது ; ஆதலின், வறுமை உள்ள நாட்டில் குடிமக்கள் கடமையைச் செய்து வாழ வழி ஏது? அவர்கள் பண்புடன் விளங்க வழி ஏது? அவர்கள் இழிநிலை உற்றால் நாடு உயர்வது எங்கே?*

"இனமையின் இன்னாதது யாதெனின் இன்மையின்
இன்மையே இன்னா தது."

"இன்மை எனஒரு பாவி மறுமையும
இம்மையும் இன்றி வரும்."

"தொல்வரவும தோலும் கெடுக்கும் தொகையாக
நல்குரவு என்னும நசை."

*வறுமை என்ற ஒன்று நாட்டில் இடம் பெற்றால் அதுவே வாயிலாகப் பலவகைத் துன்பங்கள் வந்து சேர்ந்துவிடும் என்பது பொய்யாமொழி:*

"நல்குரவு என்னும் இடும்பையுள் பல்குரைத்
துன்பங்கள் சென்று படும"

*அவ்வாறு நாட்டிற்கு வரும் தீமைகளுள் தலையானது இரவு (பிச்சை எடுத்தல்) என்பது. ஒன்றும் கரவாமல் உவகையோடு கொடுக்கும் கொடையாளர் இருந்தால் அவரிடம் இரந்து கேட்கலாம்; ஆயின் அவரிடமும் இரந்து கேட்காமல் மக்கள் எல்லோரும் மானத்தோடு வாழும் நாடே நல்ல நாடு. எனக்காக அல்லாமல், என்போன்ற மக்களுக்கும் அல்லாமல், இரந்து கேட்க வாய் இல்லாத பசுவுக்காக நீர் கேட்கின்றேன் என்று இரந்து வேண்டுவதும் இழிவான வாழ்க்கையே:*

"கரவாது உவந்தீயும கணஅன்னர் கண்ணும
இரவாமை கோடி உறும."

"ஆவிற்கு நீர்என்று இரப்பினும் நாவிற்கு
இரவின இளிவந்தது இல்."

*மக்களாய்ப் பிறந்தவர்களில் வறியவர் சிலர் மானம்கெட்டு இரத்தலையும், செல்வர் சிலர் இரக்கம் இல்லாமல் இல்லை என்று சொல்லிக் கரத்தலையும் கண்டுகண்டு திருவள்ளுவர் உருகி நிற்கின்றார்; இது என்ன உலகம், படைத்தவன் இப்படி ஏன் அமைத்தான் என்று உலகப் படைப்பையும் ஆராய்ந்து நோகின்றார்:*

"இரவுஉள்ள உள்ளம உருகும; கரவுஉள்ள
உள்ளதூஉம் இன்றிக் கெடும."

"இரந்தும் உயிர்வாழ்தல வேணடின் பரநது
கெடுக உலகியற்றி யான்."

*இறுதியாக, குடி மக்களுக்கு வேண்டாத சில தீமைகளையும் குறைகளையும் எடுத்துரைக்கும் திருவள்ளுவர் - நல்குரவு வேண்டா, இரவு வேண்டா, கரவு வேண்டா என்று ஆராய்ந்துரைத்த பின்னர், மக்கட் பண்பு இல்லாத கயவர்கள் குடிமக்களாய் வாழத் தகுதியற்றவர் என்று கடிகின்றார். கயவர்கள் எதைப்பற்றியும் கவலைப்படாதவர்கள்; மனம்போன*

போக்கில் விரும்பியவாறெல்லாம் நடப்பார்கள்; தம்மினும் தாழ்ந்தவர்களை நோக்கி உயர்வு மனப்பான்மை (Superiority complex) கொண்டு செருக்கு அடைவார்கள். அச்சமும் அவாவுமே அவர்களை இயக்குவன. மறை ஒன்றை (இரகசியத்தை) நெஞ்சில் நிறுத்தவும் ஆற்றல் அற்றவர்கள் அவர்கள்; பிறர்க்கு உதவியாக ஒன்றும் ஈயமாட்டாத நெஞ்சத்தால் எச்சிற் கையையும் உதிர்க்காதவர்கள்; ஆயின் தம்மை அச்சுறுத்தி ஒறுக்க முன் வருகின்ற கொடியவர்களுக்குப் பணிந்து கொடுப்பவர்கள். இனிய சொல்லால் அவர்களைத் திருத்த முடியாது. அவர்கள், கைய நெருக்கி ஒறுத்தால்தான் அடங்கி நடப்பார்கள்; நெறியோடு வாழ்ந்து உண்டும் உடுத்தும் இருப்பவர்களைக் கண்டால் குற்றம் சொல்லித் திரிவார்கள்; ஆனால் தமக்கோ ஒரு நெறியும் வகுத்துக் கொள்ளாமல் எதற்காகவும் எதையும் செய்து தம்மையே விற்றுவிடவும் வல்லவர்களாய்க் கொள்கை இல்லாமல் வாழ்வார்கள்: இப்படிப்பட்டவர்கள் மக்கள் போலவே தோன்றியபோதிலும், ஒரு நாட்டின் குடிமக்களாய் வாழ்வதற்கு எள்ளளவும் தகுதியற்றவர்கள் என்று திருவள்ளுவர் கடிந்துரைக்கின்றார்.

கயமை அற்றவராய், இரத்தலும் கரத்தலும் இல்லாதவராய், வறுமை அற்றவராய், உழவு முதலிய தொழிலில் ஊக்கம் குன்றாதவராய் வாழ்வோரே நல்ல குடி மக்கள். அவர்கள் மானம் உடையவர்கள்; பெருமை வாய்ந்தவர்கள்; சால்பு உள்ளவர்கள்; பண்பு அமைந்தவர்கள்; செல்வத்தை நாட்டு நன்மைக்குப் பயன்படுத்துகின்றவர்கள்: அவ்வாறு வாழ்கின்ற காரணத்தால்தான், அத் தகைய குடி மக்களால் குடி உயரச் செய்ய முடிகின்றது. அவர்களின் தனிப்பண்பே வள்ளுவர் கூறும் குடிமையாகும்.

# திருவள்ளுவர் காலம்

**கோவை கிழார்**

திருக்குறள் ஓர் உலகியல் நூல். அஃது ஒரு தமிழ்ப் பெரு மகனால் எழுதப்பட்ட தூய தமிழ் நூல். வேறு எந்த மொழியிலும் அதனைப்போல் உலக அறிவு சான்ற நூல் ஒன்று இல்லை. இத்துணைச் சிறப்பு வாய்ந்த நூல் எனினும், அஃது எக் காலத்தில் இயற்றப்பட்டது என்று கூறத் திட்டமான சான்று இல்லை. தமிழரிடம் தன்னலம், தற்புகழ்ச்சி, தற்பெருமை முதலிய இழி குணங்கள் இல்லாமையே இதற்குக் காரணம். தமிழர்கள், தம்முடைய தெளிந்த கருத்துக்களை நூல்களில் கூறுவார்களே யன்றித் தம்மைப்பற்றியும் தம் வரலாறுபற்றியும் கூறித் தம்மைப் பெருமைப்படுத்திக்கொள்ள மாட்டார்கள். பிற மொழியில் உள்ள ஆசிரியர்களோ, தம் கருத்துக்களைக்காட்டிலும் தம்மைப் பற்றிய குறிப்புக்களையே மிகுதியாக நுழைத்திடுவர். ஆகவே, அம் மொழிகளில் நூலாசிரியர்களின் வரலாறும் காலமும் வெகு எளிதில் அறியக்கிடக்கின்றன. தமிழிலோ, அவ்வாறு கூறுவது கடினம். சிறந்த ஆராய்ச்சியாளரும் கண்டுபிடிக்காத முறையில் தம் வரலாறுகளையும், காலம் பற்றிய குறிப்புக்களையும் தமிழர்கள் ஒளித்துவைத்துள்ளார்கள். இச் செய்கை அன்னார்களுடைய பெருந்தன்மையை, சிறப்பியல்பினை, நமக்குக் காட்டுகின்றது.

தமிழ் நாட்டைச் சுற்றிப்பார்க்கிறவர்கள் நிலைத்த கட்டிடங்களைக் காணவேண்டுமென்றால் இறைவனை வழிபடும்

நிலையங்களாகிய கோயில்களையே காணமுடியும்; பொது மக்களோ மன்னர்களோ வாழ்ந்த இடங்களைக் காணமுடியாது. பெருங்கடலுக் கப்பாலுள்ள தீவுகளிலும் தம் வெண்கொற்றக் குடையை வெற்றியுடன் செலுத்தித் தமிழ்ப் பண்பாட்டைப் புகுத்திச் செங்கோல் நடாத்திய சோழப் பேரரசர்கள் வாழ்ந்த அரண்மனைகள் எங்கே? முச் சங்கங்களை நிறுவி, ஆயிரக்கணக்கில் புலவர்களை ஆதரித்துத் தமிழை ஆராய்ந்த பாண்டிய மன்னர்கள் கோயில்களெங்கே? பெருங்காப்பியங்களை இயற்றி வைக்க வடவரைமட்டும் வாகைசூடி ஆரிய மன்னரைக் குற்றேவல் கொண்ட செங்குட்டுவன் போன்ற சேர மன்னர் உறைந்த பெருமனைகள் எங்கே? மலைகளைக் குடைந்தும் கல் மேல் கல் அடுக்கியும் கோயில்களை எழுப்பிய பல்லவர் வாழ்ந்த இடங்கள் எங்கே? இவைகளெல்லாம் மறைந்துவிட்டன அல்லவா? ஆனால், இறைவனுடைய கோயில்கள்மட்டும் அழியா நிலையில் இருக்கின்றனவே, ஏன்? தமிழ் மக்கள் இறைவனை உறுதியாக நம்பித் தம் வாழ்க்கையை நிலையாமையில் வைத்து வாழ்ந்தபடியினலே என்க. ஆகவே, தாம் வாழ்ந்த இருப்பிடங்களைப் பெரியவாகக் காட்டினர் அல்லர்; அத்துணைத் தந்நலம் இல்லாதவர்களாக இருந்தார்கள். மன்னரைப் போலவே புலவர்களும், தம் வாழ்க்கை புகழ் இவற்றைப் பிறர் அறியாவண்ணம் வாழ்ந்தனர். அந்த வகையில்தான் புலவர்களுடைய கால வரலாறு நமக்குக் கிடைப்பதில்லை. அந்த வகையிலேயே வள்ளுவருடைய கால நிர்ணயமும் இருக்கிறதெனை உணரவேண்டும்.

வள்ளுவருடைய வரலாற்றைப்பற்றியும், கால அளவைப் பற்றியும், பல ஆராய்ச்சியாளர்கள் ஏற்கெனவே எழுதியுள்ளார்கள் எனினும், யாவரும் ஒருமனதுடன் ஒத்துக்கொள்ளும்படியான ஒரு முடிவுக்கு எவரும் வந்திலர். பொதுவாக, எல்லாப் புலவர்களும், அப் புலவர்பெருமான் சங்க காலத்தினர் என்று மட்டும் கூறுகின்றனர். சங்க காலம் இன்னதென்று எவரும் உறுதியாகக் கூறவில்லை; ஏறக்குறைய பதினெட்டு நூற்றாண்டுகட்கு முன்னர் என்றுமட்டும் கூறுகிறார்கள். அதற்கு முன்னர் எத்தனை ஆண்டுகள் சங்ககாலம் எட்டியிருந்த தென்பதற்குப் போதிய சான்றுகள் இல்லை. ஆகவே, திருவள்ளுவர் காலத்தை

ஒரு நூற்றுண்டு அளவிலேயாவது முன்பின்னுகக் கூற வகை யில்லாம லிருக்கிறது. இனி, இக் கருத்தை ஓரளவு விரித்துக் கூறுவோம்.

தமிழ் இலக்கியத்தில், சங்க நூல்கள் என்ற தலைப்பில் சில நூல்கள் சேர்க்கப்பட்டுள்ளன. அத் தொகுதியிற் கண்ட நூல்கள் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க் கணக்கு என்பன. இவைகள் கடைச்சங்கப் புலவர்களால் இயற்றப்பட்டன. கடைச்சங்கப் புலவர்கள் நாற்பத் தொன் பதின்மர் எனக் கூறும் கதை யொன்றுண்டு. ஆனல், புலவர்கள் எண்ணிக்கையை ஆராய்ந்தால், அது நூற்றுக் கணக்காக விரியக் காண்கிறேம். இப் புலவர்கள் எல்லோரும் ஒரு காலத் தவ ரல்லர் : ஒரு மன்னன்கீழ் வாழ்ந்தவர்களு மல்லர். தமிழ் நாடு முழுவதும், பல இடங்களிலிருந்தும் பல குலங்களிலிருந்தும் வந் தவர்கள் என அறியலாம். இவர் இயற்றிய நூல்களோ பல திறப்பட்ட கருத்துக்களைக் கொண்டவைகள். அவைகளில் எட்டுத் தொகையில் உள்ள பாடல்கள் அதிகமான அடிகளைக் கொண்டன. அகம், புறம் என்ற இருவகைப் பொருள்களில் கணக்கற்ற புலவர்கள் அரிய கருத்துக்களைத் தொடுத்து வெளியிட்டுள்ளனர். பல காலங்களிற் பாடப்பட்ட பாடல் களில் இறந்தவை, அழிந்தவை, மறந்தவை, அழித்தவை, புறக் கணிக்கப்பட்டவைபோகச் சிறந்தன என்று கொள்ளப்பட்ட- வைகளைத் தொகுத்த வகையில் அந் நூல்கள் தோன்றின. இனி, மூன்ருவதாகிய பதினெண் கீழ்க்கணக்கு என்ற தொகுதி யில் வந்துள்ள நூல்கள் பெரும்பாலும் நீதி நூல்களாகும். அவைகள் வெண்பாத் துறையில் வந்த சின்னஞ்சிறு பாக்களைக் கொண்டவைகள் ; ஒவ்வொரு நூலும் ஒவ்வொரு தனிப் புலவ ரால் இயற்றப் பெற்றவை. அவைகளில் ஒன்று திருக்குற ளாகும். அது முன்னமே கூறியவாறு உலகியல் நீதி நூல் ஆகும். அது மூன்று பால்களில், நூற்றுமுப்பத்துமூன்று அதிகாரங் களில், ஆயிரத்து முந்நூற்றுமுப்பது பாடல்களைக் கொண்டது. ஆசிரியர் வள்ளுவனூர், இந்நூலுக்குப் பாயிரம் என்ற பகுதியை நான்கு அதிகாரங்களில் வகுத்திருந்தபோதிலும், பொதுவாகப் பாயிரத்திற்காணும் ஆக்கியோன் பெயர் காலம் வரலாறு முதலியவைகளை அவர் கூறவில்லை. உலகத்திற்குப் பொது

நெறியைக் கூறவந்த அப் புலவர் பெருமகனார் தற்பெருமை என்ற கூற்றில் வரும் கருத்துக்களை எடுத்துரைப்பரோ? ஆகவேதான், திருவள்ளுவரைப்பற்றிச் சங்கத்தார் காலம் என்பது ஒன்றன்றி வேறு கூறுவதற்கு இடமில்லாமலிருக் கின்றது.

இனித் திருவள்ளுவர் சங்க காலத்தவர்தாமோ என்ற ஒரு கேள்வியும் கேட்கப்படலாம். திருவள்ளுவர் நூல் இயற்றி அதனை அரங்கேற்றுவதற்காக மதுரைச் சங்கத்தார்களிடம் சென்றதில், அதனை யவர்கள் ஏற்றுக்கொள்ளாமல் மறு தலிக்கப் பிறகு தெய்வீகத்தால் சங்கப்பலகை இடம் கொடுத்த பின் அவர்கள் ஏற்றுக்கொண்டு அங்கிருந்த புலவர்கள் நாற் பத்தொன்பதின்மரும் திருக்குறளின் மேன்மையைக் குறித்து ஒரு புகழ்மாலை சூட்டினர் என்ற ஒரு கதை உண்டு. அதனை இக் காலத்தில் நம்புவாரில்லை. திருவள்ளுவ மாலை என்னும் அவ் வெண்பா நூல் பிற்காலத்திலிருந்த புலவர்களால் இயற்றப்பட்ட ஒரு தொகை நூலாகும். இந் நூலை ஆதார மாகக் கொண்டு திருக்குறளைச் சங்க காலத்து நூல் என்று கூறுதல் முடியாது. ஆனால், எதைக்கொண்டு திருக்குறள் சங்க காலத்து நூல் என்று கூறமுடியுமென்றால் அதனுட் காணும் சொல்லாட்சி, பொருளாட்சி முதலியவைகளைக் கொண்டாகும். அவைகளுள் ஊடுருவிப் பாயும் ஒரே விதமான சொன்னடை பொருள் நுண்மை இவைகள் இருக்கக் காணலாம். இவைகளே சங்க கால நூல்களுக்கும் பிற நூல் களுக்குமுள்ள வேற்றுமைகளைத் தெளிவுறுத்துவன. திருக் குறளில் உள்ள சொல், பொருள் இரண்டன் நடையும் நுணுக்கமும் பிற சங்க நூல்களில் உள்ளவை போன்று இருத் தலைக் காணலாம். இந்த வகையிலே ஆராய்ந்து பார்த்தால், திருக்குறளைச் சங்க கால நூல் என்று சொல்லுவதில் சிறிதேனும் ஐயம் இருக்காது. ஒரு நூலிலுள்ள சொற்களையும் கருத்துக்களையும் வேறு நூல் எடுத்தாண்டால், அவ்வாறு ஆண்ட நூலினும் மேற்கோள் உள்ள நூலே முந்தியதாகும். திருக்குறளில் உள்ள பல சொற்றொடர்களைக் கணக்கற்ற நூல்கள் எடுத்தாண்டுள்ளன; இடைக்கால ஆசிரியர்களும் பிற்கால ஆசிரியர்களும் எடுத்து ஆண்டுள்ளதைப்பற்றி நாம்

கவலை கொள்ளவேண்டுவதில்லை; ஆறு ஏழு நூற்றுண்டுகளிற் ரேன்றிய சைவ வைணவ அடியார்கள் மேற்கொண்டிருப் பதை யறிவோம்.

அதற்கு முன்னர்த் தோன்றிய பெருங் காப்பியங்களிலும் மேற்கோள்கள் உள்ளன. சமண பௌத்த ஆதிக்க நாட்களில் தோன்றியவை மூன்று முதல் ஆறு நூற்றுண்டுகள் வரையில் வளர்ந்தன. ஆகவே, திருக்குறள், மூன்ரும் நூற்றுண்டிற்கு முன்னதே ஆகும். இனிக் கடைச் சங்க நூல்களிலும் திருக்குறள் ஆளப்பட்டிருந்தால் அவ்வாறு ஆளப்பட்ட நூல்களினும் திருக்குறள் முந்தியதன்ரே ?

கூலவாணிகன் சாத்தனுர், மணிமேகலையில், "தெய்வம் தொழாஅள்" என்ற குறளை எடுத்தமைத்துத் திருவள்ளு வரைப் பொய்யில் புலவன் என்று காட்டியதை யாருமறிவர். சாத்தனுர் காலத்திற்கு மிகமிக முற்பட்ட காலத்திலே திருவள்ளுவர் இருந்திருக்கவேண்டும். அன்றியும், குளமுற் றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனை, ஆலத்தூர் கிழார் பாடிய புறநானூற்றுச் செய்யுள் ஒன்றில், "எந் நன்றி கொன்ருர்க்கும்" என்ற குறளைத் தம் பாட்டிற்கேற்றவாறு மாற்றிப் பாடிய தன்றித் திருக்குறளை 'அறம்' என்று சிறப்பித்துமுள்ளார். அச் செய்யுள் :

" நிலம்புடை பெயர்வ தாயினும ஒருவன்
செய்தி கொன்ருேர்க் குய்தி யில்லெனு
**அறம்**பா டிற்றே ஆயிழை கணவ"

என அழகுற அமைந்துளது. செய்ந் நன்றி கொல்லு தலைத் திருவள்ளுவர் கண்டித்துக் கூறியதைப்போல் வேறு எந்தப் புலவரும் கூறியதில்லை. அதனை அவ்வாறே ஏற்றுக் கொண்டு அறம் என்ற சிறப்புப் பெயரை ஆலத்தூர் கிழார் திருக்குறளுக்குக் கொடுத்துள்ளதால், அப் புலவருக்கு முன்னரே திருவள்ளுவர் இருந்தனராகவேண்டும். மேலும், புற நானூற்றில் காக்கை பாடினியார் பாடிய "நரம்பு எழுந்து..." என்ற செய்யுளில் "ஈன்ற ஞான்றினும் பெரிதுவந்தனளே" என்ற சொற்ருெடரை ஆராயுங்கள். இச் சொற்ருெடர்,

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும்" என்ற குறளோடு ஒற்றுமை கொண்டுள்ளதன்றோ? இவ்வீர் ஆசிரியர்களும் ஒருவரையொருவர் பின்பற்றி யிருக்கலாம். காக்கை பாடினியாரும் ஆலத்தூர் கிழாரும் சங்க காலப் புலவர்கள்; புறநானூற்று ஆசிரியர்கள். இவர்கட்கு முன்பே திருவள்ளுவர் இவ் வறநூலைக் கூறியிருக்க வேண்டும். காக்கை பாடினியாரின் காலம், முதல் நூற்றாண்டின் பிற்பகுதி யென்று ஆராய்ச்சியாளர் கூறுவர். ஆகவே, திருக்குறள் அதற்கு முந்தியதே.

இனித் திருவள்ளுவர், வாழ்க்கை உண்மைகளை எவ்வாறு காண்கிறார் என்று ஆயராய்வோம். இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகட்கு முன்பு, அதாவது கிறிஸ்துவுக்கு ஐந்து நூற்றாண்டுகட்கு முன், அருகரும் புத்தரும் தோன்றினார்கள். அவர்களுடைய சமயக் கொள்கைகளான சமணமும் பௌத்தமும் தெற்கே வந்தன. சமணம், தென்னாட்டிற்குச் சமண முனிவர்களாலும், சந்திர குப்த மன்னனாலும் கொண்டுவரப் பட்டது. கிறிஸ்துவுக்கு முன் மூன்று நூற்றாண்டுகளில் சந்திர குப்த மன்னன் பேரன் அசோக மன்னனுடைய பிரசாரத்தால், பௌத்தம் தெற்கே வந்தது; தென்னாடு மட்டு மன்றி ஈழநாட்டிற்கும் சென்றது. அஃது ஈழநாட்டில் பரவிய அளவு தென்னாட்டில் பரவவில்லை. ஏனெனில், திருவள்ளுவர் போன்ற பெரிய அறிஞர்கள் புத்தர் கொள்கைகளுள் பலவற்றைக் கண்டித்துவிட்டனர். புத்த சமயத்தில் புலால் உண்டல் மறுக்கப்படவில்லை; கொன்றதைத் தின்னலாம்: ஆனால், கொலை கூடாது என்பதே அவர்கள் கொள்கை. திருவள்ளுவரோ எந்த வகைக் கொலையும் கூடாதென்றும், புலால் மறுத்தலை வற்புறுத்தியும் கூறியிருக்கிறார். சமணக் கொள்கையோ திருவள்ளுவர் கூறியிருப்பதுபோல அவ் விரண்டையும் கண்டிப்பது. எனவே, திருவள்ளுவர் பௌத்தரை மறுத்துச் சமணர் கொள்கையை ஏற்றுக்கொள்கின்றார். இந்த வகையில், திருவள்ளுவர், சமணர் குடியேற்றத்திற்குப் பிந்தியும் காக்கைபாடினியாருக்கு முந்தியும் இருந்திருத்தல் வேண்டும்.

சமணக் கொள்கையைத் தென்னுட்டிற் பரப்ப வந்த முனிவர் பலர். அவர்கள் அறத்தையே சிறந்ததாகக் கொண்டவர்கள்; கலையில் நிபுணர்கள்; சென்ற இடமெல்லாம் நாட்டு மொழிகளைக் கற்று, நூல்கள் எழுதித் தம் கொள்கைகளைப் பரப்பினவர்கள்; அவ்வாறு தமிழ் மொழியிலும் நூல்கள் ஆராய்ந்து எழுதினுர்கள். நாலடியார் போன்ற நூல்களை அவர்களே எழுதினுர்கள். தமிழ் ஆராய்ச்சியாளர்கள் திருக்குறளுக்கு முந்தியது நாலடியார் என்கிருர்கள்; ஏனெனில், சில அருமையான கருத்துக்களை நாலடியாரைப் பின்பற்றித் திருவள்ளுவர் ஆராய்ந்துள்ளார் என்பார்கள்;

" குடமபை தனிததொழியப் புட்பறந் தற்றே
உடமபோ டுயிரிடை நட்பு "

என்ற குறள் நாலடியாரைப் பின்பற்றியதென்பர். நாலடியார் பாடலோ,

" கேளாது போநது கிளைகளால இற்ருேன்றி
வாளாது போவரால் மாந்தாகள்—வாளாதே
சேககை மரனெழியச் சேணீஙகு புட்போல
யாக்கை தமாகவொழிய நீத்து "

என்பதாகும்.

இப் பாடலைக் கண்டு ஆராயாத பரிமேலழகர், குடம்பை என்பதற்கு முட்டையென்று பொருள் எழுதுகிருர். மணக்குடவரோ நாலடியாரைப் பின்பற்றிக் குடம்பையைக் கூண்டு என்பார். பரிமேலழகர், வடநாட்டு ஆரியக் கொள்கைகளையும், மணக்குடவர், சமணர் கொள்கைகளையும் பின்பற்றியுள்ளனர். குறளையும் நாலடியையும் ஒப்பிட்டு நோக்குமிடத்துத் திருவள்ளுவர் சமணர்களைப் பின்பற்றினுர் எனல் வேண்டும்,

கருத்துமட்டுமன்று,சொற்ருெடரிலும் சமணர் நூல்களைத் திருவள்ளுவர் ஆண்டிருத்தலைப் பல இடங்களிற் காணலாம். சிறப்பாகக் கடவுள் வாழ்த்தில்,'ஆதிபகவன்', 'வால் அறிவன்', 'மலர்மிசையேகினுன்', 'பொறிவாயி லைந்தவித்தான்', 'தனக்குவமை யில்லாதான்','அறவாழிஅந்தணன்','எண்குணத்தான்'-இந்தச் சொற்ருெடர்கள் பொதுவாக எல்லாக் கடவுளருக்கும் பொருந்துமெனினும்,சிறப்பாகச் சமண நூல்களிலேயே பெரும்

பான்மையாக வழங்கிவருதலைக் காண்கின்றோம். நன்றாக ஊன்றிப் பார்க்குமளவில், முதற் குறள், மற்றச் சமயங்களைக் காட்டிலும் சமண வாதத்திற்கு ஏற்றதாக இருக்கின்றது. ஸ்ரீ புராணம் முதலிய சமண நூல்களை யாராய்ந்தால், இக் கருத்து விளங்கும். இந்தக் கருத்தை வெளியிட்டதினால், திருவள்ளுவர் சமணர் என்று கூற வேண்டுவதில்லை; எல்லாச் சமயங்கட்கும் பொதுவான நெறிகளை எடுத்துக்கூறி, எச் சமயத்தார்க்கு மெட்டாதவராக விளங்குகின்றார். அவருடைய கால அளவையை நிர்ணயிக்கும்பொருட்டு அவர் எவ்வாறு இறைவனைக் குறிப்பதற்குத் தமக்கு முந்தியிருந்த சமணர்களுடைய சொற்றொடர்களை ஆண்டிருக்கிறார் என்றுமட்டும் குறிப் போமாக.

இனிக் கிறிஸ்துப் பெரியாருடைய மாணாக்கரான தாமஸ் என்ற பெரியார், தொண்டை நாட்டில், மயிலைக்கு அருகில் பிரசாரம் செய்தவகையில் தம் இரத்தத்தைச் சிந்தினார் என்ற ஒரு வரலாற்றை ஆதாரமாகக் கொண்டு அப் பெரியாரின் கொள்கைகளின் முதிர்ச்சியே திருவள்ளுவரின் நூல் என்று சிலர் கருதுகின்றனர். அதற்கு மேற்கோளாக இன்னா செய் யாமை என்ற அதிகாரத்தை வைத்துக் கிறிஸ்து கொள்கை களை அந்த அதிகாரத்தில் கூறியுள்ளார் என்றும், எனவே, அவர் கிறிஸ்துவுக்குப் பின்னர் வாழ்ந்து மறைந்தவர் என்றும் கூறுவர் சிலர். இதனை ஒரு சிறிது ஆராய்வோம்: கிறிஸ்து பெருமான் சொன்ன பொன் மொழி,

> " நினைக்கொருவன் செய்யுமா நீநினைக்கில் தண்ணேன்
> தனக்குநீ செய்தல் தகும "

என்ற கருத்துடையது.

மற்றும், "ஒருவன் உன் கன்னத்தில் அறைந்தால் அவனுக்கு உன் மறு கன்னத்தைக் காட்டு" என்பது அவர் அறவுரையாகும்.

இக் கொள்கைக்குத் திருவள்ளுவர் சொன்ன கருத்தினைக் கற்பனை செய்து காட்டுவர் :

> " கறுத்தின்னா செய்தவக் கண்ணும் மறுத்தின்னா
> செய்யாமை மாசற்றார் கோள் "

என்பதாகும்.

இக் குறள் கிறிஸ்துவின் கொள்கையைத் தழுவியதாகக் கூறுவர் சிலர். ஆனால், திருவள்ளுவரின் முடிவான கொள்கை ஒரு படி ஏறியேயுள்ளது. அதற்குச் சான்று,

"இன்னா செய்தாரை யொறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்."

இக் குறளில் காணும் கருத்து மிகவும் விழுமியது அல்லவா? வேறெம் மொழியிலு மில்லாத சிறப்புடையது இது. ஆகவே, கிறிஸ்துவின் போதனைகளைப் பின்பற்றித் திருக்குறள் எழுதப்பட்டதன்று என்று திண்ணமாகக் கூறலாம்.

இனி, இறுதியாக, இதுவரை கூறிய சான்றுகளைக்கொண்டு, வள்ளுவர் பெருமானுடைய காலத்தை ஒருவாறு கூறலாமன்றோ? மௌரியர் காலத்திற்குப் பின் தென்னாட்டில் சமண முனிவர்கள் குடியேறித் தமிழ் கற்றுத் தம்முடைய சமய நூல்களைத் தமிழில் ஆக்கிய பின்னர்க் கிறிஸ்து மதம் ஏற்படுவதற்கு முன்னர்த் திருவள்ளுவர் திருக்குறளை அருளிச்செய்திருக்க வேண்டும். அதாவது கி. மு. இரண்டு அல்லது மூன்றாம் நூற்றாண்டைத் திருக்குறளின் காலமாகக் கொள்ளலாம்.

# திருவள்ளுவரும் கம்பனும்

## பி. ஸ்ரீ.

## (கரையிலே பொறுக்கிய சில சிப்பிகள்)

பரிமேலழகர், மணக்குடவர், பரிதியார், பரிப்பெருமாள், காளிங்கர் முதலான பல பழைய உரையாசிரியர்களையும், திருக்குறள் சோதித்துப்பார்த்திருக்கிறது என்றார் ஒரு ரஸிக நண்பர். புதிய உரைகளைக் காண முயலும் இன்றைய அறிஞர் சிலரையும் திருவள்ளுவர் சோதித்துப்பார்த்துவருகிறார் என்பதிலும் ஐயமில்லை; ஆம்! சோதித்துப்பார்த்துப் பழைய புதிய ஆசிரியர்களின் அறியாமையையும் கண்டிக்கிறார் என்று நினைக்கத் தோன்றுகிறது.

கம்பனையும் வள்ளுவர் சோதித்துப்பார்த்திருக்கிறார். கம்பனும், திருக்குறளைக்கொண்டு தன்னைச் சோதித்துப்பார்த்திருக்கிறான். கல்வியிற் பெரியோனும் தன் அறியாமையைக் கண்டிக்கிறான்; பெரியதோர் அறியாமையாகவும் கண்டு கொண்டிருக்கிறான். தான் கண்டுகொண்ட தன்னுடைய அந்த அறியாமையைத் தன் இராமாயண முகப்பிலே கவிச் சக்கரவர்த்தி பிரகடனப்படுத்தியுமிருக்கிறான், '**இறையும் ஞானம் இலாத என் புன்கவி**' என்று.

காலத்தால் முற்பட்டுச் சீலத்தால் வள்ளுவரோடு ஒன்று பட்டிருந்த **ஸாக்ரடிஸ்** என்ற கிரேக்க அறிஞரும், 'நான் அறியேன், அறியேன்!' என்றுதானே '**அறியாமைப் பல்லவி**' பாடிக்கொண்டிருந்தார்? அந் நாளில் 'கிரேக்க தத்துவ அறி

ஞர்கள்' தாங்கள் எல்லாவற்றையும் அறிந்துவிட்டதாக அறைகூவிப் பறைசாற்றினர். அவர்களில் ஒருவனையும் 'அறிஞன்' என்று கிரேக்க தெய்வமான '**டெல்பிக் ஆரகிள்**' சுட்டிக்காட்டவில்லையாம்; 'ஸாக்ரடீஸே அறிஞன்' என்று உறுதி கூறியதாம். 'தெய்வம் பொய் சொல்லுமா?' என்று நண்பர்கள் கேட்டார்கள். அதற்கு அந்த மகாத்மா, "நானும் பொய் சொல்லவில்லை: தெய்வமும் பொய் சொல்லவில்லை. 'நான் அறியேன்' என்பதை நான் அறிகிறேன். அவர்களுக்கோ இந்த அறிவும் இல்லையே!" என்று விடை கூறினராம்.

**அறியாமையை அறிவது அறிவு**: இது ஸாக்ரடீஸ் மகானின் அனுபவ சித்தாந்தம். இதைத் திருவள்ளுவரும் ஒரு சூத்திரம்போலக் குறிப்பிடுகின்றார்,

"அறிதோ றறியாமை கண்டற்றால்"

என்ற குறட்பகுதியில்.

அறியஅறிய, முன்னை அறிவெல்லாம் அறியாமைதானே அறிஞருக்கு?

இப்படித் தங்கள் அறியாமையை அறிந்துகொண்டவர்களை உலகப் பேரறிவாளர்களாகப் போற்றுகின்றது அறிஞர் வாக்கு, அல்லது பொதுஜன வாக்கு என்னும் தெய்வ வாக்கு. இத் தகைய பேரறிவாளர்களில், ஸாக்ரடீஸ் அறிவுச் சுதந்தரத்திற்காகப் போராடி உயிர் துறந்தவர். திருவள்ளுவரோ அறிவுக்காதலால் அறம் கண்டு அதற்காகவே உயிர் வாழ்ந்தவர் என்று கருதலாம்.

"அறிதோ றறியாமை கண்டற்றால், காமம்
செறிதோறுஞ் சேயிழை மாட்டு"

என்னும் குறள், **காமத்துப் பாலில்** அல்லவா காணப்படுகிறது?

காதலன் காதலியை அறியுந்தோறும் அறியுந்தோறும் காதலின்பத்தைப் பின்னும்பின்னும் புதிதாய்க் கரைகாணாத கடல்போலக் காண்கிறான்; காதலியை அறியஅறியத் தன் அறியாமையையே அறிந்துகொள்கிறான். இப்படியேதான்

அறிவுக்காதலர்களின் உலகமும் என்பது திருவள்ளுவர் கருத்து. காதலர் உலகத்திற்கு, அறிவுக் காதலர் உலகத்தை உபமான மாக்குவதில் வள்ளுவருள்ளம் அறிவுக் காதலிலே (அறிவுக் காமத்திலே) எப்படித் தோய்ந்துதோய்ந்து ஊறிக் கிடந்திருக்க வேண்டும் என்பதை ஒருவாறு ஊகித்துக்கொள்ளலாம்.

வள்ளுவரின் ஞானபுத்திரனை கம்பனும் ஓர் அறிவுக் காதலன். இவன், அறிவுக்காதலையும் பக்திக் கண்ணுடன் பார்க் கிறன்; பக்திக்காதற் சுவையுடன், கலந்து அனுபவிக்கிறன். இதற்குக் கம்பராமாயணம் முழுவதும் சான்று. இத் தகைய மனநிலை குறித்துக் கம்பன் வாக்காகக் கம்பராமாயண ஏடுகள் சிலவற்றில் ஒரு தனிப்பாட்டும் காணப்படுகிறது.

கம்பன் ஒரு கோயிலுக்குப் போயிருந்தானும். பக்தர்கள் நிலமிசை விழுந்து சரணகதி செய்துகொண்டிருந்தார்கள்; தேங்காயும் பழமும், செல்வர்கள் பொன்னும் மணியுமாகக் காணிக்கைகளைக் கொட்டிக்கொடுத்தார்கள். கம்பனே அப் படி யொன்றும் செய்யாமல் சும்மா நின்றுகொண்டிருந்தான். இவனை அறிந்திராத பக்தர் ஒருவர், திடீரென்று, 'ஏனையா இப்படி நின்றுகொண்டிருக்கிறீர்? காணிக்கைக்குக் காசில்லை யென்றல் உடம்பை வளைத்து ஒரு கும்பிடு போடலாகாதா?' என்று கேட்டுவிட்டார். அதற்குக் கம்பன், 'கும்பிடத்தான் தெரியவில்லை உலகெங்கும் பரவிநிற்கும் பாதத்தை! ஆனல், காணிக்கை கொண்டுவந்திருக்கிறேன்' என்றன்.

'பாராளும் பாதம் பணிந்தேத்து மாறறியேன்' என்று கூறிவிட்டுக் கருணைமேகமாகிய இறைவனுக்கு நன்றி செலுத் துவதற்கு அறிகுறியாகக் காணிக்கை அவசியம்தான் என்றும் வற்புறுத்திய கவிஞன், '**ஆராதனை என் அறியாமை ஒன்றுமே!**' என்று முடித்தான். காணிக்கையாகக் கொடுக்கும் பொருள் பிரபுவிடம் இல்லாததாகவும், நமக்கே முழு உரிமை உள்ள தாகவும் இருக்கவேண்டு மல்லவா? 'இத் தகைய காணிக்கை என் அறியாமை ஒன்றுமே!' என்ற வாக்கிலே இந்தப் பேரறி வாளனின் உள்ளம் எப்படிப் பிரதிபலிக்கிறது பாருங்கள்!

இப்படி அறிந்துஅறிந்து, அறியாமை காணும் பக்திமய மான அறிவுப் பெருங்காதல்தான் தனக்கே உரிய தனிப் பெரும் பணிவுடன், 'இறையும் ஞானம் இலாத என்புகவி' என்று தன் **தெய்வ மாக் கவிதை**யையும் குறிப்பிடத் துணிந் திருக்கவேண்டும். இதே மன நிலைதான்,

"ஒணமை இலலை,பல்
கேள்வி ஒஙகலால்!"

என்று இராமராஜ்யத்தை அவதார மூர்த்திக்காகச் சித்திரித்து வைக்கவும் துணிந்தது. இதை நன்ருக அறிந்துகொள் வதற்கு,

"வெண்மை எனப்படுவ தியாதெனின், ஒண்மை
உடையமயாம் என்னும் செருக்கு"

என்னும் குறளை ஊன்றி நோக்கவேண்டும்.

அறிவு எனப்படுவது யாதெனின், அஃது அறியாமையை அறிவிக்கும் தனிப்பெரும் பணிவு என்று குறிப்பாகக் கூறிய திருவள்ளுவர், அறியாமை எனப்படுவது யாது என்பதையும் இக் குறளில் தமக்கே உரிய மதிநலத்துடன் நன்கு விளக்கு கிருர்; 'யாம் சால நுண்ணறிவுடையோம்' என்று ஒருவர் தம்மைத்தாமே நன்கு மதிக்கும் செருக்கே அறியாமை என்கிருர்.

அறியாமையை 'வெண்மை' அல்லது வெள்ளறிவு என்று சுட்டிக் காட்டுகிறது இக் குறள். 'முற்றுதல் இன்மையின் வெண்மை' என்கிருர் உரையாசிரியர் ஒருவர். பழைய சீனர் களும் 'வெண்மை'யை இப்படித்தான் கருதினுர்கள்; 'கருமை'யை அநாவசியமாக முற்றி முதிர்ந்துபோன நிலையாக மதித்தனர். சரியாகப் பக்குவஞ் செய்யப்பட்ட நிலை 'மஞ்சள் நிறம்'தான் என்பது அவர்கள் கருத்து. நிறமோ, குலமோ, மதமோ அன்று, செருக்கே அறிவுவளர்ச்சிக்குத் தடை எனக் கருதிய திருவள்ளுவர் முதிராத, வளராத அறிவையும் அறியாமை யென்றே கருதுவாராயினர். வளரும் அறிவே அறிவு—வளரும் தமிழே தமிழ் என்பது போல.

வயிரம்பாய்ந்து வளர்ந்துகொண்டே யிருக்கும் அறிவினுல்-தான் மெய்ப்பொருள் காண இயலும்; எப் பொருளிலும்

மெய்ப்பொருள் காண முடியும். இவ் வுண்மையைத் திருவள்ளுவர் இரண்டு குறள்மணிகளில் விளங்கவைத்திருக்கிறார்:

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."

இவற்றுள் ஒன்று அறத்துப்பாலில் காணப்படுகிறது; மற்றது பொருட்பாலில் காணப்படுகிறது. அறிவின் பொருளும் பயனும் இவையென வற்புறுத்தும் இவ் விரண்டு குறள்மணிகளையும் கம்பன் நினைவூட்டுகின்றான்,

"தலையாய பொருளுணர்விற்
கலைமகட்குத தலைவராம"

என்று, இராமலட்சுமணரின் கல்விப் பயிற்சி குறித்துவரும் விசுவாமித்திரன் வாக்கிலே.

இப்படி மெய்ப்பொருள் காண முயலும்போது பகுத்தறிவு வளர்ந்து நன்மை தீமை உணர்த்துகிறது. 'தீது ஒரீஇ நன்றின்பால் உய்ப்பது அறிவு' என்கிறது திருக்குறள். நன்மைதீமைகளை ஆராய்ந்து, தீமையை நீக்கி நன்மையிலே செலுத்துவது அறிவு என்று கூறும் இக் குறளையும்,

"செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என் ?"

அதாவது, கேள்விச் சுவை உணராது வாயுணர்வையே உணவாக மதிக்கிறவர்கள் வாழ்ந்தால் என்ன, செத்தால் என்ன? பலன் ஒன்றுதான்—என்னும் பொருளுள்ள குறளையும் சேர்த்துக் கம்பன் அனுபவித்திருக்கிறான். இந்த அனுபவம்தான் 'நன்றுதீது நாடலேன், தின்று தீய தேடினேன்!' என்று விராதன் வாக்கிலே வெளிப்படுகிறது. 'ஊன்சுட உணங்கு பேழ்வாய் உணர்விலி' என்று கவிக்கூற்றாக வரும் சூர்ப்பணகை வருணனையிலும் மேலே சொன்ன குறள் அனுபவம் வெளிப்படக் காண்கிறோம்.

கல்விகேள்விகளால் நன்று தீது நாடுவோரே மக்கள்; பிறரை, மிருக சாதியோடுதான் சேர்க்கவேண்டும் என்பது

தொல்காப்பியர், திருவள்ளுவர், கம்பன் ஆகிய நம் செந்தமிழ் மும்மணிகளும் ஒருங்கே கண்டு காட்டும் உண்மை.

"விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோ டேனை யவர"

என்ற குறளோடு, 'மாவும் மாக்களும் ஐயறி வினவே' என்றும் 'மக்கள் தாமே ஆறறி வுயிரே' என்றும் கூறியுள்ள தொல்காப்பியச் சூத்திரங்களை ஒப்பிடலாம். இத் 'தொல்காப்பியர் - திருவள்ளுவர்' கொள்கைதான், 'தக்க இன்ன, தகாதன இன்ன வென்(று) ஒக்க உன்னல ராயின் உயர்ந்துள மக்களும் விலங்கே!' என்னும் கம்பன் வாக்கிலும் காணப்படுகின்றது.

விலங்கு நிலையிலிருந்து நாகரிக ஏணியில் ஏறி மானுடம் வெற்றி பெறுவதற்கு 'இலங்கு நூற் கல்வி' இன்றியமையாதது. இக் கல்வி, செவிக்கு உணவாகும்போது, உள்ளம் அறிவிலே வளர்கின்றது. வயிற்றுக்கு உணவு தருவோன், செவிக்கு உணவு தருவோன் ஆகிய இருவரையுமே தாம் கௌரவிப்பதாகப் பேரறிஞர் **கார்லைல்** கூறியுள்ளார். வயிற்றுக்கு உணவைக் காட்டிலும், செவிக்கு உணவு இன்றியமையாதது என்பது திருவள்ளுவர் கொள்கை.

"செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும்"

என்ற குறளில் திருவள்ளுவரின் நாகரிகக் குறிக்கோள் எவ்வளவு அதிசயமாகப் புலனாகின்றது பாருங்கள்!

கம்பன் காட்டும் விராதனோ, 'பெரிய வாயின் ஒருபால்-மென்று தின்று, விளியாது விரியும் பசியொடே வருகின்றான். மென்று தின்பதுமில்லையே, எவ்வுயிரும் கையின் வளைத்து வயிற்றடக்கும் கவந்தன்!'

இன்றைய நகரங்களிலுள்ள சிற்றுண்டி பேருண்டிச் சாலைகளையும், பிற உணவு வசதிகளையும், அவசர அவசரமாக வயிற்றுப் பெருமானை வழிபடும் குழாங்களையும், இடையிடையே சிற்சில அறிவு நிலையங்களையும் பார்க்கும்போது, 'நம்முடைய நவநாகரிகம் சில அம்சங்களில் விராத நாகரிகம்தானோ, அல்லது ஒருவகைக் கபந்த நாகரிகம்தானோ?' என்று ஐயுற வேண்டியிருக்கிறது. எப்படிப் பார்த்தாலும்,

" இரக்க மென்(று) ஒருபொருள்
இலாத நெஞ்சினர்,
அரககரென்(று) உளர்சிலா..."

என்று கம்பன் வருணிக்கின்ற அந்த அரக்க நாகரிகம் வளர்ந்து வந்தது போலல்லவா இன்றைய இயந்திர நாகரிகமும் வளர்ந்துவருகின்றது ?

திருவள்ளுவருக்கு நாகரிகம் என்ருல் கண்ணேட்டம்: கண்ணுல், காண்போருக்கு அருள் செய்வது: அஃதாவது, அருளாகிய பார்வை - அருள்செய்தலாகியத பேரழகு.

" பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர். "

பழகினவர்கள் நஞ்சு கொடுத்தாலும் அதனையும் அமிர்தமாக உண்ணத் துணிவார்களாய்ப் பின்னும் அவர்களோடு மேவியிருப்பார்களாம் நாகரிகம் வேண்டுபவர். மாற்ருர் இட்ட நஞ்சைப் பருகினுர் கிரேக்க வள்ளுவரான ஸாக்ரடிஸ்.

" ஆக்கரிய மூக்(கு)உங்கை
அரியுண்டாள் என்ருரை
நாககரியும் தயமுகனுர்
நாகரிக ரல்லாமை..."

என்று சூர்ப்பணகை வாயிலாகக் கம்பன் கூறுவது இராவண ராஜ்யத்தின் நாகரிகப் போக்கு.

கல்விக்குக் கண்ணேட்டம் இன்றியமையாதது என்பது திருவள்ளுவர் திருவுள்ளம்.

" கண்ணுடையார் என்பவர் கற்ருேர்; முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர் "

என்று கூறும் திருவள்ளுவர்,

" கண்ணேட்டம் இல்லவர் கண்ணிலர் "

என்றும் கூறியுள்ளார்; கல்வியென்ற கண் இருந்தாலும் போதாது; கண் ஓடுவதாகிய பார்வையும் வேண்டும் என்கிருர்.

" கண்ணிற்(கு) அணிகலம கண்ணேட்டம், அஃதின்றேல்
புண்ணென்(று) உணரப் படும் "

என்னும் இந்த வள்ளுவர் நாகரிகமும், 'கண்ணிற்கு அணிகலம் ஆனமூக்குக் கண்ணுடி - மூக்கிற்கும் அணிகலம்தான்!' என்று

கருதுவது போலிருக்கும் இந்த நவநாகரிகமும் சாராம்சத்தில் வேறே என்றுகூட அஞ்ச வேண்டியிருக்கிறது, குறளை ஓதி ஓதி உணரும்போது!

அணிகலம் மட்டுமன்று, கண்ணுக்கு அழகே கண்ணோட்டம்தான்! கண்ணுக்குப் பேரழகு கண்ணோட்டமே!

" கணணோட்டம் என்னும கழிபெருங காரிகை
உண்மையான் உண்(டு)இவ் வுலகு "

என்னும் குறள்மணியில் நிழலிடக் காண்கின்றோம், வள்ளுவர் காட்டும் உலக நாகரிகத்தை! இக் கருத்தை உள்ளத்திற் கொண்டுதான், கம்பனும்,

" கேள்விச் சுடர்புக்கு வழுஙகலின்றி
குரு(டு) ஈங்கி தென்னக குறிக்கொணடு கண்ணோட்டம் குன்றி
அருள்தீர்ந்த நெஞ்சிற் கரிதென்ப(து) அவ்வநத காரம் "

என்று இராவணனைச் சூழ்ந்துகொண்ட அந்தகாரத்தை வருணிக்கின்றான். இந்த அந்தகாரம் அரக்கர் நாகரிகத்திற்கு அறிகுறி. இராமராஜ்ய நாகரிகத்தின் சிகர ஜோதியாக,

" இற்றைவெண் ணிலவு நீககிக
கருணையாம் அமிழ்தம் காலும்
முறறுறு கலையிற் றுய
முழுமதி முகததி னானை "

அல்லவா காட்டுகிறது கம்பன் மேதை?

கருணையும் கலைகளும் இசைந்து வளரும் இராமராஜ்யத்திலே, 'காதைகள் சொரிவன செவிநுகர் கனிகள்.' திருவள்ளுவனாரின் செல்வத்துட் செல்வமாகிய செவிச் செல்வம் கம்பனால் 'கேள்விச் செல்வம்' என்றும், 'கேள்விச் சுடர்' என்றும் குறிக்கப்படுகிறது. 'இலங்கு' நூற் கல்வி அருளோடு உண்மைக்கும் அருந்துணையாகின்றது :

" நாமுதற் படுவ மெய்யும்
நாமநூற் பொருளும் மன்னே."

இங்கே கல்வி வேறு, ஒழுக்கம் வேறு என்பதில்லை. மெய், அருள், அறம் என்னும் முப்பொருளும் முழுப் பொருளாகிய ஒழுக்கம் என்பது கம்பன் கொள்கை,

" ஐய மின்றி அறம்கட வா(து)அருள்
மெய்யில் நின்றபின் வேள்வியும் வேண்டுமோ? "

என்றும்,

" தெருளும் நல்லற மும்மனச் செம்மையும்
அருளும் நீததபின் ஆவதுண டாகுமோ? "

என்றும் கம்பன் கூறுவதைக் கேளுங்கள்.

அறத்திற்கு வேர் அருள் என்பது கம்பன் கருத்து 'தயா முதல் அறத்தினைத் தழுவி'யது இராமராஜ்ய நாகரிகம் என்பதும், 'அறத்தை அருளோடும் தின்'றது இராவணராஜ்ய நாகரிகம் என்பதும் கம்பன் குறிப்பு. அறம் பூஞ்செடி, அருள் ஆணி வேர், உண்மை அடி நிலம் என்பது கம்பன் கொள்கை. இக் கொள்கை, எள்ளிலிருந்து கிடைத்த எண்ணெய்போல், பாலிலிருந்து கிடைத்த வெண்ணெய்போல் திருக்குறளிலிருந்து கம்பனுக்குக் கிடைத்ததுதான்.

'அறவினை யாதெனில் கொல்லாமை' என்ற வள்ளுவர் வாக்கிலே, அறத்திற்கு அருள் வேர் என்பது இனிது புலனாகின்ற தன்றோ?

" அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான் "

என்ற குறளையும் ஊன்றி நோக்குங்கள்.

" மனத்துக்கண் மாசில னாதல் அனைத்தறன் ;
ஆகுல நீர பிற "

என்னும் குறளையும்,

" புறந்தூய்மை நீரான் அமையும்; அகந்தூய்மை
வாய்மையால் காணப் படும். "

என்னும் குறளையும் சேர்த்துப்பாருங்கள். மனமாசு போக்கித் தூய்மை தருவது வாய்மை என்று கூறும் வள்ளுவனார், வாய்மையை அறத்திற்கு அடிநிலமாகக் காட்டுகிறாரென்பதில் ஐயமில்லை.

இத் தகைய ஒழுக்கமே உயர்குலம் என்னும் பெருங் கொள்கை, கம்பனுக்கும் வள்ளுவருக்கும் உண்டு என்பதிலும் ஐயமில்லை.

குலம்சு ரக்கும்ஒ ழுக்கம்கு டிக்கெலாம்' என்னும் கம்பன் வாக்குடன், 'ஒழுக்க முடைமை குடிமை' என்ற வள்ளுவர் வாக்கை ஒப்பிட்டு உண்மை காணலாம்.

"நீதியால் வந்ததொரு
நெடுததரும நெறியல்லால்
சாதியால் வந்தசிறு
நெறியறியான் என்தமபி"

என்னும் இந்தச் செய்யுளடிகளில் வெளியிடப்பெறும் தனிப் பெருங் கொள்கை தமிழர் பொது மறையின் கொள்கை தானே? 'பரிவினில் தழீஇய என்னிற் பவித்திரம்'—அதாவது அன்பும் இரக்கமும் தழுவியதே ஆசாரம் என்ற கம்பன் கொள்கையும் திருவள்ளுவரின் பெருங் கொள்கைதான்.

விபீஷணனை அறவோனுகவும் அந்தணனுகவும் சத்தியாக் கிரகியாகவும் காட்டுவது கம்பன் கவிதை. 'துறந்திலேன் மெய்ம்மை' என்கிருன் விபீஷணன்; 'உண்டிலேன் நறவம்; பொய்ம்மை உரைத்திலேன்' என்கிருன்; 'வலியால் ஒன்றும் கொண்டிலேன்' என்கிருன். இந்த மகாத்மாவைக் குறித்து அனுமன் கூறுகிருன்,

"நிந்தனை நறவமும நெறியில் ஊன்களும
தந்தன கண்டிலேன்; தரும தானமும
வந்தனை நீதியும் பிறவும மாணபமைந்(து)
அந்தணர் இல்லெனப் பொலிந்த தாமரோ"

என்று.

அரக்கர் சேனைக் கடலெலாம் விபீஷணனைக் கைகூப்பித் தொழுததாகக் கும்பகருணன் வதைப் படலம் தெரிவிக்கிறது.

"கொல்லான் புலாலை மறுததானைக கைகூப்பி
எல்லா உயிரும் தொழும"

என்ற குறளையும்,

"தன்னுயிர் தானறப் பெற்றுனை ஏனைய
மன்னுயிர் எல்லாம தொழும"

என்ற குறளையும் உள்ளத்திற் கொண்டுதான் இரக்க மிலா அரக்கரும் விபீஷணனைத் தொழுததாகக் கம்பன் குறிப் பிடுகிருன் எனக் கருதலாம்.

கம்பராமாயணத்திலே காணப்படும் அறவாழ்வும் அருள் வாழ்வும் உண்மைவாழ்வும் தியாகவாழ்வும் எல்லாம் சாராம் சத்தில் திருவள்ளுவர் காட்டும் வாழ்க்கை முறைதான்.

"வையத்துள் வாழ்வாஙகு வாழ்பவன் வானுறையும்
தெய்வததுள் வைககப் படும"

என்ற திருக்குறளைத் தெளிவாக ஓதியபின்,

"ஆவுக் காயினும
அந்தணர்க் காயினும்
யாவர்க கேனும்
எளியவர்க் காயினும்
சாவப் பெற்றவ
ரேதகை வானுறை
தேவர்க கும்தொழும்
தேவர்க ளாகுவார்"

என்ற கம்பன் பாட்டையும் பாடிப்பாருங்கள்.. திருவள்ளுவர் இவ்வுலகத்திலேயே தெய்வ வாழ்வு வாழும் முறையைப் பிரஸ் தாபிக்கின்றார். அப்படித் தெய்வ வாழ்வு வாழ்பவன் ஜடாயு வைப்போலத் தெய்வ மரணத்திற்கும் துணிந்து சித்தமா யிருக்கவேண்டும் என்பது கம்பன் அக் குறளுக்குக் காட்டும் உரைவளம்.

கைம்மாறு கருதாது கடமையாகச் செய்யவேண்டும் உலகோபகாரத்தை 'ஒப்புரவு' என்பர் திருவள்ளுவர்.

"ஒப்புரவி னல்வரும் கேடெனின், அஃதொருவன்
விற்றுக்கோள் தக்க துடைத்து"

என்பது வள்ளுவர் வாக்கு. பரோபகாரத்தால் கேடு வந்தாலும் அந்தக் கேட்டுக்காக ஒருவன் தன்னை விற்றுக்கொள்ளவும் செய்யலாம். இக் கருத்தைத்தான்,

"தன்னுயிர் புகழ்க்கு விற்ற சடாயு"

என்னும் கம்பன் வாக்கிலே காண்கிறோம்.

தியாகிகளான பெரியோருக்கு வாழ்க்கை வேறு, தவம் வேறு என்பதில்லை. 'தவம் செய்வார் தம்கருமம் செய்வார் என்பது வள்ளுவர் வாய்மொழி. கடமையையும், பணியையும்

தவமாகச் செய்யலாம். 'அறம் நிரம்பிய அருளுடை அருந் தவத்தோர்' என்னும் கம்பன் வாக்கை உற்று நோக்குங்கள்.

"சுடச்சுடரும பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடசசுட நோற்கிற் பவாக்கு"

என்ற குறளில் பிரதிபலிக்கும் தவவாழ்க்கைதானே கம்ப னுடைய காவியநாயகனும் காவியநாயகியும் வாழ்ந்த வாழ்க்கை?

தசரதன் இராஜ்யத்தை அளித்தபோதும், இராமன்,

"காதல் உற்றிலன் இகழ்ந்திலன்
கடன்இதென்(று) உணர்ந்து"

ஒப்புக்கொண்டானும். கைகேயி இராமனைக் காட்டுக்குப் போகச் சொல்லும்போதோ அந்தக் காடுறை வாழ்க்கையைத் 'தவம்' என்றே குறிப்பிடுகிருள். இராமன் தவத்தையும் வென்றுவிடுகிறது, சிறை புகுந்த செல்வியாகிய சீதையின் 'மனத் தவம்'. 'அறம் கிடந்த சிந்தையராய் ஆசை...துறந்த அதிவீர'மாகிய நற்பெருந் தவத்திற்குச் சீதாராமரை இலட்சிய சதிபதியாய்க் காட்டுகிருன் கம்பன்.

இத் தகைய தவ வாழ்க்கையே அதிவீர வாழ்க்கை—உண் மையான வீர வாழ்க்கை. வீரத்தில் உயர்ந்தது அறவீரம் என் பதுதான் திருவள்ளுவர் கருத்து.

"நிறப்பெரும படைககலம
நிறததின் நேருற
மறப்பயன விளைக்குறும
வன்மை நனறரோ
இறப்பினும திருவெலாம்
இழப்ப எய்தினும
துறப்பிலர் அறமஎனல
சூர ராவதே"

என்று இராமன் தன் வாழ்வுக் குறிக்கோளை வெளியிடுவதெல் லாம் திருவள்ளுவர் திருநெறிதானே?

இத் தகைய தியாக வாழ்வு வீரவாழ்வுமட்டு மன்று; உண்மையான இன்ப வாழ்வும் இதுவே. 'ஈத்துவக்கும் இன்ப' மாகத் தொடங்குகின்றது இந்த இன்பப் பெருவாழ்வு. யாகத்தால் நால்வராகப் பிறந்த இராமன் முதலானோர், தியா

**கத்தால்** எழுவராகி இன்புற்றதாய்க் கம்பன் காட்டுவது போட்டிபூசல்கள் நிறைந்த இவ் வுலகத்திலே பலவேறு வகுப்பினரும் ஒத்து இன்ப வாழ்வு வாழ்வதற்கு ஒரு கலங்கரை விளக்கமன்ருே?

வேடனையும் வானரனையும் அரக்கனையும் சகோதரராகக் கொள்வதற்கு எத்தகைய வீர உணர்ச்சி வேண்டும்!

"அடுக்கி வரினும் அழிவிலான் உற்ற
இடுக்கண இடுக்கண் படும்"

என்னும் குறளுக்கு இணங்க வாழ்க்கை நடத்தும்போது எத்தகைய துன்பமும் இன்பம்தானே!

"இடுக்கண் வருங்கால் நகுக"

என்ருர் திருவள்ளுவஞர். கம்பனுடைய காவிய நாயகஞே, 'சிரித்த பங்கயம் ஒத்த செங்கண் இராமன்'. இடுங்கு கண்ணுக்கு இடமே இல்லை. 'மும்மடங்கு பொலிந்த முகத்தின' ஞகி எந்த நிலைமையையும் சமாளிக்கக் கூடியவன் இராமன்.

இத்தகைய இராமன் முடிசூடப் போகிருனென்று கருதியவர்களின் மகிழ்ச்சியை வெளியிடும்போது, கம்பன் குறள் மேல் குறளாக அடுக்கிக்கொண்டு போகிருன்:

"ஊருணி நிறையவும்
உதவு மாடுயர்
பார்நுகர் பயன்மரம்
பழுத்த தாகவும்,
கார்மழை பொழியவும்
கழனி பாய்நதி
வார்புனல் பெருகவும்
மறுக்கின் ருர்கள்யார்?"

இப்படியெல்லாம் எவ்வளவோ எழுதிக்கொண்டு போகலாம். திருவள்ளுவரையும் கம்பனையும் ஒப்பிட்டு நோக்கும் போது எத்தனை குறள்மணிகளை இசைத்தும் இழைத்தும் கம்பன் தன் காவியநாயகனை அணிசெய்திருக்கிருன்! 'நவையறு குணங்கள் என்னும் பூணெலாம் பொறுத்த மேனிப் புண்ணிய மூர்த்தி' என்று வருணிக்கிருள் காவிய நாயகனைக் காவிய நாயகி. இராமனுக்கு அணிகலமாயிருக்கும் கலியாண

குணங்கள் பெரும்பாலும் குறள்மணிகளுக்கு இலக்கியமல்லவா?

காவிய நாயகியின் குணாதிசயமும் சாராம்சத்தில் திருவள்ளுவரின் அரும்பெருங் கருத்துக்களைத் துணையாகக் கொண்டு சித்திரிக்கப் பெறுகிறது. குணங்களை இராமனுக்கு அணிகளாகக் காட்டும் கவிஞன்,

"எண்களால் அளவா மானக்
குணம் தொகுத்(து) இயற்றினானை"

என்று வருணிக்கிறானல்லனோ? இவ் விதமாகக் குறள்மணிகளையும், குறளின் பொருளையும், புதைபொருளையும் கொண்டு தொகுத்து இயற்றிய கம்ப சித்திரங்கள் பல.

சுருங்கச் சொன்னால், 'மெய் வைத்த வேதவிளக்கு' என்று கூறலாம் திருக்குறளை. 'மேலொரு பொருளுமில்லா மெய்ப் பொரு'ளாகிய இராமன் கதைதானே கம்பன் காவியமும்?

ஃ ஃ ஃ

'நான் யார்? ஒரு குழந்தை; இருட்டிலே அழுது கொண்டிருக்கும் குழந்தை; ஒளிவேண்டி அழுதுகிடக்கும் குழந்தை; விம்மி அழுவதைத் தவிர வேறு மொழி அறியாத குழந்தை' என்றார் டெனிஸன் என்ற ஆங்கிலக் கவிஞர். இந்த நிலையை நம்முடைய இராமலிங்க அடிகளும்,

"விளககறியா இருட்டறையில் விழுந்துகிடந் தழுது
விம்முகின்ற குழவியினும் மிகப்பெரிதும சிறியேன்"

என்று தமது நிலையாகத் தெரிவித்திருக்கிறார். 'இதுதான் எனது நிலையும்' என்று சொல்லித் தப்ப முயன்றேன். அம் முயற்சி பலிக்கவில்லையென்று கண்டதும், வேறொரு 'குழந்தை நிலை' நினைவிற்கு வந்தது. 'நான் யார்? ஒரு குழந்தை; கடற்கரையோரத்திலே சிப்பி பொறுக்கும் குழந்தை. உண்மைப் பெருங்கடலோ என்னெதிரே அலைமேல் அலையெறிந்த வண்ணம் பரந்து கிடக்கிறது' என்றார் ஒரு விஞ்ஞானி. இதுதான், இந்தக் கட்டுரை விஷயத்தில், எனது உண்மை நிலையும்.

# திருவள்ளுவ மாலை

## ச. ஆறுமுக முதலியார்

பல வகை நிறம், உரு, திரு, அழகு, எழில், மணம் முதலியவற்றைக் கொண்டு விளங்கும் பல மலர்களையும் ஒன்றாகச் சேர்த்து ஒரு மாலையாகக் கட்டினால், அது கண்ணையும் கருத்தையும் கவரவல்ல ஒரு பூமாலையாகும். ஒரே வகை மலர்களைக் கொண்டும் தனி மாலையாகக் கட்டலாம். இவற்றினின்று வெளிவரும் நறுமணம் மூக்கால் மோந்து நுகரப்படும்போது, நாம் இன்பத்தில் திளைக்கின்றோம். தெரிந்த இக் காட்சியிலிருந்து, கட்புலனாற் காணலாகாத செவி யின்பத்துக்கும் கவியின்பத்துக்கும் புலவர்கள் நம்மை அழைத்துக்கொண்டு செல்லுகின்றனர். பூக்களைப்போலவே பாக்களும் சிறந்தன. பாக்களில் சொல் நயம் உண்டு; பொருள் நயமும் உண்டு; நடை நலமும் தொடை நலமும் இணைந்தும் பிணைந்தும் கிடக்கின்றன. பத்துவித அழகும் பாங்குடன் பொருந்த, ஒன்பான் சுவைகளும் ஒருங்கே அமைய, இவை அனைத்தையும் கற்பனையானது (Imagination) சேர்த்துக் கட்டிக் கோக்கின்றது. இவற்றிற்கெல்லாம் உள்ளீடாய் உடம்பிற்குள் உயிர்போல், புலவனது உயர்ந்த குறிக்கோளும், கொள்கையும், கருத்தும் அமைந்திருக்கின்றன. மலரினின்று வெளிப்படும் மணம் காற்றில் பரவிச் சென்று பலருக்கும் இன்பம் விளைவிப்பதுபோல், புலவனது பாட்டிலுள்ள பொருளும், கற்றல், கேட்டல், ஆராய்ச்சி, சொற்பொழிவுகள், நடித்துக் காட்டல், வானொலியிற் பரப்புதல், கல்விப்படங்களின் வழியாய் வெள்ளித்திரையில் காட்டி

யறியச் செய்தல் முதலிய முறைகளாலும் துறைகளாலும் ஊரெங்கும், நாடெங்கும், உலகமெங்கும் சென்று பரவி, படிப்போர் கேட்போர்களின் சிந்தைக்கும் செவிக்கும் நல்விருந்தாகின்றது.

[1] 'கலம்பகம் புனைந்த அலங்கலந் தொடையல்' என்றபடி பலவகைப் பூக்களால் ஆகிய மாலை 'கதம்பம்' ஆகிறது. தமிழில் உள்ள பிரபந்த வகைகளில் பலபாக்களால் ஆனது [2] கலம்பகம் எனப் பெயர்பெறுவது காண்க. இரு வகை மணிகளால் ஆகிய மாலையை இரட்டை மணி மாலை என்றும், மும் மணியாலாகியதை மும்மணி மாலை என்றும், நால் வகையானியன்றதை நான்மணி மாலை யென்றும் பாவாணர் பகர்வர். இன்னும், இறைவன் தமக்குப்"பத்திமையாற் பணிந்து பாமாலை பாடப் பயிலுவித்த" தாக [3] நாவரசர் நவில்வதிலிருந்து தேவாரக் காலத்திலிருந்து, பாக்களின் தொகுதியைப் பாமாலை யெனக் கருதும் வழக்கம் இருந்துவந்திருக்கிறது என்று உணரலாம். தேவாரம் என்னும் திருப் பெயரிலேயே இப் பொருள் அமைந்துள்ளதாகவும் அறிஞர் கருதுவர். அவர், இச் சொல், தேவனுக்கு- அதாவது சிவபெருமானுக்கு- ஆரம்போல அணி செய்வது, அல்லது தெய்வத் தன்மை பொருந்திய பாமாலை எனப் பொருள்படுமென்பர். தேவார ஆசிரியர்கள்போல் திருமாலுக்கும் பாமாலை சூட்டி ஆழ்வார்கள் பரவினர். "பாடிக் கொடுத்தாளைப் பாமாலை பூமாலை சூடிக் கொடுத்தாளைச் சொல்லு" [4]— என்ற தனியனில், ஆண்டாள் திருமாலுக்குப் பாமாலை சூட்டியது சுட்டிக் காட்டப்படுகிறது. தொண்டர் அடிப்பொடி யாழ்வார் "திருமாலையை"த் திருமாலுக்குச் சூட்டி இன்புற்றது நாமெல்லாம் நன்கு அறிந்ததேயாகும். இக் கருத்திலேயே இராமலிங்க அடிகளாரும் "என் அலங்கல் அணிந்தருளே" என்று இறைவனிடம் முறையிடுகின்றார்.

1. தொண்டரடிப்பொடியாழ்வார் - திருப்பள்ளியெழுச்சி - செய்யுள் - 5
2. கதமபம திரிந்து கலம்பகம ஆயிற்று என்பாருளர். பலவகைப் பூககளின் கலபபைத் தனனகத்தே கொணடது கலப்பகம், கலம்பகம் - ஆகும் என்று கொள்ளலாம.
3. திருநாவுக்கரசர் தேவாரம - திருபபுள்ளிருக்கு வேளூர்த திருத்தாண்டகம.
4. ஆணடாள் தனியன்களில் - உய்யக்கொணடார் பாடியது.

இப் பாமாலைகளைப் போலவே, தமிழ் மறையாகிய திருக்குறளை உலகத்துக்கே உரிய பொது மறையாக வழங்கி அருளிய தெய்வப் புலமைத் திருவள்ளுவரையும் அவர் நூலையும்பற்றிய பாமாலை ஒன்றும் திருக்குறளோடு சேர்ந்து விளங்கிவருகிறது. இது 'திருவள்ளுவமாலை' என்று பெயர்பெறும். இதற்குத் திருத்தணிகைச் சரவணப் பெருமாள் ஐயர் அவர்கள் அரியதோர் உரையை ஆக்கியுள்ளார்கள். ஒவ்வொரு பாட்டிற்கும் பதவுரை, இலக்கணக் குறிப்புக்கள், உரை நயங்கள், சொல் நயங்கள், விளக்க உரை முதலியவற்றைப் பரிமேலழகர் உரையைப் பின்பற்றிக்கொண்டு விளங்குவது இவர் உரை. இப் பாமாலையில் ஐம்பத்து மூன்று (பா) மலர்கள் உள்ளன. இவற்றிற்கும் பிறகு, வேறு பிரித்துத் தனியாக, "கடுகைத் துளைத்து" என்று தொடங்கும் இடைக்காடர் பாடல் ஒன்று சேர்க்கப்பட்டுள்ளது. அடிக் குறிப்பாகக் 'கடுகைத் துளைத்து' என்னும் தொடரை 'அணுவைத் துளைத்து' என ஔவையார் அமைத்து வழங்கி வருவதாகக் காணப்படுகின்றது.

இப் பாக்களை ஆக்கிய புலவர் ஐம்பத்து மூவராவர். இவையனைத்தையும் பாமாலையாகக் கட்டியவர் யாவர் என விளங்கவில்லை. 53 புலவர்களும் வெண்பா என்ற ஒரே வகையிலேயே தங்கள் பாக்களைப் பாடியிருத்தலாலும், பாடிய புலவர்களில் பலர் கடைச் சங்கப் புலவர்களாயும் ஒருவர் தலைச் சங்கப் புலவராயும் பிறர் எக் காலத்தவர் என்று உணர முடியாத நிலையிலும் இருப்பதாலும், கட்புல உருவில்லா வான்சொற் பாடலும், நாமகள் இறையனார் முதலிய கடவுளர் பாடல்களும் இவற்றுள் இணைக்கப்பெற்றிருப்பதாலும் பிற்காலப் புலவர் ஒருவரே, 53 பாடல்களையும் பாடி, பலர் தலையில் ஏற்றி ஒரு மாலையாகத் தொகுத்துத் திருக்குறளின் இறுதியில் சேர்த்துவிட்டிருக்கலாமோ என்ற ஓர் ஐயப்பாடும் அறிஞர்களிடையும் ஆராய்ச்சியாளர்களிடையும் இருந்துவருகிறது. இது மிகவும் நன்றாய் நுணுகி ஆராய்ந்து முடிவுகட்டற்குரிய தொன்றும்.

திருவள்ளுவ மாலையில் உள்ள வெண்பாக்கள் நல்ல நடைநலமும் பொருளாழமும் வாய்ந்தவையாய் வள்ளுவப் பெருந்தகையின் பன்முகச் சிறப்புக்களையும் திருக்குறளின் அருமை

பெருமைகளையும் வகுத்துரைத்துச் செல்லுகின்றன. தமிழ் நாடு செய்த தவப்பயனாய்த் தோன்றிய திருவள்ளுவர் உலகத் தோருக்கு ஒழுக்கமுறை வகுத்த சான்றோர் வரிசையில் மிகச் சிறந்தவராக வைத்து எண்ணப்படுகிறார் என்பது யாவரும் அறிந்த தொன்றும். உலகம் போற்றும் தம் பெருநூலில் இன்னார் இனியர் என்ற வரையறையின்றி எக் காலத்தவரும், எந் நாட்டவரும், எச் சமயத்தவரும், எந் நிலையினரும் ஏற்றுக்கொள்ளுதற்குரிய ஒப்பற்ற வாழ்க்கை முறையை,அஃது இல்வாழ்க்கையாயினும் (சமுதாய வாழ்க்கை யாயினும்), சமய வாழ்க்கையாயினும் வகுத்துப் போந்த பெருமையை "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ் நாடு" என்று பாரதியார் வாயார வாழ்த்தினர்! திருவள்ளுவ மாலைச் செய்யுட்கள் அனைத்தும் இங்ஙனமே வள்ளுவர் வாய்மொழிப் பெருமையையும் அவர்தம் நூற் கருத்துக்களின் ஆழ, அகல, திட்ப, நுட்ப அருமையையும் தொகுத்து உரைப்பன[1]. அவை கூறும் கருத்துக்களை வகுத்து ஒரு சிறிது பார்ப்போம்.

முதலாவதாக அறம், பொருள், இன்பம் என்னும் உறுதிப் பொருள்களின் திறத்தைத் தமிழ் மரபை யொட்டியே முப்பா லாகத் திருவள்ளுவர் வகுத்து அவற்றினடியாக வீட்டின் திறத்தையும் விளங்க வைத்த பெருமையை நக்கீரனார். மாமூல னார், கீரந்தையார், நரி வெரூஉத் தலையார், கோவூர்கிழார், இழி கட்பெருங் கண்ணனார், கொடிஞாழன் மாணிபூதனார் முதலி யோர் பலபடப் புகழ்கின்றனர்.

---

குறள் கூறும் அருமை பெருமையையும் பொது நோக்கப் போக்கையும் M. Ariel (Journal Asiatique - 1848) என்பார், "That which above all is wonderful in Kural is the fact that its author addresses himself without regard to castes, peoples or beliefs, to the whole community of mankind, the fact that he formulates Sovereign morality absolute reason that he proclaims in their very essence in this eternal abstractedness virtue and truth that he presents as it were in one group the highest laws of domestic and social life" என்று கூறுவர்.

1. திருவள்ளுவ மாலை செய்யுட்கள் 7, 8, 19, 33, 38, 40, 50

இப் பரந்த நிலவுகின்கண் விளங்கும் எல்லாவகை உயிரினங்களும் இன்ப துன்பங்களிற் கிடந்துழலுங்கால் துன பத்தை வெறுத்து இன்பத்தையே அடைய முயல்கின்றன. அவற்றுள்ளும் ஐம்பொறிகளும் முற்றுப்பெற்று, ஆறும் அறிவாகிய பகுத்தறிவையும் பெற்று விளக்கமுறும் மக்களோ, ஐம்பொறிகளாலும் ஒருங்கே துய்த்தின்புறவல்ல இன்பத்தி லீடுபடுகின்றனர். அவர்கள் துன்பத்தைத் தடுத்து ஐம்புல இன்பத்தை ஒருங்கே அடைந்து அதனைப் பல வழிகளிற் பெருக்கவும் முனைந்து நிற்றலோடு அதிலிருந்து அளவில்லாத தும் என்றும் அழிவில்லாததுமாகிய 'அந்தமில் லின்பத்து அழிவில் வீட்டையும்' அறிந்து அதனை அடைவதற்குரிய உரிமையுடையவராயும் இருக்கின்றனர். கண்டதைக் கொண்டு காணுததை யடைதல் என்னும் முறையைப் பின்பற்றி இம்மை யில் துய்க்கும் சிற்றின்பத்தின் வாயிலாகப் பேரின்பத்தை எய்துதலே பகுத்தறிவு படைத்த மக்களின் குறிக்கோளாகும். வாழ்க்கையில் நாம் அடையவேண்டும் பெரும்பேறுகளைத் தமிழறிஞர் அகம் புறமென இருபெருங் கூருகப் பகுப்பர்; அவற்றையே நான்காகப் பெருக்கி அறம் பொருள் இன்பம் வீடு என விரிப்பர். இந் நான்கு பொருள்களும் அவ் விருபொருள் களில் அடங்குவனவே. இவற்றுள் இறுதிக்கண் பெய்து வைத்த வீடே எல்லோரும் எய்தவேண்டும் முடிந்த குறிக்கோளாகும் (Ultimate object of achievement). 'கற்றதனாலாய பயனென்கொல்' என்று மக்களைப் பார்த்து வினவும் திருவள்ளுவர், அதற்குரிய விடையை 'வாலறிவன் நற்றாள் தொழாஅர் எனின்' என்று தாமே கூறிப் பசுமரத்தாணிபோல் நம் மனத்திற் பதியவைக்கின்றார். ஏனைய, அதை அடைதற்குரிய வழிகளேயாம் (Means to the end). பேரின்பமாகிய வீடு, சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத் தாதலின், நூல்கள் அதனை இலக்கண வகையானன்றித் துறவறமாகிய காரண வகையால் மட்டுமே கூறுவனவாம். இவ் வுறுதிப் பொருட்களைக் கூறப் புகுந்த ஆசிரியர் திருவள்ளுவரும் இக் கருத்துப்பற்றியே துற வறமாகிய காரணவகையால் அறம் பொருள் இன்பங்களின் வாயிலாக வீட்டையும் கூருது கூறிவைத்தார். அவர் கூறும் இல்லற நெறியைக் கடைப்பிடித்தவர், கடவுள் வாழ்த்து, நீத்

தார் பெருமை, துறவு, மெய்யுணர்தல், அவாவறுத்தல் முதலிய அதிகாரங்களை நோக்கின் இவ் வுண்மை புலப்படும். இதனைக் கண்டறிந்ததனுலன்றே திருவள்ளுவ மாலைப் புலவரிற் சிலர் 'திருக்குறளில் [1]"அறனறிந்தேம், ஆன்ற பொருளறிந்தேம், இன்பின் திறனறிந்தேம், வீடு தெளிந்தேம்" என்றும், [2]"மும்மையின் வீடவற்றின் நான்கின் விதிவழங்க வள்ளுவனுர் பாடினர் இன்குறள்வெண் பா" என்றும் [3]"அறமுதல் நான்கும் அகலிடத்தோரெல்லாம் திறமுறத் தேர்ந்து தெளிய" என்றும், [4]"முப்பாலில் நாற்பால் மொழிந்தோன்" என்றும். [5]"அறம் பொருள் வீடென்னும் அந்நான்கின் திறந்தெரிந்து செப்பிய தேவை' என்றும், ஒரே முகமாகத் திருக்குறள் நான்கு உறுதிப் பொருள்களையும் மூன்றிலடக்குவதைப் பற்றியும், அம் மூன்றும் நான்காவதற்கு அடிப்படையாய் உள்ளவை என்றும் கூறுகின்றனர். இதுபற்றியே ஒல்காப்புலமைத் தொல்காப்பியரும் பொருளிலக்கணம் வகுக்குங்கால் இம் முறையைச் சுருங்கக் கூறி விளங்க வைத்துள்ளார் என்க 'அந்நிலை மருங்கின் அறமுதலாகிய மும்முதற் பொருட்கு முரிய வென்ப' என்று முப்பாலினைப் பொருட்குரியவாற்றுன் வரையறை செய்யுங்கால் நான்கு உறுதிப் பொருள்களின் திறத்தை மூன்றிலடக்குகிருர். இதற்கு உரைகண்ட ஆசிரியர்களும் இக் கருத்தையே வற்புறுத்துகின்றனர்." உலகியற் பொருள் மூன்றனையும் கூறுவான் அவற்றை மும்முதற் பொருளென்றுர். அவையன்றி வீடு பெறுமாறு வேறின்மையின் வீடும் ஆண்டுக் கூறினுர் என்பது" என்று பேராசிரியர் கூறுவர். "மும்முதற் பொருளெனவே அவற்றது துணைப் பொருளாகிய அறனிலையின்மையும் இன்ப நிலையின்மையும் அடங்குமென்ப; உலகியற் பொருள் மூன்றனையும் இவையெனக் கூறி அவற்றை வீடு மாறும் கூறவே வீடும் கூறிற்றும்" என நச்சினுர்க்கினியரும் கூறுவர்.

---

1 திருவள்ளுவ மாலைச் செய்யுள்
2 ,,
3 ,,
4 ,,
5 ,,

சிறப்புப்பாயிர உரைக்கண்ணும், வீடு கூருரோ எனின் அகத்தியனுரும் தொல்காப்பியனுரும் வீடுபேற்றிற்கு நிமித்தம் கூறுதலின்றி வீட்டின் தன்மை இலக்கணத்தால் கூருர் என்றுணர்க. அஃது "அந்நிலை மருங்கின் அறமுதலாகிய மும்முதற் பொருட்கும் உரிய என்ப" வென்பதனுல் உணர்க. களவியலின் பெற்றியை விளக்கும்போது தொடக்கத்தில் தொல்காப்பியர் 'இன்பமும் பொருளும் அறனும் என்ருங்குஅன்பொடு புணர்ந்த ஐந்திணைமருங்கில்' என்று கூறியதும் இதுபற்றியே எனலாம். இந் நானிலை நெறியில் இன்பமென்றும் அகமென்றும் கூறப்படும் நெறியே மக்களையும் பிற பொருள்களையும் இவ் வுலகத்தில் வாழ்வித்து இல்லறத்திலும் பின் பேரின்பத்திலும் செலுத்திக் கொண்டிருக்கிறது. அன்பும் இன்பும் இவ் வுலகில் இல்லையேல் இவ் வுலகின் நிலை யென்ணும்? இது தலை இடை கடையாய் மக்களனைவரையும் நன்னெறிக்கண் செலுத்துவதாம். மனிதன் இல்லறத்திலே நின்று பொருளீட்டி வாழ்வதெல்லாம் இன்பத்தை நுகர்ந்து இறுதியில் வீடெய்துவதற்கேயாம். ஆதலின் இறையனுர் களவியலுரையிலும் * இவ்வாறு இன்பத்தின் பெருமையை நக்கீரனுர் எடுத்துக்காட்டி இன்பம் வீடு பேற்றிற்கு உதவுவதைத் தெரிவிக்கின்ருர்.

ஆசிரியர் தொல்காப்பியரும் இவ்வாறு கருதியே,

"காமஞ் சான்ற கடைக்கோட காலை
ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
அறமபுரி சுற்றமொடு கிழவனும கிழததியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே"

என்று இலக்கணம் வகுத்தார். இவ் வுண்மை யுணர்ந்தே இறைவன்பால் ஈடுபட்டுப் பத்திமையால் பணிந்து பாமாலை பாடிய பெரியாரும் கடவுளையும் உயிரையும் தலைவன் தலைவி யென்னும் முறையில் வைத்து அகத்திணை அழகுகள் எல்லாம் பொருந்தும்படி பாடல்கள் அமைத்திருக்கின்றனர். இவ்வாறு இல்லையெனில் கடுந்துறவியாகிய வாதவூரர் திருச்சிற்றம்பலக்கோவை யியற்றியருள முன் வருவரோ? அன்றி, நம்மாழ்வார்தாம் திருவிருத்தத்தைத் திருவாய் மலர்ந்தருள ஒருப்படுவரோ? திருநாவுக்கரசர் திருஞான சம்பந்தர்

* இறையனுர் களவியல் நூற்பொருளுரை

முதலிய சைவ சமய குரவர்களும் அகப் பொருள் துறைகள் அமைந்த பாமாலைகளைச் சிவபெருமான் திருவடிகட்குச் சூட்ட மனமொப்புவரோ ?

அடுத்து, உறுதிப் பொருளாய அறம் முதலாய நான்கனை யுங் கொண்டுள்ள நந்தம் தமிழ் மறையைத் திருவள்ளுவமாலைப் புலவர் சிலர் வடமொழி மறைகளோடு ஒப்பிட்டு மகிழ்வர். இவரெல்லாம்[1]வேதம் ஓதும் பொருளும் திருவள்ளுவர் வகுத்த அருள்நெறியும் ஒத்தன என்ற ஒரு காரணத்தையே வற்புறுத்து கின்றனர். அவர்தம்முள்ளும் கோதமனார்[2] தொன்மறை யொடு தமிழ்மறையை ஒப்பிட்டு நான்மறைக்கில்லாது இதற்கே உரிய தனிப்பெருஞ் சிறப்பைச் சுட்டிக்காட்டியுள்ளார். அஃதா வது, தமிழ்மறை எல்லோருக்கும் உரிய பொதுமறையாகு மென்பதே. வெள்ளி வீதியாரும்[3] இருமறைகளையும் ஒப்பிடுவர். செய்யாமொழியும் பொய்யா மொழியும் பொருளளவில் ஒத் தனவேனும் அந்தணரே வடமொழி ஓதும் உரிமை பெற்றனர். எந் நாட்டினரும் எம் மொழியினரும் எச் சமயத்தினரும் இந்த மறையை ஓதலாம். இதற்கு உரியாரல்லாதவரே ஒருவருமில்லை. சமன்செய்து சீர்தூக்கும் கோல்போலவே எல்லோருக்கும் ஒத்த நெறியையே வகுக்கும் வள்ளுவர் வாய்மொழி எக் குலத் தவருக்கும் எச் சமயத்தவருக்கும் உரியதாகும். இதன் பொது நோக்கப் போக்கை உணர்ந்த மெய்யுணர்வு நூற் புலவரான பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்களும் 'வள்ளுவர்செய் திருக் குறளை மறுவறநன் குணர்ந்தோர்கள் உள்ளுவரோ மனுவாதி ஒருகுலத்துக்.கொருநீதி' எனப் புகழ்ந்தனர். 'எல்லா நூல்களி னும் நல்லன எடுத்து எல்லார்க்கும் பொதுப்படக் கூறுதல் இவர்க்கியல்பு' என்பர் பரிமேலழகரும். கல்லாட முடையார், "சமயக்கணக்கர் மதிவழி கூறாது உலகியல் கூறிப் பொருளிது என்ற வள்ளுவன் தனக்கு" என்றிதன் சமயப் பொது நோக் கத்தைப் புலப்படுத்தினார். கல்லாடனாரும்[4] திருவள்ளுவ மாலையில்,

1. செய்யுள் 4, 15, 23, 24, 28· 37, 42, 44
2. கோதமனார் செய்யுள் 15
3. செய்யுள் 23
4. ,, 9

"ஒன்றே பொருளெனின் வேறென்ப வேறெனின்
அன்றென்ப ஆறு சமயத்தார்—நன்றென
எப்பா வலரும் இயைபவே வள்ளுவனர்
முப்பால் மொழிந்த மொழி"

என்றதனைப் போற்றியுள்ளார்.

இவ் விருவரும் ஒரே புலவர்தாமா, அன்றி இரு வேறு புலவரா? என்பது ஆராய்வதற் குரியதாம்.

இனி, புலவரது வரலாற்றைக் கூறும் புலவர் புராணமும் நால்வர் சொல் சைவருக்கே உரிய வேதம் என்றும் நம்மாழ்வார் போன்ற ஆழ்வார்களின் அருளிச் செயல்கள் பாகவதர் வேதம் ஆகும் என்றும், ஆனால் வள்ளுவன் தந்த தமிழ் மறை, யார்க்கும் கீழ்மையை அகற்றி மேன்மை அருளும் பொது மறையாகும் என்றும் கூறுகின்றது. மேலை நாட்டுக் கிறிஸ்து வரும் இதன்பெருமையை உணரத்தொடங்கியுள்ளனர்: தமிழ்க் கடலில் மூழ்கித் திளைத்தவரும் திருக்குறளை ஆங்கிலத்தில் அரு மையாக மொழி பெயர்த்தவருமாகிய [1]போப்புப் பாதிரியார் "எங்கள் ஏசுநாதர் மலைமேற் செய்தஅறவுரையின் எதிர்ஒலி யாகும் இஃது" என்று கூறினர். எதனுடைய எதிர் ஒலி எது என்ற ஆராய்ச்சியில் இப்பொழுது இறங்காமல், இதிலிருந்து, எச் சமயத்தவரும் இதனைத் தம் சமய மறையாகக் கருதுவர் என எளிதில் உய்த்துணரலாம். [2]"இவ்வாறு பல்வகைச் சமயத் தினரும் திருக்குறளைத் தம் நூல் என்று போற்றிப் புகழ்கின்ற தன்மையால் அவ் விழுமிய நூல் உலகிலுள்ள உயரிய சமயக் கொள்கைகளை யெல்லாம் தன்னகத்தே அடக்கித் தனக்கு அங்கங்களாய் அமைத்துக்கொண்டு அவையனைத்திற்கும் தலைமையாய் நிற்கும் தகுதி வாய்ந்த ஒரு தனி நூல் என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்குகிறது" என்று இதன் சமயப் பொது நோக்கப் பெருமையைப் பேராசிரியர் சேதுப் பிள்ளையவர்கள் எடுத்தோதுகின்றனர்.

எனவே, எல்லோருக்கும், எக் காலத்துக்கும் வேண்டிப் பேசும் வள்ளுவர், வாழ்க்கைக்கு வழி வகுக்கும்போது உலகில் கொள்ளத்தக்க அடிப்படையான மெய்ப்பொருள்களையும்,

1. Rev. Dr. G. U. Pope, M. A., D. D.
2. திருவள்ளுவர் நூல் நயம் - 1.

தள்ளத்தக்க பொய்ப் பொருள்களையும் [1]இன்ப துன்பம், [2]ஆவன ஆகாதன, [3]பொய்யும் மெய்யும் என்ற தலைப்புக் களில் நன்கு ஆராய்ந்துள்ளதாகக் கருதுவர். [4]இந் நூலில் உறுதிப் பொருள்கள் எல்லாம் உள்ளன; இதன்பால் இல்லாத எப்பொருளும் இல்லை. [5]எக் காலத்து, எவரால், எவை செய்யப்பட்டன, அவை யெல்லாம் வள்ளுவர் வாக்கில் உண்டு. [6]பூவிற் சிறந்தது தாமரைபோலப் பாவிற் சிறந்தது வள்ளுவர் வெண்பா. இஃது ஈடும் எடுப்புமற்றுத தனக்குவமையில்லாத தனிப்பெருஞ் சிறப்புடையது.[7]திருக்குறளைப் படித்த பின் வேறு ஒருத்தர் வாயால் கேட்டறிதற்கு ஏதாவது நூலா இருக்கின் றது? இவ்வாறு ஒப்புயர்வற்று விளங்கும் தமிழ் மறை தந்த தலைவரை தாமறிந்த புலவர்களுள் தலைசிறந்தவராகப் பாரதி யார் பரவினர். திருவள்ளுவ மாலையில் [8]சிறுகருந்தும்பியார், [9]நல்லந்துவனர் [10]செங்குன்றூர்க் கிழார் முதலியவரைப் பின் பற்றியே பாரதியாரும் பகர்ந்துள்ளார். இத் தமிழ் மறையைக் கசடறக் கற்று அதன்படி நிற்காத தமிழன் தமிழனல்லன்; மனித னுமல்லன். இறைவனது புகழைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளாம். அதுபோல் [11]அமிழ்தினுமினிய தமிழ் மறையதனைப் படியாதவர்கள் படியாதவர்களே. [12]அவர்கள் நாவிற்கு இன் சொல் சொல்லி வாழ்தல் உண்டாகாது. மனத்திற்குச் சொற் களின் சுவையை அறிதல் உண்டாகாது. இவையன்றியும் மெய்யின்கண் நற்செயலுமுண்டாகாது. ஓதாதார்க்கு இவை யில்லையென்றதால், ஓதுவார்க்கு இவையுளவாம். அவர்க்கு மொழிக் குற்றங்களாகிய கடுஞ்சொல், பொய், கோள், புறங் கூறல்-இவைகளும், மனக் குற்றங்களாகிய பிறனில் விழைதல், பிறன் பொருள் விழைதல், பிறன் பொருட்குக் கேடெண்ணல், பிறவுயிர்களுக் கிறுதி யெண்ணல் போன்றனவும் மெய்க்

---

1, செ. 35
2. ,, 41
3. ,, 49
4. ,, 29
5. ,, 45
6. ,, 36
7. செ 16
8. ,, 17
9. ,, 18
10. ,, 54
11. ,, 53
12. ,, 39

குற்றங்களாகிய உயிர்க் கொலை செய்தல், கழியூனுண்ணல் பிறர் பொருள் வெளவல் போன்றனவும் நீங்கும் என்பர், இப் பகுதிக்குச் சிறப்புரை எழுதிய உரை ஆசிரியர்.

இவ்வாறு உலகோர் கண்ட உண்மைகளை யெல்லாம், பாலிலிருந்து வெண்ணெய் திரட்டுவதுபோல, வள்ளுவனார், ஆயிரத்து முந்நூற்று முப்பது அருங் குறள்களில் பாயிரத் தோடு பகர்ந்த பான்மையையும், அவற்றை முப்பெரும் பால் களாகப் பகுத்துள்ள முறையையும் சில ஆசிரியர்கள் பால், இயல், அகாரதிஅடைவு செய்து வகுத்துரைக்கின்றனர்; இயல்களெல்லாம் பரிமேலழகர் முறைவகுப்பையே ஒத்துள்ளன. பரிமேலழகர் உண்மையிலேயே தமக்கு முற் போந்த இப் புலவர்களின் வைப்பு முறையைப் பின்பற்றி ஞரா, அன்றி, பரிமேலழகருக்குப் பின் வந்த புலவர் ஒருவர் பரிமேலழகர் அடைவு முறையைப் பின்பற்றி, இயல் அடைவு முறை வகுத்துப் பாடல்கள் பாடிப் பழைய ஆசிரியர்களின் தலையில் ஏற்றிக் கூறினரா என்னும் இச் சிக்கலான கேள்வி ஆராய்ச்சிக்குரியது. மாடலனார் அறத்துப் பாலுக்கும், போக்கி யார் பொருட் பாலுக்கும், மோசிகீரனார் காமத்துப் பாலுக்கும் இயல் அடைவு செய்து பாடியது ஒன்றன்பின் ஒன்றாக அடுத்துஅடுத்து வருகின்றன. இவற்றுள் போக்கியார் செய்யுளில் பொருட்பாலின் ஈற்றியல் 'குடி இயல்' என்று பெயர் பெறுவது புதுமையாக ஆனால், பொருத்தமாக இருப்பது அறிஞர்களின் கருத்தைக் கவருவதாகும். அரசியல் கூறி அதன் உறுப்புக்களாகிய அங்கவியல் கூறியபின், அரசியல் நிலவும் நாட்டின் பொதுமக்களாகிய குடிமக்களின் இயல்பைக் 'குடி இயலாக'க் கொள்ளுவது ஏற்றதேயாம். போக்கியார், அரசியலில் இருபத்தைந்து அதிகாரங்களும், அமைச்சியலிற் பத்தும், அரண் இரண்டும், பொருளியலில் ஒன்றும், படையியலில் இரண்டும், நட்பிற் பதினேழும், குடி இயலிற் பதின்மூன்றும் உள்ளனவாகக் கூறுகின்றார். பரிமே லழகர் முறைக்கும் இவர் முறைக்கும் வேறுபாடுகளும் மாறு பாடுகளும் உள்ளன. பரிமேலழகர் "படை குடி கூழ் அமைச்சு நட்பு அரண்" என்ற ஆறு உறுப்புக்களில் குடி

என்பதற்கு " அதனையுடைய நாடு " என்று பொருள் கொண்டு 'நாடு' என்னுமதிகாரம் குடிகளையுடைய நாட்டைப் பற்றிக் கூறுவதாகவே தனியாக அமைத்திருக்கின்றார்: கூழைப்பொருள் செயல் வகையாக எடுத்துக் கொண்டார். போக்கியாரோ நாட்டை அரணின்பாற்படுத்தினார். 'ஒன்று ஒண்கூழ்' என்ற தொடரில், பொருள் செயல் வகையைக் குறித்தார், 'ஒண்' என்னும் அடைமொழி நல்லாற்றினீட்டிய பொருளுக்கே பொருந்துமாறு சான்றோர் செய்யுட்களில் வருதலான், " குடி பதின்மூன்று " என்பது இறுதியிலுள்ள பதின்மூன்றதிகாரங்களைப் போக்கியார், நாட்டில் வாழ் குடி மக்களின் தன்மையைக் கூறும் குடி இயலாகவே கொண்டுள்ளார். ஆகவே முதலில், ஒழிபியல் என்று இப் பகுதி வகுக்கப்படவில்லை யென்றும், குடியியல் என்றே இருந்தது என்றும் கொள்ளலாம். இம் முறை முன் முறையைவிடச் சிறந்ததாகும். 'குடியை' நாடாகக் கொண்ட பரிமேலழகரும், கொடுங்கோன்மையில் 'கூழுங் குடியும் ஒருங்கிழக்கும்' என்னும் தொடருக்கு, " முன்னீட்டிய பொருளையும், பின்னீட்டுவதற்கேதுவாகிய குடிகளையும் சேர இழக்கும்" என்று உரை எழுதுகின்றார், ஈண்டுக் குடிகள் என்பது குடிமக்களையே யன்றி நாட்டைக் குறிக்கவில்லை என்பது வெளிப்படை. ஒழிபியலும் காவலை நடாத்தும் முறையேயாயின் அதனுள் நல்குரவு, இரவு, இரவச்சம் முதலியன அடங்குவனவோ? குடிமையும் அதற்கின்றியமையாத குணங்களும், அஃது உயர்தற்குதவும் தொழிலாகிய உழவும், அத் தொழிலை மேற்கொள்ளாதார் எய்தும் நல்குரவும் அதன் காரணமாகச் செய்யும் இரத்தலும், அதைச் செய்தலிற் பெறுமச்சமும் இன்னோரன்ன பிறவும் காவலை நடாத்தும் முறையாகுமோ? எனவே, *" அறிவுரை கூறவல்ல அமைச்சருடனே பகைவர் ஊறு செய்யலாகாத அரணிலிருந்து, படையையும் நாட்டையும் துணையாகக் கொண்டு அரசன் பொருள் செய்யவேண்டும் என்பது பொருட்பால் முற்பகுதியின் கருத்து'. கயமையில்லாத குடிகள் தங்கள் குடிமைக்கேற்ற குணங்களை உடையராய், பொருளின்மையால்

* திருக்குறளும் பொது நோக்கமும்-பக் 12.

நல்குரவெய்தாமல் உழவுத் தொழில் செய்து தங்கள் குடியை மேம்படுத்திக்கொள்ளக் கடவரென்பது பொருட்பாற் பிற் பகுதியின் கருத்தாகும். இனி, பொருட்பால் கூறிய அதி காரங்கள் எழுபதையும், அரசியல், அமைச்சியல், பொரு ளியல், துன்பவியல், நட்பியல், குடியியல் என ஆறு வகையாகக் கொள்வாருமுண்டு. இப் பிரிவிலும் ஈற்றில் குடியியல் என்பதே காணப்படுகிறது. இப் பிரிவு பற்றிச் செந்தமிழ்[1] கூறுவதும் நோக்கத்தக்கது. அதனிறுதியில், "குடிமை முதலாகக் கயமை யீருகக் கூறிய அதிகாரங்கள் பதின் மூன்றும் மக்களதியல்பு கூறுதலிற் குடியியல் என்றும், ஆகப் பொருட்பால் கூறிய அதிகாரங்கள் எழுபதும் ஆறு பகுதியா யிற்று" எனவரும் பகுதி, 'குடியியல்' என்னும், வழக்குண் மையையே வற்புறுத்தும். இது போக்கியாரின் போக்கையே பின்பற்றுகிறது.

இனி, திருவள்ளுவமாலை ஆசிரியர்களிற் சிலர் தம்கருத்துக் களை அழகிய,இயற்கைக்கு மிகப் பொருந்திய உவமைகள் வாயி லாகவும் உருவக வாயிலாகவும் விளக்கிப்போவது கற்ருர்க்குக் கழிபேருவகை பயப்பதாகும். [2]இறையனுர்,[3]மருத்துவன் தாமோ தரனுர், [4]அக்காரக்கனி நச்சுமனுர், [5]குலபதி நாயனுர் முதலி யோர், 'திருக்குறளுக்குச் செந்தளிர்க் கற்பகத்தின் தெய்வத் திருமலரையும், தலைக் குத்துத்தீர்க்கும் மருந்தையும், மதி யையும் கதிரவனையும் உவமைகளாக அமைத்துள்ளனர். மதியும் குறளும், கலை நிறைவாலும், காண்டற்கினிதாவ தாலும், (மதியை நோக்குவதில் இன்பம் உண்டு-குறளை ஆராய் வதில் இன்பம் உண்டு) கண்ணின் நிலையிலும் (முகக்கண்ணில் மதியும் அகக் கண்ணில் குறளும் நிற்பனவாம்) நிரம்பும் நீர்மை யாலும், இவை யிரண்டும் தம்முள் ஒக்கும் என்று கூறிய நச்சு மனுர், இவையிரண்டையும் ஒப்பிட்டுப் பார்ப்பதில் தோன்றும் வேற்றுமை ஒன்றையும் எடுத்துக் காட்டிப்பொருளாகிய திருக்

1. செநதமிழ் முதல் தொகுதி
2. திருவள்ளுமாலை-செ. 3
3. ,, 11
4. ,, 46
5. ,, 48

குறளின் பெருமையை இன்னும் பன்மடங்கு மிக்குத் தோன்று மாறு அமைத்துள்ளார். திருவள்ளுவரது முப்பானூலினது நயத்தால் சிந்தைக்கும் செவிக்கும் விளைவதாய கவியின்று வானத்திற் றிரியும் மதியினிடத்தில்லை என்கின்றார். "இது பற்றி ஒப்புமை சொல்லுதற்கு நூல்களில் ஒன்றுமின்மை யால் ஏனைப் பொருள் பலவற்றினும சிறந்த மதியையாயினும் சொல்லுது மெனப்புகின் அதுவும் இதனுற் தகுவதன்று" என்று சரவணப்பெருமாள் ஐயர் சிறப்புரை எழுதுகிறார். இதுபோன்றே ஒவ்வோர் உவமையும் பொருள் ஆழமும், பொருளொடு பொருந்தும் பான்மையும் உடையதாய் விளங்கு வது உய்த்து உணர்ந்து இன்புறற்பாலது.

*இப் பாடல்கள் ஒரு சிலவற்றிற் பயிலும் உருவகமும் இவ் வாறே பொருட் செறிவிலும், அழகிலும், பொருத்தத்திலும் சிறந்து விளங்குகின்றன. மனத்துக் கண்ணுள்ள மாசைக் கழுவும் திருக்குறளை, அறியாமை இருளை ஓட்டி அறிவொளியை ஊட்டும் திருக்குறளை, 47-ஆம் பாடலில் நப்பாலத்தனர் விளக் காக உருவாகப்படுத்தியது சாலவும் பொருந்துவதே. இவ் விளக் குக்கு அறமே தகளியாகும்; அறநெறியில் ஈட்டிய பொருளே திரியாகும்; விளக்கு எரிவதற்கு ஊற்றும் நெய் இன்பமாகும்; திருக்குறளிற் பயிலும் செஞ்சொற்களே ஒளியாகும்; குறட் பாவே விளக்குத் தண்டாகும். விளக்கு ஏற்றியவுடன் வீட்டி லுள்ள இருள் இரிந்தோடும். திருக்குறளாகிய விளக்கு அகத் திருள் நீக்கும். "தீச்சுடர், தகளி முதலியவற்றோடு கூடிப் புறத்திருளை எப்படியோ அப்படி நாயனரது திருவாயிற் பிறந்த செஞ்சொல் அற முதலியவற்றோடு கூடி அகத்திருளைக் கெடுத்தலின் இங்ஙனம் உருகம் செய்யலாயிற்று. மனையகத் தேற்றப்படுகின்ற விளக்கு அம் மனையகத்துள் மாத்திரமே உதவுவதாய் நிற்றலாலும், அகத்திருளைக் கெடுக்கவல்ல தன்மை யாலும், இஃது உலகத்து வாழ்வோர் பலர்க்கும் உதவுவதாய் நிற்றலாலும், அகத்திருள் கெடுதலாலும் அதனின் இது பல கோடி மடங்கு மிக்குச் சிறந்து நிற்கின்றமை உணர்த்தியபடி" என்று உருவகப் பொருத்த வுரை வரைந்துள்ளது படித்தின்

*திருவள்ளுவ-மாலை செய்யுள் 31, 47, 51, 52,

புறுதற்குரியது. இப் பாடல் முதலாழ்வார்களாகிய [1] பொய்கை ஆழ்வார், [2] பூதத்தாழ்வார் பாடல்களோடு ஒப்பிட்டுப் படித்து இன்புறற்பாலது.

இவ்வாறு உலகிலுள்ளோர் உள்ளும் உயர் கருத்தெல்லாம் எக் காலத்துக்கும் மாறாப் பயன் தரும் மாண்பு மிகு நிலையில் தொகுத்துரைத்த வள்ளுவரின் புகழை விளக்கும் திருவள்ளுவ மாலையில், திருக்குறளின் தனிப் பெருஞ் சிறப்பாக, சுருங்கச் சொல்லி விளங்கவைக்கும் திட்ப நுட்ப முறையை எடுத்துக் காட்டுகின்றனர் சிலர். [3] கபிலர், [4] பரணர், [5] அரிசில் கிழார், [6] பொன்முடியார் ஆகிய நால்வரும் இம் முறையைப் பெரிதும் பாராட்டுகின்றனர். வள்ளுவரன்றி இம் முறையில் வல்லார் யாருளர்? பரணரும் பொன்முடியாரும் திருமால் ஈரடியால் மூவுலகளந்ததை உவமை காட்டித் திருக்குறளும் ஈரடியால் முப்பாலளக்கும் பெருமையைப் போற்றுகின்றனர். பரிணர் பாடலில், "மால் தானே குறளாதலும், பின் அந்நிலை நில்லாது வளர்தலும், பேரடிகளால் அளவுபட்ட உலகத்தை அளத்தலும் ஆகிய உவமைப் பொருத்தங்கள், திருவள்ளுவர் தம்மினின்றும் குறளை உண்டாக்குதலும், அது தன்னிலை நிற்றலும், அதன் சிற்றடிகளால் அளவுபடாத நினைப்பின் விடயங்களை அளத்தலும்" ஆகிய பொருளின் இயல்புகளோடு பொருத்தி யுணர்ந்து இன்புறற்பாலன. பொன்முடியார் பாடலிலும், திருக்குறள் வானின்று மண்ணினின்று அளந்த பெருமை பேசப்படுகிறது. திருக்குறளுக்கு ஒலி வடிவு வரிவடிவென இருவடிவங்கள் உளவாதலின், ஒலி வடிவுக்கு வானையும் வரிவடிவுக்கு மண்ணையும் பொன்முடியார் விதந்துரைத்தார்; தினைத்துணை நன்றி செய்யினும் பனைத்துணையாகக் கொள்வர் நன்றியின் பயன் தெரியும் நல்லோர் என்ற குறளில் ஈடுபட்ட கபிலரும் அவ் வுவமைகளைப் பின் பற்றியே, சிறுமை

1. பொய்கையாழ்வார்-இயற்பா-முதல் திருவந்தாதி, செய்யுள் 1.
2. பூதத்தாழ்வார்-இயற்பா-இரண்டாந் திருவந்தாதி. செய்யுள் 1,
3. திருவள்ளுவ மாலை-செய்யுள் 5
4. ,, ,, 6
5. ,, ,, 13
6. ,, ,, 14

பெருமைகளுக்குத் தினையையும் பனையையும் எடுத்துக்காட்டுக் களாக அமைத்துத் திருக்குறளின் சுருக்க உருவில் பெருக்கப் பொருள் அமையும் பெற்றியைப் பாராட்டினர். "எப்படி மிகச் சிறிய பனித்துளியிலே, மிகப் பெரிய பனைமரத்தின் சாயை அடங்கி விளங்குகின்றதோ அப்படியே, மிகச் சிறிய இக் குறள் வெண்பாவில் மிகப் பெரிய பொருள் அடங்கி விளங்குகின்றதென்பதாம்" என்று உரையாசிரியர் விளக்கும் உவமைப் பொருத்த வுரையும் போற்றுதற்குரியது.

இங்ஙனம் திருக்குறளாசிரியரின் பன்முகப் பெருமையைப் பேசும் இப் பாமாலை, பூமாலை போன்று சிறந்ததெனினும், அதுபோன்று வாடிவரும் இயல்புடையதன்று. இதனை யாத்தவர் ஒருவராயிருப்பினும் இதுவும் திருக்குறளின் புகழை அன்றும், இன்றும், என்றும் நின்று நிலவுவதை மிகச் சிறந்த முறையில் எடுத்தியம்பும் அழிவில்லாத, வாட்டமில் லாத மாலையாகவே என்றும் விளங்கும் என்பதில் ஐயமில்லை.

**பொய்யில் புலவன் பூங்கழல் போற்றி!**